பாடா வினைபாரதம் பர்ந்தேன் - கூடானை

வெள்ளிய வெண்றி யிலக்கியலேவன் மாறபின்
வள்ளுவன் வாயதன் வாக்கு.

இ-ள். கூடாரையெள்ளியவென்றியிலக்கியலேவன்மாற(பகைவரைப்புறங் கொடுக்கச்செய்த)லிகும்ந்த வெற்றியையுண்டாக்கிவிளக்காநின்ற,நகட்டெவடி வாயுள்ள வேற்படையையுடைய பாண்டியராஜனே—கூடா-(உலகத்தார் விதி லக்குகளை அறிந்து உய்யும்வழியை)நாடி—முதல்-படைப்புக்காலத்திலே—நான்முகனுவில்-பிரமனதுவாயிலிருந்து—நான்மறைபாடா-(இருக்குமுதலாகி யநான்குவேதங்களையும்) பாடி—இடை-(இருந்தும்அதற்கும்)நடுவானகாலத்தி லே—பாரதம்பகர்ந்தோன் - பாரதமாகிய வேதத்தைச்சொல்லினோன்—பின் (அதற்குப்)பிற்பட்டஇக்காலத்திலே—என்வாக்கு - என்னுடையவாக்கு—வள் ளுவன்வாயது- (திருக்குறளாகியவேதத்தைச்சொல்லி)வள்ளுவன்வாயின்கண் ணே தாயிற்று—எ-று.* வேதமும்சுதேசரூபமாகையால்-பாடா வென்றுள்.தன் கனவலுதலின் நான்முகனுவிலிருந்தென்றும், அவனவதாரமாதலின். வள்ளு வன்வாயதென் வாக்கென்றுங்கூறினுள். பாரதம் வியாசனைக்கொண்டுசொ ல்லப்பட்டது. இதனால் நான்மறை - பூர்வவேதமும் - பாரதம் - மத்தியவேத மும் திருக்குறள்- உத்தரவேதமும். என்றதாயிற்று. பூர்வவேதம் பின்வியாச ராலேநான்காகவகுத்தப்பட்டமை பற்றி நான்மறையெனப்பட்டது அன்றி நா னெனப்பிரித்துஎழுவாயாக்கினுமாம். வேதம் மூலவடிவத்தென்பதாலும்,இவற்ற நு தோற்றமுறையால்இங்ஙனவாக்கியபிரமாணத்திற் சிறப்புடைத் தென்பதனா லும் சொல்லியபடி. (உ)

இளையனார்.

என்றும் புலாஅ நியாணர்நாட் செல்லுறு
கின்றலர்ந்து தேன்பிலிற்று நீர்மையதாய்க் - குன்றுத
செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத் திருமலர்போன்
மன்புலவன் வள்ளுவன்வாய்ச்சொல்.

இ-ன் மன்புலவன் வள்ளுவன்வாய்ச்சொல்-புலவர்க்கரசனுகியவள்ளுவன் வாயிற்பிறந்ததிருக்குறளானது—என்றும்யாணர்புலராது-எக்காலத்துந்தன்ன முகு கெடாமல்—நாட்செல்லுறுகின்றலர்ந்து-நெடுங் காலங்கழியினும் நிலை பெற்றுமலர்ந்து—தேன்பிலிற்றுநீர்மையதாய்-தேனைச்சொரிகின்றகுணமுடை யதாய் (விளங்குமாதலால்)—குன்றுதசெந்தளிர்க்கற்பகத்தின்- குறைவுபடாத செய்யதளிர்களையுடைய கற்பகத்தினது—தெய்வத்திருமலர்போன் - தெய்வத் தன்மைபொருந்திய உயர்வாகிய மலர்போலும்—எ-று. * திருக்குறளுக்கு அழ குசொன்முடிபுபொருண்முடிபின்குணங்களும், அலர்தல்- எங்கும்பரவுதலும்- தேன்பிலிற்றல்- இருமைஇன்பங்களும் விளைத்தலும் ஆம்- சொல்- ஆகுபெயர் இறையனர் கடவுளாதலின்- 'இனிஇதிற்சிறப்ப தொன்றுளதாவதின்றென்னும் துணிவுதோன்ற- என்றுமென்றும், பின்னும் அதனை வலியுறுத்தற்குநாட்செல் லுறு நின்றென்றும், வாழ்த்துபபொருள்படஇவ்வாறு கூறினர் (ஊ)

உக்கிரப்பெருவழுதியார்.

நான்மறையின்மெய்ப்பொருளைமூப்பொருளாநான்முகத்தோன்
முன்மறைத்தவள்ளுவனுய்த் தந்தனைத்த - நான்முறையை

வந்திக்கசென்னிவாய் வாழ்த்துகன்னெஞ்சஞ்
சிந்திக்கமே கட்க செவி

இ-ள். வள்ளுவனுய் - திருவள்ளுவனுய்=தான்மறைந்து - தனது தி
மேனியை மறைத்து—நான்மறையின் மெய்ப்பொருளை- நான்குவேதங்களின
ண்மைப்பொருளை—தந்து - (இவ்வுலகத்திலே) கொணர்ந்து—மூப்பொருளை
(அறம்பொருளின்பமென்னு) மூப்டாற்பொருளதாக—நான்முகத்தோன்-பிர
ளுல்—உரைத்த-திருவாய்மலர்ந்த—நூல்-நூலினது—முறையை-புந்நகத்தை
சென்னிவந்திக்க - (எனது தலையானது தொழுங்கடவது—வாய்வாழ்த்தக-வ
யானது வாழ்த்தக்கடவது—நன்னெஞ்சஞ்சிந்திக்க-நல்லமனமானது நினை
க்கடவது—செவிகேட்க - காதுகளானவை கேட்கக்கடவன்—எ-று. * மு
பொருள் ஆருபெயர். இவ்வேதப்பொருள் ஐந்தியிலே வேதஞ்சொல்லியோ
லேயே சொல்லப்பட்டமையால் உலகத்துச் சமயாசாரியர்களாலும் பிறராலு
ம் ஒன்றுக்கொன்று மாறுகக்கொள்ளப்பட்ட பொருள்கள்போல் வதன்றெ
பதுதோன்ற மெய்ப்பொருளென்றார்.—கலையுணர்புலமையிற் றலைமையோ
இ, விதிமுறைவழாது முதுநிலம்புரக்கும், பெருந்தகையுக்கிரப்பெருவழுதியெ
ன்னும், தன்னிகரில்லாமன்னவர்பெருமான். தான்மேற்கொண்ட சிறப்பைப்ப
கரும் அறிந்து மேற்கொள்ள இவ்வாறு வழிபாடு கூறினுன்.—மன்னனெப்ப
டி மன்னுயிர்ப்படியாதலின் இப்புந்தகத்தை முன்னே பூசித்து மெய்மொழி
மனங்களால் வணக்கஞ்செய்து பின் கேட்கவேண்டுமென்று சொல்லியபடி.

க பி ல ர்.

தினையளவுபோதாச் சிறுபுன்னீர்நீண்ட
பனையளவுகாட்டும் படிதந்தான் -மனையள்கு
வள்ளைக்குறக்கும் வளநாடவள்ளுவனுர்
வெள்ளைக்குறட்பா விரி.

இ-ள்: மனையள்கு வள்ளைக்குறக்கும் வளநாட - மனையில்வளர்க்கப்படு
கின்ற பறவைப்பேடுகள் உல்லைப்பாட்டால் கண்ணுறங்குகின்ற வளம்பெ
ருந்திய நாட்டையுடைய அரசனே—வள்ளுவனுர்வெள்ளைக்குறட்பாவிரி- திரு
வள்ளுவரால் அருளிச்செய்யப்பட்ட குறள்வெண்பா(மிகப்பெரியபொருளைத்)
தன்னுட்கொண்டு காட்டுதல்—தினையளவுபோதாச் சிறுபுன்னீர் - தினையரிசி
யினளவுக்கும் போதாத சிறியபுல்லினது நுனியின்கணுள்ள பனிநீரானது—
நீண்டபனையளவுகாட்டும் படிதந்து - உயர்ந்தபனையினளவான அதன் சாயை
யைத் தன்னுட்கொண்டு காட்டுங்குணம்போலுள்ள குணத்தை யுடைத்து—
எ-று. * பனை-ஆருபெயர். ஆல்-அசை. பறவைவிளிமுதலியவை-உலக்கைப்பா
ட்டு-மகளிர் பரிடனப்பொழி இடிக்கின்றபோதுபாடும்பாட்டுவிரி- விரித்தல்—
எப்படி மிகச்சிறிய பனித்துளியிலே மிகப்பெரிய பனைமரத்தின்சாயை அடங்
கி விளங்குகின்றதோ அப்படியேமிகச்சிறிய இக்குறள்வெண்பாவில் மிகப்பெ
ரியபொருள் அடங்கிவிளங்குகின்றதென்பதாம். இதுசுருங்கியிருந்தும்விரிவா
னபொருளை விளக்குமாறுசொல்லியபடி. இதுமுதலியன சங்கத்துப் புலவரா
லே பாடப்பட்டன.

(நி

பரணர்.

மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியான்
ஞால முழுது நயந்தளந்தான் — வாலறிவின்
வள்ளுவனுந் தங்குறள்வெண் பாவடியால்வையத்தா
ருள்ளுவவெல்லா மளந்தா ரோர்ந்து.

இ-ள். மாலும் - திருமாலும் — குறளாய்-குறளாய்ப்பிறந்து — வளர்ந்து வளர்ந்து — இரண்டுமாணடியால் - இரண்டுபெரியஅடிகளால் — ஞாலமுழுதும் உலகமனைத்தையும், நயந்து - விரும்பி — அளந்தான் - அளவிட்டான் — வாலறிவின்வள்ளுவரும் - மெய்யறிவினையுடைய திருவள்ளுவரும் — தங்குறள் வெண்பாவடிபால்- தம்மினின்றுந்தோன்றி - அந்நிலைநின்ற - வெண்பாக் குறளின் -இரண்டுசிறிய - அடிகளால் — வையத்தாருள்ளவெல்லாம் அல்வுலகமனைத்தினு முள்ளோரால் - நினைக்கப்பட்டவற்றை யெல்லாம் ஓர்ந்து-ஆராய்ந்து — அளந்தார் - அளந்தார் — எ-று. * உம்மையிரண்டும் முறையே தேவரிற் பெரியோனுகியவென்றும், மனிதனிற் சிறியராய்க்காணப்பட்டவென்றும், பொருள்படநின்றன. உபமானத்திலே வளர்ந்தலும் பெருமையும்சொல்லுதலால் உபமேயத்திலே அவற்றிற்குமுறணுகியகிலைகிற்றலும் சிறுமையும் வருவிக்கப்பட்டன. மாலுக்கு - தானேருவளாதலும் பின்பு அந்நிலை நில்லாது வளர்தலும் பேரடிகளால் அளவுபட்ட உலகத்தையளத்தலும், திருவள்ளுவருக்குத்தம்மினின்றுங்குறளை உண்டாக்குதலும், அதுதன்னிலைகிற்றலும் அதன் சிற்றடிகளால் அளவுபடாத நினைப்பின் விடயங்களை அளத்தலும் சொல்லப்படுதலாலும் வேற்றுமையணி நினைக்கப்பட்டனவெல்லாம் இதனகத்து அளவுசெய்யப்பட்டமை சொல்லியபடி. (சு)

நக்கீரர்.

தானேமுழுதுணர்ந்து தண்டமிழின்வெண்குறளா
லானுவறமுதலா வங்கான்கு - மேதேருக்
கூழினுணைத்தாற்கு மொண்ணீர்முகிலுக்கும்
வாழியுலகென்றுற்று மற்று.

இ-ள். தானே- தானே — முழுதுணர்ந்து - (வேதப்பொரு) ளனைத்தையுமறிந்து — தண்டமிழ் - தண்ணியதமிழின்கண் — வெண்குறளால்- குறள்வெண்பாக்களால் — ஆனுவறமுதலாவங்கான்கும்- விட்டுநீங்குதல் கூடாத அறமுதலாகிய அங்கான்குபொருள்களையும் — ஏதேருக்கு - அவற்றையறியாதவர்களுக்கு (அவர்களினின்றும்) — ஊழின்முறையால்உணர்ந்ததற்கும்-சொல்லியருளிய திருவள்ளுவருக்கும் — ஒண்ணீர்முகிலுக்கும் -ஒள்ளியநீரைத்தந்தமேகத்துக்கும் — உலகு- இவ்வுலகமானது,மற்றென்றுற்றும் — எதிர்காலத்தும்செய்யும்- செயற்கிடந்ததுஒன்றும்இல்லை-வாழி- அதுவும்வாழ்க — எ-று. *ஆனமை- நிங்காமை தானே முழுதுணர்ந்தெனவே- ஆசாரியராயிருந்து பிறரறிவிக்க அறிந்திலனென்றதாயிற்று.முழுதுமென்னுமும்மைதொக்கது.ஒன்மைஇனிமேல்நின்றது. முறை-தாலின்முப்பொருள்களின் இடைக்கிடையொழுங்கு காயனுர்கொடைச்சி

மாமூலனார்.

அறம்பொருளின்பம் வீடென்னுமந்நான்கும்
நிறந்தெரிந்துசெப்பிய தேவை-மறந்தேயும்
வள்ளுவனென்பானேர் பேதையவன்வாய்ச்சொற்
கொள்ளாரறிவுடையார்.

இ-ள். அறம்பொருளின்பம் வீடென்னுமந்நான்கும்- அறமுதலாகச்சொல்லப்பட்ட அவ்வேதப்பொருள்களாகிய நான்கினது—நிறம்- கூறுபாட்டையும்—தெரிந்து-அறிந்து—செப்பிய - (உலகத்தார்க்குச்) சொல்லிய—தேவை- தேவனே—மறந்தேயும் - மறந்தாயினும்—வள்ளுவனென்பான் - (ஒருமனிதனுகவுட்கொண்டு) வள்ளுவனென்றுசொல்லுதற்குஒருவனுளனுயின்—அவன்- அவன்—பேதை-அறிவில்லாதவனுவன்—அவன்வாய்ச்சொல் - அவனது வாயிற்பிறந்த அச்சொல்லை—அறிவுடையார் - விவேகமுடையார் — கொள்ளார்- கொள்ளார்கள்—எ-று. * அறமுதலியவற்றின் கூறுபாடு-அவற்றினதுதொகைவகைவிரிகள்,—மறந்தேயுமென்றதனுல் மிகைப்புடன்சொல்லுவோன்பேதையிற்பேதையாமென்றதாயிற்று. முன்னும் பின்னுமுள்ள பாட்டுக்களில் இப்பெயர் தெய்வத்தன்மையைக் குறிப்பிக்கும்படிநன்குமதித்து உயர்த்திச்சொல்லப்படுதலால் ஒருமனிதனுகவுட்கொண்டென்பது வருவிக்கப்பட்டது. அன்றி ஒலிக்குறிப்பினுலே சாதிஇழிவுதோன்ற வள்ளுவனென்பானெனினுமமையும். இக்குறிப்பொலியை வடநூலார் காகுசுரமென்பர். தெய்வப்புலவனை அவமதிப்பினிழிவுசொல்லியபடி. (சு)

கல்லாடர்.

ஒன்றேபொருளென்னின் வேறென்பவேறென்னி
னன்றென்பவாறு சமயத்தார் - நன்றென்ன
வெப்பாலவரு மியைபவேவள்ளுவனூர்
மூப்பான்மொழிந்த மொழி.

இ-ள். ஆறுசமயத்தார் - அறுவகைமதத்தோரும்—ஒன்றேபொருளென்னின் - (ஒருமதத்தார்தமதுநூலிலே உலகமும்உயிரும் கடவுளுமாகியபொருள்கள் ஒன்றேயென்று நாட்டுவாராயின—வேறென்ப- (மற்றுமுள்ளோர் தமதுநூலிலேஅதனைமறுத்துஅவை) வேறுமென்று நாட்டுவர்—வேறென்னின் - (அபபடி) வேறென்றுநாட்டின்—அன்றென்ப- பின்னுமுள்ளமதத்தோர்- அதனை - அன்றென்றுமறுப்பர்—(ஆகலால் சமயநூல்களெல்லாம் இவ்வாறு மறுக்கப்படுகின்றன)—வள்ளுவனூர் முப்பான்மொழிந்த மொழி- திருவள்ளுவராலே முப்பாலாகச்சொல்லப்பட்டநூல—நன்றென்ன- நன்றென்றுகொள்ளுதற்கு—எப்பாலவரும் - எவ்வகைப்பட்ட பருதியோரும்—இயைப- உடன்படுவார்—எ-று. * மொழியாகுபெயர் ஆறுமதமாவன வியாசமதம்-சைமினிமதம்-பதஞ்சலிமதம் - கபிலமதம்-கணாதமதம்-அக்ஷபாதமதம் - அன்றிச்சைவவைணவமுதலியவற்றைக் கூறினுமாம். எச்சமயத்தாருமென்றது - எப்பாலருமென்றதனுல் வேதத்துக்கு உட்பட்ட சமயத்தாரேயன்றிப் புறப்பட்டசைனம் - பௌத்தம் - சார்வாகம்முதலிய மதத்தாரும், பலவகைப்பட்டசாதியாரும், தேயத்தாரும், காலத்தாரும், பிறரும், தழுவப்படுதலறிக,— இதுவேபொதுவேதமென்றபடி. (சு)

சித்தலைச்சாத்தனார்.

மும்மலையுமுந்நாடு முந்நதியுமும்படியு
மும்மரசுமுத்தமிழு முக்கொடியு-மும்மாவும்
தார்முடைமன்னர் தடமுடிமேற்றோன்றே
பாமுறைதேர் வள்ளுவர் முப்பால்.

இ-ள். வள்ளுவர் - திருவள்ளுவரது—பாமுறைதேர்முப்பால்- பாக்களின் (முன்பின்) முறைதெரிதற் பொருட்டியற்றிய திருக்குறளாகிய, மும்மலையும்-, கொல்லிமலைகோடிமலை பொதியமலை எனப்படுகின்ற மூன்றுமலைகளையும்- முந்நாடும்-(குடநாடுபுனநாடு- தென்னாடுஎனப்படுகின்ற)மூன்றுநாடுகளையும்—முந்நதியும் - (பொருனைநதியும் காவிரிநதிவையைநதி எனப்படுகின்ற) மூன்றுநதிகளையும்—முப்படியும் - (கருவூர் உறையூர்மதுரை எனப்படுகின்ற) மூன்றுபதிகளையும்—மும்முரசும் - (மங்கலமுரசு வெற்றிமுரசு கொடைமுரசு எனப்படும்) மூன்றுமுரசுகளையும்—முத்தமிழும்-(இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழ் எனப்படு) மூன்றுதமிழ்களையும்—முக்கொடியும் - (விற்கொடி புலிக்கொடிமீனக்கொடிஎனப்படுகின்ற மூன்றுகொடிகளையும்—மும்மாவும் - (களவட்டம் பாடலம்கோரம் எனப்படுகின்ற) மூன்றுகுதிரைகளையும்—தார்முறையையுடைய-(சேரசோழபாண்டியர் எனப்படுகின்ற) மூவரசருடையவும்—தடமுடிமேல்-பெரியமுடிகளின் மேலேகொள்ளப்பட்ட—தாரன்றோ - மாலையன்றோ—எ-று. * அன்றோவென்றது - பலரறிதேற்றம்- முப்பால்-ஆகுபெயர் - மும்முரசும்முத்தமிழும் அம்மூவரசர்க்கும் பொதுமையவாயினும் இம்முறையுரிமைஅவர் குடிமரபிற்கியைந்தனபோலும். (ரஎ)

முருத்துவன் முதோதரனார்.

சீர்நிரீர்க்கண்டம் தெரிசக்குத்தேனளாய்
மோந்தபின்யார்க்கும் தலைக்குத்தீர்வு - காந்தி
மலைக்குத்துமால்யானை வள்ளுலர்முப்பாலாற்
றலைக்குத்துத்தீர்வுசாத் தற்கு.

இ-ள். காந்திமலைக்குத்துமால்யானை - (நன்பகையென) வெகுண்டுமலையைக்குத்துகின்ற பெரியகளிறுபோலுள்ள வரசனை—சீர்நிரீர்க்கண்டம்- சீர்நிரீர்ச் சருக்கரையையும்—தெரிசக்கு - சிதைக்கப்பட்ட சுக்கையும்—தேனளாய் - தேனெடுசலத்து—மோந்தபின் - மோந்தபின்பு—அதனால் - யார்க்கும்- (தலைக்குத்துடையோர்) யாவருக்கும்—தலைக்குத்து - தலையடி—இல்- இல்லையாகும்—வள்ளுவர்முப்பாலால்- திருவள்ளுவர்குறளால்—சாந்தற்கு- சீர்தலைச்சாத்தனார்க்கு—தலைக்குத்து தலையிடிநீர்வு- இல்லையாயிற்று—எ-று.* யானைபோல் பவனையானையெனலால் ஆகுபெயர். முன்கேட்கப்பட்ட நூல்களிலெல்லாம். பலசொற்குற்றங்களும், பொருட்குற்றங்களும் கண்டுபொறுமல்தலையில் அறைந்துகொண்டுவந்தமையால் புண்டபட்டுக்குத்தல் உண்டாயிருந்தது இதன்கண் ஓர்குற்றமுங் காணப்பெறுமையால் அதுநீங்கிற்றென்க - எப்படி அம்மூன்றரசர்க்கும் அதற்குமருந்தாமோ அப்படியே யிதற்குமிம்மூன்றுபாலும் மருந்தாயினவென்பதாம். தீர்தென்னுந்தொழிற்பெயர்முற்றுப் பொருளில் வந்தது இதன்குற்றமற்று விளங்குதைசொல்லியடி.

காகன்றேவனார்.

தாளார்மலர்ப்பொய்கை தாங்குடைவார்தண்ணீரூர்
வேளாதொழிதல் வியப்பன்றுவாளாகா
மப்பாலொருபாவை யாப்பமேவாவள்ளுவனூர்
முப்பான்மொழிமூழ்கு வார்.

இ-ள். தாளார்மலர்ப்பொய்கை-தாளத்தோடுபொருந்திய தாமரைமலர்களையுடைய—ஒருகுளத்து-நீரின்கண்ணே—குடைவார்- மூழ்குவோர்—தண்ணீரை - (வேறு) தண்ணீரை—வேளாதொழிதல்- விரும்பாதொழிதல்—வியப்பன்று-வியப்பச்செய்வதன்று—வள்ளுவர் முப்பான்மொழி - திருவள்ளுவரது முப்பான்மைகளையுடையநூலின்கண்ணே—மூழ்குவார்- மூழ்குவோர்—தாம். தாம்—வாளா - வீணாக—அப்பால - அப்பால்—ஒருபாவை - ஒருநூலை—ஆய்படவோ- விரும்புவாரோ (விரும்பார் ஆதலின் இதுவே வியப்பைச்செய்வதாம்)—எ-று. * தாளார்மலரெனலால் - தாமரைமலரெனப்பட்டது. வியப்பச் செய்வதைவியப்பென்றார் மூழ்குதல் இங்கேகருத்துமுழுதும் அழுந்திநிற்றன்மேனின்றது. மொழி - ஆகுபெயர். ஓகாரம்-எதிர்மறை விரும்புதலாகிய காரணத்தை ஆய்படவோவெனக்காரியமாக உபசரித்தார் - அது வியப்பனென்றமையாலே இதுவியப்பென்றதாயிற்று—உயர்வான பொருள் பெற்றோர்க்கு அதினிழிவான போருளையும்பெறவிரும்புதல் இயல்பாயிருக்க - குளிர்ச்சி இன்சுவை நறுமணமுதலிய குணங்களாலே சிறந்தஒருதாமரைக் குளத்துநீரைப்பெற்றோர்க்கு அதனுற்றானே அமைந்திபெற்றுவேறு தண்ணீரைப்பெறவிரும்பாமை வியப்பைச்செய்வதாயிற்று. ஆயினும் இதுகாறும் ஒருநூலைக் கற்றோர்க்குவேறு நூலைக்கற்கவிரும்புதலன்றி விரும்பாமை யில்லாதிருக்க இப்போது உளதாதலின் இதுவே பெருவியப்பைச்செய்வ தென்றதாயிற்று—இதனால் இந்நூல்களையுங் கற்கவிரும்புவோர்க்கு இதுவொன்றே அமைதல்செல்லியடாடி. (கூ)

அரிசிற்கிழார்.

பரந்தபொருளெல்லாம் பாற்றியேவேறு
தெரிந்துதெரிந்தோறுஞ் சோச்-சுருங்கியை
சொல்லால்விரித்துப் பொருள்விளங்கச்சொல்லுதலால்
வல்லாரார்வள்ளுவரைல் லால்

இ-ள். பரந்தபொருளெல்லாம்-(வேதத்திலே) ஒன்றேடொன்று மயங்கிநின்ற நால்வகைப்பொருள்களையும்—பாற்றிய - இப்பூமியிலுள்ளோர் அறிதற்பொருட்டு—வேறுதெரிந்து- வேறுவேறுபிரித்து, தெரிந்தோறுஞ்சோர- (அதுஅதுதனதனது) வகையோடுசேரும்படி—சுருங்கியசொல்லால் சுருக்கமான சொல்லாலேபொருள்விளங்க பொருள்விளங்க விரித்துச்சொல்லுதல்- விரியும்படிவைத்துச்சொல்லுதல், வல்லார்-வல்லவர்கள், வள்ளுவரல்லால்- வள்ளுவரல்லாமல். ஆர்-ஒருவரும்இல்லை—எ-று. * பார்-ஆகுபெயர், திறம்-அறமுதலியவற்றின் கூறுபாடு, சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தன் முதலிய அழகுகள் எப்படிஇவரால்அமைக்கப்பட்டனவோ அப்படி பிறரால் அமைக்கப்படுதல் அரிதாயிற்று. நூலுக்கு ஆயசொல்லும் நாகு இதுசொல்லியடாடி. (எ)

பொன்முடியார்.

கானின்றதொங்கலாய் காசிபனுங்காத்துமுன்
கூனின்றளந்த குறளென்ப - நூன்முறையான்
வானின்றுமண்ணினின்றளந்ததெவ்வுருவனுநா
தானின்றளந்த குறள்.

இ-ள். கானின்றதொங்கலாய்- மணந்தவ்வப்பெற்ற மாலையையுடைய பா
ண்டியனாகுனே, முன்-முன், காசிபனுர்ந்தது-காசிபனுராலே தரப்பட்ட குற
ளை, கூனின்று-மண்ணின்கண்ணேநின்று, அளந்த-உலகந்தை-அளந்த, குறளெ
ன்ப - குறளென்றுசொல்லுவர், தானின்று-நாம் (இங்கே) எழுந்தருளி, வள்
ளுவளளந்தகுறள் - திருவள்ளுவராலேதரப்பட்டகுறள், நூன்முறையான்-
நூலின் முறையோடுகூடி. வானின்று - விண்ணின்கண்ணேநின்றும் —
மண்ணின்றும் - மண்ணின்கண்ணே நின்றும் அளந்தது - (உலகத்தை)
யளந்தது — எ-று. கு-கூனன நீண்டது, ஆறுருபு ஒடுவுருபின்பொருளில்
வந்தது — அக்குறள் வஞ்சித்துப்பெற்றளந்தலால் நூன்முறையோடு கூ
டாதாயிற்று, இக்குறளுக்கு உலகடியும் வரிவடியுமென இரண்டுவடிவுண்மை
யால் ஒவிவடிவுக்கிடம் வானின்றென்றும், வரிவடிவுக்கிடம் ம
ண்ணினின்றென்றும் கூறினர் இக்குறளுக்கு நூன்முறையோடு
கூடாதும் வானிற்றலும் மிகுத்துச்சொல்லி வேற்றுமைசெய்யப்பட்டதும்
மாலு மென்பாட்டிலே நாயனுர்க்கும் மாலுக்கும், இப்பாட்டிலே திருக்கு
றளுக்கும் மாலவதாரக்குறளுக்கும் ஒட்புநோக்கி குறித்துச்சொல்லலால் வேறு
பாடாம், உலகத்துப்பொருளெல்லாம் இம்மூன்று அனதனதற்கிடப்புச்சொல்லியடங்கி.

கோதாவரி.

ஆற்றலழியுமென்ற் றத்தணர்க்கு னன்மறைனயப்
போற்றியுனைத்தேட்டிஞ் புறத்தெழுகா - ரேட்டெழுதி
வல்லுகறும்வல்லாரும் வள்ளுவனுர்முப்பாலுச்
சொல்லிடுமோறறல்சோர் விக்கு று.

இ-ள். அத்தணர்கள் - அந்தணர்கள் — நான்மறையும் - நான்குவேதங
ளையும் — உனாத்து - வாய்ப்பாடமாக — போற்றி - காப்பாற்றி — ஆற்றலழியுமெ
ன்று - (ஏட்டின்கண் எழுதிவைத்தால் வலியில்லாரும் ஓதவாதலின் இவற்
றின்) வலிமைகுறையுமென்று — ஏட்டிற்புறத்தி - ஏட்டின்கண் — எழுதார் - எ
ழுதார்கள் — வள்ளுவனுர்முப்பாலை- திருவள்ளுவராது நிருக்குறளை — ஏட்டிலெழு
தி-ஏட்டின்கணெழுதிவைத்து — வல்லுகறும்- வலியுடையவரும் — வல்லாரும் வ
லியில்லாரும் - வலியில்லாரும் — சொல்லிடுமோ - ஒதினாலும் — ஆற்றல்சோர்
விக்கு று - வலிமைகுறைதலில்லை — எ-று. * அவ்வேதத்துக்கு உதாத்தம் அனு
தாத்தம் எனப்பட்ட சரக்கினின்வழுவாமலோதல் வேண்டுமென்னும் விதி
யதாதலின் அதற்குத் தகுதியுடைய அந்தனரே அதிகாரிகளாயினர். இதற்கு
அம்சமில்லாமையால் யாவரும் அதிகாரிகளாவரென்றறிக. சொல்லிடுமென்
றதனல் பொருளுணர்ச்சிக்கு இதற்கும் வலிமைவேண்டுமென்பது பெற்றப்பட்
டது — ஆற்றல்-சொற்செறிவின்றிட்பம், இவ்வைஞ்சுமே அவ்வேதம் சொல்
லின்கண்ணே நடுவுமையுடைத் தென்பதனும், இவ்விலக்கணம் பொருளிலக்கண்

னே தலைமையுடைத் தென்பதூஉம், பெறப்பட்டன. ஒதப்படுதலில் அவ்வே
றும் இது சிறப்புடைமைசொல்லியபடி. (கடு)

ஈத்தத்தனார்.

ஆயிரத்துமூன்நூற்று மூப்பதருங்குறளும்
பாயிரதநிலேடு பகர்ந்ததற்பின் - போயொருத்தர்
வாய்கேட்கநூலுளவோ மன்னுதமிழ்ப்புலவ
ராய்த்தேட்கவீற்றிருக்கலாம்.

இ-ள். பாயிரத்திலேடு - பாயிரநான்கதிகாரங்களோடுசேர்த்து தொகை
யுரிய—ஆயிரத்துமூன்நூற்றுமூப்பதருங்குறளும்- ஈகூஉ0-குறளும், பகர்ந்த
திற்பின்-ஒதியளந்தபின்பே, ஈய்-போய்—ஒருத்தர்வாய்- ஒருவரதுவாயாலே
—கேட்ப - கேட்க—நூலுளவோ - இல்லை—மன்னுதமிழ்ப்புலவராய்-நிலைபெ
ற்றதமிழிலே புலமைநிரம்பியோராகி—கேட்மக-றர் தமமிடத்துவந்து- கேட்
க—வீற்றிருக்கலாம் - வீற்றிருக்கலாகும்-எ-று. * வீற்றிருத்தல்ஒருசபைநடுவி
லே உயர்வாகிய ஆசனத்தில்ஏறியிருத்தல். இவற்றுட்பலவகைப்பட்ட நூல்க
ளின் கருத்துகளெல்லாம் விளங்கிநிற்றலின்கேட்க அலளவோவென்றார்.புல
வராயெனவே புலமைநிரம்புதற்கு இவைஆயிரத்து மூன்நூற்றுமுப்பதுகுறள்
களும் போதுமென்பது பெறப்பட்டது. ஒதியோர்க்குவரும் இம்மைப்பயன்
சொல்லியபடி. (கசு)

மூகையலூர்ச்சிறு கருந்தும்பியார்.

உள்ளுதலுள்ளி யுரைத்தலுணர்த்தலோ
தெள்ளுதலன்றே செயற்பால - வள்ளுவனார்
மூப்பாலின்மிக்க மொழியுண்டெனப்பகர்வா
ரொப்பாவலரிலை மில்.

இ-ள். வள்ளுவனார் மூப்பாலின்மிக்க - திருவள்ளுவரது திருக்குறளின்
மேற்பட்ட—மொழி-நூலொன்று, உண்டெனப்பகர்வார்- உள்ளதென்றுசொ
ல்லவல்லவர்—எப்பாவலரினும-எவ்வகைப்பட்டபுலவருள்ளும்—இல்-இல்லை—
ஆதலால்-செயற்பால்- (நாம்இக்நூலைக்குறித்துச்) செயக்கடவன—உள்ளுதல்-
(நாம் இதன்பொருளைச் சிந்தித்துக்கொள்ளுதலும்) உள்ளியுரைத்தல் - சிந்தி
த்துப் (பிறர்க்கு) அதனைச்சொல்லுதலும்,உரைத்தனைத்தெள்ளுதல்- (பிறராலே)
சொல்லப்பட்ட அதனைத்தெளிதலும்—அன்றே அல்லவர்—எ-று. * மொழி-தா
குபெயர்ஒப்பதுவடமொழிவேதமிருத்தலின்மிக்கமொழியென்றும்,தமிழின்மா
த்திரமன்றி வடமொழிமுதலியவற்றிலுள்ள புலவனையுந்தழுவுதற்கு எப்பாவ
லரினுமென்றும் அறிவொட்புக்காண்டற்கு உரைத்தனைத் தெள்ளுதலென்று
ங்கூறினார், உள்ளுதலெனவே கேட்டலும், தெளிதலெனவே அவ்வாறு ழுத
லும், அடங்கின-இதுபயிற்சி செய்தொழுகுமாறு சொல்லியபடி, (கஎ)

ஆசிரியர் கல்லாடனார்.

சாற்றியபல்கலையுந் தப்பாவருமறையும்
போற்றியுரைத்த பொருளெல்லாந் - தோற்றவே
மூப்பாண்மொழிந்த முதற்பாவலரொப்பா
ரொப்பாவலரிலையில்.

இ-ள். சாற்றியபல்கலையும்-(அறிவுடையோரால்)சொல்லப்பட்ட பலநூ
ல்களாலும், தப்பாவருமறையும்-தப்பாதநீ - அரியவேதத்தினாலும், போற்றி

ப்பாற்றிவைத்திருக்க—உலகத்தார்க்குச் - சொல்லப்பட்டபொரு ளெல்லாம்—தோற்ற - (தன்னிடத்தே) காட்டும்படி, முப்பான்மொழிந்த- தி ருக்குறளைச்சொல்லிய—முதற்பாவலரொப்பார் - திருவள்ளுவனையொப்பவர்- எப்பாவலரினும்- எவ்வகைப்பட்டபாவலருள்ளும்—இல்-இல்லை—எ-று. * தம் மாலேசொல்லப்பட்டவற்றில் வழுவுருமையால் - தப்பாவென்றும், பொருளு ணர்த்தற்கேற்றி ஓதுதற்கும் எளிதன்மையின் அருவென்றும் விசேடணஞ் செய்யப்பட்டது—எப்பாவலரினுமில் - இதற்கு முன்னுரைக்கப்பட்டபடியே கொள்க. முதற்பாவலர்-முதன்மையையுடையபாவலர், நான்வகைப்பாக்களில் வெண்பாக்களில் வெண்பாக்களும் அவற்றுள்ளும் குறள்வெண்பாவும்தலைமை பெற்றுநிற்றலின் அக்குறள் வெண்பாவால் நூல்செய்த வல்லமையுடையவ ள்ளுமாம், புலமையிலே காயனாருக்கு ஒப்பின்மைசொல்லியபடி. (கஅ)

கோ ங் ஙு தே ர் .

தப்பாமுதற்பாவாற் றுமாண்டபாடலினும்
முப்பாலினுற்பான் மொழிந்தவை - ஒப்பாலும்
வைவைத்தகூர்வேல் வழுதிமனம் மகிழத்
தெய்வத்திருவள்ளுவர்.

இ-ள். எப்போதும் வைவைத்த கூர்வேல்வழுதி-எவ்விடத்திலும் கூர்மை வைத்த சிறப்புப்பொருந்திய வேலையுடையபாண்டியராசன்—மனமகிழ - இரு நயமகிழ—தப்பா- (சொல்லப்பட்டபொருள்) வழுவாமல்—முதற்பாவால் - மு ன்னையுடையபாவாகிய குறள்வெண்பாக்களாலே, தாமான்ட பாடலினுல்- தாம்மாட்சிபெற்ற பாடற்றொழிலினுலே—முப்பாலின் மூன்றுபால்களிலே— காற்பால் - (அறமுதலிய) காற்குபகுதிப்பொருள்களையும்—மொழிந்தவர்- தி ருவாய்மலர்ந்தவர்—தெய்வத்திருவள்ளுவர்- தெய்வப்புலமைத் திருவள்ளுவர்— எ-று. * கூர்-சிறப்பு-ஈண்டனுன் மூன்றடங்குவதன்றி மூன்றனுணன்கடங்கா மையின்-வியந்துகூறப்பட்டதாயிற்று. நூல்செய்த சிறப்பும் அதனால்அரசனை மகிழ்வித்தமையும் சொல்லியபடி. (கக)

தி ரு ஞ் மே த ா வி யா ர் .

வீடொன்றுபாயிரநான்குவிளக்கற
நாடியமூப்பது மூன்றெனுறாழ் - கூடிப்பொரு
ளெள்ளிலெழுப திருபத்தின்றைந்தின்பம
வள்ளுவர்சொன்ன வகை.

இ-ள். வள்ளுவர்சொன்னவகை - திருவள்ளுவராலே சொல்லப்பட்ட தி ருக்குறளின் அதிகாரவகை—பாயிரநான்கு- பாயிரம்-சு, அறமுப்பத்துமூன்று- அறம்-கூக, ஊழொன்று-ஊழ்-க, பொருளெழுபது-பொருள்-எ0, இன்பமிரு பத்தைந்து-இன்பம்- உஅ—எ-று. * அறத்துப்பாலுளடங்காது அதனைவிட்டு நிற்றைந்து-இன்பம்- உஅ—எ-று. * அறத்துப்பாலுளடங்காது அதனைவிட்டு நிற்றலின் வீடொன்று பாயிரமென்றும், இம்மை மறுமை வீடுமென்றும் பயத்தற்சிறப்பிற்றாய் மூன்றனுள் முதலிற்றலின்- வி ளங்குதலென்றும். யாவர்க்கும் பொதுப்படாதுந் தொகுக்கப்பட்ட அறத்தி ன்கூறுபாடு இவையேயாகலின் நாடிய முப்பத்துமூன்றென்றும், முன்னின்ற அறமும் பின்னின்ற இன்பமும் தைகூடுதற்குந்துணையாயிற்றலின் கூடிபொரு

னென்றும், அப்பொருளின் பாகுபாடுகளெல்லாம் இவற்றினடங்குதலின்- எ
ள்ளிலெழுபதென்றும், கூறினர். எள்ளல்-இகழ்தல்—பாயிரனான்கு-பாயிரமா
னநான்கதிகாரங்களையுடைத்து எனப்பிறவும்விரித்துரைத்தகொள்க—சில பு
ழையனல்லவர்மேலே சிலவற்றை சாதியாரும்-சமயத்தாரும்-மிகுத்தும்குறைத்து
ம் வேறுபடுத்தலால் வைப்புழிப்பட்ட வேறுபாடு நிகற்கும் வகையுமென்று
ஆசங்கித்து நிதனதிகாரத்தொருதொடர் நின்றனன் தொகைசெய்தார், பின் இவ்வா
றுதொகை செய்யப்பட்டு வருவனவற்றிற்கும் இதுவே கருத்தாகக்கொள்க.—
மூப்பால்களுக்கும் அதிகாரத்தொகை சொல்லியபடி. (உ0)

கல்கூடாவெள்ளியனார்.

உட்பகைதோக்கி யுபதேசியிகானன்பனைக்தா
னுத்தமமாமுலகாக் கச்செவ்வைபடியிப்படிக்க
மாதானுபங்கி மறுவில்புலச்செந்நாப்
போதார்புனற்கூடற் கச்சு.

இ-ள். உட்பகைதோக்கி - அப்பகைத்தைக்குறித்துச் சென்றேகுதிய—உ
பதேசிதானன்மனத்தான் - உமாதேவியினதுதானோ மணந்தகடவுளை—உத்த
மமாமுலகாக்கு - வடமதுரைக்கு—அச்செவ்வை- ஆதாரமென்றுசொல்லுவர்—
இப்பக்கம்-இப்பக்கம்—மாதானுபங்கி - மாதானுபங்கியெனப்படுகின்ற—மறு
வில்புலம- குற்றமற்றபுலமையாகிய தேனைச்சொரிகின்ற—செந்நாப்போதார்-
செவ்வியதாமரையாகிய மலரையுடையவர், புனற்கூடற்கு - நீர்வளத்தையுடையதே
ன்மதுரைக்கு—அச்சு-ஆதாரமாவார்—எ-று. * உட்பக்கம்-இடைக்காடர் அர
சன் தன்பாடலில் அமைத்தமைடற்றி-பிணங்கிச்சென்றபக்கம்—உட்பக்தநோ
க்கியென்றது வினையாலணையும்பெயர், கேசி-திருமால்-இது அக்கடவுள் சகஸ்
ரநாமத்திற்கண்டது, கேசிக்குப் பின்னேபிறந்தவள், உபகேசியென்றபது.உ
பேந்திரனென்பதுபோல், மாதானுபங்கி-மாதானைவிகாரமாகத்தொண்டு கடத
லின்ற ஒழுக்கினனெனப்படுதலின அவள்பின்னேமேலேபோல் இவர் உலகத்தா
ர்போல் அருள்செய்தல் சொல்லப்பட்டதாயிற்று.—நாப்போதென்றதற்கேற்க-
புலமைமிகுதி தென் தூரோபிக்கப்பட்டது—அச்சுப்போற் றங்குதலால் - அச்
சென்றார், ஈயருராகிய நிலக்கருடையுடைத்தாய் சால்வழுதியருராகப்புலவ
ருதலைமேற் நினிதாங்கிய, மதுரைக்குவண்டான சிறப்புச்சொல்லியபடி.(உக)

தொடித்தலைவிழுத்தண்டினார்,

அறனென்றறிவொரு கொழுமுனுங்காமத
நிறனென்றெமைப்பருகி யெய்து - பெறலரிய
வாலுமமாழிக்கபெரு மாவலரோனன்னுணாவார்.
போலுமொழிந்த பொருள்.

இ-ள்.அறனான்கு-(பாயிரம்இல்லறம் துறவறம்ஊழ்என) அறப்பாலினுட்பிரி
வுகளுளவாகு—அறிவொருதேமே-(அரசுஅமைச்சுஅரண்சூழ்படைநட்புஒழிபுஎன
அறியப்பட்டபொருட்பாலினுட்பிரிவுகளேழு—காமத்திற்றான்று-(ஆண்பால்பெ
ண்பால்அலிஇருபாலென்ன)காமத்துப்பாலினுட்பிரிவுகண்டான்று—எனப்பகுதி
செய்து-என்றுடன்றிசெய்துபெறலரியவாமம்-பெறுதற்கரிய(அறம்பொருளின்

ம்மிடுளனப்படுகிற); நான்குபொருள்களையும்—மொழிந்த - சொல்லி
ய—பெருநாவலரோ - பெரியநாவலரோ— ஓழிந்தபொருளை - (அவற்றுள்
அடங்காமல்) ஓழிந்தபொருள்உளதாயின் அதனை—நன்குணர்வார்போ
லும் - நன்றுகஅறியவல்லவர்போலும்—எ-று. * இறவென்றது - அஸ்
முதலியவற்றோடுங் கூட்டப்பட்டது நான்கு - நான்குபிரிவுடைத்தெ
னவிரித்துரைத்தாதாகக்கொள்க, நாவலரோயென்றதனையால்பிறரால் அறியப்
படுவதன்றென்பதாயிற்று, மூப்பாலியற்றுரைகையும், இவற்றினடங்கா
ததுஒன்றில்லையென்பதும் சொல்லியபடி. (௨௨)

வெள்ளிவீதியார்.

செய்யாமொழிக்கும் திருவள்ளுவர்மொழிந்த
பொய்யாமொழிக்கும் பொருளொன்றே - செய்யா
வதற்குரியாரந்தணரோ யாராயிலேனை
யிதற்குரியாரல்லாதா ரில்.

இ-ள். செய்யாமொழிக்கும்- (ஒருவராலே) செய்யப்படாதமொழி
யாகியவேதத்துக்கும்—திருவள்ளுவர்மொழிந்த - திருவள்ளுவரால அரு
ளிச்செய்யப்பட்ட—பொய்யாமொழிக்கும் - (தன்வழியிலொழுகுவோர்
க்குப்பயன்விளவிலே) பொய்படாதமொழியாகியதிருக்குறளுக்கும்—
பொருளொன்றே - பொருளொன்றும்—ஆயாயின் - ஆதால்—செய்யாவ
தற்குரியார்- செய்யப்படாதஅவ்வேதமோதுதற்குரியவர் - அந்தணரோ,
அந்தணரோயாம்—எனையிதற்குரியாரல்லாதார் - பொய்படாதஇத்திரு
க்குறளோதுதற்குரியவரல்லாதவர்—இல்- (உலகத்தில்) லில்லை—எ-று. *
பூர்வவேதத்தை நிந்தியமென்பார் மதமபற்றி செய்யாமொழியென்றார்,
அதுவடமொழியும் இதுதென்மொழியுமாய்நின்று சிலவேறுபாடுடைய
னபோற்றோன்றினும் நுண்ணுணர்வாலேதெளிக்குவார்க்குள்ளருத்து வேறு
படாமையின - பொருளொன்றேயெனத் தேற்றேகாரமதொடுதோதினார்.
செய்யாமொழி பொய்யாமொழி அன்மொழித்தொகைகள், இதற்
குரியாரல்லாதாரில்லையென்றதனாலும் பொதுவேதமாதலறிக, அதற்கும்
இதற்கும்பொருள் வேறேறுவென்றும், இவனையோதற் கதிகாரிகளாவார்
யாவரோவென்றும் நிகழ்கின்ற ஐயமொழிந்தபடி. (௨௩)

மாங்குடிமருதனார்.

ஓதற்கெளிதா யுணர்தற்கரிதாகி
வேதப்பொருளாய் மிக்விளக்கித் - தீதற்றே
ருள்ளுதோருள்ளுதோ றுள்ளமுருக்குமே
வள்ளுவர்வாய்மொழி மாண்பு.

இ-ள். வள்ளுவர்வாய்மொழி-திருவள்ளுவரதுவாயினின்றுந்தோன்
றியதிருக்குறளினை து—மாண்பு - மாட்சியைசொல்லி—(அது) ஓதற்கெ
ளிதாய் - ஓதப்படுதற்கெளிய சொற்களையுடையதாகியும்—உணர்தற்கரிய
தாகி - அறியப்படுதற்கரிய பொருள்களை யுடையதாகியும்—வேதப்பொ
ருளாய் - வேதமெனப்படுகின்ற பொருளாகியும்—மிகவிளங்கி-(அவ்வே
தத்தின்) மிகவிளங்கி—தீதற்றேர்- குற்றமற்றேர்கள்—உள்ளுதோருள்
ளுதோறு-நினைக்குந்தோறுநினைக்குந்தோறும்—உள்ளம-(அவர்களுடை
ய) மனத்தை—உருக்கும்- கரைக்கும்—எ-று. * ஓதற்கெளிதாகனவே
றவின்றேர்க்கினிமை நன்மொழிபுணர்த்தல்களும், உணர்தற்கரிதாகியை

னவே ஆழமுடைமையும் வேதப்பொருளாயெனவே- விழுமிய தபயத்தலும், பிறவுமாகிய அழகுகளினை மதிசொல்லப்பட்டதாயற்று. தீதற்றோர்-பொருளாராய்ச்சிக்கிகற்ற நுண்ணறிவுடையோர், உள்ளுதோறுள்ளுதோறும் உள்ளமுருக்குமெனவே முன்காணப்பட்டதினும் பின்காணப்படும் பொருள்சிறந்தும் விளிந்தோர்தோன்றுதலுடைமைபெறப்பட்டது இதனது அற்புதமான குணமுடைமைச் சிறப்புச்சொல்லியபடி.(உச)

எறிச்சலூர்மலாடனார்.

பாயிரநான்கில் லறமிருபான்பன்மூன்றே
தூயதுறவறமொன்றாழாக - வாய
வறத்துப்பாலல்லவையா வாய்த்துணைத்தார் நூலின்
நிறத்துப்பாள்வள்ளுவனார் தேர்ந்து.

இ-ள். வள்ளுவனார்-திருவள்ளுவனார்—ஆய்ந்து - (அவ்வேதத்தின் கருத்தாகிய) யாராய்ந்து—நூலின்நிறத்துப்பால்- (தமமாலில்செய்யப்பட்ட) நூலினதுநிறத்திற்குத்தக்க நன்மையுடைமையால்—தேர்ந்து-(இவையேஉரியவையென்று) தெளிந்து—பாயிரம்-பாயிரம்—நான்கு - நான்கு—இல்லறம்-இல்லறம்—இருபான்-இருபது—துறவறம்-துறவறம்—பன்மூன்று-பதின்மூன்று—வாழ்-வாழ்—ஒன்று-ஒன்று—ஆகவாய-ஆகக்கூடிய—நால்வகையா-(பாயிரமுதலிய)நால்வகையுடைத்தாக—அறத்துப்பா-அறப்பாலில்—வாய்ந்து-பொருந்தி—உணர்த்தார்-கூறினர்-என்று.* நான்குமுதலிய தொகைகளோடு அதிகாரமுடைத்தென்பது கூட்டுக. மூப்பாற்பொருள்களினும் முதற்கண் காணமாதற் சிறப்புடைமையின்- தூயதுறவறமென்றார், நூற்பயன்-நன்மை, அது எல்லாவருணச்சிரமங்களுக்கும் பொதுவாயிருக்கை. அறப்பாகியலங்காரத் தொகைசொல்லியபடி.

பொதுக்கியார்.

அரசியலைமைச்சியலீரைந்
தாநூலரணிரண்டென்றுரை-கூழிருவிய
நின்பகைநட்புப் பதினேழ்குடிபதின்மூன்
றென்பொருளேழா மிவை.

இ-ள். அரசியல்-அரசியல்—ஐயைந்து-இருபத்தைந்து—அமைச்சியல்-அமைச்சியல்—ஈரைந்து-பதது—அரணிரண்டு- அரணிரண்டு—கூழொன்று-கூழொன்று—படையிருவியல் - படையிரண்டியல்—நட்புப்பதினேழ்-நட்புப்பதினேழ்—குடிபதின்மூன்று - குடிபதின்மூன்று—எண்பொருள்-எண்ணப்பட்ட பொருட்பாலுக்கு—இவையேழாம்- இவ்வியல்களேழுமாம்—என்று.* இதனதொகைகளோடும் முன்சொல்லப்பட்டபடியேகூட்டுக. அரணுக்கு உருத்திட்பம் சிறத்தலின் உருவலானென்றும்பொருளுடையாக்கே சூழ்ச்சி அமைவதாதலின் ஒன்பொருளென்றும் படைக்குக் கடும்போரிற் பின்கொடாத திண்மையுரித்தாதலின்—திண்படையென்றும் கூறினர். பிற்காலத்தார் அமைச்சுமுதலிய வைந்தனையும் அங்கவியலென ஓரியலாக்கியும் வழங்கும்.—பொருட்பாவியலதிகாரத்தொகை சொல்லியபடி. (உசு)

மோசிகீரனார்.

ஆண்பாலேழாறிரண்டு பெண்பாலடுத்தன்பு
பூண்பாலிருபாலோ ரீருக - மாண்பாய

காமத்தின்பக்கமொரு மூன்றுகக்கட்டுரைத்தார்
நாமத்தின்வள்ளுவனார் நன்று.

இ-ள். ஆண்பால்-ஆண்டமல்—எழ்-எழ்—பெண்பால்- பெண்பால், ஆறிரண்டு-பன்னிரண்டு—அடுத்தண்டுபூண்பால் -(ஒருவனையொருவர்) அடுத்துஅன்பைப்பூணுகற்பகுதியுடையடை—இருபால் - அவ்விருபால்—ஓராறுக-ஓருக—மாண்பாய காமத்தின்பக்கம் - பாட்சியான காமத்துப் பாலினியல்கள்—ஒருமூன்றுக- ஒருமூன்றுக—நாமம்- பெயர்பெற்ற—வள்ளுவர்-திருவள்ளுவர்—கட்டுரைத்தார்-சொல்லினர்—எ-று.* இவற்றையே பொருளிலக்கணத்துக்கமைய க்ளவியல் கற்பியலென விரண்டாக்கப்பட்டன—இத்தொகைகளுக்கும் மூன்று கூறப்பட்டது கொள்க காமத்துப்பாலியலதிகாரத்தொகை சொல்லியபடி. (உஎ)

காவிரும்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்.

ஐயாறுநூறு மதிகாரமூன்றுமா
மெய்யாய்வேதப் பொருள்விளக்கப்- பொய்யாது
தன்தாளுலகிற்குத் தான்வள்ளுவனாகி
யன்காமனைமேலயன்.

இ-ள். அதிகாரம்- அதிகாரம்—நூறுமையாறுமூன்றுமா - நூற்றுமூப்பத்துமூன்றுமா—மெய்யாய் - உண்மையான—வேதப்பொருள-வேதப்பொருள்—பொய்யாதுவிளங்க- மெய்ப்விளங்க—அன்காமனைமேலய-ன்-அழகியதாமனைமலர்மேல்வீற்றிருக்கிற நான்முகக்கடவுள்—தான்வள்ளுவராகி - தான்வள்ளுவராகி உலகிற்குத்தந்தான்—எ-று. * உலகுஇன்பமெக்கனை யுணர்த்திநின்றது மெய்யாய்வேதப்பொருள் பொய்யாதுவிளங்கவெனவே இதற்குமுன்மெய்யாய்பொருள் பொய்யாய்மறைந்தும்பொய்யாய்பொருள் மெய்யாய்விளங்கியும் கிடந்தமைசொல்லப்பட்டதாயிற்று அதிகாரத்தொகையோடு நூற்பொருளியல்புசொல்லியபடி. ()

மதுரைத்தமிழ் நாயகனார்.

எல்லாப்பொருளு மிதன்பாலுளவிதன்பா
லில்லாதவெப்பொருளு மில்லையாற்-சொல்லார்
பரந்தபாவாலென் பயன்வள்ளுவனார்
சுரந்தபாவையத் துணை.

இ-ள். எல்லாப்பொருளும் - (பல்வகைநூல்களாலுஞ் சொல்லப்பட்ட) எல்லாப்பொருள்களும்—இதன்பாலுள - இந்நூலகத்தடங்கியிருக்கின்றன—இதன்பாலில்லாத வெப்பொருளும்- இதனிடத்தில்லாதயாதொருபொருளும்—இல்லை- (என்நூலகத்தும) இல்லை—(ஆதலால்) சொல்லாற்பரந்தபாவால் - சொல்லளவிறலிலவிரிந்த நூலகளால்—பயனென்-பயனென்ன—வள்ளுவனார்சுரந்தபா-திருவள்ளுவராலமைக்கப்பட்ட இந்நூலொன்றே—வையத்துணை - மண்ணுலகத்தாருக்குத் துணையாதலையும்—எ-று. * எல்லாப்பொருள்களுமாவனமுதல்வழிசாரபெனமூவகைப்பட்ட அறநூல் பொருணூல்இன்பநூல்வீட்டுநூல்என்பவற்றில்சம்பொருள் ஆக்கப்பொருள குறிப்புப்பொருளென இம்மூவகையாற்கொள்ளக்கிடந்த காட்சிப்பொருள்களும் கருத்துப்பொருள்களுமாழ்தொழிலும்பண்பும் ஒரோவழிப்பொருளெனக்கூறப்புடைபாடின் அவைபும்இவற்றுள் அடங்குமாறறிகபின்னும் அவனவழியுருசுக்கு - இதன்

பாஷில்லாத வெப்பொருளுமில்லையென்றார். சொல்லாற்பறக்கவனை அனை பொருளாற்பரப்பின்மை பெறப்பட்டது. பாக்கல்-பதினாயிரம் நாறாயிரமுதலியகிரந்தவளவையால்விரித்தல் சொல்லாறபறந்தநூல்களை ஆய்வோர் மலையகழ்ந்து எலிபிடித்தல்போல் மிகவருந்திச்சிறுபயன் கொள்ளுதலால் என்பயனென்றார். ஆல்-அசை. பா-வையம்ஆகுபெயர்கள்—சின்னட்பல்பிணிச் சிற்றறிவுடையோர்க்கு விதி விலக்குசெய்முற்றும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் கண்டுதெளிபுபோறு உணர்த்திக்கடுமாற்றந்தீர்த்தலின் வையகத்துணையென்றார். முற்செறிருங்குணர்விழைவார்க்கு இஃது இறியமையாச் சிறப்பிற்றென்றபடி. (உக)

பாரதம்பாடியபெருந்தேவனார்.

எப்பொருளும்யாரு மியல்பினறிவுறச்
செப்பியவள்ளுவர்தாந் செப்பவரு-முப்பாற்குப்
பாரதஞ்சிராம கதைகளுப்பண்டைமறை
நேர்வனமற்றில்லை நிகர்.

இ-ள். பாரதஞ்சிராமகதைமறுப் பண்டை மறைநேர்வன-பாரதம்பழையசிராமகதையும்மன்னுஸ்மிருதிப பழையவேதத்தையும் ஒப்பனவாகும்—எப்பொருளும்-எவ்வகைப்பட்ட பொருள்களையும்—யாரும்-எவ்வகையோரும்—இயல்பின்-(அவற்றின்) தன்மையோடு—அறிவுற-அறிய—செப்பிய- (அவற்குச்)சொல்லும்படிக்கு—வள்ளுவர்செப்பவரு-திருவள்ளுவர்சொல்லால்வந்த—முப்பாற்கு—திருக்குறளுக்கு—நிகர்-உபமானமாகத்தக்கது, இல்லை-ஒன்றில்லை—எ-று. * மற்று-அசை அறிதற்கரிய வேதாந்தப்பொருளுமென்றற்று-எப்பொருளு மென்றும்உயர்குலத்தாரேயன்றி எனையோருமென்றற்கு - யாருமென்றும்ஐயக்கிரியின்றியறியவென்றற்கு - இயல்பினறிவுறவென்றும்இதுவேசுருதிகுருவின்றுமாமென்றற்கு-செப்பியசாவென்றும்கூறினர், பண்டையென்பது- சிராமகதைக்குங்கூட்டுக கதாரூபமாயிருந்துபாரதராமாயணமெனவும் விதிரூபமாயிருந்து சுருஸ்மிருதியெனவும். கூட்டிச்சொல்லப்படுதலால்-உபமானஉபமேயங்களாதலறிக, எப்பொருளும்யாருமியல்பின்றிவுறச் செப்புதல்வேதத்திற்கின்மையால் - முன்முப்பாலின்மிக்கமொழியென்றதனற்பெறப்பட்ட வேதத்திலெனப்புனமையமறுத்தபடி. (நுஅ)

பருத்திரசன்மகண்ணனார்.

மணற்கிளைக்க நீரூறு மைந்தர்கள் வாய்வைத்
துணச்சுரக்குந்தாய்முலை யொண்பால்-பிணக்கிலா
வாய்மொழி வள்ளுவர் முப்பான் மதிப்புலவோர்க்.
காதொறு மூறு மறிவு.

இ-ள். மணக்கிளைக்க-மணலைத்தோண்டுந்தோறும்—நீரூறும் - நீர் பெருகும், மைந்தர்கள் வாய்வைத்துண-புதல்வர்கள் வாய்வைத்து உண்ணுந்தோறும், தாமுலை-தாயினதுமுலைக்கண், ஒண்பால்சுரக்கும் - நல்ல பால்பெருகும்—(அவைபோல்) பிணக்கிலாவாய்மொழி - பிணக்குதற்கு வழுவில்லாதவாய்மைச்சொல்லையுடைய, வள்ளுவர்முப்பால் - திருவள்ளுவரதுதிருக்குறளை, ஆய்தொறும், ஆராயுந்தோறும், மதிப்புலவோர்க்கு-அறிவுடையபுலவாக்கு, அறிவுறும்- அறிவுவளரும்—எ-று. * கற்பிதமாகிய சாதிசமயங்களின் மானம்பற்றி உள்ளதை இல்லதாகவும் இல்ல

தைஉள்ளதாகவும்சிறிதைப்பெரிதாகவும் பெரிதைச்சிறிதாகவும்தீயதை நல்லதாகவும்நல்லதைத்தீயதாகவும், புனைந்துபிறர்பிணங்கும்படிசொல்லப்பட்டதல்லாமையால், பிணக்கிலாவாய்மொழி யென்றார், மதிப்புலவோர்க்கறிவுறுவ:னவே அவர் அவ்வறிவைக்கொண்டுபிறர்க்கெல்லாம்விதிவிலக்குகளைகற்பித்தல் வேண்டுமென்றதாயிற்று. இதனைச்சிலகாற்பெறலுளமையாது பலகாலும்பயிற்சிசெயல் வேண்டுமென்றபடி. ()

பெருஞ்சித்தனார்.

எதமில் வள்ளுவ னின்குறள் வெண்பாவி னு
லோதிய வொண்பொரு ளெல்லா - மூவாத்தகனற்
ருகவிழ்தார்மாற தாமேதமைப்பயந்த
வேதமே மேதக் கன.

இ-ள். தாதவிழ்தார்மாற— பொடியொடுவிரிந்த பூமாலையையுடைய பாண்டியராச்சே—எதமில்வள்ளுவர் - குற்றமில்லாத திருவள்ளுவர், இன்குறள்வெண்பாவினுல் - இனியகுறள்வெண்பாக்களாலே—ஓதிய-கான்முவேதங்களாலுஞ்சொல்லப்பட்ட, ஒண்பொருளெல்லாம் - ஒள்ளிய பொருள்களையெல்லாம், உவாத்தகனல் - சொல்லிறனையால், மேற்தக்கன-மேம்பாட்டுக்குத்தக்கவை—தாமே - அக்குறள்வெண்பாக்களே, தமைப்பயந்தவேதமே- (மூதனூலாயநின்று) அவற்றைப்பயந்தவேதங்களோடுசொல்லுவாயாக-எ-று. தாம்தம்மைஎனப்பட்டவை அவைஅவற்றைஎன்னும்பொருளைத்தந்துநின்றன-ஏகாரம் இரண்டும்வினுபிற்நூலாசிரியர்க்கெல்லாம் அவரொதிகளாலேமறுக்கப்பட்டு வருங்குற்றம்போல்வதுஇவர்க்கு இல்லையென்றற்கு -எதமில்வள்ளுவரென்றும் தாங்குறியவாய்மின்றுகற்றோர்க்குவருத்தம் விளையாமைபற்றி இன்குறளென்றும் உணர்வுடையோராலே விரும்பப்பட்டதற்குணமுடைமைபற்றி - ஒண்பொருளென்றும்-கூறினர் - நூலாசிரியர்க்கும நூலுக்கும் நூலுதலிய பொருளுக்கும்தகுதிதோன்றச் சொல்லப்பட்டவிசேடன குணங்களாலேஇவ்வேதம்அவ்வேதத்தினுஞ்சிறப்புடைமைகுறிப்பித்தபடி. (உ)

நரிவெருத்தலையார்.

இன்பம் பொருளறம் வீடென்றி மூன்றிற்கு
முன்பறியச் சொன்ன முதுமொழிநூல்:-மன்பதைகட்
குள்ளவரிதென் றனைவள்ளுவருலகங்
கொள்ளமொழிந்தார் குறள்.

இ-ள். இன்பம்பொருளறம் வீடென்றுமிம்மூன்றிற்கும்- இன்பமுதலிய இம்மூற்பெருளியல்புகளையும், மன்பதைகட்கு-மக்கட்பாப்புக்கு, முன்புஅக்காலத்தில், அறியச்சொன்ன-அறியும்வண்ணஞ்சொல்லப்பட்ட-முதுமொழிநூல் - பழம்பொழிவேதமானது, உள்ளவரிதென்று-ஓதியுணரப்படுதற்கரிதென்று வள்ளுவர் - திருவள்ளுவர், அவை- அவற்றை, உலகங்கொள்ள-உலகத்தார் எளிதிலுணருமபடி, குறள் - திருக்குறளை, மொழிந்தார்-சொல்லினர்-எ-று. *முன்பறியவென்னவே உற்சர்ப்பிணியாதலின் அக்காலத்தோர்க்கு உணர்நறகேற்ற ஆயுணீட்சியும் உணர்வுவலியும் இருந்தனவென்பதூஉம் அவசர்ப்பிணியாதலின் இக்காலத்தோர்க்கும் அவையிலனென்பதூஉம் பெறப்பட்டன - இவ்விரண்டும். அவாவறுதல் என்மூன்றும் பாட்டினாயிற் காண்க-தெயவழக்கிற்படாதசதும் வருஞ்சி

கற்போர்க்குமாத்திரம் புலப்படுவதுமாய் எல்லாமொழிகட்டு முற்பட்டுக்கடவுண்மொழியாய்நிற்றலின் முதுமொழியெய்ருர் அறமுதலியநான்கும்பிறிவுப்பட்டுததோன்றுமையுடைத்தாதலின் உள்ளவறிதாயிற்றுப்பழையவேதபுளதாகவுமவெறிதுசொல்லுதற்குக்காணமுணர்த்தியபடி.(கூகூ)

மதுரைத்தமிழாயியர்செங்குன்றூர்க்கிழார்.

புலவர்திருவள் ளுவரறிப்பூமேற்
சிலவர்புலவனெச்செப்ப - னிலவு
பிறன்கொளிமாலைகளும் பெயர்மாலைமற்றுங்
கறங்கிருண்மாலைக்கும் பெயர்.

இ-ள். பூமேல்- பூவுலகின்கண்ணே—புலவர்திருவள்ளுவரன்றி புலவனெத்திருவள்ளுவனையன்றி, சிலர்புலவனெச்செப்பல்- வேருசலாயம் புலவனென்றுசொல்லுதல், மாலை - மாலையென்பது, நிலபுரவுங்கொளிவாலைக்கும்பெயர்-நிலவால்விளங்குகின்ற அந்திக்கும்பெயராக—மற்றும்-இவையன்றியும்—கறங்கிருண்மாலைக்கும்பெயர் - சூழ்கின்றவிருளையுடைய அந்திக்கும்பெயராக—செப்பல் - சொல்லுதல்போலும்—என்று, * செப்பலென்றது பின்னுங் கூடப்பட்டது புலமையாவது-பலவேறுவகைப்பட்ட நூலுணர்ச்சிகளையெல்லாம ஒருங்கேகொண்டபோறிவுடைமையாம். உயர் ஒப்பற்ற இவரது புலமையைக்குறிதது நோக்குங்கால் வேனயோர் புலமையன்றுய் மூடிகளின் இவ்வாறுகூறினர், புலவனென்பது நாயனுகாணப் பெயராமென்றபடி. (கூச)

மதுரையறுவைவாணிகா இளவேட்டனர்.

இன்பமுந்துன்பமு மென்னுமிவையிரண்டு
மன்பதைக்கெல்லாமவடெழ்-வன்பொழியா
துள்ளியுணர வுறைத்தாரோயாகுசீர்
வள்ளுவர்வாயுறை வாழ்த்து.

இ-ள். இன்பமுந்துன்பமுமென்னுமிவை-(பின்வரக்கடவனவாய்) சுகமுந்துக்கமுமெனப்பட்டவிவற்றினுடையஇண்டும் இருவகைக்காரணங்களையும்—உள்ளியுணர-ஆராய்ந்தறியவும, அன்பொழியாது-(தம்மே)லன்புநீங்காமல், மனமகிழா-உள்ளங்களிகூரவும், மன்பதைக்கெல்லாம்-மக்கட்பாப்புக்கெல்லாம், ஓதுசீர்வள்ளுவர் -புகழப்படுஞ்சீரையுறைய, திருவள்ளுவர்வாயுறைவாழ்த்து - வாயுறைவாழ்த்தாகஉறைத்தார்(திருக்குறளைச்) சொல்லினுர்—என்று. * இன்பத்தின்காரணம்விதிக்குறளாலும்துன்பத்தின்காரணம் விலக்குகளாலும் சொல்லப்பட்டனமுன்பறிதற்குப்பயன் அவற்றைச்செய்தலும் தவிர்தலுமாம்வேண்டுவனவெல்லாந் தொகுத்துணர்தலின் மனமகிழ்தல்சொல்லப்பட்டது, அவ்வேதம்போலாது பலர்க்கும் உபதேசமாகச்சொல்லின்மன்பதைக்கெல்லாமென்றுர். வாயுறைவாழ்த்தினியல்பு வாயுறைவாழ்த்தேதவபலகாடினவேம்புகடிவும்போலவெனு சொற்றுக்களினிவழினி பயக்குமென்றேறும்படைக்கள்ளவியின வாயுறுத்தற்றே எனும் தொல்காப்பியச்சூத்திரத்தாலறிக எதிர்கால்விளைவுணர்ச்சி பயத்தல்சொல்லியபடி.

கவிசாகரப்பெருந்தேவனுர்

பூவிற்குத்தாமரையே பொன்னுக்குச்சாம்புனதா
மாவிற்கருமுனியா யானைக் - காமரும்ப

தேவிற்றிருமா லெனச்சிற்ற்தென்பவே
பாவிற்குவள்ளுவர் வெண்பா.

இ-ள். பூவிற்குத்தாமரை - மலர்களுக்குள்ளே தாமரைமலரும்—பொன்னுக்குச்சாம்புனதம் - பொன்களுக்குள்ளே சாம்புனதம்பொன்னும்—ஆவிற்கருமுனியா - பசுக்களுக்குள்ளே காமதேனுவும்—யானைக்குமரும்பல்-யானைகளுக்குள்ளே ஐராவதமும்,தேவிற்றிருமாலென - தேவர்களுக்குள்ளே திருமாலும்போல்—பாவிற்குவள்ளுவர்வெண்பா- நூல்களுக்குள்ளே திருவள்ளுவரது குறள்வெண்பா—சிறந்தது - சிறப்புடையது—என்பர்-என்று (அறிவுடையோர்) சொல்லுவர்—எ-று. * வசை பா-ஆகுபெயர். பொன் ஊடகம்-ஒளிச்சிறை-சாதரூபம்- சாம்புனதம் என்னுல்வகைப்படும். காமதேனு வசிட்டமுனியிடத்துள்ளதாகின் அருமுனியாவென்றார். அமரரும்பலென்பதுவிகாரப்பட்டு நின்றது. உபமானமுகத்தால் இஃது பலநூல்களினும் சிறந்துநிற்கின்ற பாட்டினை சொல்லியபடி. (நடு)

மதுரைப்பெருமருதனர்.

அறமுப்பத்தெட்டே பொருளெழுபதின்பத்
திறமிருபத்தைந்தாற் றெளிய - முறைமையால்
வேதவிழுப்பொருளே வெண்குறளால்வள்ளுவனே
சோதவழுக்கற்ற துலகு.

இ-ள். அறத்திறம்-அறத்தினதுறுப்பாடு—முப்பத்தெட்டால்-அவ்அதிகாரங்களாலும்—பொருட்டிறம் - பொருட்கூறுபாடு—எழுபதால் எ - அதிகாரங்களாலும்—இன்பத்திறம்-காமத்தின்கூறுபாடு—இருபத்தைந்தால்-உரு - அதிகாரங்களாலும்—தெளிய முறைமையால் - (காரணகாரிய) வொழுங்கால்—வேதவிழுப்பொருளே - வேதத்தினுயர்வாகிய பொருளை—வெண்குறளால்- குறள்வெண்பாக்களால்—வள்ளுவனர்-திருவள்ளுவர், ஓத-ஓதலால்—உலகு-உலகமானது—வழுக்கற்றது- வழுவுதலினின்றும்நீங்கிற்று—எ-று. * திறமும் ஆலும் முன்னுங் கூட்டப்பட்டன உயர்வாகியபொருள் - கருமகாண்டம்- பிரமகாண்டமிரண்டினுள்ளும் சிறந்தபொருள், வழுக்குதல்-விதிவிலக்கென்றும்கோடல் உலகு - மக்களையணர்த்திநின்றது, துணிவுப்பற்றி அற்றதென இறந்தகாலத்தாற் கூறினர், முன்னதின் வேறுபட்ட- முப்பால்களினதிகாரத்தொகைகளோடு உலகிற்குவிளையும்நன்மைசொல்லியபடி. (நஎ)

கோவூர்கிழார்.

அறமுதனன்கு மகலிடதேதொல்லாந்
திறமுறத்தேர்ந்து தெளியக்-குறள்வெண்பாய்
பன்னியவள்ளுவனர் பான்முறைநேரொவ்வாதே
முன்னைமுதுமொழி.

இ-ள். அறமுதனன்கும்- அறம்பொருள்இன்பம்வீடுஎனநான்கும் அகலிடத்தேதொல்லாம்!- மண்ணுலகத்திலுள்ளோரொல்லாம்—திறமுறத்தேர்ந்து-வகைப்படஅறிந்து—தெளிய - கலக்கந்தீர—குறள்வெண்பாப்பன்னிய - குறள்வெண்பாக்களாலே சொல்லப்பட்ட—வள்ளுவனர்-யனரது—பான்முறை - முப்பால்களையுடைய புத்தகத்தின்கண்ணேன்னைமுதுமொழி - முற்காலத்துள்ள பெரியோரதுநூல்களுக்கு

கேரொவ்வாது-கேர்தல்பொருந்காது—என்று. * மொழி-ஆகுபெயர், பெரியோராவார்வடமொழியிலும்தமிழ்மொழியிலும் பிறமொழிகளிலும் நூல்செய்தமுனிவரும்புலவரும்பிறரும் அந்நூல்களாவன மதுமுதலியோராலேசெய்யப்பட்ட அறனுள்முதலியன இதன்புத்தகத்தில்முன்னூல்களிலொன்றும் சேர்க்கப்படுதற்குத் தகுவதன்றென்றுசொல்லியபடி. ()

உலகப்பொதுமுதுகூத்தனார்.

தேவிற்சிறந்த திருவள்ளுவர்குறள்வெண்
பாவிற்சிறந்திடுமுப் பால்பகரார் - நாவிற்
குயலில்லைசொற்சுவை யோர்வில்லைமற்றுஞ்
செயலில்லையென்னுந் திரு.

இ-ள். தேவிற்சிறந்ததிருவள்ளுவர்-தெய்வத்தன்மையாற்சிறந்த திருவள்ளுவரது—குறள்வெண்பாவிற்சிறந்திடு - குறள்வெண்பாக்களோடுகூடிச்சிறந்து தோன்றுகின்ற—முப்பால்-முப்பால்களையும்—பகரார்-ஓதாரது—நாவிற்கு-வாக்கிற்கு—உயலில்லை- (இன்சொற்சொல்லி)வாழ்தலுண்டாகாது—சொற்சுவையோர்வில்லை- (மனத்திற்குச்) சொற்களின் சுவையையறிதலுண்டாகாது—மற்றும் - இவையன்றியும், செயலில்லை (காயத்துக்கு) நல்லசெயலுண்டாகாது— என்னுந்திரு-என்றுகினைத்துத்திருமகள்வுவரிடத்துச்சேராள்—என்று.* சுவையோர்தற்கும் - செயலுக்கும்-உரியமனமும்-காயமும்- வருவிக்கப்பட்டன. திருமகள் சோராமையாகிய காரியதனைத்தற்காரணமாகவுபசரித்தார். ஓதார்க்குள் வாகாமைசூறவே-ஓதுவோர்க்கு இவையுளவாதலின்-வர்க்கிற்கு - கடுஞ்சொல் பொய்-கோள்-புறங்கூறல்களும், மனத்திற்கு - பிறனில்விழைதல் பிண்பொருள்விழைதல் பிறன்பொருட்குக் கேடெண்ணல் பிறவுயிர்க்கிறுதியெண்ணல்களும், காயத்திற்கு - பிறன்மனைபுணர்தல் - உயிர்க்கொலைசெய்தல்-பழியூணுண்ணல் - பிறர்பொருளவளவல்களும், ஈரிடகுற்றங்களெல்லாம் நீங்கு மென்பதும்பெறப்பட்டது. அறவின்பங்கட்குக் காரணமாதற் சிறப்புடைய பொருட்பேறு இகந்தகாதலி னுளதாமென்றபடி.

இழிகட்பெருங்கண்ணனார்.

இம்மைமறுமை யிரண்டுமெமுலகமக்குஞ்
செம்மைநெறியுந் தெளிவுபெற - மும்மையின்
வீடவற்றினுள்ளுங்கின் விரிவழங்கவள்ளுவனார்
பாடினரின்குறள் வெண்பா.

இ-ள். இம்மைமறுமை-யிரண்டும் இகபரங்கட்காவனவிரண்டையும், எழுமைக்கு-(வினைப்பயன்றொடர்தற்குறிய) வழிபிறப்பிற்குமாக,செம்மைநெறியின்-செவ்வையானவழியால்—தெளிவுபெற - (யாவரும்) தெளிதல்பெறவும்—மும்மையின்- (அறம்பொருளின்பமென்னு) மூப்பால்களுள்—அவற்றினுள்-அம்மூப்பாற்பொருள்களோடு—வீடு - வீடுமாகிய, நான்கின்விதி - நாற்பொருள்களதுவிதிகளும், வழங்க-வழங்கவும்—வள்ளுவனார் - திருவள்ளுவர்—இன்குறள்வெண்பா - இனியகுறள்வெண்பாவை—பாடினர்-பாடினர்—என்று. செவ்வையான்வழி-வித்தியும் - பத்தியும்-ஞானமும் - நோயாளிக்கு-மருந்தும் அனுபானமும் பத்தியம்போலவொன்றற்கொன்று முரணுதலுகூடாதிற்கும்வழி, விட்டுவிதி தவறவறத்திற்காண்க, இம்மை மறுமைவீடுமூன்றும் பயக்குமாறுசொல்லியபடி. (சுவி)

செயிர்க்காவிரியார்மகனூர்சாத்தனூர்.

ஆவனவுமாகா தனவுமறிவுடையார்
யாவருமல்லா லெத்தியம்பற் - றேவர்
திருவள்ளுவர்தாமுஞ் செப்பியவேசெய்வார்
பொருவிலொழுக்கம்பூண் டார்.

இ-ள். (மக்களுக்கு) ஆவனவும்-ஆவனவற்றையும்—ஆகாதனவும்-ஆகாதவற்றையும்—அறிவுடையார்யாவருமும் - அறிவுடையவ ரெவருமும்—எடுத்தியம்ப - (இனி இதிலிருந்து) எடுத்துச்சொல்லுதற்கு—வல்லார்-வல்லவராவார் (ஆகலால்)—தேவர் திருவள்ளுவர் - தேவராகியதிருவள்ளுவராலே—செப்பியவே - சொல்லப்பட்டவற்றையே—பொருவிலொழுக்கம்பூண்டார்-ஒப்பில்லாத ஒழுக்கத்தை மேற்கொண்டவர்—செய்வார்-செய்வார்—என-று. * இங்ஙனமாகவே அவ்வேதத்திலிருந்துள்ளவாறெடுத்துச்சொல்லுதல் அறிவுடையார்க்கு முடியாமையால் ஒழுக்கம்பூண்டார்க்கு அதன்கண்ணே சொல்லப்பட்டபடி வழுவாமற்செய்தல் கூடாமைகாட்டப்பட்டது; தாம்-வும்-அசைகள், ஆவன இன்பத்தைத் தருவன-ஆகாதன துன்பத்தைத் தருவன: ஒப்பில்லாதவொழுக்கம்-கொல்லாமைமுதலியன, போதகாசிரியருக்கும் - கேட்டொழுகுவோர்க்கும், வருணன்மை சொல்லியபடி. (சக)

செயலூர்க்கொடுஞ்செங்கண்ணனூர்.

வேதப்பொருளை விரகால்விரித்துலகோ
தோதத்தமிழா லுணைசெய்தா-ராதலா
லுள்ளுருள்ளும் பொருளெல்லாமுண்டென்ப
வள்ளுவர்வாய்மொழி மாட்டு.

இ-ள். வேதப்பொருளை-வேதப்பொருளை—உலகோதோத-உலகத்தோதோத—விரகால் - உபாயத்தால்—விரித்துத்தமிழா லுணைசெய்தார் - விரித்துத்தமிழினாலே யுணைசெய்தார் (ஆகலால்) உள்ளுருள்ளும் பொருளெல்லாம் - நினைப்பவர் நினைக்கும் பொருள்களெல்லாம்—வள்ளுவர்வாய்மொழிமாட்டு - திருவள்ளுவர் திருவாயிற்பிறந்த திருக்குறளின்கண்ணே—உண்டென்ப- உண்டென்று (அறிவுடையோர்) சொல்லுவர்—என-று. * உபாயத்தால் விரித்தல்- சொற்சுருக்கத்தால் ஓதற்கெளிதன் மனவெழுச்சியுண்டாக்கிக் கற்போரது அறிவளவிற்கேற்கப்பொருளளவுவிரியவைத்தல், நினைக்கப் படும்பொருள்களெல்லாம் இன்கண்ணே அக்காரணத்தால் தோன்றுகின்றனவென்றுகூறியபடி. (சஉ)

வண்ணக்கஞ்சாத்தனூர்.

ஆரியமுஞ்செந்தமிழு மாராய்ந்திதனினிது
சீரியதென்றுன்னைச் செப்பரிதா-வாரியம்
வேதமுண்டதற்குத் தமிழ்திருவள்ளுவனு
மோதுகுறட்பா வுடைத்து.

இ-ள். ஆரியமுஞ் செந்தமிழுமாராய்ந்து - வடமொழியையுந்தென்மொழியையுமாராய்ந்து—இதனினிது சீரியதென்று - இதைக்காட்டிலும்இதுசிறப்புடைத்தென்று—ஆரியம் - வடமொழி—வேதமுடைத்தாவதமுடையது—தமிழ் தமிழ்—திருவள்ளுவனுமோது- குறட்பாவுடைத்து(ஆகலால்)—என-று. * ஆல் அசை-வடமொழியும் - தென்மொ

ழியும்-பிறமொழிகள்போலாது பாணினியாரும் அகத்தியனாரும் முதலி
கியமுனிவர்களாலே செய்யப்பட்ட இலக்கண நூல்களாலே சீர்திருத்தி
சிற்றன்முதலிய குணங்களுடைமைபாலும், அதுபோகிருத முதலியவ
ற்றுக்குப்போல் இது ஆந்திரமுதலியவற்றுக்குமுதலாய் சிற்றலாலும்,
ஒன்றறகொன்று குணாபாடுடைத்தத்தன்றும் வேதமுடைமைபற்றிவ
டமொழிக்குச் சொல்லப்பட்ட உயர்வு தென்மொழிக்கண்ணே திரு
குறள் உண்டாதலின் இனி இல்லையென்றற்கு- இதனினிது சீரியதென்
றொன்றைச் செப்பரிதென்றார், இத்திருக்குறளாலே வடமொழியோடு
தென்மொழிக்குஒப்புமை நிறைவு சொல்லியவாறு. (சங)

களத்தூர்கிழார்.

ஒருவரிருகுறளே முப்பாலினீரைந்தும்
திருமுதுகுன்குரைவு - மருமறைகள்
ஐந்திலஞ்சமய நூலாறும்வள்ளுவனார்
புந்திமொழிந்த பொருள்.

இ-ள். அருமறைகளைந்தும் - (இருக்குமுதற்பாதமீறாகிய) அரிய
வேதங்களைந்தும்—சமயநூலாறும்- (அவ்வேதத்தினின்வழிப்பட்ட) சம
யநூல்களாறும், நம்வள்ளுவனார் -நம்முடைய திருவள்ளுவரால்—புந்தி
மொழிந்தபொருள் - (உலகத்தார்க்குப்) புத்தியாகச்சொல்லப்பட்ட நூ
லிலடங்கும் (ஆதலால்)—ஒருவர்- ஒருவர்—இருகுறளே - (ஒருவிகற்ப
மும் இருவிகற்பமுமாகிய) இருவரைக்குறள்களையுடைய—முப்பாலின்-
முப்பால்களில், ஓதும் - அதிகாரவகையாற் சொல்லி அறியப்படுகின்ற,- திரு
முதுகுன்றும்- அறமுதலிய நாற்பொருள்களும், சாறும் - (அவருக்குப்)
போதும்-என்று. * ஒருவனுக்கிதனைந்துப் பிரியுணராமுடிவுபோகாதலால்
வேறென அதிகாரிகளுடைமைபற்றி அருமறைகளைந்துமென்றார், சமய
நூலாறும்-ஒன்றேபொருளென்னும் பாட்டினாயிற்காண்க, நமக்கெல்லா
ம் அறிவாழுக்கங்கொளுத்தி நல்வழிபடுத்தவந்த பரமாசாரியர் இவரே
யென்னுமுரிமைதோன்றற்கு-நம்வள்ளுவனென்றார், மறைகளைந்தும்
சமயநூலாறு நம்வள்ளுவனார் புந்திமொழிந்தபொருளெனலால்- அவை
பலவற்றினும் வேறுவேறுவகைப்பட்டுச் சிறந்துகின்ற கருத்துகளெல்
லாம் இவ்விவாருநூற்கண்ணே அடங்கிநிற்கின்றமை சொல்லப்பட்டதா
யிற்று—பொருள் பலபெயர், ஒருவனைப் பொதுப்படக்கூறலால் இ
தனை யோதுதற்குப்பெண்பாலாருக்கும் அதிகாரமுண்டென்பது கொ
ள்ளப்பட்டது, இவ்விவாருநூலோதி யுணர்ந்தோர் அருமறைகளைந்தி
ற் சமயநூலாறும் ஓதியுணர்ந்தோராவ ரென்றபடி. (கச)

ந க் கீ ர ர்.

எழுத்தசைசீராடி. சொற்பொருள்யாப்பு
வழுக்கில்வணப்பணி வெண்ணை - யிழுக்கின்றி
யென்றவர்செய்தன வெல்லாமியம்பினு
மின்றியமையாதின் குறள் வெண்பா.

இ-ள். எழுத்தசைசீராடி சொற்பொருள்யாப்புவழுக்கில்வணப்பணி
வெண்ணம் - எழுத்துமுதல்வண்ணமீறாகச் சொல்லப்பட்ட இவற்றுள்,
இழுக்கின்றி- எழுவுதலில்லாமல், என்றவர்செய்தன - எக்காலத்தில்

எவரால் எவைசெய்யப் பட்டஎல்லாம் (அவை)யெல்லாம், இன்றிவரின் குறள்வெண்பா - இக்காலத்து இத்திருவள்ளுவமாலை செய்யப்பட்டஇவ் விரியகுறள் வெண்பாக்களில், இயம்பின-சொல்லப்பட்டன-எ-று. * னைப்பு-அம்மை-அழகு-தொல்லைமை-தோல்-விருத்து-இளமை-புலன்-இழைப்பு-அணி-சொல்லணி - பொருளணி-ஒலியணி-வண்ணம்- குறில்நெடில்வண்ண முதலியன, ஒவ்வொருகாலத்தில் ஒவ்வொருபாலர் ஒவ்வொருகுணத்தினாலே சிறந்து விளங்க நூல்செய்தனர் இவரோவெனின் எல்லாக் குணங்களாலும் நிறைந்து சிறந்துவிளங்கச் செய்தமையின் இவ்வாறுகூறினர், இதன்பாக்களின் சிறப்புச்சொல்லியபடி. (சகு)

அக்காரக்கனி நச்சுமனார்.

கலைநிரம்பிக்காண்டற் கினிதாகிக்கண்ணின்
னிலைநிரம்புநீர்மைத் தெனினும் - தொலைவிலா
வானூர்மதியந் தனக்குண்டோவள்ளுவர்முப்
பானூலளத்தின் பயன்.

இ-ள். மதியமும்-முப்பானூலும், கலை-பதினாறுகலைகளாலும் அறுப்த்துநாலுகலைகளாலும்—நிரம்பி-நிறைந்து, காண்டற்கு - நோக்குதற்கு, ஆராய்ச்சிசெய்தற்கு, இனிதாகி-இனியதாகி, கண்ணினிலை - முகக்கண்ணிலையில் அகக்கண்ணிலையில், நிரம்பு-நிரம்புகின்ற, நீர்மைத்தெனினும்-தன்மையுடைத்தாயினும் குணமுடைத்தாயினும், வள்ளுவர் முப்பானூல்-திருவள்ளுவரது முப்பாலினது, நயத்தினூ-நயத்தால் விளைவதாகிய இன்பயன் - இனியபயனை, தொலைவிலாவானூர் மதியந்தனக்கு-ஒழிவின்றி ஆகாயத்தில்கண்ணினை நிரிகின்ற மதியினிடத்து, உண்டோ-உண்டோ-எ-று. * மதியந்தனக்கென்றது-வேற்றுமைமயக்கற்ஓகாரம்-எதிர்மறை ஆகாரமாகக்கொள்ளுதற்கு ஏற்புடைத்தல்லாதவாயினு ஆகாரமாகக்கோடலி னிழிவுதோன்ற, தொலைவிலாவானூர் மதியமென்றார்-நயம் மறுப்பட்டாமைமழுங்காமைகுன்றவுறைமை முதலியனபயன் இம்மை மறுமைவீட்டின்பங்கள். ஒப்புமைசொல்லுதற்கு நூல்களில் ஒன்றும் இன்மையால் எனைப்பொருட் பலவற்றினுஞ்சிறந்த மதியை யாயினும் சொல்லுதுமென்பபுகின் அதுவும் இதனுல்சுருக்கதன்றென்பது. (சுசு)

நப்பாலத்தனார்.

அறந்தகளியான்ற பொருடெரியின்புத்
சிறந்தகெய்செஞ்செசாற் றீத்தண்டு-குறும்பாவா
வளர்வளனேற்றினூர் வையத்துவாழ்வார்க -
ருள்ளிருணீக்கும் விளக்கு.

இ-ள். அறம்-கருமம்—களி-அகலும்—பொருள்-பொருள்—தெரி-தெரியும்—இன்பு-இன்பம்—நெய்-நெய்யும்—செஞ்செசல்-செவ்விய சொல்—தீ-நெருப்பும்—குறும்பா-குறட்பா, தண்டு-தண்டும்—ஆ - ஆக, வள்ளுவனூர்-திருவள்ளுவர், வையத்துவாழ்வார்கள்-பூமியின்கண்வாழ்வோரது, உள்ளிருள்-அகத்திருளை, நீக்கும்- ஒழிப்பதாகிய, விளக்கு-விளக்கு, ஏற்றினூர் - ஏற்றினர்—எ-று. * ஆன்றல்-மேம்படுதல்.—அகத்திருள-அஞ்ஞானம்-தீச்சுடர்-தகளி மூயிலியவற்றோடுகூடிப் புறத்திருளைப்படியோ அப்படி நாயனூரது திருவதாற்பிறந்த செஞ்சொல் அறி

மூதலியவற்றோடுகூடி அகத்திருளைக்கெடுத்தலின் இங்ஙனம் உருவக செயலாயிற்று.—மனையகத் தேற்றப்படுகிறவிளக்கு அம்மனையகத்து ளார்க்கு மாத்திரமே உபயோகியால்நிற்றலாலும், அகத்திருளைக் கெடு கவல்ல தன்மையாலும், இது உலகத்துவாழ்வோர் பலர்க்கும் உபயோ கியாய்நிற்றலாலும், அகத்திருள்கெடுத்தலாலும், அசனின் இதுபலவே டி மடங்குமிக்குச்சிறந்து நிற்கின்றமை யுணர்த்தியபடி. (சஎ)

குலபதிநாயனார்.

உள்ளகமல மலர்த்தியுளத்துள்ள
தள்ளற்கரியவிரு டள்ளுதலால் - வள்ளுவனார்
வெள்ளைக்குறட்பாவும வெங்கதிருமைக்குமெனக்
கொள்ளத்தகுங்குணத்தைக் கொண்டு.

இ-ள். உள்ளக்கமலமலர்த்தி-செந்தமாகிய தாமரைமலரை மலர்த் தி—உள்ளத்துள்ள-(மக்களது) அகத்திலுள்ள—தள்ளற்கரியவிருள்(நீ நிலைன்றலாலே) நீக்கப்படாத அள்ளுதலவிருள்—தள்ளுதலால்-நீக் குதலால்—வள்ளுவனார் வெள்ளைக்குறட்பாவும்- திருவள்ளுவரதுகுறள் வெண்பாவும்—வெங்கதிரும் - (புறத்துத்தாமரைமலரை மலர்த்திப புற த்திருளைநீக்குகின்ற) சூரியனும்—குணத்தைக்கொண்டு - அச்சாயல்க ளையேகொண்டு—ஒக்குமெனக்கொள்ளத்தகும் - ஒப்பெனக் கொள்ளத் தகும்—எ-று *. செயலும் தொழிற்பண்பெனப்படுதலின் - குணமென ப்படுதலின் - குணமெனப்பட்டது-அதுமலர்த்தலும்- தள்ளுதலும்ஆம் குணத்தைக்கொண்டெனவே செய்யப்பட்டு பொருளைக்கொண்டு ஒக்கு மெனக்கொள்ளத் தகாதென்றதாயிற்று-உலகுக்கெல்லாம்பொளியாகி யகுரியனும் இதற்குஒருபுடை யொப்பாமெனவறபடி. (சஅ)

தேனீக்குடிக்கீரனார்.

பொய்ப்பாலபொய்ப்பேயாய்ப் போயினபொய்யல்லாத
மெய்ப்பாலமெய்யாய் விளங்கின்வே-மூப்பாலிற்
தெய்வத்திருவள்ளுவர் செப்பியகுறளால்
வையகத்துவாழ்வார் மனத்து.

இ-ள். தெய்வத்திருவள்ளுவர் - தெய்வத்தன்மையுடைய திருவள் ளுவர்—மூப்பாலின் - மூன்று பால்களுடையதாக, செப்பியகுறளால்- சொல்லப்பட்ட குறளாலே கேட்டறிதலால், வையத்துவாழ்வார்மன த்து-பூமியில்வாழுவார்மனதில், பொய்ப்பால - பொய்யின்பகுதியிற்பட் டவை யெல்லாம்—பொய்யேயாய்ப் போயின - பொய்யாய்ப்போயின, பொய்யல்லாத-பொய்யல்லாத, மெய்ப்பால் - மெய்யின் பகுதியிற்பட்ட வையெல்லாம்—மெய்யேயாய்விளங்கின-மெய்யாய்விளங்கின—எ-று. * குறளால் - பொய்ப்பால்பொய்யேயாய்ப்போயினமெய்ப்பால் மெய்யே யாய்விளங்கின எனவே - இதற்குமுன்னெல்லாம் உண்மைதுணியப்ப டாமையின்-பொய்ப்பால் மெய்ப்பால்போன் மேற்கொள்ளப்படும். மெ ய்ப்பால் பொய்ப்பால்போற் கைவிடப்பட்டும். மயங்கிக்கிடந்தனவென் றதாயிற்று. பொய்யேயாய்ப்போதல் - வாய்மையெனப்படுவதென்றற் றொடக்கத்துத் திருக்குறள்களாலும் மெய்யால்விளங்கல் மெய்மையு ம் வாய்மையிடத்த வென்றற் றொடக்கத்துத்திருக்குறள்களாலும் அறி த இவன்மெய்யுணர்வுபாயத்தற் திறப்புச்சொல்லியபடி. (சக)

கொடிஞாழன்மாணிபூதனார்.

அறனறிந்தேமன்ற பொருளறிந்தேமின் பின்
றிறனறிந்தேம்வீடு தெளிந்தே - மறனெறிந்த
வாளார்நெடுமாற வள்ளுவனார்தம்வாயாற்
கேளாதனவெல்லாங் கேட்டு.

இ-ள். மறனெறிந்தவாளாற்நெடுமாற - பகைவனையெறிந்த வாட்ப
டைதங்கிய வீரேறுங்கும் பாண்டியனே—வள்ளுவனார்தம்வாயால் - திரு
வள்ளுவர்வாயால்—கேளாதனவெல்லாம் - (இதற்குமுன) கேட்கப்பட்ட
திலலாதனவையெல்லாம்—கேட்டு- (இப்போது) கேட்டு—அறனறிந்தே
ம் - தருமமறிந்தோம்—பொருட்டிறமறிந்தேம்- பொருளாறிந்தோம்—
இன்புன்றிறனறிந்தோம் - இன்னையறிந்தோம்—வீட்டுத்திறன் தெளிந்
தேம்-வீடுதெளிந்தோம்—எ-று. * திறன் - கூறுபாடு அது அறமுதலிய
வற்றோடுங் கூடப்பட்டது, மறன் - ஆகுபெயர், கேளாதன - பிறநூலாசி
ரியர்க்கெல்லாம் அறிந்து சொல்லுதற்கேட்டாதிருந்த அறமுதலியவற்
றி னுட்பங்கள், இமைமை மறுமை வீடுகளைக் குறித்தறிதற்குரிய உறு
திப்பொருளைக் மூன்னர்கனின் இனி யாதொன்றுலும் குறைவில்லை
யென்றபடி. (நிவ)

கவுணியனார்.

சிந்தைக்கினிய செவிக்கினியவாய்ககினிய
வந்தவிருவினைக்கு மாமருந்து - முந்திய.
நன்னெறிகாமறிய நாப்புலமைவள்ளுவனார்
பன்னியவின்குறள் வெண்பா.

இ-ள். முந்திய்நன்னெறிதாமறிய-முறைப்பட்டதாகிய நல்லொழியைநா
மறிய—நாப்புலமைவள்ளுவனார் - நாவால்விளங்குகின்ற புலமையையு
டைய திருவள்ளுவனாரால் பன்னிச்சொல்லப்பட்ட—இன்குறள் வெ
ண்பா - இனியகுறள் வெண்பாக்கள்—சிந்தைக்கினிய - (நினைத்தால்) ம
னத்திற்கின்பஞ்செய்வன—செவிக்கினிய - (கேட்டால்) காதுக்கின்பஞ்
செய்வன, வாய்க்கினிய-(ஓதினால்) வாய்க்கின்பஞ்செய்வன, வந்தவிரு
வினைக்கு- தொடந்துவருகின்ற இருவினைகளாகிய நோய்களுக்கு, மாமரு
து -பெரியமருந்துகளாவன—எ-று. * குறட்பாவைமருந்தென்றமைக்கு
ஏற்கவினையைநோயென்றுமையால் - ஏகதேசருபகம்-நல்வினையும்பிறவி
க்குவித்துவாகலால் இருவினையென்றார்-முற்பட்டநல்வழி-நன்மக்களுக்கு
அநுகியாயமைந்துள்ளது அநுசமயத்தாரதுபலவகைப்பட்டகற்பனையி
லேமறைப்பட்டு நின்றமையின்நாமறியவென்றார் இந்நூலின்பாக்கினை
ச்சிந்தித்தன்முதலியன செய்யுங்காலும் சொற்பொருளையங்களாலே இன்
பம்விளைத்துத்தெய்வத்தன்மையால் வினைதுடையரும்ஒழிக்குமென்றபடி.

மதுரைப்பாலாசிரியனார்.

வெள்ளிவியாழும் விளங்கிரவிவெண்டிங்கள்
பொள்ளெனத்தோன்றும் புறவிருளைத் - தெள்ளிப்

வள்ளுவரின்குறள் வெண்பாவெஞ்சந்தே
ருள்ளிருணீக்கு மொளி.

இ-ள். வெள்ளிவியாழம் விளங்கிரவிவெண்டிங்கள்-சுக்கிரன் சூ
ருசூரியன் சந்திரன் எனப்படுகின்றறிவ்வொளிகள்—புறவிருளை - பெ
ளெளனநீக்கும் விளைவிலநீக்கும் (ஆதலின்புறவிருணீக்குதற்கு உவ்
உாகிய ஒளிகளாம்) —தெளிய - மூற்றுணர்ந்த — வள்ளுவரின்குற
வெண்பா-அகிலத்தோர் உலகத்தோரது—உள்ளிருணீகும - உளிரு
ளீநீக்குதற்கு உண்டாகியவொளி—எ-று. * இங்ஙனங்கூறவே புறத்திரு
ளுக்கு அவைபலவுள அகத்திருளுக்கு இதுவொன்றே யுளதென்றதனிற்
று- அவற்றுள் ஒன்றுலும் நீங்கப்படாத அவத்திருளை நீக்கவல்லதாயி
ன் இதற்கு எவ்வாற்றானும் ஒப்பதொன்றின்மைப்படி. (கூ)

ஆலக்குடிவங்கனார்.

வள்ளுவர்பாட்டின் வளமுரைக்கின்வாய்மடிக்குந்
தெள்ளமுதின்றீஞ்சுவையு மொவ்வாதாற் - றெள்ளமுத
முண்டறிவார்தேவ ருலகடையவண்ணுமால்
வண்டமிழின்மூப்பான் பகிழ்ந்து.

இ-ள். வள்ளுவர்பாட்டின்வளம்- திருவள்ளுவரதுபாட்டினதிற்
சுவையை, உரைகின்ற - சொல்லுமிடத்து, வாமமடிக்குந்தெள்ளமுதின்
உண்ணப்படுகின்ற தெளிய அமுதினது—தீஞ்சுவையும் - இனிப்சுவை
யும்—ஒவ்வாது-ஒப்பாகாது — தெள்ளமுதமுண்டு - அத்தெளிய மு
தையுண்டு—அறிவார் - (அதன்சுவையை) யறிபவர்—தேவர்-தேவர்—
வண்டமிழின் - வளம்பொருந்திய தமிழ்க்கண்ணதாகிய—மூப்பால் - மு
ப்பாலாகிய அதின்மும்மடி சிறந்தபால—மகிழ்ந்து - உலகடையவெல்லா
வுலகத்தாரும்—உண்ணுமை - உண்டு—தீஞ்சுவையறிவார்-தீஞ்சுவையறி
யார்—எ-று. * வளம்-சூருவெபயர்-ஆல்-அசை-அவ்வமிர்தம வரபுட்பெ
ய்தவழிதவிற்பட்ட சிறிதுதுளிபோழுதளவை தீஞ்சுவையாயிருப்பது, இப்போது
தெஞ்சின்கணிலபெறாது ஒழிவின்றி நித் தீஞ்சுவையாயதனின - ஒவ்வா
தென்றார் - மூப்பால் சிறந்தரூபகம் இனிளவ்வுலகத்தாருக் கருபு
மியாகிய இவ்வுலகத்துட்டோன்றி மெய்ப்பொருணணர்ந்தன்றி விட்டி
ன்பம்பெறுதல்கூடாமையின் உலகடைய வண்ணுமென்றார். அன்றி அ
வ்வுலகத்துத்தேவர்களும் தமதுமேம்பட்டறிவினால இதினதுயர்
வொப்பற்றகுணத்தைஅறிந்தமுப்பாகியபிரமாணமாகக்கொண்டுபகிழ்
கூர்தலொன்பதுபற்றி அங்ஙனங்கூறினரெனினுமாமையும்இதுவுலக
த்தார்க்கேயன்றி அவ்வுலகத்தார்க்கும் பயன்படுமாறு சொல்லியபடி.()

இடைக்காடர்பாடல்.

கடுகைத்துளைத்தேழ்கடலைப்புகட்டிக்
குறுகத்தரித்த குறள்.

இ-ள், குறள்-(நாயனாரதுநாலினுயிரத்து முந்நூற்றுமூப்பது)குற
ள்வெண்பாக்களும், கடுகை - கடுகை—துளைத்து-(அதனுடலை) துளை

செய்து எழ்கடலை-எழ்கடனீரையும்—புகட்டி-(அத்துளையிட்)செய்து—குறுக-(கண்ணளவிற்) குறுகும்வண்ணம்—நறித்த - நறிதாதுவைத்தால் அதுபோல்வனவாகும்—என-று *மிக்கசிற்றளவிற்குனடுத்துச்சொல்லப்படுவதொருபண்பொருளாதலின் - கடுகுசொல்லப்பட்டது - இவண்டனுநுபுகறித்தவென்விளைகொண்டது - துளைத்தல் -உள்ளீடுபோக்குதல்-புகவிடன்ப துபுகட்டெனவிகாரப்பட்டு முற்கனிலையாய நிற்றலின்புகட்டியென்றுயதுதுளைபினைடவெளிக்கும் அதன்புறமூடிக்கும் கொள்ளப்பட்டபங்குசிறிதாகஒழித்தபங்குபெரிதாகலின் - குறுகவென்றார், நறித்தாலன்னவெனற்பாலதுநறித்தவெனஇடைக்குறைந்துநின்றது, இல்லாதபொருளை உபமானகக்கூறலின்-இலபொருளுவமை, குறட்பாக்களுள் இவ்வொன்றும்அதுபோறலின் - நறித்தவெனப் பன்மையாற்கூறலாயிற்று, குறள் - பாற்பகாவஃறினைப்பெயராதலின்- இங்கேபன்மைக்காயது, இங்ஙனங்கூறலைக்குறட்பாவிற்சொற் சுருக்கமுமகனுளடக்கப்பட்டபொருள் விரிவுகோக்கும் வழி அக்கடுகும் எழ்கடனீரும்போலுமென்றதாயிற்று, பொருள்விரிவினளவும்படமைசொல்லியபடி. (நுசு)

திருவள்ளுவமாலையுரை - முற்றிற்று.

நாயனார்செய்யுள்.

திருமுடி.மிசையார்முடியுமுடிசூழ் தீர்த்தபுண்டரமுஞ்சலமுகும்
திரண்மணிபுயந்தைவருஞ்செவியழகும் திகழ்நெடுந்தாடியினழகும்
அருமுடி.செபமாலிகையின்முத் திரைசேரபயநோர்வலக்கையினழகும்
அமிழ்ந்துறழகமிழ்மாமறைமுறைவரத மைமதருமிடக்கையினழகும்
கருமுடி.போகப்பட்டையினழகுங் கடிகொள்கீட்கோவணவழகும்
கழல்களிற்றிகிரிவலோவனையழகுங் கமலமல்லாதனத்தழகும்
கருமுடி.முகிழ்ருய்ம்மயிலினிடைமாதர்கள் கண்டிறைஞ்சவீற்றிருக்கும்
தனிழபுகழ்த்திருவள்ளுவனொருநாமம் சமர்க்குருசாமேசரணம்.

ஆசிரியர்திருநாமங்கள். கூ	நூலின்றிருநாமங்கள். கூ
திருவள்ளுவர் ... ...*	திருக்குறள் ... ...✡
நாயனார் ... ...*	முப்பாலூல் ... ...✡
தேவர் ... ...*	உத்தரவேதம் ... ...*
முதற்பாவலர் ... ...*	தெய்வநூல் ... ...✡
தெய்வப்புலவர் ... ...*	திருவள்ளுவர் ... ...*
நான்முகனார் ... ...*	பொய்யாமொழி ... ... *
மாதானுபங்கி ... ...*	வாயுறைவாழ்த்து ... ...*
செந்நாப்போதார் ... ...*	தமிழ்மறை ... ...*
பெருநாவர் ... ...*	பொதுமறை... ... ...*

இப்பாட்டிலே அறனுவைத்துளைத்தெழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்தகுறள், எனமுதற்சொல்லைமாற்றி ஒளவையாரால் புகழ்ச்சிசெய்யப்பட்டது.

கடவுள் துணை.

தற்சிறப்புப்பாயிரம்.

(*)

இத்தின்முதலிய விறையவர் பதங்களும், அந்தமி லின்பத்தருவி ல்லீடு, தெறியறிந்தெய்து தற்குறியையாந்தர்க்,[1] குறுதியெனவுயர்ந்தோ னெடுத்தப்பட்டபொருள்கள் நான்கு - அவை - அறம் - பொருள் - இன் பம் வீடு - எனப்பன அவற்றுள்வீடென்பது, சிக்கையுமொழியுஞ்செ ல்லாதிலேமைத்தாதலிற் றுறவறமாகிய காரணவனையாற்பற்றவ தில்சணவகையாற் கூறப்படாதையின் நூல்களாற் கூறப்படுவன. ஏ னையமூன்றுமேயாம். அவற்றுள், அறமாவது,[2] மனுமுதலிய நூல்களில் விதித்தனசெயலும் விலக்கியன வொழிதலுமாம், அஃது, ஓழுக்கு, வழக்கு, தண்டம்-எனமூன்றுவகைப்படும்,[3] அவற்றுள், ஓழுக்கமாவது அந்தணர்முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளினின்றும், அவற்றிற்கேதுவாகிய அறங்களின் வழுவாதொழு குதல், வழக்காவது, ஒருவரும்ஒருத்தலித்தனரில்லை எனதென்றெ ழுப்பாரது காரணமாகத் தம்முண்மைமாறுபட்டப் பொருள்மேற் சொல் லுவது. அதுகடன்மேற்கோடன்முதலிய பதினெட்டுப்பகுதார்த்தமாம். தண் டமாவது - அவ்வொழுக்கந்தெறிதிறும் - வழக்கந்தெறிதிறும் - வழுவியோ ராயந் தெறிதிறுத்தற் பொருட்டெப்பாடி,[4] அதற்றுத்தக்கவாறுத் தல் இவற்றுள் வழக்குந்தண்டமு முலகந்தெறிதிறுத்தற் பயத்தவாயத ல்ல தொழுக்கம்போல மக்களுயிருக்கு மதிபயத்தற்சிறப்பில்லாதலாமை வைதாநூலானே யன்றியுணர்வு மிகுதியானுந்தெய்வ வியற்கையானும், அறியப்படுதலானும், அவற்றையொழித்தீண்டுத்தெய்வப் புலமைத் திருவள்ளுவனாற் சிறப்புடையவொழுக்கமே, அறமெனவெடுத்துக்கொ ள்ளப்பட்டது, அது நால்வகைநிலைமைத்தாய வருணந்தோறும் வேறு பாடுடைமையிற் சிறுபான்மையாகிய அச்சிறப்பியல்புகளொழித் தெல் லார்க்குமொத்தலிற் பெரும்பான்மையாகிய பொதுவியல்புபற்றி இல் லறந்துறவறமென விருவகைநிலையாற் கூறப்பட்டது. அவற்றுள், இல் லறமாவதில் வாழ்க்கைநிலைக்குச் சொல்லுகின்ற நெறிக்கணின்றதற்குத் துணையாகிய நற்புடைமனைவியோடுஞ் செய்யப்படுவதாகலின் அதனை முதற்கட்கூறுவான் றொடங்கிய பெடுத்துக்கொண்ட இலக்கியமினிது தாவது தான்வழிபடுகடவுளையாதல் எடுத்துக்கொண்டபொருட்கு ஏ ற்புடைக்கடவுளையாதல் வாழ்த்துதல் அவற்றுள், இவ்வாழ்த்து எற்பு ருகிய உறுதிப்பொறுட்கவற்றுள் மூவராகியும் முதற்கடவுளாடியை யுண்டாகலான் அம்மூன்றுபொருளையுங் கூறலுற்றார்க்கம் மூவனையும் வாழ்த்தன் முறைமையாகலின் இவ்வாத்து அம்மூவர்க்கும் பொதுப் படக் கூறினனென வுணர்க.

உ

கடவுள் துணை.

முதல் அதிகாரம் கடவுள்வாழ்த்து.

அஃதாவது: கல்வி தான்வழிபடு கடவுளை யாயினும் எடுத்துக் கொள்ளப்பட்ட பொருளுக்கு ஏற்புடைக் கடவுளை யாயினும் வாழ்த்துகலாம் அவைகளுள் இவ்வாழ்த்து ஏற்புடைக்கடவுளையென்றறிக; எப்படியென்னில் கதாவுமுதலாகிய மூக்குணங்களாலே அறமுதல் மூன்றுகிய உறுதிப்பொருளுக்கு அக்குணங்களாலே மூவராகிய முதற்கடவுளோடுசம்பந்தம்உண்டாயிருக்கையால் அம்மூன்றுபொருள்களையும் சொல்லத்தொடங்கிய இவர்க்கு அப்மூவனையும் வாழ்த்துதல் முறைமையாதலின் இவ்வாழ்த்து அம்மூவர்க்கும் பொதுப்படச்சொல்லிலொன்று அறிக.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

(இதன் துபதப்பொருள்) எழுத்தெல்லாம் - எழுத்துகளெல்லாம்—அகரமுதல் - அகரமாகிய முதலெயுடையன—(அதுபோல்) உலகு ஆதிபகவன் உலகம்; ஆதிபகவன் முதற்று-ஆதிபகவனுகியமுதலையுடைத்து-என்று. (கருத்துரை.) எழுத்துக்களெல்லாம் அகரத்தைமுதலாகவுடையன, அதுபோல உலகக்கடவுளை முதலாகவுடையது - என்பதாம். * அகாரம் தோற்றத்தில் வந்தது—தமிழெழுத்துக்களுக்குமாத்திரை மல்லாமல் வடமொழித்துரைகளுக்கும் முதலாதலை நோக்கி எழுத்தெல்லா மென்றார், ஆதிபகவனென்னும் இருபெயரொட்டுப்பண்புத்தொகை - விட்டுநீங்காமுதற்பாதலின் இயல்பாயிற்று—உலகென்றது- இங்கே உயிர்களின்மேலேநின்றது, காணப்பட்ட உலகத்தைக்கொண்டு காணப்படாதகடவுளுக்கு இருப்பைச்சொல்லவேண்டுதலின் ஆதிபகவன் முதற்றேயென்று உலகின்மேல் வைத்துச்சொல்லினர் அப்படிச்சொல்லினாயினும் உலகிற்குமுதல் ஆதிபகவனென்பது. கருத்தாகக்கொள்க—* நாதமாத்திரையான் இயல்பாற்பிறத்தலால் அகரத்திற்குத்தலைமையும், செயற்கையறிவாலன்றி இயற்கையறிவால்முழுதும் அறிதலால் ஆதிபகவனுக்குத்தலைமையும் கொள்க—தலைமைபற்றிவந்த அகரத்திற்கும், ஆதிபகவனுக்கும் ஓ (பிம்பப்பிரதி பிம்பபாவம் சொல்லுதலால் எடுத்துக்காட்டுவமையணி. [இப்பாட்டால் முதற்கடவுளிலிருப்புச்சொல்லப்பட்டது.]

---

* நாதம் உயிர்முயற்சியால் எழுகிற உதானவாயுவால் ஆவது

ஓ பிம்பப்பிரதிபிம்பபாவம் ஒப்புமையால் பிம்பமும் பிரதிபிம்பமுமானதோன்றல்.

கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவ
னற்றாள் தொழாஅர் எனின்.

(இ-ள்.) வாலறிவன்-மெய்ப்பறிவையுடையவனை—நற்றாள்-நல்ல
வடிகளை-தொழாஅர்எனின்-வணங்காராயின்—கற்றதனால்-யாவுங்கற்ற
னால்-அக்கல்வியறிவினால்—ஆய-உண்டாகிய—பயன்-பிரயோசனம்—எ
ன்-யாது—என-று. (கருத்துரை.) மெய்ப்பறிவனடியகடவுளை வணங்காரது
ல் கற்றதனாற்பயனில்லை என்பதாம். * எவனென்னும் விஞப்பெயர எ
ன்னைன்முய் இல்லையென்னும் பொருளைக்குறிப்பித்து நின்றது கொள்-
அசைநிலை - பிறவற்றினிக்குமருங்காகலின் நற்றாளென்றார் [ஆகமவறி
வுக்குப்பயன் அவன்வடிகளைவணங்கிப் பிறவினைய அகுக்கலென்பது-இ
தனாற்சொல்லப்பட்டது.]

(2)

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார்.

(இ-ள்.) மலர்மிசை (அன்பரதுநெஞ்சமாகிய) தாமரைமலரிடத்
தை—ஏகினான் சென்றவனது—மாணடி - பெருமைபொருந்தியவடி க
ளை—சேர்ந்தார் - சேர்ந்தவர்—நிலமிசை - எல்லாவுலகங்களுக்குமே
லாகிய உலகத்திலே நீடுவாழ்வார் அழிவில்லாபல்வாழ்வார்—எ-று.
(கருத்துரை.) கடவுளடிகளைச்சேர்ந்தவர்கள் மோட்சத்தில் வாழ்வார்க
ள் என்பதாம். * மலர்போலுநெஞ்சை மலரென்றது உவமை யாகுபெ
யர் அன்பிருதலை நினைப்பவரது நெஞ்சில் அவர்நினைத்த வடிவைவாடுவி
னாற்சொல்லுதலினாலே - எதினாலெனை இறந்தகாலத்தாற் சொல்லினா
ர் நிகழ்வினைவுபற்றி வந்த - காலவழுவமதி - சேர்தல் - இடைவிடாது
நினைத்தல்.

(3)

வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில.

(இ-ள்.) வேண்டுதல் (யாதொருபொருளையும்) விரும்புதலும்—
வேண்டாமை வெறுத்தலும்—இலான் - இல்லாதவனது—அடி - அடி
களை—சேர்ந்தார்க்கு - சேர்ந்தவர்க்கு—யாண்டும் - எக்காலத்திலும்—
இடும்பை - பிறவித்துன்பங்கள்—இல - உண்டாவனவல்ல—எ-று. (க
ருத்துரை.) கடவுளடிகளைச் சேர்ந்தவர்களுக்குப் பிறவித்துன்பங்களி
ல்லை-என்பதாம். * பிறவித்துன்பங்களாவன-தன்னைப்பற்றிவருவதும்
பிறவுயிரைப்பற்றி வருவதும் - தெய்வத்தைப்பற்றி வருவதும் என மூ
வகையால் வருகிறதுன்பங்களாம். அடிசேர்ந்தார்க்கு அவ்விருப்புவெ
றுப்புகள் இல்லாமையால் அனைகாரணமாகவருகிற மூவகைத்துன்பங்
களும் இல்லையாயின.

(4)

இருள்சேர் இருவினையுஞ் சேராஇறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

(இ-ள்.) இறைவன்-கலிவனை துஃ—பொருள்சேர்- மெய்ம்மைசேர்ந்த—புகழ்- கீர்த்தியை—புரிந்தார்மாட்டு - விரும்பினவரிடத்து—இருள்சேர் - மயக்கத்தைப்பற்றிவருகிற—இருவினையும் (நல்வினைதீவினையென்னு மிரண்டுவினைகளும்—சேரா- உண்டாகாவாம்—என்று. * (கருத்துரை.) கடவுளுடையகீர்த்தனை விரும்பினவரிடத்து நல்வினை தீவினையென்னுமிருவினைகளுமடையாவாம்-என்பதாம். * இப்படிப்பட்டதென்றுஒருவராலும் சொல்லப்படாமைபற்றி அருளாணத்தை இருளென்றும், நல்வினையும்பிறத்தற்கு ஏதுவாதலால் இருவினையும் சேராவென்றும் - சொல்லினுர் தலைமைக்குணங்களில்லாதவனை உடையரென்றுநினைத்து அறிவிலார்சொல்லுகிற புகழ்பொருள் சேராதாகலின் - அவைமுழுதுமுடைய கலிவனதுபுகழ்பொருள்சேர்புகழெனப் பட்டது. (இ) புரிதல் - எப்பொழுதும் சொல்லுதல்.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

(இ-ள்.) பொறிவாயில் (மெய்வாய்கண்மூக்குசெவியென்னும்) ஐம்பொறிகளை வழிகளாகவுடைய—ஐந்து - ஐந்தானைகளையும் - அவித்தான் -அறுத்தவனது—பொய்தீர்- மெய்யான—ஒழுக்க நெறி- ஒழுக்கவழியிலே—நின்றார் (வழுவாது) நின்றவர்—நீடுவாழ்வார் - பிறப்பில்லாமல்லைக்காலத்திலும் ஒரு தன்மையராய்வாழ்வார்—என்று. (கருத்துரை.) கடவுள் வழியிலே நின்றவர்கள் நீடுழிவாழ்வார்கள் என்பதாம். * ஊறு சுவை- ஒளி - நாற்றம் - ஓசை - எனப்புலன்கள் ஐந்தாகலில் அவற்றிலேசெல்லுகிற ஆசையும் - ஐந்தாயிற்று - ஐந்தவித்தான் - ஒழுக்கவழி அவனுற் சொல்லப்பட்ட வேதமார்க்கம் [இவைநான்குபாட்டாலும் கடவுணினைத்தோரும், வாழ்த்தினோரும், அவன்வழிநின்றோரும்- மோட்சத்தைப்பெறுவரென்பது சொல்லப்பட்டது.] (சு)

தனக்குவமை யில்லாதான் றுள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது.

(இ-ள்) தனக்கு=தனக்கு—உவமையில்லாதான் (ஒருவிதத்திலும்) நிகரில்லாதவனது—தாள் - அடிகளை—சேர்ந்தார்கல்லால்- சேர்ந்தவர்க்கல்லது - மனக்கவலை - நெஞ்சிலேதோன்றுகின்ற துன்பங்களை—மாற்றல் - நீக்குதல்—அரிது - உண்டாகாது—என்று. (கருத்துரை.) கடவுளுடைய திருவடிகளைச்சேராதவர்களுக்கு மனக்கவலை நீக்குதல்லில்லை - என்பதாம் * இங்கேஅரிது - இல்லையென்னும் ஒருபொருளில் வந்தது. அடிகளைச்சேராதவர் பிறவிக்கு ஏதுவாகிய காமவெகுளி மயக்

கங்களை நீக்கமாட்டாமையினாலே பிறந்தும், இறந்தும், அவற்றுள் உ
ருகிற தன்பங்களுள் அழுந்துவானென்பதாம். (எ)

அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க்கல்லாற்
பிறவாழி நீந்தலரிது.

இ-ள் அறவாழியந்தணன் - தருமக்கடலாகியகடவுள்து—தாள் அடியாகிய - (மரக்கலத்தை) சேர்ந்தார்க்கல்லால்- சேர்ந்தவர்க்கல்லா மல், பிறவாழி - (அதனின்) வேறுகியகடல்களை, நீந்தல்- கடத்தல் * அரிது - கூடாது—என்று (கருக்துரை.) கடவுளடிகளைச் சேராதார்க்குப் பொருளும் இன்பமுமாகிய கடல்களைக்கடத்தல் கூடாது - என்பதாம். * அறம்பொருளின்பமெனவுடனெண்ணப்பட்ட மூன்றுள் த் தற்தை முன் பிரித்தலால் மற்றைபொருளும் இன்பமும்பிறவெல்லாப் பட்டன பலவேறுவகைப்பட்ட அறங்களெல்லாம் கடவுளுக்கு வ வாகலின் அறவாழி யந்தணனென்றார், அம்மரக்கலத்தைச் சேராதவ கணாகாணாது அவற்றுள்ளே அழுந்துவாராகலின் நீந்தலரிதென்றார், ட்புணை யென்னுமையால் ஏகதேசவுருவகம். (அ)

கோளில் பொறியிற் குணமிலவே யென்குணத்தான்
றாளை வணங்காத் தலை.

(இ-ள்.) கோளில் (தந்தமக்கேற்றபுலன்களைக் கொள்ளுகையில் லாத—பொறியின் - பொறிகள்போல்—என்குணத்தான் - என்னவகைப்பட்ட குணங்களை யுடையவனது— தாளை அடிகளை—வணங்காத்தலை - தொழாததலைகள் — குணமிலவே - பயன்படுதலுடையனவல்ல வேயாம்—என்று. (கருத்துரை.) கடவுள்பாதங்களை வணங்காத்தலைகள்ப யன்படாவாம் - என்பதாம். * என்குணங்களாவன - சுவையத்தனைம் காயவுடம்பினனாதல்-இயற்கையுணர்வினனாதல்முற்று முணர்தல்- இய ல்பாகவே பாசங்களினீங்குதல் - பேரருளுடைமை - முடிவிலாற்றலு டைமை-வரம்பிலின்பமுடைமை - என்பனவாம், இவை சைவாகமத்தி ற் சொல்லப்பட்டன, காணுக கண்முதலானவைபோல் வணங்காத்தலை கள் பயனில வெனத்தலைமேல் வைத்துச்சொல்லினும் இதம்பற்றிவா ழ்த்தாத நாக்களும் அப்படியேபயனிலவாமெனபதுங்கொள்க, [இவை மூன்றுப்பாட்டாலும் அவனைச்சினைத்தலும் வாழ்த்தலும் வணங்கலும்செ ய்யாவிடத்தே உண்டாகிற குற்றஞ்சொல்லப்பட்டது.] (ஈ)

பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார்.

(இ-ள்.) இறைவன் - தலைவனது—அடி - பார்தமாகிய - மரக்கலத் தை—(சேர்ந்தவர்) பிறவிப்பெருங்கடல் - பிறவியாகியபெரியகடலை— நீந்துவர்- கடப்பார், சேராதார் (அதனைச்) சேராதவர்—நீந்தார் - கடக்க

மாட்டார்—எ-று. (கருத்துரை.) கடவுள் பாதங்களைச் சேர்ந்தவர்கள் பிறவிக்கடலைக்கடப்பார்கள், சேராதவர்கள் பிறவிக்கடலைக் கடக்கமாட்டார்கள்—என்பதாம். * சேர்ந்தவனென்பது வருவிக்கப்படுதலாற்சொல்லெச்சம் பிறவி ஒன்றுக்கொன்று காரணகாரியசம்பந்தப்பட்டுக் கலையில்லாமல் வருதலால் = பிறவிப்பெருங்கடலென்றார், [கடவுளடிகளையேநினைப்பவர்க்குப் பிறவி நீங்குதலும், உலகியல்பை நினைப்பவர்க்கு அது நீங்காமையும் ஆகிய விரண்டும் இதனுல் நியமிக்கப்பட்டன.]

உ - ஆம்- அதி = வான்சிறப்பு.

அஃதாவது, கடவுளது ஆணையால் உலகமும், அதற்குஉறுதியாகிய அறம்பொருளின்பங்களும் நடத்தற்கு ஏதுவாகிய மழையினது சிறப்பைச் சொல்லுதலாம்—அதிகார முறைமையும் இதனுல் விளங்கும்.

வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று.

(இ-ள்.) வான் - மழையானது—நின்று (ஒருசிலதீங்காது) நிற்க-ம் - உயிர்களானவை—வழங்கிவருதலான் - நிலைபெற்றுவருமையிலும்; தான் (அம்மழை) தான் * அமிழ்தமென்று (உயிர்களுக்கு அமிர்தமென்று—உணரற்பாற்று அறியப்படுந்தன்மையையுடைத்தாம்—எ-று. (கருத்து.):மழையானது நீங்காமற்பெய்துநிற்க உயிர்களானவைநிலைபெற்றுவருகையால்-அம்மழையுயிர்களுக்கமிர்தம்- என்பதாம். நிற்கவென்பதுநின் றெனத்திரிந்தது- உயிர்கள்நிலைபெற்று-வருதலாவது பிறப்புறுதலே நீங்காமையால்- அவ்வளவாலும்உடம்பாடுகாண்பட்டு வருதல், அமிர்தமுண்டார் சாவாது நிலைபெறுதலிற்று உயிர்களை நிலைபெறச்செய்கிற மழையை அமிழ்தமென்றார். (க)

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குந்
துப்பாய் தூஉ மழை.

(இ-ள்.) துப்பார்க்கு-உண்பவருக்கு—துப்பாய்- நன்மையாகிய—துப்பாக்கி - உணவுகளையுண்டாக்கி—துப்பார்க்கு (அவ்வுணவுகளை உண்பவருக்கு — துப்பாயதூஉம் (தானும் உணவாய்நிற்பதும் — மழை- மழை—எ-று. (கருத்து.) உண்பவர்க்குநன்மையாகிய உணவுகளையுண்டாக்கி அவ்வுணவை உண்பவர்க்குத்தானும் உணவாகநிற்பது மழை

* அமிழ்தமென்பதற்கு மரணத்தை ஒழிப்பதென்பது பொருள் அது அமிர்தமென்னும் வடமொழிநிரிந்தது.

மழை-யென்பர்நூலார். * தோற்றம் உணவாதலால்வது-தண்ணீராயுண்ணப்படுதல். சிறப்புடைய மனிதர்மேல் வைத்துச்சொல்லுதலால் மற்றை யுயிர்களுக்கும் இஃது ஒக்குமாம் இப்படி. உயிர்களது பசிதாகங்களை நீக்குதலால் அவ்வுயிர்கள் வழங்கிவருதலும் உடைத்தாயின வென்பதாம். (உ)

விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின்று துடற்றும் பசி.

(இ-ள்.) விண்மழைபெய்யானது—நின்று - (பெய்யவேண்டுங்காலத்தில்பெய்யாமல்) பொய்ப்பின் - பொய்க்குமாயின்—விரிநீர்- கடலாலேழ்பரப்பட்ட—வியனுலகத்துள் - பரந்தவுலகத்திற்குள்—பசி-பசியானது—நின்று - நீங்கி—உடற்றும் (உயிர்களை) வருத்தும்—என-றா. (கருத்து.) மழைபெய்யாது - பொய்க்குமாயின் உலகிற் பசியானது உயிர்களை வருத்துமே, னென்பதாம், * கடலுங்கடந்தாயினும் அதனுலே படலாலேயென்றற்கு விரிநீர் வியனுலகத்தென்றார், உணவில்லாமையினாலே பசியால் உயிர்கள் இறக்குமென்பதாம். (ங)

வானிறந்தாஅ ருலகோர் புயலெனும்
வாரி வளங்குன்றிக் காற்.

(இ-ள்.) புயலெனும்வாரி - மழையென்கிறவருவாய் — வளங்குன்றிக்கால் (தன்) பயன்குறைபடின் — உழவர் - பயிரிடுவாழ்நர்கள்—வரி ம - வரிலுல்—உழாஅர் உழுதொழிலாட்டார்கள்—என-றா.(கருத்து.) மழைவளங்குன்றினால் பயிர்செய்மாக்கள் வருந்துவர் - என்பதாம். * குன்றியக்கால்-என்பது - குறைந்துநின்றது, உணவில்லாமைக்கு காரணங்கூறியபடி.. (ச)

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
யெடுப்பதூஉ மெல்லா மழை.

(இ-ள்.) கெடுப்பதூஉம் (பூமியினிடத்து வாழ்வானைப் பெய்யாதுநின்று) கெடுப்பது - கெட்டார்க்கு (அவ்வாறு)கெட்டார்க்கு—சார்வாய் - துணையாய்ப் (பெய்து) மற்றுங்கே - முன்கெடுத்ததுபோல்—எடுப்பதூஉம் - எடுப்பதும்—எல்லாம் -(இவை)யெல்லாம்(வல்லது)மழை-மழையாம்—என-றா. (கருத்து.) கெடுப்பதூஉக்கெட்டலுமாக்காப்பது - மழை - என்பதாம். * மற்று - விசேடமாற்நில்வந்தது கெடும் பெருக்கமும் பெறுதற்குரியவர் மனிதராதலால் - கெட்டார்க்கென்றார், எல்லாமென்றது - அம்மனிதர் முயற்சி வேறுபாடுகளால் கெடுத்தலெடுத்தல்கள் பலவாகுமதனைக்கிவல்லதென்பதாம், * அவாய்நிலையால் வந்தது-மழையினது வல்லமையைச் சொல்லியபடி. (ஞ)

---

* அவாய்நிலை - ஒருசொல்-மற்றொருசொல்லை-வேண்டுதற்கு அவாவிநிற்றல்.

விசும்பின் துளிவீழி னல்லா லுலகத்
தசும்பொழுக லற்றே தகைத்து.

(இ-ள்.) விசும்பின் மேகத்திலின்றும்—துளி - துளிகள்—வீழி னல்லால் - வீழ்ந்தாலன்றி பதில்லது—மற்றுலகிற்கு - வீழாதாயின் அப்போ தே—பசும்பற்றலை - பசும்புல்லினது நுதலையையும—காண்பு - காணு தற்—அரிது - அரிது—எ-று (கருத்து.) பழைபெய்யாவிடில் - புல்லி தலையைக்காணுதலரிது எற்பதாம். * விசும்பு ஆகுபெயர் மற்றுவீ ழ்தலென்னும் - வினைமாற்றில்வந்தது - தலையுமென்னும், இழிவு-சிறப்பும்மை - விகாரத்தால் தொக்கது—ஓரறிவுயிரும் இல்லாமற்போ மென்பதாம் (சு)

நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தானல்லா தாகி விடின்.

(இ-ள்) நெடுங்கடலும்-நெடியகடலும்—தன்னீர்மைகுன்றும்-தன் னியல்புகுறையும்—எழிலி-தான்-மேகந்தான்—தடிந்து - (அதனைக்) கு றைத்து-நல்காதாகிவிடின் (அதனிடத்தும்) பெய்யாதாகிவிடின்—எ-று. (கருத்து.)பழைபொழியாவிட்டால் நெடியகடலும் வளங்குறையும்- எ ன்பதாம். *உம்மை-உயர்வுசிறப்பு-தன்னியல்பு குறைதலாவது- நீர்வா முமுயிர்கள் பிறவாமையும், மணிமுதலானவை உண்டாகாமையும், ஆ —றுமென்க குறைத்தலென்றது - முகத்தலை - மழைக்குமுதலாகிய க லுக்கும் - மழைவேண்டுமென்பதாம். [இவை எழுபாட்டாலும் உல கடத்தற்கு மழைதுவாதல் சொல்லப்பட்டது.] (எ)

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வாலோர்க்கு மீண்டு.

இ-ள். வானம் வறக்குமேல்- மழைபெய்யாதாயின்—வாலோர்க்கு - தேவர்களுக்கும்—ஈண்டு- இவ்வுலகத்திலே—சிறப்பொடு (மக்க ளாலே செய்யப்படுகின்ற) திருவிழாவுடனே—பூசனை - பூசையான து செல்லாது - நடவாது—எ-று. (கருத்து) மழைபெய்யாவிட்டால் இவ் வுலகில் தேவர்களுக்கும் பூசைநடவாது என்பதாம் * உம்மை உய வுசிறப்பு—மிழாச்சிவரு மூன்றிய பூசையெனலால் செல்லாதென்று ஏ னமையாகச் சொன்னார் பூசையிலே தாழ்வுதோன்ச் செய்யப்படுவது விழா தான்பின் இதனைமுன்னவைத்தார். (அ)

தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

இ-ள். - வானம் மழை—வழங்காதெனின்- பெய்யாதாயின் விய னுலகம் : விரிந்தவுலகத்திலே—தானந்தவமிரண்டும் - தானமுந்தவமு

மாகியபெரண்டமும்—கங்கா-உளவாகாவாம்—எ-று. (கருத்து.) என்ற பொழியாவிடி. லுலகத்தில் தருமமுள்ளவருமுண்டாகாவாம் - என்பதாம். * தானமாவது - தருடவழியால்வந்த பொருள்களைப் பெரியோர்க்கு மகிழ்ச்சியோடு கொடுப்பது. தவமாவது மனம் போறிவழிபோகாமனிற்கும்பொருட்டு இரதகிக்கள்ளில் உண்டிசுருக்கல முதலானவை, மிருதிபற்றி தானம் இல்லறத்தின் மேலும்; தவம் - துறவறத்தின்மேலும் நின்றன.

(கூ)

நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு.

இ-ள். யார்யார்க்கும் - எவ்வகை மேம்பாட்டோர்க்கும்—நீர் - நீரானது, இன்று - இல்லாமல்—உலகு - உலகியலானது, அமையாதென்ன - பொருந்தாதாயின், ஒழுக்கு (அந்நானது தருடவேண்டாத) வொழுக்கமும் - வான்-மழையை—இன்று இல்லாமல்—அமையாது- பொருந்தாது—எ - று.(கருத்து.) எவ்வகைமேன்மையுடையோர்க்கும் நீரில்லாமலுலகியலானது தடவாது அதுபோல மழையில்லாமல் நீரொழுக்கங்கிடையாது - என்பதாம். * இம்மையிலே அநுபவிக்கப்படுவனவாதலிற்பொருளிம்பங்களிலுலகிய லென்றார், நடுவேண்டாத வொழுக்கமாவது; எக்காலங்களிலும் எவ்விடங்களிலும் - நிருண்டாயிருத்தல், நீரினாலே பொருளிம்பங்கள் பொருந்துதல்போல் மழையினாலே அந்நீரொழுக்கம் பொருந்துதல் எல்லாராலும் தெளியப்படுமென்பதைக்காட்டுதற்கு நீரின்றமையா துலகெனினென்றார் [இவைமூன்றுபாட்டாலும் அறம்பொருளின்பங்கள் தடத்தற்குமழை ஏதுவாதல்செல்லப்பட்டது.]

(ம)

கூ-ஆம், அதி- நீத்தார்பெருமை.

அஃதாவது - முற்றத்துறந்த முனிவரது பெருமையை சொல்லுதலும் அவ்வறமுதலாகிய பொருள்களை உலகத்துக்கு உள்ளவாறு அறிவிப்பவர் அவராதலால் இது வான்சிறப்பின் பின்வைக்கப்பட்டது.

ஒழுக்கத்து நீத்தார் பெருமை யிழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு.

இ-ள். பனுவல் - நூல்களது—துணிவு - நிச்சயமான்து—ஒழுக்கத்து (தமக்குரிய) வொழுக்கத்திலேநின்று—நீத்தார்- துறந்தவரது—பெருமை - மகிமையை விழுப்பது - மேலான பலபொருள்களுள்ளும் வேண்டும் (இதுவேமேலானதென்று) நினைப்பும் —எ-று.(கருத்து.)

நூல்களது நிச்சயமான துணிவுமிகுமையையேலானதென்றுவிரும்பும்-என்பதாம்.* தாக்குரிய வொழுக்கத்திலே நின்று துறந்தவாது தங்கள்தங்கள் வருணாசிரமங்களுக்கு உரியவொழுக்கங்கள் தப்பாமல் நடக்கப்புண்ணியம்வரும்; அதுவளரப்பாவம்தேயும் அதுதேய அறியாமைநீங்கும், அதுநீங்க இது நித்தியம் இது அநித்தியமென்னும்பகுத்தறிவும்-நிலையில்லாத இம்மைமறுமையின்பங்களில் வெறுப்பும் பிறவித்துன்பங்களும்தோன்றும், அவைதோன்ற மோட்சத்தில் ஆசையுண்டாம் அதுஉண்டாகப்பிறவிக்குக்காரணமாகிய வீண்முயற்சிகளெல்லாம்நீங்கி மோட்சத்துக்குக் காரணமாகிய யோகமுயற்சியுண்டாம். அதுஉண்டாகத் தத்துவஞானம்பிறந்து எனதென்பதாகிய மமகாரமும் நானென்பதாகிய அகங்காரமும் - விடும், ஆதலின்-இவ்விரண்டுபற்றுக்களையும் இம்முறையேவெருத்து விடுதலாம் நூல்செய்தவாது துணிவுநூலின்மேல் ஏற்றப்பட்டது. (க)

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணினிக்கொண்டற்று.

இ-ள். துறந்தார் (அகங்காரமமகாரங்களை) விட்டவர்தம—பெருமை-மகிமையை - துணைகூறின் - எண்ணிக்கையிலுலேசொல்லி அறியப்புகுந்தால் (அளவுபடாமையால்) வையத்து - இவ்வுலகத்திலே—இறந்தாரை (பிறந்) திறந்தவரை, எண்ணிக்கொண்டற்று-எண்ணி (யித்தனைபேர்களென்று) அறியப்புகுந்தாற் போலும்—எ-று. (கருத்து.) துறந்தவர் பெருமையைச்சொல்லில் இறந்தவர்களை எண்ணிக்கொண்டாற்போலும் - என்பதாம்.* கொண்டாலென்பது கொண்டெனத் திரிந்துநின்றது. (உ)

இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

இ-ள். இருமை (பிறப்புவீடென்னும்) இரண்டின்தன்மையின்பக்) கூறுபாடுகளை—தெரிந்து - ஆராய்ந்து (அப்பிறப்பைநீக்குதற்கு) ஈண்டு - இப்பிறப்பிலே—அறம் - துறவறத்தை—பூண்டார்கொண்டவரது—பெருமை - மகிமையே, உலகு - உலகத்தில்—பிறங்கிற்று-உயர்ந்தது—எ-று. (கருத்து.) துறவறத்தை கொண்டவரது பெருமையே யிவ்வுலகிலுயர்ந்தது - என்பதாம். * பெருமையே யென்பது னேகாரம் விகாரத்தால்தொக்கது. அதுஉலகமுழுதாண்டவாசர் முகலானவருடைய பெருமையைப் பிரித்தலாற் பிரிதிலேயேகாரம் [இவை மூன்றுபாட்டாலும் துறந்தவரது பெருமையே எல்லாப் பெருமைகளிலும் உயர்ந்ததென்பது சொல்லப்பட்டது.] (ஊ)

உரனென்றும் தோட்டியா ரைந்துங் காப்டான்
வரனென்னும் வைப்புழிகோர் வித்து.

இ-ள். உரனென்னுந்தோட்டியான் - அறிவென்னுமங்குசத்தினாலே - ஓரைந்தும் (பொறிகளாகியயானைகள்) ஐந்தையும்—காப்பான் (தன்தன்புலன்களின்மேல்செல்லாமற்) காப்பவன், வரனென்னுமவைப்புக்கு (எல்லாநிலங்களிலும்) மேலானதென்று சொல்லப்படுகிற மோட்சநிலத்துக்கு—ஓர்வித்து-ஓர்வித்தாவான்—எ-று. (கருத்து.) ஐம்பொறிகளையும் ஐம்புலன்களிற்செல்லாமற்காப்பவன் மோட்சநிலத்துக்குரித்தாவான் - என்பதாம். * அந்தநிலத்திலேபோய் முளைத்தலின்வித்தென்னோ இங்கே பிறந்தும் இறந்தும் வருகிற மனிதனல்லனென்பதாம் [வகேசவருவகவனி] (அ)

ஐந்தவித்தா லாற்ற லடல்விசும்பு ளார்கோமா
னிந்திரனே சாலுங் கரி.

இ-ள். ஐந்தவித்தான் [புலன்களிற்செல்லுகின்ற] வைராகாலையுமொழித்தவனது, ஆற்றல் - வல்லமைக்கு, அகல்விசும்புளார்- அகன்ற பொன்னுலகத்துள்ள தேவர்க்கு—கோமான் - தலைவனாகிய—இந்திரனே - தேவேந்திரனே — சாலுங்கரி - போதுமான சாட்சியாம்—எ-று. (கருத்து.) கௌதமமுனி யல்லலைமக்குத் தேவேந்திரனே சாட்சியாம்- என்பதாம். * ஐந்தாசைகளையும் நீக்காமல் சாபத்தை அடைந்துநின்று அவ்வாசைகளை நீக்கிநின்றவனாகிய கௌதமமுனிவனது வல்லமையைத் தெரிவித்தானதனால் இந்திரனே சாலுங்கரியென்றார். (ஆ)

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற் கரிதசெய்லா தார்.

இ-ள்.(ஒத்தபிரப்பினராகியமனிதர்களிலே)—பெயர்-பெரியோர்—செயற்கரிய - செய்தற்கரியவைகளை—செய்வார் - செய்வார்கள்—சிறியர் - சிறியோர்—செயற்கரிய- அச்செய்தற்கரியவைகளை—செய்கலாதார் - செய்யமாட்டாதார் — எ-று. (கருத்து.) பெரியோர்செயற்கரியவைகளைச் செய்வார்கள் சிறியோர் செய்தற்கரியவைகளைச் செய்யார்கள் - என்பதாம். * எனவே பெரியோர்செய்தற் கெளியவைகளைச் செய்யாதொன்பதும், சிறியோர் அவைகளைச் செய்வாதொன்பதும் தோன்றுதல்அறிக, செய்தற்கெளியவை மனத்தை வெண்டியபடியே போகவிடுதல் - ஆசைகொள்ளுதல் - கோபித்தல் - இவைமுதலானவையும் செய்தற்கரியவை - இயமம்-நியமம்-ஆசனம்-பிராணயாமம் - பிரத்தியாகாரம்- தாரணை-தியானம்-சமாதி-என எண்வகையோகங்களாம். ()

சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகை தெரிவான் கட்டே யுலகு.

தெரிந்து

இ-ள். உலகு - உலகமானது, சுவையொளியூ றோசைகாற்றம், இத தும் - உருவமும்— ஸ்பரிசமும் - சத்தமும்—கந்தமும் - என்று-என்று சொல்லப்பட்ட, ஐந்தின் - பஞ்சதன்மாத்திரைகளது—வகை- கூறு பாட்டை—தெரிவான்கட்டே - ஆராய்பனறிவினிடத்தே—என்று. (கருத்து). உலகமானது பஞ்சதன்மாத்திரைகளை யறிபவனிடத்தே - என்பதும். ஐந்தின்வகையாவன- அவையைந்தும், அவற்றிலேதோன்றிய பூதங்களைந்தும் அவற்றின்கூறுகிய ஞானேந்திரியங்களைந்தும், கன்மேந்திரியங்களைந்தும் ஆகஇருபதுமாம். வகைதெரிவானென்றதனால் தெரிதற்றபுடனும், அவன் தெரிதற்குக்காரணமாகிய மான் - அகங்காரம் - மனம் - எனப்பட்டவையும் அவற்றுக்கு முதலாகிய் மூலப்பகுதியும் - கொள்ளப்படும்—இவ்விருபத்தைந்து தத்துவக்கூட்டமல்லது உலகனேவேறில்லையென்று உலகினது இருப்பையறிதலால்அவ்வறிவினிடத்தாயிற்று - பூதமைந்து, நிலம்-நீர்- தீ-காற்று -ஈன். ஞானேந்திரியமைந்து, மெய்-வாய்-கண்-மூக்கு-செவி. கன்மேந்திரியமைந்து, வாக்குபாதம்-பாணி-பாயு- உபஸ்தம். மூலப்பகுதி- மாயை, இவை நான்குடட்டாலும் பெருமைக்குக்காரணங்களும், ஐம்பொறியடக்கலும், யோகப்பயிற்சியும், தத்துவஞானமும், ஆமென்பது சொல்லப்பட்டது. (எ)

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

இ-ள். நிறைமொழி (பய) னிறைந்தசொல்லையுடைய—மாந்தர்- முனிவரது - பெருமை - மகிமையை—நிலத்து - நிலவுலகத்தில்—மறை மொழி - அவராணையாகச்சொல்லியமந்திரங்களை — காட்டிவிடும் (பிரத்தியட்சமாகக்) காட்டிவிடும்—என்று. (கருத்து.) முனிவரது மகிமையை - அவர்கள் - மந்திரங்களே காட்டும்- என்பதாம். * படனிறைந்தமொழியாவது அவர் அருளிஞலே சொன்னலும், கோபத்தினலே சொன்னலும், அதனதன் பிரயோசனத்தைக்கொடுத்தேவிடுகிறசொல், காட்டுதல் பிரயோசனப்பட்டு அம்மகிமையை அறிவித்தல். (அ)

குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது.

இ-ள். குணமென்னுங்குன்று (துறவுமெய்யறிவு. ஆசையிலல்லாமைமுதலான) நற்குணங்களாகிய மலையின்மேல்—ஏறிநின்றார் - ஏறிநின்றமுனிவரது—வெகுளி - கோபமானது—கணமேயும் (தானுள்ளவளவு) கூடிணகாலமேயாயினும்—காத்தல் - கோபிக்கப்பட்டவராலே தடுத்தல்— அரிது - அரிதாம் — என்று. (கருத்து.) முனிவர்கள் கோபத்தடுத்தல்— அரிது - அரிதாம் — என்று. (கருத்து.) முனிவர்கள் கோபமானது கோபிக்கப்பட்டவராலே தடுத்தல்கூடாது- என்பதாம். * அமானது கோபிக்கப்பட்டவராலே தடுத்தல்கூடாது- என்பதாம். * அமையாமையும் பெருமையும்பற்றிக் குணங்களை மலையாக உருவகம்

செய்தார்; அஞ்சியான பழக்கத்தினாலே ஓராவிடத்துக்கோபம் தோன்றியபோதே அதனை மெய்யுணர்வு அழிக்கும் ஆதலால்கணமேயமென்றும், நிறைமொழிமாந்தராகலால் காத்தலரிதென்றும் சொல்லினர் [இவை இரண்டுபோட்டாலும் அவராணைசொல்லப்பட்டது.] (கூ)

அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
சந்தண்மை பூண்டொழுகு வான்.

இ-ள். எவ்வுயிர்க்கும் - எல்லாவுயிர்களின்மேலும் — சந்தண்மை - செவ்வையான வருளை—பூண்டு :- விரதமாகக்கொண்டு — ஒழுகுவான் - நடக்கையினாலே—அந்தணரென்போர் - அந்தணரென்று சொல்லப்படுவோர்—அறவோர்-துறவறத்திலின்றவர்—எ-று. (கருத்து.)அந்தணரென்று சொல்லப்படுவோர் - முனிவர்களே-என்பதாம். * மற்று அசைநிலை, அந்தணரென்பது, அழகியதண்மையையுடையவரென்னுங் காரணப்பெயராகலின் அவ்வருளுடையார்க்கல்லது மற்றவர்க்காகாதென்பதுகருத்து. [அப்படி ஆணையையுடையவராயினும் உயிர்களிடத்தே அருளுடையரென்பது இதனாற்சொல்லப்பட்டது.] (ஐ)

ச-ஆம்-அதி-அறன்வலியுறுத்தல்.

அஃதாவது - அம்முனிவரால் அறிவிக்கப்பட்ட மூன்றுள்-அறமானது மற்றைப்பொருளின் பங்கள் போலாகாமல் இம்மை - மறுமை- வீடு என்கிறமூன்றையும்தருகலால் அவற்றினும்உறுதியுடைத்தென்பது சொல்லுதலாம் —அதிகாரமுறைமையும் இதனாலே விளங்கும்.

சிறப்பீனுஞ் செல்வமும் பீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு.

இ-ள். சிறப்பு - மோட்சத்தையும், ஈனும் - கொடுக்கும், செல்வமும் (சுவர்க்கமுதலாகிய) செல்வத்தையும் ஈனும் - கொடுக்கும், (ஆகலால்) உயிர்க்கு-மனிதருயிர்க்கு— அறத்தினூஉங்கு-தருமத்தின்மேற்பட்ட—ஆக்கம் - பெருக்கத்தைத்தருவது—எவன் - யாது— எ-று. (கருத்து.) மக்களுயிர்க்குத்தருமத்தின் மேற்பட்டதில்லை- என்பதாம், * ஓ அசைநிலை - எல்லாப்பேறுகளினும் - சிறந்ததாகலின் மோட்சத்தைச் சிறப்பென்றார், ஆக்கம் - மேன்மேலுயர்தல், [இதனால் அறத்தினும் அதிகமாகிய உறுதி இல்லையென்பது சொல்லுப்பட்டது.] (எ)

அறத்தினூஉங் காக்க முமில்லை யதன்
மறத்தலினூங் கில்லை கேடு.

இ-ள். (ஒருவனுக்கு) அறத்தினூஉங்கு-தருமஞ்(செய்தலின்) மேற்பட்ட—ஆக்கமும் - பெருக்கத்தைத் (தருவதும்)—இல்லை-இல்லை, அதனை-அத்தருமத்தை—மறத்தலினூங்கு (மடமைக்கதால்) மறந்துவிடுதலின்மேற்பட்ட—கேடு-கேட்டைத் (தருவதும்)—இல்லை-இல்லை—என்று. (கருத்து.) தருமத்தின்மேற்பட்ட செல்வமுமில்லை அத்தருமத்தைமறத்தற்பார்க்கினும் கேடில்லை-என்பதாம். *அறத்தினூங்காக்கமுமில்லையென்றமுன் சொல்லப்பட்டதையே. * அறுவகுத்தார் அதனுலே கேடுவருதலைச் சொல்லுதலாகிய பயனெனக்கி [இதனால் அது செய்யாதபோது கேடுவருதல் சொல்லப்பட்டது. (உ)

ஒல்லும் வகையா லறவினை யொவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்.

இ-ள். ஒல்லும்வகையால் (தமக்குத்தமக்கூடும்) வகையால்—அறவினை-தருமமாகிய நல்வினையை—ஒவாதே - இடைவிடாமல்—செல்லும்வாயெல்லாம் (அது) செல்லு மிடங்களிலெல்லாம்—செயல் செய்யக்கடவர்—என்று. (கருத்து.) மனம்-வாக்கு-காயம்-இம்மூன்றாலுந் தருமஞ்செய்யக்கடவர்கள் - என்பதாம். * கூடுமென்பதாவது, இல்லறம் பொருளளவுக்கு ஏற்கவும், துறவறம்-சரீரநிலைக்கு ஏற்கவும் செய்தலாம், செல்லுமிடங்களாவன, மனமும் வாக்கும்-காயமும்-ஆம் அவற்றினாலே செய்யப்படுகிற அறங்களாவன நற்சிந்தையும் - நற்சொல்லும் - நற்செயலும் - ஆம், [இதனால் அறம்செய்யுமாறு சொல்லப்பட்டது] (ஊ)

மனத்துக்கண் மாசில னுதல் லனைத்தற
னுகுல நீர பிற.

இ-ள். மனத்துக்கண் (அப்படி அறஞ்செய்பவன்-தன்)மனத்திலிடத்து—மாசிலனுதல் - குற்றமில்லாதவனுகக்கடவன்—அறம் - தருமமாவது—அனைத்து-அவ்வளவே—பிற - அது ஒழிந்தசெல்லும் வேடமும்—ஆகுலநீர (அறமெனப்படுவனவல்ல) ஆரவார குணத்தை யுடையனவாம்—என்று. (கருத்து.) தருமஞ்செய்பவன் மனமாசற்றிருக்கக்கடவன் - அவ்வளவேயறம் - என்பதாம். * குற்றம்நீயவைகினைத்தல், பிறர் அறியவேண்டிச் செய்யப்படுதலால் ஆகுலநீர பிறவென்றார், மனதிலே குற்றமுடையவனுகியபோது அதன் வழிப்பட்ட வாக்கினாலும்காயத்தினாலும் செய்யப்படுகிற அறங்களிலேபயன் இல்லையென்பதும் பெறப்பட்டது. (எ)

---

* அறுவகுத்தமாவது - முன்சொல்லப்பட்டனதெய்வமும்றென்னைவிதித்தற்பொருட்டுப் பின்னுஞ் சொல்லுதல்.

அழுக்கா றவாவெகுளி யின்னுச்சொன் னான்கு
மிழுக்கா வியன்ற தறம்.

இ-ள். அழுக்காறு பிறருயர்ச்சி பொறுமையும்—அவர்-ஐம்புல வாசையும்—வெகுளி (அவைகாரணமாகப் பிறர்மேல் உண்டாகிற) கோபமும்—இன்னுச்சொல் (அதுபற்றிவருகிற) கடுஞ்சொல்லும்—ஆன்கும்-ஆகிய விந்நான்கினையும்—இழுக்கா-கடந்து—இயன்றது(ஒழிவில்லாமல்) நடந்தது—அறம்-தருமமாவது—எ-று. (கருத்து.)பொறுமை-ஆசை-கோபம்-கடுஞ்சொல்-இந்நான்கும் கடந்து நடந்ததே தருமம்-என்பதாம். * இதனால் இந்நான்கோடு கலந்து நடந்தது அறமெனப்பட்டதென்பதுங்கொள்க, [இவை இரண்டுபாட்டாலும் அறத்தினியல்பு சொல்லப்பட்டது. (ந)

அன்றறிவா மென்னை தறஞ்செய்க மற்றது
பொன்றுங்கா லுற்றுழிப் போன்றுந் துணை.

இ-ள். நாம் இப்போது இவ்வேயோமாகவின்* அன்று-இறக்குங்காலில்—அறிவாமென்னாது-செய்வோமென்று நினையாமல்—அறம்-தருமத்தை—செய்க (தினந்தோறும்) செய்யக்கடவர்—அது-அப்படிச் செய்யப்பட்ட தருமமானது—பொன்றுங்கால்-உடம்பினின்று முயிர் போங்காலத்து—பொன்றுத்துணை-(அவ்வுயிர்க்கு) அழியாத துணையாம்—எ-று. (கருத்து.) இறக்கும்போது தருமஞ்செய்வோமென்னாது தினஞ்செய்க அவ்வறம் இறக்கும்போ துதவியாம்-என்பதாம். *மற்று-அசைநிலை, செய்தவுடம்பழியவும் உயிரோடுகூடி மற்றை யுடம்பிலும் செல்லுகலால் அழியாத துணையாயிற்று [இதனால் அப்படிப்பட்ட தருமத்தை நிலையில்லாத வுடம்பு இருக்கிற போதே செய்கவென்பது சொல்லப்பட்டது. (சு)

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை.

இ-ள். அறத்தாறு-தருமத்தின்பயன்—இதுவென-இதுவென்று—(ஆகம்வளைவையால்) அறிவிக்க—வேண்டா-வேண்டியதில்லை—சிவிகை-தண்டிகையை—பொறுத்தானோடு-சுமப்பவனோடு—ஊர்ந்தானிடை-செலுத்துவானிடத்துக் (காட்சியளவையினாலேயே அறியப்படும்)—எ-று.(கருத்து.) தருமத்தின்பயன் சிவிகையேறுப்பவனிடத்திலும் வறுபவனிடத்திலுங்காணப்படும்-என்பதாம். * எனவென்றதனால்-சொல்லளவை யாகிய ஆகமப்பிரமாணமும் பொறுத்தானோ டூர்ந்தானிடையென்றதனால்-காட்சியளவையாகியபிரத்தியட்சப்பிரமாணமுங்கொள்ளப்பட்டன, அறியப்படுமென்பது குன்றக்குறுங்கின்றதனால் - செல்லெச்சம், [இதனாலறியாத துணையாதல் தெளிவிக்கப்பட்டது] (எ)

---

* அகதநியம் " அன்று முள்ளனெதிர்மறை அசைநிலை. ,,

வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்.

இ-ள். ஒருவன்-ஒருவன்—வீழ்நாள் (செய்யாமற்) கழியுநாள்—படாஅமை-உண்டாகாமல்—நன்று-நருமத்தை—ஆற்றின் - செய்வானாயி—அஃது - அச்செய்கையானது—வாழ்நாள் (அவன்சரீரத்தோடு கூடி) வாழுநாளது - வழி (வரு) வழியை—அடைக்குங்கல் (வராமல்) அடைக்குங்கல்லாம்—என-று. (கருத்து.) ஒருவன் நருமத்தைச்செய்தால் அந்நருமம் அவன் பிறப்பைநீக்கும்-என்பதாம். * அஞ்ஞானம்-அகங்காரம்-மூவா-விருப்பு-வெறுப்பு-என்கிற - ஐவகைக்குற்றங்களால் வருகிற கன்மவினை தீவினை என்கிற இருவகைவினைகளும் உள்ளவளைக்குமுயிர் உடம்போடுகூடிநின்று அவற்றின்பயன்களாகிய சுகதுக்கங்களை அநுபவித்தும்-ஆகலால் அக்காலமுழுதும் வாழ்நாளெனப்பட்டது. (அ)

அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில.

இ-ள். அறத்தான்- இல்லறத்தோடுபொருந்தி—வருவதே - வருமின்பமே—இன்பம் - இன்பமாகும்—மற்றெல்லாம் அதனோடுபொருந்தாது வருவனவெல்லாம் இன்பமாயினும் புறத்த - துன்பத்துட்சேர்வனவாம் அதுவுமல்லாமல்—புகழும்-புகழையும்—இல - உடையனவல்ல—என-று. (கருத்து.) தன்மனைவியோடு கூடியின்பமே யின்பமாகும் பிறன்மனைவியோடு கூடுகின்பம் துன்பமாம்-என்பதாம். * இன்பம் காத்தினாநுபவம் இந்பத்திற் புறமெனவே துன்பமாயிற்றுபாவத்தால் வரும் பிறவியில் விழைவுமுதலானவை அப்போது இன்பமாய்த்தோன்றுமாயினும் பின்பு துன்பமாய் விளைதலாற் புறத்தவென்றார், புகழுமிலவெனவே-அறத்தோடு வருவதாகிய இன்பம் புகழுமுடைத்தாமென்பது பெற்றாம் [இதனால் அறஞ்செய்வானோ இம்மையின்பமும், புகழும், பெறுவானென்பது சொல்லப்பட்டது] (கூ)

செயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி.

இ-ள். ஒருவர்க்கு-ஒருவனுக்கு—செயற்பாலது- செய்தற்றன்மையது—அறனே-நல்வினையே—உயற்பாலது-ஒழிதற்றன்மையது—பழியே-தீவினையே—என-று. (கருத்து) ஒருவனுக்குச் செய்யத்தக்கதுநல்வினை-செய்யத்தகாதது தீவினை-என்பதாம். * தேற்றேகாரம்பின்னுங்கூட்டப்பட்டது, ஒருமிரண்டும்- அனைசுலோகள் [பழிக்கப்படுவதாகிய தீவினையைப்பழியென்றார் [இதனாற்செய்வதும் ஒழிவதும் நியமிக்கப்பட்டன. (ஈ)

இல்லறம்.

இல்லாமாவது - இல்வாழ்க்கைநிலைக்குச் சொல்லப்படுகிற வழியிலே நின்று அதற்குகந்துணையாகிய கற்புடைய மனைவியோடு கூடிச்செய்யப்படுவதாம் ஆகலின் அதனை முதலிலேசொல்லத்தொடங்கினர்.

நு-ஆம். அதி - இல்வாழ்க்கை.

அஃதாவது - மனையாளோடுகூடி வாழ்தலினது சிறப்பாம். இல்வாழ்க்கை நிலையானது அறஞ்செய்தற்குரிய இருவகை நிலைகளுள்ளே முதலாதலின் இது அறன்வலியுறுத்தலின் பின்வைக்கப்பட்டது.

இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு
நல்லாற்றி னின்ற துணை.

இ-ள். இல்வாழ்வா னென்பான் - இல்லாக்கிதாடுகூடி வாழ்பவனென்று சொல்லப்படுவோன்:—இயல்புடைய (துறவறத்) தன்மையுடைய- மூவர்க்கும்—(மற்றை) மூவர்க்கும்—நல்லாற்றில் (அவரவர்) நல்ல (லொழுக்க) வழிகளில்—நின்ற-நிலைபெற்ற—துணை - துணையாவான்—எ-று. (கருத்து:.) இல்லறத்தில்வாழ்பவன் பிரமசாரி, வானப்பிரத்தன், சன்னியாசி, இம்மூவர்க்குந்துணையாவான். என்பதாம் * இல்லென்பது அதனதற்கு உணர்த்தலால் ஆகுபெயர், மற்றைமூவராவார் பிரமசாரியினிடத்தே ஓதுகின்றவனும் விரதங்காக்கின்றவனும் ஆகிய பிரமசாரியும். காட்டிடத்தேபோய் மனைவியோடு தவஞ்செய்கிறவனாகிய வானப்பிரஸ்தனும். எல்லாப்பற்றுக்களையும் விட்டவனாகிய சந்நியாசியும். என்றறிக. இல்வாழ்வான்-பசி- நோய்-குளிர்முதலானவற்றால் அவ்வொழுக்கங்களுக்கு-இடையூறுவராமல் உண்டிமருந்து முதலானவைகொடுத்து அவ்வவரொழுக்க வழிகளிலே தப்பாமல் நடத்துகையிலே நல்லாற்றினின்றதுணையென்றார். (க)

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் றுணை.

இ-ள். துறந்தார்க்கும் (ஆதாரமானவராலே) விடப்பட்டோர்க்கும்—துவ்வாதவர்க்கும் - வருமைப்பட்டவர்க்கும்—இறந்தார்க்கும் (ஒருவருமில்லாமல்வந்து) இறந்தவர்க்கும்—இல்வாழ்வானென்பான் - இல்வாழ்வானென்று சொல்லப்படுவோன்- துணை—துணையாவான்-எ-று. (கருத்து.) துறந்தவர்க்கும்-விரியவர்க்கும - இறந்தவர்க்கும்- இல்வாழ்வான் துணையாம்- என்பதாம்.* ஆதாரமானவராலேவிடப்பட்டவர்க்குப்

பாவமொழிய அவர்க்கு ஆதாரமாய் நின்று வேண்டுவன செய்தலாலும் வறுமைப்பட்டவர்க்கு உணவுமுதலானவை கொடுத்தலாலும், இறந்தவர்க்கு நீர்க்கடன் முதலானவைசெய்து நல்லகதியை அடைவித்தலாலும்; துணையென்றார். [இவையிரண்டுபோட்டாலும் இல்வாழ்க்கை எல்லாவுபகாரங்களுக்கும் உரித்தாதல்சொல்லப்பட்டது.] (உ)

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க ருனென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை.

இ-ள். தென்புலத்தார்-பிதிரரும்—தெய்வம்-தேவரும்—விருந்து-அதிதியரும்—ஒக்கல் - சுற்றத்தாரும்—தான்-தானும்—என்று-என்று சொல்லப்பட்ட—ஐம்புலத்து - ஐந்திடத்துஞ்செயப்படுகின்ற—ஆறு (ஆற) வழியை—ஓம்பல் - வழுவாமற்செய்தல்—தலை (இல்வாழ்வானுக்குச்) சிறப்புடையகறமாம்—என-று. (கருத்து.) பிதிர்க்குந் தெய்வத்திற்கும்-விருந்திற்கும் யினத்திற்குந் தனக்குந்தருமஞ்செய்தல்தலைமையானதருமமாம் - என்பதாம். * ஆங்கு-அசைநிலை-பிதிரர் ஓர் தேவசாதியார், அவர்க்கு இடம்விதற்காதலின்-தென்புலத்தாரென்றார், தெய்வம்-சாதியொருமை- விருந்து- புதுமை- அதுஇங்கே புதியவராய்வந்தவரை உணர்த்தலினாலே ஆகுபெயர். தான்செவ்வையா யிருந்துகொண்டு எல்லா அறங்களையும் செய்யவேண்டுதலின் தன்னைக் காப்பாற்றுதலும் அறமாயிற்று, இவ்வைந்துவகையும் தருமஞ்செய்தற்கு இடங்களாகையால் ஐம்புலனென்றார், இவ்வைந் திடங்களும் ஐந்துபங்கு வேண்டுதலால் அரசனுக்கு ஆறில் ஒருபங்காயிற்று. (ஙா)

பழியஞ்சிப் பாத்தூண் டுடைத்தாயின் வாழ்க்கை
வழியஞ்ச லெஞ்ஞான்று மீல்.

இ-ள். பொருள்சம்பாதிக்கும்போது பழி- பாவத்துக்கு—அஞ்சி (பயப்பட்டுச்சம்பாதித்து)—பாத்தூண் (அப்பொருளைமூன்சொல்லப்பட்டபதின்மர்களுக்கும்) பங்கிட்டு—ஊண் (தான்) உண்ணுதலை—வாழ்க்கை (ஒருவனது) இல்வாழ்க்கையானது—உடைத்தாயின் - உடையதானால்—வழி (அவனது)சந்ததியானது—எஞ்சல் - குறைதல்—எஞ்ஞான்றும்-எந்நாளும்—இல்-இல்லை—என-று. (கருத்து.) பாவத்திற்குப்பயந்து பொருளைத்தேடிப் பங்கிட்டுண்ணு மொருவன் சந்ததியானது குறைவில்லை - என்பதாம். * பாவத்தால்வந்த பிறன்பொருளைப் பங்கிட்டுண்டால் அறமானது, பொருளுடையானையும், பாவமானது தன்னையும் அடைந்து சந்ததி அழியுமாதலால் பழியஞ்சியென்றார். வாழ்பவனது உடைமைவாழ்க்கைமேல் ஏற்றப்பட்டது. (ச)

அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது.

இ-ள். இல்வாழ்க்கை (ஒருவனது) இல்வாழ்க்கையானது—அன்பும் (தன்மனையாளிடத்துச் செய்தற்குரு) மைந்தினையும்—அறனும் (பிறர்க்குப்பயந்துஞ் செய்ய வேண்டுதலாகிய) அறத்தினையும்—உடைத்தாயின்—உடைத்தாகுமென்—அது - அவ்வுடைமையாவது—(அவ்வில்வாழ்க்கைக்கு) பண்பும்-குணமும்—பயனும்-நிரேயாசனமும் ஆம்—என-று (கருத்து) ஒருவனில்வாழ்க்கை அன்னையுமறத்தையு முடைத்தாஞ்சில் அவ்வுடைமையானது குணமும்- நிரேயாசனமுமாம் என்பதாம். * மனையாளுக்கும் கணவனுக்கும் மனவொருமை யில்லாதபோது இல்லறம் முழுவெறுத்தாகையால் அன்புடைமை பண்பும் - அறமுடைமை பயனும் ஆயின, அன்னையும், அறனையும்-முன்னைத்த ஒழுங்கின்படி தன்கேறுடி சம்பந்தமுள்ளபண்டையும், பயனையும், வைத்தலாலிரண்டினையுணி [இவைமூன்றுபாட்டாலும் இல்வாழ்வோன் அறஞ்செய்யுமாறு சொல்லப்பட்டது.]

(இ)

அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புலத்தாற்றிற்
போலுய்ப் பெறுவ தெவன்.

இ-ள். (ஒருவன்) இல்வாழ்க்கை - இல்வாழ்க்கையை —அறத்தாற்றின்-தருமத்தின்வழியில்—ஆற்றின் - செலுத்துவானாயின்—புறத்தாற்றில்(அவன் அதற்குப்) புறமாகியவழியிடை—போலுய்பெறுவ—பெறும்படன்னவன்யாது—எ-று. (கருத்து.) ஒருவன் இல்வாழ்க்கையைத் தருமவழியாக நடத்துவானாகில், துறவறத்திற போய்ப்பெறும்பயன், என்ன- என்பதாம். * தருமத்தின்வழி பழியஞ்சிப் பொருத்துன்னுதலும் அன்புடைமையுமென முன் சொல்லப்பட்ட வழியாம். புறத்தாறு - மனையைவிட்டு வனத்திடலொல்லுதில. அங்ஙனந்தருமபயனை இதுதருமென்னும்பொருள் தோற்றற்குப் போலுய்ப்பெறுவதெவனென்றார்.

(ஈ)

இயல்பிலா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை.

இ-ள். இல்வாழ்க்கை- இல்வாழ்க்கையிலெனின்று—இயல்பிலான் (அதற்குரிய) வியல்போடுகூடி—வாழ்பவனென்பான்- வாழ்பவனென்று சொல்லப்படுவோன் - முயல்வாருளெல்லாம் (ஐம்புலன்களைவிட) முயற்சிசெய்வாரெல்லாருள்ளுந்—தலை- மேம்பட்டவனாவான்—எ-று (கருத்து.) தருமவியல்போடு இல்லறத்தில்வாழ்பவன்தவஞ்செய்வாரைக்கெல்லாந்தலையாவான் என்பதாம். * முற்றத்துறந்தவராகிய சந்நியாசிகள் ஐம்புலன்களை கிட்டாமையால்முயல்வாரொன்றது வனத்திலே தவஞ்செய்வோராகியவானப்பிரஸ்தரை, இல்வாழ்வோன் அம்முயற்சி செய்யாமலே பயனைப்பெறுதலினாலே தலையென்றார்.

(எ)

அற்றி லெனுழுக்கி யறனிழுக்கா லில்வாழ்க்கை
நோற்பாரி னோன்மை யுடைத்து.

இ-ள். (தவஞ்செய்வோனையும்) ஆற்றின் (தமது) ஒழுக்கத்தி—ஒழுக்கி-நடத்தி—அறன் (தரும்நெறி)னை நுழுக்கா - தவறாது—இல்வாழ்க்கை-இல்வாழ்க்கையானது—நோற்பாரின் - அந்தவஞ்செய்வாரது நிலையிலும்—நோன்மை- பெரும்மையை—உடைத்து - உடையதாம்—எ-று. (கருத்து.) தவத்தோனைத் தவவழியினடக்கச்செய்தும் துறக்கவினில்லறத்தினின் றுதவறுத வாழ்க்கைதவஞ்செய்வோரிலும் பெரும்மையுடையது-என்பதாம். *பசிமுதலான இடையூறு தீர்த்தல் ஆற்றி லெனுழுக்கியென்றார். நோற்பானென்றது அவரது நிலையை உணர்த்தலால் அருளெபபர். தவஞ்செய்வோரது நிலை அவருக்குவந்த நோயை யல்லது இல்வாழ்வானது நிலைபோல பிறருக்குவந்த நோயையும் பொறுத்தலில்லாமையால்நோற்பாரி னென்னைபுடைத்தென்றார். (அ)

அறனெனைப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று.

இ-ள். (இருவகையறத்தினுள்) அறனெனப்பட்டது (நூல்களால்) அறனென்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது—இல்வாழ்க்கை- இல்வாழ்க்கையே—(மற்றைத்துறவறமோவென்றால்) அஃதும் - அதுவும்—பிறன்பழிப்பட்டது - பிறனுற்பழிக்கப் படுவதை—இல்லாயிற்ற - இல்லாதிருந்தால்—நன்று - அவ்வில்லவாழ்க்கையோடுதொருதன்மையதாகான்மை—எ-று. (கருத்து.) அறமெனறுசொல்லப்பட்டது இல்வாழ்க்கையதும் துறவறமும் பிறனுற் பழிக்கப்படுவ தில்லாதிருந்தால் அல்லது மன்பதாம். * எதாரத்திறந்தில இல்லாத்தினின் றும்பிரிக்கப்பட்டதுறவறத்தை, அஃதெனபது சுட்டுபெயர்றது, பிறன்பழிப்பதெனற்றதுகூடாவொழுக்கத்தை துறவறத்தில் மனத்தையும் பொறிகளையும் அடக்கவேண்டியவருத்தம் உண்டாயிருந்தலால் அதுதினறவேறுவது அரிதாயிறந்திலை அவ்வருத்தம் இல்லாமையால் அதுதினறவேறுவது எளிதாதலால் அப்படிப்பட்ட துறவறம் பழுதுபடாமல் நடந்துவரும் பாது இல்லறத்தோடுசேர்த்து எண்ணப்படுவதாயிற்று [இவைதான் போட்டாலும் இல்லறமே பயனுடையதென்று அதன் சிறப்புச்சொல்லப்பட்டது] (கூ)

வையத்துள் வாள்வாக்கு வாழ்பவன் வாணுதையுந்
தெய்வத்துள் வைக்கப்படும்.

இ-ள். வாழ்வாங்கு - இல்லறத்தோடுகூடி வாழுமியல்பினால் வையத்துள் - மன்னுலகத்துள்—வாழ்பவன்-வாழ்பவன்—(மன்னுலகத்தானேயாயிறும்) வாணுதையும் - விண்ணுலகத்தி லிருக்கின்ற

தெய்வத்துள் - தேவருள்—வைக்கப்படும் (ஒருவனுக) வைத்து கள்ளு க மதிக்கப்படுவான்—எ-று. (கருத்து.) இல்லறத்து வழுவாது வாழ்பவன் தெய்வத்து வாழ்பவன் தெய்வத்து ளொருவனுக மதிக்கப்படுவான்-என்பதாம். * பின்னை தேவனுய்ப்பிறந்து அவ்வறப்பயனை அனுபவித்தல் நிச்சயமா யிருக்கையால் தெய்வத்துள் வைக்கப்படு மென்றார். இதனுல் இல்லறத்தின் மறுமைப்பயன் சொல்லப்பட்டது) [இம்மைப் பயன் புகழ் அறநூல்களிலே சொல்லுகின்றார்.] (ய)

சூ-ஆம்-அதி - வாழ்க்கைத்துணைநலம்.

அஃதாவது - அவ்வில்வாழ்க்கைக்குத் துணையாகிய மனையாளது நன்மையாம், இதனுலேயே அதிகாரமுறைமையும் விளங்கும்.

மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

இ-ள். மனைத்தக்க- இல்லறத்துக்குத்தக்க — மாண்புடையளாகி நற்குண நற்செய்கைகளை யுடையவளாகி, தற்கொண்டான் - தன்னைக் கொண்டகணவனது—வளத்தக்காள்வாழ்க்கை- வரவுக்குத் தகுந்த வாழ்க்கையையுடையவள்—துணை - (அவ்வில்லறத்துக்குத) துணையாவாள்—எ-று.(கருத்து.)இல்லறத்திற்குத்தக்க நற்குண-நற்செய்கையுடையவளாகிதன்னைக்கொண்டகணவன்வரவுக்குத்தக்க செலவுசெய்பவள் இல்வாழ்க்கைக்குத்துணையாவாளென்பதாம். *நற்குணங்களாவன-துறந்தவரையுபசரித்தலும்விருந்தோம்பலும்வறியவரிடத்தேயருளுடைமையும், முதலானவையாம்.நற்செய்கைகளாவன - வாழ்க்கைக்குவேண்டும்பொருள்களரிந்து காப்பாற்றிவைத்தலும், உண்டிசமைத்தல் வல்லமையும், உபகாரஞ்செய்தலும், முதலானவையாம். வருவாய்க்குத்தக்கவாழ்க்கையாவது-முதலுக்குத்தக்கபடி செலவுசெய்தல். [இதனுல் இவ்விரண்டுநன்மைகளும் சிறந்தனவென்பது சொல்லப்பட்டது] (க)

மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினு மில்.

இ-ள். மனைமாட்சி- இல்லறத்துக்குத்தகுந்த நற்குணநற்செய்கைகள்—இல்லாள்கண் (ஒருவனது) மனையாளிடத்தே—இல்லாயின்- இல்லையாயின்— வாழ்க்கை- அவ்வில்வாழ்க்கையானது—எனைமாட்சித் தாயினும் (செல்வத்தால்) எவ்வளவுபெருமையை உடைய தாயினும்- இல்-அப்பெருமையை உடையதன்று—எ-று. (கருத்து) இல்லறத்திற்குத் தகுந்த நற்குண நற்செய்கை மனையவளிடத் தில்லாதாயின் அவ்வில்

வாழ்க்கை எவ்வளவுசிறப்புடைத்தாயினும் பயனில்லை - என்பதாம். * பயன்படாமையால் இல்லையென்றார். (உ)

இல்லதெ னில்லவண் மாண்பி னதுவுள தேற்
வில்லவண் மாணாக் கடை.

இ-ள். (ஒருவனுக்கு) இல்லவள்-மனையாள்— மாண்பானதும் - நற்குணநற்செய்கைகளையுடையவளாயிருந்தால்—இல்லது - இல்லாதது— என்-யாது— இல்லவள், அம்மனையாள்— மாணாக்கடை- அப்படிப்பட்டவளாகாதிருந்தால்—உள்ளது - உள்ளது—என்-யாது—எ-று. (கருத்து.) மனையாள் நற்குணநற்செய்கையுடையவளாகில் அவ்வில்வாழ்க்கை எல்லாம் உடைத்து - என்பதாம். * மாண்பென்னுஞ்சொல் பெயர் இங்கே அதனை உடையவளுக்கு ஆயிற்று. [இவ்விரண்டுபாட்டாலும் இல்வாழ்க்கைக்கு வேண்டுவது-மனையாளது நற்குண நற்செய்கையே மற்றனவல்லவென்பது சொல்லப்பட்டது.] (ங)

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்.

இ-ள். கற்பென்னுந்திண்மை - கற்பென்னுங்கலக்கா நிலைமை—உண்டாகப்பெறின் (அவளிடத்தே) உண்டாயிருக்கப்பெற்றால்- (ஒருவன் பெறுதற்குரியபொருள்களுள்) பெண்ணின் - மனையாளினும்—பெருந்தக்க-உயர்வாகிய பொருள்கள்—யா - எனை—உள - இருக்கின்றன—என்-று. (கருத்து.) ஒருவன்பெறும்பேருகளுக்குள் கற்புடைய மனையினைப்பார்க்கினும் எவையிருக்கின்றன - என்பதாம் * கற்புடையாள் போல் அறமுதலாகிய மூன்றுக்கும் எதுவாம்பொருள்கள் வேறில்லாமையால் யாவுளவென்றார். [இதனால்கற்பு நலத்தது சிறப்புச்சொல்லப்பட்டது.] (ச)

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை.

இ-ள். தெய்வம்(பிற)தெய்வத்தை—தொழாஅள்-வணங்காளாகி—கொழுநன் (தனதுதெய்வமாகிய) கணவனை- தொழுது—வணங்கியின்று—எழுவாள் (நித்திரைவிட்) டெழுந்திருப்பவள்—பெய்யென - பெய்யென்றுசொல்ல—மழை-மழையானது—பெய்யும்- பொழியும்—எ-று. (கருத்து.)பிறதெய்வத்தைவணங்காளாகிக்கணவனைத்தொழுதெழுபவள் பெய்யென்றுசொல்ல மழைபெய்யும் - என்பதாம். * தெய்வம்தொழுதற்குமனம் தெளிவது துயிலெழுங்காலத்தாசலின் தொழுதெழுவாளென்றார். தொழாஅன்என்பது தொழுதனைத்திருந்து நின்றது. தெய்வமும் ஏவல்செய்யுமென்பதாம். [இதனால் கற்புடையவளது வல்லமை சொல்லப்பட்டது.] (ஞ)

தற்காத்துத் தற்கொண்டாற்பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

இ-ள். தற்காத்து (கற்பினின்றும்வழுவாமல்) தன்னைக்காப்பாற்றிக் கொண்டு — தற்கொண்டாற் பேணி - தன்னைமணக்கொண்டவனையும் (உண்ணு முதலான வற்றால்) உபசரித்து — தகைசான்ற (தம்மிருவரிடத்தும்) நன்மையளைத்த — சொற்காத்து-புகழுறு கேடுகாமற் காப்பாற்றி— சோர்விலாள் (முன்சொல்லப்பட்ட நற்குணநற்செய்கைகளிலும்) மறவியில்லாதவளே பெண் - பெண்ணெனப்படுவாள்—எ-று. (கருத்து.) கற்பையும் கணவனையும் நற்குணநற்செய்கைகளையும் காப்பாற்றுபவளே மனையாள்—என்பதாம். * தன்னைத்தான்பேணுதல்தகுமாலது - ஊரார் - கற்பிழுலே தன்னைப்புகழ்வது[இதனால்தன்னைப்புகழ்தற் சிறப்புச்சொல்லப்பட்டது.](சு)

சிறைகாக்குஞ் காப்பெவன் செய்யுமகளிர்
நிறைகாக்குஞ் காப்பே தலை.

இ-ள். மகளிர் - பெண்மகளை—சிறை - சிறையினாலே—காக்கும்(தவறி) காக்கும்—காப்பு - காவலாவது—எவன் - என்னபிரயோசனத்தை—செய்யும் - செய்யும்—சிறை (தமது) நிறைபால்—காக்கும் (அவர்) காக்குமிட—காப்பே-காவலே—தலை-முதன்மையான காவல்—எ-று. (கருத்து.) பெண்கள் - கற்பால்தங்களைக்காத்துகொள்ளுதலே தலைமையானகாவல். என்பதாம். * சிறை - மதிற்காவல் - வாயிற்காவல் - முதலானவை நிறை -மனத்தைத் கற்பின்வழியிலே நிறுத்தல். காவலெண்டிலும் நிறைக்காவல் இல்லாதவிடத்துச் சிறைக்காவலாலேபயன் இல்லையென்றற்கு சிறைகாக்குங் காப்பேதலையென்றார். [இதனால் தன்னைக் காத்தலினது சிறப்புச்சொல்லப்பட்டது.] (எ)

பெற்றார் பெறற்கரியர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழு முலகு.

இ-ள். பெண்டிர் - மகளிர்—பெற்றார் (கற்மைக்) கொண்டகணவனை-பெறின்(பூசித்தல்) பெறுவாராயின் —புத்தேளிர் - தேவர்—வாழும் - வாழ்தற்கிடமாகிய—உலகு - உலகத்தில் — பெருஞ்சிறப்பு (அவராற்செய்யப்படும்) பெரியசிறப்பினை—பெறுவர் - அடைவர் —எ-று.(கருத்து.) தன்கணவனை வணங்கும்பெண்களைத் தேவர்கள் தொழுவர் என்பதாம். * பூசித்தல் வருவிக்கப்படுதலால் சொல்லெச்சம். [இதனால்தன்னைக்கொண்டவனைப் பூசித்தபெண்டிர் தேவர்களாலே பூசிக்கப்படுவரென்பது சொல்லப்பட்டது.] (அ)

புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
னேறுபோற் பீடு நடை.

இ-ள். புகழ்-கீர்த்தியை—புரிந்த- விரும்பிய—இல் மனைபாலை இலோர்க்கு இல்லாதவர்க்கு — இகழ்வார் முன் — (தம்மை

[illegible]

கிழந்தபோதும் பனைவிழுமுன்—வறுமைபோல் ஆண்சிங்கம்போலும்—பீடுநடை-பெருமிதநடைஇல்லை-இல்லை,--எ-று. (கருத்து.) கும்பாதியகூர்த்தினையுடையமனையாளில்லாதவர்க்குத் தாம்பனைவிழுமுன் சிங்கம்போன்றநடையில்லை என்பதாம். * புரிந்தவென்பதனீறு விகாரத்தால் தொக்கது. பெருமிதநடையானுக்குச் சிங்கமேறு நடையிழுக்கு உபமானமாதலால் ஏறுபோலென்றார். [இதனால் புகழைக்காப்பாற்றுதவிடத்தே உண்டாகும் குற்றஞ்சொல்லப்பட்டது.] (கூ)

மங்கலமென்ப மனைமாட்சி மற்றதன்
னன்கல னன்மக்கட் பேறு.

இ-ள். (அறிந்தோர்) மனை - மனையாளது--மாட்சி-நற்குணநற்செய்கைகளோ—மங்கலம் (ஒருவனுக்கு) கண்டீடாம்—என்ப - என்றுசொல்லுவார்—கன்மக்கட்பேறு. கல்லப்புகல்வனைப்பெறுதலே—அதன் - அவற்றுக்கு—ன்கலன் - நல்லவாபாணம்—(என்ப); என்றுசொல்லுவார்—எ-று (கருத்து.) மனையாளதுநற்குணச்செய்கைகளோவொருவனுக்குண்மையன்றும் நற்புதல்வனைப்பெறுதல் அந்நன்மைக்காபாணமென்றுஞ்சொல்லுவார். என்பதாம். * அறிந்தோரென்பது வருவிக்கப்பட்டது. மற்று - அசை. [இதனால்வாழ்க்கைத் துணைகளாவதோ ரணிகலந்சொல்லி அதனால் பின்வருவதாகிய அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது] (ரு)

எ-ஆம்- அதி- புதல்வனைப்பெறுதல்.

அஃதாவது முன்னிவர்கடன் கேள்வியாலும் தேவர்கடன் | கேள்வியாலும், தென்புலத்தார்கடன் புதல்வனைப் பெருதலாலும், அல்லது செலுத்தக்கூடாமையால் அக்கடன் செலுத்தற்பொறுட்டு நல்லமக்களைப்பெறுதலாம். அதிகார முறைமை முன்பெறப்பட்டது.

பெறுமவற்றுள் யாமறிவ தில்லையறிவதன்
மக்கட்பே றல்ல பிற.

இ-ள். பெருமவற்றுள் - (ஒருவன்) பெறும்பேறுகளுள்; அறிவதன் - அறியவேண்டுமவைகளை அறிதற்குரிய, மக்கட்பேறல்ல - புதல்வனைப்பெறுதலையல்லது, பிற - மற்றைப்பேருகளை, யாம் - நாம் அறிவதில்லை - மதிப்பதில்லை—எ-று. (கருத்து.) ஒருவன் பெறும்பேறுகளுள் அறியவேண்டியவைகளை யறிந்த மக்கட்பேற்றை மதிக்கவேண்டும் என்பதாம். * அறிதற்குக் காரணமாகிய வறிவை அவ்வறிதலை உண்டாக்கியவிடுமாதலின் அத்தன்மைவாய்ந்த அறிந்தவனை இறந்தகாலத்தாற்கூறினர். அறிவறிந்தவென்றதனால்மக்களென்னும் பெயர் பெண்பாலையொழித்துநின்றது. [இதனுமேல புதல்வனைப்பெருதலினை துதிப்புச்சொல்லப்பட்டது.] (க)

எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

இ-ள். பழிபிறங்கா - (பிறரால்) பழிக்கப்படாத, பண்புடை - நற்குணங்களையுடைய, மக்கட்பெறின் - புதல்வனைப் பெறுவானாயின்;

எழுபிறப்பும் - (வினை வசத்தினாலே புண்டாகிற) எழுவகைப்பட்ட பிறப்பிலும், தீயவை - துன்பங்கள், தீண்டா - (சென்றுஒருவனை) யடையாவாம்— எ-று. (கருத்து.) பழிக்கப்படாத நற்புதல்வனைப் பெறுவானுடைய எழுபிறப்பிலும் துன்பங்களணுகாதுளன்பதாம். * தன்னைதானே கருதி தீவினை செய்தற்பொருட்டு அவனைக் குறித்துப் புதல்வரால் செய்யப்படும் தானதருமங்களுக்கு அவரது நற்குணம் காரணமாகுமென் பண்புடைய மக்களென்றார். எழுபிறப்பு-எழுதலிலுறைமையுமாம், எழுபிறப்பாவன - தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம், என்பனவாம். (உ)

தம்பொருளென்ப தம் மக்கள வர்பொரு
ட்தம் வினையான் வரும்.

இ-ள். தம் மக்கள் - தம்முடைய புதல்வனை, தம்பொருள் - தம்முடைய பொருள்கள், என்ப - என்றுசொல்லுவார் அறிஞரார் அவர்பொருள் - அப்புதல்வர் சம்பாதித்தபொருள்கள், தந்தம்வினையான - தம்மைமுன்குறித்து அவர்செய்யும் நல்வினையினாலே, வரும் -(தம்மிடத்து) வரும், (ஆதலால்)—எ-று. (கருத்து.) 'பின்னோதேடிடபொருள் பிதாவித்து வருகையால் புதல்வனைத் தம் பொருளென்று சொல்லுவர் என்பதாம். * பொருள்சம்பாதித்த புதல்வனைப் பொருளென வுபசரித்தார். [இவை இரண்டுபாட்டாலும், நல்லபுதல்வனைப்பெற்றார் அடையும் மாண்மைப்பயன் சொல்லப்பட்டது.] (ஊ)

அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்.

இ-ள். தம்மக்கள் - தம்முடைய மக்களது, சிறுகை - சிறியகைகளால், அளாவிய - அளையப்பட்ட, கூழ் - சோறுனது, அமிழ்தினும் - (சுவையினாலே மிகுத்த) அமிர்தத்தினும், ஆற்றவினிது - மிகவு மினிமை யுடைத்தாயிருக்கும் —எ-று. (கருத்து.) தம்மக்கள் சிறுகையாலளாவிய சோறுனது அமிர்தத்தினும் மிகவினிமையுடைத்தென்பதாம், * சிறுகையளாவல் தாய்தந்தையரோடு உடனிருந்து உண்ணும் போது சோற்றைத்துழாவுகை முதலாயின. (ஊ)

மக்கண்மெய் தீண்ட லுடற்றின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு.

இ-ள். உடற்கு (ஒருவனது) உடம்புக்கு, இன்பும்-இன்பமாவது, மக்கள்-மக்களது, மெய்-உடம்பை, தீண்டல்-தொடுத்தல் செவிக்கு(அவனது) காதுக்கு, இன்பம் - இன்பமாவது, அவர்-அவரது, சொல்-சொற்களை; கேட்டல்-கேட்குதல்—எ-று. (கருத்து.) மக்களுடலைத்தொடுதல் உடற்கின்பம் அவர்சொற்களைக்கேட்டல் செவிக்கின்பம் என்பதாம். * மற்று - அசைநிலை. பிள்ளைகளது மழலைச்சொல்லேயன்றி அவர்கற்றறிந்து பேசுஞ் சொல்லும் இன்பமாகலின் இவையிரண்டுக்கும் பொதுப்

படச்சொல்லெண்முர். நீண்டல் - கேட்டல்களினால் உண்டாகும், இன் பங்களைக் நீண்டல் கேட்டலெனலால் ஆகுபெயர்கள். (ஏ)

குழலினி தியாழினி தென்பதம் மக்கண்
மழலைச் சொற் கேளாதவர்.

இ-ள். தம்மக்கள்-தம்முடைபபுதல்வரது—மழலைச்சொல்-குதலைச் சொற்களை, கேளாதவர் - கேட்காதவர், குழல்-குழலினிசை, இனிது-இனியது, யாழ்-வீணையினிசை, இனிது-இனியது, என்ப-என்றுசொல்லுவார்—எ-று. (கருத்து.) தம்மக்கள் மழலைச்சொற்களைக் கேளாதவர்கள் புள்ளங்குழலினிசையினிதென்றும் வீணையிசை யினிதென்றுஞ்சொல்லுகர் என்பதாம். * குழல்-யாழ்- அவற்றினிசையைக் காட்டுதலால் ஆகுபெயர்கள். கேட்டவர் அவற்றிலும் மழலைச்சொல் இனிதென்றுசொல்லுவரென்றதாயிற்று. இனிமை மிகுதிபற்றி மழலைச்சொல்லைச் சிறப்புவகையாற் சொல்லினர் [இவைமூன்றுப்பாட்டாலும் இம்மைப்பயன் சொல்லப்பட்டது.] (சு)

தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

இ-ள். தந்தை - தகப்பனெனவன்—மகற்கு- புதல்வனுக்கு—ஆற்றும் - செய்யத்தகும்—நன்றி - நன்மையாவது—அவையத்து (கற்றவரது) சபையினிடத்து—முந்தியிருப்ப (அவரினு) மேற்பட்டிருக்க—செயல் [கல்வியையுடையவ] னாக்குதலாம்—எ-று. (கருத்து.) பிதாபிள்ளைக்குச்செய்யும் உதவியானது சபையில் கல்வியில் வல்லவனென மூற்பட்டிருக்கச்செயல் - என்பதாம். * பொருளுடையவனாக்கல் முதலானவை பின்னே தன்பத்தைத்தரினுந்தரும். ஆதலால் அவைநன்மையாகா வென்பது கருத்து. [இதனால் தந்தைகடன் சொல்லப்பட்டது.](

தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது.

இ-ள். தம்மக்கள் - தம்மக்களது—அறிவுடைமை - அறிவுடையராயிருக்கையானது—மாநிலத்து - பெரிய நிலத்தில்—மன் - நிலைபெற்ற—உயிர்க்கெல்லாம் - உயிர்களுக்கெல்லாம்—தம்மின் - தமக்கு (இவியதாதலினும்)—இனிது-இனிதாயிருக்கும்—எ-று. (கருத்து.) தம்மக்களறிவுடைமையானது தம்மைவிட உலகத்துயிர்களுக்கெல்லாமினிதாயிருக்கும் - என்பதாம். * இக்கே அறிவென்றது இயற்கையறிவோடுகூடிய கல்வியறிவை அறிவுடமை கண்டுமகிழ்தற்குரியவர் அறிவுடையோராதலால் இங்கே மன்னுயிரென்றது; அவர்மேல்நின்றது. [இதனால் தந்தையினும் உலகத்தார் மகிழ்வரென்பது சொல்லப்பட்டது.] (அ)

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்.

இ-ள். தன்மகனை-தன்புத்திரனை—சான்றோனென (கல்விகேள்விகளினாலே) நிறைந்தோனென்று (அறிவுடையோர்) சொல்ல—கேட்டதாய்-கேட்டதாயானவள்—ஈன்றபொழுதின்-பெற்றகாலத்திலும்—பெரிதுவக்கும்-மிகமகிழ்வாள்—எ-று. (கருத்து.) தன்மகனைக் கல்வியில் வல்லவனெனக் கேட்ட தாயானவள் பெற்றகாலத்திலும் பெருமகிழ்ச்சியடைவாள்-என்பதாம். * மடியின்மேலே கண்டதனால்உண்டாகியபொதுவான மகிழ்ச்சியிலும் நிறைந்தகல்விகேள்விகளையுடையவனெனக் கேட்டதனால் உண்டாகிற சிறப்பான மகிழ்ச்சி பெரிதாகலின் பெரிதுவக்குமென்றும், பெண்மைக்குணத்தினால் தானுக அறியமாட்டாமையால் கேட்டதாயெனவும் சொல்லினார். அறிவுடையோனென்பது வருவிக்கப்பட்டது சான்றோனென்று அறிந்துசொல்லுதற்கு உரியவர் அவரானகையால். [தாய்மகிழ்ச்சிக்கு அளவில்லாமையால் அது இதனால் வேறறிந்தாச்சொல்லப்பட்டது.] (கூ)

மகன்றந்தைக் காற்று முதவியிவன்றந்தை—
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்.

இ-ள். தந்தைக்கு (தன்னைக்கல்வியுடையனெனக்கிய) தகப்பனுக்கு—மகன்-புத்திரன்—ஆற்றும்-செய்யும்—உதவி-எதிர்நன்றியானது (தன்னறிவையும் ஒழுக்கத்தையும் கண்டவர்) இவன்-இவனது—தந்தை-தகப்பன் (இவனைப் பெறுதற்கு)—என்-என்னதவத்தை—நோற்றான்கொல்-செய்தானோ—என்னும்-என்கிற—சொல்-சொல்லை (உண்டாக்குதலாம்)—எ-று. (கருத்து.) பிள்ளைபிதாவுக்குச்செய்யும் உதவியானது இவன்பிதா இவனைப்பெறுதற் கென்னதவஞ்செய்தானோ வென்றுபிறர்சொல்லுஞ் சொல்லை யுண்டாக்கல்-என்பதாம். * சொல்லென்பது உண்டாக்குதலாகிய தன்காரணத்தைக்குறிப்பித்து நின்றது. உண்டாக்குதல்-அப்படிச்சொல்லுடன்படுத்தல். [இதனால்புதல்வனது கடன் சொலலப்பட்டது.] (ஙி)

அ-ஆம்-அதி-அன்புடைமை.

அன்புடைமை-அம்மனைவி புதல்வர் முதலாகிய சம்பந்த முடையவரிடத்து ஆசையுடையவனுடைய, அதிகாரமுறைமையும் இதனால் விளக்கும், இல்லறமினிது நடத்தலும் பிறவுயிர்களின்மேல் அருள்பிறத்தலும் அன்பின்பயனுதலால் இது வேண்டப்பட்டது.

அன்பிற்குமுண்டோ வடைக்குந்தாழ்வார்வலர்
புன்கணீர்பூசல்தரும்.

இ-ள். அன்பிற்கும் - அன்பிலாதவர்க்கும்—அடைக்கும் (பிறரறியாமல்) அன்பத்துவைக்கும்—தாழ் - தாழும்—உண்டோ - உளதோ—(தம்மால் அன்பு செயப்பெற்றவரது துன்பங்கண்டவிடந்தே (பொறுகின்றி)— ஆர்வலர் - அன்புடையாரது புன்கணீர் - புல்லியகண்ணீரோ—பூசாரும் (உள்ளே இருக்கிற) அன்பினை எல்லாரும்அறியத்(தூற்றும்) (ஆதலால்)—எ-று. (கருத்து.) அன்பு கொள்ளப் பட்டவரது துன்பக்கண்டபோதே, அன்புடையவர்கண்ணீரோ உள்ளிருந்த - வன்னபக்காட்டும்-என்பதாம். * உள்ளம் அன்பைச்சிறப்பித்து நின்றது, காட்சியளவையால் அரியப்படாதபினும் அநுமான வளவையால் வெளிப்படுமென்பதாம். [இதனால் அன்பினது உண்மை உணர்த்தப்பட்டது.]; (க)

அன்பில்லா வெல்லாந் தமக்குரிய ரன்பிலரா
வென்புமுரியர் பிறக்கு.

இ-ள். அன்பிலார் - அன்பில்லாதவர்—(பிறருக்குப்பயன்படாமையால்) எல்லாம் - எல்லாப்பொருள்களாலும்—தமக்கு - தமக்கே—உரியர் - உரியராவார்—அன்புடையார் - அன்புடையவர் —தமக்காகளாலே மாத்திரமல்லாமல்) என்பும்— (தம்) முடமபாலும், பிறாக்கு - பிறருக்கு —உரியர்-உரியராவார்—எ-று. (கருத்து.) அன்பில்லார்எல்லாப்பொருளையுந் தமக்கேயுரியவராவர் அன்புடையவர் பிறர்க்கு எலும்பையுங் கொடுக்கவுரியவராவர் - என்பதாம். * தமக்கேயென்ற பிரிநிலையேகாரம், வருவிக்கப்பட்டது - என்பு - உடம்பிற்காதலால் ஆகுபெயர் [என்புமுரியராகுகை புறவுக்காகத்துலேயேறிய சிபியும் தன்முதுகையும்பை இந்திரனுக்குகொடுத்த ததீசியு முதலாயிஃதிடத்தேகாண்க.] உ

அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு.

இ-ள். ஆருயிர்க்கு - பெருந்தற்கரியுமனிதருயிர்க்கு — என்போடு உடம்போடு—இயைந்த-உண்டாகிய—தொடர்பு- சம்பந்தத்தை—அன்போடு - அன்போடு—இயைந்த - பொருந்துதற்குவந்த—வழக்கு—வழிபயலுரும்—என்ப -என்று (அறிஞர்) சொல்லுவர்— எ-று. (கருத்து.) மக்களுடிருக்குடலோடுண்டாகிய சம்பந்தத்தை - அன்போடுபொருந்தவந்த பயனென்பர் - என்பதாம். * மனிதப்பிறப்பினருமை அதனையடைந்த உயிர்களிடத்தில் ஏற்றப்பட்டது. வழக்கென்பது அதன்பயனையுணர்ந்தலால் ஆகுபெயர், உடம்போடு கூடியல்லாமல் அன்புசெய்யக்கூடாமையால் அதுசெய்தற் பொருட்டு இத்தொடர்ச்சி யுண்டாயிற்றென்பதாம். ஆகவே. [இத்தொடர்ச்சிக்குப்பயன் அன்புடைமையென்றுரையிற்று.] (ங)

அன்பீனு மார்வ முடைமை யதனீனு
மன்பென்னு நாடாச் சிறப்பு.

இ-ள். அன்பு - (சம்மந்தமுடையவரிடத்தே செய்யப்பட்ட) அன்பானது— (அத்தன்மையிலுலே) ஆர்வமுடைமை (பிறரிடத்தே; அ னையையுடையவனுயிருக்கையை — ஈனும் (ஒருவனுக்குத்) தரும்— அ து - அவ்விருக்கையான து ஈன்பென்னும் (இவனுக்குபாவரும்) நட் பினொன்று சொல்லப்படுகிற — நாடாச்சிறப்பு - அளவிறந்தசிறப்பை, ஈனும் - தரும்—ன-று. (கருத்து.) அன்பானது - ஆசையைத்தரும, அ து சினேகத்தையும் தரும்-என்பதாம். * [எல்லாரும் நட்பினராதல் - எ ல்லாப்பொருளையும் - அடைதற்குக் காரணமாதலின் அதனைநாடாச்சி றப்பென்றார்.]

(சு)

அனபுற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்று வொப்துஞ் சிறப்பு.

இ-ள். வையகத்து - இவ்வுலகத்தில்—இன்புற்றார் (இல்வாழ்க்கை லே நின்று.) இன்பத்தையனுபவித்தவராகி— எய்தும் (அதன்பின்னே வின்னுலகத்திற்சென்று) அடையும்—சிறப்பு - பேரின்பத்தினை—அ ன்பு - அன்பை—உற்று உடையவராகி—அமர்ந்த(இல்லறத்தோடு)போ ருந்திய—வழக்கு - வழியின்பயனுகும்—என்ப - என்று (அறிந்தோர்) சொல்லுவார்—ன-று.(தருத்து.) வின்னுலகிலடையும் பேரினபத்தைம ன்னுலகில் இல்வாழ்க்கையில் பொருந்தியவன்பின் படனென்பர்-எ ன்பதாம். * இல்வாழ்க்கையிலேநின்று மனைவியோடும், மக்களோடும், சுற்றத்தோடும், கூடிஇன்பமுற்றவர் தம்மாலேசெய்யப்பட்டவேள்விக் தொழிலினுலே தேவராய்ப்பிரந்து - அங்கேயும் இன்பத்தை அநுபவி ப்பாராகின் இன்புறுவொப்துஞ் சிறப்பென்றார். தவத்தினுலே - து ன்பமுற்று - அடையப்படுவதாகிய - வின்னுலகவின்பத்தை இங்கே யும் இன்பமுற்று அடைதல் அன்பாலன்றி இல்லையென்பதாம். (இ)

அறத்திற்கே யன்புசார் பென்பவறியார்
மறத்திற்கு மஃதே துணை.

இ-ள். அறியார் - அறியாதவர் (சிலர்)—அன்பு-அன்பானது—சா ர்பு - துணையாவது—அறத்திற்கே - தருமத்தக்கே—என்ப - என்று சொல்லுவார் — மறத்திற்கும் மறத்தைநீக்குதற்கும் —அஃதே - அவ் வன்பே—துணை-துணையாவது—ன-று. (கருத்து.) அறியாதவர்கள் அற த்திற்கேயன்புதுணையென்பர் மறத்தைநீக்குதற்கும்அவ்வனபேதுணையா ம் - என்பதாம். *ஒருவனுலே செய்யப்பட்ட பலகன்மபற்றி உள்ளத்தி லே மறந்தோன்றியவிடத்தே அவனைநட்பாக நினைத்து அவன்மேல் அ ன்புசெய்ய அதுநீங்குமாதலின் மறத்தை நீக்குதற்குந் துணையாமென் றற்கு மறத்திற்கு மஃதேதுணையென்றார் மறத்திற்கு மஃதேதுணையெ ன்றதற்குப் பெண்டீர் புதல்வர் முதலாயினுனை நல்வழிப்படுத்தும் பொருட்டு அவனைக்குறித்துச்செய்யப்படும் கோபத்துக்கும் அன்பே

துணையெனப் பொருளுணாப்பிலும் ஆம் [இவை ஐந்து பாட்டாலும் அன்பினது சிறப்புச்சொல்லப்பட்டது.] (சு)

என்பி லதனை வெயிற்போலக் காயுமே
யன்பி லதனை யறம்.

இ-ள். என்பிலதனை - எலும்பில்லாத வுடம்பை—வெயிற்போல வெயிலானது சுடுதல்போல—அன்பிலதனை - அன்பில்லாதவுயிரை—அறம் - அறக்கடவுள்—காயும் - சுடுவான்—என-று. (கருத்து.) என்பில்லாப் புழுக்களைச் சூரியன் சுடுதல்போல அன்பில்லாவுயிர்களை யறக்கடவுள் சுடும் - என்பதாம். * வ - அசைநிலை என்பிலதென்றதனால் உடம்பென்றும், அன்பிலதென்றதனால். உயிரென்றும், கொள்ளப்பட்டன. வெறுப்பில்லாமல் எங்கும் ஒருதன்மைத்தாகிய வெயிலின்முன்னே புழுமுதலானவை கெடுதல்போல், அப்படிப்பட்ட அறத்தின்முன்னே அன்பில்லாதவுயிர் தன்னியல்பாறசென்று கெடுமென்பதாம்.

அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று.

இ-ள். அன்பகத்தில்லாவுயிர் - மனதிலன்பில்லாத வுயிரானது—வாழ்க்கை (இல்லறத்தெதாடுசூடி) வாழ்தலானது—வன்பாற்கண்- வன்பாலென்னு நிலத்திலே—வற்றல்மரம்- உலர்ந்தமரமானது—தளிர்த்தற்று - தளிர்த்தாற்போலும்—என-று. (கருத்து.) அன்பில்லா வுயிர்வாழ்க்கையானது வன்னிலத்திற் பட்டமரந் தளிர்த்தாற்போலும் - என்பதாம். * கூடாதென்பதாம். வன்பால், கடினநிலம். (அ)

புறத்துறுப் டெல்லா மெவன்செய்யும் யாக்கை
யகத்துறுப்பன் பிலவர்க்கு.

இ-ள். யாக்கையகத்து- உடம்பினகத்திலே நின்று—உறுப்பு (இல்லாதற்கு) அங்கமாகிய—அன்பிலவர்க்கு - அன்பில்லாதவற்கு—புறத்து மற்றைப்புறத்திலேநின்று— உறுப்பெல்லாம் - அங்கமாவனவெல்லாம்—எவன் (அவ்வறஞ் செய்தலிலே) என்னவுதவியை— செய்யும்-செய்யும்—என-று. (கருத்து.) உள்ளன்பில்லாதார்க்குப்பிறவுறுப்புகளிருந்து பயனில்லை - என்பதாம். * புறத்துறுப்பாவன- இடம்பொருளேவலாதிகளாம் அன்பாகியதுணையோடு கூடாத்விடத்தே அவைகளாற் பயனில்லாமையால் எவன் செய்யுமென்றார் உறுப்புப்போலுதலால் உறுப்பெனப்பட்டது. (க)

அன்பின் வழிய துயிர்நிலையஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு.

இ-ள். அன்பின்வழியது- அன்புமுதலாகவதன்வழிநின்றவுடம்பே, —உயிர்நிலை- உயிர்நின்ற உடம்பாகும்—அஃதிலார்க்கு - அவ்வன்பில்லாதவர்க்குள்ள—உடம்பு - உடம்புகளானவை—என்பு - எலும்

ணைப்—தோல்-தோலினுலே, போர்த்த-போர்க்கப்பட்டனவாம்(உயிர்க்கு புறவுடம்பாகா)—எ-று. (கருத்து.) அன்போடுபொருந்தியவுடலேயுயிருள்ளவுடலாகும், அவ்வன்பில்லாதவுடலே யுயிரற்றவுடலாகும், என்பதாம். * இல்லறம் பயன்படாமையால் அப்படிப்பட்ட வுடம்புகளாயின, [இவை நான்குபாட்டாலும் அன்பில்லாதவிடத்தேஉண்டாகும குற்றம்சொல்லப்பட்டது.] (ம)

கூ-ஆம்-அதி- விருந்தோம்பல.

அஃதாவது விருந்தினரை யுபசரித்தல். தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான், என்கிற ஐவகையோரை உபசரித்தல்களிலே முன்னவையிரண்டும் கண்ணுற்காணப்படாதவனாகினுஞ் செய்யப் படுவனவாதலாலும், பின்னவை இரண்டும் பிறர்க்குக்கொடுத்தலல்லாமையாலும் நடுநின்ற விருந்தோம்பல்சிறப்பையுடையதாகி அவ்வில்லறங்களுக்கு முதலாயிற்று. வேறுபாடில்லாத அன்பையுடையகனவனு மனையாளும்கூடியல்லது செய்யக்கூடாமையால்இது அன்புடைமையின் பின்வைக்கப்பட்டது.

இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

இ-ள். (மனைவியோடுங்காட்டினிடத்தேசெல்லாமல்) இல் - இல்லினிடத்தே—இருந்து - இருந்து—ஓம்பி -(பொருள்களைக்) காப்பாற்றி—வாழ்வதெல்லாம் - வாழுஞ்செய்கையெல்லாம்—விருந்து - விருந்தினரை—ஓம்பி - உபசரித்து—வேளாண்மை - உபகாரத்தை—செய்தற் பொருட்டு (அவருக்குச்) செய்தறபொருட்டாம்—எ-று. (கருத்து.)இல்வாழ்னகையில் வாழ்வதெல்லாம் விருந்தினரைச் காப்பாற்றும பொருட்டு - என்பதாம்.*எனவே - உபகாரஞ்செய்யாதவிடத்தே இல்லிலிருத்தலாலும், பொருள்காப்பாற்றலாலும், உண்டாகிறதுன்பச் செயல்களுக்கெல்லாம்பயனில்லை என்பதாம். (க)

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

இ-ள். (உண்ணப்படும்பொருள) சாவாமருந்தெனினும் - அமிர்தமாயினும் விருந்து (தன்னைநோக்கிவந்த) விருந்தினர்—புறத்தா (தன்வீடடின்) புறததிருக்க—தானுண்டல் - தானேயுண்ணுதல் — வேண்டற்பாற்றன்று - விரும்பப்படு முறைமையையுடையதன்றும்—எ-று. (கருத்து.) வந்தவிருந்தினரைப் புறம்மனவத்துந் தேவாமிர்தமாகிய

முன்னைப்பட்டாது-னன்பதாம். * சாவாமருந்து சாவாமைக்குக்காரணமாயிருப்பது. [இலை இரண்டுபோட்டாலும் விருந்தோம்பலின் சிறப்பு சொல்லப்பட்டது.] (உ)

வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று.

இ-ள். வருவிருந்து - தன்னைநோக்கி வந்தவிருந்தை—வைகலும் நாடோறும்—ஓம்புவான் - உபசரித்துவருபவனது—வாழ்க்கை - இல் வாழ்க்கையாளது—பருவந்து (வருமையால்) வருந்தி—பாழ்படுதலின்று-கெடுதலில்லை—என்று.(கருத்து.) வந்தவிருந்தினனைக் காப்பாற்றுபவன் வாழ்க்கைக்கெடுதலில்லை-என்பதாம். * தினந்தோறும் விருந்தோம்புவானுக்கு அதனாலே பொருள்குறையாமல் மேலுமேலும் வளருமென்பதாம். (ங)

அகனமர்ந்து செய்யா ளுறைபு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில்.

இ-ள். செய்யாள் - திருமாதானவள்—முகனமர்ந்து-முகமினியனாய்-நல்விருந்து- தகுந்தவிருந்தினனை—ஓப்புவான்- காப்பவனதுஇல்-வீட்டினிடத்தே—அகனமர்ந்து-மனமகிழ்ந்து—உறையும்-வாழ்ந்துகொண்டிருப்பாள்—என்று. (கருத்து.) விருந்தினனைக்காப்பவன்வீட்டில்-இலக்குமிவாசம்பண்ணுவாள்என்பதாம். * மனமகிழ்தற்குக்காரணம்-தன் செல்வம் நல்லவழிபடுதலாம். [தகுதியாவது-ஞானதானமும், ஆசாரதானமும், உயர்தல் பொருள்வளர்தற்குக்காரணம் சொல்லியபடி.]()

விருந்து மிடல் வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம்.

இ-ள். விருந்தோம்பி (முன்னே)விருந்தினனைபுண்பித்து—மிச்சில்-மிகுதியை—மிசைவான் (பிறவி) னுண்பவனது—புலம் - விளைநிலத்துக்கு—விருந்தும் - விதையும்—இடல் - இடுதலும் — வேண்டுங்கொல்-வேண்டுமோ — (வேண்டுவதில்லை)—என்று.(கருத்து.) விருந்தினனைக் காப்பவன் விளைநிலந்தானேவிளையும்-என்பதாம். * ஓ - அசைநிலை எனவேதானேவிளையுமென்பதாயிற்று. [இவைமூன்றுபாட்டாலும் விருந்தோம்புவார் இம்மையிலே அடையும்பயன் சொல்லப்பட்டது.] (ரு)

செல்விருந் தோம்பி வருவிருந் துபார்த்திருப்பா
னல்விருந்து வானத் தவர்க்கு.

இ-ள். செல்விருந்து - (தன்னிடத்தே) வந்தவிருந்தை — ஓம்பி-உபசரித்து—வருவிருந்து (பின்) வரும்விருந்தை—பார்த்து-எதிர்கொக்கி—இருப்பான் (தான் அதனைஉண்ணா) விருப்பவன்—மறுபிறப்பிலே தேவனும்) — வானத்தவற்கு-வானிலுள்ளவருக்கு—நல்விருந்து - நல்லவிருந்தாவான்—என்று. (கருத்து.) வந்தவிருந்தினனைக் காப்பாற்றி

வரும்விருந்தாளிகளுக்கெதிர் பார்த்திருப்பவன் தேவர்களுக்கு விருந்தளியாவான்-என்பதாம். *கல்விருந்து - கிடைத்தற்கரியவிருந்து, [இதனுலேமருமையில் அடையும்பயன் சொல்லப்பட்டது.] (கூ)

இனைத்துணைத் தென்டதொன் றில்லைவிருந்தின்
றுனைத்துணை வேள்விப் பயன்.

இ-ள். வேள்விப்பயன் (விருந்தினரைப்புசரித்தலாகிய) வேள்வியினது பயன்—இனைத்துணைத்தென்பது-இன்னவளவினதென்பதாகிய—ஒன்றில்லை- ஓரளவினையுடையதன்று—விருந்தின்- அவ்விருந்தினரது—துணை-(தகுதி)யளவே—துணை-(அச்சற்கு)அளவாம்—எ-று.(கருத்து.) விருந்தினரைக்காக்கு மூர்வியிவ்வளவென்பதொன்றில்லை விருந்தினரைபுரிந்தியளவேயாம்-என்பதாம் * தேவயாகம், பிதிருயாகம், மனிதயாகம், பூதயாகம், பிரமயாகம், என்கிற, ஐம்பெருவேள்வியில் மனிதயாகமென்னப்பட்ட விருந்தோம்பலொன்றற்கின் வேள்வியென்றும், பொருளளவு சிறிதாயினும் சற்பாத்திரத்திலே சேர்ந்ததாயின் மிகப்பெரிதாகலின். இனைத்துணைத் தென்பதொன்றில்லையென்றும் சொல்லினர். [இதனால் இருமையும் பயத்தற்குக்காரணமும் சொல்லப்பட்டது.] (எ)

பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.

இ-ள், விருந்து-விருந்தினரை—ஓம்பி- (நிலையாப்பொருளைக்கொண்டு) உபசரித்து—வேள்வி - அவ்வேள்விப்பயனை — தலைப்படாதார்- அடையும் அறிவிலாதவர்—பரிந்தோம்பி (அப்பொருளை) வருந்திக்காத்து (பின்பு அதனையிழந்து—பற்றற்றேம்- (இப்போது) பற்றுக்கோடிலமாயினேம்—என்பர் - என்றிரங்குவார்—எ - று. (கருத்து.) விருந்தினரைக் காப்பாற்றுதார்பொருளைக் காப்பாற்றியிழந்தோமென்பார்- என்பதாம். * சம்பாதிக்கப்பட்ட பொருளைக் காத்தலும் கடுந்துன்பமாதலால் பரிந்தோம்பியென்றார் வேள்வி அதன்பயனை உணர்த்தலால் ஆகுபெயர். (அ)

உடைமையுள் இன்மை விருந்தோம்ப லோம்பா
மடமை மடவார்க ணுண்டு.

இ-ள். உடைமையுள்-(பொரு)ளுடையராயிருக்குங்காலத்து—இன்மை-வறுமையாவது—விருந்தோம்பல் - விருந்தினரைப்புசரித்தலை—ஓம்பா-இகழும் — மடமை - பேதமையாகும் — அது அறிந்தோரிடத்திராது) மடவார்கண்- அறிவில்லாதவரிடத்து—உண்டு-உண்டு—எ-று.(கருத்து.) செல்வத்துள் வறுமையாவது விருந்தினரையுபசரியாமை அது அறிவில்லாரிடத்துண்டு- என்பதாம்.* மடமையானது பொருளாலே கொள்ளும் பயனை இழப்பித்து உடைமையை இல்லாமைபாக்கலால் அதைவறுமையாகவுபசரித்தார். பேதைமையால் விருந்தோம்பலை

பலை இகழ்ந்தால் - பொருளிருந்தவிடத்தும் அதனுல் பயனில்லையென்பதாம். [இவ்விரண்டு பாட்டாலும் விருந்தோம்பாவிடத்து உண்டாகும் குற்றஞ் சொல்லப்பட்டது] (கூ)

மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

இ-ள். அனிச்சம் - அனிச்சப்பூவானது—மோப்ப - மோந்தவிடத்தே—குழையும்-வாடும்—விருந்து- விருந்தினர்—முகந்திரிந்து - முகம் வேறுபட்டு—நோக்க- பார்க்க—குழையும்- வாடுவர்—என-று. (கருத்து.) அனிச்சப்பூமோந்தவிடத்துவாடும், விருந்துமுகம் வேறுபட்டுப் பார்க்கப்படும் - என்பதாம். * தூரத்திலே கண்டவிடத்து முகமலர்ச்சி காட்டலும், அதுகண்டு சமீபத்து வந்தவிடத்து இன்சொற்சொல்லுதலும், அதுகேட்டு உடன்பட்டபோது உபசாரஞ் செய்தலும், ஆகிய - விருந்தோம்புவார்க்கு அவசியமிருக்கவேண்டிய மூன்றறுள் - முதலாகியமுகமலர்ச்சியில்லாதபோது தூரத்திலிருந்தேவாடி நீங்குதலால் தீண்டியவிடத்தல்லது வாடாத அனிச்சப் பூவினும் விருந்தினர் மெல்லியராயிருப்பரென்பதாம். [இதனுல் விருந்தோம்புவார்க்கு முதலிலே முகமலர்ச்சிவேண்டுமென்பது சொல்லப்பட்டது.] (எ)

ய-ஆம் - அதி - இனியவைகூறல்.

இன்சொலதாவது - மனதிலுள்ள மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிற இனியசொல்லுகளைச் சொல்லுதலாம். இதுவும் விருந்தோம்புவார்க்கு அவசியம்வேண்டிய தாகலின் அதன்பின்வைக்கப்பட்டது.

இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

இ-ள். இன்சொல் - இனியசொற்களாவன—ஈரமளை இ-அன்போகலந்து—படிறிலவாம் - வஞ்சனையில்லனவாயிருக்கின்ற—செம்பொருள் - அறத்தினை—கண்டார் - அறிந்தவரது—வாய்ச்சொல் - வாய்ச்சொற்களாகும்—என-று. (கருத்து.) அறத்தின்வழியை யறிந்தவர்வாய்ச்சொற்களே இனியசொற்களாம்-என்பதாம். * ஆல்-அளை- அன்போடுகலத்தல்-அன்புபட்டமையை வெளிப்படுத்தல்-வஞ்சனையில்லாமை-மெய்மை - மெய்யுணர்ந்தவர் கருத்துக்கெல்லாம் செம்மையுடையதாய்த்தோன்றலாலே செம்பொருளெனப்பட்டது இலவாஞ் சொல்லெனக் கூட்டுக. [இதனுல் இனியசொல்லுக்கு இலக்கணம்சொல்லப்பட்டது.]

அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின்.

இ-ள். முகனமர்ந்து (கண்டபொழுதே) முகமலர்ந்து—இன்சொ
லலை-(அகனேடு) இனசொல்லையுமுடையனாகி—பெறின் - பெற்றுக்
(அது)—அகனமர்ந்து - மனமகிழ்ந்து—ஈதலின் (ஒருவருக்குவேண்டி
யபொருளைக்) கொடுத்தலிலும்— கல்தோ - கல்லதாம்—எ-று. (கருத்
து.) முகமலர்ந்தினிய சொற்களைச்சொல்லுவானாகில் அகமலர்ந்துகொ
டுத்தலிலு கல்லது - என்பதாம். * முகமலர்ச்சியோடு கூடியவினைசொ
ல் - தொடுத்தல்போல பொருள்வரத்தாமாகாமல் தன்வசத்தாயிருந்தா
லும் தருமஞ்சாதியுடையவர்க் கல்லது சுபாவமாக இராதாகையால் அ
தனிலும் அரிதென்றுங்கருத்தால் இன்சொலைக்கப் பறிதென்றார். (இ)

முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தானா
மின்சொ னலதே யறம்.

இ-ள். அறம் - தருமமானது—முகத்தானமர்ந்து(கண்டபோதே)
முகத்தால்விரும்பி— இனிதுநோக்கி - இனிதாகப்பார்த்து— (பின்சே
ர்ந்தவிடத்து) அகத்தானும் - மனத்துடனேயு—இன்சொலினதே - இ
னியசொற்களைச் சொல்லுதலினிடத்தே—எ-று. (கருத்து.) தருமமா
னது இன்சொல்லினிடத்தே - என்பதாம். * அறமானது- ஈகையினி
டத்தே உள்ளதல்லவென்பதாம் - [இவை இரண்டுபோட்டாலும் முக
மலர்ச்சியோடுகூடிய இன்சொல் முன்னுகவே பற்றிக்கொள்ளுதலால் வி
ருந்தோம்பலிலே சிறந்ததென்பது சொல்லப்பட்டது] (ஈ)

துன்புறூஉம் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டும்
மின்புறூஉ மின்சொ லவர்க்கு.

இ-ள். யார்மாட்டும் - எல்லாரிடத்துங்—இன்புறூஉம் - இன்பத்
தை மிகுவிக்கும்—இன்சொல்வர்க்கு - இனியசொற்களை யுடையவர்க்
கு—துன்புறூஉம் - துன்பத்தை மிகுவிக்கும்—துவ்வாமை - வறுமை
யானது—இல்லாகும்-இல்லை—எ-று. (கருத்து.) இன்சொற்களையுடை
யவர்க்குத் துன்பமில்லை - என்பதாம் * அப்படிப்பட்ட இன்சொல்லை
யுடையவர்க்கு யாவரும் கட்டுப்படாதலால் எல்லாச்செல்வமும் பெறு
வரென்பது கருத்து. (உ)

பணிவுடைய னின்சொல னாதல னொருவற்
கணியல்ல மற்றுப் பிற.

இ-ள். ஒருவற்கு - ஒருவனுக்கு—அணி - ஆபரணமாவது—பணி
வுடையன் (பெரியோரிடத்தே) வணக்கமுடையனாகி — இன்சொல
னாதல் (எல்லாரிடத்தும்) இனியசொல்லையுடையனாதல்—பிற - இவ்விரண்டு மல்லாமல் உடம்பில் அணியுமற்றையாபரணங்க
ள்—அல்ல - ஆபரணங்களாகாவாம்—எ-று. (கருத்து.) ஒருவனுக்கு இ
ன்சொல்லே ஆபரணமாம் - என்பதாம். * வணக்கமும் இன்சொல்லு
க்கு இனமாதலால் உடனெடுத்தார். மற்று - அசை - தன்னின்வேறு

மிருக்கையால் அணிபும் ஆபரணங்களைப்பிறவென்றும், இவைபோல்வே
ழகு செய்யாமையால் அல்லவென்றும், சொல்லினர் [இவை இரண்
டுபோட்டாலும் இன்சொல்லுகளைச் சொல்லுவார்களுக்கு இம்மைப் ப
யன் சொல்லப்பட்டது.] (நே)

அல்லவை தேய வறம்பெருகு நல்லவை
நாடி யினிய சொலின்.

இ-ள். நல்லவை - (பொருளினாலேபிறர்க்கு) நன்மையையுண்டாக்
சொற்களை—நாடி (மனத்தால்) ஆராய்ந்து—இனிய - இனிமையுள்ள
வாக—சொலின் (ஒருவன்) சொல்லுவானாயின் (அவனுக்கு) — அல்
லவை - பாவங்கள்—தேய-தேய—அறம - தருமமானது — பெருகும்-
வளரும்—எ-று. (கருத்து. ஒருவன் இன்சொற்சொல்லுவானாயின் பா
வங்தேயப் புண்ணியம்வளரும்- என்பதாம். * தேய்தலாவது - பாவம்
தன்பலையாகிய அறம்வளர்தலால் தனக்கு இடமில்லாமல் குறைதல்-
நல்லசொற்களை ஒருவன் நாடிச்சொல்லுமிடத்தும் கடினமாகச் சொல்
லின் அறமாகா தென்பதாம். [இதனால் மறுமைப்பயன் சொல்லப்ப
ட்டது.] (க)

நயனீன்று நன்றிபயக்கும் பயனீன்று
பண்பிற் றலைப்பிரியாச் சொல்.

இ-ள். பயனீன்று (பொருளினாலேபிறர்க்கு) நன்மையைக் கொ
டுத்து—பண்பின் - (இனிஞ்புக்) குணத்தினின்றும்—தலைப்பிரியா-நீ
காத—சொல் - சொற்களானவை (ஒருவனுக்கு) நயனீன்று (இம்மை
க்கு) நிலையையுமுண்டாக்கி—நன்றிபயக்கும (மறுமைக்கு) அறத்தையு
க்கு) நிலையையுமுண்டாக்கி—நன்றிபயக்கும (மறுமைக்கு) அறத்தையு
ம்தரும்—எ-று. (கருத்து.) இனியசொற்களானவை நிலையையும், தரும
த்தையும், தரும் - என்பதாம். * நீதி-உலகத்தோடுபொருந்துதல். (எ)

சிறுமையு னீங்கிய வின்சொன் மறுமையு
மிம்மையு மின்பந் தரும்.

இ-ள். சிறுமையுணீங்கிய (பொருளினாலேபிறர்க்கு)வருத்தந்தரு
ய்யாத— இன்சொல் - இனிய சொற்களானவை—(ஒருவனுக்கு) மறு
மையு மிம்மையும் - மறுபிறப்பிலுமிப்பிறப்பிலும்—இன்பம் - இன்பத்
தை—தரும் - கொடுக்கும்—எ-று.(கருத்து.) இன்சொற்களானவை மி
றுபிறப்பிலு மிம்பத்தைத்தரும் - என்பதாம். * மறுமையின்பம் பெரி
தாகலின் முன் சொல்லப்பட்டது. இம்மை இன்பமாவது உலகம் தனக்
கு வசப்படுதலால் நற்பொருள்களை அடைந்து இன்புறுதல் [இவை
யிரண்டுபோட்டாலும் இருமைப்பயன்களும் ஒருசேர அடைதல் உறு
செய்யப்பட்டது.] (ஏ)

இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழக்கு வாழ்.

இ-ள். இன்சொல் (பிறருடையது) இனிய சொற்களானவை—இனிது ஈன்றல் - (தனக்கு) இன்பந்தருதலை—காண்பான் - அநுபவித்தறிபவன்—(அதுநிற்க) வன்சொல் - கடுஞ்சொற்களை—வழங்குவது (பிறரிடத்தே) சொல்வது—எவன்-என்னபயனோக்குறித்து—எ-று. (கருத்து.) இன்சொல்லின்பம் தருதலைக்காண்டலைவிட வன்சொற்சொல்லுவதென்ன எனப்பதாம். * கடுஞ்சொல் - பிறருக்கும்-இனிதன்றுமாகையால் அதுசெய்யலாகாதென்பது கருத்து. (க)

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந்தற்று.

இ-ள். இனிய (அபமுண்டாகும் இன்சொற்களும்—உளவாக (தன்னிடத்தே யுண்டாயிருக்க—அவற்றைச் சொல்லாமல்) இன்னாத (பயமுண்டாகும்) கடுஞ்சொற்களை—கூறல் - (ஒருவன்) சொல்லுதல்—கனி (இனிய) கனிகளும்—இருப்ப (தன்னிடத்தே) யுண்டாயிருக்க (அவற்றைத் தின்னாமல்) —காய் (இனிமையில்லாத) காய்களை—கவர்ந்தற்று - தின்பதனை யொக்கும்—எ-று. (கருத்து.) இன்சொலிருக்கவன்சொற்சொல்லுதல் கனியிருக்கக் காயைத்தின்றாற்போலும் - என்பதாம். * உபமேயத்துக்குச் சொல்லப்பட்ட இனிமையும் இன்னாமையும் உபமானத்துக்கும் கொள்ளப்பட்டன. இனியகனிகள் - ஔவை யுண்ட நெல்லிக்கனிபோல் யுமிர்தானவை. இன்னாதகாய்கள் - எட்டிக்காய் போல் நஞ்சானவை. கடுஞ்சொற்சொல்லுதல் முடிவிலே தனக்கே இனிதாகாதென்பதாம். [இவை இரண்டுபாட்டாலும் கடுஞ்சொற் சொல்லுதலின் குற்றம்சொல்லப்பட்டது.] (உ)

யக - ஆம் - அதி - செய்ந்நன்றியறிதல்.

ஆம்காவது-தனக்குப் பிறர்செய்த நன்றியை மறவாமை, இனியசொற்களேச்சொல்லி இல்லறத்தின்வழுவாதவர்க்கு நன்றிமறத்தல் தீராக்குற்ற மாதலின் இதனை நீக்குதற்பொருட்டு அதன்பின் வைக்கப்பட்டது.

செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது.

இ-ள். செய்யாமல் (தனக்கு முன்னேருதவியும்) செய்யாதிருக்க—செய்த - (ஒருவன் பிறனுக்குச்) செய்த—உதவிக்கு - உதவிக்கு—வையகமும் - மண்ணுலகத்தையும்—வானகமும் - விண்ணுலகத்தையும்—மாற்றல்- சுடாகக்கொடுத்தலும்—(ஒத்தல்) அரிது-அருமை—எ-று. (கருத்து.) ஒருவன் பிறருதவிவேண்டாது செய்தவுதவிக்கு மண்ணுல

கச்சையும் விண்ணுலகத்தையுந் தந்தாலும் ஒத்தலரிது - என்பதாம். * திருப்பாரங்களுக்கெல்லாம் - காரண்மிருக்கையால் காணமில்லா தறிவுபகாரத்திற்கு அவைபோதாவாயின. (க)

காலத்தி னுற்செய்த நன்றி சிறிதெனினு
மூலத்தின் மாணப் பெரிது.

இ-ள். காலத்தினால் - ஒருவனுக்கு முற்காலத்தவளவிலே—செய்த - ஒருவன்செய்த—நன்றி - உபகாரமானது—சிறிதெனினும் - தன் னோக்கத் - சிறிதாயிருந்தாயினும் — (அக்காலத்தைநோக்க) மூல த்தின் - நிலவுலகத்தினும்—மாணப்பெரிது - மிகப்பெரிதாயிருக்கும் —எ-று. (கருத்து.) ஒருவன்காலத்திற்செய்தவுதவி சிறிதாயினும் அது உலகினும்பெரிது - என்பதாம். * அக்காலத்தை நோக்க வேண்டுமேய ல்லாமல் பொருட்சிறுமை நோக்கலாகாதென்பதாம் காலத்தினாலென் பது வேற்றுமைமயக்கம். (உ)

பயன்மூக்கார் செய்த வுதவி நயன்நோக்கி
னன்மை கடலிற் பெரிது.

இ-ள். பயன் (தாம்செய்யும் உதவியைப்பெறுவோராலே தமக்கு ப்பின்வரும்) பயனை—நோக்கார் - ஆராய்தலிலராய்—செய்த - செய்த— உதவி - உதவியாகிய—நயன். - நயத்தை—நோக்கின் - ஆராயின்—நன் மை - அதுநன்மையானது—கடலின் - கடலினும்—பெரிது - பெரிது —எ-று. (கருத்து.) பின்வரும்பயனை யெண்ணுமல் செய்தவுதவினன் மைகடலினுமபெரிது - என்பதாம். * [இவை மூன்றுபாட்டாலும் மு றையேசெய்யாமற்செய்ததும், ஊடத்து வேளையிற்செய்ததும் பிரயோ சனத்தை ஆராயாமற்செய்ததும். அளவில்லாதவையாகுதல் சொல்ல ப்பட்டது.] (ங)

நினைத்துனை நன்றி செயினு மனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார்.

இ-ள். நினைத்துனை நன்றி (தமக்குச்) சிறியளவுதாகியபடபகார த் தை— செயினும் (ஒருவன்) செயதாலுமிதுவர்—அதனை - அவ்வளவுதாக கினையாமல்- பினைத்துணையாபனையளவுதாக—கொள்வர் நினைப்பார்—ப யன்- அந்நினைப்பின்பயனை--தெரிவார் அறிபவர்—எ-று.(கருத்து.) நினை பினையென்பன - சிறுமைபெறுதலைமகளுக்குந்தோட்டு ம் அளவைகள், அந்நினைப்பின்பயனுவது அப்படிநினைப்போற்குலவரு வும்பிரயோசனம். (ச)

உதவி வரைத்தன் றுதவி யுதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

இ-ள். உதவி- எதிர்செய்யும், உதவியானது—உதவிவனைத்தன்று (காலமுங்பொருளுங் காலமுமாகிய மூவகையாலு முள்ளஞ் செய்த) உதவியளவினதன்று— உதவிசெய்யப்பட்டார் - அவ்வுதவிசெய்யப்பெற்றுக்கொண்டவரது— சால்பின்வனைத்து - தகுதியளவினதாம்—எ-று. (கருத்து.) உதவிக்களவில்லை உதவிசெய்யப்பெற்றுக்கொண்டவர்தஞ் சிறியளவே யளவாம் - என்பதாம். * சால்பு எவ்வளவு பெரிதாயுள்ளதோ உதவியும் அவ்வளவு பெரிதாமென்றற்குச் சால்பினைத்தென்றார். [இவ்வுபகாரஞ்செய்தாலும் செய்யாமற்செய்வதே முதலான மூன்றுமல்லாத உதவியும் அறிவிலார்க்குச் செய்தவிடத்துப் பெரிதாமென்பதும் சொல்லப்பட்டது.] (நி)

மாசற்றார் கேண்மை மறவற்க மற்றவர்
ஈரம் துறந்தார் தொடர்பு.

இ-ள். ஈரம்பற்றாள்- தூக்கங்காலத்தில்—துப்பாயார்-(தனக்கு) உதவியானவரது—மாசு அதிசயகுற்றம்—மறவற்க- விடாதிருக்கக்கடவன்—மாசற்றார் (அறிவொழுக்கங்களிற்) குற்றமற்றவரது—கேண்மை - உறவாந்தன்மையை மறவற்க - மறவாதிருக்கக்கடவன்—எ-று. (கருத்து.) குற்றமற்றவர் சிநேகத்தை மறவாதிருக்கக்கடவன். தூங்காலத்துதவியாளனவர் சிநேகத்தைவிடாதிருக்கக்கடவனென்பதாம். * இம்மைக்குஉறுதிசொல்லவந்தவர் மறுமைக்குமுறுதிஉடன்சொல்லினர். (சு)

எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கன்
மிழுமந் துடைத்தவர் நட்பு.

இ-ள். தங்கண்- நம்மிடத்துவுண்டாகிய—விழுமம்- துன்பத்தை—துடைத்தவர்- நீக்கினவரது—நட்பு-நட்பினை—எழுமை- (விரைப்பயன் றருவது) யெழுமையினுடைய —எழுபிறப்பும் - (நம்மெழுவகைப் பிறப்பிலும் — உள்ளுவர் -நல்கினோர்) நினைப்பர்—எ-று. (கருத்து.) துன்பத்தைநீக்கினவர்சிநேகத்தை யெழுபிறப்பினுநினைப்பர் பெரியோர் - என்பதாம். * விரைவுதீர்த்தன்றுதுடைத்தலென்றார். எழுமையெழுபிறப்பு பென்றதற்குஎழுவகைப்பிறப்பினுமாம். [இவ்விரண்டு பாட்டாலும் நன்றிசெய்தலவது நட்பைவிடலாகாதென்பது சொல்லப்பட்டது.] (எ)

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

இ-ள். நன்றி- (ஒருவன்முன்செய்த) நன்மையை—மறப்பது-மறந்துவிடுவது—நன்றன்று- (ஒருவனுக்கு) அறனல்ல—நன்றல்லது-(அவன்செய்த) தீமையை—அன்றே - செய்ததொழிதே—மறப்பது- மறந்துவிடுவது —நன்று-அறமாம்—எ-று. (கருத்து.) பிறர்செய்தநன்றியைமறப்பது நன்மையல்ல, தீமையைமறப்பதுநன்மை - என்பதாம். * இதனால்

கண்ணையும் தீனையும் ஒருவனுலே செய்யப்பட்டவிடத்து அவ்விரண்டி லேயுறப்படுதலும் மறவாதலும் வருத்தஞ்சொல்லியவாறு. (அ)

கொன்றன்ன வின்ற தொழிலு மவர்செய்த
கொன்றாங்கே றுள்ளா ரெதிர்.

இ-ள். (தமக்குமுன்னே) ஒருவர் கொடியதொழில் செய்தவர் கொன்றதன்ன (பின்) கொன்றற்றொழிலை—இன்னது - வெளுக்கப்படாத மனைகளை—செயிறுபட்டு செயதாகாதிருப்—அவர்செய்த - அவர்செய்த—ஒன்னாதாரென்று - அக்காலை யிலையாகன்றபின்—உள்ள - நினைத்தாங்கே தும் (அதைவையெல்லாம்) இங்கே யாம்—எ-று. (கருத்து.) கடுமையாகச்செய்தவர்கொடுமைபோலுந் துன்மை செய்யுந்து கன்னமையாகன்ற நினைத்தாலுமை யெல்லாங்கெடும் - என் றபடி. * நினையளவுபினையளவாகத் தெள்ளப்படுதலிலே அவ்வினை என்றுமே அனைகளையெல்லாம் கெடுக்குமென்பதாம் [இதனால் கன்றலல் லனைத அன்றேறமறக்குர் விதம்சொல்லப்பட்டது] (கூ)

எந்தன்றி தொன்றற்கு முய்வுண்டோ முய்வில்லை
செய்தன்றி தொன்று மீட்கு.

இ-ள். எந்தன்றி-எந்தவகைகளை—(பெரியவரங்களையென்றபடி.) கொன் றுர்க்கும் - கெடுத்தவர்க்கும்—உய்வு - பாவத்தினிக்கும்வழி—உண்டோ ம் - உண்டாகும் — செய்தன்றி - (ஒருவன்) செய்த உபகாரத்தை— தொன்றமைகற்கு-கெடுத்தமனிதனுக்கு—உய்வு - அப்பாவத்தினீக்கும்வ ழி—இல்லை - இல்லை—எ-று. (கருத்து.) எவ்வளைத்தருமங்களையழித்தவ ர்களுக்கு மீடேறும்வழியுண்டாம் - செய்தநன்றியைக் கெடுத்தவர்களுக் கீடேறும் வழியில்லை-என்பதாம். * பெரிய அறங்களைச் சிதைத்தலைவது மகளிர் கருவையழிக்கை முதலாகிய பாதகங்களைச்செய்தல். [இதனுலே செய்தநன்றியைக்கெடுத்தலின் கொடுமைசொல்லப்பட்டது.] (டு)

யெ-ஆம்-அதி-நடுவுநிலைமை.

அஃதாவது - பகைவர் தீயலோர் கட்பினர் இம்மூவகையோரிடத்தும் அறத்தின்வழுவாமல் ஒப்புரவிற்குரிமையாதல். இதனுன் நன்றி செய்தவரிடத்து அந்நன்றியை நினைத்தவிடத்தே கெடுமன்றே அவ்விடத்துங் கெடலா காதென்றற்குச் செய்ந்நன்றியறிதலின் பின்னைவைக்கப்பட்டது.

தகுதியென வொன்று நன்றே படுதியாற்
றப்பட் டொழுகப் பெறின்.

இ-ள். தகுதியெனவொன்றே - நடுவுநிலைமையென்று சொல்லப்ப டும் ஒருதருமமே—நன்று நன்றுகும்—பகுதியால் - பகைவர் தீயலோர்

(நட்பினொன்னும்) பிரிவுதோறும்—பாற்பட்டு- (தன்) முறைமையிலி டாது—ஒழுகப்பெறின் - நடக்கப்பெறின்—எ-று. (கருத்து.) நடுவுநி மையென்று சொல்லும் அறமேயல்லதாம் - என்பதாம். * எகாரம் ஓ அது என்பதனைநெகூட்டப்பட்டது பெறினென்பது அவ்வொழுக்கத்தினை ருமை தோன்றநின்றது. [இதனால் நடுவுநிலைமையது சிறப்புச் சொ லப்பட்டது.] (க)

செப்பமுடையவ னுக்கஞ் சிதைவின்றி
யெச்சத்திற் கேமாப் புடைத்து'

இ-ள். செப்பமுடையவன்- நடுவுநிலைமையையுடையவனது—ஆக்க ம் - செல்வமானது—சிதைவின்றி(பிறர்செல்வம்போல்) அழிதலின்றி எச்சத்திற் (கும்) அவன்சந்ததியார்க்கும் — ஏமாப்பு - உறுதியாதலை உடைத்து-உடையதாம்—எ-று. (கருத்து.) நடுவுநிலைமையுடையவன்செ ல்வமானது அவன்சந்ததிக்குறுதியுடைத்து - என்பதாம். * விகாரத்தி லேதென்க்கு நின்று வருவிக்கப்பட்ட வெச்சவும்மையால் சாமளவும் அவனுக்கும் உறுதியாதல்பெறப்படும் அறத்தோடுவருதலால் அப்ப டிப்பட்டதாயிற்று. (உ)

நன்றேதரினு நடுவிகந்தா மாக்கந்தை
யன்றே யொழிய விடல்.

இ-ள். நன்றேதரினும்-(தீக்கன்றி) நன்மையேதரினும்—நடுவிகந்த நடுவுநிலைநீங்கலால்—ஆம்-உண்டாகின்ற, ஆக்கத்தை - செல்வத்தை— அன்றே - அப்போதே—ஒழிய - நீங்க—விடல்-விடத்தக்கவள்—எ-று. (கருத்து.) நடுவுநிலைமையில்லாதுவருஞ் செல்வநன்மையைத்தரினு ம் பொழுதே விடக்கடவள் - என்பதாம். * நன்மைதராமையால் நன்றே தரினுமென்றார் [இவை யிரண்டுபாட்டாலும் முறையே நடுவுநிலைமை யால் வந்தசெல்வம - நன்மையைத்தருதலும் - மற்றைச்செல்வம் - தீமை யைத்தருதலும் - சொல்லப்பட்டன. (ங)

தக்கார் தகவில ரென்பதவரவ
ரெச்சத்தாற் காணப் படும்.

இ-ள். தக்கார் -(இவர்) நடுவுநிலைமையையுடையவர்—தகவிலர்-(இ வர்) நடுவுநிலைமையையில்லாதவர்—என்பது - என்னும் விசேஷம்—அ வரவர் - அவரவருடைய—எச்சத்தால் - நல்லபுதல்வரது—இருப்பினு ம்-இல்லாமையாலும்—காணப்படும்அறியப்படும்—எ-று. (கருத்து) நடுவுநிலைமையையுடையவர், நடுவுநிலைமையில்லாதவர் என்பதைச்சந்த தியாம்காணலாம் - என்பதாம். * நடுவுநிலைமையை யுடையவருக்குச்சந்த தி உண்டாதலும், இல்லாதவர்க்கு அது இல்லாமற்போதலும், நிச்சயமா தலின் அவ்விருவகையோர்களையும் அறிதற்கு அவை. அடையாளங்க ளாயின. [இதனால் நடுவுநிலையோனையும் - அல்லாதோனையும்—அறியு மாறுசொல்லப்பட்டது. (ச

கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்து
கோடாமை சான்றோர்க் கணி.

இ-ள். கேடும்-(நீவினையினுலே) கேடும், பெருக்கமும் - (நல்வி னையிறுலே) பெருக்கமும், இல்லல்ல - (யாவருக்கும்) இல்லாதனவைய ல, [முன்னமே அமைந்து கிடந்தன வென்றபடி-] (அவ்வழியை) அ ந்து, நெஞ்சத்து - மனதிலே, கோடாமை - (அனைகாரணமாகச்) ய்தலில்லாமையே, சான்றோர்க்கு - (அறிவால்) நிறைந்தோர்க்கு, அ ி - அழகாம்—எ-று. (கருத்து.) நடுவுநிலைமையே ய தாம் என்பதாம். * அனைகாரணமாகச் சாய்தலாவது கேடும் பெரு கமும் பழவினையினுலே வந்துகொண்டிருக்க இப்போதைமுயற்சியால் நுமனைபாக நினைத்துக் கேடுவராமையைக் குறித்தும் பெருக்கம்வருத லைக் குறித்தும் ஒருபக்கத்திலே சாய்தலாம் அவற்றுக்குக்காரணம் பழவி னையே இச்சாய்தலல்ல என உண்மையுணர்ந்து நடுவுநிலையராயிருக்கை அ ஙுடைமைக்கு அழகுசெய்தலாலே சான்றோர்க் கணியென்றார். (நு)

கெடுவல் யானென்ப தறிததன் னெஞ்ச
நடுவொரீஇ யல்ல செயின்.

இ-ள். (ஒருவன்) தன்னெஞ்சம்- தனதுமனம், நடுவு - நடுவுநிலை மையினிருந்து, ஒரீஇ - நீங்கி, அல்ல - பட்சபாதங்களை, செயின் - செ யநினைக்குமாயின், (அந்நினைவை) யான்-நான், கெடுவல்- கெடக்கட வன், என்பது-என்றுணருமுற்பாதமாக, அறிக - அறியக்கடவன்— - று. (கருத்து.) நடுவுநிலைமை நீங்குவானுயின் கெடக்கடவனென் றியக்கடவன்-என்பதாம். * உற்பாதம்-பின்வரும் நன்மை தீமைகளை முன்னறிவிக்குங் குறி. நினைத்தலும் - செய்தலோ டொக்குமாதலின் செயினென்றார். (சு)

கெடுவாக வையா துலக நடுவாக
நன்றிக்கட் டங்கியான் றாழ்வு.

இ-ள். உலகம் - உயர்ந்தோர், நடுவாக - நடுவாக (நின்று) நன்றி ன்ன - அறத்தின்கண்ணே, தங்கியான் - தங்கினவனது, தாழ்வு-வறு மையை, கெடுவாக - வறுமையாக, வையாது- வையார் (நினையாரொன் பர்)—எ-று. (கருத்து.) நடுவுநிலைமையாகத் தருமத்தினின்றவறுமை யைப் பெரியோர் தாழ்வாக நினையார்- என்பதாம். * கெடுதலென்பது குறைந்துகெட்டு வந்தது. செல்வமென்று கொள்ளுவா ரென்பதாம். [இ வை மூன்றுபாட்டாலும் முறையே கேடும் பெருக்கமும் பட்சபாதத் தில் வருவனவல்ல வென்பதும், இதனுலே கேடின்மையாமென்பதும், இ செய்யாதவனது தாழ்வுமேடாகாதென்பதும், சொல்லப்பட்டன.] ()

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல மைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி.

இ-ள். சமன்செய்து - (முன்னேதன்னைச்) சமனாகச்செய்து, சீர்தூக்கும் - (பின்னேதன்னிடத்து வைக்கப்பட்ட பாரத்தை) அளவுசெய்வதாகிய, கோல்போல் - துலாம்போல், அமைந்து - (இலக்கணங்களாலே) நிறைந்து, ஒருபால் - ஒருபக்கத்திலே, கோடாமை - சாயாமையானது, சான்றோர்க்கு - (அறிவால்) நிறைந்தோருக்கு, அணி - அழகும்—ன-று. (கருத்து.) ஒருவர்பக்கமுஞ்ச சாயாமையே பெரியோர்க்கு நலங்காம் - என்பதாம். * கோலுக்குச் சொல்லப்பட்ட சமன்செய்தலும் சீர்தூக்கலும் சான்றோருக்கும் சான்றோருக்குச் சொல்லப்பட்ட அமைதலும் ஒருபாற் கோடாமையும் கோலுக்கும் கூட்டுக. சான்றோர் சீர்தூக்கலாவது - வாதி பிரதிவாதிகளாலே அறிவிக்கப்பட்டவற்றை முறையாலுள்ளபடி யறிதல், ஒருபாற் கோடாமையாவது - அவ்வுள்ளவற்றை மறைக்காமல் பகைவர் - அயலோர் - நட்பினர் - இம்மூவனையோருக்கும், ஒப்பச்சொல்லுதல். (அ)

சொற்கோட்ட மில்லது செப்பமொருதலையா
வுட்கோட்ட மின்மை பெறின்.

இ-ள். செப்பம் - நடுவுநிலைமையாவது, சொல் - சொல்லினிடத்தே, கோட்ட மில்லது - கோணுதல் இல்லாததாகும், (அது அறமாவது) உள் - மனத்தினிடத்தே, கோட்ட மின்மை - கோணுதலில்லாமையை, ஒருதலையாஉறுதியாக, பெறின் - பெற்றால்—எ-று. (கருத்து.) சொல்லினிடத்தே கோணுதல் இல்லாமையே நடுவுநிலைமையாம் - என்பதாம். * [சபையானைநோக்கி இவை யிரண்டுபாட்டாலும் வாயினாலே தருமத்தின்படியே சொல்லினும் மனது ஒருபக்கத்திலே சாய்த்திருக்குமாயின் அச்சொல் நடுவுநிலைமை யாகாதென்பது சொல்லப்பட்டது.](ஈ)

வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தம்போற் செயின்.

இ-ள். பிறவும் - பிறர்பொருள்களையும், தம்போல் - தம்பொருள்களைப்போல், பேணி - காத்து, செயின்-செய்தால், (அச்செய்கையானது) வாணிகஞ்செய்வார்க்கு - வியாபாரஞ் செய்பவருக்கு, வாணிகம் நல்லவியாபாரமாம்—எ-று. (கருத்து.) பிறர்பொருளையுந் தமது பொருளைப்போலக் காத்து வியாபாரஞ்செய்யிலது நல்ல வியாபாரமாம் - என்பதாம். * பிறவுந் தம்போற்செய்தலாவது கொள்வது அதிகமும், கொடுப்பது குறைவும், ஆகாமல் ஒப்பநாடிச்செய்தல். [வணிகனைநோக்கி இதனால் பிறர்பொருள்களையும் தம்பொருள்களைப்போற்செய்யுமநுவுநிலைமையை யுடையவர்க்கு வாணிகம்நன்றுமென்பது சொல்லப்பட்டது]

யஉ-ஆம்- அதி- அடக்கமுடைமை.

அஃதாவது - காயமும், வாக்கும், மனமும், தீயவழியிலே செல்லாமல் அடக்குகலுடையனை யிருக்கலாம் இது - பிறர்குற்றம்போலத் தன்குற்றம் காணும் கடிவுதிலனை யுடையவனுக்கு உரித்தாதலால் அக்கடிவு திலைமையின் பின்வைக்கப்பட்டது.

அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
யாரிரு ளுய்த்து விடும்.

இ-ள். (ஒருவனை) அடக்கம்-அடக்கமாகிய அறமானது—அமரரு ள் - தேவருலகத்தில்—உய்க்கும் - கொண்டுபோய்விடும்—அடங்காமை-அடங்காமையாகிய பாவமானது—ஆரிருள் - பொறுத்தற்கரிய நரகத்தி ல்—உய்த்துவிடும் - செலுத்திவிடும்—எ-று. (கருத்து.) அடக்கமான து ஒருவனைத் தேவருலகத்தும் செலுத்தும் அடங்காமையானது நரகத்தி ற்செலுத்தும்-என்பதாம். * இருளென்பது நரகவகையிலொன்று. (க)

காக்க பொருளா வடக்கத்தை யாக்க
மதனிறூஉங் கில்லை யுயிர்க்கு.

இ-ள். அடக்கத்தை - அடக்கத்தை, பொருளா - (உறுதிப்)பொரு ளாக, காக்க- காக்கக்கடவன், உயிர்க்கு-மக்களுயிர்க்கு, அதனிறூஉ-அ தனின்மேற்பட்ட, ஆக்கம்-செல்வமானது, இல்லை-இல்லை(ஆதலால்) —எ-று. (கருத்து.) அடக்கத்தைக் காக்கக்கடவன்-மக்களுயிர்க்கனைவி டசெல்வமில்லை- என்பதாம். * உயிர் இங்கே மானிதருயிரைக் காட்டிநி ன்றது, அநிந்து அடக்கிப்பயன்கொள்வது அதுவேயாகையால். (உ)

செறிவறிந்து சீர்மை பயக்கு மறிவறிந்
தாற்றி னடங்கப் பெறின்.

இ-ள். அறிவறிந்து (அடங்குதலே நமக்கு) அறிவாவதென்று அ றிந்து, ஆற்றின்-நல்வழியால், (ஒருவன்) அடங்கப்பெறின்-அடங்கப்பெ ற்றால், செறிவு-அவ்வடக்கமானது, அறிந்து- (நல்லோரால்) அறியப்ப ட்டு, சீர்மை- மேம்பாட்டை—பயக்கும் - (அவனுக்குத்) தரும்—எ-று. (கருத்து.) ஒருவனடங்கி நடப்பானெனில் அவ்வடக்க மேன்மையைத்த ரும்-என்பதாம். * இல்வாழ்வானுக்கு அடங்கும்வழியாவது - காயமு ம்-வாக்கும் - மனமும்-அவன்செப்படுதல். (ங)

நிலையிற் றிரியா தடங்கியான் றோற்ற
மலையினு மாணப் பெரிது.

இ-ள். நிலையின்- (இல்வாழ்க்கையாகியதன்) வழியில், திரியாதே வேறுபடாது, (நின்று) அடங்கியான் - அடங்கினவனது, தோற்றம்-உ யர்ச்சியானது, மலையினும் - மலையுயர்ச்சியினும், மாணப்பெரிது - மிகப்

பெரிதாம்—எ-று. (கருத்து.) அடங்கியடப்பவை யடக்கமில்லையெப்பார்க்கினுமிகப்பெரிது-என்பதாம். * பேரறிவடாதுநின்று அ-ற்றுகல்-ஐம்பொறிகளாலும், ஐம்புலன்களையும் அநுபவித்துக்கொண்டிருந்தே அடங்குதல். மதி அதனுயர்ச்சியை உணர்த்தலால் ஆகுபெயர். (ம)

எல்லார்க்கு நன்றும் பணிதல வருள்ளுந்
செல்வர்க்கே செல்வந் தகைத்து.

இ-ள். பணிதல் - (பெருமைப்பாடில்லா) தடங்குதல், எல்லார்க்கும்-யாவருக்கும், நன்றும் - ஒப்ப நன்றுகும்— (ஆயினும்) அவருள்ளும் - அவருள்ளும், செல்வர்க்கே - செல்வர்க்கே, செல்வந்தகைத்து-வேறொரு செல்வமாய்த்தோன்றுஞ் சிறப்பினையுடையதாம்—எ-று. (கருத்து.) அடக்கம் யாவர்க்கு மல்லதாகும் அது செல்வர்க்கு வேறுசெல்வம்போலிருக்கும் - என்பதாம். * பெருமைப்பாட்டையுண்டாக்கும்-கல்வியும் - குடிப்பிறப்பும் - உடையவர்- அதுவில்லாமல் அவைகளாலே அடங்கியவிடத்து- அவ்வடக்கம் சிறந்து தோன்றுதலின் செல்வர்க்கே செல்வந்தகைத்தென்றார். செல்வந்தகைத் தென்றது - விகாரப்பட்டுநின்றது.[இவையைந்துபாட்டாலும் பொதுவாகையால் அடக்கத்தினது சிறப்புச் சொல்லப்பட்டது.] (ஆ)

ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
னெழுமையு மேமாப் புடைத்து.

இ-ள். (ஒருவன்) ஒருமையுள்-ஒருபிறப்பினிகண்ணே, ஆமைபோல்-ஆமையைப்போல், ஐந்து - ஐந்தை, அடக்கலாற்றின் - அடக்கவல்லவனாகில், (அவ்வல்லமை அவனுக்கு) எழுமையும் - எழுபிறப்பின் கண்ணும். ஏமாப்புடைத்து - காவலாதலையுடையதாம்—எ-று. (கருத்து:) ஒருவனைம்பொறியடக்க வல்லவனாகில் எழுபிறப்பிற்கு முறுதியுடைத்தாம்-என்பதாம். * ஆமை அடக்குமைந்து-கால்கள்நான்கும் - தலையொன்றும், ஆகியவுறுப்புகள் - அவ்வடக்கம் - தன்பம்சோராதிருத்தற்கு-ஒருவன் அடக்கவேண்டுமைந்து-மெய்-வாய்-கண்-மூக்குச் செவி யென்னும் பொறிகள். இவ்வடக்கம்- பாவம்சோராதிருத்தற்கு ஒருபிறப்பிலே செய்யப்பட்டவினைப்பயன் - எழுபிறப்புந் தொடருமென்பது - இதனாலறிக. [இதனாலே காயத்தினடக்கம் சொல்லப்பட்டது.] (சு)

யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாபடர் சொல்லிழுக்குப் பட்டு.

இ-ள். யா-(காக்கவேண்டுமவை) யாவையும், காவாராயினும்-காக்கமாட்டாராயினும், நா-நாவொன்றையும், காக்க - காக்கக்கடவர், காவாக்கால் - (அதனைக்) காக்கமாட்டாராயின், சொல்லிழுக்குப்பட்டு- சொற்குற்றத்திலே அகப்பட்டு, சோகாப்பர்-(தாமே) தன்பப்படுவார்—எ-று.

(கருத்து.) காவலொன்றேகாக்கக்கடவர் காவாவிட்டாற்சொற்குற்றம்பொருந்தித் துன்பப்படுவர்- என்பதாம். * யாவெள்ளது - எவையெனினும் பொருளைக்குறிக்கிற அஃறிணைப்பன்மை விரவுப்பெயர் - சொற்குற்றம் - சொல்லிடத்தேதோன்றுங்குற்றம் - சோகாப்பதென்பது - ஒருசொல்.()

ஒன்றுணர்ந் தீச்சொற் பொருட்பய னுண்டாயி
னன்றுகா தாகி விடும்.

இ-ள். தீச்சொல்-தீய்சொற்களது, பொருட்பயன் - பொருள்களாலே (பிறருக்குவரும்) பயனானது, ஒன்றுணர்ந்-ஒன்றுமுழுதுணர்ந்து, உண்டாயின் (ஒருவனிடத்தே) உண்டாயதாயின், நன்று - (அவனுக்குப் பிறவற்றங்களாலுண்டாகிய) நன்மையானது, ஆகாதாகிவிடும் - தீதாய்விடும்—எ-று. (கருத்து.) கொடுஞ்சொல்லொன்றுண்டாயின் அவனுக்குநன்மையுண்டாகாது - என்பதாம். * தீயசொல் - பொய்குறளை - கடுஞ்சொல் - ஆம்-பயன் துன்பம். (அ)

தீயிலுந் சுட்டபுண் ணுள்ளாறு மாறுதே
நாவினுற் சுட்டவடு.

இ-ள். (ஒருவனையொருவன்) தீயினால் - நெருப்பால், சுட்ட-சுட்ட, புண்- புண்ணானது, உடம்பினிடத்தேயிருந்தாலும்) உள்-மனத்தினிடத்தே, ஆறும் - (அப்பொதே) ஆறும், (அப்படியல்லாமல்) நாவினால் (தீயசொற்களையுடைய) நாவினுலே, சுட்ட-சுட்ட, வடு - வடுவானது, (அதனிடத்தும் எப்போதும்) ஆறாது-ஆறாது—எ-று. (கருத்து.) தீயாற சுட்டபுண்ணாறும் - நாவாற்சுட்டபுண்ணாறாது-என்பதாம். * ஆறிப்போதலால்தீயினாற்சுட்டதனைப் புண்ணென்றும், ஆராமையால் நாவினாலே சுட்டதனைவடுவென்றும், சொல்லினார், தீயாகிய உபமானத்தினும் தீயசொல்லாகிய உபமேயத்திலே ஆறுணமையை அதிகமாகச் சொல்லுதலாலேவேற்றுமையணியாகும் [இவைமூன்றுபாட்டாலும் வாக்கினடக்கம்சொல்லப்பட்டது.] (கூ)

கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி
யறம்பார்க்கு மாற்றி னுணைந்து.

இ-ள். கதம்-கோபத்தை, காத்து- (மனதிலேதோன்றுமல்) காத்து, கற்று - கல்வியுடையனாகி, அடங்கல்- அடங்குதலில், ஆற்றுவான்-வல்லவனாயிருப்பவனது, செவ்வி-சமயத்தை, அறம் - அறக்கடவுளானவன், பார்க்கும் - பாராநிற்பான், ஆற்றில் - (அவனைச்சேரும்) வழியிலே நுணைந்து - நுணைந்து—எ-று. (கருத்து.) கற்றடங்க வல்லவனாயிருப்பவன் சமயத்தைத்தருமக்கடவுள் பார்க்கும்- என்பதாம். * அடங்குதல் மனம்புறத்திலேபரவாமல்அறத்திலேநிற்றல்-செவ்வி- நன்குறையசொல்லுதற்கேற்றகாலம்இப்படிப்பட்டவனை அறக்கடவுள்தானேசென்றடைவானென்பதாம் [இதனுலேமனவடக்கம் சொல்லப்பட்டது.] (ம)

யசஆம்-அதி - ஒழுக்கமுடைமை.

அஃதாவது - தங்கள்தங்கள் வருணசிராம் களுக்குச் சொல்லப்பட்ட ஆசாரத்தைபுடையவனு யிருக்கையாம், இது காய முதலானவையட க்கினவர்க்கல்லது முடியாதாகலின் அதன்பின் வைக்கப்பட்டது.

ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படும்.

இ-ள். ஒழுக்கம் - ஆசாரமானது, விழுப்பம்-சிறப்பை, தரலான்(எ ல்லாருக்கும்) கொடுத்தலால், ஒழுக்கம்- அவ்வாசாரமானது, உயிரினு ம்-உயிரைப்பார்க்கிலும், ஓம்பப்படும்-காப்பாற்றப்படும்—எ-று. (கரு த்து.) ஆசாரமானது. சிறப்பைத்தரலாலவ்வாசாரமுயிரினுமேலானது என்பதாம். * உயர்ந்தோர்க்கும், இழிந்தோர்க்கும், சமமாகச் சிறப்பி னைத்தருதலால் - விழுப்பந்தரலானெனப் பொதுப்படச்சொல்லினர், சு ட்டுப்பெயர் வருவிக்கப்பட்டது உயிர் -எல்லாப்பொருளினுஞ்சிறந்ததா யினும் - ஒழுக்கம்போற் சிறப்பைத்தராதையால் உயிரினுமோம்பப்ப டுமென்றார். (க)

பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்
தேரினு மஃதே துணை.

இ-ள். ஒழுக்கம்-ஆசாரத்தை, ஓம்பி- ஒன்றாலும் அழிவுபடாமற் பேணி, பரிந்து - வருந்தியும், காக்க-காக்கக்கடவன், தெரிந்து- (பலவற ற்காலையும்) ஆராய்ந்து (இவற்றுள் இருமைக்குந் துணையாவது எதுவெ ன்று) ஓம்பி - (மனத்தை) அடக்கி—தேரினும் - அறிந்தாலும்—துணை- துணையாய்முடிவது, அஃதே-அவ்வாசாரமே (ஆதலால்) —எ--று.(கரு த்து.) ஆசாரத்தைக் காக்கக்கடவன்வ்வாசாரமே- துணை-என்பதாம் * பரிந்து மென்னும்மை - விகாரத்தால்தொக்கது.[இவைஇரண்டுபாட்டா லும்ஒழுக்கத்தினது சிறப்புச்சொல்லப்பட்டது.] (உ)

ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்.

இ-ள். (எல்லார்க்கும்) ஒழுக்கமுடைமை-(தத்தம்வருணத்துக்குவ ற்ற) ஆசாரமுடைமையானது, குடிமை -குலமுடைமையாம், இழுக்கம்- (அவ்வாசாரத்தினின்றும்) நழுவுதலானது, இழிந்தபிறப்பாய்விடும்- தா ழ்ந்தவருணமாய் விடும்—எ-று. (கருத்து.) ஆசாரமேகுலமாம், அவ்வா சாரமில்லாமையே குலஹீனமாம் - என்பதாம்.* ஒழுக்கத்தினின்றும் நழு வுதல் இழிந்தபிறப்பாய்விடுமெனவே ஒழுக்கத்தினுயர்தல் உயர்ந்தபி றப்பாய்விடுமென்பதும் கொள்ளப்படும், குலம் - குடிச்சிறப்பு. (ங)

மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக்கெடும்.

இ-ள். ஒத்து - (கற்ற) வேதத்தை, மறப்பினும் - மறந்தா னெயினும், கொளலாகும் - (வருணக்கெடாமையினாலே பின்னும்) ஓதிக்கொள்ளலாம், பார்ப்பான் - பிராமணனது, பிறப்பு - உயர்ந்த வருணமானது, ஒழுகக்குன்ற - ஆசாரங்குறைய, கெடும் - அழியும் — எ-று. (கருத்து.) பார்ப்பான் வேதத்தை மறந்தாற் கற்றுக்கொள்ளலாம், ஆசாரங்குறைந்தா லவன் குலங்கெடும் - என்பதாம். * மறந்தவிடத்தே இழிகுலத்தானும், ஓதலால் மறக்கலாகாதென்னுங் கருத்தால் மறப்பினுமென்றார். சிறப்பையுடைய முதல்வருணத்துக்குச் சொல்லுதலினாலே இது மற்றைவருணங்களுக்கும் கொள்ளப்படும். (சு)

அழுக்கா றுடையான்க ணாக்கம்போன் றில்லை
யொழுக்க மிலான்க ணுயர்வு.

இ-ள். அழுக்காறுடையான்கண்-பொறுமை யுடையவனிடத்தே, ஆக்கம்போன்று-செல்வமானது போன்று, ஒழுக்கமில்லான்கண்-ஆசாரமில்லாதவனிடத்தே, உயர்வு - உயர்சியானது, இல்லை - இல்லை — எ-று. (கருத்து.) பொறுமையுள்ளவனிடத்துச் செல்வமில்லாமைபோல ஆசாரமில்லாதவனிடத்து மேன்மையில்லை - என்பதாம். * கொடுப்ப தழுக்கறுப்பானென்னுங் குறளிற் சொன்னபடியே இவ்வுபமானினால் ஒழுக்கமில்லாதவனது சுற்றத்தாருக்கும் உயர்ச்சி யில்லையென்பது கொள்ளப்படும், உயர்வு உயர்குலமாதல். (கூ)

ஒழுக்கத்தி னெல்கா ருரவோரிழுக்கத்தி
னேதம் படுபாக் கறிந்து.

இ-ள். உரவோர் - மனவலிமையுடையோர், (செய்தற்கருமைநோக்கி) ஒழுக்கத்தின் - ஆசாரத்தில், ஒல்கார் - சுருங்கார், இழுக்கத்தின் - அகற்றவறுதலால், ஏதம் - (இழிகுலமாதலாகிய) குற்றம், படுபாக்கு - உண்டாதலை, அறிந்து-தெரிந்து—எ-று. (கருத்து.) ஆசார மில்லாமையால் வருங்குற்றத்தையறிந்து பெரியோர் அவ்வாசாரத்திற் குறையார் - என்பதாம். * ஒழுக்கத்தின் சுருக்கம் அகலவுடையார்மே லேற்றப்பட்டது, கொண்டவிரதம் விடாமைபற்றி உரவோரென்றார். (சு)

ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தி
னெய்துவ ரெய்தாப் பழி.

இ-ள். (எல்லாரும்) ஒழுக்கத்தின் - ஆசாரத்தினாலே, மேன்மைமேம்பாட்டை, எய்துவர் - அடைவர், இழுக்கத்தின் - (அதினின்று) தவறுதலாலே, எய்தாப்பழி - (தாம்) அடைதற்கு உரித்தல்லாதபழியை, எய்துவர் - அடைவர்—எ-று. (கருத்து) ஆசாரத்தான்மேன்மையடைவன், அவ்வாசார மில்லாமையா லிழிவடைவர்-என்பதாம். * ஒழுகாமையால் அடாதபழியைச் சொல்லியவிடத்து அதனோடும் அத்தலை

பற்றி அடுக்குமென்று உலகம் கொள்ளுமாகலின் எய்தாப்பழி எய்துவதென்றார். [இவையைந்துபாட்டாலும் ஒழுக்கமுள்ள விடத்து உண்டாகும் குணமும் இல்லாதவிடத்து உண்டாகும் குற்றமும் சொல்லப்பட்டன.] (எ)

நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க
மென்றும் இடும்பை தரும்.

இ-ள். (ஒருவனுக்கு) நல்லொழுக்கம் - நல்லவாசாரமானது, நன்றிக்கு - அறத்துக்குவித்தாகும் - காரணமாகும்; தீயொழுக்கம் - தியவாசாரமானது, என்றும் - இருமைகளிலும், இடும்பை - துன்பத்தை, தரும் - கொடுக்கும்—எ-று. (கருத்து.) ஆசாரமானது தருமத்திற்குக்காரணமாகும், தியவாசாரமானது துன்பத்தைக் கொடுக்கும் - என்பதாம். * நல்லொழுக்கம் அறத்துக்குக் காரணமா மென்றதனால் - தீயொழுக்கம்-பாவத்திறகுக் காரணமாமென்பதும், தீயொழுக்கம் - இருமைகளிலும் துன்பந்தருமென்றதனால் நல்லொழுக்கம் இருமைகளிலும் இன்பமதருமென்பதுகொள்ளப்படும். [இதனுள்ளடின்விளைவுசொல்லப்பட்டது.]

ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.

ஙஎ ஐ-ள். வழுக்கியும் - மறந்தும், தீய - தீயசொல்லுகளை, வாயாற்சலல் - வாயினற்சொல்லல், ஒழுக்கமுடையவர்க்கு - நல்லொழுக்கமுள்ளவர்க்கு, ஒல்லா - முடியாவாம்—எ-று. (கருத்து.) நல்லொழுக்கமுள்ளவர்க்குத் தியசொற்களைச்சொல்லுதல் கூடாவாம் - என்பதாம். * தீயசொல்லுகளாவன பிறருக்குத் தீங்கைத்தரும் பொய்முதலானவையும், வருணத்துக்கு உரியனவல்லாதனவையும் ஆம், நல்லசொற்களிலே பழகியதென்னும் பொருள்படுதற்குச் சொல்லென்னாது வாயாற் சொல்லென்றார். (கூ)

உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்.

ஐ-ள். உலகத்தோடு - உயர்ந்தோரோடு, ஒட்ட - பொருந்த, ஒழுகல் - நடத்தலை, கல்லார் - கற்றில்லாதவர். பல - பலநூல்களையும், கற்றும்-கற்றாராயினும், அறிவில்லாதவர்-விவேகமில்லாதவராவர்—எ-று. (கருத்து.) உலகத்தோரும் பொருந்த நடத்தலைக் கல்லாதவர்கள் பலநூலைக் கற்றுங் கல்லாதவர்களே - என்பதாம் * உயர்ந்தோரோடு பொருந்தநடத்தலாவது - அவரொப்பநடந்தாரோ அப்படிநடத்தல அறநூலிலே சொல்லப்பட்டனவைகளில் இக்காலத்துக்கு ஏற்காதனவைகளை விட்டு அதிலே சொல்லப்படாதனவைகளில் ஏற்குமனவைகளைத் தழுவிவருதலால் அனைவரும் அடங்குதற்கு உலகத் தோடொட்ட வொழுகலென்றும், கல்விக்குப்பயன் அறிவும், அறிவிக்குப்பயன் ஒழுக்கமும், ஆகலின் அவ்வொழுக்கத்தைக் கல்லாதார் பலகற்றும் அறிவிலாதாரென்றும் சொல்லினார். இவையிரண்டுபாட்டாலும், சொல்லாலும், செயலாலும், வரும். ஒழுக்கங்களெலலாம் ஒருவிதத்தினலே தொகுத்துச்சொல்லப்பட்டன. (ஐ)

யது-ஆம் - அதி - பிறனில்விழைபாமை.

ஆஃதாவது - காமமயக்கத்தினாலே பிறனதுமனையாளை விரும்பாமையாம். இது- ஒழுக்கமுடையவரிடத்தே உண்டாவதாகலின் அதன்பின் வைக்கப்பட்டது.

பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்
நறம்பொருள் கண்டார்கணில்.

இ-ள். பிறன் - பிறனுக்கு, பொருளால் - உடைமையாந் தன்மையினாலே, பெட்டு - இச்சித்து, ஒழுகும்-நடக்கின்ற, பேதைமை-அறியாமையானது, ஞாலத்து - பூமியின்கண், அறம்- அறனாலேயும், பொருள்-பொருளாலேயும், கண்டார்கண்- ஆராய்ந்தறிந்தவரிடத்தே, இல் - இல்லை—எ-று.(கருத்து.)பிறன்மனைவியை மிச்சிக்குந்தன்மைபெரியோரிடத்தில்லை - என்பதாம். * அறமும்பொருளும் அவற்றினால்களைக் காட்டலால் ஆகுபெயர்கள். இன்ப மொன்றையேநோக்கும் காமநூலுடையார் இப்பொல்லாத வொழுக்கத்தையும் சொல்லுவா ராதலின் அறம் பொருள் கண்டார்க ணில்லென்றார். எனவே இப்பேதைமையுடையரிடத்தே அறமும்பொருளும் இல்லையென்பது பெறப்பட்டது. (க)

அறன்கடை நின்றாரு மெல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையார் இல்.

இ-ள். (காமங்காரணமாக) அறன்கடை - பாவத்திலே, நின்றாருமெல்லாம்-நின்றவரெல்லாருள்ளும், பிறன்கடை - பிறனதுவாயிலிடத்தே, நின்றாரின் (அவன்மனைபாலையிச்சித்து) நின்றவர்போல், பேதைபார்-மூடர், இல்-இல்லை—எ-று. (கருத்து.) பிறன்மனைவிபை மிச்சிக்குமூடனைப்போல்பவரில்லை - என்பதாம். * பாவச்செயலிலே நின்றும்,மூடனைப்போல்பவரில்லை - என்பதாம். * பாவச்செயலிலே நின்ற பெண்பழிகடப்பவரும், பாத்தையனையும் இழிகுல மகளீனையும் அணுபவிப்பவரும்போல் அறம் பொருள்களைமாதரம் இழத்தல் அல்லாமல் பிறன்மனையாளிடத்துச் செல்வோர் அச்சத்தினாலே இன்பத்தையுமிழப்பாராதலின் பேதையாரில்லையென்றார். எனவே பின்பமுமில்லையென்பது பெறப்பட்டது. (உ)

விளிந்தாரின் வேறல்லார் மன்ற தெளிந்தாரிற்
றீமை புரிந்தொழுகு வார்.

இ-ள். மன்ற - ஐயமில்லாமல், தெளிந்தார் (தம்மைநல்லவனென்று) தெளிந்தவருடைய, இல்-மனையாளிடத்தே, தீமை - பாவஞ்செய்தலை, புரிந்த-விரும்பி, ஒழுகுவார்-நடப்பவர், (உயிருடையவராயிருந்தாலும்) விளிந்தாரின் - செத்தவரின், வேறல்லார் - வேறுகார் —எ-று.

எ

(கருத்து.) ஒருவரிடத்திற்சந்தேகமற்றவரதுமனைவியைவிரும்பி நடப்பது பழியோடிருந்து நிறைந்தவதோ - என்பதாம். * உயிரிருப்பினும் அவ்வுயிர் அறம்பொருளின்பங்களாகிய படிவர்க்கள அடையாமையால் விளிந்தாரின் வேறல்லரென்றும், அவர் அப்பாலைஞ்செய்வது மனையாளை யுடையவரது தெளிவுபற்றியாதலின் தெளிந்தாரில்லென்றும் சொல்லினர்.(இ)

எனைத்துணைய ராயினு மென்னும் நினைத்துணையுந்
தேரான் பிறனில் புகல்.

இ-ள். (காமமயக்கத்திலே) நினைத்துணையும் - நினையளவும்(நி நிகாயிலுமென்றபடி) தேரான் - (தம்பிழையை) நினையாமல், பிறனில் - பிறனுடைய மனையாளிடத்தே, புகல்-செல்லுதல், எனைத்துணையரா யினும்-எவ்வளவுபெருமை யுடையவரா யிருக்கினும், என்னும் - (ஒருவ ருக்கு)யாகாய்முடியும்—எ-று. (கருத்து.) மிகச்சிறப்புடையோர் தெளி யளவு மென்றதனால் பிறன்மனைவியை விரும்பின் அச்சிறப்பழியும்-என் பதாம். * இந்திரன்போல் எல்லாப்பெருமைகளையும் இகழ்ந்து சிறுமை யை அடைவானென்பது குறித்து எனினுமென்றார். இழிவுசெய்தலில்ல னைத் துணையனென்னும் பன்மைமேதராலென்னும் ஒருமையோடு மடை க்கிற்று. (சு)

எளிதெனவில்லிறப்பா னெய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி.

இ-ள். எளிதென (இவளைச்சேர்க) லெளிதென்றுநினைத்து,(பின் விளைவைநினையாமல்) இல்- (பிறன்) மனைவியிடத்தே, இறப்பான்- செல் வோன், விளியாது - அழியாமல், எஞ்ஞான்றும்-எக்காலமும், நிற்கு ம்-நிலைநிற்பதாகிய, பழி- (குடிப்) பழியை. எய்தும், அடைவன்-எ-று (கருத்து.) பிறன்மனைவி எளிதிற்கிடைக்கினும் விரும்பலாகாது - என் பதாம். * இல்லிறத்தல்-இல்லாளிடத்து வரம்புகடந்து செல்லுதல்.(நி)

பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண்.

இ-ள். இல் (பிறன்) மனைவியினிடத்தே, இறப்பான்கண், செல்லு வோனிடத்து, பகை பாவ மச்சப் பழியெனநான்கும்- பகையும், பாவமும், அச்சமும், குடிப்பழியும், என்னுமிந்நான்கு குற்றங்களும், இகவாவா ம் - (ஒருபோதும்) நீங்காவாம்—எ-று. (கருத்து.) பிறன் மனைவியைச் சேர்பவனிடத்திற் பகைபாவமச்சம்பழியிந்நான்கு குற்றங்களும்விட்டு நீ ங்காது-என்பதாம்.*எனவேயிருமைப்பயன்களையும்இழப்பானென்றதா யிற்று.[இவைஆறுபாட்டாலும்பிறன்மனையாளை விரும்புவோனிடத்துக் குற்றம்சொல்லப்பட்டது.] (சு)

அறனியலா ளில்வாழ்வா னென்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன்.

இ-ள். பிறனிபலாள் - பிறனுடைய வியல்பிலே (அவனுக்கு உரிமை பூண்டிற்பவளது) பெண்மை - பெண்தன்மையை, நயவாதவன் - விரும்பாதவன், அறனியலான் - அறமாகிய வியல்போடுகூடி, இல்வாழ்வானென்பான் - இல்வாழ்வானென்று சொல்லப்படுவான்—எ-று. (கருத்து.) பிறன்மனைவியைவிரும்பாதவனே இல்வாழ்வானெனப்படுவான்-என்பதாம். * இல்லறம் செய்வானெனப் படுவோன் அவனேயாவன்-என்பதாம். (எ)

பிறன்பழி நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனென்றே வான்ற வொழுக்கு.

இ-ள். பிறன்மனை - பிறனதுமனையாளை, நோக்காத-உட்கொள்ளாத, பேராண்மை-பெரிய ஆண்தன்மையானது, சான்றோர்க்கு (அறிவால்) நிறைந்தோர்க்கு, அறனென்றே - தருமமாவதென்றே, வான்ற ஒழுக்கு-நிறைந்த வொழுக்கமுமாம்—எ-று. (கருத்து.) பிறன்மனைவியை யிச்சியாமையே பெரியோர்க்குந் தருமம் - என்பதாம். * புறப்பகைகளை அடக்கும் ஆண்மையுடையோர்க்கும் உட்பகையாகிய காமத்தை அடக்குதல் அருமையாதலால் அதனை அடக்கிய ஆண்மையைப் பேராண்மையென்றார். செய்தற்கரிய - அறமும் - ஒழுக்கமும்-இதனைச் செய்யாமையினாலேயே உண்டாகுமென்பதாம். (அ)

நலக்குரியார் யாவெனி னாழ்நீர் வைப்பிற்
பிறற்குரியா டோடோயா தார்.

இ-ள். நாழ்நீர் - அச்சந்தாங்குங்கடலாற்சூழப்பட்ட, வைப்பில்-பூமியினிடத்தே, நலத்துக்கு (எல்லா) நன்மைகளையும் பெறுதற்கு, உரியார்-உரியவர், யாவெனின்-யாரென்றால், பிறர்க்கு-பிறனுக்கு, உரியாள் - உரியளாயானவளது, தோள்-தோள்களை, தோயாதார் - சேராதவர்—எ-று. (கருத்து.) பிறன்மனைவியைச்சேராதவர்களே நன்மைக்குரியவர்-என்பதாம். * நலத்துக்கென்பது - நலமெனவிகாரப்பட்டது. இம்மையும் நன்மை அடைவாரென்பதாம். (கூ)

அறன்வரையா னல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று.

இ-ள்.(ஒருவன்) அறம்-அறத்தை, வரையான்(தனக்குரியதாகக்) கொள்ளாதவனாகி, அல்ல-பாவங்களை, செயினும் - செய்வானாயினும் (அவனுக்கு) பிறன்வரையாள் - பிறனெல்லையிலே நிற்பவள்து, பெண்மை-பெண்தன்மையை, நயவாமை-விரும்பாமை(உண்டாயின்) நன்று(அதுநன்று—எ-று. (கருத்து.) ஒருவன் அறஞ்செய்யாது பாவமே செய்யினும்

பிறன்மனைவிலை விரும்பாமையே நன்மை-என்பதாம். * அக்குற்றத்தினும் இக்குணமே மேற்பட்டுத் தோன்றுமென்பதாம். [இவைகளுள் குபாட்டாலும் பிறன்மனையாளை விரும்பாதவனிடத்துக் குணம்சொல்லப்பட்டது.

(4)

யசு-ஆம்-அதி - பொறையுடைமை.

அஃதாவது - காரணம் பற்றியாவது அறியாமையாலாவது ஒருவன் தம்மிடத்துத் தீங்குசெய்தவிடத்துத் தாமும் அதனை அவனிடத்துச் செய்யாது பொறுத்தலுடையராதல் இதுபிறனில்விழையாமைபோல் அவசியம் வேண்டுவதாயிருக்கையால் அதன்பின் வைக்கப்பட்டது.

அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்த றலை.

இ-ள். அகழ்வாரை (தன்னை)வெட்டுவோனை, தாங்கும்-(வீழாமற்) சுமப்பதாகிய, நிலம்போல - நிலத்தைப்போல, தம்மை - தம்மை—இகழ்வார் - நிந்திப்பவனை, பொறுத்தல்-பொறுத்தல், தலை- முதலான அறமாம்—எ-று. (கருத்து.) வெட்டுவோனைத் தாங்குநிலம்போல இகழ்வானைப்பொறுத்தலே தலையாய் அறம்-என்பதாம். * இகழ்தல்தீங்குசெய்தலும் சொல்லலுமாம்.

(5)

பொறுத்த விறப்பினை யென்று மதனை
மறந்த லதனினு நன்று.

இ-ள். இறப்பினை (ஒருவன்செய்த) மிகையை, என்றும் - தன்னாலொறுத்தற்குக்கூடிய காலத்திலேயும், பொறுத்தல் - பொறுக்கக்கடவன், மறத்தல்- (அதனைநினையாமல் அடபொழுதே) மறத்தல் (பெரின்) அதனினும் - அப்பொறுமையினும், நன்று - மிகநல்லது—எ-று. (கருத்து.) பிறர்குற்றத்தைப் பொறுத்தலினும் மறத்தல் நன்மை - என்பதாம். * மிகைமுன் சொல்லப்பட்ட விரண்டு குற்றங்களும், பொறுக்கும்போதும் அக்குற்றம் உட்கொள்ளப் படுதலால் மறத்தலே அதனினும் நன்றென்றார்.

(6)

இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

இ-ள். (ஒருவனுக்கு) இன்மையு ளின்மை,வறுமையுள் - வறுமையாவது, விருந்தொரால்- விருந்தினனை (ஏற்றுக்கொள்ளாமல்) நீக்குதலாம், (அதுபோல்) வன்மையுள்வன்மை-வல்லமையுள் வல்லமையாவது, மடவார்- அறியாமையினாலே தீங்குசெய்தவனை, பொறை பொறுத்

தல்—எ-று. (கருத்து.) ஒருவனுக்கு வல்லமையில்லல்லனம மூடர் செய்தகுற்றங்களைப்பொறுத்தல் - என்பதாம். * உடைமையுளின்மை யென்னுங்குறளின்படி. எப்படிவிருந்தினனை யுபசரியாமை பொருளுடைமை ஆகாதோ அப்படியே அறிவிலானைப்பொறுத்தல் இலக்கணமாகாதென்பதுகருத்து [எடுத்துக்காட்டுவமையணி.] (ங)

நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை
போற்றி யொழுகப் படும்.

இ-ள். (ஒருவன்) நிறையுடைமை - நிறையையுடையவனாயிருக்க, நீங்காமை - தன்னை விட்டு, நீங்காமையை, வேண்டின் - வேண்டுவானாயின், (அவனால்) பொறையுடைமை - பொறுமை யுடையவனாயிருக்க, போற்றி. (அழியாமற்)காத்து, ஒழுகப்படும்-நடக்கப்படும்- எ-று. (கருத்து.) நிறையைவேண்டுவானாகிற் பொறுமையைக்காக்கக்கடவன் என்பதாம். * பொறுமையில்லார்க்கு நிறையில்லையென்பதாயிற்று [இவையொன்குபாட்டாலும் பொறையுடைமையின் சிறப்புச்சொல்லப்பட்டது.] (சு)

ஒறுத்தாரை யொன்றுக வையாரோ வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

இ-ள். (பிறன்தமக்குத்தீங்குசெய்தவிடத்து) ஒறுத்தாரை (பொறுமல்அவனை) வருத்தினவனை, (அறிவுடையோர்) ஒன்றுக - ஒருபொருளாக, வையார்-மனத்துட்கொள்ளார், பொறுத்தாரை (அதனைப்) பொறுத்தவனை, பொன்போல் - பொன்னைப்போல், பொதிந்து-இடைவிடாது, வைப்பார் -மனத்துட்கொள்வார்—எ-று. (கருத்து.) பெரியோர்கள் பொறுமையுள்ளோனைப் பொருளாகநினைப்பார் - என்பதாம். * ஒறுத்தவர் அத்தீங்குசெய்தவர்க்குச் சமானமாதலின் ஒன்றுகவையாவென்றார்]

ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

இ-ள். ஒறுத்தார்க்கு (தமக்குதீங்குசெய்தவனை) ஒறுத்தவர்க்கு (உண்டாவது) ஒருநாளையின்பம் - அவ்வொரு நாளையின்பமே, பொறுத்தார்க்கு - (அதனைப்) பொறுத்தவர்க்கு, பொன்றுந்துணையும்- (உலகுள்ளமட்டும்), புகழ்-கீர்த்தி, உண்டாம்-உண்டாகும்—எ-று.(கருத்து.) பிறர்குற்றங்கண்டு தண்டித்தவர்க்கொருநாளையின்பம்; பொறுத்தவர்க்கு உலகமழியுமளவும் புகழ் - என்பதாம். *ஒருநாளையின்பம் அந்நாளொன்றிலும் நினைத்தது முடிந்தோமேயென்று செருக்கியிருக்கும்பொய்யின்பமாம். தனக்கிடமாகிய உலகம் அழியப்புகழும் அழியுமாதலின் எற்புடையுலகெனவுரைத்தெனவுரைத்தெனவுரைத்த

நிறனல்ல நற்பிறர் செய்யினு நோகொன்
நறனல்ல செய்யாமை நன்று.

இ-ள். நிறனல்ல - செய்யத்தகாதகொடியவைகளை, தன் - தன்னிடத்து, பிறர் - அயலார், செய்யினும் - செய்தாலும், நோ - (அவருக்கு அதனால் வருவதாகிய) துன்பத்துக்காக, நொந்து-வருந்தி, அறனல்ல - அறமல்லாத செயல்களை, செய்யாமை - செய்யாதிருத்தல், நன்று (ஒருவனுக்கு) நல்லதாம்—என-று. (கருத்து.) பிறர்செய்யத்தகாத கொடியவைகளைச் செய்தாலுந்தான் வருந்தி அறமல்லாதவைகளைச்செய்யாமை நன்று - என்பதாம். * துன்பத்துக்காக வருந்துதலாவது இப்பாவத்தினாலேயிவர்மறுபிறப்பிலேயெனிவாய்நரகத்திலேவீழ்வாரோவென்றுபரிதல்.

மிகுதியான் மிக்கவை செய்தானைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல்.

இ-ள். மிகுதியால் - மனச்செருக்கினாலே, (தம்மிடத்து) மிக்கவை - தீயவைகளை, செய்தானை-செய்தவனை, தாம் - தாம், தந்தகுதியால் - தமதுபொறுமையினாலே. வென்றுவிடல் - வென்றுவிடக்கடவர் என-று. (கருத்து.) மனச்செருக்காற் பிறர் தீங்குசெய்தாலு மவர்க்குத் தீங்குசெய்து பொறுமையால் வெல்க - என்பதாம். * தாமும் அவரிடத்தே தீயவைகளைச்செய்து தோற்றுப்போகாமல் - பொறுமையால் அவரின்மேறப்பட்டு வெல்லுகவென்பதாம். [இவைநான்குபாட்டாலும் பிறர்செய்த குற்றங்களைப்பொறுத்தல் சொல்லப்பட்டது.] (அ)


துறந்தாரிற் றூய்மை யுடைய ரிறந்தார்வா
யின்னுச்சொ லேற்றிற் பவர்.

இ-ள். இறந்தார் - (நல்வழியைக்) கடந்தவரது, வாய்-வாயிலுள்ளதாகும், இன்னுச்சொல் - வெறுக்கப்படுந்தீச்சொற்களை, நோற்கிற் பவர். பொறுப்பவர் (இல்வாழ்க்கையிலிருந்தும்) துறந்தாரின் - துறந்தார் போல், தூய்மை - பரிசுத்தகுணத்தை, உடையர்-உடையவராவார்—என-று. (கருத்து.) தீயவழியிலடப்பவரது கொடுஞ்சொற்களைப்பொறுப்பவர் துறவிகள்போலப் பரிசுத்த குணமுடையவர் - என்பதாம். * தூய்மை - மனவழுக்கில்லாமை, வாயென்பதை அதிகமாகச்சொல்லினால் அதனிழிவுதோன்றுதற்கு. (கூ)

உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லு
மின்னுச்சொ லேற்பார்ப் பில்.

இ-ள். உண்ணாது - (விரததங்களிலாலே) உணவைவிட்டு, நோற்பார் (தம்மை அடைந்தகோபத்தை) பொறுப்பவர், பெரியர் - (எல்லாரினும்) பெரியவராவார், (அவர்பெரியவராவது) பிறர் - அயலார், சொல்லும் - (தம்மைச்) சொல்லும், இன்னுச்சொல் - வெறுக்கப்படுந்தீச்சொற்

கள், கோற்பாரின்-பொறுப்பவரின், பின்-பின்னுவார்—என-றது.(கருத்து.) பிறர்கொடுஞ்சொற்களைப் பொறுப்பவாக்குத் தவத்தர் பின்னுவர்- என்பதாம் *பிறர் இக்கே அறிவில்லாதவர். பொறுக்கக் கூடாமைக்கு ஏதுவாகிய இறுவகைப்பற்றுகளையு டிருந்தே பொறுத்தலால் தவஞ்செய்வாரினும் பெரியராகச்சொல்லலாயிற்று. [இவை இரண்டுபாட்டாலும் பிறர்சொல்லிய குற்றங்களைப் பொறுத்தல் சொல்லப்பட்டது.] (ய)



யஎ - ஆம் - அதி - அழுக்காறாமை.

அஃதாவது — பிறர்செல்வ முதலானவை கண்டவிடத்துப் பொறாமைப்படாமை. இப்பொறாமையும் பொருளைக்கு எதிரியதாதலின் இதனைவிலக்குதற்கு இதுபொறை யுடைமையின் பின்னே வைக்கப்பட்டது.

அழுக்காறுக் கொள்க வொருவன் றன்னெஞ்சத்
தழுக்கா றிலாத வியல்பு.

இ-ள். ஒருவன்-ஒருவன், தன்னெஞ்சத்து - தனதுமனதின்கண்ணே, அழுக்காறு - பொறாமையாகியகுற்றம், இலாத - இல்லாத, இயல்பு - தன்மையை, ஒழுக்கு - (தனக்குச்சொல்லப்பட்ட) ஒழுக்கத்தினது, ஆறு - வழியாக, கொள்க - கொள்ளக்கடவன்—என்று. (கருத்து.) ஒருவன் பொறாமை யில்லாமையே நல்லவழியாகக்கொள்ளக்கடவன் - என்பதாம். * இயல்பு, அறிவோடுகூடியசன்மை. அத்தன்மையும் நன்மையைத்தருதலால். ஒழுக்கம் விழுப்பமென்னுங் குறளிலே சொல்லப்பட்டபடியே ஒழுக்கழிபோல, உயிரினும் சிறந்ததாகக் காப்பாற்றுக்வென்பதாம். (க)

விழுப்பேற்றி னஃதொப்ப தில்லையார்மாட்டு
மழுக்காற்றி னன்மை பெறின்.

இ-ள். யார்மாட்டும் - யாவரிடத்தும், அழுக்காற்றின் - பொறாமையினின்றும், அன்மை-வேறாதலை, பெறின்- (ஒருவன்) பெறுவானாயின், விழுப்பேற்றின் - (மற்றவன்பெறும்) மேலானபேறுகளுள், அஃது - அப்பேற்றினை, ஒப்பது- ஒப்பானது, இல்லை-இல்லை—என-று. (கருத்து.) ஒருவன்யாவரிடத்தும் பொறாமை யில்லாமையைப் பெறுவானாயினதை விடவேறுபேறில்லை - என்பதாம் * பொறாமைபகைவரிடத்தும் ஆகாதென்றற்குயார் மாட்டுமென்றார். [இவைஇரண்டுபாட்டாலும் பொறாமை யில்லாமையினது குணம் சொல்லப்பட்டது.] (உ)

அறனெக்கம் வேண்டாதா னென்பான் பிறனெக்கம்
பேணு தழுக்கறுப்பான்.

இ-ள். அறம்-(மறுமைக்கு) அறத்தையும், ஆக்கம்-(இம்மைக்குச்) செல்வத்தையும், வேண்டாதானென்பான்-(தனக்கு) வேண்டாதவனென்று சொல்லப்படுவோன், பிறன்-பிறனை, ஆக்கம்-செல்வத்தை, பேணாது (கண்டவிடத்து) மகிழாமல், அழுக்கறுப்பான்-பொறாமைப்படுவோன்—என்-று. (கருத்து.) மறுமைக்குத் தருமமும் இம்மைக்குச் செல்வமும் வேண்டாதவன் பிறன்செல்வங்கண்டு பொறாமைகொள்வான்-என்பதாம். * பொறாமைப்படுதன் தனக்கே துன்பமாம் என்றபடி.()

அழுக்காற்றி னல்லவை செய்யார்சிழுக்காற்றி
னேதம் படுபாம் கறிந்து.

இ-ள். (அறிவுடையோர்) அழுக்காற்றின்-பொறாமையினாலே, அல்லவை-அறமல்லாதவைகளை, செய்யார்-செய்யமாட்டார், இழுக்காற்றின்-அந்தீயவழியால், ஏதம்-துன்பமானது, படுபாக்கு (தமக்குஇருமையிலும்) வண்டாதலை, அறிந்து-தெரிந்து—என்-று. (கருத்து.) பெரியோர் பொறுமைபற் பாவங்களைச் செய்யார்-என்பதாம். * அறமல்லாதவையாவன செல்வங் கல்விமுதலானவை புடையாரிடத்தே தீங்கை நினைத்தலும், சொல்லலும், செய்தலும்ஆம். (சு)

அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னார்
வழுக்கியுங் கேடுன் பது.

இ-ள். அழுக்காறு-பொறுமையானது, ஒன்னார்-பகைவரின், வழுக்கியும்-ஒழிந்திருந்தும், கேடுன்பது-கேட்டைத்தருவது, (ஆதலால்) உடையார்க்கு-(அப்பொறுமையை) உடையவர்க்கு, (கேட்டைத்தருதற்குப் பகைவர்வேண்டாம்) அது-அதுவே, சாலும-போதும்-என்-று. (கருத்து.) பொறுமை பகைவரினும் கொடிது-என்பதாம். * அதுவே யென்னும் ஏகாரம் வருவிக்கப்பட்டது. (ரு)

கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ
முண்பதூஉ மின்றிக் கெடும்.

இ-ள். கொடுப்பது (ஒருவனுற்) பிறர்க்குக்கொடுக்கப்படும்-பொருளைக்குறித்து, அழுக்கறுப்பான்-பொறுமைப்படுமவன், சுற்றம்-உறவானது-உடுப்பதூஉம்-உடுக்கப்படுவதும்-உண்பதூஉம்-உண்ணப்படுவதும்-இன்றி-இல்லாமல், கெடும்-அழியும்—என்-று. (கருத்து.) கொடுப்பதைக்குறித்துப் பொறுமைகொள்பவன் சுற்றமானது உடுக்கவாடையு முண்ணச்சோறு மில்லாமற் கெடும் என்பதாம். * சுற்றம்கெடுமெனவே

அவன் கெடுதல் கொல்லவேண்டிய நில்லையாகிற்கு பிறர்பேறு கண்டு பொறுமைப்படுதல் தன்பேறுமாத்திரமேயல்லாமல் தன் சுற்றத்தின்பேறுகளையும் இழக்கச் செய்யுமென்பதாம். (சு)

அவ்வித் நுழுக்கா றுடையானைச் செய்யவ
டவ்வையைக் காட்டிவிடும்.

இ-ள். அழுக்கா றுடையானை (பிறர்செல்வம் கண்ட விடத்தே) பொறாமையுடையவனை செய்யவள்-திருவானவள், அவ்விதத்து (தானும்) பொறாமைப்பட்டு, தவ்வையை - (தன்து) தமக்கைக்கு, காட்டி-காண்பித்து, விடுத்-நீங்குவாள்—என-று.(கருத்து.)பொறாமையுடையவனையிலக்குமியானவள்பொறாமைப்பட்டு மூதேவிக்குக்காட்டிவிட்டு நீங்குவாள்-என்பதாம் * தவ்வையையென்பது உருபுமயக்கம், தவ்வை-மூதேவி.

அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்.

இ-ள். அழுக்காறென வொருபாவி - பொறாமையென்றுசொல்லப்பட்ட ஒப்பில்லாத பாவியானவன், (தன்னையுடையவனை) திருச்செற்று-(இம்மையிலே அவனது) செல்வத்தைகெடுத்து, தீயுழியுய்த்துவிடும் - (மறுமையிலே) நாகநரகத்தினிடத்துச் செலுத்திவிடுவான்—என-று. (கருத்து.) பொறாமையென்னும் பாவியானவன் பொறாமைகொண்டவன் செல்வத்தைக்கெடுத்தவனை நாகநரகத்திற்தள்ளுவான்-என்பதாம். * இறாமைப்பயன்களையும் கெடுக்கின்ற கொடுமைபற்றிப் பொறாமையைப் பாவியென்றார். [இவைஆறுபாட்டாலும் பொறாமை யுடைமையினது குற்றம்சொல்லப்பட்டது.] (அ)

அவ்விய நெஞ்சத்தா னுக்கமுஞ் செவ்வியான்
கேடு நினைக்கப் படும்.

இ-ள். அவ்வியநெஞ்சத்தான்- பொறாமையுள்ள மனத்தை யுடையவனது, ஆக்கமும்-செல்வமும், செவ்வியான் - பொறாமையில்லாத மனத்தையுடையவனது, கேடும் - வறுமையும், (உண்டானால்) நினைக்கப்படும் - (அவை) ஆராயப்படும்—என-று. (கருத்து.) பொறாமையுள்ளவன்செல்வமும், பொறாமையில்லாதவன் வறுமையும் பழையவினையென் றெண்ணப்படும் - என்பதாம். * பொறாமையினாலே செல்வமும் பொறாமையில்லாமையினாலே கேடும் உண்டாகுதல் - கூடாமையால் அறிவுடையார் இவைஉண்டாதற்கு எதுவாகிய பழவினையாதென்று ஆராய்வாராதலின் நினைக்கப்படுமென்றார். (கூ)

அழுக்கற் றகன்றாரு மில்லை யஃதிலார்
பெருக்கத்திற் றீர்ந்தாரு மில்.

இ-ள். அழுக்கற்று.- (பொறாமைப்பட்டு, அதன் பயனை) யுற்றவரும், இல்லை-இல்லை, [illegible] அஞ்சுவதில்லாதவர்களாகிய, பெருக்கத்தின்-பெருக்கத்தினின்றும், தீர்ந்தாரும் - நீங்கினவரும், இல்-இல்லை-று. (கருத்து.) பொறாமைப்பட்டுத் தீச்செயல்களைச் செய்யாதவர்களே - பொறாமைவிட்டுச் செல்வமுடையவரானவர்- தாம்பெறும் * கேடும் பெருக்கமும் வருதற்கு வருந்தவேண்டியதில்லை [இவை இரண்டுபாட்டாலும் அக்குற்றமும் குணமும்தோன்றச் சொல்லப்பட்டன.] (ம)

யிஞ்-ஞ்ய்-அதி-வெஃகாமை.

அஃதாவது:-பிறர்பொருளை வௌவுதற்கு, மனமாறுதலையும் - பிறருடைமைகண்டவழி அதனைப் பொறுமைப்படுதலையல்லாமல் அதனைத்தான் வௌவுதற்கு மனத்தலும் குற்றமென்றற்கு இது அதன்பின்னே வைக்கப்பட்டது.

நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிற்
குற்றமு மாங்கே தரும்.

இ-ள். நடுவின்றி - (பிறர்க்குரியபொருளைக் கொள்ளுதல் நமக்கு அறமல்லவென்னும்) நடுவுநிலைமையில்லாமல், நன்பொருள்-(அவாது) நல்லபொருளை, வெஃகின் - (அபகரித்தற்கு) விரும்பினால்,(அவ்விருப்பு) குடிபொன்றி - (தனது) குடியைக்கெடுத்து, குற்றமும்-பலகுற்றங்களையும், ஆங்கே-அப்போதே, தரும்-(அவனுக்குக்) கொடுக்கும்-என-று. (கருத்து.) நடுவுநிலைமையில்லாமற் பிறர்பொருளைவிரும்பினால் அவ்விச்சையானது குடியைக் கெடுத்துக் குற்றங்களையுங் கொடுக்கும்-என்பதாம். * குடிகளவளரச்செய்து பலரன்னைமக்களையும் உண்டாக்குந்தன்மையால் நன்பொருளென்றார். பொன்றியென்னுந் தன்வினையொன்றுவித்தென்னும் பிறவினைப்பொருளில்வந்தது. (க)

படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர்.

இ-ள். நடுவன்மை - (ஒருவன்பொருளுக்குப் பிறன் உரியனல்லனென்னும்) நடுவுநிலைமையல்லாமைக்கு, நாணுபவர் - நாணுவார், (பிறர்பொருளை வௌவுதலினாலே) படுபயன் - (தமக்கு) வருபயனை, வெஃகி- விரும்பி, பழிப்படுவ - பழியினிடந்தரும் பொருந்தாதசெயல்களை, செய்யார் - செய்யார்—என-று. (கருத்து.) நடுவுநிலைமையல்லாமைக் கஞ்சுபவர் பொருட்பிரயோசனத்தை விரும்பித் தீயசெயல்களைச் செய்யார்-என்பதாம். (உ)

நிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாதோ
மற்றின்பம் வேண்டு பவர்.

இ-ள். மற்றின்பம்-நிலையுடையதின்பத்தை, வேண்டுபவர் - இச்சிப்பவர், நிற்றின்பம் - (பிறரிடத்தே அடிமைக்கப்பட்ட - பொருளிழிவு தரும் அடைவுகளிய) நிலையில்லாதவின்பத்தை, வெஃகி - விரும்பி, அறனல்ல - அறமல்லாத செயல்களை, செய்யார் - (அவரிடத்தே) செய்யார் - என்பதாம். * யாவதற்காலவருதலால் அப்பொழுதே அழியுமென்றற்கு நிற்றின்பமெனல் குறை. (கூ)

இலமென்று வெஃகுதல் செய்யார் புலன்வென்ற
புள்ளைமையிற் காட்டி பவர்.

இ-ள். புலன்வென்ற - ஐம்புலங்களையும்வென்ற, புள்ளைமையிற்-குற்றமில்லாத, காட்சியவர்-அறிவுடையவர், இலமென்று - கற்பவையென்றெண்ணி, வெஃகுதல்செய்யார் - (யாதினிற்கற்பாருடனிருந்தார்பொருளை) விரும்புதல்செய்யார்—எ-று. (கருத்து.) ஐம்புலங்களையென்ற அறிவுடையவர் வரிசையாகவென்று பிறர்பொருளை விரும்பார்-என்பதாம். * ஐம்புலங்களை வெல்லுதல் - பாவவழிநடவின்மை செல்லவிடாமை. குற்றமில்லாத வறிவு, பொருளை உள்ளபடி யறிந்தறிவாம். அப்படிப் பட்டவர்க்கு வறுமை உண்டாகாமையால் பிறர்பொருளை விரும்புதலும் இலதாயிற்று (ச)

அஃதெவன்ற வறிவென்னும் பாற்பாட்டும்
வெஃகி வெறிய செயின்.

இ-ள். அஃதி - நூற்பயனாகி, அவன்ற - (எல்லா நூல்களிலும்) சென்ற, அறிவு - அறிவானது, எண்ணும் - எல்லாப்பயன்களையுடையதும், வெஃகி - (பொருளை) விரும்பி, பாற்பாட்டும் - யாவரிடத்தும், வெறிய - அறிவோடு பொருந்தாத செயல்களை, செயின் - (அறிவுடையோர்) செய்தலாயின்—எ-று. (கருத்து.) யாவரிடத்தும் பொருளை விச்சித்தற்கு நிமையைச்செய்தல லறிவின் பயனென்கையால்-என்பதாம். * யாவரிடத்தும் அறிவோடு பொருந்தாத செயல்களைச் செய்தலாவது - யோக்கியரிடத்தும் அயோக்கியரிடத்தும், இழிந்தசொல்லும் கடியவையும் முதலானவைசெய்தல், அறிவுக்குப்பயன் அடைவுசெய்யாமையாகலின் அறிவென்னுமென்றார். (ரு)

அருள்வெஃகி யாற்றின்க ணின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும்.

இ-ள். அருள்வெஃகி-அருளாகிய அறத்தைவிரும்பி, நூற்றின்கண்-(இல்லறமாகிய) அதன்வழிநிலை, நின்றான் - தங்கினவனை, பொருள் வெஃகி-(பிடர்) பொருளைவிரும்பி, பொல்லாத-(அதனைவருவிக்கும்) குற்ற

வழிகளை, சூழ-எண்ணை, கெடும்-கெடுவான்—எ-று (கருத்து.) அருளை யிச்சித்துநின்றவன் பொருளை யிச்சித்துக்குற்றவழியை நினைக்கக்கெடுவான் என்பதாம். * இல்லறவழியால் அறிவு முதிர்ந்தவிடத்தேயல்லது துறக்கக்கூடாமையால் அது துறவறத்துக்கு வழியெனப்பட்டது. கெடுதல் இரண்டறங்களையும் ஒருசேரவிழுத்தல் எண்ணிய வளவிலேயடுமெனவே அபகரித்தாற் கெடுதல் சொல்லவேண்டிய தில்லையாயிற்று.

வேண்டற்க வெஃகியா மாக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன்.

இ-ள். வெஃகி-(பிறர்பொருளை) விரும்பிக்கொண்டு, ஆம்-அதனாலுண்டாகின்ற, ஆக்கம்-பெருக்கத்தை, வேண்டற்க - வேண்டாதிருக்கக்கடவன், விளைவயின் - (பின்) அநுபவிக்கப்படும்போது, பயன்-(அப்பெருக்கத்தின்) பயன், மாண்டற்கரிதாம் - ஒன்றுதலில்லை (ஆதலால்)—எ-று. (கருத்து.) பிறர்பொருளை யநுபவித்தும்போது அதுபயன்படாமையாலப்பொருளை விரும்பாதிருக்கக்கடவன்-என்பதாம். * விளைமுதனிலைத்தொழிற்பெயர். [இவ்வேழுபாட்டாலும் பிறர்பொருளை விரும்புதலின் குற்றஞ்சொல்லப்பட்டது.] (எ)

அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

இ-ள். செல்வத்திற்கு-(குறைந்துபோந்தன்மையையுடைய) செல்வத்து, அஃகாமை-குறையாதிருத்தற்காணம், யாதெனின் - எதுவென் (றெறுவ) ராயின்(அது) பிறன்-பிறன், வேண்டும்-விரும்புகின்ற கைப்பொருள்- கைப்பொருளை, வெஃகாமை- தான்வேண்டாமையாம்—எ-று. (கருத்து.) குறையாத செல்வத்திற்குக் காரண மியாதெனக்குற் பிறன்பொருளை விரும்பாமையாம்-என்பதாம். * அஃகாமை அதன்காரணத்தை உணர்த்தலால் ஆகுபெயர். பிறன்பொருளை விரும்பாதவனது செல்வம் குறையாதென்பதாயிற்று. (அ)

அறனறிந்து வெஃகா வறிவுடையார்ச் சேரும்
திறனறிந் தாங்கே திரு.

இ-ள். அறனறிந்து - (இது) அறனென்றறிந்து, வெஃகா- (பிறர்பொருளை) விரும்பாத, அறிவுடையார்- அறிவுடையாரை, திரு-திருவானவள், திறனறிந்து-(தான்சேர்தற்காக்) திறத்தைஅறிந்து, ஆங்கே- அத்தறத்தினால், சேரும்-சேருவாள்—எ-று. (கருத்து.) பிறன்பொருளையிச்சியாத அறிவுடையவரை யிலக்குமி சேருவாள்-என்பதாம். * அடைதற்காந்திறம்-காலமும், இடமும், செவ்வியும், முதலாயின [இவையிரண்டுபாட்டாலும் பிறர்பொருளைவிரும்பாமையின் குணஞ்சொல்லப்பட்டது.]

இதனிது மென்னுதவ வெஃகின் விறலிழும்
வேண்டாமை யென்னுஞ் செருக்கு.

இ-ள்:(ஒருவன்) என்னுதவ-(பிறர்விரும்பை எனை த)யென்னுமல், வெஃ-
கின்-(பிறன்பொருளை) விரும்புவானாயின், (அவ்விருப்பம) இறல் அ
நிலை, ஈனும-(அவனுக்குக் தரும, வேண்டாம்மை யென்னுஞ்செரு
க்கு(அப்பொருளை) விரும்பாமை யென்னுஞ் செல்வமானது, விறல்-வெ
ற்றியை, ஈனும்-தரும்—எ-று. (கருத்து.) ஒருவன் பிறன்பொருளையிச்
சித்தால் இழிவைத்தரும்- இச்சியாமைவெற்றியைத்தரும்-என்பதாம். *
ஆசையும் பாவமும் வளர்த்தலால் இறலீனுமென்றும், பொருளாசை
கொண்டலைவோர்கற்பாவனையும் தீப்புநித்தலால் விறலீனுமென்றும்
சொல்லினர் செருக்கு அதைத்தருஞ் செல்வதனைக்காட்டலால் ஆகு
பெயர்.[இதனால் அக்குணமூன்றும் சேர்த்துச்சொல்லப்பட்டன.]

மெய்-ஆம்-அதி - புறங்கூறாமை.

அஃகாவது - காணுதவிடத்தே பிறனாஇகழ்ந்து பேசாமையாம். வா
க்கின்குற்றம் மனக்குற்றத்தின்வழியாகததோன்றலால்இது அழுக்கா
றுமைவெஃகாமைகளின் பின்வைக்கப்பட்டது.

அறங்கூறு னல்ல செயினு மொருவன்
புறங்கூறு னென்ற லினிது.

இ-ள். ஒருவன்-ஒருவன், அறங்கூறுன் - அறமென்றுசொல்லுவ
துஞ்செய்யானாகி, அல்ல - பாவங்களை, செயினும்-செய்தாலும், புறங்கூ
றுன்-(பிறனைக்) காணுதவிடத்தே இகழ்ந்துபேசான், என்றல -என்று
(உலகத்தோராலே) சொல்லப்படுதல், இனிது-நல்லது-எ-று(கருத்து.)
ஒருவன் தருமத்தைச்செய்யானாகிப் பாவத்தைச்செய்யினும் புறங்கூ
றுமையேனன்மை-என்பதாம். * புறங்கூறுமை அக்குறறங்களால் தாழ்
த்தப்படாமல்மேற்பட்டுத்தோன்று மென்பதாம். [இதனால் அவ்வறத்தி
னதுவன்மைசொல்லப்பட்டது.] (க)

அறனழீஇ யல்லவை செய்தலிற் றீதே
புறனழீஇப் பொய்த்துநகை.

இ-ள். அறனழீஇ - அறமென்பதொன்றில்லையென அழித்துரை
சொல்லி, அல்லவைசெய்தலின் (அதன்மேற்) பாவங்களைச் செய்தலி
னும், தீதேதீமையுடையதாம், புறனழீஇ ஒருவனைக்காணுதவிடத்தே
இகழ்ந்துபேசி, பொய்த்துநகை (கண்டவிடத்தேஅவனோடு) பொய்த்து

மறிழ்நல்—எ-று. (கருத்து.) ஒருவன்காலுறவிடத்திலிகழ்த்தாகண்டவிடத்துப்புகழ்ந்துபேசுதல் தருமத்தையழித்து அதருமத்தைச்செய்தலிலுங் குற்றம்-எனபதாம். * அறத்தையழித்தலிலும் புறங்கூறுதலும் பலரைக்கொன்றுசெய்தலிலும்டியத்து மருகலும் தீயனவாம் என்றறிக புறங்கூறிப்புகழ்தல் ஒளியைக்கெடுத்தல். (2)

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலினிற் சாத
லறங்கூறு மாக்கள் தொழும்.

இ-ள். புறங்கூறி-பிறரினகாலுறவிடத்திலிகழ்த்து, பொய்த்து கண்டவிடத்திலே அவரைப்புகழ்ந்து, உயிர்வாழ்தலின் (ஒருவன்) உயிர் வாழ்தலிலும், சாதல் (அதுசெய்யாமல்) உயிர்விடுதல், (அப்படிக்கு அறங்கூறும்-தருமநூல்களினிறுதியிலே சொல்லப்பட்ட, ஆக்கம்-பயனை, தரும் கொடுக்கும்—எ-று. (கருத்து.) ஒருவன் பிறரை முன்புகழ்ந்தும் பின் கழ்ந்துமபேசிபுயிர்வாழ்தலினு மிறந்துதேயலாமல்-என்பதாம். * உயிரிட்டபின் புறங்கூறிப்பொய்த்தலுங்கிய பாவநீங்கலால்-சாதல் ஆக்கமருமென்றார். ஆக்கம் அப்பாலைத்து செய்யாதவராலே மறுமையில் அடையப்படுமிப் பயனும்-அறமாயினதைச்சொல்லுதலாலும் ஆகுபெயர்.

கன்னின்று கன்னெறச் சொல்லினுந்தொ சொல்லற்க
முன்னின்று பின்னெறுக்காச் சொல்.

இ-ள். (ஒருவனை) கன்னனின்று - எதிரேநின்று, கன்னெறச்சொல்லெட்டமற, சொல்லினும்-சொல்லுதலும், முன்னின்று (அவனை) எதிரில்லாமல், பின்னெறுக்காச்சொல் - பின்வருந்துற்றதனைத்தாங்காதசொல்லை, சொல்லற்க - சொல்லாதொழிக்கக்கடவன்—எ-று. (கருத்து.) ஒருவனை முன்னிகழ்தலும்-பிறன்னிகழ்ந தொழிக்கக்கடவன்-என்றதாம். * பின்னிகழ்தற்குற்றத்தைக் காட்டலால் துரு. வெல்லாவற்றுக்கும் பொதுவிதி - சொல்லாமற்சொல்லப்பட்டது. கன்னெறுட்டம்-தாட்டிகைமை. [இவைமூன்று பாட்டாலும் புறங்கூறலின் கொடுமைசொல்லப்பட்டது.] (3)

அறஞ்சொல்லு மெந்தைதந்தா னன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும்.

இ-ள். (புறங்கூறுவோனெருவன்- அறமுன்னின்றுசொல்லினுலே சொல்லினும்) அறஞ்சொல்லும்- அறத்தை அப்படிச்சொல்லுதற்கு ஏற்ற, தெந்தைதன்மை-மகத்தியமுடைபவை யல்லாதவறு யிருக்கையாலும் புறஞ்சொல்லும்-அப்புறங்கூறுதற்குக்காரணமாகிய, புன்மையால்-(மனப்) புன்மையாலே, காணப்படும் - (அறிவுடையோரால்) அறியப்படுமெ-எ-று. (கருத்து.) தெந்தைதன்மை மனதிலை தருமமில்லாமையின்று புறங்கூறுகலாறியப்படுமே - என்பதாம். * மனம் நிக

நிற்கையால் அறம்என்றல் முதலாகிய மூன்றும் அங்கே கூறிக்கப்பட்டன. (இ)

பிறன்பழி கூறுவான் தன்பழி யெல்லாந்
தன்வாயிற் றோன்றச் சுறப் படும்.

இ-ள். பிறன்பழி- பிறனொருவனது பழியை, கூறுவான்- (அவனை நேரிலாதலிடத்தே) சொல்லுகின்றவன், தன்பழியெல்லாம் - தனது (பல) குற்றங்களும், தோன்ற - (வருந்தும்) விதமுளவாயவைகளை, தானும் - தானும், கூறப்படும் - (அவ்வாறே) சொல்லப்படுவான்—எ-று. (கருத்து.) பிறனது குற்றத்தைத் சொல்லுகின்றவன், தன்குற்றம் பிறரால்சொல்லப் படுவான்-என்பதாம். * தோன்ற- தோன்றவெனல்விகாரம். கூறுதலிடத்தே தன்னைக்குறித்தும் பிறரால் சொல்லப்பட்ட பழியையும் கேட்டவர்கள் அவன் மிகவும்வருந்தும்படி - மிகையாகவும்படியே அவ்வாறே எதிரேசொல்லுவானாதலால் தோன்ற மெனிற்குக் கூறப்பட்டன்றோ. (ஈ)

பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாட றேற்றா தவர்

இ-ள். நகச்சொல்லி - (கூடி) மகிழும்படி (இனியசொற்களைச்)சொல்லி, நட்பாடல் - அயலாரோடு) சிநேகஞ்செய்தலில், தேற்றாதவர் (நம்மை நடுநிலையன்று) அறியாதவர், பகச்சொல்லி - (தம்மைவிட்டு) நீங்கும்படிபுறங்கூறி, கேளிர் - (தமது) சுற்றத்தாரையும், பிரிப்பர் - பிரியப்பண்ணுவர்—எ-று. (கருத்து.) மகிழும்படிசொல்லிச் சிநேகஞ்செய்தலில் நியாகவாகள் புறங்கூறியுறவினரைப்பிரிப்பர் - என்பதாம். * உம்மைமோத்தால் தொகைச்சுற் கேளினாயும் பிரிப்பவென்றகருத்தால் அயலாரென்பது வருவிக்கப்பட்டது. தேற்றாதவரென்னும் பிறவினை- தேறவென்னும் தன்வினைப்பொருளில்வந்தது. புறங்கூறுவார்க்குயாரும் பகையாவரென்பது கருத்து. (உ)

துன்னியார் குற்றமுந் தற்றுமறிவினை
யென்னினதொ லேதிலார்மாட்டு.

இ-ள். துன்னியார் - (நம்மோடு) நெருங்கினவராது, குற்றமும்- குற்றங்களையும், தற்றும் - (அவைக்காணுதலிடத்தே) தோற்றும், அறிவினையும் - இயல்பையுடையவர், ஏதிலார்மாட்டு - அயலாரிடத்தில் (செய்வது) என்னினதொல் - யாதோ—எ-று. (கருத்து.) உறவினர்குற்றத்தையும் தோற்றவிடுவர் அயலார் குற்றத்தை யெப்படித்தோற்றுவர்- என்பதாம். * தோற்றுவித்தல் - பலரும் அறியப்பறைப்புதல். அஃதோற்றுதற்கேதுவாய கொடிய செயல்களெல்லாம் தோற்றுவித்தலென்றார், செய்தவை தோற்றுவித்தலாகிய சொல்லெச்சம். (ஊ)

அறனெக்கி யாற்றுங்கொல் வையம் புறனெக்கிப்
புன்சொ லுரைப்பான் பொறை.

இ-ள். புறனெக்கி - பிறர்நீங்கினவளவுபார்த்து, புன்சொல்- (அ
தது) பழிப்புச்சொல்லை, உரைப்பான் - சொல்லுவோனது, பொறை
(உடற்) பாரத்தை, வையம் -பூமியானது, அறனெக்கி-(இக்கொடியவ
ச்சுமத்தலேனைக்கு) அறமாகதென்றறிந்தேத்து, ஆற்றுங்கொல்- சும
கின்றதுபோலுமே—என்-று. (கருத்து.) பூரியானதுபொறுமைமிகுதலோ
னுடலுக் தருமகதைக்குறித்துச் சுமப்பதுபோலும் - என்பதாம். * பூமி
க்கு எல்லாப்பெரும்பொருள்களையும் சுமத்தல் சுபாவமாயிலும் புறங்கூறுவோ
னைச் சுமப்பது தகாதென்றுங்கருத்தால் அறனெக்கி யாற்றுங்கொல்
வையமென்றார். [இவை ஐந்துபாட்டாலும் புறங்கூறுவாருக்கு உண்டா
கும் குற்றம்சொல்லப்பட்டது.] (க)

எதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பிற்
தீதன்றோ மன்னு முயிர்க்கு.

இ-ள். புறங்கூறுவோர் அறுசெய்தற்கு - எதிலார்குற்றம்போல்,
அயலோரதுகுற்றத்தைப்போல், தங்குற்றம் - அப்புறங்கூறுதலாகிய
மதுகுறறத்தையும், காண்கிற்பின் - காணமாட்டுவாராயின், மன்னுமு
யிர்க்கு- அவரதுங்கிலைபெற்றவுயிர்க்கு, தீது-(வருவது)ஒருதுன்பதும்,உ
ண்டோ - உண்டாகுமோ—எ-று. (கருத்து.) அயலார்குற்றத்தைப்போ
லுத் தங்குற்றத்தை யாராய்வாராகிற் குற்றமில்லை - என்பதாம். * நடுவு
லேயாயிருந்து - ஒப்பக்காணுதலருமையாகலின் காண்கிற்பினென்றும்,
கண்டவிடத்தே புறங்கூறுமையால் வருபிறவிகளினும், துன்பப்பட
லென்பதைக்குறித்து உயிர்க்குந் தீதுண்டோவென்றும், சொல்லினார்.
[இதனால் புறங்கூறுதலை விடுதற்கு உபாயம் சொல்லப்பட்டது.] (ஙி)

உய-ஆம்- அதி-பயனிலசொல்லாமை.

ஆய்ந்தாவது, தமக்கும் பிறர்க்கும் அறம்பொருளின்பங்களுள் ஒன்
றையும்நாராதசொற்களைச்சொல்லாமையும். பொய்குறளை-கடுஞ்சொ
ல் - பயனில்சொல்- எனவாக்கினிடத்தே உண்டாம் பாவம் நான்கிலு
ள்-பொய்-துறந்தோர்க்கு அல்லதுபற்றறவிடக்கூடாமையால் அதனை
ஒழித்துஇலவாழ்வாரால் விடக்கூடுமவையாகியமற்றை மூன்றிலுள்-
கடுஞ்சொல் - இனியவைகூறலாலும், குறளைபுறங்கூறுமையாலும், வி
லக்கிநின்ற பயனில்சொல்லே இதனால் விலக்குகின்றாராகலால் இதுபு
றங்கூறுமையின் பின்வைக்கப்பட்டது.

பல்லார் முனியப் பயனில சொல்லுவா
னெல்லாரு மெள்ளப் படும்.

இ-ள். பல்லார் - அறிவுடையோர்பலரும், முனிய-(கேட்டு) வெறுக்க, பயனில - பயனில்லாதசொற்களை, சொல்லுவான் - சொல்பவன், எல்லாரும் - எல்லாராலும், எள்ளப்படும் - இகழப்படுவான்—எ-று. (கருத்து.) பயனில்லாச் சொற்களைச் சொல்பவன் யாவராலு மிகழப்படுவான்-என்பதாம். * அறிவுடையோர் பலரும்வெறுக்கவே மற்றோரு மிகழ்வாராகலால் எல்லாரு மெள்ளப்படுமென்றார். (க)

பயனில பல்லார்முற் சொல்ல னயனில
கட்டார்கட் செய்தலிற் றீது.

இ-ள். பல்லார்முன் - (அறிவுடையோர்) பலர்முன்னே, பயனில-பயனிலாதசொற்களை, சொல்லல் - (ஒருவன்) சொல்லுதலானது, நட்டார்கண் - (தன்) னட்பாளரிடத்தே, நயனில-விருப்பமில்லாத செயல்களை, செய்தலின் - செய்தலினும், தீது- குற்றமாம்—எ-று. (கருத்து.) பயனிலாச் சொற்களைச் சொல்லுதல் சிநேகரிடத்து நீதியில்லாதவைகளைச் செய்தலினும் குற்றம்-என்பதாம். * விருப்பமில்லாத செயல்களை-வெறுக்கப்படுசெயலாம், இச்சொல் அச்செயலைக் காட்டிலும் மிகவும் இகழப்படுதலை உண்டாக்குமென்பதாம். (உ)

நயனில னென்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கு முரை.

இ-ள். பயனில - பயனில்லாத பொருள்களை, பாரித்து- விரித்து, உரைக்குமுறை - (ஒருவன்) உரைக்கும் உரையானது, நயனிலனென்பது - (இவன்) நீதியில்லாதவனென்பதனை, சொல்லும்-அறிவிக்கும்—எ-று. (கருத்து.) பயனில்லாப் பொருளைச் சொல்லுஞ் சொல்லானது நீதியில்லாதவனென்பதை யறிவிக்கும்-என்பதாம். * இப்படிப்பட்ட உரையிலே இவன்-நீதியில்லாதவனென்பதை அறியலா மென்றற்கு அதனை உரைமேலேற்றி உரைசொல்லுமென்றார். (ங)

நயன்சாரா நன்மையி னீக்கும்பயன் சாராப்
பண்பில்சொற் பல்லா ரகத்து.

இ-ள். பயன்சாரா - பயனோடு பொருந்தாத, பண்பில்சொல் - குணமில்லாதசொற்களை, பல்லாரகத்து - பலரிடத்தே (ஒருவன் சொல்லுவானாயின்) (அவை அவரிடத்தே) நயன்சாரா - நீதியோடு பொருந்தாதவையாகிய, நன்மையின் - நற்குணங்களிலிருந்து, நீக்கும்- (அவனை) நீக்கும்—எ-று. (கருத்து.) குணமில்லாச்சொற்களை யொருவன் சொல்லுவானாகில் அவை அவனை நற்குணங்களைவிட்டு நீக்கும்-என்பதாம். * புண்பு இனிமை மெய்மை முதலாகிய சொற்குணங்கள், சொல்லுவானின் அவரிடத்தே என்பவை-சொல்லெச்சங்கள். (ச)

சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
கூர்மை யுடையார் சொலின்.

செய்து பழகிவந்தமையால் அஞ்சாதொன்றும் செய்தறியாமையால் அ சுவாதொன்றும் - சொல்லினார்.

தீயவை தீய பயத்தலாற் தீயவை
தீயினு மஞ்சப் படும்.

இ-ள். தீயவை - (இன்பத்தின் பொருட்டுச்செய்யும், தீவினைக (பின்னே) தீய-துன்பங்களை, பயத்தலால்-தருதலால், தீயவை- (அ டிப்பட்ட) தீவினைகள், தீயினும்-தியினும் அதிகமாக, அஞ்சப்படும்- ருவனால்) அஞ்சப்படும்—எ-று. (கருத்து.) டாலமாவைவைறன்பத்தை க்கொடுத்தலால் அப்பாவங்களுக்கிலியிலும் கொடியனை- என்பதாம். வேறொருகாலத்திலும் வேறொரிடத்திலும் வேறொருடம்பிலும் போ ச்சுடுதல் தீவினைக்கே அல்லாமல்நெருப்புக்கு இல்லாமையால் தீயி மீ அஞ்சப்படுமென்றார். (உ)

அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல்.

இ-ள். செறுவார்க்கும்- (தம்மை) வருத்துவோரிடத்தும், தீய- வினைகளை- செய்யாவிடல் - செய்யாமல்விடுதலை, அறிவினுளெல்லாம் (தமக்குஉறுதிநாடும்) அறிவுகளெல்லாவற்றிலும், தலை - முதலானவ வாகும், என்ப. (என்றுநல்லோர்) சொல்லுவர்—எ - று. (கருத்து. தம்மைவருத்துவோரிடத்தும் தீவினைகளைச் செய்யாமல் விடுதல் எ லாவறிவினுள்ளுந் தலைமை-என்பதாம். * விதற்குக் காரணமாகிய நிலைவிடவென்றும் செய்யத்தக்கவிடத்தும் செய்யாதிருந்தால் தய குத் துன்பம்வராதென்று ஆலோசித்தறிதலால் அதனை அறிவினுள் ல்லாந் தலையென்றும் சொல்லினார். [இவை மூன்றுபாட்டாலும், தீவி னைக்கு-அஞ்சலேண்டுமென்பது சொல்லப்பட்டது.] (ஈ)

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழி
னிறந்தசூழ்வு சூழ்ந்தவன் கேடு.

இ-ள். (ஒருவன்) பிறன்-பிறனுக்கு, கேடு-கேட்டைத்தரும் வினை யை, மறந்தும்-மறவினையப்பொருந்தியும், சூழற்க-எண்ணுதிருக்கக்கட வன், சூழின்-எண்ணுவானாயின், சூழ்ந்தவன்-அவ்வெண்ணினைவனுக்கு கேடு-கேட்டைத்தரும்வினையை, அறம்-அறக்கடவுள், சூழும்-எண்ணு வான்—எ-று. (கருத்து.) ஒருவன்மறந்தும் பிறனுக்குக்கேட்டைநி யாதிருக்கக்கடவன் நினைப்பானாயினவனுக்குத் தருமக்கடவுள்கேட்டை நினைக்கும்-என்பதாம். * கேடிரண்டும் அவற்றைத் தருமவினைகளை ணர்த்தலால் ஆகுபெயர்கள். எண்ணுகிறபொழுதே தானும்உடனே ண்ணுதலால் இவன் பிற்பாட்டாலும், அறக்கடவுள் முற்படுவா னென் பதுகொள்ளப்பட்டது. [அறக்கடவுளெண்ணுதலாவது- அவன்கெ டத்தான்நினைக்க நினைத்தல், தீவினையையெண்ணுதலு மாதாதென்பதாம்.

இலனென்று தீயவை செய்யற்க செய்யின்
னிலனாகு மற்றும்பெயர்த்து.

இ-ள். இலனென்று-வறுமையையுடையனென்று நினைத்து,(அ தனிச்சற்பொருட்டு) தீயவை - தீவினைகளை, செய்யற்க - (ஒருவன்பிறர் நிமித்தம்) செய்யாதிருக்கக்கடவன், செய்யின் - செய்தால், பெயர்த்தும்-பின்னும், இலனாகும்-வறுமையையுடையனாவான்—எ-று. (கருத்து.)வறுமையச்சத்தினாலே தீவினைசெய்யாதிருக்கக்கடவன் செய்வானாயின் வறுமையுடையவனாவான் - என்பதாம். * மற்றும்-அசைநிலை. அத்தீவினையினாலே பிறவிதோறும் வறியவனாவனென்பதாம். (இ)

நிப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னோயடல் வேண்டா தான்.

இ-ள். நோய்ப்பால - துன்பந்தருகின்ற கூறுடைப்பாவங்கள், தன்னை - தன்னை, அடல்வேண்டாதான் (பின்வருத்துதலைவேண்டாதவன்), நிப்பால்-தீமைக்கூறுடையவினைகளை, தான்-தான், பிறர்கண்-பிறரிடத்தே, செய்யற்க -செய்யாதிருக்கக்கடவன்—எ-று. (கருத்து.)பாவங்கள்பின்பு தன்னைவருத்துதலை யிச்சியாதவன் பாவங்களைப்பிறரிடத்துச்செய்யாதிருக்கக்கடவன் - என்பதாம். * செய்வானாயின் அப்பாவங்கள் அவனைவருத்துவதற்கு ஐயமில்லை யென்பதாம். (ஈ)

எனைப்பகையுற்றாரு மாய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும்.

இ-ள். எனைப்பகையுற்றாரும் - யாவ்வளவு பெரியபகைகளை யுடையவரும், உய்வர்-(அதனை ஒருவழியிலாலே) தப்புவார், (அப்படியல்லாமல்) வினைப்பகை - தீவினையாகியபகையானது, வீயாது - நீங்காமல், பின்சென்று-போனவிடத்துக்குப்போய், அடும்-கொல்லும்—எ-று. (கருத்து.) எவ்வளைகப்பகையை யுடைந்தவர்களுங் கடைத்தேறுவார். தீவினைப்பகையானது பின்னெனைநாடர்ந்துகொல்லும்-என்பதாம். (உ)

தீயவை செய்தார் கெடுதல் நிழறன்னை
வீயா தடியுறைந் தற்று.

இ-ள். தீயவை-தீவினைகளை, செய்தார்-(பிறருக்குச்)செய்தவர், கெடுதல்-தாங்கெடுதல், (எத்தன்மைத்தென்றால்) நிழல்-(ஒருவனது) நிழலானது (நெடுந்தூரம்போயினும்) தன்னை - அவனை, வீயாது-விடாதுவந்து, அடி-அடியினிடத்தே, உறைந்தற்று-தங்கியதன்மைத்து-எ-று. (கருத்து) தன்னிழலானது நெடுந்தூரஞ் சென்றுந்தன்னடியிலேதங்கியதுபோலத்தீவினைகளுந் தன்னைநாடுதங்கும்-என்பதாம். * முன்பாட்டில்வினைப்பகைவீயாது பின்சென்றடுமென்று சொல்லப்பட்டதை இவ்வுபமானத்தினால் விளக்கினார். (ஊ)

தன்னைத்தான் காதலனாயி னெனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்.

இ-ள். (ஒருவன்) தன்னை-தன்னை, தான்-தான். காதலனாயின்-(பிறரிடத்தும்) அன்புகலுடையவனாயிருந்தால், தீவினைப்பால் - தீவினையாகியபிரிவிற்கு, எனைத்தொன்றும் - எவ்வளவு சிறியதொன்றையாயினும், துன்னற்க - (பிறரிடத்தே) செய்யாதிருக்கக்கடவன்—எ-று. (கருத்து.) தன்னைக் காக்கவிரும்பினாற் பிறனிடத்திலெவ்வளவும் பாபஞ்செய்யாதிருக்கக்கடவன்-என்பதாம். * நல்வினை தீவினை எனவினைப்பிரிவு இரண்டாகலின் தீவினைப்பாலென்றார். பிறரிடத்தேசெய்த தீவினைதன்னிடத்தே தன்பந்தருதலை விளக்கினாராதலால்-தன்னைத்தான் காதலனாயினென்றார். [இவ்வாறுபாட்டாலும் பிறருக்குந் தீவினைசெய்தால்தாம்கெடுவோன்பது சொல்லப்பட்டது.] (க)

அருள்கடனென்பதறிக மருள்கோடித்
தீவினை செய்யா வெனின்.

இ-ள். ஒருவன் (செல்லையானவழியையிட்டு) மருள்கோடி - கோணவழியிலேசென்று, தீவினை-தீவினைகளை, செய்யாவெனின் - (பிறரிடத்தே) செய்யானாயின், அருள்கடனென்பது - (அவன்) இல்லாதவர்களிடையுடையவனென்பதை, அறிக - அறிவாக்கடவர்—எ-று. (கருத்து.) ஒருவன் பாவந்செய்யாதிருப்பானாகிற் கேடில்லாதவனென்றறியக்கடவன்-என்பதாம். * [இதனாலே தீவினைசெய்யாதவன் கேடில்லாதவனாவனென்பது சொல்லப்பட்டது.] (ஙி)

உஉ-ஆம்-அதி-ஒப்புரவறிதல்.

ஆம்காவது, உலகங்களுடனைய அறிந்துசெய்தல் மனிதவாக்குக் காயங்களாலே செய்யத்தகாதனவு சொல்லினார், இனிச்செய்யத்தகுவனவைகளில் முன்சொல்லப்பட்டவற்றுள் அடங்காதனவைகளைச் சொல்லுகின்றாராகையால் இது தீவினையச்சத்தின்பின் வைக்கப்பட்டது.

கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட்
டெம்மருற்றுள் கொல்லோ வுலகு.

இ-ள். உலகு - உயிர்களானனைவும், மாரிமாட்டு-(தமக்குநீருதவுகின்ற) மேகங்களிடத்து, எம் - என்னபிரதியுபகாரத்தை, ஆற்றும் - செய்துவருகின்றன - [ஒன்றுஞ்செய்கின்றனவில்லையென்றபடி] (ஆதலால்)கடப்பாடு (அம்மேகங்கள் போல்வார்செய்யும்) உபகாரங்களும், கைம்மாறு

திதி யுப்காரங்களை, வேண்டா- வேண்டுவனவல்ல—ன-று. (கருத்து.) மேகங்களுக் கொப்பானவர்செய்யு முபகாரங்கள் பிரதி யுபகாரங்களை வேண்டுவனவல்ல-என்பதாம். * கொல்-ஓ-அசைகள் கடப்பாடென்னும் பெயரினாலேயே அவசியம்செய்ய வேண்டுவதென்பது பெறப்பட்டது. உபகாரஞ்செய்வாரது வேண்டாமையை உபகாரத்தின்மேல் ஏற்றினர். (க)

தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

இ-ள். தக்கார்க்கு - தகுதியுடையவர்க்காயின், தாளாற்றி-முயற்சிசெய்து, தந்த - சம்பாதிக்கப்பட்ட, பொருளெல்லாம் - பொருளனைத்தும், வேளாண்மை - உபகாரத்தை, செய்தற்பொருட்டு - செய்தற்பயனுடையனவாம்—ன-று. (கருத்து.) முயற்சிசெய்து சம்பாதித்தபொருளெல்லாம் முபகாரஞ் செய்யும்பொருட்டு - என்பதாம். * தகுதியில்லாத பிறருக்குப்போல் தாம் அனுபவித்தற் பொருட்டும், வைத்திழந்தற்பொருட்டும் அல்லவென்பதாயிற்று. (உ)

புத்தே ளுலகத்து மீண்டும் பெறலரிதே
யொப்புறவி னல்ல பிற.

இ-ள். புத்தே ளுலகத்தும் - தேவருலகத்திலும், ஈண்டும்-இவ்வுலகத்திலும், ஒப்புரவின் - உபகாரம்போல், நல்ல-நல்லவையாகிய, பிற - வேறுசெயல்களை, பெறல்- பெறுதல், அரிது - அரிதாம்—ன-று. (கருத்து.) விண்ணுலகத்தும் மண்ணுலகத்தும் உபகாரத்தைப்போல வேறொன்றில்லை-என்பதாம். * கொடுப்பாரும், கொள்வாரும், இல்லாமல் எல்லாரும், ஒருதன்மையராயிருக்கையால் தேவருலகத்தில் அரிதாயிற்று யாவருக்கும் ஒப்பதிதுபோல் வேறொன்று இல்லாமையால் இவ்வுலகத்தில் அரிதாயிற்று. [இவை மூன்றுபாட்டாலும் ஒப்புரவினது சிறப்புச்சொல்லப்பட்டது.] (ஊ)

ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

இ-ள். ஒத்ததறிவான் - உலகநடனைய அறிந்துசெய்பவன், உயிர்வாழ்வான் - உயிரோடுகூடிவாழ்பவனெனவாம், மற்றையான்-அதனை அறிந்துசெய்யாதவன் (உயிருடையனெனிருந்தாலும்) செத்தாருள் - இறந்தார்களுள், வைக்கப்படும் - (ஒருவனாக) வைக்கப்படுவான். (கணிக்கப்படுவா னென்றபடி.)—ன-று. (கருத்து.) உலகவியல்லையறிந்து கூடப்பட்டு உயிரோடுவாழுபவன் அவ்வியல்லையறியாதவன் செத்தவன்-என்றாம். * உயிருக்குரிய அறிவும், செயலும், அவனிடத்தேகாணப்படாமையால் - செத்தாருள் வைக்கப்படுமென்றார். [இதனால் உலகநடை

மிலேதவறுதல் வேதனுண்டையிலே தவறுதல்போல் நீரும் வழினை உடை
யதல்லவென்பது சொல்லப்பட்டது. (கு

ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் றிரு. 4.

இ-ள். உலகு-உலகானடையை, அவாம் - விரும்பிச்செய்யும், பே
றிவாளன் - பெரியவரிவினையுடையவனுனவன், திரு - செல்வத்தி
லே (நிறைதல்) ஊருணி - ஊரில்வாழ்வார் (நீருண்ணுங்குளமானது)
ர்நிறைந்தற்று நீரிலுலே நிறைந்தாற்போலும்—என்-று. (கருத்து.) அறிவு
ளர் செல்வமானது ஊராருண்ணுங குளத்திலே நீர் நிறைந்தாற்போ
லும்-என்பதாம். * அச்செல்வம் பாழ்படாமல் நெடுங்காலம் எல்லாரு
க்கும் வேண்டுமளவில் உதவுமென்பதாம். (இ

பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றுச் செல்வ
நயனுடை யான்கட் படின்.

இ-ள். செல்வம் - செல்வமானது, நயனுடையான்கண்- உபகா
ஞ்செய்பவனிடத்தே, படின் - உண்டாகுமாஞல் (அவ்வுண்டாதல்)உ
ள்ளூர் -. ஊர்நடுவே, மரம்-மரத்தினிடத்தே, பயன் - பழமானது, படு
த்தறறு - பழுத்தல்போலும்—என-று. (கருத்து.) செல்வம் உபகாரஞ்செ
ய்பவரிடத்திலுண்டாகில் நடுவூரிலே மரம்பழுத்தாற்போலும்- என்பதா
ம். * ஆல்- அசைகள், உலகத்தி பலவகையிலும் ஒப்புரவு சிறந்தவ
ரால் அதனையனைவர்க்கும் அவன் அம்மரம்போல் எல்லார்க்கும் என்
றிலே பயன்கொடுப்பா னென்பதாம். (சு

மருந்தாகித் தப்பா மரத்தற்றுச் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்.

இ-ள். செல்வம் - செல்வமானது, பெருந்தகையான்கண் - (உ
காரஞ்செய்யும் பெரியதனகனைய) யுடையவனிடத்தே, படின் - உண்டா
குமாஞல், (அச்செல்வமானது) மருந்தாகி - எல்லாவுருப்புக்களும் (பி
னிகளுக்கு) மருந்தாய், தப்பா-தப்பாத, மரத்தற்று-மரத்தை ஒக்கும்—
என-று. (கருத்து.) பெரியோரிடத் துண்டாகிய செல்வம் அது மரு
தாகி மரத்துக்கொப்பாகும்-என்பதாம். * ஆல்- அசை - எல்லாவுறுப்
மென்றதுமரத்துக்கு-இலை,பூ, காய்,கனி, முதலானவைகளை செல்வத்
க்கு அநுபவித்தற்குரிய பலபொருள்களை தப்பாமையானது - கொள்ள
தற்கரிய விடங்களிலே நின்றுவது, மறைந்துநின்றுவது காலத்தால்மே
றுபட்டாவது பயன்படாமை தன்குறைவை நோக்காமல் எல்லாவரு
கமும் தீர்க்குமென்பதாம். [இவை மூன்றுபாட்டாலும் உபகாரஞ்செ
ய்பவனது பொருள்பயன்படுமாறு சொல்லப்பட்டது.] (எ

இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்.

இ-ள். கடனறி - (தாம்) செய்யத்தகுமவைகளை அறிந்த, காட்சியர் - இயற்கையறிவையுடையவர், இடனிலபருவத்தும் - செல்வஞ்சுருங்கியகாலத்திலும், ஒப்புரவிற்கு - உபகாரஞ்செய்தற்கு, ஒல்கார் - தளரார்—எ-று. (கருத்து.) அறிவுடையோர் வறுமையிலு முதவிசெய்தற்குக் குறைவுபடார் - என்பதாம் * மற்றவைகளையெல்லாம் விட்டாலும் இதனைவிடாரென்பதாம். (அ)

நயனுடையா னல்கூர்ந்தா னீதல் செயுநீர்மை
செய்யா தமைகலா வாறு.

இ-ள். நயனுடையான் - உபகாரஞ்செய்தலையுடையவன், நல்கூர்ந்தானீதல் - வறுமைபட்டவனுதலாவது, செய்யும் - (ஒழியாமற்) செய்யும், நீர்மை - குணத்தையுடைய அவ்வுபகாரங்களை, செய்யாது - செய்யப்பெறுமல், அமைகலாவாறு - வருந்துகின்றவியல்பாம்—எ-று. (கருத்து) உபகாரி வறியவனுதல் செய்யு முதவிசெய்யாமையாலேதான் என்பதாம். * தான் அனுபவிக்கப்படும்பொருள்களைப் பெறுமை அவற்றுக்கு வறுமையல்லவென்பதாம். [இவை இரண்டுபாட்டாலும் வறுமையால் ஒப்புரவுசெய்யாது விடத்தகக்கதல்லவென்பது சொல்லப்பட்டது.] (கூ)

ஒப்புறவி னல்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து.

இ-ள். ஒப்புரவினால் - உபகாரஞ்செய்தலினாலே, வருங்கேடெனின் - (ஒருவனுக்குப்பொருட்) கேடுவருமென்பவருண்டாயின், அஃது - அக்கேடானது, ஒருவன் - ஒருவன், விற்று(தன்னை) விற்றாயினும், கோட்டக்கதுடைத்து - வாங்குந்தகுதியையுடையதாகும்—எ-று. (கருத்து.) உதவிசெய்தலாற் கேடுவருமெனிலவ்வுதவியைத் தன்னைவிற்றாயினுஞ்செய்யக்கடவன் - என்பதாம். * தன்னைவிற்றுவாங்கப் படுவதொரு பொருள் - இல்லையாயினும் இக்கேடுபுகழையுண்டாக்கலால் அதுவும் செய்யப்படுமென்றது. [இதனாலே ஒப்புரவினாலே கெடுவது கேடல்லவென்பது சொல்லப்பட்டது.] (ஈ)

உஉ - ஆம் - அதி - ஈகை.

ஈதல்காவது, வறியவராய் இறந்தவர்க்கு இல்லையென்னுமல்கொடுத்தல். இதுமறுமையைக்குறித்ததாகலின் இம்மையைக்குறித்த ஒப்புரவறிதலின் பின்வைக்கப்பட்டது.

வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

இ-ள். வறியார்க்கு - ஒருபொருளுமில்லாதவர்க்கு. ஒன்று - (அவர்வேண்டிய) தொன்றை, ஈவதே - கொடுத்தலே, ஈகை - (பிறர்க்குக்) கொடுத்தலாகும் - மற்றெல்லாம் - (அதுநீங்கலாகிய) எல்லாக்கொடையும், குறியெதிர்ப்பை - குறிக்கப்பட்டபின்வரும்பயனேடுகூடிய, நீர - குணத்தைஉடைத்து-உடையதாகும்—எ-று. (கருத்து.) தரித்திருக்குக் கொடுத்தலேகொடையாகும, மற்றவர்களுக்குக் கொடுத்தன்வாங்கிக்கொள்ளும் பயனுகும் - என்பதாம் * அதுநீங்கலாகிய கொடை - வறியவரல்லாதவர்க்கு ஒருபயனை நோக்கிக்கொடுத்தல், நீரது என்பதில் அதுபருதிப்பொருள் விகுதி பின்னும் தம்மிடத்தே வருதல் குறியெதிர்ப்பைநீர துடைத்தென்றார். [இதலில் ஈகையினது இலக்கணம் அறிவிக்கப்பட்டது.]

நல்லா றெனினும் கொளறீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று.

இ-ள். கொளல் - இரத்தல், நல்லாறெனினும் - (மேலுலகத்துக்கு) நல்வழியென்பவர் உண்டாயினும் (அது) தீது-குற்றமாம்(கொடுக்கவர்க்கு) மேலுலகம் - அந்தமேலுலகத்தையடைதல், இல்லெனினும் - இல்லையென்பவர் உண்டாயினும், ஈதல்-கொடுத்தலே, நன்று-நன்மை—எ-று. (கருத்து.) யாசித்த நல்வழி யென்றலும் வாங்குங்குற்றமே. கொடுத்தலாலே முத்திஇல்லையென்றலுங் கொடுத்தல்நல்லது-என்பதாம் * எனினுமென்பன - இரண்டும் அப்படிசொல்லுநில்லாமையைக் காட்டிநின்றது, ஏகாரத்தால் பிறவறங்களில் எனைத்தாகுதென்பது பெறப்பட்டது நல்லது சொல்லவந்தவர் தீயதும் உளஎன்சொல்லினர்.

இலனென்னு மெவ்வ முறையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள.

இ-ள். இலனென்னும் - வறியனென்று (இரப்பவன்) சொல்லும், எவ்வம் - இழிவை, உரையாமை-(பிறரிடத்தே) சொல்லாமையும், (தானேதன்னிடத்தே சென்றவர்க்கு) ஈதல் -(இல்லையென்னுமற்) கொடுத்தலும்(ஆகியவிரண்டும்) குலனுடையான்கண்ணே, நல்லகுடியிற்பிறந்தவனிடத்தே, உள- உண்டாயிருக்கும்—எ-று. (கருத்து. நற்குடியிற்பிறந்தவரிடத்தில் இல்லையென்னுமையுங்கொடுத்தலுமுண்டு - என்பதாம், மூன்றாட்டிலே தீதெனப்பட்டதைச் செய்யாமைக்கும், நன்றெனப்பட்டதைச் செய்தற்கும் உரியவனே அறிவித்தபடி.

இன்ன திரக்கப் படுத லிரந்தவ
னின்முக நோக்கு மளவு.

றி-ன். (இரந்தலேயல்லாமல்) இரக்கப்படுதல்- இரக்கப்படுதலும்)ன்மையு- இன்பந்தருஞ்செய்வதல்லாது இரந்தவர்- (ஒருபொருளை) இரந்தவ னு, இன் - (அதனாற்பெற்றதனால்) இனிதாகிய, முகம்முகச்சுளி, காணுமை வும்-பார்க்குமளவுமே—என்-று. (கருத்து.) இரந்தஸ்அவரினியமுகத்தைக் ணுமளவுந்துன்பம்-என்பதாம். * உம்மை இரண்டும் வருவிக்கப்பட் ன, இரக்கப்படுதல்- இப்பவர்க்குக்கொடுப்பினெனத்தீர்மானித்தல் - எல் ரிரப்பவர்க்கு ஒன்று கொடுக்கக்கூடாமைநேரிடுமோவென்னும் அ ச்சத்தைக்குறித்து அதனை இன்னைகென்றார். எனவே எல்லாம்பொரு ந்தம் கொடுக்க வேண்டுமென்றதாயிற்று. (எ)

ஆற்றுவா ராற்றல் பசியாற்றி லப்பசியை
மாற்றுவர் ராற்றலிற் பின்.

இ-ள். ஆற்றுவார் -(தவத்தால்) வல்லவராவோருக்கு ஆற்றல்-வல் மையாவது, பசியாற்றல் - (தம்மைஅடைந்த) பசியைப்பொறுத்த லும், (அவ்வல்லமைதான்) அப்பசியை - அப்படிப்பொறுத்தற்கரிய சியை, மாற்றுவார் (கொண்டிரந்தேனும்) நீக்குவாராது, ஆற்றலிற்பின்-வல் மைக்குப்பின்—என்-று. (கருத்து.) தவத்தோர்க்குப் பசியைப்பொறுத் ல்-வல்லமையாம், வல்லமையிலுள் பசியையாற்றுவார் வல்லமை பரிதாம் - என்பதாம். * காமும் பசித்துப் பிறருக்கும் அதுநீக்கமாட் ாதவரது வல்லமையைக்காட்டிலும் காமும் பசியாதுபிறருக்கும் அ நீர்ப்பவரது வல்லமை கன்றென்பதாம். (ஙு)

அற்றா ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

இ-ள். அற்றார்-வறியவரது, அழிபசி-மிகுந்தபசியை, தீர்த்தல்-(அ ஞ்சித்) தீர்க்கக்கடன், ஃஆம்-து - அவ்வறர், பொருள் பெற்றுமே வன் - பொருள்படைத்தவனாகிய வொருவன், வைப்புழி - (அப்பொரு ள் தனக்குதவி) வைக்குமிடம் (ஆதலால்)—என்-று. (கருத்து.) பொரு பெற்றவன் வறியர்பசியைத்தீர்த்தலே யவன்பொருள்வைக்குமிட ன்பதாம். * எல்லாவன்மைகளும் அழியவருதலால்அழிபசியென் ார் அற்றாரழிபசிதீர்த்தபொருள்பின்தனக்கேகவந்து உதவுமென்பதாம்.

பாத்தூண் மரீஇ யபசினைப் பசியென்னுஞ்
தீப்பிணி தீண்ட லரிது.

இ-ள். பாத்தூ-(எக்காளும்) பகுத்து, ஊண்-உண்ணுதல், மரீஇயவ ர்-பழகியவனை, பசிபென்னும்-பசியெனப்படும், தீப்பிணி-தீயநோய், ண்டலரிது-தீண்டுதலில்லை—என்-று. (கருத்து.) பிறர்க்கிட்டுண்ணுவோ ர்ப் பசிநோய் தீண்டாது-என்பதாம். * இவ்வுடம்பிலேதின்றுஞானத் தையும் ஆகாரத்தையும் கெடுத்து அதனால்பின்வரும் உடம்புகளுக்கும்

துன்பஞ்செய்தலால் தீப்பிணியென்னப்பட்டது. தனக்கு மருந்தா
ன்தானேயாகையால்பசிப்பிணிசோராதென்பதாம். [இவையிரண்டா
லும் ஈதலின் சிறப்புச்சொல்லப்பட்டது.] (எ)

ஈத்துவக்கு மின்ப மறியார்கொ லுழுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்.

இ-ள். தாழுடைமை - தம்முடையபொருளை, வைத்து-(கொடாது)
வைத்து, (பின்னே) இழக்கும்-இழந்துவிடும், வன்கணவர்-அருளிலா
வர், ஈத்து- (வறியவர்க்குரியவண்டியபொருள்களை) கொடுத்து, உவ
கூர் -(அவர்) மகிழ்தலினால் (அருளுடையாரடையும்) இன்பம் - மகி
ச்சியை, அறியார்கொல் - கண்டறியாரோ—எ-று. (கருத்து.) பொருள்
த்தேடிவைத்திழப்பவர்கொடுத்து மகிழுமின்பத்தை யறியார் - என்பதா
ம் *சொற்சென்பது எதுகைநோக்கிஈத்தென்றுயிற்று. அறிந்தாராயினு
மும் அவ்வின்பத்தை அனுபவிப்பாரேயல்லாமல் வைத்திழவாரென்ப
து கருத்து. (அ)

இரத்தலி னின்னது மன்ற விரப்பிய
தாமே தமிய ருணல்.

இ-ள். விரப்பிய - (பொருளின்குறைவை) நிறைக்கவேண்டி) இர
தவர்க்குக்கொடாமல்) தாமே - தாமே தமியர், தனித்தவராகி உணல்
உண்ணுதலானது (ஒருவருக்கு) மன்ற - நிச்சயமாக, இரத்தலின் -(பி
றரிடத்தேபோய்) இரத்தலினும, இன்னாது - துன்பஞ் செய்வதா
—எ-று. (கருத்து.) பிறர்க்குக்கொடாமல் தாமேயுண்ணுதல் யாசிப்பதி
லுந் துன்பம் - என்பதாம். * பொருளின்குறையை நிறைத்தலாவது, ந
வ்வொருதொகையைக்குறித்து அவ்வளவு சம்பாதிப்போமென்று நி
த்தொழிலையே மேற்கொண்டு உலோபஞ்செய்து சேர்த்தல் - தனித்தல்
பிறனைச்சாராமை. இரத்தலுங்குஉள்ளது அப்போதையிழிவே - பி
னைவறுமையில்லை - தனித்துண்ணுதலுக்கு அவ்விரண்டும் உண்டா
மாதலால் இரத்தலினின்னாதென்றார். (ஆ)

சாதலி னின்னாத தில்லை யினிதாஉ
மீதலியையாக் கடை.

இ-ள். (ஒருவனுக்கு) சாதலின்- இறத்தல்போல், இன்னாதது-துன்
பஞ்செய்வதொன்று, இல்லை-இல்லை, அதூஉம் - அப்படிப்பட்ட இறப்
லும், ஈதல் - (வறியவர்க்குக) கொடுத்தல், இயையாக்கடை- கூடியாதவி
டத்து, இனிது- இன்பஞ்செய்வதாகும்—எ-று. (கருத்து.) இறத்தலில்
டத்துந்துன்பமில்லை, இறந்தவர்க்குக்கொடா விடத்திறத்தலே யின்பம்
என்பதாம். * பிறருக்குப் பயன்படாத உடற்சுமைநீங்குதலால் - இ
தென்றார், [இவைமூன்றுபாட்டாலும் சுயாமையின் குற்றம் சொல்
ப்பட்டது.] (இ)

உசு-தும்-அதி - புகழ்.

அஃதாவது, இல்வாழ்க்கை முதல் ஈகை ஈராகச் சொல்லப் பட்ட. இல்லறத்தில் நவறுதலவர்க்கு இயைபப்பயனாகி இவ்வுலகத்திலே செய்தபழியை நிற்பதாகிய கீர்த்தியாம், இதுபெரும்பாலும் ஈகைபற்றி வருதல். ல் அதன்பின்வைக்கப்பட்டது.

ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தாதிய மில்லை யுயிர்க்கு.

இ-ள். ஈதல் - (வறியவர்களுக்கு கொடுத்தலினாலே, இசைபட - புகழுண்டாக, வாழ்தல்-வாழக்கடவர், அதுவல்லது-அப்புகழல்லாமல், உயிர்க்கு-(மக்க) ளுயிர்க்கு, ஊதியம்-வேறுபயன், இல்லை-இல்லை,(ஆதலால்) —எ-று, (கருத்து.) கொடுத்தலாற் கீர்த்தியுண்டாகவாழக்கடவர், அக்கீர்த்தியையல்லாமல் மக்களுயிர்க்கு இலாபமில்லை - என்பதாம். * இசைபடவாழுதற்குக்கல்வி ஆண்மைமுதலாகியவேறுகாரணங்களும் இருந்தினும் ஈகை சிறந்ததாதலால் எடுத்துச்சொல்லப்பட்டது. (க)

உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கொன்
றீவார்மே னிற்கும் புகழ்.

இ-ள். உரைப்பார் - (உலகத்திலெவ்வழியை.) உரைப்பவரால், உரைப்பவையெல்லாம் - உரைக்கப்படுமவைகளெல்லாம், இரப்பார்க்கு-(வறுமையால்) இரப்பவர்க்கு, ஒன்று - (அவர்வேண்டிய) தொன்றை, ஈவார் மேல் - கொடுப்பவரிடத்தே, நிற்கும்-நிற்கும், புகழ்-கீர்த்தியளாம்-எ-று. (கருத்து.) கொடுப்பவரிடத்தே கீர்த்திநிற்கும் -என்பதாம். *புகழ்தான் உரையும், பாட்டும், என இருவகைப்படும் அவற்றுள் - உரைப்பாருரைப்பவையென எல்லார்க்கும் உரியவழக்கத்தையே எடுத்தாராகிறும் இனம்பற்றிப் புலவர்க்கே உரியபாட்டும் கொள்ளப்படும்படியே - பாடுவார்பாடுவெல்லாமிரப்பார்க்கொன் றீவார்மேனிற்கும்புகழ் என்பதும்பெற்றும் புகழின் காரணங்களுள்ளீதல்சிறந்தமை இதனுள்ளுங்கொண்க.(

ஒன்று வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றுத நிற்ப தொன்றில்.

இ-ள். ஒன்று - தனக்குஇணையில்லையாக, உயர்ந்த-ஓங்கிய, புகழல்லால் -கீர்த்தியல்லாமல், உலகத்து-உலகத்திலே, பொன்றுத - அழியாமல், நிற்பது-நிலைபெறுவது, ஒன்று-வேறொன்று, இல்-இல்லை—எ-று. (கருத்து.)உலகத்திற்புகழையல்லாது நிற்பதொன்றில்லை-என்பதாம். * தனக்குஇணையில்லையாக வேண்டுதலாவது கொடுத்தற்கரிய உயிரையும், உறுப்பையும் பொருளையும், கொடுத்தமைபற்றி வருதலால் தன்னை ஒப்பது இல்லாமல்தானே உயர்தல். அப்படிப்பட்டபுகழையே

மனிதனாய்ப்பிறந்தவன் சம்பாதிக்கவேண்டுமென்பதாம். [இவைமூன்று பாட்டாலும் புகழது சிறப்புச்சொல்லப்பட்டது. (ரு)

நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப்
போற்றுது புத்தே ளுலகு.

இ-ள். (ஒருவன்) நிலவரை-பூமியினெல்லையில், நீள்புகழ் - அழியாது நிற்கும்புகழை, ஆற்றின் - செய்வானாயின், புத்தேளுலகு - தெய்வலோகமானது, (அவனையல்லாமல்) புலவரை - தன்னையடைந்திருக்கிற) ஞானிகளை, போற்றுது-பேணாது—எ-று.(கருத்து.)உலகிலழியாது நிற்குமபுகழை யொருவன் செய்வானெனில் தேவலோகந் தேவர்களைத்தியாது-என்பதாம். * இவன்போல் அவர் புகழ்வடிவால் இவ்வுலகத்தையும், தேவவடிவால் அவ்வுலகத்தையுங், ஒருசேர அடையாமையால் புலவரைப்போற்றாது புத்தேளுலகென்றார். (ச)

நந்தம்போற் கேடு முளதாரு சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.

இ-ள். வித்தகர்க்கல்லால் - திரமையையுடையவர்க்கு அல்லாமல், மற்றவாக்கு)- நந்த மாகும் (புகழுடம்பிற்கு) பெருக்கமாகும், கேடும்-(வறுமையும், அரிது - இல்லை, உளதாகும் - (அப்புகழுடம்பு) நிலைபெறுவதாகும், சாகாடும்-மரணமும், அரிது-இல்லை—எ-று (கருத்து.)அறிவிலார்களுக்குப்புகழுடம்பிற்குப் பெருக்கமாகும் வறுமையும் அவ்வுடம்பு நிலைபெறுவதாகு மாணமுமில்லை - என்பதாம். * நந்துளென்று முந்திலதெழிற் பெயர் நந்துளனெனவிகாரப்பட்டு அம்மிகுதிபெறாவந்தது போல் உளாயனை-ஆகும் -அரிது-இவற்றை முன்னுங்கூட்டப்பட்டன, பெருக்கமாகுமேகடாவது- புகழுடம்புசெல்வனை அடைதற்கும் நுகர்ச்சிப்பு வறுமைப்பாடல். நிலைபெறுவதாகு மரணமாவது, புகழுடம்பு நிலைபெறற்குப் பூதவுடம்பு இறத்தல்நிலையில்லாதவுடம்பை வருத்தியுமவிட்டுமே நிலையானபுகழை வளர்த்தலும் நிறுத்தலும் பிறர்க்குமுடியாமையால் வித்தகர்க்கல்லாலரிதென்றார். [இவைஇரண்டுபாட்டாலும் புகழுடையாரது மேன்மைசொல்லப்பட்டது.] (ரு)

தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
ான்றலிற் றோன்றாமை நன்று.

இ-ள். தோன்றின் - (மனிதராய்ப்) பிறந்தால், புகழொடு - புகழுக்கு ஏதுவாகியகுணத்தோடு, தோன்றுக - பிறக்கக்கடவர், அஃதிலார்-அக்குணமில்லாதவர், தோன்றலின் - (மனிதராய்ப்) பிறத்தலினும், தோன்றாமை - பிறவாமையானது, (விலங்குகளாய்ப்பிறத்தலென்றபடி.)நன்று-நல்லது—எ-று. (கருத்து.) பிறந்தாற்புகழோடு பிறக்கக்கடவர் அவ்வாறில்லாதெவர்க்கும் பிறவாமையேநல்லது-என்பதாம். * புகழுக்கு

எதனைவப்புகழென்றலால் ஆகுபெயர் இல்லாமொன்றதனால் மனிதராயென்பதும், மனிதராய்ப்பிறவாமையென்ற அருத்தாபத்தியினாலே விலக்கப்பிறந்த லென்பதும், கொள்ளப்பட்டன இகழ்வாரில்லாமையால் உண்டென்றார். (சு)

புகழ்பட வாழாதார் தங்கோவார் தம்மை
யிகழ்வானை கோவ தெவன்.

இ-ள். புகழ்பட - (தமக்குப்) புகழுண்டாக, வாழாதார்-வாழமாட்டாதவர், (அதுபற்றிப் பிறரிகழ்ந்தவிடததே) தங்கோவார் - (இவ்விகழ்ச்சிகமதுமாட்டாமையால்வந்ததென்று) சம்மைகோவாதவராகி, தம்மை-தம்மை, இகழ்வானை - நிந்திப்பவனை, கோவது - கொந்துகொள்வது எவன் -என்னநினைத்து—என்று. (கருத்து.) புகழுண்டாக வாழாதவர்தம்மையிகழ்ந்தவனை கொந்து கொள்வதென்ன - என்பதாம். * புகழ்பட்டவாழவேண்டியதாயிருக்க அப்படி வாழமாட்டாத குற்றம்பற்றிப்பிறர், இகழ்வது ஒருபகுமாகலால் - இகழ்வானை கோவதெவனென்றார். (சு)

வசையென்ப வையத்தார்க் கெல்லா மிசையெல்லு
மெச்சம் பெறுஅ விடின்.

இ-ள். இசையெல்லு மெச்சம் - புகழென்னுமளச்சத்தை - (பெறவேண்டியிருக்க) பெறுவிடின் - (அதனை) பெறுதவிடுவாராயின், வையத்தார்க்கெல்லாம் - பூமியிலுள்ளார்க்கெல்லாம், வசை -(அறுதானே) வசையாகும், என்ப - என்று (நல்லோர்) சொல்லுவர் —என-று. (கருத்து.) ஒருவன் கீர்த்தியென்னும் பிள்ளையைப் பெறுமலிருப்பானுகிலுலகிற்குவசையால் - என்பதாம். * செய்தவர் இறந்துபோகத் தாமிறவாமல் நிற்கையால் புகழை எச்சமென்றார். இகழப்படுதற்கு மற்றொருகுற்றம் வேண்டாமென்பது கருத்து. (அ)

வசையிலா வண்பயன் குன்று மிசையிலா
யாக்கை பொறுத்த நிலம்.

இ-ள் இசையிலார் புகழில்லாத, யாக்கை - உடம்பை, பொறுத்த - சுமந்த, நிலம் - நிலத்தில, வசையிலா - பழிப்பில்லாத, வண்பயன்-வளப்பத்தையுடையவிளைவு, குன்றும் - குறையும் —என-று. (கருத்து.) கீர்த்தியில்லாவுடலைச் சுமந்தநிலத்தில் விளைவுகுறையும் - -என்பதாம். * உயிருண்டாயினும் அதனாலபயன் சொளளாமையால் - யாக்கையென்றும், அதுநிலத்திற்குப் பாரமாதலின் பொறுத்தலென்றும் சொல்லினா விளைவுகுறைதற்கு எதுபாபசரீரத்தைச் சுமக்கின்ற வெறுப்பு. [இவைகான்குபாட்டாலும் புகழில்லோரதுகாழ்வுசொல்லப்பட்டது].)

வசையொழிய வாழ்வாரோ வாழ்வா ரிசையொழிய
வாழ்வாரோ வாழா தவர்.


இ-ள். வசைமொழிய (தம்மிடத்து) வசையுண்டாகாமல் [புகழுண்டாகுவென்றபடி] வாழ்வாரோ - வாழ்பவரோ, வாழ்வார் (உயிர்) வாழ்வோராவார், இசையொழிய - புகழுண்டாகாமல், [வசையுண்டாகுவென்றபடி] வாழ்வாரோ - வாழ்பவரோ, வாழாதவர் - இறந்தோராவார்—எ-று (கருத்து.) கீர்த்தியுடன்வாழ்பவ ருயிரோடுவாழ்பவர். அக்கீர்த்தியோடுவாழாதவரிறந்தவர் - என்பதாம். * வசையென்பதுவெண்ணும்பாட்டிலே வசையொழிதல் புகழ்பெறுதலானதால். இங்கே இசையொழிதல் வசைபெறுதலாயிற்று. முன்பாட்டிலே புகழில்லாத வடம்பென்றதனை விளக்கியவாறு இதனால் அம்மேன்மைபுங் தாழ்வும் (உடன்சொல்லப்பட்டன) மறுமைப்பயன் வாணுறையுந்தெய்வத்துள் வைக்கப்படுமெனமுன்னே சொல்லப்பட்டனையால் இல்லறத்துக்கு இவ்வுலகத்திலேபுகழும் தேவருலகத்திலேபோகமும் பயனென்பது கொள்ளப்பட்டது.

(ஆ)

இனி மனுமுதலிய அறநூல்களாம் பொதுவாகக்கூறப்பட்ட இல்லறங்களெல்லாம் இவர் தெரிந்துக்கூறிய இவற்றுள்ளேபடங்கும். அது அறிந்து அடக்கிக்கொள்க.

இல்லறவியல் முற்றுப்பெற்றது. ஆக - குறள்-உசுய.

———*———



துறவறவியல்.

இனி-முறைப்படித் துறவறம் சொல்லத்தொடங்கினர். துறவறமாவது முன்சொல்லப்பட்ட இல்லறத்தின் வழுவாது நடந்து அறிவுடையாராய்ப்பிறப்பினை அஞ்சி முத்திபெறுதற்பொருட்டுத் துறந்தவர்க்குரித்தாகிய அறமாம். அதுவிரதமும் - ஞானமும் எனவிருவகைப்படும்.

விரதம்.

அதாவது, வினைமாசுதீர்ந்து - அந்தக்காணங்கள் பரிசுத்தமாதற்பொருட்டு இன்ன அறங்களைச் செய்வேனென்றும், இன்னபாவங்களை விடுவேனென்றும்-சுமதுவல்லமைக்கு ஏற்ப அளவுசெய்துகொண்டு துறந்தோராலே காப்பாற்றப்படுவது - அவ்விரதங்கள் அளவில்லாதவையாயிருக்கினும் அனைபலவற்றையும் தம்முள்ளே அடக்கிநிற்குஞ் சிறப்புடைய சிலவற்றை இங்கே சொல்லத்தொடங்கி முதலிலே அருளுடைமையை அருளிச்செய்கின்றார்.

உரு-ஆம்-அதி-அருளுடைமை.

ஆகாவது, 'தொடர்புபற்றுமில் இயல்பாக எல்லா வுயிர்களின்மேலும் செல்வதாகிய கருணையையுடைய ராதலாம். இல்லறத்துக்கு அழகுடைமைபோல் இது துறவறத்துக்குச்சிறந்தலால்முன்சொல்லப்பட்டது.

அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள.

இ-ள். பொருட்செல்வம் - பொருளால் வருஞ்செல்வங்கள், பூரியார்கண்ணும் - இழிந்தவரிடத்தும், உள - இருக்கின்றன, (ஆதலால்) செல்வத்துள் - செல்வங்கள் பலவற்றுள்ளும், (ஆராய்ந்துளதெக்கப்பட்ட) செல்வம் - செல்வமானது, அருட்செல்வம் - அருளால்வருஞ் செல்வமாம்—எ-று.(கருத்து.) இருவகையால்வருஞ்செல்வமே செல்வமாகும்பொருளால்வருஞ்செல்வங் கீழோரிடத்துமுண்டு - என்பதாம்.*அருளால்வருஞ் செல்வமாவது - உயிர்களைக்காப்பாற்றி அவ்வரத்தால் மேம்படுதலாம். இழிந்தோரிடத்து இல்லாமல் உயர்ந்தோரிடத்துமாத்திரம் உள்ள அருட்செல்வமே சிறப்புடையசெல்வமென்றும்இழிந்தோரிடத்தும், உள்ளமற்றைப் பொருட்செல்வங்கள் சிறப்புடையன அல்லவென்றும், சொல்லியதாம். (க)

நல்லாற்று ணுடி யருளாள்க வல்லாற்றுந்
தேரினு மஃதே துணை.

இ-ள். நல்லாற்றுல் - நல்வழியிலேநின்று, நாடி - (அளவைகளாலும் யுத்தியாலும் நமக்குத்துணையாகும் அறம்யாதென்று) ஆராய்ந்து, அருளாள்க - அருளுடையராகக்கடவர், வல்லாற்றுல் - (ஒன்றுக்கு ஒன்று ஒத்திராத) பலசமயவழிகளால், தேரினும் - ஆராய்ந்தாலும், அஃதே துணை - துணையாவது, அஃதே - அவ்வருளே, [வேறுரன்றில்லையென்றபடி]—எ-று.(கருத்து.)நல்வழியிலேநின்று இருபையை யாளுவாராயின் அக்கிருபையே துணை - என்பதாம்.*அளவைகளாவன பொறிகளாலே காணும்காட்சியும், குறிகளாலே ஆலோசித்து அறியும் அனுமானமும் கருத்தாமொழியாகிய - ஆகமமும் - என மூன்றுவகைப்படும் ஒப்புமைபற்றி அறிகிற உவமானமும், இப்படியல்லாமற்போனல் இது கூடாதென்று அறியும் அருத்தாபத்தியும் உண்மைக்கு எதிராகிய இல்லாமையும்- என விவையுங்கூட்டி ஆறென்பாரும்உண்டு. இவையும் அம்

---

0 அனுமானமாவது புகையினுலே நெருப்பை அறிவது முதலானவை.

மூன்றுள் அடக்கிக் கொள்ளப்படும் யுத்தியாலது இதுகூடும் இது கூடாது எனறத் தன்னிடத்தேதான்றுவது. ஒன்றுக்குஒன்று ஒத்திருமையாலது மதலேயுறுபோட்டால் அளவைகளும் பொருள்களும் தம்முள்ளே மாறுகோளுறுதலாம், அப்படியிருந்தாலும் - அருளதுணையென்பது எல்லாருக்கும் ஒத்திருக்கு மென்பதாம் உயிரைவிட்டுங்கொடுக்கும் இருமையிலும் உதவலால்துணையென்றார் [இவை இரண்டுபோட்டாலும் அருளதுசிறப்புசொல்லப்பட்டதற்.] (உ)

அருள்சேர்ந்த நெஞ்சினர்க் கில்லிருள்சேர்ந்த
வின்ன வுலகம் புகல்.

இ-ள். இருள்சேர்ந்த - அந்தகாரத்தையுடைய, இன்னவுலகம்-துன்பவுலகத்திலே, புகல் - (போய்ப்) புகுதல், அருள்சேர்ந்த - அருளைச்சேர்ந்த, நெஞ்சினர்க்கு - நெஞ்சையுடையார்க்கு, இல்லை-இல்லை-என-று. (கருத்து) இருளைபொருந்தியமனமுடையோர்க்கு நரகத்திற்புகுதலில்லை - என்பதாம் *இருள்சேர்ந்த வின்னவுலகமென்பது நெருங்கிய விருளையுடையதாய்த்தன்னை அடைந்தவர்க்குத் துன்பஞ்செய்வதாநரகத்தை அநுகூலமாகத்தன் உலகமெனப்பட்டது. (ங)

மன்னுயி ரோம்பி யருளாள்வார்க் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை.

இ-ள். மன்னுயிர் - நிலைபேறுடையவுயிர்களை, ஓம்பி - காப்பாற்றி அருளாள்வார்க்கு - (அவைகளிடத்தே) அருளுடையராயிருப்பவர்களுக்கு, தன்னுயிர் - தன்னுடையவுயிர், அஞ்சும் - அஞ்சுதற்குஏதுவாகிய, வினை - பாவங்களானவை, இல்-உண்டாகா, என்ப-என்று (அறிஞர்) சொல்லுவர்—என-று. (கருத்து) பிறவுயிர்களிடத்தருளிருமையுடையவனுக்குத் தன்னுயிர் பயப்படும் பாவமில்லை - என்பதாம். * உயிர்களெல்லாம் - நித்தியமாதலின் மன்னுயிரென்றார், அஞ்சுதல் துன்பமோக்கி அஞ்சுதல் அப்படிப்பட்ட அறமுடையவன் கொலைமுதலாகியபாவங்களைச்செய்யாதனனவே - மறுமையிலே நரகத்தை அடையாமைக்கு ஏது சொல்லப்பட்டதாயிற்று. (ச)

அல்லலரு ளாள்வார்க் கில்லை வளிவழங்கு
மல்லன்மா ஞாலங் கரி.

இ-ள். அருளாள்வார்க்கு - அருளுடையவர்க்கு, (இம்மையிலும்) அல்லல் - ஒருதுன்பமாவது, இல்லை - உண்டாகாது, (அதற்கு) வளிவழங்கும் - காற்றுலாவுகின்ற, மல்லல் - வளப்பத்தையுடைய, மா - பெரிய, ஞாலம் - பூமியில்வாழ்வோர், கரி - சாகூியாவார்—என-று. (கருத்து) இருளைபுடையவர்களுக்குத் துன்பமில்லை - யென்பதாம். * சாகூியாவார், தாம்கண்டு தெளிந்தபொருளைக் காணாதார்க்குத் தெளிவித்தற்கு உரியவர் அருளாள்வார்க்கு அல்லலுண்டாகா ஒருகாலத்திலும் ஓரிடத்

நிலும் ஒருவரும் கண்டறிவாரில்லாமையால். உலகத்தாயினுமருமை
பெறலொன்றற்கு ஞாலத்தகரியென்னுமுரை எனவே இன்மையிலென்ப
பெற்றும். ஞாலத்தானை ஞாலமென்னலால் ஆகுபெயர். [இவை மூன்று
பாடத்திலும் அருளுடையாயவர்க்கு இருமையிலும் துன்பமில்லாமை
சொல்லப்பட்டது.] (நி)

பொருணீங்கிப் பொச்சாந்தா னென்ப தருணீங்கி
யல்லவை செய்தொழுகுவார்.

இ-ள். அருணீங்கி - (உயிர்களிடத்துச் செய்யவேண்டும்) அருளை
விட்டு, அல்லவை - விடவேண்டுங்கொடுமைகளை செய்து, ஒழுகுவார் -
நடப்பாரை, பொருணீங்கி (முன்பிறப்பிலிலபுர்) உறுதிப் பொருளை
நாடாமல் - பொச்சாந்தார் (தாம் துன்பப்படுகின்றமையை) மறந்தவர்,
என்ப - என்று, (கல்லோர்) கொல்லுவர்—எ-று. (கருத்து.) அருளை
விட்டுப் பாவஞ்செய்பவரை மறுமைப்பொருளை மறந்தவரென்பர் - என்ப
தாம். * உறுதிப்பொருள் - அறம். துன்பப்படுதல் - தன்னை பற்றிவரு
வதுமுதலாகிய பிறவித்துன்ப மூன்றையும் அனுபவிக்குமாம் மறவாதி
ருந்தாராயின் அப்படி நடவாதென்பது கருத்து. (சு)

அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
இவ்வுலக மில்லாகியாங்கு.

இ-ள். பொருளில்லார்கு - பொருளில்லாதவர்க்கு, இவ்வுலகம் -
இவ்வுலகத்தினின்பம், இல்லாகியாங்கு - இல்லாதவைபோல், அருளில்
லார்க்கு - (உயிர்களிடங்கொல்) அருளில்லாதவர்க்கு, அவ்வுலகம் - அவ்
வுலகத்தினின்பம், இல்லை - இல்லை—எ-று. (கருத்து.) பொருளில்லாதவர்க்
கிவ்வுலகத்தின்பமில்லாமைபோல் அருளில்லாதவர்க்கவ்வுலகத்தின்பமி
ல்லையென்பதாம் * உலகமிரண்டும் அவற்றினின்பங்களுக்குக்குறியாலா
யுருபெயர்கள் எப்பாடு இதவுலக வின்பத்துக்குப் பொருளாயப்
படியே அதவுலகவின்பத்துக்கு அருளுகாரணமென்பதாயிற்று. (எ)

பொருளற்றார் பூப்ப ரொருகாலருளற்றார்
தற்றார்மற் றுதலரிது.

இ-ள். பொருளற்றார் - (வாழ்நாளிலே) வருமை அடைந்தவர், (அ
தனின்றி) ஒருகால் - (பின்) ஒருகாலத்தில், பூப்பர் - (செல்வத்தினால்)
மகிழ்ந்தவர்களாவர், (அப்படியல்லாமல்) அருளற்றார் - அருளில்லாதவர், (பா
பஞ்சிவார், (அப்படியல்லாமல்) அற்றார் - அழிந்தவரோ, மற்று - பின்னொருகாலத்தி
லும்நீங்காமையால்) அதனை - அழிந்தவரோ - என்பதா
லும், ஆதலினாலது ஆராய்ச்சியில்லை—எ-று. (கருத்து.) பொருளற்றவர் ஒ
ருகாலத்திற் செல்வமடைவரா அருளற்றவர் அழிந்தவரோ - என்பதா
ம், * முன்பாட்டில் ஒருவினாத்தினால் பொருளில்லாமையோடி அருளில்
லமையை ஒப்பாகிச்சொன்னராதலால் இப்பாட்டில் மற்றொருவினா
த்தினாலே அதனைமறுத்து அதிலும் கொடிதென்பது சொல்லியபடி. (சு)

உஉ-ஆம்-அதி—அருளுடைமை.

தெருளாதான் மெய்பொருள் கண்டற்றுற் றேரி
னருளாதான் செய்யு மறம்.

இ-ள். அருளாதான்- (உயிர்களிடத்தே) அருள்செய்யாதவன், செ
ய்யும், செய்யும் அறம்-அறத்தை, தேரின்-ஆராயின், தெருளாதான்-ஞா
மில்லாதவன், மெய்ப்பொருள்- மெய்ந்நூலிற்சொல்லப்பட்டபொருளை, க
ண்டற்று-(ஒருகால்) கண்டதுபோலும்—எ-று. (கருத்து.) அருளில்லா
தவன் செய்யுந்தருமத்தை யாராயின் மெஞ்ஞான மில்லாதவ னுண்
மைப்பொருளைக் கண்டாற்போலும்- என்பதாம். *ஆல்-அசை. எப்ப
டினிலேபெற்ற ஞானமில்லாதவன் நடுவே மெய்ப்பொருளை உணர்ந்தால்
அதனைத்தனது ஞானமில்லாமையாற்றானே அழித்துவிடுவானேனு அப்
படியே அருளில்லாதவன் நடுவே அறஞ்செய்தால் அதனைத்தன்னரு
ளில்லாமைதானே அழித்துவிடுவானென்பதாயிற்று. ஆகவே மற்
றெல்லா லறங்களுக்கும் அருளுடைமை மூலமென்பது பெறப்பட்ட
தது. [இவைதான்குபாட்டாலும் அருளில்லாதவர்க்கு வருங்குற்றம் சொ
ல்லப்பட்டது.] (கூ)

வலியார்முற் றன்னை நினைக்கதான் றன்ன
மெலியார்மேற் சொல்லு மிடத்து.

இ-ள். (அருளில்லாதவன்) தன்னின்மெலியார்மேல் - தன்னிறு
மெலியவர்கள்மேல்தான்-தான், செல்லுமிடத்து-(வருத்துதற்குச்)சொல்
லுமிடத்து, வலியார்- (தன்னின்) வலியவர், (தன்னைவருத்துதற்குவரும்
போது) முன்-(அவர்) முன், தன்னை- (அஞ்சுதற்கும்) தனதுநிலையை, நி
னைக்க - நினைக்கக்கடவன்—எ-று. (கருத்து.) வலியவன் மெலியவனை வ
ருத்தச்செல்லுமபோது தன்னிலும் வலியவன் தன்னைவருத்தியதைநி
னைக்கக்கடவன்-என்பதாம். மெலியானெனினும் - அஃதுணைக்குக்கொ
ள்க. அதனைநினைக்கவே இந்தவுயிருக்கும் அப்படியே அச்சமுண்டாகு
மென்று அறிந்து அதன்பேல் அருளுடையவனாவானென்பது கரு
த்து[இதனாலே அருள்பிறத்தற்கு உபாயம் சொல்லப்பட்டது. (ஙி)

உஊ-ஆம்-அதி-புலான்மறுத்தல்.

அஃதாவது, ஊனுண்ணுதலை ஒழித்தலாம். கொலைபாவத்தைப்பின் உண்
டாக்கலால் அதற்குக்காரணமாதலையும், முன்னும் அதனால் வருதலா
ல் அதன்காரியமாதலையும், ஒருசோஉடைத்தாகிய ஊனுண்ணுதல்அ
ருளுடையார்க்கு இயைவதன்றாதலின் அதனைவிலக்குதற்குஇதுஅ
ருளுடைமையின் பின்வைக்கப்பட்டது.

தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பா
னெங்ஙன மாளு மருள்.

இ-ள். தன் னூண்-தன் னுடம்பை, பெருக்கற்கு-வளர்த்தற்பொருட்டு, தான், தான், பிறிதூண்-மற்றொன் றினுடம்பை, உண்பான்-தின்பவன், எங்ஙனம்-எவ்வகையால், அருள்-அருளை, ஆளும்- ஆளுவான்—எ-று.(கருத்து.) தன் னுடல் பெருக்கற்குப் பிறவுடலைத் தின்பவனெவ்வகையாற் றருளையுடையனாவான்- என்பதாம். * பயனில்லாத தன்னூண்வளர்த்தலைப் பயனெனநினைத்து இக்கொடுமை செய்வானே அறிவிலாதகொடியனோ வென்றதாயிற்று. எங்ஙனமாளு மருளென்பது ஆளானென்பது படநின்ற இகழ்ச்சிக்குறிப்பு. (க)

பொருளாட்சி போற்றுதார்க் கில்லையருளாட்சி
யாக்கில்லை யூண்டின் பவர்க்கு.

இ-ள். பொருளாட்சி-பொருளினுலேபயன் கொள்ளுதல், போற்றுதார்க்கு- (அதனைக்) காப்பாற்றுதவருக்கு, இல்லை இல்லையாம், அங்கு- அதுபோல், அருளாட்சி-அருளினுலேபயன்கொள்ளுதல், ஊன்றின்பவர்க்கு-புலாலுண்பவருக்கு, இல்லை-இல்லை—எ-று.(கருத்து.) பொருளைக்காப்பாற்றுதவர்க்கு பொருளின்பம் யில்லாமைபோல அருளைக்காப்பாற்றுதவர்க்கு இன்பமுமில்லை-என்பதாம். *எப்படிபொருட்பயனை இழத்தற்கு அதனைக்காப்பாற்றுமையோ அப்படியே அருட்பயனை இழத்தற்கு, ஊன்றினல்காரண மென்றதாயிற்று. [ஊண்டி-றுயிரும் உயிர்களுக்குஒருதீங்கு நினையாராயின் அருளாளுதற்குக் குறைவில்லையென்பதாமறுத்து அது உண்டென்பதை[இவை இரண்டுபாட்டாலும். சொல்லப்பட்டது.] (எடுத்துக்காட்டுவமையணி.) (உ)

படைகொண்டார் நெஞ்சம்போ னன்றாக்கா தொன்ற
னுடல்சுவை யுண்டார் மனம்.

இ-ள். ஒன்றன்-பிறிதோருயிரினது, உடல்-உடலை, சுவையுண்டார்-சுவைபடவுண்டவரது, மனம்-மனமானது, படைகொண்டார்-கொல்லுக்கருவியைத் (தங்கையிலே) கொண்டவரது, நெஞ்சம்போல்-மனம்போல், நன்றாக்காது - (கொலைய்யேநோக்குவதல்லது) அருளைநோக்காதது—எ-று.(கருத்து.)ஊன்றின்பவர்களதுமனம்அருளைநினையாது-என்பதாம். * சுவைபடவுண்டல்காயங்களால் இனியசுவைபடச் சமைத்தல், உண்டல், படை-வாள்முதலானவை [இதனுல் ஊன்றின்பாரது மனம் தீங்குநினைத்தல் உபமானப் பிரமாணத்தினுலே சாதித்து முன்பாட்டிலே சொல்லியது உறுதிசெய்யப்பட்டது.] (ஊ)

அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல்.

இ-ள். அருள்-அருளானது, யாதெனின்- எதுவென்றால்- கொல்லாமை - கொலைசெய்யாமையாம், அல்லது - அவ்வருளல்லாததானது

யாதெனின் எதுவென்றால், கோறல்-கொல்லுதல், (ஒருவன்) அ
ன்- அக்கொல்லுதலால் வருவனவை, தினல்-நிகழ்வனவாகிய, பொருளல்ல
இ-ள். நில்லாதவற்றை - நிலையில்லாதவைகளை, நிலையின வென்று-நிலையுடையவையென்று, உணரும்-நினைக்கின்ற, புல்லறிவாண்மை- அற்பபுத்தியையுடையவராயிருக்கை, கடை-(துறந்தார்க்கு) இழிவு—என்று. (கருத்து.) அழிவதை அழியாததாகநினைக்கும் அறியாமை அறிவோர்க்கு இழிவு-என்பதாம். * தோற்றமுடையனவுகளை அழிவில்லாதவையென்று நினைக்கும் அற்பபுத்தியால் அவைகளின்மேலே பற்றுச்செய்தல் பிறவித் துன்பத்துக்கு ஏதுவாகலால் அதுமோட்சத்தை அடைவோர்க்குத் தவறுமென்பது இதனாற் சொல்லப்பட்டது. இளிப்புல்லறிவாளர் பெரும்பாலும்பற்றுச்செய்வது சிற்றின்பத்துக்கு ஏதுவாகிய செல்வத்தினிடத்திலும், அதனை அநுபவிக்கும் உடம்பினிடத்திலும், ஆகிவருகிற பாட்டுகளால் அவைகளினது நிலையாமையை வேறெடுத்துச்சொல்லுவார். (க)

கூத்தாட்ட வைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று.

இ-ள். (ஒருவனிடத்தே) பெருஞ்செல்வம் - பெரியசெல்வம் வருதல், கூத்தாட்டு-கூத்தாடுதல்செய்கின்ற, அவை-சபையினிடத்தே, குழாத்தற்று-(காண்போர்) கூட்டம்வருதல்போலும், போக்கும்- (அச்செல்வம்) போகுதலும், அது-அக்கூட்டமானது, விளிந்தற்று- (அக்கூத்தாட்டு முடிந்தவிடத்தே) போகுதல்போலும்—என்று,(கருத்து.) செல்வம் கூத்தாட்டில் கூட்டம்போல்வரும் அதுபோதல்போல்-என்பதாம்.

பெருஞ்செல்வமெனவே சுவர்க்கச் செல்வமும் அடங்கிற்று. போக்கு என்ற வும்மையால் வருதலென்பது கொள்ளப்பட்டது, எப்படி? அக்கூட்டமானது கூத்தாட்டுக் காணுமாகச் சபையினிடத்தே பலவித்தால் தானேவந்து அதுபோனவிடத்தே தானும்போகுமோ அப்படியே செல்வமானது ஒருவனது நல்வினை காரணமாக அவனிடத்தே பலவித்தால் தானேவந்து அதுபோனவிடத்தே தானும்போ மென்பதாயிற்று. (2)

அற்காவியல்பிற்றுச் செல்வ மதுபெற்ற
லற்குப வாங்கே செயல்.

இ-ள். செல்வம்-செல்வமானது, அற்கா-நிலையாத, இயல்பிற்று-இயல்பையுடையதாகும், அதுபெற்றால்-அச்செல்வத்தைப் பெற்றால், அறுப-(அதனாலேசெய்யப்படும்) அறங்களை, அங்கே-பெற்றபொழுதே, செயல்-செய்யக்கடவன்—என்று. (கருத்து.) செல்வம்பெற்றபொழுதே தருமஞ்செய்யக் கடவர்-என்பதாம். * அற்காவென்பது - விகாரப்பட்டு நின்றது. ஊழ்உள்ளவிடத்தேயல்லது பெறக்கூடாமையால் அதுபெற்றாலென்றும் அவ்வூழ் இல்லாதவிடத்தே யில்லாமையால் அங்கேயென்றும் சொல்லினார். அதனாலேசெய்யப்படும் அறங்களாவன - பயனைக் குறியாதுசெய்யும் கடவுட்பூசையும், தானும் முதலானவை அவை ஞானத்துக்கு ஏதுவாய்மோட்சத்தைக்கொடுத்தலால் அவற்றை அற்கு பிவென்றும், செயலென்றும் சொல்லினார். [இவை யிரண்டுபோட்டாலும் செல்வநிலையாமைசொல்லப்பட்டது] (4)

நரளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்.

இ-ள். உயிர்-உயிரானது, நாளென-நாளென்று அளவுசெய்யப்படுவதாகிய, ஒன்றுபோல்-ஒருகாலவளவுபோல, காட்டி-(தன்னைக்) காட்டி., ஈரும்-அறுத்துச்சொல்லுகின்ற, வாளது- வாளினது வாயினிடத்தது, உணர்வார்ப்பெறின்- (அது) அறிவானாப்பெற்றால்—என்று. (கருத்து.) நாளாகிய வாளின்வாயினிடத்தது உடல்என்பதை அறிவாரில்லை. என்பதாம். * காலமென்னும் அநுபவப்பொருள்-உலகியல்நடத்தற்பொருட்டுச் சூரியன்முதலாகிய அளவைகளால் கூறுபட்டதாக்கி வழங்கப்படுவதல்லாமல் தானுகக் கூறுபடாமையால் - நாளெனவொன்றுபோலென்றும், அது தன்னைவாளென்று அறியமாட்டாதவனை - நமக்குப் பொழுதுபோகாநின்றதென்று மகிழும்படிமயக்கலால் - காட்டியென்றும், இடைவிடாமல் அறுத்தலால்வாளதென்றும், அது அறுக்கின்றபடியை அறியவல்லவர் இவ்வுலகத்திலே அரியராயிருக்கையால் உணர்வார்ப் பெறினென்றும் சொல்லினார். அறுக்கப்படுவதற்கு உடம்பாகலால் உயிரென்பது-இங்கே உடம்பைக்காட்டிநின்றது. வாளினதுவாயையவாளென்

தைபோல் ஆகுவெய்யர். [இதனால் உடம்புகளுக்கு அளவுசெய்யப்பட்டள்கழிதல்நிலையாமை சொல்லப்பட்டது.] (அ)

நாச்செற்று விக்குள்ளேல் வாராமு னல்வினை
மேற்சென்று செய்யப் படும்.

இ-ள். நாச்செற்று- (பேசாதிருக்கும்படி) நாவை அடக்கி, விக்குள்- விக்கலானது, மேல்வாராமுன்- எழுவதற்குமுன்னே, நல்வினை- (மோக்ஷத்துக்கு ஏதுவாகிய) அறமானது, மேற்சென்று-விரைந்து, செய்யப்படும்— எ-று. (கருத்து.) நாவடக்கிச் சேத்தும் மெழுமுன்னே அறத்தை விரைந்து செய்யப்படும்-என்பதாம். *நாவை அடக்கி விக்கல்மேலெழுதலுக்கு ஐயமில்லாமையாலும் .அதுநேரிட்டபோது நல்வினையைச் செய்தலே அல்லாடலில் சொல்லலும் .ஆகாமையாலும் வாராமுனென்றும், அதுதான் இன்னகாலத்திலேவருமென்று அறியக்கூடாமையால்.மேற் சென்றென்றும் சொல்லினார். நல்வினைசெய்யும் வழியிலும்மேல்வைத்து நிலையாமைசொல்லியபடி. [இதனால் அந்நாள்கழிந்தால் உண்டாகுமிலையாமை சொல்லப்பட்டது.] (ஆ)

நெருநல் உளனொருவன் இன்றில்லையென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு,

இ-ள். இவ்வுலகு- இத்தவுலகம்-ஒருவன்-ஒருவன், நெருநல்-நேற்றைக்கு, உளன்-உளனாயின், (பிறந்தவனென்றபடி)(அவனே), இன்று-இன்றைக்கு, இல்லை-இலனாயினென்(இறந்தானென்றபடி), என்னும்- என்றுசொல்லும்(நிலையாமையின்) மிகுதினை, உடைத்து- உடையதாயிருக்கின்றது—எ-று.(கருத்து.) இவ்வுலகம்நேற்றிருந்தவனின்றில்லை என்னும் பெருமையுடையது-என்பதாம்.*பெண்பாலுக்கும் உள்ளாயினும்நிறப்புப்பற்றி ஆண்பாலைச் சொல்லினார், இந்த நிலையாமையே உலகத்திலேமிகுத்ததென்றபடி. [இதனால் அவ்வுடம்புகள் ஓரோவிடத்துப் பிறந்தவளவிலே இறத்தல்சொல்லப்பட்டது.] (சு)

ஒருபொழுதும் வாழ்வ நறியார் கருதுப
கோடியு மல்ல பல.

இ-ள். (அறிவில்லாதவர்) ஒருபொழுதும்-ஒருபொழுதளவும் வாழ்வதை-தம்முடம்பும் உயிரும்கூடியிருக்கையை, அறிடார் - அறியமாட்டார் (மாட்டாதிருந்தும்), கோடியுமல்ல - கோடியளவுமன்றி, பல - (அதனிலும்) பலவாகியகினைவுகளை, கருதுப-நினையாநிற்பார்— எ-று. (கருத்து.) ஒருகாளளவும் வாழ்வதறியாதவர்கள் அளவிலா எண்ணங்களை எண்ணுகிறார்கள்-என்பதாம். * ஒருபொழுதும்'என்ற இழிவுசிறப்பும்மைபால் இக்கொபொழுதென்பது கணத்தைக்காட்டி நின்றது. காரணமாகிய விஃனயினளவே வாழ்தற்கும் அளவாகலால் அது அமையப்படா

தாயிற்று. ப்லவாகிய நினைவுகளாவன அனுபவிக்கப்படும், இன்பக்கு
க்குரியவை ஆகும்விதமும், அதற்குப்பொருள் வேண்டியவிதமும், அ
ம்முயற்சிகளைத் தாம்செய்யும்விதமும், அவைகளுக்குவரும் இடையூ
களும், அவைகளைநீக்கும்விதமும், நீக்கியபின் அப்பொருளைச்சேர்க்கு
ம்விதமும், அதைப்பிறர்கொண்டுபோகாமற் காப்பாற்றும்விதமும், அ
தனால் சிநேகித்தவரை ஆக்கும்விதமும், பகைத்தவரை அழிக்கும்வித
மும், தாம்அவ்வின்பங்களை அநுபவிக்கும்விதமும், முதலானவையும்
அறிவில்லாதவ ரியல்பின்மேல்வைத்து நிலையாமை சொல்லியபடி. [அ
வ்வுடம்புகள் ஒருகணமாயினும் நிற்குமென்பது நம்பப்படாமை சொ
ல்லப்பட்டது.]

(எ)

குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம்போ டுயிரிடை நட்பு.

இ-ள். உடம்போடு-சரீரத்தோடு, உயிரிடை-உயிருக்கு உண்டாயி
ய, நட்பு-சிநேகமானது, குடம்பை-(முன்னேதனியாதிருந்த)முட்டை
யானது, தனித்தொழிய - தனித்துக்கிடக்க, புள்- (அதனுளிருந்த) பற
வை, பறந்தற்று - பருவம்வந்தவிடத்தே) பறந்துபோம் தன்மையை யு
டையதாகும்—எ-று. (கருத்து.) முட்டைக்கும் பறவைக்கும் சம்பந்த
மில்லாமைபோல் உடலுக்கும் உயிருக்கும் சம்பந்தமில்லை - என்பதா
ம். * முன்னேதனியாமையாவது- கருவுள், தானும் ஒன்றுய்ப்பிறந்து
வேறுகுமளவும் அதற்கு இடமாயிருத்தல்-அதனால் அம்முட்டை உட
ம்புக்கு உவமான மாயிற்று. அதனுள்ளே வேறுபாடில்லாமலிருந்தே
பின்புதிரும்பி நுழையாமற்போகலால், புள் உயிர்க்கு உவமானமாயிற்
று. நட்பு-நட்பில்லாமற்போதலைகளைக குறிப்பினாலே காட்டிநின்றது.
அறிவாகியும், அருவாகியும். நித்தியமாகியும், உள்ளஉயிரும்-அநியாமை
யாகியும், உருவாகியும், அநித்தியமாகியும், உள்ள உடம்பும் - தம்முள்
ளேமாறுகலால் வினைவசத்தினாலேகூடியதல்லாமல் சிநேகமில்லை யெ
ன்பது அறிக. [இதனால் அவ்வுடம்புகள் உயிர்நீங்கியவிடத்துக் கிடக்கு
மாறு சொல்லப்பட்டது.]

(அ)

உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

இ-ள். (ஒருவனுக்கு) சாக்காடு-மரணம்வருதல், உறங்குவதுபோ
லும்-தூக்கம்வருதல்போலும், பிறப்பு-(அதன்பின்னே) பிறப்புவருதல்,
உறங்கிவிழிப்பதுபோலும்-தூங்கிவிழித்தல் வருதல்போலும்—எ-று. (க
ருத்து.) மரணம்நித்திரையையும் பிறப்பு விழித்தலையும் ஒக்கும்- என்ப
தாம். * உயிர்களுக்குஉறங்கலும்விழித்தலும்போல் இறத்தலும் பிறத்த
லும், இயல்பாகக்கடந்திலேமாறி மாறிவருமென்பது கருதது நிலையாமை
யே நிலைபெற்ற விதத்தை அறிவித்தற்குப் பிறப்பும் உடன்சொல்லப்

பட்டது [இதனுல் அவ்வுடம்புகளுக்கு இறப்பும் மாறிவருமாறு] சொல் (கூ)
லப்பட்டது.]

புக்கி லமைந்தின்று கொல்லோ வுடம்பினுட்
டுச்சி லிருந்த வுயிர்க்கு.

இ-ள். உடம்பினுள்- (வாதமுதலானவைகளது விகிதங்களாகிய) உட
ம்புகளுள், துச்சிலிருந்த- ஒருக்குக்குடியிருந்துவந்த, உயிர்க்கு- உயிரு
க்கு, புக்கில்- என்றைக்கும் இருப்பதாகிய ஒருவீடாகிய தும், அமைந்தின்
றுகொல்- (இதுவரையில்) அமைந்திருக்கிறதோ இல்லையோ—என்று. (கருத்து.)
உடலுள்ளே பொதுக்குக்குடியிருந்த உயிர்க்கு என்றுமிருக்க வீடமை
த்திருக்கிறதோ- என்பதாம். * உயிரானது - அவ்வவ்தமுதலானநோய்கள் அ
மைந்தகாலத்திலே இருந்தும், கோபித்தகாலத்திலே விட்டுப் போகியும்
ஓருடம்பிலும் நிலைபெறுமல் வருதலால் - துச்சிலிருந்தவென்றார், பின்
னேபுறப்படாமல் புகுந்தேவிடுகிறதில்- அமைந்தது யின் பிறர் இற்களி
லே ஒருக்குக்குடி இராதென்பதாம் ஆகவை உயிரோடுகூடி நிற்பது - ஓ
ருடம்பும் இல்லையென்பது பெறப்பட்டது. [இதனுல் அவ்வுடம் புகள்
உயிருக்கு உரியவை அல்லவென்பது சொல்லப்பட்டது.] நாளைவெ
ன்பதுமுதலாகிய எழுபாட்டுகளாலுப்யாக்கைநிலையாமைசொல்லப்பட்ட (ஙி)
து என்றறிக.

கூ-ஆம்-அதி-துறவு.

அஃதாவது, புறமாகிய செல்வத்திலும், அகமாகிய உடம்பிலும், உண்
டாகிய வற்றை அனுகளதுநிலைபாமையைப்பார்த்து விடுதலாம், அதி
காரம்வைத்த முறைமையும் இதனுலேவிளங்கும்.

யாதனின் யாதனி னீங்கியா னோதல
லதனி னதனி னிலன்.

இ-ள்.(ஒருவன்)யாதனின்-யாதனின்-யாதொருபொருளின்-யாதொ
ருபொருளின், நீங்கியான் - நீங்கினவன் (அவன்)—அதனினதனின் - அ
ப்பொருளினுலே அப்பொருளினுலே, நோதல் - துன்பத்தை அநுபவி
த்தலை, இலன் - உடையவனுகான்—என்று. (கருத்து.) ஐம்பொறிவிட்ய
ங்களை ஒவ்வொன்றுகவிடின் விட்டவையால் துன்பமடையான் - என்ப
தாம். * இங்கே துன்பமென்றது இப்பிறப்பிலே அவைகளைத்தேடுதலா
லும்- காப்பாற்றலாலும்- இழத்தலாலும் - வருமவையும், மறுமையிலே
பாவத்தால் வருமவையும், ஆகிய இருவகைத்துன்பங்களையும் ஆம்- எல்
லாப்பொருள்களையும் ஒரு மிக்கவிடுதலே, தலைமையான துறவாகும்,

அப்படிக்கல்லாமல் ஒவ்வொன்றுகவிட்டாலும் அவைகளால் வருந்தும் அவனுக்கு இல்லையென்பது கருத்து. (6)

வேண்டலுண் டாகத் துறக்க துறந்தபி
னீண்டியற் பால பல.

இ-ள். துறந்தபின்- (எல்லாப்பொருள்களையும்) துறந்தபின் (ஒருவனுக்கு)—ஈண்டு - இப்பிறப்பிலே, இயற்பால் உண்டாகு முறைமையுடைய இன்பங்கள், பல- பலவாம், வேண்டின்- (அவ்வின்பங்களை) வேண்டினால், உண்டாக- (காலம்) உண்டாக, துறக்க - (அப்பொருள்களைத்) துறக்கக்கடவன்—என்று. (கருத்து.) துறந்தபின் உண்டாகும் பலவின்பத்தை வேண்டினால் துறக்கக்கடவன்- என்பதாம். * அவ்வின்பங்களாவன- அப்பொருள்களுக்காக - மனமும் - வாக்கும். அலையாது நிற்கையாகிலும், அனைவரல்வழியிலே செல்லுதலாலும், வருவன. இளமையிலே துறந்தவன் அவ்வின்பங்களை நெடுங்காலம் அநுபவிப்பானாதலால். உண்டாகத் துறக்கவென்றபடி இன்பமும், காலமும் வருவிக்கப்பட்டன. இப்பிறப்பிலே துன்பங்கள் இல்லாமற்போதலே அல்லாமல் இன்பங்களும் உண்டாகுமென்பதாம். (2)

அடல்வெண்டு மைந்தன் புலத்தை விடல்வெண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு.

இ-ள். (முத்தியை அடைவோர்க்கு) ஐந்தன்- செவிமுதலாகிய ஐம்பொறிகளுக்கு உரிய, புலத்தை- ஓசைமுதலாகிய ஐம்புலன்களையும், அடல் வேண்டும் - கெடுத்தல் வேண்டும் (நெடுங்காலம்போது)—வேண்டியவெல்லாம். (அப்புலன்களை அநுபவித்தற் பொருட்டுத்) தாம்படைத்த பொருள்களையெல்லாம், ஒருங்கு - ஒருங்கே, விடல்வேண்டும் - விடுத்தல்வேண்டும்—என்று. (கருத்து.) ஐம்பொறிகளுக்குரிய புலன்களைக் கெடுத்தல்வேண்டும் என்பதாம். * புலன்களை அநுபவித்தலைப் புலமென்றார். அவ்வநுபவிப்பு மனத்தையுத் துன்படுத்தினாலும் பலதிறமாகவும் தேடப்பட்டு வரும் பொருள்களின்மேல் அல்லாமல் முத்தியுபாயமாகிய யோகஞானங்களிலே செல்லவொட்டாமையால் அடல் வேண்டுமென்றும், அம்மனம் அப்பொருள்களிலே சென்றால் அவ்வநுபவிப்புவளர்வதல்லது கெடுக்கப்படாமையால் வேண்டியவெல்லா மொருங்கு விடல் வேண்டுமென்றும், சொல்லினார். (4)

இயல்பாகு நோன்பிற்கொள் நின்மை யுடைமை
மயலாகு மற்றும் பெயர்த்து.

இ-ள். நோன்பிற்கு - தவஞ்செய்வோர்க்கு, ஒன்று - பற்றப்படுவது ஒரு பொருளும்- இன்மை- இல்லாதிருக்கை, இயல்பாகும் - சுபாவமாகும், உடைமை- (ஒன்றுமிறும்) உடைமை, பெயர்த்து - (அத்தவத்தைப்) போக்குதலால் மற்றும்- மீண்டும், மயலாகும் - மயக்கத்தைத்

எதுவாகும்—என-று. (கருத்து.) தவத்தோர்க்குப்பற்றற்றிருப்பது இயல்பா
கும்-என்பதாம். * ஈகாற்பவரை ஈதான்பெற்றும், மயலுக்குவதுவையய
லென்றும், சொல்லுகலால் ஆகுபெயர்கள் எல்லாப்பொருள்களையுங்கி
டந்த ஒருபொருளாவிடாதவிடத்தும் அதுசார்வாகவிடப்பட்ட வையெல்
லாந்தரும்பிவந்து தவத்துக்கு விரோதமாய் மயக்கலக்கம்செய்யுமென்ப
தை கருத்தா [இவை கால்குறைபட்டாலும் எனவதென்னும் புறப்பற்று விடு
தல்சொல்லப்பட்டது] (சு)

மற்றொருவடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க்குடம்புமிலை.

இ-ள். பிறப்பறுக்க லுற்றார்க்கு - பிறவியைநீக்கு முயற்சியைமே
ற்கொண்டவருக்கு, உடம்பும்- (அதற்கு) உதவியாகிய உடம்பும், நிலைக
ளதிகமாம், (ஆனபின்) மற்றும் - அதற்குமேலும், தொடர்ப்பாடு -(சம்
பந்தமில்லாதனவையுஞ் சிலபொருள்கள்) பற்றப்படுதல், எவன்-என்ன
கும்—என-று. (கருத்து.) பிறவியைநீக்க முயல்வோர்க்கு உடல் பாரமாம்
மற்றவையா லென்னபயன்-என்பதாம். * கொல்-அசை. பொதுப்பட உ
டம்பென்றதனால்-உருவுடபும் அருவுடம்பும் கொள்ளப்படும் அருவுட
ம்பு-இந்திரியவுணர்வுகளோடும் பிராணவாயுக்களோடுங்காயவினை வினை
வுகளோடுங்கூடியமனம், கூடியமனம், இதுசூட்சமசரீரமெனவுமப்படும்.

யானெனதென்னுஞ் செருக்கறுப்பான்வானோர்
குயர்ந்த வுலகம் புகும்.

இ-ள். யானெனதென்னுஞ் - (தானல்லாத உடம்பை) யானென்று
ம் (தன்னோடு சம்பந்தமில்லாதபொருளை) எனதென்றும் நினைத்து அ
வைகளிலே பற்றுச்செய்தற்கு எதுவாகிய, செருக்கு - மயக்கத்தை, அ
றுப்பான்- கெடுப்பவன், வானோர்க்கும் - தேவர்க்கும், உயர்ந்த - அடை
தற்கரிதாகிய, உலகம்- முத்தியுலகத்தில், புகும் - செல்லுவான்—என-று.
(கருத்து.) நான்- எனது என்னுமயக்கமற்றவன் முத்தியடைவன்-என்
பதாம். * மயக்கம் அறியாமை, அதனைக்கெடுத்தலாவது - குருபதேசத்
தாலும், யோகாப்பியாசத்தாலும், அவ்வுடம்பை யானல்லவென்றும்,
அப்பொருளை எனதல்லவென்றும், தெளிந்து அவைகளிலே - பற்றை
விடுதல். வானோர்க்குமென்னும் சிறப்புமை வருவிக்கப்பட்டது. [இத
னால் இருவகைப் பற்றையும் விட்டவர்க்கே மோக்ஷமுண்டென்பது
சொல்லப்பட்டது. (சூ)

பற்றி விடாஅ விடும்பைகள் பற்றினைப்
பற்றி விடா அ தவர்க்கு.

இ-ள். பற்றினை (இருவகைப்) பற்றுக்களையும், பற்றி- இறுகப்பற்றி
விடா அபவர்க்கு, விடாதவரை, இடும்பைகள்-துன்பங்கள், பற்றி- இது

கப்பற்றி, விட்டஅ- விட்டுநீங்காவாம்—எ-று. (கருத்து.) இருவகைப்பற்றையும் விடாதவர்களைத்துன்பங்கள்விடாவாம்-என்பதாம்.* இறுகப்பற்றல்-ஆசைமிகுதல்விடாதவர்க்கென்பதுவேற்றுமை மயக்கம் [இதனால்பற்றுக்களைவிடாதவர்க்கு மோக்ஷமும்இல்லையென்பது சொல்லப் பட்டது]

தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

இ-ள். தீரத்துறந்தார் - முழுதுந்துறந்தவர், தலைப்பட்டார் - (முத்தியை) அடைந்தவராவார், மற்றையவர் - அப்படி துறவாதவர் மயங்கி-மயக்கமுற்று- வலைப்பட்டார் - (பிறப்பாகிய) வலையிலே அகப்பட்டவராவார்—எ-று. (கருத்து.) முற்றத்துறந்தவர்கள் முத்திப்பெறுவர் துறவாதவர்பிறப்பிலழுந்துவர்-என்பதாம்.* முழுதுந்துறத்தலாவது- பொருள்களையும், இருவகை உடம்புகளையும் வெறுத்துப் பற்றற விடுதல் அப்படித்துறவாகாமையாவது - அவைகளிலேஒன்றனிடத்தேசிறிதாயினும்பற்றுச்செய்தல்; துணிவுபற்றி - தலைப்பட்டா ரென்றும், பொய்வழிக்கண்டேபிறப்புவலையுள் அகப்படுதலால்- மயங்கியென்றும், சொல்லினர்.

பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்மற்று
நிலையாமை காணப் படும்.

இ-ள். (ஒருவன்) பற்றற்றகண்ணே-(இருவகைப்) பற்றுகளையும்அற்றபொழுதே, (அப்பற்றறுதியானது) பிறப்பு-(அவனது) பிறவியைஅறுக்கும்-ஒழிக்கும். மற்று-அவைஆறுத பொழுது - நிலையாமை- (அவற்றால் பிறந்தும் இறந்தும், வருகிற) நிலையாமையானது, காணப்படும்-அறியப்படும்—எ-று. (கருத்து.) பற்றற்றபொழுதே பிறப்பறும்-என்பதாம். * காரணம் அற்றபொழுதே காரியமும் அற்றதாமுறைமைபற்றி-பற்றற்றகண்ணே என்றார். இவை யிரண்டுபோட்டாலும் அவையிரண்டும்சேர்த்துச் சொல்லப்பட்டன. (சு)

பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

இ-ள். பற்றற்றான்- (எல்லாப்பொருள்களையும் பற்றினின்றே)பற்றில்லாதகடவுளாலே சொல்லப்பட்ட, பற்றினை- முத்திவழியை, பற்றுக-(இதுவேநல்லவழியென்று) மனத்திற்கொள்ளக் கடவர் (கொண்டு)அப்பற்றை- அதனிடத்து உபாயத்தை, பற்றுக- மனத்திலுலே செய்யக்கடவர், பற்று-(விடாதுவந்த)பற்று,விடற்கு-விடுதற்கு—எ-று. (கருத்து.) பற்றற்றான்சொல்லியமுத்திவழியைப் பற்றக்கடவர் - என்பதாம். * கடவுள் வாழ்த்துக்கேற்க இங்கும பொதுவகையிலுலே பற்றற்றானென்றார் அதனிடத்து உபாயமும்-தியானமும், சமாதியும்ஆம். விடாதுவந்தப்பற்று-அநாதியாய்வரு மூடற்பற்று. [இதனால் அப்பற்று விடுதற்கு உபாயஞ்சொல்லப்பட்டது] (ஙி)

நூ- ஆம்- அதி-மெய்யுணர்தல்.

ஆஃதாவது, பிறப்புவீடுகளையும், அவற்றின்காரணங்களையும் விபரீத * சந்தேகங்களில்லாமல் உண்மையால் அறிதல்- இதை - வடநூலார் தத்துவஞானமென்பர். இதுவும் பற்றற்றான் பற்றினைப்பற்றிய விடத்தே உண்டாவதாகையால் அக்காரணவொற்றுமைபற்றி இதன்பின்வைக்கப்பட்டது.

பொருளல் லவற்றைப் பொருளென் றுணரு
மருளானு மாணப் பிறப்பு.

இ-ள். பொருளல்லவற்றை - மெய்ப்பொருள்களல்லாதவைகளை, பொருளென்று- மெய்ப்பொருள்களென்று; உணரும்- அறிகின்ற, மருளான்- விபரீதஞானத்தினாலே, மாணப்பிறப்பு- மாட்சிமைப்படாத பிறவி (இன்பமில்லாத பிறவியென்றபடி)—ஆம்-உண்டாகும்—என்று. (கருத்து.) பொய்ப்பொருள்களை மெய்ப்பொருளென்றென்னும்மயக்கத்தாற் பிறப்புண்டாம் - என்பதாம். * இங்கேபொருளல்லவற்றைப் பொருளென்றுணர்தலாவது- மறுபிறப்பும், இருவகைப்பயன்களும், கடவுளும், இல்லையென்றும், மற்றும் இப்படிப்பட்டவைகளைச் சொல்லுகிறமயக்கநூல் வழக்கத்தைமெய்ந்நூல் வழக்கமென்று துணிதல்-ஈகார்-விலங்கு-மக்கள்- தேவர் என்கிறநால்வகைப்பிறப்புகளிலும் உள்ளது துன்பமேயாகலால்- மாணப்பிறப்பென்றார். [இதனால்-பிறப்புத் துன்பமென்பதும் அதற்கு முதற்காரணம் விபரீதஞானமென்பதும் சொல்லப்பட்டது.] (க)

இருணீங்கி இன்பம் பயக்கு மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.

இ-ள். மருள்- அவ்விபரீதஞானத்திலிருந்து, நீங்கி-நீங்கி, மாசறு-குற்றமற்ற, காட்சியவர்க்குமெய்யறிவையுடையவராயினவர்க்கு (அம்மெய்யறிவானது)—இருள்-பிறவின்ப, நீங்கி- நீங்கச்செய்து, இன்பம்-முத்தியை, பயக்கும்- கொடுக்கும்—என்று. (கருத்து. விபரீதஞானத்தை விட்டோர்க்கு முத்திஇன்பம் உண்டு- என்பதாம்.* இருள்நரகம்அதுதன்காரணமாகிய பிறவிக்கு ஆகுதலால் ஆகுபெயர், நீங்கியென்னுந்தன்வினைக்கியென்னும் பிறவினைப் பொருளில்வந்தது. மாசறுகாட்சி - கேவலஞானம். [இதனால் வீடாவது உயர்வொப்பில்லாத இன்பமென்பதும்,

---

0 விபரீதஞானமாவது ஒன்றேமற்றொன்றாக வறிதல் அது கயிற்றைப்பாம்பென்று அறிதல்போல்வன.

* சந்தேகஞானமாவது ஒன்றை இதுவோ அதுவோ வெனக்கொள்ளுதல் விறகோ பாம்போவெனத்துணியாது நிற்பதுபோல்வன.

லப்பட்டனவாம்.]

(

ஐயுணர் வெய்தியக் கண்ணுஞ் செயன்றொ
மெய்யுணர் வில்லா தவர்க்கு.

இ-ள். ஐயுணர்வு-சுவை-ஒளி-ஊறு-ஓசை-நாற்றம்-இவ்வைவகைப்புலன்களையும் (முறையே நுனை-நாப்பண்-கண்-மெய்-செவி-மூக்கு-(அடைவே நிலைபெறுத்தியுள்ள) ஐந்தாகிய உணர்வு, நுகர்ச்சியைக் கண்ணுறும் - (அப்புலன்களை நுகர்ந்தறிதல் செய்யும்), மெய்யுணர்வில்லாதவர்க்கு - மெய்யையறிதலில்லாதவர்க்கு (அஃதாவது - ஆன்மாவை அறியாதவர்க்கு), தமக்கு வசப்பட்டவிடத்தும் (அதனால்) —பயன் - பயனாவது, இன்மை - இல்லை—என்று. (சுருக்கம்.) மெய்யையறியாதவர்க்கு ஐம்புலன்களும் வசப்பட்டாலும் பிரயோசனமில்லை - என்பதாம். ஐந்தாகிய உணர்வு-மனம். அறுவகைப்பட்டதாலாவது - படர்க்கையாகக் கூறினமையின், அப்படி நின்றவிடத்தும் அறுமுறைக்கினையத் தாராமையாம். செயலின்றேறியென்றார். [இவை இன்னபோட்டாலும் மெய்யையுணர்வார்க்கே முத்தி உண்டென்பது மெய்யுணர்வின் சிறப்புச் சொல்லிட்டதாம்.

எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

இ-ள். எய்வெரார்ள் - யாதினாராயினும்; எதிர்ப்படுவாரிடத்தில் தங்கு பாயிலல்புடையதாய்த் தோன்றினாலும் (அதிற்தான் நிலை யிற்றாகாமல்) — அப்பொருள் - (உண்மையறிவு) அப்பொருளினிடத்திலிருந்தும், மெய்ப்பொருள் - மெய்யான பொருளை, காண்பது அறிவு - மெய்யுணர்வு—எ-று. (சரித்.) எந்தப்பொருளிடத்திலும் உண்மையான பொருள் அறிவதே மெய்யுணர்வு-எனப்படும். இதனால் மெய்யான பொருளை யல்லாதவற்றை மெய்யென்று மயங்கி நிலைபெறாதன்றி மெய்ந்நிலை யான உண்மையைக் கண்டபோது மெய்யுணர்வு எனப் பயனாயிற்று. அதனால் அறிவுதோன்றாமை என்றவிடத்து அது வென்னும் பகுதிபோல் எதிர்மறை விகுதி தொக்கு நின்றது. அவ்வை நிலையாமை யுடையவற்றை நிலையுடையன வென்றும், துன்பமில்லாத இன்பத்தை துன்பமென்றும் அசுத்தமான வற்றை சுத்தமென்றும் அநாத்மாவை ஆத்மாவென்றும் மயங்கி யுணர்வதே மயக்கவுணர்வாம். இம்மயக்கவுணர்வே எல்லாத் துன்பங்களுக்கும் காரணமாம். [இச்சூத்திரம் மெய்யுணர்வின் தன்மை இலக்கணமாகக் கூறப்பட்டது.] (இ)

கற்றிலன்றி மெய்ப்பொருள் காண்டலரிதே;
மற்றிலன்றி வாரா தெறி.

இ-ள். ஈண்டு- இம்மையிலே பிறப்பினிடத்து, கற்றல்- (உபதேசத் தை ஒருவனாசாரியரிடத்தே) கேட்டு (அதனால்) மெய்ப்பொருள்- உண்மைப் பொருளை, காண்டலரிது- உணர்தல், மற்றீண்டு- திரும்பி இப்பிறப்பினி டத்து, வாராதெறிதல- வாராதொழிதலை, நூலோர்- அனைவர்—எ-று. (சருத்.) இப்பிறப்பிலுபதேசத்தினாற்கேட்டு உண்மைப் பொருளை யுணர்பவர்- என்பதாம். ※ கூறுதலென்றதனால்- பலரிடத்தும் பலதரமும் கற்பதும், காண்டலென்றதனால் மோகத்தினை அடைதற்கு உரியவரின் றிப்பிறப்பு பெறுதற்கு அரியதென்பதும் கொள்ளப்பட்டன. காண்டலா தெறிதல்- மோகத்தை நீக்கல். மோகத்திற்கு நிமித்தகாரணமாகிய முத லாவதனை நீக்கி பொருளை அறிதற்கு உபாயமாகிய அனவை கேட்குதல்- சிந்திதல்-தெ ளிதல்- என்பன, [அவற்றுள் கேட்குதல் இதனாலே சொல்லப்பட்டது.]

ஓர்த்துள்ள முள்ள தணிவி னெருடியைப்
பேர்த்துள்ள வென்ட மிறப்பு.

இ-ள். (அப்படிகேட்கப்பட்ட உபதேசப்பொருளை) உள்ளம்- (ஒரு வனது) உள்ளமானது, ஓர்தலையா - சிந்தையுடன், துள்ளது - (பிரமாண வினது) உள்ளமானதும், ஓராலையா - சிந்தையுடன், துள்ளது - (பிரமா ணங்களாலும் யுக்தியினாலும்) ஆராய்ந்து (அதனால்,—உள்ளது - முதற்பொ ருள், உணரின்- அறியுமாயின், பிறப்பு- (அவனுக்குப்) பிறவியுள்ளதா க, பேர்த்து- மாறி, உள்ளவெண்டா- நிலைக்க வண்டாவதில்லை—எ-று. (சருத்.) ஒருவன் மனம் உபதேசத்தால் உண்மைப்பொருளையறியின் ஒ

அவனுக்குப்பிறவி இல்லை-என்பதாம். * [இதனுல் சித்திக்கல் சொல்லப் பட்டது.]

(எ)

பிறப்பென்னும் பேதைமை நீங்கச்சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு.

இ-ள். பிறப்பென்னும்- பிறவிக்கு முதற்காணமெனப்படுகிற, பேதமை- அஞ்ஞானமானது, நீங்க- கெட, சிறப்பென்னும்-மோக்ஷத்துக்கு நிமித்தகாரணமெனப்படுகிற, செம்பொருள் - செவ்வியபொருளை காண்பது- அறிவதே, அறிவு- (ஒருவனுக்கு) மெய்யுணர்வாம்—எ-று. (கருத்து.) பிறவிக்குக்காரணமாகிய அஞ்ஞானங்கெட உண்மைப்பொருளைக் காண்பதேயறிவாகும்- என்றதாம். * பிறப்பென்னும் பேதமையென்றும், சிறப்பென்னுஞ்செம்பொருளென்றும், காரியங்களைக்காரணங்களாக உபசரித்தார். ஐவகைக்குற்றங்களுள்- அஞ்ஞானம் மற்றைநான்குக்கும் காரணமாதலால் அச்சிறப்புபற்றி அதனையெபிறப்புக்குக் காரணமாக்கிச்சொல்லினர். எல்லாப்பொருள்களினும் சிறந்ததாகலால் மோக்ஷம் சிறப்பெனப்பட்டது. நித்தியமாகியும், பரிசுத்தமாகியும் எங்குநிறைந்துள்ள பிரமமென்னப்பட்டமுதற்பொருள் விகாரமில்லாமல் எக்காலமும் ஒரேதன்மையதாயிருத்தல்பற்றி அதனைச் செம்பொருளென்றார், முன்னேயெய்ப்பொருளென்றும், உள்ளதென்றும், சொல்லியதும் இதுபற்றியென்றறிக, அதனைக்காண்கையாவது-உயிர்தனது அஞ்ஞானங்கெட்டு அப்பொருளோடு ஒற்றுமையுற இடைவிடாமல்நினைத்தல்-இதனைச்சமாதியென்பர், மரணகாலத்தில் நினைக்கிறபடிபிறவி வருமென்றிருத்தலால் மோட்சமடைவோர்க்கு அக்காலத்திலே தத்துவப் பொருளைப்பாவிக்கும்படி முன்னேபழகுதலாகிய இதனின்மிகுந்தஉபாயம் இல்லையென்பதறிக [இதனுலே தெளிதல் சொல்லப்பட்டது.] (அ)

சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழிந்துச்
சார்தரா சார்தரு நோய்.

இ-ள். (ஒருவன்) சார்பு - (எல்லாப்பொருள்களுக்கும்) சார்பாகிய அச்செம்பொருளை, உணர்ந்து-அறிந்து, சார்பு-இருவகைப்பற்றுக்களும் கெட-நீங்க, ஒழுகின்-நடக்கவல்லவனுயின், சார்தரும் - (முன் அவனைச் சேர்தற்குரியவையாய்நின்ற, நோய்- துன்பங்கள், அழிந்து - (அவ்வுணர்வையும் ஒழுக்கத்தையும்) அழித்து, மற்றுச்சார்தரா - பின்சேராமாட்டாவாம்—எ-று. (கருத்து.) மெய்ப்பொருளையறிந்து இருவகைப்பற்றுக்களுங்கெட நடப்பவனைத்துன்பங்களணுகா-என்பதாம். * இக்கே ஒழுக்கமென்றது- யோகவழிநடத்தலை. அது-இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி, எனவெண்வகைப்படும், அத்துன்பங்களாவன-பிறவி ஆதியாய் வருதலால் உயிரினுலே

ளனில்லாமல் சம்பாதிக்கப்பட்டிருக்கிற வினைகளின் பயன்களுள் இற
ந்த உடம்புகளால் அநுபவிக்கப் பட்டவையும், பிறக்கவுடம்பால் மொ
ண்டு கொள்ளப்பட்டவையும், கீங்கலாகபின்னே அநுபவிக்கும்படி கிடந்
தவையாம். அவைவிளக்கின்முன் இருள்போல் ஞானயோகங்களின்
முன்னே கெடுதலால் அழித்துச்சார்தாவென்றும், பிறவிக்குக் கார
ணமாதலால் நல்வினைப்பயனும் நோயெனப்பட்டது. [முன்மூன்று பா
யங்களாலும் பம்பொருள் அறியப்பிறப்பறுமென்றார். அது அறுமி
டத்தே பிறவைக்கிடந்த துன்பங்களெல்லாம் எப்படி போமென்னும்,
விரைவை எழுப்பிக்கொண்டு ஞானயோக முதிர்ச்சியுடைய உயிரைச்
சேர்பாட்டாமையாற் கெட்டு விடுவென்பது இதனாலே சொல்லப்
பட்டது.] (கூ)

காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற
னுமங் கெடக்கெடு நோய்.

இ-ள். (ஞானயோகங்களின் முதிர்ச்சி யுடையவர்க்கு)—காமம்-
வெகுளி-மயக்கம் - விருப்பம் - வெறுப்பு - அஞ்ஞானம் - எனப்படுகிற
இவை மூன்றன்- இக்குற்றம்- மூன்றனது, நாமடையாரும், கெட-கெ
டுதலால், நோய்- (அவைகளின் காரியங்களாகிய) வினைப்பயன்கள், கெ
டும்- உண்டாதலில்லை—எ-று. (கருத்து.) ஞானவான் களுக்கு முக்கு
ற்றங்களால் வருந்துன்பங்களில்லை - என்பதாம். * அநாதியாகிய அ
விக்தை யென்னும் அஞ்ஞானமும் அதுபற்றியானென மதிக்கும் அகங்
காரமும் அதுபற்றி எனக்கு இதுவேண்டுமென்னும் அவாவும் அப்பற்
றி அப்பொருளிடத்தே செல்லும் ஆசையும், அதுபற்றி அதனது மறு
தலையிடத்தே செல்லும் கோபமும் எனவடநூலார் குற்றம் ஐந்தென
ன்பார். இவர் அவற்றுள் அகங்காரம் அவித்தையிலும், அவாவுதல் ஆ
சையிலும், அடங்குதலால் மூன்றென்றார். இடையறாத ஞானயோகங்
களுக்குமுன்னே இக்குற்றமூன்றும் காட்டுத்தீமுன்னே பஞ்சுபோலு
மாம். ஆதலால் அம்மிகுதியான்ற இவைமூன்றனுமங் கெடவென்றார்
விகாரத்தாலே தொக்கநாமமும் என்னுமிழிவு சிறப்புமை வருவிக்கப்
பட்டது. [காரணமாகிய அக்குற்றங்களைக் கெடுத்தோர் காரியமாகிய இ
ருவினைகளைச் செய்யாமையால் அவர்க்கு வருதற்குரிய துன்பங்களும்
இல்லையென்பது இதனாலே சொல்லப்பட்டது.] முன்கிடந்த துன்பங்
களும் மேல்வருந்துன்பங்களும் இல்லாமற் போகுகைமெய்யுணர்வின்
பயனாதலால் இவை இரண்டும் இவ்வதிகாரத்திலே சொல்லப்பட்டன.
இவ்விதத்தால் மெய்யுணர்ந்தார்க்கு உள்ளவை எடுத்தவுடம்பும் அது
கொண்டவினைப்பயனுமே யென்பதுபெற்றும். (ஙி)

நன - நீம்-அதி - அவாவறுத்தல்.

அஃதாவது, முன்னும் பின்னும்வினைத்தொடர்பு அறுத்தார்க்கு நடுநி
ற உடம்பும், அதுகொண்ட வினைப்பயன்களும். இன்றமையால் அ
பற்றி ஓரோவிடத்துத் துறக்கப்பட்ட புலன்களின்மேலே பழைய பு
முக்கவசத்திலேலே வினைவுசெல்லுமென்றே அவ்வினைவும் பிறவிக்கு வி
த்தாமாகலால் அவ்வினை இடைவிடாத மெய்ப்பொருளுணர்வால் அறுத்
தலாம். அதிகாரமுறைமையும் இதனால் விளங்கும்.

அவாவென்ப வெல்லா வுயிர்க்கு மெஞ்ஞான்றுந்
தவாவப் பிறப்பீனும் வித்து.

இ-ள். எல்லாவுயிர்க்கும் - சகலவுயிர்களுக்கும், எஞ்ஞான்றும்-
எக்காலத்திலும், தவா - தொடாதுவருகின்ற, பிறப்பு - பிறவியை, ஈனு
ம்- விளைப்பதாகிய, வித்து- விதை, அவா-அவாவாகும் - என்ப - என்
று (நூலோர்) சொல்லுவார்—எ-று. (கருத்து.) எவ்வுயிர்களின் பிறவி
க்கு விதை ஆசை-என்பதாம் * உடம்பு நீங்கிப்போங்காலத்திலே அ
டுத்தவினையும், அது காட்டுங்கதி நிமித்தங்களும், அக்கதியி லவாவும்,
உயிரினிடத்தே மூளையேவந்து உதிக்க- அறிவை மோகமானது மறை
க்க- அவ்வுயிரை அவ்வவாவானது கதியினிடத்தே கொண்டுசெல்லுமா
கலால், அதனைப்பிறப்பீனும் வித்தென்றும், கதிவசத்தால் உளதாகிய
அவ்வுயிரின் வேறுபாட்டிலும் o உற்சர்ப்பிணி * அவசர்ப்பிணியென்
னுங் காலவேறுபாட்டிலும் அது வித்தாகுமென வேறுபடாமையால் எல்
லாவுயிர்க்கும் எஞ்ஞான்றும் என்றும், இது எல்லாச்சமயங்களுக்கும்
ஒத்தலால் என்பதனென்றும் கூறினர். [இதனால் பிறப்புக்கு அவாவித்தா
தல் சொல்லப்பட்டது] (க)

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.

இ-ள். (பிறப்புத் துன்பமாயிருக்கையை அறிந்தவன்)—வேண்டுங்
கால்- ஒன்றைவேண்டினால், பிறவாமை- பிறவாதிருக்கவையே - வே
ண்டும்- இச்சிக்கவேண்டும், அது - அப்பிறவாமையானது, வேண்டா
மை - (தான்ஒருபொருளையும்) அவாவாமையை, வேண்ட - இச்சிக்க,
வரும்- (அவனுக்குத்) தானே உளதாம்—எ-று. (கருத்து.) ஒருவன்பி
றவாமையையே யிச்சிக்கவேண்டும - என்பதாம். * அநுதியாகத் தான்

---

o உற்சர்ப்பிணி- உலகம் வாழ்நாள் போகம் இவை முதலானவைகளாலே
வளர்பிறைபோல் பெருகுங்காலம்.

* அவசர்ப்பிணி- அது அவைகளாலே தேய்பிறைபோல் சுருக்குங்காலம்.

பிறப்பு- பிணி - மூப்பு - இறப்பு - இவைகளினாலே துன்பப்பட்டுக்கொ
ண்டு வருகின்றமையை அறிந்தவனுக்கு இன்பத்தில் ஆசையுண்டாமா
தலால் பிறவானமையை வேண்டுமென்றும் இவ்வுலகத்துச் சிற்றின்பத்
தைக்குறித்து ஒருபொருளை அவாவினால் அது பிறவியைத்தரும் வித்
தாய்ப் பின்னும் முடிவில்லாத துன்பமேவினைத்தலாலே அதுவேண்டா
மை வேண்டவருமென்றருள் செய்கின்றார். (உ)

வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு மஃதொப்ப தில்.

இ-ள். வேண்டாமையன்ன- (ஒருபொருளையும்) அவாவாமைபோ
லும், விழுச்செல்வம்- மேலாகிய செல்வமான தது, ஈண்டு- காணப்படுகி
ற) இவ்வுலகத்திலே, இல்லை-இல்லை, (அவ்வளவேயன்றி)—ஆண்டும்(கே
ட்கப்படுகிற) அவ்வுலகத்திலும், அஃதொப்பது- அதுபோல்வது, இ
ல்- இல்லை—என்று. (கருத்து.) இச்சியாமைக் கொப்பானசெல்வம் இவ்
வுலகத்திலும் மோக்ஷத்திலும் இல்லையென்பதாம். * மக்களது செல்வ
மும், தேவரது செல்வமும், மேலுமேலு நோக்கக் கீழாதலால் தனக்
கு மேலில்லாத வேண்டாமையை விழுச்செல்வமென்றும், அதற்கு இ
ரண்டுலகங்களிலும் ஒப்பதில்லை யென்றும் சொல்லினர் [இவ்விரண்டு
பாட்டாலும் பிறவாமைக்கு வழியாமெனவும், மேலாகிய செல்வமாமெ
னவும், வேண்டாமையின் சிறப்புச்சொல்லப்பட்டது.] (ஈ)

தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்.

இ-ள். தூஉய்மையென்பது-(ஒருவர்க்கு) முத்தியென்று சொல்ல
ப்படுவது, அவாவின்மை - அவாவில்லாமைபாம் அது - அவ்வவாவில்
லாமை, வாய்மை- மெய்ம்மையை, வேண்ட - இச்சிக்க, வரும்-தானே
யுண்டாம்—என்று. (கருத்து.) மெய்ம்மையை யிச்சிக்கவருவது ஆசையி
ல்லாமை அதேமுத்தி - என்பதாம். * வீடாவது - உயிர் அஞ்ஞானமுத
லாகிய அழுக்கறுதலாகலால் அதனைத்தூய்மையென்றும், காரணத்தை
க் காரியமாக உபசரித்துத் தூய்மையென்பது அவாவின்மை யென்று
ம், வாய்மையையுடையபரத்தை ஆகுபெயரால் வாய்மையென்றும் சொ
ல்லினர், மற்று- அசை - வேண்டுதல் - இடைவிடாதுபாவித்தல்] அவா
வறுத்தல் முத்திக்கு நேரோ காரணமென்பதும் அது வருவழியும் இதனா (ச)
லே சொல்லப்பட்டன.]

அற்றவ ரென்பா ரவாவற்றார் மற்றையா
ரற்றாக வற்ற திலர்.

இ-ள். அற்றவரென்பார் - (பிறவி) யற்றவரென்றுசொல்லப்படுமவ
ர், அவாவற்றார் - (அதற்கு நேரே ஏதுவாகிய) அவ்வாசையற்ற வர்

மற்றையார்-பிறவேதுக்கள் அற்று அதுவொன்றும் அற்றவர்; [அவ்
அக்களாலே சிலதுன்பங்கள் அற்றவரல்லாமல் அற்றனவற்றதிலர்- அ
ர்போற்பிறவியற்றிலர்—என்று. (கருத்து.) பிறவியற்றவனென்றுசொல்ல
படுபவர் ஆசையற்றவர்- என்பதாம். * [இதனால் அவாவற்றவரது சிற
பு விதியினாலும் எதிர் மறைமுகத்தாலுஞ் சொல்லப்பட்டது.] (நு

அஞ்சுவ தோரு மறனே யொருவற்கு
வஞ்சிப்ப தோரு மவா.

இ-ள். (ஒருவன்- மெய்புணர்தல் முடிவாகிய காரணங்களெல்லா
ம் பெற்று அவைகளால் முற்றிநின்ற அன்னதற் குரியவனாகிய) ஒருத்த
னை, வஞ்சிப்பது- மறவிவழி முன்னே நுழைந்து பின்னும் பிறவியிலே
தள்ளிக்கெடுக்கவல்லது, அவா - அவாவாம் (ஆகலால்)—அஞ்சுவது-
(அவ்வவாவை) அஞ்சிக்காப்பதே, அறன்- துறவறமாம்—என்று. (கருத்
து,) ஒருவனைக் கெடுக்கவல்லதாகிய ஆசையை நீக்குவதே துறவறம்
என்பதாம். * ஒரும்- இரண்டிற்- அசைகள். அதாதியாய்வந்த அவ்வவா
ஒரோவிடத்து வாய்மையைய வெண்டுதலியொழிந்து பராக்கிலுலே கா
க்கிடானாயின் அது இடமாக அவன் அறியாமல் புகுந்து பழைய வியற்
கையாய் நின்று பிறப்பிற்கு உண்டாக்குதலால் அதனை வஞ்சிப்பதென்
றார். காத்தலாவது- வாய்மை வேண்டலிலே இடைவிடாமற் பழகிப்ப
ராகரித்தல். இதனால் அவாவின் குற்றமும் அதனைக்காப்பதே அறமென்
பதும் சொல்லப்பட்டது.] (சு)

அவாவினை யாற்ற வறுப்பிற் றவாவினை
தான்வேண்டு மாற்றாள் வரும்.

இ-ள். (ஒருவன்) அவாவினை - ஆசையினை - ஆற்றவறுப்பின் - மு
ழுதுமறுத்தால், (வஞ்சித்தும் வாராமற்கெடுக்கவல்லவனாயினென்றபடி)
(அவனுக்கு) தவாவினை - கெடாமைக்கு ஏதுவாகியசெயல், தான்வே
ண்டுமாற்றால், தான்விரும்பும் வழியினாலே, வரும்- உண்டாகும்—என்று.
(கருத்து.) ஒருவனிச்சையை நீக்கினாலவன் கெடாமைக்கேது உண்டு
என்பதாம். * கெடாமைபிறவித் துன்பங்களால் அழியாமை அதற்கு
ஏதுவாகிய வினையென்றது மேற்சொல்லிய துறவறங்களை தான் விரும்
பும்வழி மெய் வருந்தாதவழி அவனை முழுவதும் அறுத்தவனுக்கு
மேலே தவஞ்செய்யவேண்டுவதில்லை, அவனால் செய்யப்பட்டனவையெ
ல்லாம் அறமாமென்பது கருத்து. (எ)

அவாவில்லார்க் கில்லாகுந் துன்ப மஃதுண்டேற்
றவா அது மேன் மேல் வரும்.

இ-ள். அவாவில்லார்க்கு- ஆசையில்லாதவர்க்கு, துன்பம்- (வரக்
கடவ) தொருதுன்பம், இல்லாகும், இல்லையாகும், (ஒருவனுக்குப் பிற
காணங்களெல்லாம். (இல்லாதிருந்தும்) அஃதுண்டேல்- அவ்வொன்று

மாத்திரம் உண்டாயின் (அதனால் எல்லாத்துன்பங்களும்) தவாது- முதலில்லாமல், மேன்மேல்- மேலுமேலும், வரும்—என-று. (கருத்து.) அந்த சயற்றவர்களுக்குத் துன்பமில்லை- என்பதாம். * உடம்பு மொண்மை கொண்ட துன்பம்முன்பே செய்துகொள்ளப் பட்டதாகையின் இங்கே துன்பமென்றது - இப்போது அவரவராலே செய்துகொள்ளப் படுகின்றவைகளேமேன்மேல் வருமென்றதனால் தன்னைப்பற்றிவருவதும், பிறவுயிரைப்பற்றி வருவதும், தெய்வத்தைப்பற்றிவருவதும், ஆகிய மூவகைத்துன்பங்களென்பது பெற்றும். இதனால் அவாவே அத்துன்பத்திற்கும் காரணமென்பது சொல்லப்பட்டது.] (அ)

இன்ப மியாறு தீண்டு மடைவாவென்னுங்
துன்பத்துட் டுன்பங் கெடின்,

இ-ள். அவாவென்னும் - அவாவென்றுசொல்லப்படுகிற, துன்பத்துட்டுன்பம்- துன்பங்களுள்ளே மிகுந்ததுன்பமானது, கெடின்-(ஒருவனுக்கு) கெடுமாயின் (அவன் முத்திபெற்ற விடத்தேயல்லாமல்)—இன்பமும்- இங்கேயும் [உடம்போடுகூடி நின்றவிடத்துமென்றபடி.]—இன்பம்- ஆனந்தமானது இடையறாது-நடுவேநீங்காது—என-று. (கருத்து.) மிகத் துன்பந்தருவதாகிய ஆசைகெடின் இவ்வுலகத்திலும் இன்பமுன்பதாம். * துன்பத்துட்டுன்பமாவது - மற்றைத் துன்பங்களெல்லாம் இன்பங்களாய்த்தோன்றும்படியாகவருங் கொடியதுன்பமாம். அவாவானது பயனைக்கொடுக்கும்போதேயல்லாமல் தோன்றும்போதும் துன்பமாகலால் இப்படிச் சொல்லப்பட்டது- அவாவென்னுந் துன்பத்துட்டுன்பமென்று காரணத்தைக்காரியமாக உபசரித்தார். அவ்வவாக்கெட்டவர்க்கு மனந்தடுமாறுது நிரம்பிநிற்கு மாகையால் என்றும் இன்பம் இடையறாதென்றார். [இதனால் அவாவறுத்தவர் முத்தியின்பத்தை உடம்போடுகின்றே அடைவாரென்பது சொல்லப்பட்டது.] (கூ)

ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும்.

இ-ள். ஆராவியற்கை- (ஒருபோதும்) நிரம்பாத இயல்பையுடைய, அவா- அவாவை, நீப்பின்- (ஒருவன்) விடுவானாயின் (அவ்விடுகை அவனுக்கு) அந்நிலையே- அப்போதே, பேராவியற்கை- (எப்போதும்) ஒருநிலைமையனுந்தன்மையை தரும்-கொடுக்கும்—என-று.(கருத்து.) நிரம்பாத ஆசையைவிடில் அது பிறவாமையைதருமென்பதாம். * நிரம்பாவாவது- தாமேயல்லாமல் தம்பயனும் நிலையாமையால் வேண்டத்தகாத பொருள்களேவேண்டி மேலுமேலும்வளர்தல், அவ்வளர்ச்சிக்கு அளவில்லாமையால் விடுதலே தக்கதென்பதுகருத்து. களிப்புக்கவலைகளும், பிறப்புப்பிணி மூப்பிறப்புகளும், முதலானவை இல்லாமல்உயிர் ஒப்புயர்வில்லாத இன்பத்தை அடைந்து நிற்கையால் விடுதலை சொன்ன

ன

வியற்கையென்றும், தானை அவாவைவிட்டவிடத்துப்பெறுதற்கு ஐயமில்லாமையால் அஃதிலதே தருமமென்றும் சொல்லினார், அஃதிலதானமனையுடையவனைச் சீவன்முத்தனென்பர். [இதனுள்விடாவது இதுவென்பதும் அது அவாவறுத்தவர்க்கு அப்போதே உண்டாமென்பதும் சொல்லப்பட்டன.]

(ய)

குறளறவிபல்-முற்றுப்பெற்றது.

இது அதிகாரம்-கூ-க்கு-நிருக்குறள்-கூ ஆக.

இவ்விதத்தால் இம்மை- மறுமை-வீடு என்கிற மூன்றையும் உண்டாக்கும் சிறப்புடைத்தாகிய அறத்தை அருளிச்செய்தார். இனிமுறையே பொருளும் இன்பமும் அருளிச்செய்யத்தொடங்கியவர் அவைகளுக்கு முதற்காரணமாகிய வழியினவலிசொல்லுகிறார்.

கூ அ - ஆம் - அதி-ஊழ்

அஃதாவது, நல்வினைப்பயனாகிய இன்பமும், தீவினைப்பயனாகிய துன்பமும், அவ்வினைகளைச் செய்தவனிடமே சென்று அடைதற்கு ஏதுவாகியதியாம்-ஊழ்-பால்-முறை-உண்மை-தெய்வம்-நியதி-விதி- என்பவைஒருபொருட்சொற்கள், இது பொருளின்பங்களிரண்டுக்கும் பொதுவாய்ஒன்றனுள் வைக்கப்படாமையாலும் முன்சொல்லப்பட்ட அறத்தோடு சம்பந்தமுடைமையாலும் அதனிறுதியிலே சொல்லப்பட்டது.

ஆகூழாற் றோன்று மசைவின்மை கைப்பொருள்
போகூழாற் றோன்று மடி.

இ-ள். (ஒருவனுக்கு) கைப்பொருள்- கையிலிருக்கும்பொருள், ஆகூழால்- ஆகுவதற்குக் காரணமாகிய ஊழினாலே அசைவின்மை- முயற்சியானது, தோன்றும்- உண்டாகும், போகூழால்-போகுதற்குக்காரணமாகிய ஊழினாலே, மடி-சோம்பலானது தோன்றும்- உண்டாகும்—என்று. (கருத்து.) ஒருவனுக்குப் பொருள்வரும்விதியால் முயற்சியும் பொருள்போம் விதியால் சோம்பலும், உண்டாகு - என்பதாம். * ஊழானது ஒருபொருளினது ஆக்கவழிவுகளுக்குத் துணைக்காரணமாகிய முயற்சி சோம்பல்களையும் தானேதோன்றச்செய்யு மென்பதுகருத்து. (க)

பேதைப் படுக்கு மிழவு தறிவகற்று
மாதலா னூற்றக் கடை.

இ-ள். (ஒருவனுக்கு)—அறிவு- எல்லாவறிவும் உண்டாயிருந்தாலும், இழவு- (கைப்பொருளை) இழத்தற்குக்காரணமாகியஊழ், (உற்றக்கடை) பொருந்தியவிடத்து, பேதைப்படுக்கும்- (அதனை) அறியாமையாக்

கும் (அவனறிவு சுருங்கியிருந்தாலும்)—ஆகல் - (கைப்பொருள்) ஆகுதற்குக்காரணமாகிய, ஊழ், உற்றக்கடை- பொருந்தியவிடத்து, அகற்றும்- (அதனை)விரிக்கும்—எ-று. (கருத்து.) போகும்ஊழ் அறிவில்லாமையையும் ஆகும்ஊழ் அறிவையும் தரும் - என்பதாம். * கைப்பொருளென்பது- அதிகாரத்தால் வருவிக்கப்பட்டது ஊழ் இயற்கையாலாகிய அறிவையும் வேறுபடுத்துமென்பதாம். (உ)

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
னுண்மை யறிவே மிகும்.

இ-ள். (அறியாமையாக்குவதாகியவூழையடையவனொருவன்) நுண்ணிய- நுட்பமானபொருள்களையுடைய, நூல்பல - பலநூல்களையும், கற்பினும்-கற்றுணரினும் (அவனுக்கு)—மற்றும்-பின்னும், தன்னுண்மை-தனது ஊழினாலாகிய அறிவே, மிகும்- மேற்படும்—எ-று. (கருத்து.)ஒருவனுட்பமாகிய நூல்களைக்கற்றலும் அவனுக்கு ஊழினாலாகிய அறிவே மிகும்- என்பதாம். * பொருளினுண்மை: நூலின்மேல் ஏற்றப்பட்டது. மேற்படுதல்- கல்வியறிவைப் பின்னே இதை என்செய்தோ மென்றுதன்பப்படுதற்காக்கிச் செயலுக்குச்தான் முற்படுதல். செயற்கையாலாகிய அறிவையும் கீழ்ப்படுத்துமென்பதாம். (ஈ)

இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளியா ராதலும் வேறு.

இ-ள். உலகத்து-உலகத்தில், இயற்கை-(ஊழினாலாகிய)இயற்கையானது, இருவேறு- இரண்டுகூறுபிரிக்கின்றது (ஆதலால்)—திரு-செல்வமுடையவராதலும் வேறு, தெள்ளியராதலும் - அறிவுடையராதலும் வேறு—எ-று. (கருத்து.) உலகில் ஊழின் இயல்பு செல்வமுடைமை அறிவுடைமைஎன இரண்டுவகை - என்பாம். * செல்வத்தைப்படைத்தலும், காப்பாற்றலும், பயன்கொள்ளுதலும், அறிவுடையவர்க்கல்லது கூடாவென்றே அவ்விதமல்லாமல் அறிவுடையவர் வறியவராகவும், மற்றவர்- செல்வராகவும் காணுதலால் அறிவினாலாதற்கு ஆகிறவூழ் அறிவினராகுதற்குஞ் செல்வராகுதற்கு ஆகிறவூழ் அறிவினராகுதற்குமாம் ஆகாவென்றதாயிற்று. ஆகவே செல்வத்தைத்தேடும்போது அறிவாகியதுணைக்காரணமும் வேண்டாமென்பதுபெற்றும். (ஙு)

நல்லனை யெல்லா அந் தீயவாந் தீயன
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு.

இ-ள். செல்வம் - செல்வத்தை, செயற்கு- உண்டாக்குதற்கு, நல்லனையெல்லாம்- நன்மையுள்ளனவெல்லாம், தீயவாம்- தீயனவாய் அழிக்கும் (அதுமாத்திரமல்லாமல்)—தீயவும் - தீயனவுதாமும், நல்லவாம்- நல்லனவாயாக்கும் (ஊழ்வசத்தால்)—எ-று. (கருத்து.) இதுவசத்

தால் நல்லனவையெல்லாந்தீயவாந் தீயனவெல்லாம் நல்லவாம் - என்பதாம். * நல்லனவுதீயனவுஎன்றது - காலமும் - இடமும் - கருவியும் - தொழிலும் ஆகிய இவைமுதலானவைகளை- ஊழ்லென்பது அதிகாரத்தால் வருவிக்கப்பட்டது, அழிக்குமூழ் உற்றவிடத்துக் காலமுதலானவைகள் நல்லனவையாயிருந்தாலும் அழியும், ஆக்குமூழ் உற்றவிடத்து அவை தீயனவையாயிருந்தாலும் ஆகுமென்றதாயிற்று ஆகவே ஊழ்முதலான துணைக்காரணங்களையும் வேறுபடுத்துமென்பது பெறும்.

பரியினு மாகாவாம் பாலல்ல வப்பத்தச்
சொரியினும் போகா நம்.

இ-ள். பால்- ஊழினால, அல்ல - தம்முடையவை யாகாதபொருள்கள், பரியினும் - வருந்திக்காப்பாற்றினாலும் ஆகாவாம்- (தம்மிடத்து) நில்லாமற்போகும், தம்- தம்முடையனவையாகிய பொருள்கள், உய்த்து- (புறத்தே) கொண்டுபோய், சொரியினும்- பெய்துவிட்டாலும் போகா: (தம்மைவிட்டுப்) போகாவாம்—என்று. (கருத்து.) ஊழினால் தமக்குரித்தாகாப் பொருள்களைக் காப்பாற்றினாலும நில்லா உரித்தாகும் பொருள்களைப் புறத்திற்போக்கினாலும் போகா- என்பதாம். * பொருள்களது நிலையும், போக்கும் ஊழால் ஆவதல்லது காப்பினாலும் இகழ்ச்சியினாலும், ஆகாதென்பதாம். [இவை ஆறுபாட்டாலும் பொருள் கலாத்துக்குக் காரணமாகிய ஊழின்வலி சொல்லப்பட்டது. (கூ)

வருந்தான் வருந்த வகையெல்லாற் கோடி..
தொகுத்தார்க்கும் துய்த்தலரிது

இ-ள். கோடி- (அநுபவிக்கப்படும் பொருள்கள்) கோடியை, தொகுத்தார்க்கும்- வருந்திச்சேர்த்தவர்க்கும், வருத்தான் - தெய்வத்தினால் வருந்த- வருக்கப்பட்ட, வகையல்லால் - வகையாலல்லது, துய்த்தல்- அநுபவித்தல், அரிது- உண்டாகாது—என்று.(கருத்து,)கோடிபொருள் சம்பாதித்தவர்க்கும் கடவுளைமத்தவனைமட்டன்றி யநுபவித்தலரிது- என்பதாம். * எந்தவினை எந்தவுயிரினால் செய்யப்பட்டதோ அந்தவினையின்பயனை அந்த வுயிர்க்கேவருத்தலால் வருந்தானென்றார். தொகுத்தார்க்கு மென்னுமும்மை தொகுக்காதவர்க்கு மாத்திரமல்லாமல் என்னுட பொருளைத்தருதலால் எச்சவும்மை. வேறுமுயற்சிகளாலே பொருள்களைச் சேர்க்கலாமேயல்லாமல் அநுபவித்தல்கூடாது அதற்கு ஊழேவேண்டுமென்பதாயிற்று. (எ)

துறப்பார்மற் றுப்புர வில்லா ருறற்பால
வூட்டா கழியு மெனின்.

இ-ள். துப்புரவில்லார்- (வறுமையினாலே) அநுபவித்தல் இல்லாதவர், துறப்பார்- (இல்வாழ்க்கையைத்) துறக்குங் கருத்துடையவராவார் (ஊழ்கள்)—உறற்பால- அடையும் பகுதியையுடையதன்பங்களை, ஊட்டா- அடைவிக்காமல், கழியுமெனின்-நீங்குமாயின்—என்று. (கருத்து.)

ஊழ்வினைகள் தான்பக்கலை யடைவிக்காமல் நீங்கின்வறுமையறுப்பமில் லார்த்துறப்பார் - என்பதாம். * தம்மால்விடப்படும் பற்றுக ளெல்லாம்தா மேவிடப்பெற்றிருந்தும் கருத்துவேறுபாட்டால்துன்பப்படுவது ஊழ்வ லியாலென்றும் ஒழிந்தசொற்பொருளைக்காட்டலால் - மன் - ஒழியிசை. ()

நன்றுங்கா லல்லவாக் காண்பவ ரன்றுங்கா
லல்லற் படுவ தெவன்.

இ - ள். நன்று - நல்வினை, ஆங்கால் - இன்பங்களைக்கொடுக்கும்போ து (அவ்வின்பங்களை நீக்கும் விதந்தோட்டாமல்) — நல்லவர் - இவைகல் லனவையென்றுணர்ந்து, காண்பவர் - அநுபவிப்பவர், அன்று - மற்றைத் தீவினை: ஆங்கால் - துன்பங்களைக்கொடுக்கும்போது (அத்துன்பங்களை யும் அப்படி அநுபவியாமல்) — அல்லற்படுவது - (நீக்கும் விதந்தேடித்) துன்பப்படுவது, எவன் - என்னினைத்து — எ - று. (கருத்து.) நன்மை யையநுபவிப்பதுபோலத் தீமையையும் அநுபவிக்கவேண்டும் - என்ப தாம். * காமமே மூள் செய்துகொண்டையா லும் பயனைக் கொடாமல் கழிபாலையாலும் இரண்டும் இணைத்து அநுபவித்தற்கு உரியனவையாம் - அவைகளிலே ஒன்றற்கு இணைந்து அநுபவித்து மற்றதற்கு அதுசெ ய்யாமல் வருந்துதல் அறிவு அன்று - என்பதாம். [இவைமூன்றுபாட் டாலும் இன்பதுன்பங்களுக்குக் காரணமாகிய ஊழின் வலிசொல்லப் பட்டது.] (கூ)

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்.

இ - ள். மற்றொன்று - (தன்னை விலக்குதற்பொருட்டுத்) தனக்குப் பகையாகியவொருபாயத்தை, சூழினும் - ஆராய்ந்தாலும், தான் - தான், முந் துறும் - (அவ்வுபாயத்தையாவதுமற்றொன்றையாவது முழியாகக்கொண்டுவ ந்து அவ்வாராய்ச்சிக்கு) முற்பட்டுநிற்கும் (அதனால்) — ஊழின் - ஊழ் போல், பெருவலி - மிகுந்த வலிமையுடையனவு, யா - எவைவ, உள - இருக்கின்றன — எ - று. (கருத்து.) ஊனை விலக்க நினைந்தின் அதுவேமு ன்னிற்கும் ஆதலால் அவ் ஊழினும் வலியவை இல்லை - என்பதாம். * பெருவலி அதனையுடைய ஊழுக்கு ஆகுதலால் தற்குறிப்பேற். சூழ்தல் பலருடனும் பழுதறவெண்ணுதல், ஊழானது அவ்வுபாயத்தைச் செ ய்தற்கேயல்லாமல் ஆராய்தற்கும் சமயங்கொடாதென்கிற பொருளைக் குறித்து நிற்கையால் உம்மை எச்சவும்மை எல்லாம் வழிபாக வருத லுடைமையால் ஊழே வலியையுடைய தென்பதாம். [இதனால் அவ்வி ருவகை யூழ்களின் வல்லமையும் பொதுவாகச் சொல்லப்பட்டது.] (ஈ)

இனி இல்லறத்தின் வழிப்படுவனவாகிய பொருளின்பங்களுள் இம் மைமறுமை இரண்டையும் தருவதாகிய பொருளைச் சொல்லும்படி எ டுத்துக்கொண்டார்.

முதலாவது - அறத்துப்பால் முற்றிற்று.

இரண்டாவது.

பொருட்பால்.

பொருளாவது, அறவழியிலே சேர்க்கப்பட்ட பொன்மணி முதலானவையாம். அது- தனக்குத் துணைக்காணமாகிய அரசனீதிசொல்லவே யடங்கும். அவ்வரசனீதி யாவது காலலே நடத்து முறைமையாம - அவனே அரசியல் அங்கவியல்-ஒழிபியல் எனு மூன்றியல்களால் அருளிச்செய்தார்.

அரசியல்.

அரசாவது, உலகத்திற்கு உயிரெனச்சிறந்த அரசனது தன்மையாம், அவ்வரசியலே இருபத்தைந்ததிகாரங்களிலுலே சொல்லத்தொடங்கி முதலிலே இறைமாட்சி சொல்லுகிறார்.

கடவுள்-வாழ்த்து-அதி-இறைமாட்சி.

அஃதாவது அரசனது நற்குண நற்செய்கைகளாம்.

படைகுடி கூழமைச்சு நட்பரண் நான்கு
முடையான் அரசருள் ஏறு.

இ-ள். படை - சேனையும், குடி- நாடும், கூழ்-பொருளும், அமைச்சு - அமைச்சும், நட்பு- நட்பும், அரண்-அரணும் (என்றுசொல்லப்படுகிற ஆறங்கங்களிலும்—உடையான் - உடையவன், அரசருள்ளது - மன்னருள் ஆண்சிங்கம்போல்வா னெவனோ—என்று. (கருத்து.) சேனை-நாடு-பொருள்-அமைச்சு-நட்பு- அரண் இவ்வாறங்கத்தையு முடையவனரசருளாண்சிங்கம் போன்றவன் - என்பதாம். * குடியையுடையனாடு. குடியென்றும், கூழுக்கு எதுவாகியபொருள் - கூழென்றும் சொல்லப்பட்டன. அமைச்சு நட்பு பொருள் நாடு அரண்படை என்பதே முறையாயினும் இங்ஙனசெய்யுளிணக்கிப் பிறழவைத்தார். ஆறுமுடையானென்றதனால் இவைகளிலேயொன்று குறையினும்அரசனீதிசெல்லாதென்பது பெற்றாம். [இதனால் அரசனுக்கு அங்கமான இவையென்பதும் இவைமுழுது முடைமையே அவன்வெற்றிக்கு வதுவென்பதும்சொல்லப்பட்டன.]

(க)

அஞ்சாமை யீகை யறிவூக்க மிந்நான்கு
மெஞ்சாமை வேந்தற் கியல்பு.

இ-ள். வேந்தற்கு - அரசனுக்கு, இயல்பு - இயல்பாவது, அஞ்சாமை - திண்மையும், ஈகை-கொடையும், அறிவு-விவேகமும், ஊக்கம்-மனவெழுச்சியும், இந்நான்குட்-இந்த நான்கு குணங்களும், எஞ்சாமை

நாலடி நானூறும் அதி—இறைமாட்சி.

டுமே நீங்காது நிற்கை—என்று. (கருத்து.) அரசனுக்கியல்பாவது வல்
லமை எனை யறிவு மனவெழுச்சியாகும்—என்பதாம். * ஊக்கம் தொழி
ல்செய்தலில் மனவெழுச்சி இவற்றுள் அறிவு ஆறங்கங்களுக்கும் உரி
த்து எனை—புடைக்குரித்து. மற்றவை—தொழிலுக்குரியன. உயிர்குண
ங்களுள் ஒன்றுதோன்ற மற்றவை அடங்கிவரும் அவற்றுள் இவை அ
டங்கினால் அரசனுக்குக் கெடுவனபலவாம் ஆதலால் இவை எப்பொ
ழுதும் தோன்றநிற்றல் இயல்பாக வேண்டுமென்பது தோன்றற்கு எஞ்
சாமை வேற்றுமைத்தொகை. (உ)

தூங்காமை கல்வி துணிவுடைமை யின்மூன்று
நீங்கா நிலனாள் பவற்கு.

இ-ள். நிலனாள்பவர்க்கு—நிலத்தினையாளுந் திருவினையுடையவனு
க்கு, தூங்காமை யுடைமை—அக்காரியங்களிலே வினைவுடைமையும்
கல்வி (யுடைமை) (அவைகளை அறிதற்குரிய) - கல்வியுடைமையும்,
துணிவுடைமை—ஆண்மையுடைமையும் ஆகிய, இம்மூன்றும்—இம்மூ
ன்றுகுணங்களும், நீங்கா—(ஒருபோதும்) நீங்காவாம்—என்று. (கருத்
து.) வினைவுடைமை, கல்வியுடைமை, வலியுடைமை. இம்மூன்றுமரசனை
விட்டு நீங்காவாம்—என்பதாம். *கல்வியதுகூறுபாடுபின்னே சொல்லப்ப
ட்டுநீங்காவாம்—என்பதாம், மற்றவை தொழிலுக்குரியன நீங்காமையெ
ன்பதற்கு முன்னே எஞ்சாமைக்கு உரைத்தபடி உணர்த்துக்கொள்க. ()

அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மானம் முடைய தரசு.

இ-ள். அறன்—(தனக்குச்சொல்லப்பட்ட) அறத்திலிருந்து, இழு
க்காது—தவறுதுடந்து, அல்லவை—அறமல்லாதவைகளை, நீக்கி—(தன
தாட்டிடத்தும்) உண்டாகாமற்கடிந்து, மறன்—வீரத்திலிருந்து, இழு
க்கா—தவறுத. மானம்—மானத்தை, உடையது—உடையவன், அரசு—அ
ரசனுவான்—என்று. (கருத்து.) நன்னெறத்திலிருந்து யாவங்களைநீக்கிவனி
மையினால் தவறுத மானமுடையவன் அரசன்—என்பதாம். * அவ்வற
மாவது—வேதமோதல், ஈதல், யாகஞ்செய்தல், என்னும்பொதுத்தொழி
ல்களிலும்—படைக்கலப்பயிலல், பல்லுயிரோம்பல், படைத்திறமருத்
தல், என்னுஞ் சிறப்புத்தொழில்களிலும்—தவறுமல்நிற்கை, அல்ல
வை, கொலை, களவு, முதலானவை குற்றமாகிய மானத்தைநீக்குதற்கு
மறனிழுக்காமானமென்றார். அரசு—அரசனது தன்மையாதலால் அ
துபசாரவழக்கால் அவன்மேலேநின்றது. (ச)

இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.

இ-ள். இயற்றலும்- (தனக்குப் பொருள்கள்வரும் வழிகளை மேலு மேலும்) உண்டாக்கலும், ஈட்டலும் - (அப்படிவந்தவைகளை) ஓரிடத் தே தொகுத்தலும், காத்தலும் - (தொகுக்கப்பட்ட வைகளைப்) பிறர் கொள்ளாமல் காத்தலும், காத்த - காக்கப்பட்டவைகளை, வகுத்தலும் (அறம்பொருளின்பங்களின் பொருட்டுச்) செலவு செய்தலும், வல்ல து - வல்லவன், அரசு - அரசனெனவன்—எ-று. (கருத்து.) பொருள் வரவுதேடலிலும், சேர்த்தலிலும், காத்தலிலும், அறவழியில் செலவு செய்தலிலும், வல்லவன் அரசனெவான்-என்பதாம். * பொருள்களாவன - மணி - பொன்-நெல் முதலானவை அவைவரும் வழிகளாவன-பகைவனையழித்தலும், திறைகொள்ளலும், கன்னுடுகாத்தலும், முதலானவை, பிறரென்றவர், பகைவர், கள்வர், சுற்றத்தார், தொழில்செய்வோர், முதலானவர்-கடவுளர், அந்தணர், வறியோர், என்கிற இவர்க்கும் புகழுக்கும், கொடுத்தலை- அறத்தின்பொருட்டாகவும், யானை, குதிரை-படை-தேர் - அரண் என்கிறஇயற்றுக்கும் பகையோடு கூடும்போது பிரிக்கப்படுவோர்க்கும், உள்ளவிட்டுப் பிரியும்போது கூட்டப்படுவோர்க்கும், கொடுத்தலை - பொருட்பொருட்டாகவும், மண்டபம் - வாவி - செய்குன்று - இளமரக்கா-முதலானவைகளைச் செய்தற்கும், ஐம்பொறிகளால் அநுபவிக்கப்படு மனைவகளுக்கும் கொடுத்தலை - இன்பம்பொருட்டாகவும், கொள்க. இயற்றுதல் முதலானவைகளைத் தவறுமல் செய்தல் அரிதாகலால் - வல்லதரசென்றார். இவைதான்குபாட்டாலும் அரசனது கற்குணகற்செய்கையாகிய மாட்சியேசொல்லப்பட்டது.]()

காட்சிக் கெளியன் கடிந்தொல்ல னல்லனேன்
மீக்கூறு மன்ன னிலம்.

இ-ள். மன்னன்- அரசன், காட்சிக்கெளியன் (வழக்கறிவிப்பவர்க்கும் குறையிரப்பவர்க்கும்) காணுதற்கு எளியனாஞ்சி கடிந்தொல்லனல்லனேல்- (யாவரிடத்தும்) கடியசொல்லினன் அல்லாதவனுமாயிருந்தால். நிலம்- அவனது) நிலத்தை உலகம் மீக்கூறும்(எல்லாநிலங்களினும்) உயர்த்திச் சொல்லும்—எ-று. (கருத்து.) காண்கைக்கு எளியவனும் இன்சொற்சொல்பவனும் ஆகிய அரசன் நிலத்தை உலகம் உயர்த்திச் சொல்லும் - என்பதாம். * காணுதற்கு எளிமையாவது பெரிய அரசாட்சிமண்டபத்திலே அந்தணர் - சான்றோர் - உள்ளிட்டவரோடு சமய மூடையவனாயிருத்தல், கடிந்தசொல் - கேள்வியிலும் தொழிலிலும் கடுமையாகியசொல், நிலத்தைஉயர்த்திச் சொல்லுமெனவேமன்னனை உயர்த்திச்சொல்லுதல் சொல்லவேண்டுவதில்லை யாயிற்று. உயர்த்திச் சொல்லுதல்- இவன் காக்கின்றநாடு பசி, பிணி, பகை, முதலானவை இல்லாமல் யாவர்க்கு மிகுந்த வின்பந்தருவதென்று புகழ்ந்துசொல்லல்.(சு)

இன்சொலா லீத்தளிக்க வல்லார்க்குத் தன்சொலாற்
றன்னயன் டனைத்திவ் வுலகு.

இ-ள். இன்சொலால்- இனியசொல்லுடனே, ஈத்து-கொடுத்து, அ
ளிக்க-காப்பாற்ற, வல்லார்க்கு-வல்ல அரசனுக்கு, இவ்வுலகு-இந்தவுல
கம், தன்சொலால்- தன்புகழோடுபொருந்தி, காலங்கண்டனைத்து-தான்
நினைந்த அளவினதாகும் —எ-று. (கருத்து.) இனியசொல்லுடன்கொ
டுத்துக் காக்குமரசனுக்கு தான்நினைத்தவை உண்டாகும்- என்பதாம். *
றிவ்சொல்- கேள்வியிலும், தொழிலிலும், இனிமையாகியசொல்-ஈதல்-
வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுத்தல், அளித்தல், தன்பரிவாரத்தி
னிலும், பகைவராலும், கலிவுபடாமற் காத்தல். இவைசெய்தல் அருமை
யாகலால் வல்லாற்கென்றும், அவனே மண்முழுதும் ஆளுமாகலால் இவ்
வுலகென்றும், சொல்லினார். கருதியவளவிற்றாதல் - நினைத்தபொருளெ (எ)
ல்லாம் சுரத்தல்.

முறைசெய்து காப்பாற்று மன்னவன்மக்கட்
கிறையென்று வைக்கப்படும்.

இ-ள். முறைசெய்து- (தான்) முறைசெய்து, காப்பாற்றும்-(பிறர்
வருந்தாமற்) காத்தலுஞ்செய்யும், மன்னவன்- அரசனுனவன், (பிறவியி
னாலே மனிதனேயாயினும்) —மக்கட்கு- மனிதர்களுக்கு, இறையென்
று- (செயலினாலே) கடவுளென்று, வைக்கப்படும் - வேறுவைக்கப் படுவ
ன்—எ-று. (கருத்து.) மநுமுறைப்படி- குடிகளைக்காக்கும் அரசன் அக்
குடிகளுக்குத்தெய்வம்-என்பதாம்.* முறை-அறநூலிலும், நீதிநூலிலும்,
சொல்லும்வழிபிறர்மேலே சொல்லப்பட்டவர். வேறுவைத்தல் மனிதரிற் (அ)
பிரித்து உயர்த்திவைத்தல்.

செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கு முலகு.

இ-ள். சொல் - (கண்டித்துப் புத்திசொல்லுந் துணையாயினவாது)
சொற்களை, செவிகைப்ப- (தன்)செவிபொறுதாகவும், பொறுக்கும்- (அ
வைகளின் பயனைக்குறித்துப்) பொறுக்கும், பண்புடை - குணமுடைய,
வேந்தன்-அரசனது, கவிகைக்கீழ்-குடைநிழலின்கீழே, உலகு-உலகம்,
தங்கும்-பொருந்தும்—எ-று. (கருத்து.)மந்திரிமுதலானோர் கடிந்தசொ
ல்லுஞ்சொற்களைப் பொறுக்குமரசன் உலகமுழுமும் ஆள்வான் - என்ப
தாம். * காவின்கைப்பு- செவியிலேற்றப்பட்டது. பண்புடைமை-சிறப்
பறிவுடையவனுகுகை. அறநூல் நீதிநூல்களிலே தவறுணமையாய் நூமிமு (கூ)
முதும்தானே ஆள்வானென்பதாம்.

கொடையளி செங்கோல் குடியோம்பலான்கு
முடையானும் வேந்தர்க் கொளி.

இ-ள். கொடை- (வேண்டுவோர்க்கு வேண்டுமவைகளைக்) கொடுத்
தலும், அளி- (யாவரிடத்தும்) முகமலர்ந்து இன்சொற் சொல்லுதலும்,
செங்கோல்- முறைசெய்தலும், குடியோம்பல் - (தளர்ந்த) குடிகளைப்

பேணலும் ஆகிய, நான்கும்-இந்நான்கு செயல்களையும், உடையான்-உடையவன், வேந்தர்க்கு-அரசர்க்கெல்லாம், ஒளியாம்-விளக்காம்—எ-று. (கருத்து.) சனை, திருவை, செங்கோல், குடிகளைக்காத்தல், இவைகளையுடையோன் அரசர்களுக்கு விளக்கு- என்பதாம். * செவ்வியகோல்போலுதலால் முறைமையைச்செங்கோலென்றார். குடியோம்பல்வறுமையுற்றவிடத்தே- ஆறிலொன்றாகிய பொருளையும் வாங்காமை முதலானவை செய்தல், தன் சாதிமுழுதும் விளக்கலால் விளக்கென்றார், [இவை ஐந்து பாட்டாலும் மாட்சியும்பயனும் உடன்சொல்லப்பட்டன.] (ஆ)

சார்- ஆம்- அதி-கல்வி.

அஃதாவது, அவ்வரசன் தான்கற்றற்குரிய நூல்களைக் கற்றல். அவையாவன- அறநூலும், நீதிநூலும், தேர்-யானை-குதிரை- படைக்கலம் எனப்பட்ட - இவற்றிநூல்களும், முதலானவையாம். அரசன் அறிவுடையவனாயிருந்தால் தன்னாட்சிக்கேயன்றி மன்னுயிர்க்கும் பயன்படுதல் குறித்து இது அதிகாரவல்லனைக்கப்பட்டதாயினும் யாவர்க்கும்உறுதிணையத் தருவதாகிய சிறப்புடைமையினாலே பொதுப்படச் சொல்லுகின்றார். முன்னைதிகாரத்திலே தூங்காமை யென்னும்பாட்டிலேதோற்றுவாய் செயப்பட்டமாட்சியை விரித்துச்சொல்லுதலால் இது அதன் பின்னாலக்கப்பட்டது.

கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக.

இ-ள். (ஒருவன்) கற்பவை- கற்கப்படுநூல்களை, கசடற - பழுதறக் கற்க-கற்கக்கடவன், கற்றபின்-(அப்படி)கற்றபின்னே, அதற்கு-அக்கல்விக்கு, தக-தகுதியாக, நிற்க - (அவைகளாலே சொல்லப்பட்ட வழியிலே) நிற்கக்கடவன்—எ-று. (கருத்து.) ஒருவன் கற்கப்படு நூல்களைக் குற்றமறக்கற்று அக்கல்வி யறிவிற்குத்தக்கபடி நிற்கக்கடவன்- என்பதாம் * கற்பவையென்றதனால் அறம், பொருள், இன்பம், வீடு, என்கிறஉறுதிப்பொருள்களை உணர்த்துகிற நூல்களென்பதுபெற்றும். கசடறக்கற்றலாவது- விபரீதசந்தேகங்களை நீக்கி - மெய்ப்பொருளை நல்லோர் பலருடனேயும் பலதாமும் பழகுதல், நிற்றலாவது - இல்வாழ்க்கையிலே கருமங்களைச்செய்து யோக்கியருக்குக்கொடுத்துத்தானநுபவித்தலிலும், துறவிலே தவத்தால் மெய்யுணர்ந்து அவாவறுத்தலிலும், தவறாமை. [இதனால் சிறப்புடையவனுக்குக் கற்கவேண்டுமென்பதும் கற்குந்தகு நூல்களும் அவைகளைக்கற்கும் விதமும் கற்றதனாற்பயனும்சொல்லப்பட்டன.]

எண்ணென்ட வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு.

இ-ள். (அறியாதவராலே) எண்ணென்ப- எண்ணென்றுசொல்லப் படுமலையும், ஏனையெழுத்தென்ப - மற்றை யெழுத்தென்று சொல்லப் படுமலையும் ஆகிய, இவ்விரண்டும்- இக்கலைகளிரண்டையும் (அறிந்தோர்—வாழுமுயிர்க்கு- வாழ்தற்குரியமனிதர்க்கு, கண்-கண்களாகும், என்ப- என்றுசொல்லுவார்—எ-று. (கருத்து.) கணிதநூல்களு மிலக்கண நூல்களு- மனிதர்களுக்குக் கண்களாகும்-என்பதாம். * எண்-சுவடி-தும் எழுத்து- இலக்கணம், இவ்விருவிதநூல்களும்- அறமுதலாகியபொருள் களோக் காணுதற்குக் கருவியாகலால்-கண்ணெனப்பட்டன. [இதனால் கற்கப்படு நூல்களுக்குக் கருவியாவனவும் அவைகள் அவசியம் வேண்டியவையென்பதும், சொல்லப்பட்டன.] (உ)

கண்ணுடையு மென்பவர் கற்றோர்முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்.

இ-ள். கற்றோர்- கற்றவரோ, கண்ணுடையர்-கண்களுடையவர், என்பவர்- என்று உயர்த்திச்சொல்லப்படுபவர், கல்லாதவர்- கற்றிலாதவர் முகத்து-முகத்தினிடத்து; இரண்டு புண்ணுடையர்- இரண்டு புண்களை யுடையவர், (கண்ணிலார்) —எ-று (கருத்து.) கற்றோர்முகத்திலுள்ள கண்மற்றோர் முகத்திலுள்ளது புண்-என்பதாம் * தாமான கலைதேசங்களில் உள்ளவைகளையும் காணும் ஞானக்கண்ணுடைமையால்கற்றோர் கைகண்ணுடைய ரென்றும், அஃது இல்லாமல் நோய் முதலானவைகளாலே - துன்பஞ்செய்யும் ஊனக்கண்ணே யுடைமையால் கண்ணில்லாமை குறிப்பிக்கப்பட்ட ஊனக்கண்ணினது மெய்ம்மையாகிய சொரூபத்தைச் சொல்லிய விதத்தினாலே பொருணூல் களையுங் கருவிநூல் களையுங் கற்றோரது உயர்வும், கல்லாதது இழிவும், இதனாலே சொல்லப் பட்டன.] (ஊ)

உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரிதல
லனைத்தே புலவர் தொழில்.

இ-ள். புலவர்-கற்றறிந்தவரது, தொழில்-தொழில், உவப்ப-(யாவரும்) மகிழும்படி, தலைக்கூடி-(அவரைச்) சேர்ந்து, உள்ள-(இனியவனோமாம்ன) ப்போதுகாண்போமென்று)நினைக்கும்படி, பிரிதல்-நீங்குதலாகிய, அனைத்து-அத்தன்மையையுடையதாம்—எ-று. (கருத்து.)கற்றோர்தொழிலை மற்றோர் அவர்பிரிய வருந்துவர் - என்பதாம்.* தாம்நல்வழி நடத்தலும், பிறருக்கு உறுதிசொல்லுதலும், தொழிலென ஒன்றுய் அடங்குதலால்

அத்தன்மைத்தென்றார். அத்தன்மை அப்பயனைத்தருந் தன்மை. கால தலாலே நல்லொழுக்கமும், மதுரமானவுறுதிச்சொற்களைக் கேட்கையால் இன்பமும், உண்டாதலால் கற்றவரிடத்தேதெளிவாரும் அன்புடையவராவ ரென்பதாம். [இதனால்ஓதற்றேரது உயர்வுசொல்லப்பட்டது.] (உ)

உடையார்மு னில்லார்போலேக்கற்றுங் கற்றார்
கடையரோ கல்லா தவர்.

இ-ள். உடையார்முன்- செல்வர்முன்னே, இல்லார்போல் - வறியவர்போல, ஏக்கற்றும் - (தம்மாசிரியர்முன்) ஏக்கற்றுநின்றும், கற்றார்-கற்றவர் (உயர்ந்தவராவார்)—கல்லாதவர்- (அங்ஙனமேக்குறாணிக்) கல்லாதவர், கடையரோ-(எப்போதும்) இழிந்தவரோயாவர்—எ-று. (கருத்து.) கற்றோரையர்ந்தோரு மற்றோரிழிந்தோருமாவர்-என்பதாம். * ஏக்கறுதல்-ஆசையினாலேதாழ்தல். கடையரென்றதனால் அதற்கு எதிராகிய உயர்ந்தோரென்பது வருவிக்கப்பட்டது. பொய்யாகிய மானத்தைநோக்கிமெய்யாகிய கல்வியையிழந்தவர் பின்னெந்நாளும் அறிவுடையவராகாமையால்-கடையரோயென்றார். [இதனாலே கல்லாதவாது இழிவுசொல்லப்பட்டது.] (ஙி)

தொட்டனைத் தூறுமணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு.

இ-ள். மணல்-மணலினிடத்தே, கேணி-கேணியானது, தொட்டனைத்து-தோண்டிய அளவினதாக, ஊறும் - சுரக்கும் (அதுபோல்—அறிவு-(மனிதருக்கு) அறிவானது, கற்றனைத்து-கற்ற அளவினதாகவூறும்-சுரக்கும்—எ-று. (கருத்து.) மணற்கேணிதோண்டியளவு சுரப்பதிபோல மனிதருக்கறிவுகற்றவளவாகும்-என்பதாம். * இக்கேகேணியென்றது-அதனீரா சிரிதாகற்றவுளவிலேல போதுமென்றுவிடாமல்மேன்மேலும் கற்றலவேண்டுமென்பதாம். இக்கல்வியறிவுமிகுதல் ஊழ்மாறுகொள்ளாவிடத்தேயாகலால் முன்னே உண்மையறிவுமிகுமென்றதனோடு. இப்பாடல் விரோதப்படாமை அறிக. (சு)

யாதானு நாடாமா வூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.

இ-ள். (கற்றவனுக்குத் தன்னுடும் ஊருமேயல்லாமல்)—யாதானும்-யாதாயினு மொருநாடும், நாடாம் - தன்னுடாம்(யாதானும்)யாதாயினுமொருரும், ஊராம்-தன்னூராம்(அப்படியிருக்க), ஒருவன் - சாந்துணையும்-இறக்குமளவும், கல்லாதவாறு-கல்லாமற்கழிகின்றது,என்-என்னினைத்து—எ-று. (கருத்து.) கற்றவனுக்கு ஏந்நாடுமே எவ்வூரும் தன்னாடு

பிருக்க ஒருவன் கற்காமலிருப்பதென்ன-என்பதாம் * ஆல். அசைகள்.
பின்னும் உயிரோடு செல்லுதலால் - சாக்துணையுமென்றார், பிறநாடுக
ளும் ஊர்களுந்தம்முடையவைபோலிருந்து மகிழ்ந்து பொருள்கொடுத்
துப்பூசைசெய்தற்கு ஏதுவாகலால் - கல்விபோற்சிறந்ததுவேறென்ற
தில்லையாகலின் அதனையே எப்போதும் கற்கவேண்டுமென்பதாம்.(எ)

ஒருமைக்கட் டான்கற்ற கல்வியொருவற்
கெழுமையு மேடாப் புடைத்து.

இ-ள்: ஒருவர்க்கு-ஒருவனுக்கு, தான்-தான், ஒருமைக்கண்-ஒருபிற
ப்பினிடத்து, கற்றகல்வி- கற்றவித்தையானது, எழுமையும் - எழுபிற
ப்புகளிலும், ஏமாப்பு: பேய்உதவுதலை, உடைத்து - உடையதாகும்—
எ-று. (கருத்து.) ஒருபிறவியில்கற்ற கல்வி எழுபிறப்பிலும் உதவும்-என
ன்பதாம். * வினைகள்போல உயிரிடத்தேதங்கி அது சென்றவிடத்தே
செல்லுமாகலால் எழுமையுமே மாப்புடைத்தென்றார் உதவுதல் நல்
வழியிலேசேர்த்தல். (அ)

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்.

இ-ள். தாம் - தாங்கள், இன்புறுவது - இன்பமடைதற்குவகுவா
கியகல்வியை, உலகு-உலகமானது, இன்புற - இன்பமடைய, கண்டு-
(அச்சிறப்பு) நோக்கி, கற்றறிந்தார் - கற்றறிந்தவர்கள், காமுறுவா-பின்
னும் அதனையேவிரும்புவார்—என்று (கருத்து.) கற்றவர் கல்விக்குவல
தாகியகாரியம்புரிதல்கண்டு மேன்மேலுங்கற்பார்-என்பதாம். * தாமின்
புறுதலாவது - கற்றிறபோது சொற்பொருள்களின் சுவையை அனுப
விக்தலாலும்-புகழும், பொருளும், பூசையும், பெறுதலாலும் - பின்னே
-அறத்தையும், வீட்டையும், அடைதலாலும் - ஆகலால் இடையறாத இ
ன்பத்தை அனுபவித்தல் உலகின் புறுவதாவது இப்பெரியவனைச் சே
ர்ந்து அறியாதனவைகளையெல்லாம் அறிந்தோமென்று மகிழ்தல், சம்பா
திக்தல். காப்பாற்றல், இழந்தல், இவைகளாலே துன்பந்தீரசெய்து ப
லனையும் பகைபாக்கல்பற்றி செல்வத்தை விரும்பாமையால் கற்றறிந்
தாரென்று - கரும்புதின்னுதற்குக் கூலிபேல் தாமின்புறுதற்கு உலக
மின்புறுவது மற்றொருவழியால் இல்லாமையால் அதனையே காமுறு
வரென்றும் சொல்லினர். (கூ)

கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை.

இ-ள். ஒருவற்கு-ஒருவனுக்கு, கேடில்-அழிவில்லாத, விழு - சி
றாகிய, செல்வம்-செல்வமாவது, கல்வி- வித்தையர்கும், மற்றையவை

அது நீக்கலாகியமணியும், பொன்னும், முதலானசெல்வம், மாடல்ல-செல்வமல்ல—எ-று. (கருத்து.) ஒருவனுக்குக்கல்வி அழிவில்லாதசெல்வம்-என்பதாம். * அழிவில்லாமையாவது - பங்காளிகள், கள்வர், வேந்தர், அரசர், இவர்களாலே கொள்ளப் படாமையும் - வழிப்பட்டவர்க்குக் கொடுத்தவிடத்தே குறையாமையும், ஆம்—சீர்மை - யோக்கியதை. மணி பொன் முதலானவைகளுக்குஇவ்விரண்டும் இல்லாமையால் அவற்றை மாடல்லவென்றார். [இவை ஐந்துபாட்டாலும் கல்வியது சிறப்புச் சொல்லப்பட்டது.] (ங)

சக - ஆம்-அதி - கல்லாமை.

அஃதாவது, கற்றலிற்செய்யாமையினிழிவாம். கல்வியதுசிறப்பை முன்னே சொல்லியவளவால் முடிவுபெறுமைமோக்கி எதிர்மறையினாலேயும் சொல்லுதலால் இது அதன் பின்வைக்கப்பட்டது.

அரம்இன்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்.

இ-ள். நிரம்பிய - (தான்) நிரம்புதற்கு ஏதுவாகிய, நூல்- நூல்களை, இன்றி-இல்லாமல் (ஒருவன்)—கோட்டிகொளல் - சபையினிடத்தே, (தான் ஒன்றைச்சொல்லுதல்)—அரம்-வகுப்பிடத்தை, இன்றி-இல்லாமல், வட்டாடியற்று-உண்டை உருட்டியதுபோலும்—எ-று. (கருத்து.) கல்வி கல்லாதவன் சபையிலொன்றைச் சொல்லல் வகுப்பறையில்லாமல் சூதாடியதுபோலும்-என்பதாம் * நிரம்புதல் - அறிய வேண்டு மவைகளையெல்லாம் அறிதல் அப்படி செய்தலால் சொல்லும், பொருளும், வழிப்படாமற் போமென்பதாம். (க)

கல்லாதான் சொற்கா முறுதன் முலையிரண்டு
மில்லாதாள் பெண்காமுற் றற்று.

இ-ள். கல்லாதான் - கல்வியில்லாதவனென்றவன், சொல்-(சபையினிடத்தேதான்று சொல்லுதலை, காமுறுதல் - வேண்டுதல், முலையிரண்டும்-இரண்டுமுலைகளும், இல்லாதாள் - இல்லாதவளொருத்தி, பெண் - பெண்மையை, காமுற்றற்று - வேண்டுவதுபோலும்—எ-று.(கருத்து.) கல்லாதவன் சபையிற்பேச விரும்பின் இருகுஞ்சங்களுமில்லாள்பெண்டன்மையையிச்சித்தல்போலும்-என்பதாம். * முலையிரண்டுமில்லாதாள்- முலைசிறிதுமில்லாதவ ளென்பதாம். அவாவியவிடத்து முடிவுபெறுது முடிவுபெற்றாலும் நகைவிளைக்குமென்பதாம். (உ)

கல்லா தவரு நன்கல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின்.

இ-ள். கல்லாதவரும் - கற்றிலாதவரும், நன்கல்லர்- மிகவும் நல்லவர் (காமே தம்மையறிந்து)—கற்றார்முன் - கற்றோர்சபையிட்டு, சொல்லாதிருக்கப்பெறின் - (யாதொன்றையும்) சொல்லாதிருக்கப் பெறுவாராயின்—எ-று. (கருத்து.) கற்றார்முன் யாதொன்றையுஞ் சொல்லாதிருப்பின் கல்லாதவர் மிகநல்லர் - - என்பதாம். * தம்மைத் தாமியாரையின்; அது கூடாதென்றற்கு பெறினென்னும், பெற்றால்- தாந் தம்மை வெளிப்படுத்தாமையாலும் - பின் கல்வியை விரும்பு தலாலும் நனி நல்லரென்றும், சொல்லினர். [இவை மூன்றுபாட்டும் கல்லாதவர் சபையிலே பேசுதற்கு உரியாரல்லரென்பது செப்பட்டது.] (கூ)

கல்லாதா னொட்பங் கழியநன் முயினும்
கொள்ளா ரறிவுடையார்.

இ-ள். கல்லாதான்- கல்லாதவனது, ஒட்பம் - அறிவுடைமையானது, கழியநன்முயிலும் - (ஓரிவிடத்தே) மிகநன்முயிருப்பினும், அறிவுடையார்- விவேகமுடையவர்கள், கொள்ளார் - (அதனை அறிவுடைமையாகக்) கொள்ளார்—எ-று. (கருத்து.) கல்லாதானறிவு ஒருவேளை நன்முயிருப்பினுக் கற்றோர் கொள்ளார் - என்பதாம். * கல்லாதவனது பறிவுடைமை நன்முகாது நன்முயிற்முயினும் நீர் மேலெழுத்துப் போம். நிலைபெறுதாகலால் நிலைபெற்ற நூலறிவினையுடையவர் அவ்வறிவுசாமையை மதியாரென்பதாம்.

கல்லா வொருவன் றகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்.

இ-ள். கல்லாவொருவன் - (நூல்களைக்) கல்லாதவொருவன், தகைமை- (அறிவுடையேனென்று தன்னைமதிக்கும்) மதிப்பானது, தலைப்பெய்து- (அவைகளைக்கற்றவன்) கண்டு, சொல்லாட - பேச, சோர்வுபடும்- கெடும், —எ-று. (கருத்து.) கல்லாதவன் மதிப்பு கற்றவன்முன்பேசக்கெடும்- என்பதாம். * கற்றவனென்பதுவருவிக்கப்பட்டது. படுதாயினும் ஒருவர்த்தை சொல்லுமட்டுமே நிற்பது சொல்லியவிடத்து எதிருத்தாம் தரும்போதே வழுப்படுதலால் தன்னை மதித்த மதிப்பு அழிந்து விடுமென்பதாம். [இவை இரண்டுபாட்டாலும் கல்லாதவர் இயற்கை யறிவின்குற்றம் சொல்லப்பட்டது.]

உளரொன்று மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர்.

இ-ள். கல்லாதவர் - கல்லாதவர்கள் (காணப்பட்டுக் கொண்டிருக்கையால்)—உளரொன்று மாத்திரையரல்லால் உளரொன்று (சிலரால்

சொல்லப்படும் அளவினாதலன்றி, (தமக்கும் பிறர்க்கும் மையால்) பயனாகுமளவினையர்- விளையாத களர்நிலத்தோர் டைமை, மாட்
என-று. (கருத்து.) கல்லாதவர் விளைவில்லாக்களர் நிலத்தையொ ஒவில்லாத
என்பதாம். * எப்படிகளர்நிலம்தானும் விரும்பப்படுதலை இழந்து கள்வர்,
ருக்கும் உணவுமுதலானவைகளை உதவுவதில்லையோ அப்படியே யோ
ல்லாதவர் தாமும் நன்குமதிக்கப்படுதலை இழந்து பிறர்க்கும் அரசும்
மூதலானவைகளை உதவாரென்பதாம். [இதனால் கல்லாதவரது டமை
ன்படாமை சொல்லப்பட்டது.]

நுண்மா ணுழைபுல மில்லா னெழிலல
மண்மான் புனைபாவை யற்று.

இ-ள். நுண்- நுட்பமாகி, மாண் - மாட்சிமைப்பட்டு, நுழை
லநூல்களிலும்) செல்ல, புலம - அறிவை, இல்லான் - இல்லாதவ
னெழில் - எழுச்சியும், கலம் - அழகும், மண் - சுண்ணச்சாந்தினாலே,
ண்- மாட்சிமைப்பட, புனை- அலங்கரிக்கப்பட்ட, பாவையற்று-பாவை
ஸது எழுச்சியும் அழகுமம்போலும்—எ-று. (கருத்து.) நூலறிவில்லா
ன் எழுச்சியும் அழகுமை மண்பாவையை ஒக்கும்-என்பதாம். * அறிவுக்
நாட்சிமையாவது பொருள்களைக் கடிதில்லகானலும், மறவாமையு
ம் முதலானவை. பாவை அதன் எழுச்சியழகுகளைக்காட்டலால் அரு
பயர். உருவேம் மிகுந்தாரு முடம்பு கிடைத்தலும் அரிதாகலால் எழி
லங்களும் ஒருபயனேயாயினும் நூலறிவில்லாவிடத்தே சிறப்பில்ல
வாம்-என்பதாம் [இதனால் அவர்வடிவழகிருதில பயனில்லாமைசொ
ல்லப்பட்டது.

(எ)

நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே
கல்லார்கட் பட்ட திரு.

இ-ள். கல்லார்கண்- கல்லாதவரிடத்து- பட்ட- உண்டாகிய, திரு-
செல்வமானது நல்லார்கண் - கற்றவரிடத்து, பட்ட- உண்டாகிய, வறு
மையின்-வறுமையினும், இன்னாதே-துன்பஞ்செய்வதேயாகும்—எ-று.
கருத்து-) கல்லாதவரிடத்துண்டாகிய செல்வம் கற்றவரிடத்துண்டா
கிய வறுமையினுந் துன்பஞ்செய்யும் - என்பதாம். * செல்வம் தனக்
குரியகற்றவனையும், வறுமை - தனக்குரிய கல்லாதவனையும், விட்டு
நீங்காதிற்கையால் அவ்விரண்டும் தாம் இடுக்கட்பட்டு உலகிற்கும் துன்
பஞ்செய்தலால் ஒக்குமாயினும் செல்வம் கல்லாதவனைக் கெடுக்கும்.
வறுமை- கற்றோரைக் கெடுக்காது. ஆகலால் அவ்வறுமையினும் இச்
செல்வம் இன்னாதென்றார். [இதனால் அவர் செல்வத்தின் குற்றம் சொ
ல்லப்பட்டது.]

(அ)

மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார்கீழ்ப்பிறந்தும்
கற்றாரனைத்திலர்பாடு.

இ-ள். கல்லாதவர்- கல்லாதவர்கள், மேற்பிறந்தாராயினும்-உயர்ந்த சாதியிலேபிறந்தாராயினும், கீழ்ப்பிறந்தும் - தாழ்ந்தசாதியிலே பிறந்தும், கற்றோரனைத்து - கற்றவரது பெருமை யளவினதாகிய, பாடுந்தேவிபநமையை, இலர்- இல்லாதவர்க ளாவார்கள்—என-று. (கருத்து.) மே [இற்குலத்திற் பிறந்துங்கல்லாராயின் கீழ்க்குலத்திற் பிறந்தகற்றோரோடொ டனொப்பாகார்-என்பதாம். * உடம்போடு அழியும் சாதியுயர்ச்சியினும் உயி ரோடு செல்லுங்கல்வியுயர்ச்சி சிறப்புடைய தென்பதாம். [இதனல் (க ல்லாதவரது சாதியுயர்ச்சியால் பயனில்லாமைசொல்லப்பட்டது.] (கூ)

விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றோரோ டனை யவர்.

இ-ள். இலங்குநூல்- விளங்கிய நூலை, கற்றோடு-கற்றவருடன்-ஒ னையவர்- கல்லாதவர், விலங்கொடு- மிருகங்களோடு, மக்களனையர்-மனி தர் எவ்வளவு நன்மையுடையவரோ அவ்வளவு தீமையுடையவ ராவர் ன-று. (கருத்து.) கற்றவர் மக்களையுங் கல்லாதவர் மிருகங்களையு மொ ப்பாவார் - என்பதாம். * விளங்கல் - மேம்படுதல், விலங்கைக் காட்டிலு ம் மனிதர்க்குமேலான அறிவுமிகுதி. கற்றவரிடத்தே காணப்படுதலால் கல்லாதவரும் அவரும் சமானமான பிறப்பினரல்ல ரென்பதாம். [இ னல் கல்லாதவர் மனிதப் பிறப்பினாலே பயனடையாமை, சொல்லப் ட்டது.] (டு

சஉ-ஆம்-அதி - கேள்வி.

அஃதாவது, கேட்கத்தகுநூலின் பொருள்களைக் கற்றறிந்தவர் சொல் க்கேட்குதல். கற்றவிடத்தே அதனாலாகிய அறிவை உறுதிப்படுத் லாலும் கல்லாதவிடத்தும் அதனை உண்டாக்கலாலும்இதுகல்விகல்ல மைகளின் பின்வைக்கப்பட்டது.

செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை.

இ-ள். (ஒருவனுக்கு) —செல்வத்துட்செல்வம் - சிறப்புடையச் ல்வமாவது, செவிச்செல்வம் - செவியால்வருஞ்செல்வமாம். அச்செ வம் - அந்தச்செல்வம் செல்வத்துளெல்லாம் - பிறசெல்வங்களெல் வற்றினும், தலை-தலைமையாம் (ஆகலால்)—ன-று. (கருத்து.) ஒருவ கு ளெல்லாச்செல்வங்களிலும் கேள்விச்செல்வம் தலைமையானது - பகரம். * செவியால்வருஞ்செல்வம் - கேள்வியால் எல்லாப்பொருளை ம் அறிதல். பிறசெல்வங்கள் = பொருளால்வருவன அனைவ நிலை

மையாலும், துன்பந்தருதலாலும் இதுதலையாயிற்று. அவற்றை விட்டு
வ்வற்றைமே தேடுகவென்பதுகருத்து.

செவிக்குண வில்லாத போழ்துசிறிது
வயிற்றுக்கு மீயப் படும்.

இ-ள். செவிக்கு-காதுக்கு, உணவு-உணவாகிய கேள்வியானது, இல்
ல்லாதபோழ்து- இல்லாதகாலத்தே, வயிற்றுக்கும்- வயிற்றினுக்கு, சிறு
றும்- சிறிதுணவு, ஈயப்படும்-கொடுக்கப்படும்—என்று. (கருத்து.) காதுக்குக்
கேள்வியுணவில்லாதகாலத்து வயிற்றுக்குணவுகொடுக்கவேண்டு- என்
ப்தாம். * கேட்கிறமேபோது மிகுந்தசுவையையும் பின்னேபயனையும் த
ராதகிறகேள்வி உள்ளபோது வயிற்றுணவு வெறுக்கப்படுதலால் இ
லாதபோழ்தென்றும் அதிகமான விடத்தே சம்பாதிக்குந் துன்பமாத்
தம் அல்லாமல் நோயும் காமமும்பெறுகுதலால் சிறிதென்றும் அச்சிறு
துகொடுத்தலும் பின்னே பிழைத்திருந்து கேட்குதற் பொருட்டாகவு
ல் ஈயப்படுமென்றும் சொல்லினர். [இவை இரண்டுபாட்டாலும் கே
வியதுசிறப்புச் சொல்லப்பட்டது.]

செவியுணவிற் கேள்வி யுடையா ரவியுணவி
னன்றுரோ டொப்பர் நிலத்து.

இ-ள். செவியுணவின்-செவியுணவாகிய, கேள்வி-கேள்வியை, உ
டையார்- உடையவர், நிலத்து- பூமியிலிருக்கினும், அவியுணவின்-அவி
யாகிய வுணவினையுடைய, ஆன்றோரோடு- தேவரோடு, ஒப்பர் - ஒப்பரவா
ர்—என்று. (கருத்து.) கல்வி கேள்வியையுடையவர பூமியிலிருப்பினும்
தேவரைபொப்பாவார் - எனப்தாம். * செவியுணவினென்பதன் இன்சா
ரியையுகாம்- வலித்தல் விகாரம் பெற்றது. அவியுணவு தேவர்க்குயாக
த்திலே கொடுக்கப்படுவது. அறிவால் நிறைந்தமையால் ஆன்றோன்று
ம், துன்பமறியாமையால் தேவரோடொப்பரென்றும் சொல்லினர். [இ
தனாலே கேள்வியை யுடையவரது சிறப்புச் சொல்லப்பட்டது.]

கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்காத்தி னூற்றுந் துணை.

இ-ள். கற்றிலனாயினும்- (உறுதிநூல்களைத்தான்) கற்றிலனாயினும்
கேட்க- (அவைகளின் பொருள்களைக் கற்றோர்சொல்லக்) கேட்கக்கடவ
ன், அஃது-அக்கேள்வியானது, ஒருவற்கு-ஒருவனுக்கு, ஒற்காத்தின்-த
ளர்ச்சிவந்தவிடத்து, ஊற்றுந்துணை - பற்றுக்கோடாந்துணையாம் (ஆத
லால்)—என்று. (கருத்து.) கல்லாதவனாலுங்கேள்வியுடையவனாயின் அக்
கேள்வி அவனுக்குத்தளர்ச்சிவந்தவிடத்துத்துணையாகும்-என்பதாம். *
மை கற்கவேண்டுமென்பது தோன்றநின்றது, தளர்ச்சி- வறுமையா
லது அறிவில்லாமையாலாவது இடுக்கணுற்று மனந்தளர்தல் அ

ரச்சினையை கேள்வியாலாகிய அறிவு நீக்குமாதலால் ஊரி
ன்றார்.

இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
யொழுக்க முடையார்வாய்ச்சொல்.

இ-ள். (ஒருவருக்கு ஆபத்திலே)—ஒழுக்கமுடையார்-நல்
யுடையவரது, வாய்ச்சொல்-வாயிற்பிறக்கின்றசொல், இழுக்க
ழி-வழுக்குதலையுடைய சேற்றுநிலத்திலே, ஊற்றுக்கோலற்றே
றுகோல்போலுதவும்—எ-று. (கருத்து.) சேற்றுநிலத்திற்கு ஊ
ல்போல் நல்லவர்கள் சொல்லுஞ் சொல்கேள்வியுடையார்க்கு
என்பதாம். *ஊன்றுகோல்போலுதவுதல்-தளர்ந்தவிடத்து
க்குதல், ஒழுக்கமில்லாதவர் கல்வியுடையவராயினும் அறிவி
லால் அவர் வாய்ச்சொல்கேட்க லாகாதென்பதறிந்தான்ற ஒழுக்க
யார் வாய்ச்சொல்லென்றார். தீச்சாலறியாமையாகிய சிறப்புமி
றற்கு வாயென்பது அதிகமாகச் சொல்லப்பட்டது. அச்சொல்லே
க்கடவனென்பது கருத்து.

எனைத்தானு நல்லனை கேட்டவனைத்தாகு
மான்ற பெருமை தரும்.

இ-ள். (ஒருவன்)—நல்லனை-நல்லனை, உறுநிப்பொருள்க
எனைத்தானும்- எவ்வளவுசிறிதாயினும், கேட்க-கேட்கக்கடவன்(அ
ள்வியானது)—அனைத்தானும்- அவ்வளவினாலும், ஊன்றுபொரு
றைந்தபெருமையை,தரும்-கொடுக்கும்—எ-று. (கருத்து.) ஒருவ
னைகளைக்கேட்கின் அவனுமிகுந்தபெருமையைத்தரும்-என்பதாம்.
சிறியகேள்விகளும்மழைத்துளிகள்போலவந்து உள்ளேயிறைந்து
வறிவுகளையும் உண்டாக்கலால் சிறிதென்று இகழாகாதென்பதா

பிழைத்துணர்ந்துற் பேதைமை சொல்லா
ழைத்துணர்ந்தார் நீண்டிய கேள்வி யவர்.

இ-ள். இழைத்துணர்ந்து-(பொருள்களை) நுட்பமாக ஆராய்ந்
றிந்து, ஈண்டிய- (அதன்மேலும்) நிறைந்த, கேள்வியவர்-கேள்வி
டையவர், பிழைத்துணர்ந்தும்- பிறழ அறிந்தவிடத்தும், பேதைமை
மக்குப்)பேதைமையையுண்டாக்குஞ் சொற்களை, சொல்லார்சொல்ல
எ-று (கருத்து.)-கற்றவர்கள் அறிவீனமானசொற்களைச்சொல்லார்
பதாம். *பிழைப்பவென்பது-பிழைத்து எனத்திரிந்தது, பேதை
தைஉண்டாக்குஞ் சொல்லுக்கு ஆகுதலால் ஆகுபெயர். ஈண்டுதல்-ட
களாலும் வந்துநிறைதல். பொருள்களின் மெய்ம்மையைக்காணும்
அறிந்தவரிடத்தேயும் அவர்சொல்லக்கேட்டு ஒப்புப்பார்த்து
வர் கடிதாகுணத்தால் முயன்றிலராயினும் அவ்வாறல்லது

[இவை நான்கு பாட்டாலும் கேள்வியினுலே திட நிதம்நன்மை சொல்லப்பட்டது.]

கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்
றோட்கப் படாத செவி.

ள். கேள்வியால்- கேள்வியினுலே, தோட்கப்படாத-துளைக்கப் செவி-காதுகள், கேட்பினும்-தமக்குரிய:ஓசையைக்)கேட்குப கேளாத்தகையவே- செவிடாந் தன்மையினவேயாம்—எ-று.(க கேள்வியாலே துளைக்கப்படாத செவிகள் செவிடு உடையன-எ

* ஓசைமாத்திரத்தால் உறுதிஅடையாமையால் கேளாத்தகை லும் மனத்திலே நூற்பொருள் நுழைதற்குவழியாகலால் கேள் காரணமாக்கியும் சொல்லினர். பழையதுளை துளையன்றென்

(அ)

நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயினாத லரி தது.

ள். நுணங்கிய-நுட்பமாகிய- கேள்வியரல்லார்- கேள்வியை யு யாவல்லாதவர், வணங்கிய - வணக்கத்தைக்காட்டுகிற, வாயினாத சால்லையுடையவ்ராகுதல், அரிது-கூடாது—எ-று. (கருத்து.) நுட் ன கல்விகேள்வியில்லார் வணக்கமுள்ள சொல்லையுடையராகார் எ தாம். * கேட்கப்படுகின்ற பொருளினது நுட்பம்கேள்விமேல் ஏற் ட்டது. வாய், அதன்சொல்லுக்கு ஆகுகலால்ஆகுபெயர். கேளாதா வில்லாமையால் தம்மைத்தாமே வியந்துசொல்லுவானென்பதாம்

செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்க
ளவியினும் வாழினு மென்.

ள். செவியிற்சுவை- காதுகளால் அறியப்படுஞ்சுவைகளை, உண யாத, வாயுணர்வின்-வாயால் உண்ணப்பட்ட சுவையை, அறியு வினையுடைய, மாக்கள்-மனிதர், அவியினும்- இறந்தாலும், வாழி வாழ்ந்தாலும், என்- (உலகத்துக்குவருவது) யாது—எ-று. (கருத் கேள்விச்சுவையறியாதமனிதர் இரந்தும் இருந்தும்பயனில்லை- என் ம் செவியாலுணரப்படுஞ் சுவைகள் சொற்சுவையும் பொருட்சுவை ஆம் இவைகளிலேசொற்சுவை, குணலங்காரங்கள்- பொருட்சுவை, ராமுதலாகிய நவரசங்கள். வாய்ச்சுவை, தித்திப்புமுதல் அறுவ டும். அவர் செத்தால் இழப்பதும், வாழ்ந்தால் பெறுவதும், இல் யால் இரண்டும் சமானந்தானென்பதாம் [இவைமூன்றுபாட்டா கேளாதவிடத்து உண்டாகும் குற்றம்சொல்லப்பட்டது.] (ஆ)

சுக - ஆம் - அது - அறிவுடைமை

நீங்காது, கல்வி கேள்விகளினுலாகிய அறிவோடு உண்மை நிட்டையுமுதல் அதிகார முறைமையும் இதனுல் விளங்கும்.

அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கு
முள்ளழிக்க லாகா வரண்.

இ-ள். அறிவு - (அரசர்க்கு) அறிவென்பது, அற்றம்-ராமல், காக்குஞ்-காக்கின்ற, கருவி-படையாம் (அறுவல்லாய்ற்றுவார்க்கும்- பகைவர்க்கும், அழிக்கலாகா - அழிக்கக்கூடாதுள்ளாகிய, அரண்-காவலிடமுமாம்—என்று.(கருத்து.) அரசர்னைக்காக்கும் படையாயும் பகைவரால் அழிக்கக்கூடாத அரணுள்ளது அறிவு-என்பதாம். * காத்தல்-மூன்றுகவறிந்து பரிகரித்துதனுல் அறிவினது சிறப்புச் சொல்லப்பட்டது.]

சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு.

இ-ள். (மனத்தை)—சென்றவிடத்தால்-(அது) போனவேலே, செலவிடா-போகவிடாமல் (அவ்விஷயங்களி னின்மைதீமைஆராய்ந்து)—தீது-தீயதினிருந்து, ஒரீஇ-நீக்கி, நன்றின்பால்-நல்டத்து, உய்ப்பது-போகவிடுவது, அறிவு-விவேகம்—என்று. (கருமனம்போனவழியிற் போகவிடாமல் நன்மையிற் செலுத்துவவு-என்பதாம். * குதிரையை நிலமறிந்து செலுத்தும் வாதுவன்வேறுக்கி மனத்தைப் புலமறிந்து செலுத்துவது அறிவென்றுயிர்க்குணமாகலால்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

இ-ள். எப்பொருண் - யாதொருபொருளை, யார்யார்வாய்-வர்வாயில், கேட்பினும்-கேட்டாலும், அப்பொருள் - அப்பொருது, மெய்ப்பொருள் - மெய்யாகியபயனை, காண்பது- காணவல்லறிவு- விவேகம்—என்று. (கருத்து.) எவரொவர்வாயினுல் எந்தெருளைக்கேட்டாலும் அதனுள் மெய்ப்பொருளை அறிவதே அறிவுப்தாம். * மூக்குணங்களும்மாறிமாறிவருதல் யாவர்க்கும் உண்டல் உயர்ந்தபொருளை இழிந்தார்வாயிலும், இழிந்தபொருளை உயவாயிலும், உறுதிப்பொருளை பகைவர்- வாயிலும், கெடுபொருடநேகர்வாயிலும், ஒரோவிடத்தே கேட்கப்படுதலால் எப்பொருளார் வாய்க்கேட்பினுமென்றார். சொல்லுவாரியல்பு நோக்கிபொருளின் பயனுக்கி நல்லதைக்கொண்டு தீயதைவிடுவர்—என்பதாம்.

இவ.

கூ-ஆம்-அறி—அறிவுடைமை.

ண்பொருள் வாகச் செலச்சொல்லித்தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு.

ல்ல். (கண்ணுலேசொல்லப்படும் சொற்கள் அரியபொருளேல திட்ட
து- யும்)-எண்பொருள்வாக, (கேட்பவர்க்கு) - எளியபொரு
கே செல்-மனங்கொள்ள, சொல்லி, தான், பிறர்வாய் - பிறர்வா
தாடப்படுஞ் சொற்களில்—நுண்பொருள் - (காணுதற்கரிய) நுட்
தாகிஞையும், காண்பது- காணவல்லது, அறிவு-விவேகம்—எ-று.
தே) பிறர்க்கு அரியனவகளையும் எளியனவாக விளங்கும்படிசொ
ம் அ அவர்வாயினுல் அறிவதே அரசனுக்கு அறிவு - என்பதாம். *
கொ யவனது தொழில் அறிவின்மேலேற்றப்பட்டது தான் சொ
ய்யா வழுவில்லாயல் நன்முகவிளங்கச் சொல்லவேண்டு மென்
யது சொல்லின்மேல்வைத்தும், பிறர்சொல்லக்கேட்கப்படு மவை
முவினுலும்நன்முக விளங்காமற்போனுலும் அனைகளின்டயனை
ண்டுவிட வேண்டுமென்பதற்குப் பொருளின்மேல் வைத்துஞ்
(சு)
னர்.

ரல்உலகந் தழீஇய தொட்ப மலர்தலும்
சால்பு கூம்பலு மில்ல தறிவு.

ஈ-ள். (ஒருவனுக்கு) உலகம்- உயர்ந்தோரை, தழீஇயது-நட்பா
ம், ஒடபம் - அறிவுடைமையாம், மலர்தலும்-(முன்னே) விரித
கூம்பலும்-பின்னே குவிதலும், இல்லது - (அங்ஙட்பினிடத்தே)
ல்லாதது, அறிவு-அறிவு,—எ-று.(கருத்து.)விருப்பால் முகமலர்தலும்
வெப்பால்முகங்குவிதலும்இல்லாத அறிவுஉயர்ந்தோரை நட்பாக்கும்-
தோம். * உயர்ந்தோரோடு நீர்ப்பூப்போல் வேறுபடாமல் கோட்
போல் ஒருநிலையே நட்பாயினுல் எல்லாவின்பங்களும் உண்டா
அதனை அறிவென்றார். (நி)

எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு,

ஈ-ள். உலகம் - உலகமாவது, எவ்வது-எவ்விதத்தினுல், உளைவ
ப்பதாயிருக்கின்றது, உலகதோடு - அவ்வுலகத்துடன்பொருந்
வ்வது - அவ்விதத்தால், உறைவது- (தானும்) நடப்பது, அறிவு
அறிவாம்—எ-று. (கருத்து.) உலகம் எவ்வகையில் நடக்
வர்தா அவ்வகையில் நடப்பது அரசனுக்கு அறிவு - என்பதாம். *
ண்டதையெல்லாம் யான் நியமித்தலால் என்னை நியமிப்பார் இல்லை
கவிட்டினைத்துத் தான் நினைத்தபடிநடந்தால் பழியும்பாவமும் ஆம்.
அப்படிநடத்தல் அரசனுக்கு அறிவன்றென்று விலக்கியபடி.
இவை ஐந்துபாட்டாலும் அறிவுடைமையுணிலக்கணம்செ
கூ

அறிவுடையா ராவ் தறிவா ரறிவிலா
ரஃதறி கல்லா தவர்.

இ-ள். ஆவது-வரக்கடவதை, அறிவார் - (முன்னே) அறிந்திருப்பவர், அறிவுடையார் அறிவையுடையவராவார், அஃது - அவ்வரக்கடவதை, அறிகல்லாதவர்-(முன்னே) அறியமாட்டாதவர், அறிவிலார்-அறிவில்லாதவராவார்—எ-று. (கருத்து.) முன்வரக்கடவதை அறியவல்லவரே அறிவுடையவர் - என்பதாம். * முன்னறிதலாவது - முன்னே என்ன நேருமென்று அறிதல்.

அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ
தஞ்சு மறிவார் தொழில்.

இ-ள். அஞ்சுவது - அஞ்சத்தகுவதை, அஞ்சாமை - பயப்படாமை, பேதைமை-அறிவில்லாமை-யாம், அஞ்சுவது - அஞ்சத்தகுவதை அஞ்சல்- பயப்படுதல், அறிவார்தொழில் - விவேகிகளது தொழில்—என்றும்—எ-று. (கருத்து.) அறிவுடையவர் அஞ்சத்தகுவதற்கு அஞ்சுதல் என்பதாம். * அஞ்சத்தகுவன - பாவம் பழிகேடுமுதலாகிய பலவற்றையும் சாதிபற்றி அஞ்சுவதென்று ஒருமையாகக்கூறினர். அஞ்சாமை - எண்ணுதுசெய்துதிற்றல். அஞ்சுதல்- எண்ணிச்செய்யாதுவிடுதல். அஞ்சாமையை இறைமாட்சியாக முன்னேசொல்லுதலால் இங்கே அது சேவேண்டுமிடம் சொல்லியபடி. [இவை இரண்டுப்பாட்டாலும் அறிவுடையவரது இலக்கணம் சொல்லப்பட்டது.] (அ

எதிரதாக் காக்கு மறிவினர்க் கில்லை
யதிர வருவதோர் நோய்.

இ-ள். (வரக்கடவதாகிய அதனை)—எதிரதாக்காக்கும் - முன்னே அறிந்துகாக்கவல்ல, அறிவினர்க்கு - விவேகமுள்ளவர்க்கு, அதிர-(வர்) நடுங்கும்படி, வருவதோர்நோய் - வருவதாகியஒருதுன்பமும், இல்லை—எ-று. (கருத்து.) வருந்துன்பங்களை முன் அறிந்துகாக்கும் அறிவுடையார்க்குத் துன்பம்இல்லை-என்பதாம். * இதனுலே வரக்கடவதாகிய துன்பத்தைக் காத்தற்குரியகாலம் அறிவிக்கப்பட்டது காத்தல் அத்துன்பத்தின் காரணத்தை விலக்குதல். [அவர்க்குத் துன்பமில்லமை இதனுலே சொல்லப்பட்டது.] (கூ)

அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலா
ரென்னுடைய ரேனு மிலர்.

இ-ள். அறிவுடையார்-விவேகமுடையவர்கள், எல்லாமுடையார்-(ஒன்றுமில்லாதவராயிருந்தாலும்) எல்லாமுடையவராவார், அறிவிலார் - விவேக மில்லாதவர்கள், என்னுடையரேனும் - எல்லாமுடையவராயிருந்தாலும், இலர் - (ஒன்றும்) இல்லாதவராவார்—எ-று. (கருத்து.) அறிவு இல்லார் எல்லாம் வுடையவராயினும் ஒன்றுமில்

ஸ்வாவார் - என்பதாம். * செல்வங்க ளெல்லாம் அறிவினாலே சே
திக்கவும் காக்கவும் படுதலால் அதனையுடையவனை - எல்லாமு
யாவென்றும், அவையெல்லாம் முன்னாகவே அமைந்து கிடந்தாலு
அழியாமற்காத்தற்கும் அழிந்தவிடத்தே சம்பாதித்தற்கும் கருவியா
ய அறிவில்லாமையால் அறிவில்லாதவனை - என்னுடையதோனு மில
என்றும சொல்லினர். [இதனால் அறிவுடையவரது உடைமையும், ம
றவரது இல்லாமையும், சொல்லப்பட்டன.] (ம)

சுகூ-ஆம்-அதி-குற்றங்கடிதல்.

———*———

ஃகாவது, காமம் - குரோதம்-உலோபம் - மானம்-உவகை, மதம் எ
னப்பட்ட ஆறுகுற்றங்களையும், அரசன் தன்னிடத்தே தோன்றும
ற் கடிதல் - இவைகளைக் குற்றமென்று அறிதலும், கடிதலும்- அறி
வுடையார்க்கல்லது மற்றவர்க்குக் கூடாமையால் அதன்பின்வைக்க
ப்பட்டது.

செருக்குஞ் சினமுஞ் சிறுமையு மில்லார்
பெருக்கம் பெறுமித் தீர்த்து.

இ-ள். செருக்கும் - மதமும், சினமும் - குரோதமும், சிறுமையு
-காமமும்ஆகிய (குற்றங்களை)—இல்லார்- இல்லாத அரசரது, பெருக்
ஆ - செல்வமானது, பெருமிதநீர்த்து - மேம்பாட்டுக் குணத்தை யு
டையதாம்—எ-று. (கருத்து.) மதமுங் கோபமுங் காமமுமில்லாத வர
சர் செல்வம் யெலானது - என்பதாம். * மதம்- செல்வக்களிப்பு. சிறி
தாவது செயலாதலால் - அளவிறந்தகாமம் சிறுமையெனப்பட்டது
யுற்குற்றங்கள் - அநீதிகளைச்செய்வித்தலால் இவைகளை நீக்கினவர
செல்வம் நல்வழிப்படுதலும் நிலைபெறுதலு முடைமையால் - மதிட்
டைத்தாகு மென்பதாம். மிகுதிபற்றி இக்குற்றங்கள் முன்சொல்ல
ப்பட்டன. (க)

இவறலு மான்பிறந்த மானமு மாணு
வுவகையு மேத மிறைக்கு.

இ-ள். இவறலும்-வேண்டுமிடத்துப் பொருள்கொடாமையும், மா
ன்பிறந்த மானமும்- நன்மையுயினீங்கியமானமும், மாணாவுவகையும்
அளவிறந்தமகிழ்ச்சியும், இறைக்கு-அரசனுக்கு, ஏதம்-குற்றங்களாம்—
எ-று. (கருத்து.) கொடாமையும நன்மைநீங்கியமானமும் அளவீடுமி
மகிழ்ச்சியும் அரசனுக்குக் குற்றங்களாகும்-என்பதாம். * மாட்
யான மானத்தை நீக்குதற்கு மான்பிறந்தமானமென்றார். அம்மா
வது, அந்தணர் - சான்றோர் - அருங்கவர்-தன்முன்னோர்-தந்தை (உ)

என்றிவைாற வணங்காமையும் - மூடிக்கந்தகாதகாயினும் தினைத்தகுமு
டித்தெவிடுதலும் - முதலான்வை. அளவிறந்தவவனை மிகுக்கமறிற்
கி. [இவை இரண்டுபோட்டாலும் குற்றங்கள் இவையெனச் சொல்லப்
பட்டன.] (உ)

தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிகாணுவார்.

இ-ள். பழிகாணுவார்-பழியை அஞ்சுவோர், தினைத்துணையாங்கு
றம்-தினையளவு சிறிபகுற்றமானது, வரினும்-(தம்மிடத்து) வந்தகாயி
ம், (அதனை அவ்வளவாகவல்லாமல்) பனைத்துணைபா-பனையினளவு
ாக, கொள்வர்-கொள்வார்கள்—எ-று. (கருத்து.) பாவத்துக்கு அஞ்
சுவோர் தினையளவுகுற்றத்தைப் பனைபளவாகஎண்ணுவார் - என்பத
ம். * குற்றம்-சாதியொருமைப்பெயர், சிறுகுற்றமும் தமக்குவற்க
யால் சிறிதென்றுபொறார் பெரிதாகக்கொண்டு வருந்திப்பின்னும்
வராமல் காப்பதென்பதாம்.

குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
யற்றந் தருஉம் பகை.

இ-ள். அற்றம்-முடிவை, தருஉம்பகை-(தனக்குத்) தரும்பகை
ற்றமே-குற்றமேயாம் (ஆதலால்)—குற்றமே-அக்குற்றம்(தன்னிடத்
வாராமையையே)—பொருளாக-பயனாகக்கொண்டு, காக்க - காக்கவே
டும்—எ-று.(கருத்து.)தனக்குமுடிவைத்தரும்பகையாகிய குற்றத்தை
காக்கக்கடவன்-என்பதாம். * இக்குற்றங்களிலே ஒன்றைப்பற்றி
மல் பகைவர்தனக்கு முடிவைச்செய்யாமையால் இவையே அ
குப்பகையாவனவென்றும் - இவைகளி னில்லாமையையே குண
னிருப்பாகக்கொண்டென்றற்கு பொருளாகவென்றும், சொல்லிரு

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை யெரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

இ-ள். வருமுன்னர்-(குற்றம்) வருவதன்முன்னே, காவாதான்
தினைவராமல்) காவாதஅரசனது, வாழ்க்கை- வாழ்வானது (அதற்
ல்)—எரிமுன்னர் - தீமுகத்துவின்ற, வைத்தூறுபோல - வைக்கோ
ட்டம்போல, கெடும்-அழிந்துவிடும்—எ-று. (கருத்து.) குற்
முன்னே காத்துக்கொள்ளாவரசன் வாழ்வு அக்கினிமுன்னின்ற வ
கோல்போலக்கெடும்-என்பதாம். * குற்றமென்பது-அதிகாரத்தா
ருவிக்கப்பட்டது; முன்னென்றதனால்-காத்தலாங்காலம் பெறப்பட்
து. குற்றம்சிறிதாயினும் அதனாலேபெரியசெல்வம் அழிந்தே விடு
ன்பது உபமானத்தினாலே கொள்ளப்பட்

தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பி
னென்குற்ற மாகு மிறைக்கு.

இ-ள். தன்குற்றம்-தன துகுற்றத்தை, நீக்கி-(முன்னே கண்டு) கழ்ந்தி
த்து; பிறர்குற்றம்-பிறரதுகுற்றத்தை, காண்கிற்பின்-(பின்னே) காணவ்-
வ்வலுயின், இறைக்கு-அரசனுக்கு, ஆகும்- ஆகக்கடவதாகிய, குற்றம்
-யாது—என-று. (கருத்து.) தன்குற்றத்தை முன்னே நீக்கிபிறர்குற்றத்தை
ம் நீக்குமரசனுக்குக் குற்றமில்லை-என்பதாம். * அரசனுக்குத் தன்
றங் கடியாதவிடத்தே பிறர்குற்றங்கடிதல் குற்றமாம் அதுகடிந்தவி
டத்தே முறைசெய்தலாம் என்றற்கு என்குற்றமாகுமென்றார். என
ப்வ தன்குற்றங் கடிந்தவனே முறைசெய்தற்கு உரியவனென்றதாயிற்
கு. [இவை நான்குபாட்டாலும் குற்றங்கடிதல் பொதுவகையினாலே
டையாலப்பட்டது.] இனிச்சிறப்புவகையாற் கூறுகிறார். (சு)

பட்டது செயற்பால செய்யா திவறியான் செல்வ
மு:பற்பால தன்றிக் கெடும்.

இ-ள். செயற்பால-(பொருளிலேதனக்குச்) செய்துகொள்ளப்
இ-ள்வைகளை, செய்யாது-செய்துகொள்ளாமல், இவறியான் - (அதனி
மறுத்து) லோபஞ்செய்தவனது, செல்வம் - செல்வமானது, உயற்பால த
செல்-பின்னுள்ளதாகும் பகுப்பினதன்றி, கெடும்-வீணாகக் கெடும்—எ-
தாப் (கருத்து.) செய்யப்படு மவற்றைச்செய்துகொள்ளாமல் உலோபஞ்
செல்வப்யுமச்சன் செல்வங்கெடும்-என்பதாம். * செய்துகொள்ளப்படு ம
து செ - அறம்பொருளின்பங்கள் பொருளால் நிறைவேறுதலிலே ஒன்று
ற்றங்கள் செய்தலாவது-அதனைப்பெருக்குதல், செல்வமானது - அந்த
வும் நல்வ மையாலும், பொருள்பெருக்கானமையாலும், பின்னுள்ளதாகாது
தாகு வெ இன்பப்பயன் கொள்ளாமையால் கெடுமென்றும் அறிக. (எ)
ன.

இ பற்றுள்ள மென்னு மிவறன்மை யெற்றுள்ளு
மென்னைப் படுவதொன் றன்று.

இ-ன். இ-ள். பற்றுள்ளமென்னும்- (பொருளிடத்தகுமிட்டது விடா
ந்த மாறுநின்றவுள்ளமாகிய, இவறன்மை-உலோபத்தன்மையானது, எ-
பிறந்தமகி னும்-எல்லாக்குற்றத்தன்மைகளுள்ளும், எண்ணப்படுவது-(வை
. (கருத்தினைக்கப்படுவது, ஒன்றன்று - ஒன்றல்ல (மிகுந்ததாம்)—எ-று.
ச்சியும் து.) பொருளிற்பற்று மூலோபத்தன்மையானது எல்லாக்குற்ற
மானத்தது. அந்தலுமிகுந்தது-என்பதாம். * இவறன்மை-குணங்களெல்லாம் சேர்ந்
—ந்தாலும் அவைகளைக் கீழ்ப்படுத்திக் தான்மேற்படவல்லமையல்பு,
தளாறனை அதுசெய்யமாட்டாமையால் எற்றுள்ளுமென்னப்படுவதொ
றன்றென்றார். எவற்றுள்ளுமென்பது இடக்குறைவிகாரம். [இவ்வி
—— ன் தீமைசொல்லப்பட்டது.] (அ)

வியவற்க வெஞ்ஞான்றுந் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை.

இ-ள். எஞ்ஞான்றும்-எக்காலத்திலும் (தான் மிகவும் உயர்ந்தகால த்திலுமென்றபடி)—தன்னை-தன்னை, வியவற்க(மதத்திஞலே)ன்குமதி யாதிருக்கக்கடவன், நன்றி-நன்மையை, பயவா-(தனக்குத்) தாராத, வினை-தொழில்களை, நயவற்க-(மானத்தால்) விரும்பாதிருக்கக்கடவன்—எ-று. (கருத்து.) ஒருவன் எக்காலத்தும் தன்னை மதிபாமலும் நன்மையைத் தாததொழிலை யிச்சியாமலும் இருக்கக்கடவன்-என்பதாம். * தன்னைநன் குமதித்தவிடத்தே இடமும்- காலமும்-வலியும் அறியப்படாமையாலும், அறமும்-பொருளும் இகழப்படுதலாலும், எஞ்ஞான்றும் வியவற்க வென்றும், வினைத்தகை முடிந்தே விடுவனவென்றும், அறம்பொருளின்பங்களைத்தராத தொழில்களை விரும்பினால் அவைகளால் பாவமும் பழியும் கேடும்வருமாகலால் அவற்றை நயவற்கவென்றும் சொல்லினர். [இதனால் மதமானங்களினது தீமைசொல்லப்பட்டது.] (கூ)

காதல காத லறியாமை யுய்க்கிற்பி
னேதில ரேதிலார் நூல்.

இ-ள். காதல-(தன்ஞலே) விரும்பப்பட்டபொருள்களை, காதல- அ வ்விருப்பத்தை, அறியாமல்- (அவர்) அறியாதிருக்கும்படி, உய்க்கிற்பி ன்-அனுபவிக்க வல்லவரானின், ஏதிலார்-பகைவர், நூல் - (தன்னைவஞ்சி த்தற்குஎண்ணும்) எண்ணைப்போன்றது, இவ்-பழுதாம்—எ-று. (கருத்து.) (தன்னைநேசிக்கப்பட்ட பொருள்களையும் தன்னிச்சையையும் பகைவர் யாமலறியவிக்கவல்லவரானால் அப்பகைவனென்னும்பழுதாம் - என்ப தாம். * அறிந்தவிடத்தே அவைவழியாகப் புகுந்துவஞ்சிப்பர் தாம்தான் அறியாமல் அனுபவிக்கவேண்டுமென்பதாம். [இதனுலே ஏழுதும் விடலாகாத காமத்தை அனுபவிக்கும்விதம் சொல்லப்பட்டது.] (டு)

பெரியாரைத் துணைக்கோடல்.

வனைக் கல
சொல்லப்படுகிற இ
மன்றுபாட்டாலும் பொருக்குற்றங்களையும் கழிந்த அரசன்தன்னைத்தீ
ங்லப்பட்டது.]

ஒலை செலுத்தும் பேரறிவுடையவனைத்
தக்கா ரினைத்தனைத்தந் நூலே. அதிகாரமுறைமையும் இதனுல
செற்றூர் செயக்கிடந்த இவ்வாசாட்சிக்குக் குற்றம்வாராமற்கா

இ-ள். தக்காரினத்தனைய - யோக்
வி, தாளெழுக - காணும் (அறிந்து) கடன்மை
செற்றூர்- பகைவர், செயக்கிடந்தது-செ

இ-ள். அறனறிந்து-அறத்தினது நுட்பத்தை அறிந்து, மூத்த(தன்னின்) மூத்த, அறிவுடையார்-அறிவுடையவரது, கேண்மை - நட்பை, தேர்ந்து-(அதனது அருமையைத்) தெரிந்து, திறனறிந்து-(கொள்ளும்) திறமறிந்து, கொளல்-(அரசன்) கொள்ளக்கடவன்—என்று. (கருத்து.) அரசனறிவுடையோர் சினேகத்தைக் கொள்ளக்கடவன்- என்பதாம். மூத்தல் அறிவாலும், சீலத்தாலும், காலத்தாலும் முதிர்ந்தல் அறிவுடையார். நீதியையும், உலகியலையும், அறிந்தலையுடையவர். திறனறிதலாவது-ஒன்குமதித்தல், உயரச்செய்தல், அவர் சொல்வழி நடத்தல் இவை முதலாக அவர்தனக்கு உள்ளாற் நிறமறிந்துசெய்தல். (க)

உற்றநோய் நீக்கி யுறுபகை முற்காக்கும்
பெற்றியாற் பேணிக் கொளல்.

இ-ள். உற்ற-(தெய்வத்தாலாவது மனிதராலாவது தனக்கு) வந்த நோய்-துன்பங்களை, நீக்கி-(நீக்கும்விதம்அறிந்து) நீக்கி, உறுமை-(பின் அப்படிப்பட்டனவை) வாராதபடி, முற்காக்கும்-முன்(னறிந்து) காக்கவல்ல, பெற்றியார்-தன்மையுடையவனை, பேணி-அவர் o மகிழத்தக்கவைகளைச்செய்து, கொளல்-(அரசன் துணையாகக்) கொள்ளக்கடவன்—என்று. (கருத்து.) வந்ததுன்பங்களைநீக்கி அத்துன்பங்கள் வராமற்காக்கவல்லவனை யரசன்சினேகிக்கக்கடவன்-என்பதாம். * தெய்வத்தால்வருந்துன்பங்களாவன - மழையில்லாமையாலும், அதிகமழையாலும், காற்றுத்தீப்பிணி இவைகளாலும்வருவன. அவை- கடவுளனையும், தக்கோனையும்நோக்கிச்செய்யப்படுஞ் சாந்திகளால் நீக்கப்படும். மக்களால்வருந்துன்பங்களாவன-பகைவர்-கள்வர் - சுற்றத்தார் - தொழில்செய்வார் இவர்களால் வருவன, அவைசாமபேதானதண்டங்களாகிய நால்வகை யுபாயங்களுள் ஏற்றதனால் நீக்கப்படும். முற்காத்தலாவது-தெய்வத்தால் வருமவைகளை உற்பாதங்களால் அறிந்து அச்சாந்திகளாலே காத்தலும், மனிதரால்வருமவைகளை அவரது குணம் * இங்கிதம் ‡ ஆகாரம் செயல்-என்பவைகளால் அறிந்து அவ்வுபாயங்களுள் ஒன்றாலேகாத்தலும் ஆம். ஆகவே புரோகிதனையும், மந்திரிகளையும் சொல்லியபடியாயிற்று [இவை இரண்டுபோட்டாலும் பெரியோரது இலக்கணமுடையவனைத் துணையாகக் கொள்ளவேண்டுமென்பதும், கொள்ளுமிடத்து [illegible] ப்பட்டன.]

அறியவற்று லெல்லா மரிதே [illegible]ப்படுவது-(வை
பேணித் தமராக் கொளல். [illegible]மிருந்தாம்)—என்று.

---

o மகிழத்தக்கவை - நன்மை-குணங்களெல்லாம் சேர்ந்
* இங்கிதம் - குறிப்பறிந்து தான்மேற்படவல்ல வியல்பு,
‡ ஆகாரம் - [illegible]மெண்ணப்படுவதொ
[illegible]மென்பது இடக்குறைவிகாரம். [இவ்வி
[illegible]ன் தீர்மைசொல்லப்பட்டன.] (அ)

இ-ள். பெரியாரை-பேரறிவுடையவர்களை, பேணி- அவர்மகிழத்தக்கவைகளைச்செய்து, தமரா- தமக்குச்சிறந்தவராக, கொளல்- கொள்ளுதல் (அரசர்க்கு)—அரியவற்றுளெல்லாம்- அரியபேறுகள் பலவிலும், அரிதே-அரிது—எ-று. (கருத்து.) பெரியோரைச்சிறைநீங்கித்தல் அரசன் பெறும்பேறுகளுள் மிகச்சிறந்தபேறு- என்பதாம். * உலகத்திலே அரியவைபெல்லாம் பெறுதற்குரிய அரசர்க்கு இப்பேறு சிறந்ததென்றது இதனுல் அவையெல்லாம் உண்டாதலைக் குறித்தென்க. (ங)

தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை.

இ-ள். தம்மிற்பெரியார் - (அறிவுமுதலானவைகளாலே) தம்மின்மிக்கவர், தமரா - தமக்குசிறந்தவராக, ஒழுகுதல் - (தாம் அவர் வழியிலே நின்று)நடத்தல் (அரசாக்கு)—வன்மையுளெல்லாம் - வலியுடைமை பலவிலும், தலை - முதன்மையாம்—எ-று. (கருத்து.) தம்மிலும் பெரியோரைச் சிறைநீங்கித்தல் அரசன் வல்லமையுள் தலைமையான வல்லமை-என்பதாம். * இப்பெரியார் பொருள்படைபரண்களால் நீக்கக்கூடாதவையாகிய தெய்வத்தால் வரும் துன்பமுதலானவைகளையும் நீக்குதற்கு உரியவராகலால் அவைகளாலாகிய வலியிலும் இத்துணைவலி சிறந்ததெனப்பட்டது. (ச)

சூழ்வார் கண்ணுக வொழுகலான் மன்னவன்
சூழ்வானைச் சூழ்ந்து கொளல்.

இ-ள். சூழ்வார்- மந்திரிகளை, கண்ணுக-கண்ணுகக்கொண்டு, ஒழுகுதலால்- (தன்பாரம்) நடத்தலால், மன்னவன் - அரசன், சூழ்வானை- அப்படிப்பட்டமந்திரிகளை, சூழ்ந்து - ஆராய்ந்து, கொளல் - (தனக்குத்துணையாகக்) கொள்ளக்கடவன்—எ-று. (கருத்து.) அரசன் மந்திரிகளைக்கொண்டு பூமிபார நடத்தலால் அவர்களைத் துணையாகக் கொள்ளவேண்டும் - என்பதாம். * தானே ஆராய வல்லவனாயிருந்தாலும் அளவில்லாத தொழில்களால் வருந்தமடையுமரசனது பாரம் அவ்வாராய்ந்த லொன்றே தொழிலாகிய மந்திரிகளால் அல்லாமல் இனிது நடவாமைபற்றி அவனைக் கண்ணுக்கிச் சொல்லினர். ஆராய்தல் அமைச்சியலிலே சொல்லப்படுகிற இலக்கண முள்ளவை யென்பதனை ஆராய்தல். [இவை மூன்றுபாட்டாலும் பெரியாரைத் துணைக்கொள்ளுதலின் சிறப்புச்சொல்லப்பட்டது.] (ஞ)

தக்காரினைத்தனைத் தாளெழுக வல்லானைச்
செற்றூர் செயக்கிடந்த தில்.

இ-ள். தக்காரினத்தனைய் - யோக்கியராகிய இனத்தினை யுடையவனை, தாளெழுக - தாளும் (அறிந்து) நடக்க, வல்லானை - வல்லவரசனை, செற்றூர்- பகைவர், செயக்கிடந்தது-செய்யக்கிடந்த ஒருதுன்பமும்

இல் - இல்லை—எ-று. (கருத்து.) பெரியோரினத்தை யுடையவனே அறவழிப்பட்ட அரசன் பகைவரால் வெல்லப்படான் - என்பதாம். * தக்கார் - அறிவொழுக்கங்களாலே தகுதியுடையவர், ஒழுகுதல் - அவர்களின் வழிதலைச் செய்தல். வகுத்தல் - கூடினவரைப் பிரித்தல். வேறுபகைவினைத்தல் - என்கிற இவைகளாலும், வலிமையாலும் பகைவர் செய்யுந் தீங்குகள் பலவகைப்பட்டிருப்பினும் தானும் அறிந்து அறிந்தோர்தஞ் சொல்லையும் கேட்டு நடக்கையால் - அத்தீங்குகளிலே ஒன்றும்வாராதென்றற்கு- செற்றார் செயக்கிடந்தில்லென்றார். ()

இடிக்குந் துணையானா யாள்வானை யாரே
கெடுக்குந் தகைமை யவர்.

இ-ள். (தீயவைகளைக்கண்டால்) இடிக்கும்-கோபித்துப் புத்திசொல்லும், துணையானை- துணையாந்தன்மையை யுடையவனை, ஆள்வானை- (இவர் நமக்குச் சிறந்தவரென்றுகொண்டு) ஆளுகிற அரசனை, கெடுக்குந் தகைமையவர் - கெடுக்கும் பெருமையையுடைய பகைவர், யார் - (உலகத்தில்) யாவர்—எ-று. (கருத்து.) அறிவுறுத்திச் சொல்லும் மந்திரிகளைக்கொண்டு அரசாளுமரசருக்குப் பகைவரில்லை - என்பதாம். * தீயவை - பாவங்களும், நீதியல்லாதனவுமாம், துணையாந் தன்மையானது தமக்கு அவையில்லாமையும், அரசனிடத்து அன்புடையவராயிருக்கையும் ஆம். அப்படிப்பட்டவர் நல்வழியினீங்கவிடாமையால் அவையாளுமரசர் ஒருவராலும் கெடுக்கப்படாரென்பதாம். ஏ - அசை [இவை இரண்டுபாட்டாலும் அதன்பயன் சொல்லப்பட்டது] (எ)

இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்.

இ-ள். இடிப்பாரை- கண்டித்துப் புத்தி சொல்வாரை, இல்லாத- (தனக்குத் துணையாகக்) கொள்ளாமையால், ஏமரா - காவலற்ற, மன்னன்- அரசன், கெடுப்பாரிலானும் - (பகையைக்) கெடுப்பவர் இல்லாதிருந்தாலும், கெடும்- (தானே) கெடுவான்—எ-று. (கருத்து.) புகுந்துசொல்லுமந்திரிகளைப் பெற்றிலாவரசன் கெடுக்கும் பகைவரில்லாமற் கெடுவான்-என்பதாம். * கெடுப்பார் உண்டாயிருப்பதென்பது தோன்ற இலானுமென்றார். தானே கெடுதலாவது - பாகனில்லாத யானைபோல் வழியல்லாத வழியிலே சென்று கெடுதல். (அ)

முதலிலார்க் கூதிய மில்லே மதலைபாய்ந்
தார்பிலார்க் கில்லை நிலை.

இ-ள். முதலிலார்க்கு - முதற்பொருளில்லாத செட்டிகளுக்கு, ஊதியம் (அதனால் வருகிற) லாபமானது, இல்லை (அதுபோல்) மதலையும் (தம்மைத்) தாங்குவதாகிய, சார்பிலார்க்கு- துணையில்லாத அரசர்

நில்- (அதனுல்வருகிற) நிலையானது. இல்லை-இல்லை,—எ-று.(கருத்து.) முதற்பொருளில்லாதவர்க்கு இலாபமில்லை, அதுபோல மந்திரிகளில்லாதவரசனுக்குத் துணையில்லை என்பதாம். * எப்படி முதலைக்கொண்டே இலாபம் பெறவேண்டுமோ அப்படியே தாங்குவானைக் கொண்டே நிலைபெறவேண்டுமென்பதாம், நிலை அரசர் தமது அரசாட்சியின் பாரந்தோடு அசையாது நிற்கை. (கூ)

பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

இ-ள். (அரசன்) நல்லார் - பெரியவரோடு, தொடர்கைவிடல்- கட்புக்கொள்ளாது விடுதல்- (தான்தனியனுயிருந்துகொண்டு)—பல்லார்- பலரோடும், பகைகொளலின் - விரோதங்கொள்ளுதலிலும், பத்தடுத்த- பத்துப்பங்கு அதிகந, தீமைத்தே- தீமையையுடையதேயாம் -எ-று. (கருத்து.) அரசன்பெரியோர் சினேகத்தை விடுதல் பலபேர் பகைகொள்ளுதலிலும் பத்துப்பங்கு தீமையுடையதாம்- என்பதாம். * பலர் பகையால் ஒருமுகமா யெதிர்த்தகாலத்து ஒருவிதத்தாலே பிழைத்தல் கூடுமாகும் பெரியோர் கட்பைவிட்டால் ஒருவிதத்தாலும் பிழைத்தல் கூடாமையால் இதுசெய்தல் அதனிலும் தீதென்பதாம். [இவை மூன்றுபாட்டாலும் அது செய்யாத விடத்து உண்டாகுங் குற்றம் சொல்லப்பட்டது.] (ஙி)

சிற்-இனம்-அஞ்-சிற்றினஞ்சேராமை.

அஃதாவது, சிறியவினத்தைப் பொருந்தாமை சிறியவினமாவது நல்லதிலே கன்மையும், தியதிலே தீமையும் இல்லையென்போரும்-விடரும் தாக்குஞ்சுரும் முதலாயின கூட்டம் அறிவை வேறுபடுத்தி இருமையும் கெடுக்குமியல்பினதாகிய இதனைப்பொருந்திஞல் பெரியாரைத்துணைக்கோடல் பயனில்லையென்பது அறிவித்தற்கு இது அதன்பின்வைக்கப்பட்டது.

சிற்றின மஞ்சும் பெருமைசிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்.

இ-ள். பெருமை - பெரியோரியல்பு, சிற்றினம்- சிறியவினத்தை, அஞ்சும் - அஞ்சுதல்செய்யும் சிறுமைதான் - மற்றைச்சிறியோரியல்பு (அதற்கேற்பொழுதை)—சுற்றமா- (தனக்கு) உறவாக, சூழ்ந்துவிடும்- என்றுணியும்—எ-று. (கருத்து.) பெரியோரியல்புசிறியவினத்திற்கதுறியோரியல்பு சிறியவினத்தைச் சுற்றமாகக்கொள்ளும் - என்கம்மிவுவேறுபடும் விதமும் அதனல் தமக்கு வரும் தன்ப

மும் நோக்கலால் அறிவுடையார் அஞ்சுவதொன்றும், அறிவு ஒற்றுமை
ப்பட்டு சிற்சையால் வேறுநோக்காமையால் அறிவில்லாதவர் தமக்கு
ச் சுற்றமாகத் துணிவதொன்றும் சொல்லினர். பெரியோரும் சிறியோ
ரும் ஆன குணத்தோரது அஞ்சுதலும்- அஞ்சாமையுமாகிய தொழில்
கள் பெருமையுஞ் சிறுமையும் ஆகியகுணங்களினமேல் ஏற்றிச் சொ
ல்லப்பட்டன. [இதனால் சிற்றினம் பெரியோர்க்கு ஆகாதென்பதுசொ
ல்லப்பட்டது.] (3)

நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு.

இ-ள். நீர் - நீரானது நிலத்தை - (தான்சேர்ந்த) நிலத்தினது, இய
ல்பான - இயல்பினாலே, திரிந்து - (தனது தன்மைவேறுபட்டு, அற்று
கும் - அந்நிலத்தினது தன்மையதாகும் (அதுபோல்) —மாந்தர்க்கு-
மனிதர்க்கு, அறிவு- அறிவானது, இனத்து- (தாம்சேர்ந்த) இனத்தினா
து, இயல்பு- இயல்பினாலே (திரிந்து)—தனது தன்மை வேறுபட்டு, அ
தாகும்- அவ்வினத்தினது தன்மையதாகும்—எ-று. (கருத்து.) நிலத்தி
னியல்பினாலே நீர் திரிந்தாற்போலும் அவரவர் சேர்ந்த வினத்தினாலே
அறிவுதிரியும்-என்பதாம். * [ஆகாசத்திலே தன்றன்மையதாயிருந்த
ருக்கு நிலத்தோடு சேர்ந்தவிடத்து நிறஞ் சுவைமுதலாகிய குணங்கள்
போல் தனித்திருக்கையிலே தன்றன்மையதாயிருந்த அறிவுக்குப் பி
வினத்தோடு சேர்ந்தவிடத்துக் காட்சிமுதலாகிய தொழில்கள் வேறு
டுமென்று இதனால் அதனது காரணம்சொல்லப்பட்டது.] (4)

மனத்தானு மாந்தர்க் குணர்ச்சி யினத்தானு
மின்னு னெனப்படுஞ் சொல்.

இ-ள். மாந்தர்க்கு- மனிதர்க்கு, உணர்ச்சி- பேர்த்துமறிவானது-
னத்தால்- (தம்) மனத்தினாலே, ஆம்- உண்டாகும், இன்னுனெனப்பி
ம் - (இவன்) இப்படிப்பட்டவனென்று (உலகத்தாராலே) சொல்லப்பி
கிற, சொல்- சொல்லானது, இனத்தான் - இனத்தினாலே, ஆம்- உண்
டாகும்—எ-று. (கருத்து.) மனத்தினாலே யறிவுண்டாம் அதுபோல
ருவன் சேர்ந்த வினத்தினாலே யின்னனென் றெண்ணப்படுவான்-எ
ப்தாம். * இயற்கையாகிய ஐம்புலவறிவு மாத்திரத்துக்கு இனம்வேண்
டாமையால் அதனை மனத்தானெமன்றும் செயற்கையாகிய சிறப்பு
வுபற்றி நல்லவனென்றுவது தீயவனென்றுவது உண்டாகுஞ் சொ
லுக்கு இனம் வேண்டுதலால் அதனை இனத்தானுமென்றும் சொல்
னர். உபமான பிரமாணத்தை அங்கீகரியாமல் அவ்வறிவு வேறுப
ம் மனத்தாலா மென்பானை நோக்கி இதனால் அது மறுத்துக் கூறப்
ட்டது. (5)

மனத்துள தாகு போலக் காட்டி யொருவற்
கினத்துள தாகு மறிவு.

இ-ள். அறிவு- அச்சிறப்பறிவு, ஒருவற்கு- ஒருவனுக்கு, மா
மனத்தினிடத்து, உளதாபோல - (அப்போதே) உண்டாவ

காட்டி- (தன்னைக்) காட்டி, இனத்து-(அவன்சேர்ந்த) இனத்தினிடத்தே, உளதாகும்- உண்டாகும்—எ-று. (கருத்து.) ஒருவனுக்குறிவான தன்சேர்ந்த வினத்தினாலாகும்- என்பதாம். * மெய்மை நோக்குதற்கு முன்னே மனத்துள்ளதுபோலக்காட்டியும் பின்னைக்கிய விடத்தே பழகிய இனத்துள்ளதாகியும் இருக்கையால் காட்டி எனவிறந்தகாலத்தினாலே சொல்லினார். [சிறப்பறிவும் மனத்தினிடத்து அப்போதே உண்டாவதென்பவனைநோக்கி அங்கே வெளிப்படும்ளவே யுள்ளது அதற்கு மூலம் இனமென்பது இதனாலே சொல்லப்பட்டது.] (சு)

மனந்தூய்மை செய்வினை தூய்மை யிரண்டு
மினந்தூய்மை தூவா வரும்.

இ-ள். மனம் - (அச்சிறப்பறிவுவெளிப்படுதற்கு இடமாகிய) மனம், தூய்மை- பரிசுத்தஞ்ஞைகத்தன்மையும், செய்வினை - செய்தொழில் தூய்மை- பரிசுத்தஞ்ஞைகத்தன்மையும் ஆகிய. இரண்டும் - இவ்விரண்டும்; இனம்- (சேர்ந்த) வினம், தூய்மை- பரிசுத்தஞ்ஞைகத்தன்மை, தூவா-ப்றுக்கோடாக, வரும்-உண்டாகும்—எ-று. (கருத்து.) மனப்பரிசுத்தமுஞ் செய்வினைப்பரிசுத்தமும் சேர்ந்த வினத்தாலாகும்- என்பதாம். * மனந்தூயனாகலாவது- சிறப்பறிவு வெளிப்படும்படி இயற்கையாகிய அறியாமையினீங்குதல் செய்வினை தூயனாகலாவது - மனோவாக்குகளாலே செய்யப்படுகிற நல்ல தொழிலையுடையவனாகுதல். [ஒருவன் பரிசுத்த வினத்தனாகவே அவ்வினத்தோடு பழக்கவ்வசத்தால் பரிசுத்த மனத்தனாகி அம்மனத்தினிடத்தே சிறப்பறிவுதோன்ற அதனால் பரிசுத்தமான சொல்லும் செயலும் உடையவனாவனென்று இதனால் இனத்தில் உள்ளதாம் விதம்சொல்லப்பட்டது.] (ரு)

மனந்தூயார்க் கெச்ச நன்முகு மினந்தூயார்க்
கில்லைநன் முகா வினை.

இ-ள். மனந்தூயார்க்கு-மனது பரிசுத்தமானவர்க்கு, எச்சம்-மக்கட்பேறு, நன்முகும்- நன்முகவிளக்கும், இனந்தூயார்க்கு, இனம்பரிசுத்தமானவர்க்கு, நன்முகாவினை- நன்முகாதசெயல், இல்லை- (யாதும்) இல்லை—எ-று. (கருத்து.) மனஞ்சுத்தமுள்ளவர்க்கு மக்கட்பேறு நன்முகும், இனம்பரிசுத்தமுள்ளவர்க்கு நன்மையில்லாச் செயலில்லை-என்பதாம். * காரணத்திலே எந்தக்குணம் உள்ளது அதுகாரியத்தினிடத்தும் உண்டாம்தலால் தந்தைகுணம் மைந்தனிடத்திலும் உண்டாமென்பதுபற்றி எச்சநன்முகுமென்றும் நல்வினைத்தேதாடு எண்ணிச் செயப்படுதலால் இல்லைநன்முகாவினையென்றும் சொல்லினர். (சூ)

மனநல மன்னுயிர்க் காக்க மினநல
மெல்லாப் புகழுந் தரும்.

இ-ள். மன்னுயிர்க்கு நிலைபெற்றவுயிர்களுக்கு, மனநலம்- மனத்தின் நன்மையானது, ஆக்கம்-செல்வத்தை (தரும்)—இனநலம்-இனத்

தினை நன்மையானது, எல்லாப்புகழும்-(அகலாறு) எல்லாப்புகழ்களையும், தரும்-கொடுக்குப—எ-று. (கருத்து.) மனத்தினன்மை-செல்வத்தைத்தரும், இனத்தின்னன்மை-புகழைத்தரும்-என்பதாம். * மனநன்மை குணமாதலால் அதனை யுக்கந்தருமென்றும் புகழ்கொடுத்தற்குரிய நல்லோர் தாமே இனமாதலால் இனநல மெல்லாப்புகழுந்தருமென்றும் சொல்லினார் [முன்னே மனநன்மை இனநன்மை பற்றிவருமென்பதனை உட்கொண்டு அதை இயல்பாகவே யுடையார்க்கு இவ்வினநன்மை வேண்டாமென்பானைபோக்கி அதுவே யல்லாமல் அப்படிப்பட்ட பலவும் தருமென்று அவர்க்கும் இதுவேண்டுமென்பது இவ்விசேடிப்பாட்டாலும் சொல்லப்பட்டது.] (எ)

மனநல நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்
இனநல மேமாப் புடைத்து.

இ-ள். மனநலம்- மனநன்மையை, நன்கு-(முன்னே) நல்வினையிலே, உடையராயினும்- (தாமே) உடையவராயிருந்தாலும், சான்றோர்க்கு- பிறைநுதலார்க்கு, இனநலம்- இனநன்மையானது, ஏமாப்பு- (அச்சத்துக்கு) வலிமையாதலை, உடைத்து- உடையது—எ-று. (கருத்து.) மனநன்மையுடையவராலும் பெரியோர்க்கு இனநன்மை யுறுதி யுடையதாம்- என்பதாம். * அந்நல்வினை உள்ளவிடத்தும் மனநலத்தை வளர்த்துவருதலால் அதற்கு வலியாக வுடைத்தாயிற்று. (அ)

மனநலத்தி னாகு மறுமை மற்றஃதும்
மினநலத்தி னேமாப் புடைத்து.

இ-ள். (ஒருவனுக்கு) மனநலத்தின்-மனநன்மையால் மறுமை-வருபிறப்பின்பம், ஆகும்-உண்டாம்- மற்றஃதும்- அதற்கு அச்சிறப்புத்தானும், இனநலத்தின்- இனநன்மையால், ஏமாப்பு - வலிமைபெறுதலை, உடைத்து-உடையது—எ-று. (கருத்து.) ஒருவனுக்கு மனநன்மையால் வருபிறப்பின்பமுண்டாம் இனநன்மையால் வலிமையுண்டாம் - என்பதாம். * மனநலத்தினாகு மறுமையென்பது மறுமையைத்தருவது மனநன்மையே வேறொன்று அன்று என்கிறமதத்தை உடன்பட்டுச் சொல்லியபடி [சிலவேளைகளிலே தமோகுணத்தினாலே மனநலம் வேறுபட்டாலும் நல்லினம் நிருத்திமறுமையினின்பத்தைத்தருவிக்குமென்றுஅதனைவிலபெறச் செய்யுமாறு இதனாலே சொல்லப்பட்டது] இவை ஐந்துபாட்டாலும் சிற்றினஞ் சேராமையினது சிறப்புநல்லினஞ் சேர்தலாகிய எதிர்மறை முகத்தினாலே சொல்லியபடி அறிக. (கூ)

நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தி
னல்லற் படுப்பதூஉ மில்.

இ-ள். (ஒருவனுக்கு) நல்லினத்தி னூங்கு-நல்லினத்தினின்றும், துணையுட்சகாயமும் இல்லை, தீயினத்தி(னூங்கு)-தீயினத்தினின்றும்

அல்லற்படுப்பதூஉம் - துன்பத்தரும்பகையும், இல் - இல்லை—என்று, (கருத்து.) ஒருவனுக்கு கலல்வினத்தின் மிகுந்தகணையில்லை, தீயவினத்தின் மிகுந்தகேடில்லை-என்பதாம். * வளங்கு பின்னும் கூட்டப்பட்டது. கல்வினம் அறியாமையை நீக்கித்துயரப்பட்டாமல் காத்தலால் அதனைத்துணையென்றும், தீவினம் அறிவை நீக்கித்துயரப்படச் செய்தலால் அதனைப்பகையென்றும் சொல்லினார். [இதனால்விதியும் எதிர்மறையும்சேர்த்துச் சொல்லப்பட்டன.] (ஆ)

சன-ஆம் - அதி- தெரிந்துசெயல்வகை.

அஃதாவது, அரசன் தான்செய்யும் தொழில்களை ஆராய்ந்து செய்புந்திறம், அச்செயல் பெரியாரைத் துணைக்கொள்ளுதல் பயனுடைத்தாயவிடத்து அவருடன் செய்யப்படுவதாகலால் இது நிற்றினஞ் சோராமையின் பின்வைக்கப்பட்டது.

அழிவதூஉ மாவதூஉ மாகி வழிபயக்கும்
முதியமுஞ் சூழ்ந்து செயல்.

இ-ள். (தொழில்செய்யுமிடத்து) அழிவதூஉம்- (அப்போது அதனால்) அழிவதையும், ஆவதூஉம்- (அழிந்தால் பின்னே) ஆவதையும், ஆகி ஆய்கின்று, வழிபயக்கும்-பிற்காலத்துதவும், ஊதியமும்-இலாபத்தையும், சூழ்ந்து-ஆராய்ந்து, (உறுவதாயின்) செயல்-செய்யக்கடவன்-என்று (கருத்து.) ஒருவனழிவதையு மாவதையு மிலாபத்தையுமாராய்ந்து தொழில் செய்யக்கடவன்- என்பதாம். * உறுதலாவது- செய்கிறபோது அழிவதின் ஆவதுமிகுந்து பிற்காலத்தும் வளர்ந்து வருதல். அழிவதில்லாமையால் பின்வரும் ஆக்கத்தை ஊதியமென்றார். எனவே அவ்வூதியம்பெற்றால் செய்யும்போது அழிவதும் ஆவதும் ஒத்திருந்தாலும் விடலாகாதென்றதாயிற்று. இரண்டு காலத்திலும் பயனுடைமை தெரிந்து செய்யவேண்டுமென்பதாம். (இ)

தெரிந்தவினத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்
கருமம்பொருள் யாதொன்று மில்லை.

இ-ள். தெரிந்த- (தம்மாலே) தெரிந்துகொள்ளப்பட்ட இனத்தொடு- இனத்துடனே, தேர்ந்து- (செய்யதகுந்தொழிலை) ஆராய்ந்து, எண்ணி- (பின்னேதாமேயும்) எண்ணி, செய்வார்க்கு- செய்துமுடிக்கவல்ல அரசருக்கு, அரும்பொருள்- பெறுதற்கரியபொருள், யாதொன்றும்- இல்- இல்லை—என்று. (கருத்து.) நல்லினத்தோடாராய்ந்து செய்யுமரசர்க்குப் பெறுதற்குரிய பொருளொன்றுமில்லை- என்பதாம். * தொழிலை

வது-போர்க்குச்செல்லுகைமுதல் வெல்லுகைமுடிவாகியதொழில், பொருள்களுக்கு எதுவாகியவதனில் தவறுமையால் ஆகிய பொருள்களெல்லாம் எளிதிலே பெறுவாமென்பதாம். [இவையிரண்டு பாட்டாலும் செய்யத்தகுந்தொழிலும் அதுசெய்யும்விதமுமும்சொல்லப்பட்டன.] (உ)

ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
ஊக்கா தறிவுடை யார்.

இ-ள். ஆக்கங்கருதி- (பின்பெறக்கடவதாகிய) லாபத்தைநோக்கி, முதல்- (முன்பெற்றுள்ள)முதலையும், இழக்கும்-இழத்தற்கு எதுவாகிய செய்வினை- தொழிலை, அறிவுடையார்- விவேகமுள்ளவர், ஊக்கார்- மேற்கொள்ளார்—என்-று. (கருத்து.) அறிவுடையோர் இலாபத்தை நினைத்து முதலிழக்குந் தொழிலைச் செய்யார்-என்பதாம். * ஆக்கமேயன்றி முதலிழக்குந்தொழில்களாவன- வலியும்-காலமும் இடமும்-அறியாமல் பிறர் தேசத்தைப் பிடிக்கப்போய்த் தந்தேசத்தையும் இழத்தல் போல்வன உம்மை வருவிக்கப்பட்டது. முன்செய்துவந்த வினையாயினு மென்றற்குச் செய்வினையென்றார். (ஊ)

தெளிவி லதனைத் தொடங்கா ரிளிவென்னு
மேதப்ப டஞ்சு பவர்.

இ-ள். இளிவென்னும்- (தமக்கு)இளிவரவென்னும், ஏதப்பாடு-குற்றமுண்டாதலை, அஞ்சுபவர்- அஞ்சுவோர் தெளிவிலதனை-(நினைத்தோடும் தனித்தும் ஆராய்ந்து) தேர்ந்தெடுக்கப்படாததொழிலை, தொடங்கார்- தொடங்கமாட்டார்—என்-று. (கருத்து.) குற்றத்திற்கஞ்சும் பெரியோர் தேர்ந்தெடுக்கப்படாததொழிலைச் செயயார்-என்பதாம். * தொடங்கினால் நடுவிலேயும் மடங்குதல் கூடாமையால் தொடங்காரென்றார், இளிவரவு- அத்தொழிலால் பின்னே அழிவை அடைந்தவிடத்து அதனால் மேலும் அறிவும் மானமும் இலரென்று உலகத்தார் இகழுமிகழ்ச்சியாம் அதுநிச்சயமாகவே உண்டாமாதலால், தெளிவுள்ளவிடத்துத் தொடங்குகவென்பதாம். (எ)

வகையறச் சூழா தெழுதல் பகைவனைப்
பாத்திப் படுப்பதோ ராறு.

இ-ள். வகை- (சென்றுமுற்றுகும்) விதங்களையெல்லாம், அறச்சூழாது- முற்றவெண்ணுமல் (சிலவெண்ணியவளவிலென்றபடி) எழுதல் (அரசன்பகைவர்மேலே) செல்லுதல், பகைவனை - அப்பகைவனை, பாத்தி- வளருநிலத்திலே, படுப்பது- நிலைபெறச்செய்வது, ஓராறு- ஒருவழியாம்—என்-று. (கருத்து.) அரசன்யோசியாபற்பகைவர்மேற் செல்லப் பகைவனை நிலைபெறச்செய்தலாம் - என்பதாம். * வகையாவன - வலி தாலம் இடம் என்கிறஇவைகளால் தனக்கும்பகைவர்க்கும் உண்டாகிய

நிலைமைகளும் - தொழிலைத்தொடங்கும் விதமும் - அதற்குவரும் இடையூறுகளும்- அவைகளைநீக்கும்விதமும்-அவரை வெல்லும்விதமும்-அதனாலே பெறும்பயனும் முதலானவை. சிலகுணாந்தாலும் பகைவர்க்கு இடமாம் ஆதலால்முற்றுப்பெற எண்ணவேண்டுமென்பதாம். [இவைமூன்றுபாட்டாலும் விடத்தகுந்தொழிலும் விடாதவிடத்து உண்டாம இழுக்கும் சொல்லப்பட்டன.] (ரு)

செய்தக்க வல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யாங்குங் கெடும்.

இ-ள். (அரசன் தனதுதொழில்களிலே) செய்தக்கவல்ல - செய்யத்தகாதனவைகளை, செய் - செய்தலால், கெடும்- கெடுவான், (இனி அதனாலே மாந்திரடல்லாமல்) செய்தக்க - செய்யத்தக்கனவைகளை, செய்யாமையாலும் - செய்யாமையினாலும், கெடும் - கெடுவான்—எ-று. (கருத்து.) அரசன் செய்பத்தகாதவற்றைச் செய்தலாலும் செய்பத்தக்கவற்றைச் செய்யாதமையாலுங் கெடுவான்- என்பதாம். * செய்பத்தகாதவை - பெரு முயற்சியை யுடையவையும், செய்தாற் பயனில்லாதவையும், பயன்சிறிதானவையும், ஐயமானவையும், பின்னே துயரம்விளைப்பவையும் ஆம். செய்யத்தக்கனவு - முன் சொல்லப்பட்டனவைகளுக்கு எதிரானவை இனிச்செய்தல் செய்யாமைகளால் அறிவுஆண்மை பெருமைஎன்கிற மூவகைப்பட்ட ஆற்றல்களிலே - பொருளும் படையும் என விரவுவகைப்பட்ட பெருமையானது சுருங்கிப் பகைவர்க்கு எளியவனுவான் ஆதலால் இரண்டும் கேட்டிற்கு ஏதுவாயின. [இதனால் செய்யத்தக்கனவைகளைச் செய்துவிடத்தக்கனவைகளை விடுகவென்று இருவகையும் உடன் சொல்லப்பட்டன.] (சு)

எண்ணித் துணிக கருமம் துணிந்தபி
னெண்ணுவ மென்ப திழுக்கு.

இ-ள். கருமம் - (செய்யத்தக்க) தொழிலும், எண்ணி-(முடிச்சும் உபாயத்தை) எண்ணி, துணிக - தொடங்கக்கடவன், துணிந்தபின் தொடங்கியபின், எண்ணுவம் - எண்ணங்கடவோமென்பது, இழுக்குக்குற்றமாகலால்—எ-று. (கருத்து.) இராசன் செய்தொழிலை முடிக்குமுபாயமாகவெண்ணிச் செய்யக்கடவன். தொடங்கியபின் எண்ணுதல் குற்றம்-என்பதாம். * உபாயமாவது- கொடுத்தல் - இன்சொற்சொல்லல் - வேறுபடுத்தல்-ஒறுத்தல்-என்பன. இவற்றை வடநூலார்-தானம்-சாமம் - பேதம்-தண்டம்- என்பர். இவையெல்லாம் எண்ணுதுதொடங்கில் அத்தொழில் பகைவனால் விலக்கப்பட்டு முடியாமையாலும், நடுவேவிடுதல் கூடாமையாலும், அரசன்பின் துயரப்படுவானதலால் இழுக்கென்றார். செயத்தக்கனவையும் உபாயம் அறிந்து தொடங்கவேண்டுமென்பதாம். (எ)

ஆற்றின் வருத்தா வருந்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப்படும்.

இ-ள். ஆற்றின் - முடியுமுபாயத்தால், வருந்தாவருத்தம் - (தமக்கு நேரும் துக்கத்தைக்குறித்து) வருந்தாதமுயற்சியானது, பலர்நின்று - (துணைவர்) பலர்நின்றும், போற்றினும் - (புகழாபடாமல்) கப்பினும், பொத்துப்படும். புகழபடும்—என்று. (கருத்து.) முடியுமுபாயத்தால் வருந்தாமுயற்சியானது பலர்காத்தலுங் குற்றம்படும்-என்பதாம் *முடியுமுபாயத்தாலே முயலலாவது - பொருளாசைக்காரனிடத்தே கொடுத்தலையும் - கடுஞ்சினமன்னன் - சோம்பலாளன்-பிறரோடு போர்செய்து வென்றவன் - இவரிடத்தே இன்சொல்லையும், துணைப்படையாளன் தன் பகுதியோடு பொருந்தாதவனை - இவரிடத்தே மேலுறுபடுத்தலையும், இவைகளின் வழிவாராதவிடத்து இவரிடத்தேயும் - நம்பக்கூடாத கீழ்மக்களிடத்தேயும் - ஒருத்தலையும், செய்தலெல்லும் வழிபால் முயற்சிசெய்தலாம். புகழபடுதல்-நன்மையைத்தாராது தீமையைத்தருதல். உபாயத்தின் சிறப்புச் சொல்லியபடி. (அ)

நன்றுற்ற லுள்ளுந்தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றுக் கடை.

இ-ள். (வேற்றரசரிடத்து) நன்று - நல்லவுபாயத்தை, ஆற்றலுள்ளும் - செய்தலுள்ளும், தவறு - குற்றம், உண்டு-உண்டாம், அவரவர்-அவரவருடைய, பண்பு-குணங்களை, அறிந்து - (ஆராய்ந்) தறிந்து, ஆற்றுக்கடை - (அக்குணங்களுக்கு இசையச்) செய்யாவிடத்து—என்று. (கருத்து.) அவரவர் குணங்களையறிந்திசையச் செய்யாவிடில்நன்மைசெய்தலுள்ளும குற்றமுண்டாம் - என்பதாம. * நல்லவுபாயம் கொடுத்தலும் இன்சொற் சொல்லலும் ஆம். அவரவர் குணங்களை அறிந்துசெய்யாமையாவது - அவைகளுக்கு உரியவரல்லாவிடத்தே செய்தல். தவறு-தொழில்முடியாமை. (கூ)

வெள்ளாத வெண்ணிச் செயல்வேண்டுந் தம்மொடு
கொள்ளாத கொள்ளா துலகு.

இ-ள். தம்மோடு - தமதுநிலைமையோடு, கொள்ளாத-பொருந்தாத உபாயங்களை, (அரசர்தொழில் முடித்தற் பொருட்டுச் செய்வாராயின்) உலகு - உலகமானது, கொளளாது- அங்கீகரியாது;[இகழுமென்றபடி.] (ஆதலால்)—எள்ளாத - (அவ்வுலகத்தால்) இகழப்படாத உபாயங்களை, எண்ணி- நாடி, செயல்வேண்டும் - செய்யவேண்டும்—என்று. (கருத்து.) அரசர்பொருந்தாத வுபாயங்களைச் செய்வாராயினுலகமேற்றுக்கொள்ளாது - என்பதாம். * தமதுநிலைமையோடு பொருந்தாத உபாயங்களைச் செய்தலாவது - தாம் வலியராயிருந்துகொண்டு மெலியார் செய்தற்குரிய தான சாமப்பேதங்களைச் செய்தலும், மெலியராயிருந்துகொண்டு வலியார்செய்தற்குரிய தண்டம் செய்தலும், ஆம். இவை அறிவிலார் செயல்களாதலால் - உலகங்கொள்ளா தென்றார். [இவைதான்குபாட்டாலும் செய்யப்படுந் தொழில்களுக்கு உபாயமும் அதனருமையும், சொல்லப்பட்டன.] (டு)

சஅ-ஆம்-அதி-வலிப்றிதல்.

அஃதாவது, அவ்வுபாயங்களுள் தண்டஞ் செயக்ருறித்த அரசனுவன் நால்வகை வலிமைகளையும் அளந்து அறிதலாம். அதிகாரமுறைமையும் இதனுலேவிளக்கும்.

வினைவலியுந் தன்வலியு மாற்ருன் வலியும்
துணைவலியுந் தூக்கிச் செயல்.

இ-ள். வினைவலியும் - (தான்செயக்கருதிய) தொழில்த் வலிமையையும், தன்வலியும்- (அதனைச்செய்துமுடிக்கும்)தன துவலிமையையும், மாற்ருன்வலியும்- (அதனைவிலக்கும்) பகைவனது வலிமையையும்; துணைவலியும் - (இருவர்க்கும்) துணையாவோரது வலிமைகளையும், தூக்கி - ஆராய்ந்து, (தனது வலிமைமிகுமாயின) செயல் - (அத்தொழிலைச்) செய்யக்கடவன்—என-று. (கருத்து.) தொழில்வலிமையையும் தன்வலிமையையும் பகைவன் வலிமையையும் துணைவலிமையையும், ஆராய்ந்து தன்வலிமிகுமாகி லரசனத்தொழிலைச் செய்யக்கடவன் - என்பதாம். * இந்நால்வகை வலிகளுள் - தொழில்வலி - கோட்டையவளைத்தலும் - பிடித்தலும்-முதலாகிய தொழில்களாலும்-மற்றவை மூவகையாற்றல்களாலும், கூறுபடுத்தி ஆராயப்படும் தன் வலிமைமிகுந்த விடத்துச் செய்கவென்றதனுல் தோற்றல் நிச்சயமாகிய தன்வலிமைக் குறைவிடத்தும், வெல்லுதல் ஐயமாகிய தன்வலிமையும் அவன்வலிமையும், ஒக்கவிடத்தும், ஒழிகவென்றதாயிற்று. (க)

ஒல்வ தறிவ தறிந்த தன்கட் டங்கிச்
செல்வார்க்குச் செல்லாத தில்.

இ-ள். ஒல்வது - (தமக்குச்)செய்யக்கூடுந் தொழிலையும், அறிவது - (அதற்கு) அறியவேண்டும் வலிய்யையும், அறிந்து - தெரிந்து, அதன்க்ண் - அதனிடத்து, தங்கி-(மனமொழிகளை எப்போதும்) வைத்து, செல்வார்க்கு- (பகையின்மேலே) செல்வார்க்கு, செல்லாதது - முடியாதபொருள், இல்-இல்லை—என-று. (கருத்து.) செய்யக்கூடுந் தொழிலையு மறியவேண்டும் வலியையு மறிந்துசெய்யு மரசர்க்கு முடியாதபொருளில்லை-என்பதாம். * இங்கே அறிவது துணைவலியாம். எல்லாப்பொருள்களையும் எளிதிலே அடைவ தென்பதாம். [இவை இரண்டுபாட்டாலும் வலியின்பகுப்பும், அதனை அறிந்து பகைமேற் செல்வோர் பெறும்பயனும், சொல்லப்பட்டன.] (உ)

உடைத்தம வலியறியா ருக்கத்தி னூங்கி
யிடைக்கண் முரிந்தார் பலர்.

இ-ள். உடை-(தக்கவனுக்கு) யுடைடைய, தம்வலி-தமது வலிமையினை, அறியார் - தெரிந்துகொள்ளாதவராகி, ஊக்கத்தின் - மனவெ

முச்சியால், ஊக்கி - (தம்மின்வலியவரோடு) போர்செய்யத்தொடங்கி, (அவர்வருத்தல்சூ) அது செய்து முடிக்கப்பெறாமல் — இடைக்கண்-நடுவிலே, முரிந்தார் - கெட்டவரசர், பலர் - (உலகத்துப்) பலராவர்—என்று. (கருத்து:) தமது வலிமையைத் தெரிந்துகொள்ளாது வலியவரோடு போர்செய்து இடையில் புறங்கொடுத்த வரசர் பலர் - என்பதாம். * மூவகையாற்றல்களுள்ளும் சிறப்பினதாகிய அறிவையுடையவர் சிலராதலால் முரிந்தார் பலரென்றார். அதனால் தம்வலிமை அறிந்தேதொடங்குகவென்பது குறைந்து நின்றது. (க)

அமைந்தாங் கொழுகா னளவறியான் றன்னின்
வியந்தான் விரைந்து கெடும்.

இ-ள். ஆங்கு-அவ்வல்லிடத்து; அமைந்து - பொருந்தி, ஒழுகான் - நடவாதவனாயினும், அளவு - (தன்வலி) யளவை, அறியான்-அறியாதவனாயினும், தன்னினை; வியந்தான் - மெச்சிக்கொண்டு (அவரோடுபகைத்த) அரசன்; விரைந்து - விரைவாக, கெடும் - கெடுவான்—என்று. (கருத்து.) தன்வலியினளவையறியாததன்னைப் புகழ்ந்தவரசன்கெடுவான்-என்பதாம். * பகைத்தல் வியத்தலாலாதலின் வியந்தானென உபசரித்தார் நட்டாம்நடத்தலாலும், வலிமையறிந்து பகைத்தலால்வது; அவ்வல்லிடத்தோடு செயத்தக்கதாயிருக்க இவைஇல்லாமல் தான்மெலியவ்வுயிருந்துகொண்டு அவரோடு பகைத்தவனுக்கு ஒருபோதும் நிலையில்லாமையால் விரைந்து கெடுமென்றார். [இவை இரண்டுபாட்டாலும் தன்வலிமையறியாதவிடத்து உண்டாகும் இழுக்குச்சொல்லப்பட்டது.] (ச)

பீலிபெய் சாகாடு மச்சிறுமப் பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்.

இ-ள்: பீலி - மயிலிறகை, பெய்-ஏற்றப்பெற்ற; சாகாடும் - பண்டியும், அச்சிறும்-அச்சுமுறியும், அப்பண்டம் - அம்மயிலிறகை (அதுசும க்குமளவி னல்லாமல்)—சாலமிகுத்து மிகவும் அதிகப்படுத்தி, பெயின் - ஏற்றினால்—என்று. (கருத்து.) மயிலிறகைகயேற்றப்பட்ட பண்டியும் அச்சுமுறியும் அவ்விறகை யதிகமாகவேற்றினால் - என்பதாம்: * உம்மை பண்டியினது வலிமையையும், மயிலிறகினதுமெலியையும் காட்டிநின்றது (எளியவொன்று பலரோடும், பகைக்கொள்வோன் தான் வலியவனாயிருந்தாலும், அவர் கூடியவிடத்தே வலியழிவானென்னும் பொருள்படநிற்கையால் - இது பிறிதுமொழிதலணி) [அது செயலாகாதென்றமையின் - இதனால் பகைவன்வலியும் அவன் துணைவலியும் அறியாதவிடத்துப்படுங்குற்றம் சொல்லப்பட்டது.] (ஞ)

நுனிக்கொம்ப ரோநினை சஞ்சிறந் தாக்கி
யுயிர்ப்பி றுறுநி யாகிவிடும்:

இ-ள். கொம்பர்- (ஒருமாக்) கொம்பினது, நுனி- நுனியிலே, ஏறினர்- ஏறினவர், அஃது- அவ்வளவினை, இறந்து- கடந்து, ஊக்கின்- (மேலும் ஏற) மனவெழுச்சிகொள்ளின் (அவ்வெழுச்சி—உயிர்க்கு- (அவ) ருயிர்க்கு, இறுதியாகிவிடும்—என-று. (கருத்து.) நுனிக்கொம்பிலேறினவர் அவ்வளவைக்கடந் தேறுவராகி லவருயிர்க்கு முடிவெரும்-என்பதாம். * இறுதிக்கு ஏதுவாமதனை இறுதியென்றார். பகைவர்மேற் போர்க்குச் செல்லத்தொடங்கித் தன்னிலே கூடியமட்டுஞ்சென்று நின்றவன்பின் அவ்வளவிலே நில்லாமல் மனவெழுச்சியினாலே மேலுஞ்செல்லுவானாயின் அவ்வெழுச்சியானது தொழில் முடிதற்கு ஏதுவாகாமல் அவனுயிர்முடிதற்கு ஏதுவாகும் என்கிறபொருள் பட நிற்கையினாலே இதுவும் அவ்வணி [அளவறிந்து நிற்கவேண்டுமென்றமையின் இதனால்தொழில் வலிமை அறியாதவிடத்து உண்டாம் இழுக்குச் சொல்லப்பட்டது.] (சு)

ஆற்றி னளவறிந் தீக வதுபொருள்
போற்றி வழங்கு நெறி.

இ-ள். ஆற்றின்- (கொடுக்கும்)வழியினாலே, அளவு- (தன்க்குள்ள் பொருளி) னளவை, அறிந்து- தெரிந்து, ஈக (அதற்கு ஏற்கக்) கொடுக்கக்கடவன், அது- அக்கொடுத்தலானது, பொருள்- பொருளை, போற்றி வழங்குநெறி - காப்பாற்றிக்கொண்டு நடக்கும்வழியாய்—என-று. (கருத்து.) தனக்குள்ள அளவறிந்துகொடுக்கக்கடவன் அக்கொடைபொருளைக் காப்பாற்றும் வழியாம்-என்பதாம். * கொடுக்கும்வழி - இயற்றலுமென்னுங் குறளுனாலிற் சொல்லப்பட்டது, அளவுக்கேற்பக் கொடுத்தலாவது- ஒன்றுனவளவை நாலுபங்கிட்டு, அவற்றுள் இரண்டைதன்செலவுக்காக்கி, ஒன்றைப்பின்னை ஆபத்துவந்தவிடத்து அதைநீக்குதற்கு வைப்பாக்கி, மற்றொன்றைக்கொடுத்தல்: காப்பாற்றிக்கொண்டு நடத்தலாவது - ஒருவரோடு நட்பில்லாதவனைத் தம்மோடு நட்புண்டாக்கிக்கொண்டு நடத்தல், முதலிலே செலவுசுருங்கினால் பொருள் ஒருகாலும் நீங்காதென்பதாம். (எ)

ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை.

இ-ள். ஆகாறு- (அரசனுக்குப் பொருள்) வருகின்றவழியானது, அளவு-அளவினாலே, இட்டிதாயினும்-சிறியதாயிருந்தாலும், கேடு-(அதனாலே)கெடுதல், இல்லை-இல்லை, போகாறு-போகின்றவழி, (அளவு) அளவினாலே, அகலாக்கடை-(அதிலும்)விரியாதாயின்—என-று. (கருத்து.) அரசனுக்குப் பொருட்செலவு மிகாவிடில் அப்பொருள்வரவு சிறிதாகிலுங் கெடுதியில்லை-என்பதாம். * பொருளென்பது அதிகாரத்தினாலே வரு

விகற்பப்பட்டது வரவும் செலவும் தம்முள் ஒத்திருந்தாலும் கேடில்லை யென்பதாம். (எ)

அளவறிந்து வாழாதான் வாழ்க்கையளைபோல
வில்லாகித் தோன்றுங் கெடும்.

இ-ள். அளவு- (தன்னக்குள்ளபொருளி) னளவை, அறிந்து- தெரிந்து (அதற்கேற்ற)—வாழாதான்- வாழமாட்டாதவனது, வாழ்க்கை- வாழ்க்கைகளானவை, உளைபோல் - உளனவைபோலத் (தோன்றி)—இல்லாகி- (மெய்ம்மையாயில்) இல்லையாயி, தோன்றும்- (பின்பு) அத்தோற்றமும் இல்லாமல், கெடும்- அழியும்—எ-று. (கருத்து.) தன்னக்குள்ள பொருளளவையறிந்து வாழாதவன் வாழ்க்கை உள்ளவைபோலத் தோன்றியழியும்-என்பதாம். * அவ்வளவிற்கேற்க வாழ்தலாவது - முதலிலே சுருக்கக்கூடாமலிருந்தால் அதற்குச் சமமாகவாவது கொடுத்தும், அனுபவித்தும், வாழ்தல். ஆரம்பத்திலே கேடுவெளிப்படாமையால் உள்போலத்தோன்றி எனப்பட்டது. முதலிழும் செலவுமிகுந்தால் வரும் குற்றம்சொல்லியபடி. (ஈ)

உளவளை தூக்காதொப்புர வாண்மை
வளவளை வல்லிக் கெடும்.

இ-ள். உளவளை- (தனக்கு) உள்ளவளவு, தூக்காத- ஆராயாமைக்கேதுவாகிய, ஒப்புரவாண்மை- உபகாரமுடைமையால், வளவளை- (ஒருவனது) செல்வத்தினளவு, வல்லிக்கெடும்- விரைவாகக்கெடும்-எ-று. (கருத்து.) தன்க்குள்ளவற்றை யாராயாத உதவியாலே செல்வத்தளவு கெடும் - என்பதாம். * உபகாரமேயாயினும் மிகலாகாதெனலால் இது வுமது. [இவைரண்டுபாட்டாலும் மூவகை ஆற்றலுள் பெருமையின் பகுதியாகிய பொருள்வலியறிதல் சிறப்புநோக்கி வகுத்துச் சொல்லப் பட்டது.] (ஐ)

சகு-ஆம்-அதி - காலமறிதல்.

அஞ்சாவது, வலிமையிலேலே மிகுதியுடையவனுப்பகைவன்மேல்போர்க்குச் செல்லுமரசன் அச்செல்லுதலுக்கு ஏற்றகாலத்தினை அறிதல் அதிகாரமுறைமையும் இதனுற்றாமே விளங்கும்.

பகல்வெல்லும் கூகையைக்காக்கை யிகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது

இ-ள். காக்கை- காகமானது, கூகையை- (தன்னின்வலிதாகிய)கோட்டானை, பகல்-பகற்பொழுதில், வெல்லும்-வெல்லும், (அதுபோல்)—இல்-பகைவனை, வெல்லும்-வெல்லக்கருதுகின்ற, வேந்தர்க்கு-அரசர்க்கு

பொழுது-(அதிற்கேற்ற) காலம், வேண்டும்-வேண்டும், —எ-று. (கருத்து.) காகங்கோட்டானைப் பகலில்வெல்லும் - அதுபோல அரசர் பகைவனைவெல்லக் காலம்வேண்டும்- என்பதாம். * காலமல்லாதவிடத்தே வலிமையிலுலே பயனில்லை யென்பது விளங்கவின்றது இனிக்காலமாவது வெம்மையும்,குளிர்ச்சியும் சமமாய்நோய்செய்யாமல் நீரும் உணவுமுதலானவை புடைத்தாய்ச் சேணைவருந்தாமல் செல்லுந்தன்மைய தாம். (இதனைடுத்துக்காட்டுவமையணி) [இதனால் காலத்தினது சிறப்புச்சொல்லப்பட்டது.] (க)

பருவத்தோ டொட்ட வொழுகு நிருவினைத்
தீராமை யார்க்குங் கயிறு.

இ-ள். (அரசன்) - பருவத்தோடொட்ட - காலத்தோடுபொருந்த வொழுகல்- (தொழில்செய்து) நடத்தல், திருவினை- (ஒருவனிடத்தும் நில்லாது நீங்குஞ்) செல்வத்தை, தீராமை- (தன்னிடத்து) நீங்காமல், ஆர்க்கும்-கட்டுவதாகிய, கயிறு-கயிறுமாம்—எ-று. (கருத்து.) காலமறிந்துதொழிலைநடத்தல், செல்வத்தைக் கட்டுங் கயிறும்- என்பதாம். * காலத்தோடுபொருந்துதல் - காலந்தப்பாமற்செய்தலாம். தொழில் கைகூடிவருதலால் அதனால் உண்டாகும் செல்வம்-எக்காலமும்- நீங்காதென்பதாம் (உ.)

அருவினை யென்ப வுளவோ கருவியாற்
கால மறிந்து செயின்.

இ-ள். அருவினையென்ப-(அரசரால்) செய்தற்கரியதொழில்களென்று சொல்லப்படுமவை, உளவோ - உண்டோ, கருவியால் (அவைகளமுடித்தற்காகும்) சாதனங்களுடனே, காலம் - செய்தற்காகும், காலத்தை, அறிந்து- தெரிந்து, செயின்-செய்தால்—எ-று. (கருத்து.)காலமறிந்துசெய்தால் அரியதொழில்களுளவோ - என்பதாம். * கருவிகள்-மூலகையாற்றல்களும் நால்வகை உபாயங்களும், ஆம். அவை உண்டாகியவிடத்தும், காலம்வேண்டுமென்பது அறிவித்தற்குக் கருவியாலென்றார். இப்படிசெய்வார்க்கு எல்லாத் தொழில்களும் எளிதின் முடியுமென்பதாம். (ங)

ஞாலங்கருதினுங் கைகூடுங் காலங்
கருதி யிடத்தாற் செயின்.

இ-ள். (ஒருவன்)—ஞாலம்-பூமிமுழுதையும், கருதினும்- (தானே ஆள) நினைத்தாலும் (அது)—கைகூடும்-கைக்குள்ளாம், காலம் - காலத்தை, கருதி- அறிந்து, இடத்தால்- இடத்தோடுபொருந்த, செயின்- (அதற்குச்செய்யும் தொழிலைச்) செய்வானாயின்—எ-று. (கருத்து.) அரசன் காலமறிந்து தொழில் செய்தால் உலகெல்லாமாள நினைந்தாலும் கைகூடும்- என்பதாம். *, இட்முண்டாகியவிடத்தும் காலம்வேண்டுமெனற்குஇடத்தாலெனன்றார். இப்படி செய்வார்க்குக் கைகூடாதனவையும்

கைகூடுமென்பதாம். [இவைமூன்றுபாட்டாலும் காலமறிதலின் பயன் சொல்லப்பட்டது.] (சு)

காலங் கருதியிருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர்.

இ-ள். ஞாலம்- பூமியெல்லாம், கலங்காது-தப்பாமல், கருதுபவர்- (கொள்ள) நினைக்குமரசர், (தம்வலிமிகுமாயினும் அதனை நினையாமல்) காலம்- அதற்கு (ஏற்ற) காலத்தையே, கருதி- நினைத்து, இருப்பார் (அ துவருமளவும்) இருப்பர், பகைமேற்செல்லார்—எ-று. (கருத்து.) பூமி மூற்றுமாள நினைக்குமரசர் பகைவனைவெல்லக் காலம் பார்த்திருப்பர் என்பதாம். * அதைநினையாமற்சென்றால் பொருளும் படையும் ஆகிய இருவகைப் பெருமைகளும் தேய்ந்து வருந்துவராகலால் இருப்பி ன்றூர், இருத்தலாவது- நட்பாக்கல்-பகைபாக்கல்- மேற்செல்லுதல்- இ ருத்தல்- பிரித்தல்-கூட்டல் என்கிற அறுவகைக்குணங்களுள் மேற்செ ல்லுதலுக்கு - எதிராகியதொழில் [இதனாற்காலம் வாராதவிடத்தே செ ய்யவேண்டியது சொல்லப்பட்டது.] (இ)

ஊக்க முடையா னொடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து.

இ-ள். ஊக்கமுடையான்- மிகுந்த வலிமையுடையவரசன், ஒடுக்க ம்- (பகைமேற்செல்லாது) காலம்பார்த்திருக்கின்ற விருப்பு, பொருதகர் போர் செய்கின்ற ஆட்டுக்கடா, தாக்கற்கு - (தன்பகை கெடப்) பாய்தற் பொருட்டு, பெருந்தகைத்து- பின்னே கால்வாங்குந்தன்மைத்து-எ-று. (கருத்து.) வலிமையுள்ளவரசன் பின்வாங்குதல் வெல்லும் பொருட்டா ம்- என்பதாம். * உபமானத்திலே தாக்கற்கென்று சொல்லப்பட்டிருக் கையினாலே உபமேயத்திலே வெற்றிபெறுதற் கென்பதுகொள்க. [இத னால் அவ்விருத்தலின் சிறப்புச்சொல்லப்பட்டது] (சு)

பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்ப ரொள்ளி யவர்.

இ-ள். ஒள்ளியவர்-அறிவுடையவரசர், ஆங்கே- (பகைவர்தீங்குசெ ய்த) அப்பொழுதே, (அவரறிய)—பொள்ளென-விரைவாக, புறம்வேரா ர்- புறத்திலே கோபஞ்செய்யார், காலம்- (தாம் அவனைவெல்லுதற்கேற் ற) காலத்தை, பார்த்து- அறிந்து (அதுவருமளவும்)—உள்வேர்ப்பர்-உ ள்ளேகோபஞ்செய்வார்—எ-று. (கருத்து.) அறிவுடையவரசர் கோபத் தைப் புறங்காட்டார் காலம் வருமளவு மக்கோபத்தை யுள்ளவைத்திருப் பார் - என்பதாம். * பகைவரறியக் கோபஞ்செய்தவிடத்தே அவர் தம் மைக்கொன்றுக் கொள்வாராகலால் புறம் வேரொன்றும் கோபஞ்செய் யாமல் அடக்குதல் கூடாமையால் உள்வேர்ப்ப ரொள்ளியவரென்றும் சொல்லினர். (எ)

செறுநரைக் காணிற் சுமக்க விறுவரை
காணிற் கிழக்காந் தலை.

இ-ள். (வெல்லக்கருதிய அரசர்) செறுநரை - பகைவனை, காணின் - கண்டால், சுமக்க - (அவர்க்கு முடிவுகாலம் வருமளவும்) பணியக்கடவர், இறுவரைகாணின் - அக்காலம்வந்து முடியுமிடத்து, தலை- (அவரது) தலை, கிழக்காம்-கீழ்விழும்—எ-று. (கருத்து.) அரசர் பகைவரைக்கண்டா லவர்க்கு முடிவுகாலம் வருமளவும் பணியக்கடவர் - என்பதாம். * பகைமை தீர்ந்தபடி மிகவும் வணங்குகவென்றற்கு சுமக்க வென்றும் அப்படி வணங்கவே அவர் தம்மைக் காத்துக்கொள்ளாமையினாலே தப்பாமல் கெடுவரொன்றற்கு கிழக்காம் தலையென்றும் சொல்லினர். [இவ்விரண்டுபாட்டாலும் காலம்பார்த்திருக்குமிடத்துப் பகைமைதான்றுமல் இருக்கவேண்டுமென்பது சொல்லப்பட்டது.] (அ)

எய்தற் கரிய தியைந்தக்கா லந்நிலையே
செய்தற் கரிய செயல்.

இ-ள். (பகையைவெல்ல நினைந்தின்ற அரசர்)—எய்தற்கரியது-(தம்மாலே) பெறுதற்கரியகாலம், இயைந்தக்கால் - வந்துகூடியக்கால், அந்நிலையே - அது நிற்குமளவிலே, செய்தற்கரிய - (அதன்முன்னே) செய்தற்கு அரியவையாயிருந்த தொழில்களை, செயல் - செய்யக்கடவர்—எ-று. (கருத்து.) அரசர் பகையைவெல்லக் காலம்வாய்த்தாலப்பொழுதே பத்தொழிலைச்செய்யக்கடவர்-என்பதாம். * ஆற்றல் முதலானவைகளாலே செய்துகொள்ளக் கூடாததாயிருக்கையால் எய்தற்கரியதென்றும் அதுதானேவந்துகூடுதல் அரிதாகலால் இயைந்தக்காலென்றும் கூடியவிடத்துப் பின்னில்லாதோடிப்போ மாதலால் அந்நிலையேயென்றும், அது பெறுதவிடத்தே செய்யக்கூடாமையால் செய்தற்கரியவென்றும் சொல்லினர். [இதனால் காலம்வந்தவிடத்து வினைந்து செய்கவென்பது சொல்லப்பட்டது.] (கூ)

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து.

இ-ள். கூம்பும்பருவத்து - தொழிலின்மேலே செல்லாதிருக்கவேண்டுங்காலத்திலே, கொக்கொக்க - கொக்கு இருக்குமாறுபோல் இருக்கக்கடவன், மற்றுச்சீர்த்தவிடத்து மற்றைச் (செலலுங்காலம்) வாய்த்தவிடத்து, அதன்குத்தொக்க - அதுதப்பாமற் செய்துமுடிக்கு மாறுபோல் தப்பாது செய்துமுடிக்கக்கடவன்—எ-று. (கருத்து.) அரசன்பகையைவெல்லக் காலம் வாய்க்காவிடத்துக் கொக்கடக்கல்போ லிருக்கக்கடவன் வாய்த்தவிடத்து அதன் குத்தைப்போல வெல்லக் கடவன்-என்பதாம். * மீண்டுகொள்ளுதற்கு இருக்குமிடத்து அதுவருமளவும் அது தன்முயற்சியை முன்னுறுத்து தப்பிப்போகாமற் பொருட்டு உயிரில்லாதுபோல இருக்குமாகலாலும் வந்தவிடத்துத் தப்பிப்போவதற்கு முன்னுகவே வினைந்துகுத்து மாதலாலும் இருத்தலுக்கும் செய்தலுக்கும் கொக்கு உபமானமாயிற்று; கொக்கொக்க வென்றுமாயினும் அது கூம்புமாறுமோற் கூம்புகவென்றும், குத்தொக்கவென்றுமாயினும் அது குத்துமாறுபோற் குத்துகவென்றும் உணர்க்கப்படும். [இதனால் இருத்தலுக்கும, தொழில் செய்தலுக்கும் இலக்கணம் சொல்லப்பட்டது.] (ஐ)

நய - ஆம் - அதி - இடனறிதல்.

அஃதாவது, வலியும் காலமும் அறிந்து பகைமேற் செல்லுவோன் தான் வெல்லுதற்கு ஏற்ற நிலத்தினை அறிதலாம். அதிகாரமுறைமையும் இதனற்றாமே விளங்கும்.

தொடங்குதற் கெவ்வினையு மெள்ளற்க முற்று
மிடங்கண்ட பின் னல்லது.

இ-ள். முற்றும் - (பகைவனை) வினைத்துக் கொள்வதற்காகும், இடம்-ஓரிடத்தை, கண்டபின்னல்லது-பெற்றபின்னல்லாமல், எவ்வினையும் - யாதொரு தொழிலையும், தொடங்குதற்க - (அவரிடத்துத்) தொடங்காதிருக்கக்கடவர், எள்ளற்க - (அவனைச் சிறியனென்று) இகழாதிருக்கக்கடவர்—என்று. (கருத்து.) அரசர்!! பகைவனை வெல்ல இடங்கண்டாலல்லது எத்தொழிலையுந் தொடங்காதிருக்கக்கடவர் அவனையிகழாதிருக்கக்கடவர்-என்பதாம். * அதற்காகிடமாவது - மலைகளாலும், காடுகளாலும், அப்பகைவர் வருதலும் போகுதலும் ஒழியும்வகை அரணைச்சூழ்ந்து ஒன்றற்கொன்று துணையாய்த் தமக்குள்ளே நலமில்லாத பல்படைகள் இருப்பிற்கும் மதிலும் அகழும்முதலாகிய அரண்செய்யப்பட்ட அரசிருப்பிற்கும் ஏற்ற நிலக்கிடகைகளையும் கோளையும் உடையது அவ்விடத்தைப்பெற்றால் தொடங்குதலும், இகழ்தலும் செய்க வென்பதாம். (க)

மூரன்சேர்ந்த மொய்ம்பினவர்க்கு மரண்சேர்ந்தா
மாக்கம் பலவுந் தரும்.

இ-ள். மூரன்-மாறுபாட்டை, சேர்ந்த-சேர்ந்த, மொய்ம்பினவர்க்கும்-வலிமையையுடையவருக்கும், அரண்-அரணை, சேர்ந்து-சேர்ந்து, ஆம்-ஆகின்ற, ஆக்கம்-பெருகுகமானது, பலவும்-பலபயன்களையும், தரும்-கொடுக்கும்—என்று. (கருத்து.) வலியவரசருக்கும் அரணைச் சேர்ந்தாகின்ற பெருக்கமானது பலபயன்களையுந்தரும்-என்பதாம். * மாறுபாடாவது-பூமி பலவரசர் ஆளுதற்குப் பொதுவாயுள்ளதென்பது பொறுத அரசாது மனதிலே தோன்றுவதாதலாலும், வலியுடைமைசொன்னவதனாலும், இது பகைவர்மேலே சென்ற அரசருக்கு ஆயிற்று, அரண்சேர்ந்தது ஆகின்ற ஆக்கமும் இருக்கையால் இங்கே ஆக்கம் விசேஷிக்கப்பட்டது. ஆக்கமென்றது- அதற்கு ஏதுவாகிய வலைத்தலை அது கொடுக்கும் பயன்கள். பகைவராலே தமக்கு நலிவில்லாமையும், தாம் நிலைபெற்றுநின்று அவருக்கு நலிவுசெய்தலும முதலானவை. (உ)

ஆற்றுரு மாற்றி யடுப விடன்றிற்கு
மோற்றுச்சுட் டோற்றிச் செயின்.

இ-ள். ஆற்றரும்-வலிமையில்லாதவாலரும், ஆற்றி- வலிமையுடை யாரையு, அடுப- வெல்வார், இடன்- (அதற்கேற்ற) இடந்தை, அறிந்து- தெரிந்து, போற்றி- (தம்மைக்) காத்துக்கொண்டு, போற்றார்கள்ள-பகை வரிடத்து, செயின்- (தொழிலைச்) செய்வாராயின்—எ-று. (கருத்து.) வல்லமையில்லாவேந்தருமிடமறிந்து போர்செய்வாராகில் வெற்றிபெறுவர்-என்பதாம். * காத்துக்கொள்ளுதலாவது- பகைவரால் - நலிவுணாராதிருக்கும்படி அரணலும், படையாலும் காத்தல். இப்படி தொழில் செய்வாராயின் முன்சொல்லப்பட்ட வலிமையில்லாதிருந்தாலும் வெல்வ தென்பதாம். (ரு)

எண்ணியா தெண்ண மிழப்ப விடனறிந்து
துண்ணியார் துன்னிச் செயின்

இ-ள். இடன்- (தாம்தொழில்செய்தற்கேற்ற) இடத்தை, அறிந்து- தெரிந்து, துண்ணியார்- சென்றணுகார், துன்னி - (அரணைப்) பொருந்தி நின்று, செயின்- அத்தொழிலைச்) செய்வாராயின், எண்ணியார்-(மூன்பு அவரைவெல்ல) எண்ணியிருந்தபகைவர், எண்ணம் - அவ்வெண்ணத்தை- இழப்பர் - இழந்துவிடுவார்—எ.று. (கருத்து.) அரசர் இடமறிந்து போர்செய்வாராகில் பகைவனெண்ணமுடியாது- என்பதாம். * எண்ணப்பட்ட வெற்றியை எண்ணமென்றார். பகைவர் போர்செய்யாமல் தம்மைக் காத்துக்கொள்ளுதலால் எண்ணமிழப்பவென்றார். இதனால் அவர் பகைவர் தோற்பனென்பதாயிற்று. [இவை நான்கு பாட்டாலும் பகைவரது அரணின் புறத்து இறைக்கு ஆமிடமறிதல் சொல்லப்பட்டது. (சு)

நெடும்புனலுள் வெல்லு முதலையடும்புனலி
னீங்கி னதனைப் பிற.

இ-ள். முதலை - முதலையானது, நெடும்புனலுள்- ஆழமுள்ள நீரிலானால், பிற- பிறவுயிர்களெல்லாம்-வெல்லும் - வென்றுவிடும், புனலின்- அந்நீரினின்றும், நீக்கின்- நீங்கினால், அதனை- அதை, பிற - பிறவுயிர்களெல்லாம், அடும்-வெல்லும்—எ-று. (கருத்து.) முதலை நீரிலிருந்தால் எல்லாவுயிரையும் வெல்லும் அது அந்நீரைவிட்டால் மற்றவுயிர்களாலே தோல்வியடையும்- என்பதாம். * எல்லாரும் தமது இடத்திலே வலியராயிருப்பரென்பது சொல்லப்பட்டது. [நிலையாத நீரினிடத்தே பிறவுயிர்கள் நிற்கமாட்டாமையால் அவையெல்லாம் முதலைக்கு எளியனவாகும் அவைசஞ்சரித்தற்குரிய நிலத்தினிடத்தே அம்முதலை சஞ்சரிக்க மாட்டாமையால் அவைகளுக்கெல்லாம் எளிதாமென்பது மேற்செல்லுமாசான் பகைவர் நிற்கமாட்டாத விடமறிந்து சென்றால் அவர் அவனுக்கு எளியவராவார் தான் நிற்கமாட்டாத விடத்தேசென்

ருல் அவருக்கு அவன் எளியவனுவான் என்கிற பொருள்தோன்ற நி
ன்றமையால் பிறிதுமொழிதலணி.] (நு)

கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடு
காவாயு மோடா நிலத்து.

இ-ள். கால்வல-(நிலத்தில் ஓடுகின்ற) வலிமைபொருந்திய உருளை களையுடைய, நெடுந்தேர்-பெரியதேர்களானவை, கடல்- கடலில், ஓடா- ஓடமாட்டாவாம், கடலோடும்- கடலில்ஓடுகின்ற, காவாயும்-மரக்கலங்களும், நிலத்து-நிலத்தில், ஓடா-ஓடமாட்டாவாம்—என்று. (கருத்து.) நிலத்திலோடுந்தேர்கள் கடலிலோடாவாம், கடலிலோடு மரக்கலங்கள் நிலத்திலோடாவாம்-என்பதாம். * ஓடுதற்கேற்ற கால்லும் பெருமையும் உடையதாயிருக்கிறுமென்பது தோன்ற கால்வனெடுந்தேரென்றார். [இப்பாட்டு போர்க்குச்சென்றவன் பகைவரிடங்களை அறிந்து அவைகளுக்கு ஏற்ற சாதனங்களால் தொழில் செய்யவேண்டு மென்னும் பொருள்தோன்ற நிற்கையிலுலே இதுவும் அவ்வணி.] (எ)

அஞ்சாமை யல்லாற் றுணைவேண்டா வெஞ்சாமை
யெண்ணி யிடத்தாற் செயின்.

இ-ள். (அரசர்)—எஞ்சாமை - (பகைவரிடத்துத் தொழில்செய்யும் விதங்களையெல்லாம்) குறையாமல், எண்ணி-ஆலோசித்து, இடத்தால்- இடத்தோடுபொருந்த, செயின்- செய்வாராயின் (அச்செயலுக்கு)—அஞ்சாமை யல்லால் - (நமது) தைரியமல்லாமல், துணை - வேறு) துணை, வேண்டா - வேண்டுவதில்லை—என்று. (கருத்து.) குறைவில்லாதெண்ணி யிடமறிந்து போர்செய்தால் தைரியமன்றி வேறுதுணைகள் வேண்டாவாம்-என்பதாம். * அத்தொழில் தவறுதலுக்கு ஏதுவில்லாமையால் தைரிய முடையராய்நின்று முடித்தலல்லது துணைவேண்டாவென்றார். [இவைமூன்றுபாட்டாலும் போர்செய்தற்கு ஆமிடமறிதல் சொல்லப்பட்டது.] (ஏ)

சிறுபடையான் செல்லிடஞ் சேரி னுறுபடையா
னூக்க மழித்து விடும்.

இ-ள். உறுபடையான் - பெருஞ்சேனையையுடைய அரசன், சிறுபடையான் - சிறுபசேனையையுடையவனது, செல்லிடம் - செல்லிடத்தை, சேரின்-(அவனை அழிக்கநினைத்துச்) சேர்வனுயின் - (அவனுல்)—ஊக்கம் - (தன்) பெருமை, அழித்துவிடும் - அறிவான்—என்று. (கருத்து.) நிறை சேனையுடைய அரசன் குறைசேனையையுடைய அரசனிடத்தைச் சேர்ந்தழிக்க நினைக்கிறவனுற் பெருமையை யிழந்து விடுவான்-என்பதாம். * செல்லிடம்-செல்லுமிடம் என்னிரியும். ஊக்கத்தினழிவு உடையான்மேல் ஏற்றப்பட்டது. தன்சேனையின் பெருமைநோக்கி இடம்நோக்காமல் செல்வானுயின் அச்செலவு அச்சேனைக்குறுருசேரச்சென்று தொழில்செய்யக் கூடாமையாலாவது பழக்கமில்லாமையாலாவது, அப்பெருமையாற் பயனில்லாமல் அழிவானென்பதாம். (அ)

நிலம்-ஆம்-அதி—இடனறிதல்.

சிறைகலனுந் சிரு மிலனொனியு மாந்த
ருறைநிலத்தோ டொட்ட லரிது.

இ-ள். சிறைகலனும்-அரணழித்தற்கருமையாகிய ஆற்றலையும், இலனொனியும் - உடையாரையும், ர்- (தொழில்செய்தற்குரிய)மனிதனை, உறைநிலத்தோடு-(அவரது) இருப்பிடத்திற்சென்று, ஒட்டல்-தாக்குதல், அரிது-அரிது—என-று.(கருத்து.) அரண்வலியும்பலமுமில்லாதானும் பகைவர்இருப்பிடஞ்சென்றுவெல்லலரிது- என்பதாம். * ஆண்மையுடையவனைச் சிறுமைநோக்கி அவனிருப்பிடத்திலே சென்றுதாக்கினால் அதைவிட்டுப்போவதற்குத் தணியாமல் சாவதற்குத் துணிவுகொண்டவர்ப்போர்செய்வதாலால் அவருக்குப் பெரியசேனையும் தோற்றோடிப்போமென்பதாம். (க)

காலாழ் களரி னரியடுங் கண்ணஞ்சா
வேலாண் முகத்த களிறு.

இ-ள். கண்ணஞ்சா-பார்க்கு அடங்காதவையும், வேலாண்முகத்த - வேலையுடைய ஆள்களைக்கோத்த கொம்பையுடையவையும், ஆகியகளிறு-யானைகளை, காலாழ்-கால்புதைகின்ற இயல்பினதாகிய; களரில்-சேற்றுநிலத்திலே (அகப்பட்டவிடத்து)—ரி - ரிகளானவை, அடும்-கொல்லும்—என-று. (கருத்து.) ரிகள்யானைகளைச் சேற்றுநிலத்தில்வெல்லும்-என்பதாம். * முகம்கொம்புக்கு ஆகுதலால் ஆகுபெயர்.(ஆண்மையும் பெருமையும் உடையாராயினும் தகாதஇடத்திலே சென்றால் அவைகளாற் பயனின்றி மிகவும் எளியரால் அழிவொன்பது தோன்றநிற்கையால் இதுவும் அவ்வணி. [இவை மூன்றுபாட்டாலும் பகைவனைச் சார்தலர்காத இடமும், சாந்தவிடத்து உண்டாகும் இழுக்கும் சொல்லப்பட்டன.] (ங)

நிக-ஆம்-அதி-தெளிந்துதெளிதல்.

அஃதாவது, மந்திரிமுதலானவர்களைப் - பிறப்பு-குணம்-அறிவு - என்ப்படுகின்றவைகளையும், செய்கையையும், காட்சி - கருதல் - ஆகமம் என்கிற பிரமாணங்களினாலே ஆராய்ந்து தெளிதல். வலிமுதலாகிய மூன்றையும் அறிந்து பகைமேற் செல்வானுக்குச் சேனை கருதோடு தொழில்செய்தற்கும், எதிரிடாமைக்கும், இத்தெளிவுவேண்டுதலால் அவைகளின் பின்வைக்கப்பட்டது.

அறம்பொரு ளின்ப முயிரச்ச நான்கின்
நிறந்தெரிந்து தேறப் படும்.

[illegible] (அரசனால் தெளியப்படுவோனெனருவன்)—அறம் - அற
[illegible] - பொருளும், இன்பம்-இன்பமும், உயிரச்சம்- உயிரப்
[illegible] அச்சமும், நான்கிற்கும் - (என்கின்ற) உபதை நான்கின
[illegible] நிறத்தினால், தெளிந்து- (மனவியல்பு) ஆராய்ந்து, தேறப்ப
டும்- (பிறன்) தெளியப்படுவானென்—என்று. (கருத்து.) ஒருவன் அறம்பொ
ருளின்ப முயிரச்சமென்கிற நான்கிற்கும் நிறத்தாற் றேர்ந்துகொள்ளப்படு
வான்- என்பதாம். * அவற்றுள் அறவுபதையாவது, புசோகிதனையும்,
அறவோனையும் விட்டு அவரால் இவ்வரசன் அறமில்லாதவனு யிருக்
கையால் இவனை நீக்கி அறமும் உரிமையும் உடைய ஒருவனை வைத்த
ற்கு எண்ணினேனும் இதுதான் யாவர்க்கும் சம்மதம், உன்கருத்துளன்
னவென்று சபதத்தோடு சொல்லுவித்தல், பொருளுபதையாவது-சே
னைகுதலிலவனையும், அவனோடு சம்பந்தமானவனையும்விட்டு அவரால்இ
வ்வரசன் உலுத்தனு யிருக்கையால் இவனை நீக்கி நானையும், உரிமை
யும் உடைய வொருவனைவைத்தற்கு எண்ணினேனும் இதுதான் யாவர்க்
கும் சம்மதம், உன்கருத்து என்னவென்று சபதத்தோடு சொல்லுவி
த்தல், இன்பவுபதையாவது - ஆதிவெகாட்டு உரிமையோடு பழகிய ஒ
ரு தவமுது மகளைவிட்டு அவளால் உரிமையுள இன்னுள் உன்னைக்க
ண்டு வருந்தமுற்றுக் கூடவேண்டு மென்று என்னைவிடுத்தாள் அவ
னைக் கூடுவையானால் உனக்கு அதிகசுகமாத்தோமல்லாமல் அதிகதோஷ
முப்பிடைக்குமென்று சபதத்தோடு சொல்லுவித்தல், உயிரச்சவுபதை
யாவது - ஒரு நிமித்தத்தின் மேல்வைத்து ஒருமந்திரியிலேலை மற்றவ
னை அவன்வீட்டில் அழைப்பித்து இவர் எதிரிடும்படி எண்ணற்குக்கூ
டினானென்று தான் காவல்செய்து ஒருவனால் இவ்வரசன் நம்மைக்கொ
ல்ல எண்ணுகின்றனையால் முந்தினாம் அவனைக்கொன்று நமக்குஇவி
ய ஒருவனை வைத்தல் இங்கே யாவர்க்கும் சம்மதம், உன்கருத்து என்
னவென்று சபதத்தோடு சொல்லுவித்தல், இந்நான்கிறும் வேறுபடா
தவனு யிருந்தவிடத்துப் பிற்காலத்திலும் வேறுபடானென்று கருந்த
னைவயில் தெளியப்படுவானென்பதாம். (க)

குடிப்பிறந்த குற்றத்தி னீங்கி வடுப்பரியு
நாணுடையான் கட்டே தெளிவு.

இ-ள். தெளிவு -(அரசனது) தெளிவானது, குடிப்பிறந்து-(உயர்ந்
த) குடியிலேபிறந்து, குற்றத்தின்-குற்றங்களினின்றும், நீங்கி-நீங்கி, வடு-
(நமகுப்) பழுதுவருமோவென்று, பரியும் - அஞ்சுகின்றகும், நாணுடை
யான்கட்டே - நாணமுடையவனிடத்தே—என்று. (கருத்து.) நற்குடி
யிற்பிறந்து குற்றத்தினிருந்து நீங்குகின்றகு நாணமுடையவனை யரசன்
தெளிந்துகொள்வான் - என்பதாம். * குற்றங்களாவன - குற்றங்கடிந்
லதிகாரத்திற் சொல்லப்பட்டனவைகளாம். நாணம் - இழிதொழில் களி
லே மனஞ்செல்லாமை, இவை மிகுதியாக யொக்கியா வாயற்கேட்ட

லுடைய ஆகமபிரமாணத்தினாலே தெரிவன. இக்கான்கு முடைப்பவனை தெளிகவென்பதாம். (உ)

அரியகற் றாசற்றார் கன்றுந் தெரியுங்கா
லின்மை யரிதே வெளிறு.

இ-ள். அரிய - (கற்றற்கு) அருமையாகிய நூல்களை, கற்று, ஆசு- (முன்சொல்லப்பட்ட) குற்றங்கள், அற்றார்கண்ணறும் - அற்றவரிடத்தும், தெரியுங்கால் - (நுட்பமாக) ஆராயுமிடத்து, வெளிறு - அறியாமையானது, இன்மை-இல்லாதிருக்கை, அரிதே - அருமையே—எ-று. (கருத்து.) அரியநூல்களைக் கற்றுக் குற்றமற்றவரிடத்தும் அறியாமையில்லாதிருக்கையரிது-என்பதாம். * அறியாமை - இவரிடத்து மனநிலையாமைபற்றி ஓராவிடத்து உண்டாமாதலால்தெரியுங்கா லென்றார். காட்சிப்பிரமாணத்தினால் தெளிந்தால் அக்குற்றமும் இல்லாதாமெனவியப்படுவதென்பதாம். [இப்பிரமாணங்களாலே குணமும் குற்றமும் தெரிந்து குணமுடையவனைத் தெளிகவென்பது இம்முன்றுபாட்டாலும் சொல்லப்பட்டது.] (ஈ)

குணனுடைக் குற்றமு நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

இ-ள். (குணகுற்றங்களுள் ஒன்றேயுடையார் உலகில் இல்லாமையால்)—குணனும் - குணங்களையும், நாடி - ஆராய்ந்து, குற்றமும்-மற்றைக் குற்றங்களையும், நாடி - ஆராய்ந்து, அவற்றுள் - (பின்பு) அவ்விருவகைகளுள்ளும், மிகை - மிகுந்தவைகளை, நாடி - ஆராய்ந்து, மிக்க - மிகுந்தவைகளால், கொளல்-(அவனை) அறிபக்கடவன்—எ-று. (கருத்து.) அரசன் ஒருவன் குணங்களையுங் குற்றங்களையும் ஆராய்ந்து கொள்ளக்கடவன்-என்பதாம். * மிகுதல் - தன்னளவையிலும்பலவாதல் பன்னாளையினுமாதல் உயர்தல். மிகுந்தவைகளால் அறிதலாவது - குணமிகுந்திருந்தால் தொழிலுக்கு உரியவனென்றும், குற்றமிகுந்திருந்தால் அல்லனென்றும் அறிதல். [குணமாத்திரமுடையவர் உலகத்தில் அரியராகலால் இவ்வகையானாயும் தெளிகவென்பது இதனாற் சொல்லப்பட்டது] (ச)

பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தந்தங்
கருமமே கட்டளைக் கல்.

இ-ள். (குடிப்பிறப்புகுணம், அறிவு என்பவைகளால் மனிதனாட்யும்) பெருமைக்கும் - பெருமையாகிய (பொன்னின்மாற்றறிதற்) கும், ஏனைச்சிறுமைக்கும்-மற்றைச்சிறுமையாகிய (பொன்னின்மாற்றறிதற்) கும், கட்டளைக்கல் - உரைகல்லாவது, தந்தங்கருமமே - தங்கள்தங்கள் செயல்களே—எ-று. (கருத்து.) மனிதர் பெருமையுஞ் சிறுமையுமறியுமுரைகல்லாவது அவரவர் தொழில்களாம்-என்பதாம். * மனிதருடைய பெருமைசிறுமைகளைத் தப்பாமல் அறியவேண்டியவர் களுக்கு மு

சர்தனம் அவர்செயலே என்றற்கு கருமமே எனத் தேற்றேகா ரத்தோடு சொல்லினர் (பெருமை சிறுமைகளைப் பொன்னெனுமல்க நுமம் ஒன்றைக் கட்டளைக்கல்லெனலால்) ஏகதேச வுருவகவணி. [இ தனுற் குணகுற்றங்களை அறிந்தற்குக்கருவி சொல்லப்பட்டது.] (நு)

அற்றுனைத் தேறுத லோம்புக மற்றவர்
பற்றிலர் காணூர் பழி.

இ-ள். அற்றுனை - சுற்றமில்லாதவனை, தேறுதலோம்புக - தெளிதலொழிக்கடவன், (அவர்)—மற்றுப்பற்றிலர் - உலகத்தோடு சம்பந்தமிலராதலால், பழி - பழியை, காணூர் - அஞ்சார்—எ-று. (கருத்து.) அரசன் சுற்றமற்றவனைத் தெளிதலொழியக்கடவன் அவருலகத்தோடொட்டாதவராதலற் பழிக்கஞ்சார் - என்பதாம். * உலகத்தாரால்பழிக்கப்படுவன எனைத்து அவை விடுதற்கும், புகழப்படுவன எனை அவை செய்தற்கும், காரணமாகிய உலகநடையினியல்பு சுற்றமில்லாதவர்க்கு இல்லாமையால் அவனாகம்பனாகாதென்பதாம். (சு)

காதன்மைகந்தா வறிவறியார்த்தேறுதல்
பேதைமை யெல்லாந் தரும்

இ-ள். காதன்மை - அன்புடைமையான து, கந்தா- பற்றுக்கோடாக, அறிவு - (தமக்கு) அறியவேண்டுமவைகளை, அறியார் - அறியாதவனா, தேறுதல் - தெளிதலானது, பேதமையெல்லாம் - அறிவில்லாமையையெல்லாம், தரும் ; (அரசனுக்குத்). தரும்—எ-று. (கருத்து.) அறியவேண்டியவைகளை யறியாதவர்களை யரசன் தெரிந்துகொள்ளுதலவனுக் கறிவின்மையெல்லாந்தரும் - என்பதாம். * தன்னோடு அவரிடத்தின்ற அன்புபற்றி அரசன் அறிவில்லாதவனைத் தொழில்செய்யவைத்தால் அத்தொழில் அவரறிவில்லாமையினாலே கெடும் கெட்டால் அவர்களுள்ளது மாத்திரமல்லாயல் தொழிலுக்குரியவனா அறியாமையும், மேல்விளைவு அறியாமையும் முதலாக அவனுக்கு அறியாமைகள் பலவும்உண்டாகுமென்பதாம். (எ)

தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா விடும்பை தரும்.

இ-ள். பிறனை - தன்னோடுசம்பந்தமில்லாதவனை, தேரான்- (பிறப்பு முதலானவைகளாலும் செய்கையாலும்) ஆராய்ந்திலனாகி, தெளிந்தான் - தெளிந்தரசனுக்கு(அத்தெளிவு)—வழிமுறை - (அவன்) சந்ததிமுறையினும், தீரா-நீங்காத, இடும்பை- துன்பத்தை, தரும்-கொடுக்கும்—எ-று. (கருத்து.) தன்னோடுசம்பந்தமில்லாதவனைத்தெரிந்துகொண்டவரசனுக்கு அத்தெளிவுதுன்பந்தரும்-என்பதாம். * சம்பந்தம்- தன்குடியோடு தொடர்ந்த மரபுதெளிதல், அவனிடத்தே தொழிலை

வைத்தல், அத்தொழில் கெடுதலால் அவன் குலத்திற்பிறந்தவரும் பகைவர்கைபபட்டுக் கீழாவதொன்பதாம். (அ)

தேறற்க யாரையுந் தேராது தேர்ந்தபிற்
றேறுக தேறும் பொருள்.

இ-ள். யாரையும்-யாரையும், தேராது-ஆராயாமல், தேறற்கதெளியாதிருக்கக்கடவன், தேர்ந்தபின்-ஆராய்ந்தபின், தேறும்-பொருள்தெளியப்படுபொருள்களை, தேறுக-தெளியக்கடவன்—எ-று (கருத்து.) அரசன் யாரையு மாராய்யாமல் கொள்ளாதிருக்கக்கடவன் ஆராய்ந்தபின் கொள்ளக்கடவன் - என்பதாம். *தேறற்கவென்று பொதுப்படச் சொன்னமையால் - யாதொருதொழிலிலும் தெளியலாகாதென்பது பெறப்பட்டது. இக்கே தேறுகவென்றதற்கு ஐயுறுதிருக்கக் கடவமென்பது கருத்து. தேறும்பொருள் - அவரவர் வல்லமைக்கு ஏற்றதொழில்கள். பொருள்- ஆகுபெயர். (கூ)

தேரான் தெளிவுந் தெளிந்தான்க ணையுறவுந்
தீரா விடும்பை தரும்.

இ-ள். (அரசன்) தேரான்- (ஒருவனை) ஆராய்ந்திலனாகி, தெளிவும்- தெளிதலும், தெளிந்தான்கண்- ஆராய்ந்து தெளியப் பட்டவனிடத்தே, ஐயுறவும் - சந்தேகப்படுதலும், தீராவிடும்பை - நீங்காததுன்பத்தை, தரும்- (அவனுக்குக்) கொடுக்கும்—எ-று. (கருத்து.) அரசன் ஒருவனை யாராய்ந்திலனாகித் தெளிதலும், ஆராயப்பட்டவனிடத்தில்லையங்கொள்ளுதலும். அவனுக்குத் துன்பந்தரும் - என்பதாம். * அரசன் ஒருவனிடத்து ஒருதொழிலைவைத்தபின் ஒருதவறும் காணுமல் சந்தேகப்படுவானாயின் அதனை அவன் அறிந்து இனி இதுகில்லாதென்னுங்கருத்தால் அத்தொழிலைத் தளர்விடுவான் அதுவல்லாமல் பகைவராலே எளிதிலே பிரிக்கவும் படுவான் ஆகலால் தெளியப்பட்டவனிடத்தே சந்தேகப்படுதலும் ஆகாதாயிற்று. தெளிவுக்கு அளவுசொல்லியபடி [இவை ஐந்துபாட்டாலும் தெளியப்படாதவர் இவரென்பதும். அவரைத் தெளிந்தால் உண்டாகும் இழுக்கும். தெளிவுக்கு அளவும், சொல்லப்பட்டன,] (ஐ)

ருஉ-ஆம்-அதி-தெரிந்துவினையாடல்.

அஃதாவது, அத்தெளியப்பட்டவரை அவர் செய்யவல்ல தொழில்களை அறிந்து அவைகளிலே ஆளுந்திறம். அதிகாரமுறைமையும் இதனாலே விளங்கும்.

நன்மையுந் தீமையு நாடி நலம்புரிந்த
தன்மையா ளளவ படும்

இ-ள். (அரசன் முதலிலே ஒருதொழிலைக்கொடுத்தால்) நன்மை தீமையும் - (அத்தொழிலிலே) ஆமனவையும் ஆகாதனவையும் ஆகிய செயல்களை, நாடி - ஆராய்ந்தறிந்து, கலம் - (அவைகளுள்) ஆமனவைகளையே, புரிந்த- விரும்பிய, நன்மையான்- இயல்பையுடையவன், (பின்னே அவ்வரசனாலே)—ஆளப்படும் - (சிறந்தவொதொழில்களிலே) ஆளப்படுவான்—என்று. (கருத்து.) நன்மைதீமைகளறிந்து ஆமனவைகளைச் செய்பவன் அரசனாலாளப்படுவான் - என்பதாம். * தன்னை உரிமை அறிந்து பொருட்டு உன்னுக்கும் புறம்புக்கும் நடுவாகிய ஒருதொழில அரசன் தன்னிடத்தே வைத்திடத்து அதிலே ஆராய்ந்தசெயல் களையேசெய்தவன் பின்னும் அத்தன்மையானுராகவற்றி உள்ளாகிய தொழிலிலே ஆளப்படுவா னென்பதாயிற்று, புரிந்தவென்று இறந்த காலத்திலே சொல்லுதலால் முன்னே உரிமையை அறிந்தபொருட்டு வைத்த தொழிலென்பது பெறப்பட்டது. (எ)

வாரி பெருக்கி வளம்படுத்த தற்றலை
யாராய்வான் செய்க வினை.

இ-ள். வாரி - (பொருள்கள்) வரும்வழிகளை, பெருக்கி- விரியச்செய்து, வளர்படுத்து- (அப்பொருள்களாலே) செல்வத்தை வளர்த்து, உற்றவை - (அவ்வரும் வழிகளுக்கும், பொருள்களுக்கும், செல்வத்துக்கும்) வந்த- இடையூறுகளை, ஆராய்வான் - (இனிதோறும்) ஆராய்ந்து நீக்கவல்லவன், வினை- தொழிலை, செய்க- (அரசனுக்குச்) செய்யக்கடவன்—என்று. (கருத்து.) பொருள்வரும்வழிபலிருந்திலசெய்து பொருளை வளர்த்து இடையூறுகளை யாராய்பவனை அரசனுக்குத் தொழில்செய்யக்கடவன்-என்பதாம். * வரும்வழிகளாவன - முன் இறைமாட்சி அதிகாரத்தில் இயற்றலுமென்றதனிடத்து உரைக்கப்பட்டனையும், உழவு-பசுக்காவல் - வாணிகம் என்பனையும் ஆம். செல்வங்களாவன - அக்கே பொருளும், இன்பமும், ஆகச்சொல்லப்பட்டனவுகள். இடையூறுகளாவன, அரசன்- தொழில்செய்வோர்- சுற்றத்தார் - பகைவர் - கள்வர் என்கிற இவர்களால் வரும் கேடுகள். (உ)

அன்பறிவு- தேற்ற மவாவின்மை யின்னான்கு
நன்குடையான் கட்டே தெளிவு.

இ-ள். அன்பு- (அரசனிடத்தே) அன்பும், அறிவு (அவனுக்கு ஆமனவைகளை அறியும்) அறிவும், தேற்றம் - (அவைகளைச் செய்யுமிடத்துக்) கலகமாமையும், அவாவின்மை-(அவைகளாலேபொருள் மேலே யவாவி அகன்றமல்) அவாவில்லாமையும் ஆகிய, இந்நான்கும்- இந்நான்குகுணங்களையும், நன்குடையான்கட்டே - நன்றாக உடையவனிடத்தே, தெளிவு-(தொழிலைவிட்டிருக்கும்) தெளிவு—என்று. (கருத்து.) அன்பு- அறிவு- தெளிவு- ஆசையில்லாமை இந்நான்கு, முடையவனிடத்தே

யரசனுக்குத் தெளிவுண்டாம் - என்பதாம். [*] இந்நான்கையுமுடைமை அவன் செய்கின்ற தொழிலிலே சிறிதும் ஆராய வேண்டுவதில்லையென்று அரசன் தெளிதற்கு ஏதுவாகலால் அவனை அதன் பிறப்பிடமாக்கினார். [இவை மூன்றுபாட்டாலும் அளுநற்கு உரியவனது இலக்கணஞ்சொல்லப்பட்டது.] (ஈ)

எஞ்ஞவகையாற் றேறியக் கண்ணும் வினைவகையான்
வேறுகு மாந்தர் பலர்.

இ-ள். எஞ்ஞவகையால்-எல்லாவகைகளாலும், தேறியக்கண்ணும்-(ஆராய்ந்து) தெளிந்து (தொழிலேவைத்த) பின்னும், வினைவகையான்-அத்தொழியியல்பினாலே, வேறுகும் - வேறுபடுகின்ற, மாந்தர்-மனிதர், பலர் (உலகத்திலே) பலர்—எ-று. (கருத்து.) எவ்வகையாலறிந்தவிடத்தும்தொழில்வகையால் வேறுபடுமனிதர்பலர் - என்பதாம். * அரசன்பந்தைவிரும்பி வேறுபடுவாரோ யல்லாமல் அதனைக் குற்றமென்றுஷிட்டித் தம்மிடல்பிலே நிற்பவர் அரியராதலால் - வேறுகு மாந்தர் பலவென்றார். தொழில்வைப்பதற்குமுன்னே எல்லாக்குணங்களு முடையவராகி வைத்தபின் வேறுபடுவாரை நடுவானதோர் தொழிலேவைத்து அறிந்து நீக்கவேண்டுமென்பதாம். [இதனால் ஒருவகையால்ஸுழிக்கப்பதிவார் இவரென்பது சொல்லப்பட்டது.] (சு)

அறிந்தாறறிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்
சிறந்தானென் றேவர்பாற் றன்று.

இ-ள். வினைதான் - தொழில்தான், அறிந்து-(செய்யும் உபாயங்களை) அறிந்து, ஆற்றி-(செயலாலும் இடையூறுகளாலும்வருங் துன்பங்களைப்) பொறுத்து, செய்கிற்பாற்கல்லாமல்-(மூடிவு) செய்யவல்லவனையல்லது, சிறந்தானென்று - (இவனிடத்து) அன்புடையவனென்று, ஏவற்பாற்றன்று - (வேறொருவனை) ஏவுதற்றன்மையை உடையதன்று—எ-று. (கருத்து.) தொழில்செய்யு முபாயங்களையறிந்து முடிப்பவனுக்கல்லது தொழிலை மற்றவனுக்குக் கொடுக்கலாகாது-என்பதாம்.*[அறிவாற்றல்களாலல்லது அன்பினாலே முடியாதென இதனால் தொழினுது இயல்பு சொல்லப்பட்டது.] (கூ)

செய்வானை நாடி வினை நாடிக்காலத்தோ
டெய்த வுணர்ந்து செயல்-

இ-ள். செய்வானை-செய்பவனிலக்கணத்தை, நாடி- (முன்னே) ஆராய்ந்து, வினை- (செய்யப்படுந்) தொழிலினியல்பை, நாடி - (பின்னே) ஆராய்ந்து, (அதன்பின்பு அவனையும அதனையும்) காலத்தோடு - காலத்துடனே, (சேர்ந்து) எய்த-பொருந்த, உணர்ந்து - அறிந்து, செயல்-(அவனை அத்தொழினிடத்து ஆளுதல்) செயக்கடவன்—எ-று. (கருத்து.) அரசன் தொழில்செய்பவனை யறிந்து பின்னைத்தொழிலை யறிந்து

குஉ-ஆம்-அதி—தெரிந்துவினையாடல்.

அவனைத்தொழிலில்வைத்தாள்கடவன்-என்பதாம். * செய்பவனிலக்கணமும், தொழிலினியல்பும், முன்னே சொல்லப்பட்டன. காலத்தோடுபொருந்த அறிதலாவது - இக்காலத்தில் இவ் விலக்கணமுடையவன் செய்தால் - இவ் வியல்புடையதாகிய தொழில்முடியுமென்று கூட்டி அறிதல்.

(சு)

இதனை யிதனா லிவன்முடிக்கு மென்றாய்ந்
ததனை யவன் கண் விடல்.

இ-ள். இதனை - இத்தொழிலை, இதனால்-இச்சாதனத்தால், இவன் முடிக்குமென்று-இவன் முடிக்கவல்லவனென்று; ஆய்ந்து (கூறுபடுத்தி ஆராய்ந்து, (இம்மூன்றும் தம்முள் ஒத்திருக்கவிடத்து) அதனை - அத் தொழிலை; அவன்தன் - அவனிடத்து, விடல்- விடக்கடவன்—என்பது. (கருத்து.) அரசன் இத்தொழிலை யிச்சாதனத்தா லிவன் முடிக்கவல்லவனென்றறிந்து அத்தொழிலை யவனிடத்து விடக்கடவன் - என்பதாம். * சாதனம் - துணைவரும், பொருளும், முதலானனவ செய்பவனும், சாதனமும்தொழிலும், தம்முள் ஒத்திருத்தலாவது - ஒவ்வொன்றோடு மற்றையிரண்டுக்கும் பொருத்தம் உண்டாகுதல் விடுதல் - அவன் அத்தொழில்செய்தற்கு உரியவனுக்குதல்.

(எ)

வினைக்குருமை நாடிய பின்றை யவனை
யதற்குரிய னாகச் செயல்.

இ-ள். (ஒருவனை அரசன்) உரிமை -(தனது) தொழில்செய்தற்குரியனாயிருக்கையை, நாடியபின்றை - ஆராய்ந்துதுணிந்தபின்பு; அவனை அவனை; அதற்கு-அத்தொழில்செய்தற்கு, உரியனாக-உரியவனாக,செயல். (உயரச்) செய்யக்கடவன்—என்று.(கருத்து.)அரசன் ஒருவனைத்தொழிற் குரியவனாயிருக்கையையறிந்து அவனையத்தொழிற் குரியவனாகச் செய்யக்கடவன்-என்பதாம். * உயரச்செய்தல் - அதனைத்தானே செய்து முடிக்க வல்லவனாக்கல், அது செய்யாதவிடத்தும் கெடுமென்பது கருத்து.

(அ)

வினைக்கண் வினையுடையான் கேண்மை வேறுக
நினைப்பானை நீங்குந் திரு,

இ-ள். வினைக்கண்- (தனது)தொழிலினிடத்தே, வினையுடையான். (எப்போதும்) முயற்சியையுடையவன்,(அவ்வுரிமையால்) கேண்மை (தனக்குச்) சுற்றமாய் நடக்கின்ற தன்மையை, (அது பொறாதவர சொல்லைக்கேட்டு) வேறுக - மாறுபட, நினைப்பானை - நினைக்கும் அரசனை, திரு-சீதேவி, நீக்குந் நீங்குவாள்—என்று. (கருத்து.) தனது தொழிலிலே முயற்சியுடையவனை வேறுகநினைக்கு மரசனைச் சீதேவிநீங்குவாள்-என்பதாம். * சுற்றமாய்நடக்கின்ற தன்மையானது - தான் பிழையில்லாமல் சுற்றத்தார்செய்யும் உரிமையையெல்லாம் செய்து

த்தல். அவனை அவமதித்துக்கோபிக்க வினைப் பாலுயின் பின்னுருவரும் உட்பட்டு முயல்வாரில்லாமல் செல்வங்கெடுமென்பது கருத்து. [இந் நான்குபாட்டாலும் ஆளுதற்கு உரியவனை ஆளும் நிறம் சொல்லப்பட்டது.] (கூ)

நாடோறு நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு.

இ-ள். வினைசெய்வான் - தொழில்செய்பவன். கோடாமை - கோணாதிருக்க, உலகு-உலகமானது, கோடாது-கோணாது, (ஆதலால்) நாடோறும் - தினந்தோறும், மன்னன்-அரசன், நாடுக -(அவன்செயலை) ஆராயக்கடவன்—எ-று. (கருத்து.) தொழில்செய்பவன்கோணாதிருக்க வுலகங்கோணாது ஆகையால் அரசனவன் நாள்தோறு மாராயக்கடவன் என்பதாம். * அவ்வொன்றனையும் ஆராயவே அதன்வழிப்பட்ட உலகெல்லாம் ஆராய்ந்தவனுவன் அதனால் அவனுரிமை அழியாமல் தன்னுள்ளே ஆராய்ந்துகொண்டுவரக்கடவனென்பதாம். [இதனால் ஆண்டவிடந்தப்பாச்செய்வது சொல்லப்பட்டது.] (ஈ)

நாஉ-ஆம்-அதி-சுற்றந்தழால்.

அஃதாலது, அரசன் தனது சுற்றத்தாரைத் தன்னை விட்டு நீங்காதிருக்கும்படி தழுவுதல், தொழில்செய்வோரைச்சொல்லிமற்றைச்சுற்றத்தாரைச்சொல்லுதலால்- இது தெரிந்துவினையாடலின் பின்வைக்கப்பட்டது.

பற்றற்ற கண்ணும் பழமை பாராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள.

இ-ள். பற்றற்றகண்ணும்- (ஒருவன்) செல்வந்தொலைந்து வறுமைப்பட்டவிடத்தும், பழமை-(தம்மோடு அவனிடத்துண்டாகிய) பழமையை, பாராட்டுதல்-(எடுத்துக்) கொண்டாடுமியல்புகள், சுற்றத்தார்கண்ணே - உறவினரிடத்தே, உள-உள்தாகும்—எ-று. (கருத்து.) ஒருவன் செல்வப் பற்றற்றவிடத்தும் பழமைகொண்டாடுதல் சுற்றத்தாரிடத்தே யுண்டாம்-என்பதாம். * பற்றற்றகண்ணும் என்பதற்கு ஈண்மை வறியனாவிடத்துப் பாராட்டாமையை [விளக்கினின்றது. பழமை-செல்வத்தோடிருந்தகாலத்திலே தமக்குசெய்த உபகாரம் சுற்றத்தார்பாராட்டுதலைத் தெளிவித்தலால் ஏகாரம்தேற்றேகாரம். [இதனுலே சுற்றத்தினது சிறப்புச்சொல்லப்பட்டது.] (உ)

விருப்பறுச் சுற்ற மியையி னருப் பறு
வாக்கம் பலவுந்தரும்.

இ-ள்: விருப்பறு-அன்புநீங்காத, சுற்றம் - சுற்றமான து, இயை
ன்-(ஒருவனுக்குக்) கிடைக்குமாயின், (அது) அருப்பறு - நிலைத்தலு
காத, ஆக்கம்பலவும், - பலசெல்வங்களையும், தரும் - (அவனுக்குக்கொ
டுக்கும்—எ-று. (கருத்து.) ஒருவனுக்கு அன்புள்ள சுற்றங்கிடைத்
லது பலசெல்வங்கொடுக்கும் -என்பதாம். * உட்பகையாயினைவை
க்குச்சுற்று விருப்பறுச்சுற்றமென்றும், காலைவளர்க்கும் செல்வத்தை
நீக்குச்சுற்று அருப்பறு வாக்கமென்றும், அடைகொடுத்துச் சொல்
னார். இயைவனென்பது-அதுகிடைத்தவினது அருமையைக் காட்டி நி
ன்றது பலவுமென்றது - அங்ஙங்கள் - ஆறனையும் - பலர்கூடிவளர்த்த
லால் அவைமேலுமேலும் சிலைக்குமென்பதுகருத்து. (உ)

அளவளா வில்லாதான்வா ழ்க்கை குளவளாக்
கோடின்று நீர்நிறைந்தற்று.

இ-ள். அளவளாவில்லாதான் - (அச்சுற்றத்தோடு) நெஞ்சுகலந்த
வில்லாதவனது, வாழ்க்கை - வாழ்வானது, குளவளா - குளப்பறப்பா
னது, கோடின்றி - கரையில்லாமல், நீர்நிறைந்தற்று- நீர்நிறைந்தாற்போ
லும்—எ-று. (கருத்து.) சுற்றத்தாரோடு கலவாதவன் வாழ்வானது க
ரையில்லாகுள நீர்நிறைந்தாற்போலும் - என்பதாம். *சுற்றம் அதிக
ரத்நிலை நருவிக்கப்பட்டது. வாழ்க்கைக்கு எதுவான செல்வங்களை
வாழ்க்கையென்றார். சுற்றமில்லாதவனது செல்வங்கள் தாங்குவாரில்
லாமையால் புறத்திலேபோமென்பதாம். (ங)

சுற்றத்தார் சுற்றப் படவொழுகல் செல்வந்தாம்
பெற்றத்தார் பெற்ற பயன்.

இ-ள். செல்வம் - செல்வத்தை, பெற்றத்தால்-பெற்ற அதனால், பெ
ற்றபயன் - (ஒருவன்) பெற்றபயனாவது, (தன்)சுற்றத்தால்-உறவினால்,
தான்சுற்றப்பட-தான்சூழப்படும்வகை, ஒழுகல்-(அச்சுற்றத்தைத்) தழு
விநடத்தலாம்—எ-று. (கருத்து.) செல்வம்பெற்றத்தினால் வரும்பயனா
வது சுற்றத்தைக்காத்தலாம் - என்பதாம். * இங்ஙடக்கை பகையில்லாம
ல் அரசாளுதற்கு ஏதுவாகலால் இதனைச்செல்வத்திற்குப் பயனென்
றார். [இவைமூன்றுபாட்டாலும் சுற்றத்தைத்தழுவுதல் செல்வத்துக்
குவகுவும், அரணும்-பயனும், ஆமென்பது சொல்லப்பட்டது.] (ச)

கொடுத்தலு மின்சொலு மாற்றி னெடுக்கிய
சுறறத்தாற் சுற்றப் படும்.

இ-ள். (சுற்றத்துக்கு)-கொடுத்தலும்- (வேண்டுமவைகளைக்கொ
டுத்தலையும், இன்சொலும - இனியசொற்சொலுதலையும், ஆற்றின்-
(ஒருவன்செய்ய) வல்லவனாயின், அடுக்கிய- (தம்மிலே) தொடர்ந்த, சு
ற்றத்தால்- (பலவகைச்) சுற்றத்தாலும், சுற்றப்படும்-சூழப்படுவான்.

எ-து. (கருத்து.) கொடுத்தலும் $\frac{3}{5}$; இனியசொற்சொல்லுதலும், ஒருவன்செய்தா லவன்சுற்றத்தாற் சூழப்படவாழ்வான் - என்பதாம். * அவ்விரண்டும் அளவறிந்துசெய்தல் - அரிதென்பதுதோன்ற ஆற்றினென்றார். தம்மிலெதிர்தலாவது, உயர்ந்தவை உறவும், அற்றவை உறவும், ஒருசம்பந்தப்பட்டுவருதல். (இ)

பெருங்கொடையான் பேணான் வெகுளி யவ னின்
மருங்குடையார் மாநிலத்தில்.

இ-ள். (ஒருவன்) பெருங்கொடையன் - மிகுந்தகொடையை யுடையவனும், வெகுளி-கோபத்தை, பேணான் - விரும்பாதவனுமே (ஆனால்)—அவனின் - அவன்போல், மருங்குடையார் - சுற்றமுடையவர், மாநிலத்து-இப்பெரிய உலகத்தில், இல்-இல்லை—எ-று. (கருத்து.) மிகுந்தகொடையுங் கோபமில்லாமையு முடையவனுக்கு லவன்போற் சுற்றமுடையவரில்லை - என்பதாம். மிகுந்தகொடை ஒன்றினாலும் வறுமைப்படாதிருக்கக்கொடுத்தல். விரும்பாமை இது அரசர்க்குவேண்டுவதென்று அளவுகடந்துசெய்யாமை. (ச)

காக்கை கரவா கரைந்துண்ணு மாக்கமுந்
மன்னர் ராக்கே யுள.

இ-ள். காக்கை-காகங்கள், (தமக்குஇரையைக்கண்டவிடத்து) கரவா, மறைக்காமல், கரைந்து - (இனத்தை) அழைத்து, உண்ணுமே-(அதனோடுகூடி, உண்ணும், ஆக்கமும்- (சுற்றத்தினாலாகிய)பெருக்கங்களும், அன்னர்ராக்கே - அப்படிப்பட்ட இயல்பையுடையவர்க்கே, உள-உளவாகும் —எ-று. (கருத்து.) காகமினங்கிடைத்தாலென்னத்தையழைத்துண்ணுங்கல்போல இச்செய்கை நல்லினத்தார்க்குளவாம் - என்பதாம். * அப்பெருக்கங்களாவன, பகையில்லாமை பெருஞ்செல்வமுடைமை முதலானவை எச்ச உம்மையால் அறமும் இன்பமும் அன்றிப்பொருளும் பெறுவதொன்பதாயிற்று. அப்படிப்பட்டவியல்பு தம்மால் அனுபவிக்கப்பட்டவைகளையெல்லாம் அவரும் அனுபவிக்கும்படிவைத்தல். (எ)

பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கி
னதுநோக்கி வாழ்வார் பலர்.

இ-ள். வேந்தன்-அரசனானவன், பொதுநோக்கான், எல்லாரையும்ஒருத்தன்மையாகநோக்காமல், வரிசையா - அவரவர்தகுதிக்குவகை, நோக்கின் - நோக்குவானாயின், அதுநோக்கி - அச்சிறப்புநோக்கி, வாழ்வார் - (அவனைவிடாது) வாழுஞ்சுற்றத்தார், பலர்- அநேகர்—எ-று. (கருத்து.) அரசனவரவர்க்குத் தகுதியறிந்து நடப்பானாகி லதனைவிடாது வாழுஞ்சுற்றத்தார்பலர்-என்பதாம். * உயர்ந்தார்நீங்குதலகுதிக்கு பொ

தனோக்கை விலக்கினல்லாரும் விடாதொழுகுதல் குறித்துவரினசெ
க்கைவிதித்தார், [இவைஞான்குபாட்டாலும் சுற்றந்தழுவுதற்கு உபா
ம்சொல்லப்பட்டது]
(அ)

தமராகித் தற்றுறந்தார் சுற்ற மமராமைக்
காரண மின்றி வரும்.

இ-ள். தமராகி - (முன்னே) சுற்றத்தாராயிருந்து, தற்றுறந்தார்-(த
ன்னைவிட்டு பொருந்தாமல் யாதாயினும் ஒருகாரணத்தினாலே) தன்னைப்பி
ரிந்துபோனவர், சுற்றம் - (பின்னும்வந்து) சுற்றத்தாராகுதல், அமராமை
க்காரணம்-அப்பொருந்தாமையின்காரணம், இன்றி - (தன்னிடத்தே) இ
ல்லையாக, வரும்- (தானே) உண்டாகும்—என-று. (கருத்து.) முன்சுற்றத்
தார்கிப் பின்பிரிந்தவர் மற்றும் சுற்றத்தாராகுதல் காரணமில்லாதி
ண்டாம்-என்பதாம். * பொருந்தாமையின் காரணமாவது - தான்வழிந
ப்பிறடத்தல் - வெறுப்பனைசெய்தல் -இவைமுதலியவைகளால் வருவ
து. இயற்கையாகவே அன்புடையாராகிய சுற்றத்தார்க்குச் சேர்க்கை
யால் வந்தபிரிவு -அச்செயர்க்கையை ஒழிக்க ஒழிதலால் அவர்க்குஅன்
புப்பழையஇயல்பாகவே கிற்குமென்றற்கு வருமென்றார். (க)

உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்த
னிழைத்திருந் தெண்ணிக் கொளல்.

இ-ள்: உழை -(தன்)னிடத்தினின் றும்பிரிந்து-(காரணமில்லாமற்)
பிரிந்துபோய், காரணத்தின்- (பின்பு) காரணத்தினாலே,'வந்தானை -வ
ந்தசுற்றத்தானை, வேந்தன்-இராஜனனவன், இழைத்திருந்து-அந்தக்கா
ணத்தைச்செய்துவைத்து, எண்ணி - ஆராய்ந்து, கொளல் - (தழுவிக்)
கொள்ளக்கடவன்—என-று. (கருத்து.) ஒருவன் காரணமில்லாமற் பிரி
ந்துபோய்ப் பின்பொரு காரணத்தால் வந்தவனை அரசன் ஆராய்ந்து
கொள்ளக்கடவன்- என்பதாம். * சும்மாஉழைப்பிரிந் தென்றமையால்
பிரிதற்குக் காரணமில்லாமை கொள்ளப்பட்டது. வருதற்காரணத்தை
ச்செய்யாதவிடத்துப்பின்னும் பிரிந்துபோய்ப்பகைவரோடு கூடுவா
தலால் இழைத்திருந்தென்றும், அன்பில்லாமற்போய்ப் பின்னுங்கா
ணத்தால் வந்தமையால் எண்ணிக்கொள்ளென்றும், சொல்லினர் பிரி
ந்துபோனசுற்றத்தாருள்-தீமசெய்யப்போய்ப் அதனைவிடவருவா
ம், அதுசெய்யாமற்போய்ப் பின்பு நன்மைசெய்யவருவாரும், தழுவப்
படுதலால்-தழுவுமாறுமுறையே [இவ்விரண்டுபாட்டாலும் சொல்லப்
பட்டது.]
(ஆ)

நிச - ஆம் - அதி - பொச்சாவாமை.

அஃதாவது, அழகும், செல்வமும், ஆற்றலும் முதலானவைகளால் மகிழ்ந்து கன்னெக்காத்துக்கொள்ளுதலிலும், பகையழித்தல் முதலாகியகாரியங்களிலும், மறதிசெய்யாமையாம். முன்சொல்லப்பட்ட சுற்றத்தாரால். பயனுள்ளது - இம்மறதியில்லாவிடத் தாகலால். இது சுற்றந்தழாலின் பின்வைக்கப்பட்டது.

இறந்த வெகுளியிற் தீதே சிறந்த
வுவகை மகிழ்ச்சியிற் சோர்வு.

இ-ள். சிறந்தவுவகை- மிகுந்த அகமலர்ச்சியினது, மகிழ்சசியின்-களிப்பால்வருவதாகிய, சோர்வு-மறதியானது, இறந்தவெகுளியின் - அளவுகடந்த கோபத்திலும், தீதே - (அரசனுக்குத்) தீதேயாம்—என்று (கருத்து.) மிகுமகிழ்ச்சியால் வருமறதியானது அளவு கடந்தகோபத்தைப்பார்க்கிலும் அரசனுக்குக் குற்றந்தரும் - என்பதாம். * மிகுந்தவுவகையாவது பெருஞ்செல்வம் பேரின்பம் பெருமிதம், என்கிற இவைகளால்வருவது அளவு, பகைவனை வெல்லுதலுக்கும், கொடியோனை ஒருத்தலுக்கும், வேண்டுவது, அக்கோபம், ஒரோவிடத்துப் பகைவனையும் கொல்லும், இது அப்படிப்பட்டதல்லாமல் தன்னையேகொல்லுலால் அதனிலும் தீதாயிற்று. (க)

பொச்சாப்புக் கொல்லும் புகழை யறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு.

இ-ள். பொச்சாப்பு - மறதியானது, புகழை - (ஒருவனது) கீர்த்தியை, கொல்லும் - கெடுக்கும், நிச்சநிரப்பு - நித்தியவறுமையானது, அறிவினை - புத்தியை, கொன்றாங்கு - கெடுக்கும்விதம்போல்—என்று. (கருத்து.) தரித்திரமறிவைக் கெடுக்கும் அதுபோலமறதிபுகழைக் கெடுக்கும்-என்பதாம். * நித்தியவறுமை - நினைந்தோறும் யாசகத்தால் வருந்தித் தன்வயிறு நிறைத்தல், எப்படி அந்நித்தியவறுமை அறிவுடையானிடத்தே உண்டாஞல் அவனுக்கு இனிவாவாலும், பாவத்தாலும், இகழ்ச்சியை உண்டாக்கி அவன்கனத்தை அழிக்குமோ அப்படிமறதியும் புகழுடையவனிடத்தே உண்டாயின் அவனுக்குத் தன்னைக்காத்துக் கொள்ளாமையாலும், காரியக்கெடுதியாலும், இகழ்ச்சியை உண்டாக்கி அவன்கனத்தை அழிக்குமென்பதாயிற்று. [இவ்விரண்டுபாட்டாலும் மறதியினது குற்றம்சொல்லப்பட்டது.] (உ)

பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை யதுவுலகத்
தெப்பாலா லோர்க்குந் துணிவு.

இ-ள். புகழ்மை - புகழுடையாராயிருக்குமையானது, பொச்சாப்பார்க்கு - மறந்துகூடப்படுவர்க்கு, இல்லை - இல்லை, அது - அவ்வில்லாமையா

ணது, (இங்ஙனிலுடையவர்க்கு மாத்திரமல்லாமல்) உலகத்து-உலகத்தில், எப்பாலோர்க்கும் - எவ்வகைப்பட்ட நூலுடையவர்க்கும், துணிவு - ஒப்புமுடிந்தது—எ-று. (கருத்து.) புகழ்ச்சிமறதியுடையோர்க்கில்லை இது எல்லா நூலார்க்கும் துணிவுதான்-என்பதாம். * அசலுங் கேயல்லாமல் அறமுதலாகிய நான்கிலும் முயல்பவர் யாவர்க்கும் அவை கூடாமைபினாலே புகழ் இல்லையென்பது தோன்ற- எப்பாலோர்க்கும் துணிவுஎன்றார். (ரு)

அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு.

இ-ள். அச்சமுடையார்க்கு - பயமுடையவர்க்கு, அரண் - (கோட்டை முதலாகிய) அரணைக்களில் (இருந்தாலும்) இல்லை - (அவைகளாலே பயன்) இல்லை, ஆங்கு-அதுபோல், பொச்சாப்புடையார்க்கு- மறதியுடையவர்க்கு, நன்குசெல்வமெல்லாம், (உடையராயிருந்தாலும்) இல்லை (அவைகளாலே பயன்) இல்லை—எ-று. (கருத்து.) பயமுடையவர்க்கு நால்வகையரணைக்களிருந்தும் பயனில்லை, அதுபோல மறதியுடையவர்க்குச் செல்வங்களிருந்தும் பயனில்லை - என்பதாம். * செல்வம், நன்குக்கு ஏதுவாகலால், அதனை நன்கென்றார் எப்படி அச்சமுடையவரை அரணம்அழியுமோ அப்படி மறதியுடையவர் செல்வமும் அழியுமென்பதாயிற்று. (சி)

மூன்றுறக் காவா திழுக்கியான் றன்பிழை
பின்னூ றிரங்கி விடும்.

இ-ன். (வாராமற் காக்கப்படுந் துன்பங்களை) மூன்றுற - (அவை வருதற்கு) மூற்பட- காவாத - (அதிற்று) காவாமல், இழுக்கியான்-மறந்திருந்தவன், பின்-பிற்பு, ஊறு- உற்றகாலத்து, (காக்கக்கூடாமையால்) தன்பிழை - தன்னுடைய அத்தவறு (நினைத்து) இரங்கிவிடும் - இரங்கிவிடுவான்—எ-று. (கருத்து.) துன்பம்வருமுன் காக்காமல் மறந்திருந்தவன் தன்குற்றத்தைக் குறித்தும் பின்விசனப்படுவான்-என்பதாம். * அத்துன்பங்களாவன - மறதிபார்த்துப் பகைவராலே செய்யப்படுவனதுன்பம்-உற்றகாலத்திலே காக்கக்கூடாமையால் இரங்கிவிடுமென்றார். [இவைமூன்றுபாட்டாலும் மறதியுடையவர்க்குவரும் துன்பம் சொல்லப்பட்டது.] (இ)

இழுக்காமை யார்மாட்டு மென்றும் வழுக்காமை
வாயி னதுவொப்ப தில்.

இ-ன். (அரசர்க்கு) இழுக்காமை - மறவாமையான தும், யார்மாட்டும்-யாவரிடத்தும், என்றும் - எக்காலத்திலும், வழுக்காமை - ஒழிவில்லாமல், வாயின்-நோக்குமாயின், அது-அதனை, ஒப்பது-ஒக்குமன்மை

யானது, இல்- இல்லை—எ-று. (கருத்து.) யாவரிடத்து மறையில்லாமை வாய்க்குமாறு- லதற்கொப்பொன்று மில்லை-என்பதாம். * தொழில்செய்வோர- சுற்றத்தார்-என்கிற தம்மவரிடத்தும் சமமாகவேண்டுதலால்-யார்மாட்டுமென்றும், தன்பெருக்கக்காலத்திலும் சுருக்கக்காலத்திலும் சமமாகவேண்டுதலால் - என்றுமென்றும், எல்லாக்காரியங்களிலும் சமமாகவேண்டுதலால்-வழுக்காமையென்றும் சொல்லினர். (சு)

அரியவென் றாகாத வில்லை பொச்சாவாக்
கருவியாற் போற்றிச் செயல்.

இ-ள். அரியவென்று- (இவை) அரியவையென்று சொல்லப்பட்டு, ஆகாத- (ஒருவனுக்கு) முடியாதகாரியங்கள், இல்லை - இல்லையாகும், பொச்சாவா- மறவாத, கருவியால்- மனத்தினாலே, போற்றி - எண்ணி, செயின் - செய்தால்—எ-று. (கருத்து.) மறவாத மனத்தாலாலோசித்துச் செய்தால் அரசனுக்கரியவை யொன்றுமில்லை - என்பதாம். * அந்தக்காரணமாதலால் - மனத்தைக் கருவியென்றார். இடைவிடாத நினைவும் தப்பாத எண்ணமும் உடையவர்க்கு எல்லாம் எளிதின் முடியுமென்பதாம். [இவை இரண்டுபாட்டாலும் மறவாமையினது சிறப்புச் சொல்லப்பட்டது.] காரணம்-காரணம். (எ)

புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டுஞ் செய்யார்
இகழ்ந்தார்க் கெழுமையு மில்.

இ-ள். புகழ்ந்தவை - (நீதிநூலுடையாரால் இவை அரசர்க்கு உரியவையென்று) உயர்த்திச்சொல்லப் பட்டசெயல்களை, போற்றி- முடிவுபற்றி, செயல்வேண்டும் - செய்யக்கடவர், செய்யாது (அப்படி) செய்யாமல், இகழ்ந்தார்க்கு-மறந்தவற்கு, எழுமையும்-எழுபிறப்பிலுமவரும்மை- இல்-இல்லை, (ஆதலால்)—எ-று. (கருத்து.) மேலானவற்றையுஞ்சொண்ணிச் செய்யக்கடவர் செய்யாது மறந்தவர்க்கெழுபிறப்பிலுமிலமையில்லை - என்பதாம். * அச்செயல்களாவன மூவகை ஆற்றலும், மூவகையுபாயமும், ஐவகைத்தொழிலும், அறுவகைக்குணமும், மூவகைச்செயல்கள், சாதி தருமமாகிய இவைகளில்வழுவிய அரசர்க்கு நிலைக்கமே உள்ளதாகலால் - எழுமையுமில்லை யென்றார். எழுமை-ஏழுபெயர். [இதனால் மறவாதுசெய்ய வேண்டுமவைகள் சொல்லப்பட்டன.] (அ)

இகழ்ச்சியிற் கெட்டானை யுள்ளுக நாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.

இ-ள். (அரசர்) தம்மகிழ்ச்சியின்- தம்து மகிழ்ச்சியினிடத்து, மைந்துறும்போழ்து - தாம்செருக்குறும்பொழுது, இகழ்ச்சியின் (மூலத்திலே அதனால் ஆகிய) மறதியினாலே, கெட்டானை - கெட்டவனை, உள்ளுக-நினைக்கக்கடவர்—எ-று. (கருத்து.) அரசர்செல்வத்திலே

மகிழ்ச்சியெய்தியும்போது முற்காலத்திலே மகிழ்ச்சியிலே மறதியடைந்தவர்களை நினைக்கக்கடவர்-என்பதாம். * மகிழ்ச்சிக்குக்காரணமாயுள்ளவைகளோடு அவர்க்கு உண்டாகிய உரிமையை மகிழ்ச்சிமேலேற்றி தம்மகிழ்ச்சியினென்றும். இகழ்ச்சியும் கேடும் உடன்றோன்றுமாகலால் மகிழ்ச்சியின் மைந்துறும், போழ்தென்றும் சொல்லினர், கெட்டானை நினைக்கவே காரும் அப்படியே கெடுவோமென்று அதனிடத்தே செருக்குறுவென்பது கருத்து. (கூ)

உள்ளிய தெய்த லெளிதுமன் மற்றுந்தா
னுள்ளிய துள்ளப் பெறின்.

இ-ள். (அரசனுக்கு) உள்ளியது-(தான்பெற) நினைத்தபொருளை, எய்தல்-(அந்நினைத்தபடியே) அடைதல், எளிதுமன்-எளிதாகும், மற்றும்-பின்னும், தான்-தான், உள்ளியது-அந்நினைத்தபொருளையே, உள்ளப்பெறின்-நினைக்கக்கூடுமானால்—என்று. (கருத்து.) அரசநினைத்தபொருளை நினைக்கக்கூடுமானலப்பொருளை யடைதலெளிதாகும்-என்பதாம். * அது கூடாதென்னும் ஒழிந்த சொற்பொருளைக் காட்டலால்மன்-ஓருயிசையிலேலவந்தது-இசையென்பதுசொல். அதனையே நினைத்தலாவது மறத்தலாவது மறதியில்லாமல் அதனிடத்தே முயற்சி செய்தல், [இவை இரண்டுபாட்டாலும் மறவாமைக்கு உபாயஞ் சொல்லப்பட்டது.] (உ)

நிநி-ஆம்-அதி-செங்கோன்மை.

———*———

அஃதாவது, அரசனாலேசெய்யப்படுமுறையினது தன்மை. அந்தமுறையானது ஒருபக்கத்திலே சாயாமற்செவ்வையாகியகோல் போலுத்தலாலே செங்கோலெனப்பட்டது. அதுமறதியில்லாத அரசனாலே செய்யத்தக்கதாகலால் இதுபொச்சாவாமையின் பின்வைக்கப்பட்டது.

ஓர்ந்துகண்ணோடா நிறைபுரிந்தியார்மாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே முறை.

இ-ள். (தன்கீழ் வாழ்வோராலே செய்யப்பட்டகுற்றத்தை) ஓர்ந்து-நாடி, யார்மாட்டும்-யாவரிடத்தும். கண்ணோடாது-முகங்கொடாமல், இறைபுரிந்து, நடுவுநிலைமையைப்பொருந்திதேர்ந்து-(அக்குற்றத்துக்குச் சொல்லப்பட்ட தண்டத்தை நூலோரோடும்) ஆராய்ந்து, செய்வஃதே-அவ்வளவின்றாகச்செய்தலே, முறை-செங்கோலாம்—என்று. (கருத்து.) அரசன்குற்றத்தையாராய்ந்து எல்லாரிடத்தும் நடுவுநிலைமையைப்பொருந்தி யாசாள்வதே செங்கோலாம்-என்பதாம். * நடுவாய்மை இறை என்கிற அரசனுக்குரியல்பாகலால் அதனை இறையென்றார்.

உயிரினும் சிறந்தவரிடத்தும் என்றற்கு - யார்மாட்டுமென்றும்; சொல்லினர், இறைமை-இறை-ஏ-ம், செய்வது-செயவஃது-ஏ-ம். விகாரப்பட்டன, [இதனுலேசெங்கோன்மையினது இலக்கணம்சொல்லப்பட்டது.]

வானேக்கி வாழு முலகெல்லா மன்னவன்
கோனேக்கி வாழுங் குடி.

இ-ள். உலகெல்லாம்- உயிர்க்ளெல்லாம், வானேக்கி - மழையை நோக்கி, வாழும்-வாழும், (என்றாலும்) குடி-குடிகளானவை, மன்னவன்-அரசனது, கோனேக்கி- செங்கோலேநோக்கி, வாழும்-வாழும்-என்-று. (கருத்து.) உயிரினத்து மழையைநோக்கிவாழும், குடிகளினத்தும் அரசன்செங்கோலேநோக்கிவாழும்- என்பதாம். * வானலாகிய உணவை வானென்றும் கோலாலாகிய ஏமத்தைக்கோலென்றும், சொல்லினர். அவ்வேமம் இல்லாதவிடத்தே உண்வு உளதாயிருந்தாலும் குடிகளுக்கு அதனலே பயன் இல்லை என்பதாம். (உ)

அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல்.

இ-ள். மன்னவன்கோல்-அரசன்செங்கோலானது, அந்தணர் நூற்கும-அந்தணர்க்கு உரித்தாகியவேதத்திற்கும், அறத்திற்கும் - (அதனலேசொல்லப்பட்ட) தருமத்திற்கும், ஆதியாய் - காரணமாகி, நின்றதனலேயெற்றது—என்-று. (கருத்து.) வேதத்திற்கும் தருமத்திற்குங்காரணமாகிநின்றது அரசன்செங்கோலாம்-என்பதாம். * வேதமும், அறமும், ஏதியாயினும் செங்கோல் இல்லாதவிடத்து நடவாதாகலால் அதனவைகளுக்கு ஆதியென்றும், அப்பெற்றியே தனக்கு ஆதியாவதுவேறென்றும் இல்லையென்றற்கு நின்றதென்றும், சொல்லினர், [இவை இண்டுபாட்டாலும் செங்கோலது சிறப்புச்சொல்லப்பட்டது.] (ஊ)

குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்ன
னடிதழீஇ நிற்கு முலகு.

இ-ள். உலகு-உலகத்தார், குடிதழீஇ-(தன்) குடிகளையும்அணைத்து, கோலோச்சும்-செங்கோலையும் செலுத்தும், மாநிலமன்னன் பெருமவேந்தனது, அடிதழீஇ-அடியைப்பொருந்தி, நிற்கும் - நிற்பார்—என்-று. (கருத்து.) உலகத்தார் - குடிகளைத்தழுவி அரசனடியைப் பொருந்திநிற்பார்-என்பதாம். * அணைத்தல்- இன்சொற்சொல்லுதலும், தார்ந்தவிடத்து வேண்டுமனவு கொடுத்தலும். முதலானவை. இவ்விரண்டும் தப்பாமற்செய்பவன் நிலமுழுதும், ஆள்வானுகையால் அவனை நிலமன்னனென்றும், அவனிடத்தில் யாவரும் நீங்காத அன்புண்டாவதாகலால்-அடிதழீஇ நிற்குமுலகென்றும், சொல்லினர். (எ)

இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு.

இ-ள். பெயலும்-பருவமழையும், விளையுளும் (குறையாத) விளைவும், தொக்கு-கூடி, இயல்புளி - (நூல்களாலேசொல்லப்பட்ட) இயல்பால், கோலோச்சும்-செங்கோலைச்செலுத்தும், மன்னவன்-அரசனது, நாட்டு-நாட்டிலுள்ளனவாம்—என-று. (கருத்து.) நீதிமன்னன்நாட்டிலேமழையும் விளைவுநிறைந்திருப்பனவாம்-என்பதாம். * அவனதுநாட்டிலேவானமும் நிலமும்சேர்ந்தொழிற்பட்டு வளஞ்சுரக்குமென்பதாம். (இ)

வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்.

இ-ள். மன்னவன்-அரசனுக்கு, வென்றிதருவது (போரில்) வெற்றியைத்தருவது, வேலன்று-(அவனெறியும்) வேற்படையன்றுகும், கோல்-(அவனது) செங்கோலாகும், அதூஉம்-அக்கோலும், (அப்படிப்பட்டதர்வது) கோடாதெனின் (தான்) கோணாதிருக்குமாயின்-என-று (கருத்து.) அரசனுக்குவேல் வெற்றியைத்காாது செங்கோல் வெற்றியைத்தரும்-என்பதாம். * கோல் செம்மையாயிருக்கின்றவிடத்தேயே ஸ்பயன்படுமென்றற்கு வேலன்று வென்றிதருவது கோலென்றார்.(சு)

இறைகாக்கும் வையக மெல்லா மவனை
முறைகாக்கு முட்டாச் செயின்.

இ-ள். இறை-அரசனாயவன், வையகமெல்லாம் - பூமிமுழுதும், காக்கும்-காப்பாற்றுவான், முறை (அவனது) செங்கோலானது, அவனை-அவனை, காக்கும்-காப்பாற்றுவதாகும், முட்டாச்செயின் - முட்டாமற் செலுத்துவானாயின்—என-று. (கருத்து.) அரசன் பூமியைக்காப்பான், செங்கோலவனைக்காக்கும் - என்பதாம். * முட்டாமற் செங்கோல் செலுத்தியவிதத்தை மகனைத் தேர்க்காலில் வைத்தூர்ந்த, சோழனுடத்தும், அயலார் வீட்டுக்கதவைத்தட்டிய தன் கையைக்குறைத்த பாண்டிய னிடத்தும், காண்க. [இந்நான்கு பாட்டாலும் செங்கோல் செலுத்தியவன் அடையும்பயன் சொல்லப்பட்டது.] (எ

எண்பதத்தா னோரா முறைசெய்யா மன்னவன்
றண்பதத்தாற் றானே கெடும்.

இ-ள். (வழக்கறிவிப்பவர்க்கு) எண்பதத்தான் - எளிதானசமயத்தையுடையவனாகி, ஓரா (அவரால் அறிவிக்கப்பட்ட வைகளை நூலோடுபலரோடும்) ஆராய்ந்து, முறைசெய்யா (நின்ற உண்மைக்கு ஒப்பா) முறைசெய்யாத, மன்னவன்-அரசன், தண்பதத்தால் - தாழ்ந்த பதத்திலேநின்று, தானேகெடும்-தானேகெடுவான்—என-று. (கருத்து.) எ

சமயமுடையவனுகியாராய்ந்து முறைசெய்யாத் மன்னன் தானேகெடு வான்-என்பதாம். * காழ்த்தபதம், பாவமும், பழியும், அண்டாந்து நிற் கும் நிலை. அல்லனவை செய்தார்க்கு அறங்கூற்றமாகலால் பகைவரில்லா திருந்தாலும் தானே கெடுமென்றார். [இதனுல் முறைசெலுத்தாதவன தது கேடுசொல்லப்பட்டது.] (அ)

குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடிவன்று வேந்தன் றொழில்.

இ-ள். குடி-குடிகளை, புறங்காத்து - பிறர்வருத்தாமற்காத்து, ஓம் பி-தானும்வருத்தாமல் ஆகாவுசெய்து, குற்றம் (அவரிடத்திலே) - குற்றம் உண்டானுல், கடிதல்-(அதனைத்தீர்க்கும்படி) தண்டித்தல், வேந்தன்றொழில்-அரசனது தொழிலாம், (ஆதலால்)—வடுவன்று - பழியா காது—என்று. (கருத்து.) குடிகளைக்காத்துக் குற்றங்கடிதல் அரசனது தொழிலாம்-என்பதாம். * துன்பஞ்செய்தல் - பொருள்வாங்கல் - கொல்லுதல்-என-ஒறுப்பு என்கிறதண்டம்மூன்றும், அவைகளுள் இங்கே சொல்லப்பட்டவை - குற்றங்கடிதலென்றதனுல் முன்னைய விரண்டுமாம். தன்கீழ்வாழ்வானை ஒறுத்தல் - அறனல்லாமையால் வடுவாமென்ப தனை ஆகூபமாக்கிக்கொண்டு அது அரசனுக்கு அவனை அக்குற்றத் தினீக்கிப் பரிசுத்தராக்குதலால் - சாதி தருமமென்றார். (கூ)

கொலையிற் கொடியானை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்.

இ-ள். வேந்து-அரசனுனவன், கொடியானை- கொடியவனை, கொ லையின்-கொலையினுலே, ஒறுத்தல் - தண்டித்து (நல்லோனைக் காப்பாற் றல்)—(உழவனுனவன்)—பைங்கூழ் - பயிரை, களைகட்டதனொடு - க ளையைக்களைந்து காப்பாற்றலோடு, நேர்-ஒக்கும்—என்று. (கருத்து.) அ ரசன்கொடியவனைத் தண்டித்து நல்லவனைக் காத்தல் உழவன் பயிர்க் குக்களையெடுத்தல்போலாம்-என்பதாம். * கொடியோர் - தீக்கொளுவு வோர் - நஞ்சிடுவோர்-படையிற்கொல்வோர்- கள்வர் - வழியலைப்போர்- கொள்ளையிடுவோர் பிறனில்லாளை விரும்புவோர் இவர் முதலாயினோ கள். இப்படிப்பட்டவனை அரசன் கொல்லாதவிடத்துப் புல்லுக்களை நுகு அஞ்சாநின்ற பயிர்போன்று பலவருத்தங்களை அடைந்து உலகத் தார் துன்பப்படுவார். [இவை இரண்டுபாட்டாலும் செங்கோல் செலு த்தும் அரசனுக்குத் தீயோரிடத்துமூவகைத்தண்டமும் செய்யவேண்டு மென்பது சொல்லப்பட்டது.] (ட)

நூசு-ஆம்-அதி- கொடுங்கோன்மை.

'அஃதாவது, அம்முறையினது கோணுதற் றன்மையாம், செங்கோன்மைக்கு மாறுகலால் இது அதன்பின்வைக்கப்பட்டது.

கொலைமேற்கொண் டாறிற் கொடிதே யலைமேற்கொன்
டல்லவை செய்தொழுகும் வேந்து.

இ-ள். அலை-(பொருளை விரும்பிக்குடிகளை) அலைத்தற்றொழிலை, மேற்கொண்டு- (தன்) மேற்கொண்டு, அல்லவை= முறையல்லாதவைகளை, செய்து-செய்து, ஒழுகும் - நடக்கும், வேந்து-அரசனைவன், கொலை-(பகைமைபற்றிக்கொல்லுதற்றொழிலை, மேற்கொண்டாரின் - (தம்) மேற்கொண்டு நடப்பவரினும், கொடிதே-கொடியவனேவன்—எ-று. (கருத்து.) அநியாயஞ்செய்யுமரசன் - கொலைசெய்பவரிலுங் கொடியன்-என்பதாம். * அவர்செய்வது ஒருநாளைத்துன்பம் - இவன்செய்வது எக்காலும் துன்பமாமென்பதுபற்றி அவரினும் கொடியனென்றார் அலைத்தல்-கொலையினும் கொடியதென்பதாயிற்று. (க)

வேலொடு நின்ற னிடுவென் றதுபோலுங்
கோலொடு நின்ற னிரவு.

இ-ள். கோலொடு-ஒறுத்தற்றொழிலோடு, நின்றான் = நின்றவரசன், இரவு(குடிகளைப்பொருள்) வேண்டுதலான தது. வேலொடு - வேலாயுதத்தோடு, நின்றான் - (வழியில் அலைத்துப்பறிக்கு மிடத்துத்தனியே) நின்றகள்வன், இடுவென்றதுபோலும் - (வழிப்போக்கனைநோக்கி உன் கைப்பொருளைத்) தாவென்று வேண்டுதல்போலும்—எ-று. (கருத்து.) கொடுங்கோலரசன் குடிகளை வருத்திப் பொருள் வேண்டுதல் வழிப்போக்கனைக் கள்வன் வருத்திப்பொருள்கொடு வென்றல்போல்-என்பதாம். * வேலொடு நின்றானென்றதனாலே பிறரொடு நில்லாமையும், இரவென்றதனாலே - குடியிறையல்லாமையும், கொள்ளப்பட்டன; தாக்கால் - தண்டிப்பேனென்னும் குறிப்பின்மையால் இரந்துவாங்குதலும் கொடுங்கோன்மை யாயிற்று. [இவ்விரண்டுபாட்டாலுங் கொடுங்கோன்மையினது குற்றம்சொல்லப்பட்டது.] (உ)

நாடொறுநாடி முறைசெய்யா மன்னவ
னாடொறு நாடு கெடும்.

இ-ள். நாடொறும்-நாள்தோறும், நாடி- (தன்னுட்டிலேதோன்றும் தீமைகளை) ஆராய்ந்து, முறை-முறைமையை, செய்யா - (அதற்குத்தக்கச்) செய்யாத, மன்னவன்-அரசன், நாடொறும்-நாள்தோறும், நாடு கெடும்-நாடிழப்பான்—எ-று. (கருத்து.) தன்னுட்டிற்குற்றங்களையாய்ந்து நீதிசெலுத்தாதமன்னன்-தன்னாட்டையிழப்பான்- என்பதாம். *

நாடுஉறுப்பாகலால் அதன்கெடுதல் அவன்மேல்நின்றது. இழத்தல்-பயன்அடையாமை. (கூ)

கூழுஞ குடியு மொருங்கிழக்குங் கோல்கோடிச்
சூழாது செய்யு மரசு.

இ-ள். சூழாது - (மேல்நிலைவை) எண்ணாதுவிடல், கோல்கோடி- முறைதப்ப, செய்யும் - செய்யும், அரசு - அரசனானவன், (அச்செயலால்) கூழும் - (முன்னேசம்பாதிக்கப்பட்ட) பொருளையும், குடியும் - பிள்ள (அதுசம்பாதிக்கைக்கு ஏதுவாகிய) குடிகளையும், ஒருங்கு - ஒருசேர, இழக்கும்- இழப்பான்—எ-று.(கருத்து.) மறுமைநிதப்பிவரசாளுமரசன்பொருளையுங் குடிகளையுமிழப்பான்-என்பதாம், * கோடியென்னுப்விணையெச்சம்கோடவென்னுமவினையெச்சப்பொருளில்வந்தது. முன்சம்பாதிக்கப்பட்டபொருளைஇழத்தற்கு ஏதுவருகிறபாட்டாற்சொல்லுகிறார். (எ)

அல்லற்பட்டாற்று தழுவகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

இ-ள். செல்வத்தை- (அரசன்) செல்வமாகிய (மரத்தை) —தேய்க்கும்- குறைக்கும், படை - வாளாவது,(அவன்) முறைசெய்யாமையினாலே—அல்லற்பட்டு - (குடிகள்) துன்பப்பட்டு, ஆற்றாது - (அதனைப்) பொறுக்கமாட்டாமல், அழுதகண்ணீரன்றே - அழுதகண்ணீரல்லவோ—எ-று. (கருத்து.) குடிகளழுதகண்ணீரல்லவோ கொடுங்கோல்வேந்தன் செல்வத்தையறுக்கும் வாளென்பதாம. * அல்லற்படுத்தியபாவத்தினது தேய்தல் அதற்கு ஏதுவாகிய கண்ணீர்மேல் நின்றது. அக்கண்ணீரைக்காட்டிலும் கொடியபாதிப்பில்லாமையால் செல்வத்தடிதிலே தேயுமென்பது கருத்து.(ஏகதேசவுருவகவணி.) (ஞ)

மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃதின்றேன்
மன்னுவா மன்னர்க் கொளி.

இ-ள். மன்னர்க்கு - அரசர்க்கு - மன்னுதல் -(புகழ்களாலே)நிலைபெறுதல், செங்கோன்மை - செங்கோன்மையினால் (ஆகும்)—அஃதாவது- அச்செங்கோன்மை, இன்றேல் - இல்லையாயின், மன்னர்க்கு-அரசர்க்கு, ஒளி - அப்புகழ்களானவை, மன்னுவாம் - உண்டாகாவாம்—எ-று. (கருத்து.) அரசர்க்குச்செங்கோன்மையே புகழ்களாம். அஃதில்லாவிடிலப்புகழ்க ளுண்டாகாவாம் - என்பதாம், * மன்னுமை-ஒருபோதும் நிலையாமை. பழிக்கப்பட்டால் புகழ்நிலையாமையால் தாமும்நிலையாவென்பதாயிற்று. வெற்றிக்கொடைமுதலாகியவதுக்களால் புகழ்பலவுமைப்பதிதலால் மன்னு எனப்பன்மையாற் சொல்லினர். அப்புகழ்களெல்லாம். செங்கோன்மையில்லாதவிடத்து இல்லையாமென்பதாம். [இவை

நான்குபாட்டாலும் கொடுங்கோன்மையான் அடையும் குற்றம் சொல்லப்பட்டது.] (சூ)

துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்த
னளியின்மை வாழு முயர்க்கு.

இ-ள். வேந்தன் - அரசனது, அளியின்மை-அருளில்லாமையான தது, வாழும் - (அவனுட்டிலே) வாழும் உயிர்க்கு - குடிகளுக்கு, துளி-மழையினது, இன்மை - இல்லாமையானது, ஞாலத்திற்கு-பூமியில்வாழு மூயிர்களுக்கு, எற்று - எவ்வகைத்துன்பந்தருமோ, அற்றே-அவ்வகைத்துன்பமதரும்—என்று. (கருத்து.) மழையில்லாமை துன்பந்தரும், அதுபோல அரசனருளில்லாமை குடிகளுக்குத் துன்பந்தரும் - என்பதாம். * உயிரென்றது குடிகளை முன்வாழ்வுக்கு வாழுமென்றதனை: எதிர்மறமுகத்தாற்சொல்லியபடி. (எ)

இன்மையி னின்ன துடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின்.

இ-ள். முறைசெய்யா-முறையைச்செய்யாத, மன்னவன் - அரசனது, கோற்கீழ் - கொடுங்கோலின்கீழ், படின் - வாழின், (யாவர்க்கும்) உடைமை-(பொருளுடைமையானது, இன்மையாயின்-இல்லாமையினும் இன்னதாயிற்று, [இவை இரண்டுபாட்டாலும் அவனுட்டுவாழ்வார்க்கு வரும்குற்றஞ்சொல்லப்பட்டது.] (அ)


முறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி
யெல்லாது வானம் பெயல்.

இ-ள். மன்னவன் அரசன், முறைகோடி -முறைதப்பி, செய்யின் -(பொருளைச்) சம்பாதிப்பானாயின், (அவனதுநாட்டிலே) உறை - பருவமழையானது, கோடி - இல்லாமற்போக, வானம் - மேகமானது, பெயல் - பொழிதலை, எல்லாது - பொருந்தாது—என்று (கருத்து.) அரசன்முறைதப்ப வரசாளிலவநாட்டிலே மழைபெய்யாது - என்பதாம். * பருவமழையில்லாமைக்கு ஏதுவருகின்ற பாட்டாற்சொல்லுகின்றார். கோடி எனவந்த இரண்டுசொற்களும் கோடலென்னுஞ் சொற்பொருளில்வந்தன. (கூ)

ஆபயன் குன்று மறுதொழிலோர் நான்மறைப்பர்
காவலன் காவா னெனின்.

இ-ள். காவல் - காப்பாற்றற்குரிய அரசன், காவானெனின்-(உயிர்களைக்) காப்பாற்றாஞயின், (அவனதுநாட்டிலே) ஆ-பசுக்களும், பயன்குன்றும் -பால்சுரங்காதும், அறுதொழிலோர் - அந்தணரும், நூல் - நூல்களை, மரப்பர்-மறந்துவிடுவார்—என-று. (கருத்து.) அரசன் உயிர்களைக் காவாவிடிலவனுட்டிற் பசுக்கள் பால்சுரங்காதும், வேதியர்-வேதமறப்பர் - என்பதாம். * ஆபயன் - ஆவினின்றுங் கொள்ளப்படும்பயன் அறுதொழிலாவன, வேதமோதல் - ஓதுவித்தல் - யாகஞ்செய்தல் - செய்வித்தல் ஈதல் - ஏற்றல்-என்பவை. பால்குறைதலாலும், நூன்மறத்தலாலும், தேவர்க்குயாகம் நடவாமையால் மழைபெய்யாதென்பதாயிற்று. [இவைஇரண்டுபோட்டாலும் அவனுட்டில் உண்டாங்குற்றம் சொல்லப்பட்டது.] (1)

நான்-ஆம்-அதி-வெருவந்தசெய்யாமை.



அஞ்சாதது, குடிகள்அஞ்சுவதும், பகுதியென்று சொல்லப்படுகிற மந்திரிமுதலாகிய அங்கங்கள் அஞ்சுவதும், தான் அஞ்சுவதும், ஆகியவதாழில் களைச்செய்யாமை. அவைசெய்தல் கொடுங்கோன்மையிலே சேர்தலால் இது அதன்பின்வைக்கப்பட்டது.

தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தா
லொத்தாங் கொறுப்பது வேந்து.

இ-ள். (ஒருவன் மெலியவனுக்குத் தீங்குசெய்தவிடத்து) தக்காங்கு-நடுவாய்நின்று, நாடி - (அதனை)ஆராய்ந்து, தலைச்செல்லாவண்ணத்தால்-(பின்னும்) அப்படிப்பட்ட காரியத்திலே செல்லாமற்பொருட்டு, ஒத்தாங்கு - (அக்குற்றத்துக்கு) ஏற்க, ஒறுப்பது - (அவனை) தண்டிப்பவனே, வேந்து - அரசனுலாம்—என-று.(கருத்து)நடுவாய்நின்று ஒருவன்குற்றத்தை யாராய்ந்து தக்கப்படி தண்டிப்பவனேயரசன்என்பதாம். * இதனுலே தகுந்ததண்டம் நாடாமையும். வேறொருகாரணம் பற்றி அதிகமாகத்தண்டித்தலும், குடிகள் அஞ்சுந்தொழிலாதல் பெற்றும்.()

கடிதோச்சிமெல்ல வெறிக நெடிதாக்க
நீங்காமை வேண்டு பவர்.

இ-ள். ஆக்கம் - செல்வமானது. நெடிது-நெடுங்காலம், நீக்காமை நீக்காமையை, வேண்டுபவர் - விரும்புவோர், கடிதோச்சி- (அத்தகுந்தண்டம்செய்யத் தொடங்கும்போது) அளவுகடக்கச் செய்பவர்போலே தொடங்கி, மேல்லவெறிக, (செய்யும்போது) அளவுகடவாமற்செலுத்தக்கடவர்—என-று. (கருத்து.) செல்வம் வேண்டுவோர் வலியதண்ட

ன்செய்பவர்போலத்தொடக்கி மெலியதண்டனைசெய்க்கடல்வர் - என் பகாம். * கடிதோச்சல் - குற்றஞ்செய்வார் அகனை அஞ்சுசற்பொருட் டும்; மெல்லவெறிதல்யாவரும் அஞ்சாமைப் பொருட்டும், ஆம், தொட க்கினவளவுக்குங் குறைதல்பற்றி - தருங்கதண்டஞ்செய்தலே மெல்லவெ ன்றார். ஓச்சுதல - எறிதல் - இரண்டும் உலமைபற்றிவந்தன [இனை இ ரண்டுபோட்டாலும் குடிகள் அஞ்சுவன செய்யாமையினது இலக்கணம் சொல்லப்பட்டது.] (உ)

வெருவந்த செய்தொழுகும் வெங்கோலனயி
னொருவந்த மொல்லைக் கெடும்.

இ-ள். (அரசன்) வெருவந்த - (குடிகளால்) அஞ்சப்பட்டசெயல்க ளை, செய்து - செய்து, ஒழுகும்-நடக்கும், வெங்கோலனாயின்- கொடு ங்கோலனாயிருந்தால், ஓருவந்தம்-நிச்சயமாகவே, ஒல்லை - கடிதில், கெ டும் - (அவன்) கெடுவான்—எ-று. (கருத்து.) குடிகளஞ்சுதக்கவற் றைச் செய்யுங்கொடுங்கோலரசன் விரைவிற்கெடுவான்-என்பதாம். * அச்செயல்களும் கேடும் பின்னே சொல்லப்படும். (ங)

இறைகடிய னென்றுரைக்கு மின்னாச்சொல் வேந்த
னுறைகடுகி யொல்லைக் கெடும்.

இ-ள். இறை - (நம்) மரசனானவன், கடியனென்று-பொல்லாதவ னென்று, உறைக்கும் - (குடிகளாலேசொல்லப்படுகிற்) இன்னாச்சொ ல - துன்பந்தருஞ்சொல்லையுடைய, வேந்தன் - அரசன், உறைக்குறு கி. ஆயுளுங்குறைந்து, ஒல்லை கெடும் -(செல்வமும்) கடிதினிழப்பான் —எ-று. (கருத்து.) கொடியனென்றுசொல்லப்பட்ட கொடுங்கோலர சன் ஆயுள்குறைந்து செல்வமிழப்பான் - என்பதாம், *ஆயுள்குறைத லாவது - அச்சொல்லில்லாதவர்க்கு உள்ளதிலே குறைதல். (ச)

அருஞ்செவ்வி யின்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்ன துடைத்து.

இ-ள். அருஞ்செவ்வி - (தன்னைக்காணவேண்டுவோர்க்கு) அரிதா கிய சமயத்தையும், இன்னாமுகத்தன் - (கண்டால்) இனிமையில்லா த முகத்தையும் உடையவனது, பெருஞ்செல்வம்-பெரியசெல்வம், பே எய் - பேயால், கண்டதன்னது-காணப்பட்டது பொல்வதொருகுற்றத் தை, உடைத்து-உடையதாகும்—எ-று. (கருத்து.) அரியசமயத்தையு ம் கடியமுகத்தையுமுடைய அரசன்செல்வமானது பேய்கண்டசெல் வம்போலாம் - என்பதாம். * எனவே இவைஇரண்டும் அஞ்சுவன செ ய்தலாயிற்று. இவைசெய்வானை ஒருவரும் சேராமையால் அவன்செல் வம் தனக்கும்பிறருக்கும் பயன்படாதென்பது பற்றிப்பேய்கண்டன்ன. துடைத்தென்றார்: காணுதல் தன்வசமாக்கல். (ஞ)

கடுஞ்சொல்லன் கண்ணில னெடுஞ்செல்வ
நீடின்றி யாங்கே கெடும்.

இ-ள். (அரசன்) கடுஞ்சொல்லன் - கடியசொல்லையுடையவனும், கண்ணிலன் - கண்ணோட்டமில்லாதவனும்; ஆயின்-ஆனால், நெடுஞ்செல்வம் - (அவனது) பெரியசெல்வமானது; நீடின்றி-நீடுதலில்லாமல், ஆங்கே - அப்பொழுதே, கெடும்-அழியும்—என-று. (கருத்து.) அரசன் வன்சொல்லுடையவனு மிரக்கமில்லாதவனுமாயின் அவன்செல்வம் விரைவி ம்-என்பதாம். * வேட்டங்கடுஞ்சொன் மிகுதண்டஞ்சூது பொருளிட டங்கள் காமமோடேழு என்னப்பட்ட விளைகளுள், கடுஞ்சொல்லையும், மிகுதண்டத்தையும் இவர் அச்சஞ்செய்தலுள் அடக்கினர், இவைசெ ய்தபொழுதே கெடுத்து சிறுமையதல்லதாயினு மென்றற்கு நெடுஞ்செ ல்வமென்றார். (சு)

கடுமொழியுங் கையிகந்த தண்டமும் வேந்
னெடுமுரண் டேய்க்கு மரம்.

இ-ள். கடுமொழியும் - கடியசொல்லும், கையிகந்ததண்டமும்-(குற்றத்தின்) மிகுந்ததண்டமும், வேந்தன்-அரசனது, அடும்-(பண்பு)லை லுதற்கு ஏற்ற, முரண்-மாறுபாடாகிய (இரும்பை)—தேய்க்கும் -தேய்க்கின்ற, அரம்-அறுக்களாம்—என-று. (கருத்து.) வன்சொல்லும் அதி கதண்டமும் அரசன்பலங்களை யழிக்கும் அரங்களாம் - என்பதாம். * கடியசொல்லாற் சேனையும் அதிகதண்டத்தினாலே தேசமும், கெட்டு மாறுபாடு சுருங்கிவருதலால் அவைகளை அரமாக்கினர் (ஏகதேசவுரு வகம்) [இவைஐந்துபாட்டாலும் சமயமில்லாண்மை இன்னாமுகமுடை மை கண்ணோட்டமில்லாமை கடுஞ்சொற்சொல்லல் அதிகதண்டம் இ வைகள் குடிகள் அஞ்சுந்தொழில்களென்பதும், இவைசெய்தவன் ஆ யுளும் பகைவெல்லுமுரணும் செல்வமும் இழக்கு மென்பதும், சொ லலப்பட்டன.] (எ)

இனந்தாற்றி யெண்ணாத வேந்தன் சினந்தாற்றிச்
சீறிற் சிறுகுந் திரு.

இ-ள். (காரியவெண்ணத்தை) இனந்தாற்றி - மந்திரிகளிடத்தே வைத்து, எண்ணாத - (அவரோடுதானும்) எண்ணிச்செய்யாத, வேந்தன்-அரசன், (தன்காரியந்தப்பியவிடத்து) சினந்தாற்றி,(தன்னைக்) கோபத்திலேசெலுத்தி, சீறின் -(அவரைக்) கோபிப்பானாயின், திரு-(அவனது) செல்வமானது, சிறுகும் - (நாடோறும்) சுருங்கும்—என-று. (கருத்து) காரியங்களை மந்திரிகளுக்கொப்பித்து அவரோடெண்ணிச்செய்யாத அரசன் அம்மந்திரிகளைக் கோபிக்கிலவன் செல்வங்கெடும்- என்பதாம். * இராச்சியபாரத்தைதந் தாங்கிச்செலுத்துதற் லொப்புமையால் மந்திரிகளை இனமென்றும், அந்தவுறுதன்னைதெரிந்தாமல் மேல்

எற்றிக்கோடித்தல் அவர் அஞ்சி நீக்குவராதலால் அச்தவறுதீருமும், அப்பாவம் இனிது செலுத்தும்விதமும், இலஞமென்பது சேர்த்திக் திருகிறுகுமென்றும், சொல்லினர். [இதனால் மந்திரிமுதலாகிய பகுதி அஞ்சும்வகை நாழிலும், அதுசெய்தால் அடைவதும், சொல்லப்பட்டது.]

(அ)

செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து செய்து விடும்.

இ-ள். சிறைசெய்யா- (முன்னே தனக்கொருகாப்பிடமாக) அரண் செய்துகொள்ளாத, வேந்தன் - அரசன், செருவந்தபோழ்தில்-போர்வந்தகாலத்திலே, வெருவந்து -(காப்புஇல்லாமையால்) அஞ்சி, வெய்து. விளைவிலே, கெடும் -கெடுவான்—எ-று. (கருத்து.) அரண், கட்டிக்கொள்ளாத அரசன் விரோதிற்கெடுவான்-என்பதாம். * பகையை அஞ்சிச் சேர்ந்தவர்நீங்குதலால் தனியனாந்தகாலும் அஞ்சிப்பகைவசத்தனவனென்பதாம். [இதனால் தான் அஞ்சுஞ்செயலும அதுசெய்தால் அடைவதும் சொல்லப்பட்டன.] வயம், காப்பு, ஒருபொருட் சொற்கள்.()

கலல்ார்ப் பிணிக்குங் கடிக்கோ லதுவல்ல
தில்லை நிலக்குப்பொறை.

இள். கடிக்கோல்- கடிக்கோலனைய அரசன், கல்லார்-(நீதிநூல்களைக்) கல்லாதவனை, பிணிக்கும்-(தனக்குப்பகுதியாகக்)கூட்டாகிற்பான், அதுவல்லது - அக்கூட்டமல்லாமல், நிலக்கு-பூமிக்கு, பொறை (அதிகமான) பாரம், இல்லை—-(வேறு) இல்லை—எ-று.(கருத்து.)கொடுங்கோலரசன் கல்வி கல்லாதவர்களை மந்திரிகளாக்கிகொள்வான் அதுவே பூமிக்குப்பாரம்-என்பதாம். * கடிக்கோல்- இங்கே அதிகதண்டம் செல்வானுக்கு ஆயிற்று, அவன் அதுசெய்தற்கு உடன்படுவானையல்லது கூட்டாமையால் கல்லார்ப்பிணிக்கு மென்றும், மற்றவையெல்லாம் சுமக்கிறதனு இயல்பாகலால் நிலத்துக்குப்பாரம் அதுவல்லதில்லையென்றும், சொல்லினர். [இதனால் அஞ்சுவனசெய்தலின் குற்றம் சொல்லப்பட்டது.]

(ஆ)

இன-அஞ்-அதி-கண்ணோட்டம்.

ஞ்ஞாலது, தன்னைடு பழகின வனாக் கண்டால் அவராலே சொல்லப்பட்டதனை மறக்கமாட்டாமை, இது அவர்மேலே கண்ணோடியவிடத்து நிகழ்வதாகலால் அப்பெயர்பெற்றது, இதுதாட்சிணியமென்றும், முகக்கொடுத்தலென்றும், சொல்லப்படுகின்றது, முன்னதிகாரத்திலே சொல்லப்பட்டதையே சிறப்புப்பற்றி இதிலேவிரித்துச்சொல்லுதலால் அதன்பின்வைக்கப்பட்டது.

தொடர்ந்

கண்ணோட்ட மென்னுங் கழிபெருங் காரிகை
யுண்மையா னுண்டிவ் வுலகு.

இ-ள். கண்ணோட்டமென்னும் - கண்ணோட்டமென்றுசொல்லப் படுகிற, கழிபெருங்காரிகை - மிகவும் பெரிய அழகானது, உண்மையால் - (அரசரிடத்தே) உண்டாயிருக்கையால், இவ்வுலகு - இவ்வுலகமானது உண்டு - உண்டாகின்றது—என்று. (கருத்து) அரசனுக்குத்தாட்சிண்ணெனு மென்னு மழகுண்டாயிருக்கையால்இவ்வுலகமுண்டாயிருக்கின்றது என்பதாம். * கண்ணோட்டமில்லாமைவெருவந்தசெய்தலென்கிற அஞ்சுவஞ்செய்தலால் அவர்நாட்டு வாழ்வார் புலியைச்சேர்ந்த மானினம்போற் காப்பிடம்பெறாமைபற்றி இவ்வுலகு உண்டென்றார். (க)

கண்ணோட்டத் துள்ள துலகிய லஃதிலா
ருண்மை நிலக்குப் பொறை.

இ-ள். உலகியல்-உலகநடையானது, கண்ணோட்டத்து-கண்ணோட்டத்தினிடத்தே, உள்ளது-நிகழ்வதாகும், (அதனால்) அஃதிலார் - அக்கண்ணோட்டமில்லாதவர், உண்மை - உளராதல், நிலகு-பூமிக்கு, பொறை பாரமாலதற்கே, (மற்றென்றுக்குஅன்று)—என்று. (கருத்து) உலகத்தாகூழினியதற்கிலை நடப்பதாம், இஃதில்லாதவர் பூமிக்குப்பாரமாவர் - என்பதாம். * உலகநடையாவது - உபகாரஞ்செய்தல் - காப்பாற்றல் - பிழைபொறுத்தல் இவைமுதலானவை, அவைஉண்டாகாமையால் கண்ணோட்டமில்லாதவர் தமக்கும்பிறர்க்கும் பயன்படாரென்பதைபற்றி நிலகுதாக்குப்பொறையென்றார். [இவை இரண்டுபாட்டாலும் கண்ணோட்டத்தினது சிறப்புச்சொல்லப்பட்டது.] (உ)

பண்ணென்னும் பாடற் கியைபின்றேற் கண்ணென்னுங்
கண்ணோட்ட மில்லாத கண்.

இ-ள். பண் - இசையானது, பாடற்கு-பாடற்குறுழிலோடு, இயைபின்றேல்-பொருத்தமில்லையாயின், என்னும் - என்னப்பயனுடைத்தாகும், (அதுபோல்) கண்-கண்ணானது, கண்ணோட்டமில்லாதகண் - கண்ணோட்டமில்லாதவிடத்து, என்னு - என்னபயனுடைத்தாகும் - என்று. (கருத்து.) பாடற்கிசையில்லாவிடிற்பயனில்லை அதுபோலக் கண்ணிற்குக் காட்சியில்லாவிடிற் பயனில்லை - என்பதாம். * எப்படிபாடற்குறுழிலோடுபொருந்தாதவிடத்து இசையினாலேபயனில்லையோ அப்படியே கண்ணோட்டத்தோடு பொருந்தாதவிடத்துக்கண்ணினாலே பயனில்லையென்பதாம். (ஊ)

உளபோன் முகத்தெவன் செய்யு மளவினும்
கண்ணோட்டமில்லாத கண்.

இ-ள். அளவினால்- தகுமளவினால், கண்ணோட்டமில்லாத-தாகூணியமில்லாத, கண்-கண்களானவை, முகத்து -முகத்தினிடத்து, உளபோம் - உள்ளனவுபோல், (கண்டோற்குத்தான்றுதலில்லாமல்

எஞ்ஞன் (வேறே) என்னப்பயனை, செய்யும்-செய்யும்—எ-று. (கருத்து.) கண்ணோட்டமில்லாதகண்களென்னபயனைத்தரும் - என்பதாம். * தோன்றுதலேயல்லாம லென்றுஞ்சொற்கள் வழுவிக்கப்பட்டன—அதிகமான கண்ணோட்டத்தை விலக்குதற்கு அளவுமலென்றார். அக்கண்கள் ஒருபயனையும் செய்யா வென்பது கருத்து. (எ)

கண்ணிற் கணிகலங் கண்ணோட்ட மம்மின்றேற்
புண்ணென் றுணரப் படும்.

இ-ள். கண்ணிற்கு - (ஒருவனது) கண்ணிற்கு, அணிகலம்-அணியும் அணியாவது, கண்ணோட்டம்-காட்சிணியமாகும், அம்மின்றேல் - அவ்வணி இல்லையாயின், (அக்கண்) புண்ணென்று - புண்ணென்று, உணரப்படும் - (அறிவுடையவரால்) அறியப்படும்—எ-று. (கருத்து.) கண்ணிற்கு ஆபரணம்காட்சிணியமாம்- அம்மில்லாவிடிலக்கண்புண்- என்பதாம். * கண்ணிற்குவேறே அணியில்லாமையால் - கண்ணிற்கணிகலமென்றும், கண்ணோய்த்தோன்றினாலும் - நோய்களாலும் - நீர்பற்றலாலும் - துயர்விளைத்தலிலாநோக்கி- புண்ணென்றுணரப் படுமென்றும், சொல்லினார் [இவைமூன்றுபாட்டாலும் அதுசெய்யாதகண்ணின் குற்றம் சொல்லப்பட்டது.] (ஏ)

மண்ணோடியைந்த மரத்தனையர் கண்ணோ
டியைந்துகண் ணோடா தவர்.

இ-ள். கண்ணோடு-ஒருதொழிலுக்குஉரிய) கண்ணோடு-இயைந்து-பொருந்தியிருந்தும், கண்ணோடாதவர்-அக்கண்ணோடுதலில்லாதவர், (சஞ்சரிக்கின்றவராயிருந்தும்) மண்ணோடு - மண்ணுடன், இயைந்த-பொருந்திநின்ற, மரத்தனையர் - மரத்தினையரென்பர்—எ-று. (கருத்து.) தாட்சிணியமில்லாதவர் மரத்திற்கொப்பாவார் - என்பதாம். * கண்ணினது தொழிலாகிய ஓடுதல் கண்ணையுடையவன்மேல் நின்றது, மரம்-கண்ணோடுபொருந்தியும் கண்ணோடாமையால் உபமானமாயிற்று. (சு)

கண்ணோட்ட மில்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணோட்ட மின்மையு மில்.

இ-ள். கண்ணோட்டமில்லவர்- கண்ணோட்டமில்லாதவர், கண்ணிலர் - கண்ணுடையவருமல்லர், கண்ணுடையார்-கண்ணுளார், கண்ணோட்டமின்மையும்- கண்ணோட்டமில்லாதவராதலும், இல்-இல்லை-எ-று. (கருத்து.) கண்ணோட்ட மில்லாதவர், குருடர் கண்ணோட்டமுள்ளவர் கண்ணுளார் - என்பதாம். * கெருப்பு எங்கே இல்லையோ அங்கேபுகையும் இல்லை புகையெங்கே இருக்கிறதோ அங்கே கெருப்பும் இருக்கும்-என்பதுபோல்-கண்ணோட்டம் எவரிடத்து இல்லையோ அவரிடத்தே கண்ணுமில்லை-கண்எவரிடத்து இருக்கின்றதோ அவரிடத்தேகண்ணோட்டமும் இருக்கும் என அனுமானப்பிரமாணம் பற்றிச்சொல்லியது [இவைஇரண்டுபாட்டாலும் கண்ணோடாதாரிழிவு சொல்லப்பட்டது.]

கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்
குரிமையுடைத்திவ் வுலகு.

இ-ள். (இவ்வுலகு) இந்தவுலகம், கருமம்-(முறைசெய்தலாகிய தமது) தொழில், சிதையாமல்-அழியாமல், கண்ணோ_வல்லார்க்கு - கண்ணோட்டஞ்செய்யவல்ல அரசர்க்கு, உரிமை- உரியதாந்தன்மையை, உடைத்து - உடையதாகும்.—எ-று. (கருத்து.) கண்ணோட்டமிடையவரசருக் கிவ்வுலகமுரிமை யுண்_டென்பதாம். * தமமோடுபழகினவர் பிறருக்கு இடுக்கண்செய்தவிடத்து - அவரைக் கண்ணோட்டத்தினாலே தண்டிக்காதவர்க்கு முறைகெடுதல் முன்னமே ஓர்ந்து கண்ணோடாதென்ற குறளிலேசொல்லப்பட்ட முறையிலக்கணமுதலும் பெற்றும், முறைசெயவருமிடத்துக் கண்ணோட்டஞ் செய்யாமையும், அதுவாமாதவிடத்துக் கண்ணோட்டஞ் செய்தலும், ஒருவனுக்குச் சுபாவமாகுதல் அருமையாகலால் - கண்ணோட்ட வல்லார்க்கென்றும், அச்சுபாவமுடையவர்க்கு உலகமுழுதும் நெடுங்காலம் வசப்படுதலால், உரிமையுடைத்தென்றும், சொல்லினார். [இதனால் கண்ணோட்டஞ்செய்யும் விதம் சொல்லப்பட்டது.] (அ)

ஒறுத்தாற்றும் பண்பினர் கண்ணுங்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை.

இ-ள். ஒறுத்தாற்றும் பண்பினர்கண்ணும் - (சம்மை) ஒறுக்குமியல்புடையவரிடத்தும், கண்ணோடி- கண்ணோட்ட முடையவராகி, பொறுத்தாற்றும் - பண்பே - (அக்குற்றத்தைப்) பொறுக்குமியல்பே, தலை (அரசர்க்குத்) தலையாயவியல்பு—எ-று. (கருத்து.) தம்மை வருத்துவோரிடத்துங் கண்ணோட்டமுடையவரசரே தலையாவர் - என்பதாம். * பண்பினரென்றதனால் = அவர் பழக்கத்தினாலும், ஒறுத்தாற்றும், பொறுத்தாற்றும்—ஓர்ந்தது. (கூ)

பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.

இ-ள். நயத்தக்க (யாவராலும்) விரும்பத்தக்கநாகரிகம்-கண்ணோட்டத்தை, வேண்டுபவர்-வேண்டுவோர், நஞ்சு-நஞ்சை, பெயக்கண்டும்(பழகினவர்) இடக்கண்டும், உண்டு (கண்மறுக்க மாட்டாமையால் அதனை) உண்டு, அமைவர்-(பின்னும் அவரோடு) பொருந்துவார்—எ-று. (கருத்து.) தாட்சிணியம் வேண்டுவோர் சிநேகர் நஞ்சிடக்கண்டு முண்டு சினேகிப்பர். என்பதாம். * [இவ்விரண்டுபாட்டாலும் அவரைத்தண்டிக்காமல் கண்ணோட்டஞ் செய்யவேண்டுவது பிறருக்குக் குற்றஞ்செய்தவிடத்தன்று தமக்குக்குற்றம் செய்தவிடத்தேயென்பது சொல்லப்பட்டது.] (டு)

அஃதாவது, பகைவர் அயலோர்கட்பினர் என்று மூன்றுதிறத்தாரிடத்தும் நிகழ்ந்தனவை அரிநற்கு ஏற்றனவாக ஆளுதலும், முன் சொல்லப்பட்ட இலக்கணமுடைய அரசனுக்குத் தான் ஏதிகாக்கும்போதும் பிரர்மாடுபிடிக்கும்போதும் வேண்டுமளவைகளைச் சொல்லத்தொடங்குவதாலால் அவ்விரண்டு காரியங்களுக்கும் அவசியம்வேண்டியதாகிய இது முன்னே வைக்கப்பட்டது

ஒற்று முறைசான்ற நூலு மினவயிரண்டுங்
கெற்றென்க மன்னவன் கண்.

இ-ள். மன்னவன்-அரசனானவன், ஒற்றும்-ஒற்றனும், உரைசான்ற-புகழ்நிறைந்த, நூலும்-நீதிநூலும் ஆகிய, இனவிரண்டும்- இவ்விரண்டும், கண்-(கண்ணிரு) கண்களாக, கெற்றென்க-தெளியக்கடவன்—என்று.(கருத்து.) அரசனானவன் ஒற்றனையும் நீதிநூலையும் தன்னிருகண்களாகத்தெளியக்கடவன்-என்பதாம்.*ஒற்றனானவன் தன்கண்ணுக்குஎட்டாததூரமெல்லாம் போய்க்கண்டு - அங்கே நடந்தனவையெல்லாம் அறிவித்தலாலும், நூலானது- அந்நடந்தனவைகளுக்குத் தன்னறிவுக்கு எட்டாததொழில்களையெல்லாஞ் சொல்லி அறிவித்தலாலும், இவ்விரண்டினையுமே தனக்கு ஊனக்கண்ணும் ஞானக்கண்ணுமாக நிச்சயித்துக்கொண்டு நடக்கக்கடவ னென்பதாம். [இதனுல் ஒற்றினது சிறப்புச் சொல்லப்பட்டது.] (6)

எல்லார்க்கு மெல்லா நிகழ்பவை யெஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் றொழில்.

இ-ள்: எல்லார்க்கும் - எல்லாரிடத்தும், நிகழ்பவையெல்லாம்-நடப்பனவைகளையெல்லாம், எஞ்ஞான்றும்-காலமுறும், வல்லறிதல் - (ஒற்றனால்) விரைந்தறிதல், வேந்தன் றொழில்-அரசனுக்குரியதொழில்—எ - று. (கருத்து,) யாவரிடத்து நடப்பனவைகளையொற்றதனாலறிதல அரசனதுதொழிலாம் -, என்பதாம். * எல்லார்க்குமென்றது பகைவர், அயலோர்-நட்பினர், என்னுமூவகையாரையும், நிகழ்பவையெல்லாமென்றது, நல்லனவையும், தீயனவையும், ஆகியசொற்களையும், செயல்களையும், அவைநிகழ்ந்தவிடமுதலாக, அவைகளுக்குச் சக்கவழியாகவாவது தேறுதலாகவாவது செய்யவேண்டுதலால் - வல்லறிதலென்றார். அவ்விருதொழில்களுக்கும் அறிதல் காரணமாகலால் அதனைத் தொழிலென்று உபசரித்தார், ஒற்று அதிகாரத்தால்வந்தது. [இதனுல் ஒற்றினுலாகிய பயன்சொல்லப்பட்டது.] (உ)

ஒற்றினு லொற்றிப் பொருடெரியா மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்த தில்.

இ-ள். ஒற்றினால்-நூற்றினைக்கொண்டு, ஒற்றி-(எல்லாரிடத்தும் நிகழ்ந்தவைகளை) அறிந்துவரச்செய்து, பொருள் - (அவைகளால் அடையும்) பயனை, தெரியா- ஆராய்ந்தறியாத, மன்னவன் - அரசனவன்; கொற்றங்கொளக்கிடந்தது - வெற்றியடையக்கிடந்தது; இல் - (வேறு ருவழி) இல்லை—என்று. (கருத்து.) ஒற்றினைக்கொண்டு பகைவர்காரியங்களை யறியாதவரசன் வெற்றியடையானெனபதாம். * அங்ஙனமறிதலையும் பயனும் அறியாமல் பகைக்கு எளியனாதல் ஒற்றதனாலே தெளிவுமின்றி வேறொன்றினாலே நீங்காமையால், கொற்றங்கொள்க்கிடந்த தில்லென்றார்.[இதனால் அத்தொழில் செய்யாதவிடத்துவருங் குற்றஞ்சொல்லப்பட்டது.] (உ)

வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதா ரென்றாங்
கனைவகையு மாராய்வ தொற்று.

இ-ள். தம்-தம்முடைய, வினைசெய்வார்-காரியஞ்செய்பவர், சுற்றம்-சுற்றத்தார், வேண்டாதார்-பகைவர், என்று- என்றுசொல்லப்பட்ட, அனைவகையும், எல்லாவையும், ஆராய்வது- (சொல்லாலும் செயலாலும்) ஆராய்பவனே, ஒற்று - ஒற்றனுவான்—என்று. (கருத்து.) தொழிலாளையும்-உறவினையும்-பகைவனையும் ஆராய்பவனே ஒற்றனுவான் - என்பதாம். * அரசனுக்குக் காரியஞ்செய்வோராலே செய்யப்படும் மனவியல், சுற்றத்தாராலே தன்னிடத்தும் மற்றிடத்தும் செயப்படும் மனவியல், பகைவராலே தன்சேர்வுபார்த்தலும் மேலேதெறப்படுதலும், மூன்னிட்டுச் செய்யப்படுமனவையும், அறிந்து அனைவகைக்கும் ஏற்பனவற்றைச் செய்யவேண்டுதலால் இம்மூவகையானையும் குறையாமல் ஆராயவேண்டுமென்றற்கு - அனைவகையு மாராய்வதொற்றென்றார். (ஊ)

கடாஅவுருவொடு கண்ணஞ்சா தியாண்டு
முகா அமை வல்லதே யொற்று.

இ-ள். (எவராலுஞ்செய்தியை அறிதற்குசென்றாலும் அவராலே) கடாஅ - சந்தேகிக்கப்படாத, உருவொடு - வடிவோடு, (பொருந்தி) (அவர்சந்தேகித்து அறியத்தொடங்கினால்) கண்ணஞ்சாது - (கோபித்துப் பார்க்கின்ற அவர்) கண்ணிற்கு அஞ்சாமனின்று, யாண்டும் - நானுபாயங்களும் செய்தாலும், உகா அமை - (மனதிலுள்ளவைகளை) உமிழாதிருக்க, வல்லதே-வல்லவனே, ஒற்று - ஒற்றனுவான்—என்று. (கருத்து.) ஐயமில்லா வடிவோடு பொருந்தி யஞ்சாதிருந்து பகைவர்எண்செய்யினுமுள்ளதைச் சொல்லாதவனே ஒற்றன்-என்பதாம். * சந்தேகிக்கப்படாதவடிவு-பார்ப்பார் - வணிகர்-முதலானவர்வடிவு. (எ)

திறந்தார் படிவத்த ராகி யிறந்தாராய்ந்
தென்செயினுஞ் சோர்வில தொற்று.

இ-ள். குறைந்தார்-முழுதுங்குறைந்தோறும், பழிஎஞ்சார்- விரதவொழுக்கந்தோறும், ஆகி - ஆகி, இறைகுறை - (போகக்கூடாத விடங்களிலெல்லாம்) போய், ஆராய்ந்து - ஆராயவேண்டிய பொருள்களெல்லாம் ஆராய்ந்தறிந்து, என்னெனினும் அவ்விடத்தோர் (சந்தேகித்துப்பிழைத்து) என்னை என்பஞ் செய்துகேட்டாலும், சோர்விலது - தன்னை வெளிப்படுக்காதவனே, ஒற்று-ஒற்றனுவான்—எ-று; (கருத்து.) குறைவிலன் விரதர்கள்வடிவர்கி; எக்காரணம்பற்றியாராய்ந்தறிந்து பகைவர் துன்பஞ்செய்யிலுந் தன்னுண்மைக்காட்டாதவனே ஒற்றனுவான்- என்பதாம். * விரதவொழுக்கம் - தீர்த்தயாத்திரை முதலானவை செயிலுமென்பது - அரசேவாவென்று செய்யாவென்பதை விளக்கிநின்றது, மூன்னோல்வகை உபாயமுஞ்சொல்லி இவ்வகையும் கண்டபிறகைப் பிரித்துச்சொல்லியது அந்நெறியுணர்த்தற் கருமைச்சிறப்புநோக்கி: (சு)

மறைந்தவை கேட்கவற் றுணி யறிந்தவை
யையப்பா டில்லதே யொற்று.

இ-ள். மறைந்தன- எவரது செயல்களை அறியச்சென்றோனு அவரது) மறைவாயுள்ள செயல்களை, கேட்கவற்றுணி - (அவருக்கு உள்ளானவராலே) கேட்க்வல்லவனுகி, அறிந்தனை - (கேட்டு) அறியப்பட்ட அச்செயல்களிலே, ஐப்பப்பாடில்லாத - (பின்) சந்தேகப்படுதலில்லாதவனே, ஒற்று-ஒற்றனுவான்—எ-று. (கருத்து.) இரகசியங்களைக்கேட்கவல்லவனுகிப் பகைவர் சந்தேகப்படாதவனே ஒற்றனுவான் - என்பதாம். * அம்மன்றவாயுள்ள செயல்களைச்சொல்லுவானை அறிந்து அவர்சந்தேகியாதபடிபோய் ஓட்டி அவ்வோ சொல்லும்படிக்கு அதற்குவற்ற சொல்லையாவது செயலையாவது முன்னே உண்டாக்கி அச்சம்பந்தத்திலேகேட்கும்போதும் அன்னியர்போலே கின்றுகேட்கவேண்டுதலால்-கேட்கவற்றுணியென்றும், கேட்டு அறியப்படுமன்வகளைத்தானேசந்தேகித்து வந்துசொன்னுல் அரசனுல் அவைகளுக்கு எற்றகாரியம் செய்யக் கூடாதன்மையால் ஐப்பப்பாட்டில்லதே யென்றும், சொல்லினர். [இவை நான்குபாட்டாலும் ஒன்றன துலக்கணம் சொல்லப்பட்டது.](எ)

ஒற்றெற்றித் தந்த பொருளையு மற்றுமோர்
சொற்றிரு லொற்றிக் கொளல்.

இ-ள்: ஒற்று - ஒவொற்றனுலே, ஒற்றி- மறைவாயறிந்துவந்து, தந்த- அறிவிக்கப்பட்ட, பொருளையும்-காரியத்தையும்; மற்றுமோரொற்றினுல்-பின்னும், (ஓரொற்றனுலும்) ஒற்றி-அறிந்துவரச்செய்து, கொளல்-(ஒப்புமைகண்டு) கொள்ளக்கடவன்—எ-று. (கருத்து.) ஒவொற்றனறிந்துவந்தபொருளை மற்றொருவொற்றனுலறிந்துவரச்செய்து அரசன் கொள்ளக்கடவன்-என்பதாம். * அவரோடுகலந்துகின்று மாறுபடச்சொல்லுதலும் கூடுமானகையால் அரசனுக்குரைத்தவன் சொல்லையே நம்பலாகாதென்பதாம்: (அ)

ஒற்றற் றணராமை யாள்கடவன் மூவர்
சொற்றெக்க தேறப் படும்.

இ-ள். (ஒற்றரை ஆளுமிடத்து) ஒற்று-ஒரொற்றன், ஒற்றுமற் றுரொற்றனை, உணராமை-அறியாதிருக்கும்படி, ஆள்க - ஆளக்கடவர், (அப்படி ஆளப்பட்டவொற்றர்களுள்) உடன்மூவர் - (ஒருபொருண்மே லே வேறுவேறுவிடப்பட்ட) மூவருடைய, சொல்-சொற்களும், தொக்க-(பயனில் ஒத்திருக்குமாயின்)—தேறப்படும் - (அப்பொருள்மெய் யென்று) தெளியப்படும்—எ-று. (கருத்து.) ஒரொற்றன் மற்றுரொற் றனையறியாதிருக்கும்படி யாசனாளக்கடவன்-என்பதாம். * ஆயினென் பது வருவிக்கப்பட்டது, ஒருவனை ஒருவன் அறிந்தால் தம்மிலேதலைக் தொண்டு ஒப்பச்சொல்வாராகையால் - உணராமை ஆள்கவென்றும் -மூவர்க்கும் ஒருசு ஒருதன்மைப்படுதலும் பட்டால் நீடித்திருக் தலும், கூடாமையால் தேறப்படுமென்றும், சொல்லினர். இதனாலே மூவர்சொல்லும் ஒத்திராமற்போனால் பின்னும் ஆராய்கவென்பதும் பெறப்பட்டது. (ச)

சிறப்பறிய வொற்றின்கட் செய்யற்க செய்யிற்
புறப்படுத்தா னாகு மறை.

இ-ள். ஒற்றின்கண்-(மறைந்தவைகளை அறிந்து சொல்லிய) ஒற்றனிடத்து, சிறப்பு-சிறப்பை, அறிய-(பிறர்) அறிய, செய்யற்க - செய்யாதிருக்கக்கடவன், - செய்யின்-செய்தால், மறை- (தன்னுள்ளே அடக்கப் படுமவைகளை) —. புறப்படுத்தானாகும் - (தானே) வெளி இட்டவனாவான்—என-று. (கருத்து.) அரசன் ஒன்றனுக்குப்பிறரறியச் சிறப்புச் செய்யாதிருக்கக் கடவன்செய்தால் தனது இரகசியங்களை வெளிப்படுத்தினவனாவான், என்பதாம். * மறையாவது - அவன்ஒற்றனுனதும்-அவன்சொல்லியதும் - ஆம். சிறப்புப்பெற்ற இவன்யாரென்றும்- இதுபோதற்குக்காரணம்யாதென்றும் - வினவுவாரும் சொல்வாரும் - அயலாராகலால் புறப்படுத்தானாகுமென்றார். [இவைமுன்றாட்டாலும் ஒற்றரை ஆளுமுறைமையும், அவராலேயடந்தவை அறியுமுறைமையும் அறிந்தாற் சிறப்புச்செய்யும் விதமும், சொல்லப்பட்டன.] (ஏ)

கூடு-ஆம்-அதி-ஊக்கமுடைமை

அஃதாவது, மனமானது தொழில் செய்தலிலே எழுச்சியை உடைத்தாதலாம். ஒற்றரால் நடந்தவை அறிந்து அவைகளுக்கு ஏற்ற தொழில்செய்வோனுக்கு இது அவசியம் வேண்டுதலால் அதன்பின் வைக்கப்பட்டது.

உடைய னெனப்படுவ தஃக மஃதில்லா
ருடைய துடையரோ மற்று.

இ-ள். உடையனெனப்படுவது - (ஒருவனை) உடையவனென்றுசொ
ல்லுகற்குரிச்சிறந்தது, ஊக்கம் - மனவெழுச்சியாம், அஃதில்லார்-அம்ம
னவெழுச்சியில்லாதவர், மற்றுடையது - வேறுடையதுதானும், உடை
யரோ-உடையராவரோ—(ஆகார்)—எ-று. (கருத்து.) உடையவனென்
னுஞ்சொல்லத்தக்கது மனவெழுச்சியாம் - அவ்வெழுச்சியில்லாதவர் உ
டையரில்லாதவர் - என்பதாம். * வேறுடையதென்றதை-முன்னடைத்து
ன்றபொருளை, உம்மையுருவிக்கப்பட்டது காப்பாற்ற வகையில்லா
மையால் அதையும் இழப்பனென்பதாம். (4)

உள்ளமுடைமை யுடைமை பொரு ளுடைமை
யில்லாது நீக்கி விடும்.

இ-ள்... (ஒருவனுக்கு) உள்ளமுடைமை - மனவெழுச்சியுடைமை
யே, உடைமை-(நிலைபெற்ற) வுடைமையாம், பொருளுடைமை - பொ
ருளுடைமை, இல்லாது - நிலைபெறாமல், நீக்கிவிடும்-நீக்கும்—எ-று (க
ருத்து.) மனவெழுச்சி நிலையுள்ளவுடைமையாம் - பொருளுடைமை நி
லையில்லாதாம்-என்பதாம். * மனவெழுச்சி உள்ளத்தின் குணமாகல
ல் அதற்குநிலைபெறுதலும் - பொருள் உடம்பிறும்வகுப்ப் அழிவதாயி
ருக்கையால் அதற்கு நிலைபெறுமையும், சொல்லப்பட்டன, சொல்ல
வே அது உடைமை [அன்றென்பது பெறப்பட்டது.] (2)

ஆக்க மிழந்தேமென் றல்லாவா வூக்க
மொருவந்தங் கைத்துடை யார்.

இ-ள். ஓராவந்தம்-நிலைபெற்றதாகிய, ஊக்கம் - மனவெழுச்சியை,
கைத்து - கைப்பொருளாக, உடையார் - உடையவர், (இழந்தாராயினும்)
ஆக்கம்-கைப்பொருளை, இழந்தோமென்று - நிழந்துவிட்டோமென்று
அல்லாவர் - மனஞ்சுழலார்—எ-று. (கருத்து) மனவெழுச்சியுடையவ
ர் பொருளிழந்தும் வந்தார் - என்பதாம், * மனஞ்சுழலாமைக்கு ஏது
வருமின்மை பாட்டாற்சொல்லப்படுகிறது. (5)

ஆக்க மதர்விஞைய்ச்செல்லுமசைவிலா
வூக்க முடையா னுழை.

இ-ள். அசைவிலா-அசைவில்லாத, ஊக்கமுடையானுழை - மன
வெழுச்சியுடையவனிடத்தே, ஆக்கம் - பொருளானது, அதர்விஞைய்-வ
ழிகேட்டுக்கொண்டு, செல்லும்-போகும்—எ-று. (கருத்து.) மனவெ
ழுச்சி யுடையவனிடத்துச் செல்வம்வரும்-என்பதாம். * அசைவின்
மை இடுக்கண்முதலாகியவைகளால் தளராமை வழிகேட்டுச்சென்று
சேர்வார்போலே தானேசென்று சேருமென்றற்கு - அதர்விஞைய்ச்செ
ல்லுமென்றார். [இவைரான்குபாட்டாலும் அடைந்து நின்றபொருளி

றும் அதற்குக்காரணமாகிய ஊக்கம் சிறந்ததென்பது சொல்லப்பட்டது.] (சு)

வெள்ளத் தனையமலர்நீட்ட மாந்தர்தம்
முள்ளத்தனைய துயர்வு

இ-ள். மலர்-நீர்ப்பூக்களுள்ளது, நீட்டம்-நீட்சியானையது, வெள்ளத்தனைய-நின்றநீரளவினவாம், (அதுபோல) மாந்தர்-மனிதர்கள், உயர்வு-உயர்ச்சியானது, உள்ளத்தனையது- (அவர்) மனவெழுச்சியளவினதாம்—என்று. (கருத்து.) நீர்ப்பூக்கள் நிறைநீரளவாம் அதுபோலமனிதர்களுயர்வுமனவெழுச்சியளவாம் - என்பதாம். * மலர் அதன் முளுக்கு ஆகுபெயர். நீர்மிகுந்தாட்டும் மலர்கள்நீளுமென்பது தோன்ற-வெள்ளத்தனைய வென்றார். இவ்வுபமானவினையாலும் ஊக்கமிருந்தவளவும் மனிதர் உயர்வானென்பது பெறப்பட்டது. உயர்வு-பொருள் படைகளால்! மிகுதல். (சு)

உள்ளுவ தெல்லா முயர்வுள்ளன் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்தே.

இ-ள். (அரசரானவர்) உள்ளுவதெல்லாம்-நினைப்பதெல்லாம், உயர்வு - (தமது) உயர்ச்சியையே உள்ளல்-நினைக்கக்கடவர், அது-அவ்வுயர்ச்சியானது, தள்ளினும்-(ஊழ்வகையினால்) கூடாமற் போயினும் (அந்நினைப்பு) தள்ளாமைநீர்த்து-தள்ளாமைக் குணமுடையதாம்-என்று. (கருத்து.) அரசருயர்வை நினைக்கக்கடவர் அவ்வுயர்ச்சி கூடாவிடினும் மந்நினைப்பு நீங்காக்குணமுடையதாம்- என்பதாம். * மற்று-அசை - தள்ளினுமென்றதனால் தள்ளாமை மிகுதியாதல் விளங்கிற்று, தள்ளியபின் டத்தும் முயற்சியிலே அவர் தவறுதல் இல்லாமல் நல்லோராலேபழிக்கப்படாமையால் தள்ளாத இயற்கையுடைத்தென்பதாம். முன்னே உள்ளத்தனையதுயர், வென்றதனை உறுதிசெய்தபடி. (சு)

சிதைவிடந் தொல்கா குரவோர் புதையம்பின்
பட்டுப்பா டேன்றுங் களிறு.

இ-ள். களிறு-யானையானது, புதையம்பின்- கட்டாகிய அம்பினாலே, பட்டுபுண் பட்டவிடத்து, பாடேன்றும்-(தளராமல்தன்) பெருமையைநிலைநிறுத்தும். (அதுபோல) உரவோர் - மனவெழுச்சியையுடையவர், சிதைவிடத்து- (தாம்நினைத்தவுயர்ச்சிக்கு) அழிவுவந்தவிடத்து, ஒல்கார் தளராமல்தம்பெருமையையநிலைநிறுத்துவார்—என்று. (கருத்து.) யானைகணையாற்புண் பட்டவிடத்துந்தளராமற் பெருமையை நிறுத்தும் அதுபோல மனவெழுச்சியுடையோர் வருத்தம் வந்தவிடத்துந்தளர்-என்பதாம். * பட்டு-பட்டாலென்பதன் பொருளிலேவந்தது. ஒல்காமை-களிற்றுக்கும், பாடேன்றல்-உரவோருக்கும், கூட்டப்பட்டனநினைக்கப்பட்ட வுயர்ச்சியானது கூடாமற்போயினும் தவறுமல் அதனை

முடிப்பதொன்பதாம். [இவை மூன்றுப்பாட்டாலும் ஊக்கமுடையா
ரது உயர்ச்சிசொல்லப்பட்டது.] (எ)

உள்ள மிலாதவ ரொய்தா ருலகத்து
வள்ளிய மென்னுஞ் செருக்கு.

இ-ள். உள்ளமிலாதவர்-மனவெழுச்சியில்லாத அரசர், உலகத்து
இவ்வுலகத்தாருள், வள்ளியமென்னும் - வண்மையையுடையமென்று,
(தம்மைத்தாமேமதிக்கும்) செருக்கு-மதிப்பை, எய்தார்-பெறார் -எ-று,
(கருத்து.) மனவெழுச்சியில்லாதவர் மதிப்படையார், என்பதாம். * ஊ
க்கமில்லாதவர்க்கு மூவர்ச்சி-பொருள்-கொடை-செருக்கு -. இவைமு
றையே- இல்லாமற்போதலால்-செருக்கேய்தாவென்றார், கொடைவேற்
றிகளால் ஆகியுவின்பம் தமக்கல்லது பிறருக்குக்காணப்படாமையால்
தன்மையிடதகாற் சொல்லப்பட்டது. (அ)

பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம்.புலிதாக் குறின்.

இ-ள். யானை-யானையானது,(பரியது-எல்லாவிலங்குகளினும்)பெ
ரிய உடம்பையுடையது, (அதுவல்லாமலும்) - கூர்ங்கோட்டது, கூர்
மையான கொம்புகளையுமுடையது, ஆயினும்-ஆனாலும், புலி-புலியான
து, தாக்குறின்-(தன்னை) எதிர்ப்படின், வெரூஉம்- (அதற்கு) அஞ்சும்
—என-று. (கருத்து.) யானைபெரிதுங் கொம்புடையதுமானாலும் புலிப்படை
யிலஞ்சும்-என்பதாம். * பேருடம்பால் வலிமிகுதி சொல்லப்பட்டதா
யிற்று. புலியைக்காட்டிலும் மிகுந்த உடல்வலிமையும் வெல்லுதற்கு
ச்சிறந்த ஆயுதமும் உடையதாயினும்யானை ஊக்கமில்லாமையால் அ
னையுடைய அப்புலிக்கு அஞ்சுமென்ற இக்தவாக்கியம், பகைவரைக்கா
ட்டிலும் மிகுந்த உடல்வலிமையும், வெல்லுதற்குச்சிறந்த ஆயுதமும்
உடையவராயினும் அரசர்ஊக்கமிலராயின் அதனையுடைய அமைச்சர்கு
அஞ்சுவதொன்பது தோன்றநின்றலால்-பிரிதுமொழிதல்.] (சு)

உரமொருவற் குள்ள வெறுக்கை யஃதில்லார்
மரமக்க ளாதலே வேறு.

இ-ள். ஒருவற்கு-ஒருவனுக்கு, உரம்-நிடமான அறிவாவது, உள்
ளவெறுக்கை - மனவெழுச்சியின்மிகுதியாம், அஃது-அதனை, இல்லா
ர்-இல்லாதவர், மரம்-(மனிதராகார்) மரங்களாவார் வேறு - (சாதிமரங்
களோடு (இம்மரங்களிடத்து) வேற்றுமை, மக்களாதலே-மனிதவடிவா
யிருக்கையே(வேறில்லை)—என-று. (கருத்து.) ஒருவனுக்கறிவாவது மன
வெழுச்சியாம் அஃதில்லாதவர் மரங்களுக்கொப்பாவர் - என்பதாம். *
மனிதருக்கு இருக்கவேண்டிய கல்லறிவும் காரியமுயற்சியும் இல்லா
மைபற்றிமரமென்றும், மரத்தில் உண்டாம்பயன் இல்லாமைபற்றி மக்
களாதலேவேறென்றும், சொல்லினர், மரத்திற்குப்பயன் - பழமுதலா
னவையும், ஆலயம், வீடு, தேர், மரக்கலம், இவைகளுக்கு உறுப்பாத
ல் முதலானவையும். ஊகுக. [இவைமூன்றுப்பாட்டாலும் ஊக்கமில்லா
தவரது இழிவுசொல்லப்பட்டது.] (ஏ)

சூ.- ஆம்-அது-மடி-இன்மை.

தீதாவது, நினைக்கப்பட்டவைகளைச் செய்யும்போது சோம்புதலில்லாமையாம். ஊக்கமுடையவாக்கு[1] ஒரோவிடத்தேகுணவசத்தால் சோம்பல் வருதலைக்குறித்து இது அதன்பின்வைக்கப்பட்டது.

குடியெனுங் குன்று விளக்க மடியென்னு.
மாசூர மாய்ந்து கெடும்.

இ-ள். குடியென்னுங்குன்றுவிளக்கம் - (தான்பிறந்த) குடியாகிய மழுங்காவிளக்கானது, மடியென்னுமாசு- (ஒருவனை அது) சோம்பலாகிய இருளானது, ஊர - நெருக்க, மாய்ந்துகெடும்-மழுங்கிக்கெடும்—என-று. (கருத்து) ஒருவன் குடியென்னும் விளக்கானது அவன்சோம்பலாற் கெடும்-என்பதாம், * உலகநடையுள்ள வனாக்கும் இடையறாது தன்னுட்பிறந்தவனை விளக்குதலால் - குடியைக்குன்றுவிளக்கமென்றும், தமோகுணத்தினாலேவருதலால் சோம்பலிருளென்றும், அதுமற்றை யிருள்போலாகாமல் அவ்விளக்கைத்தான் நெருக்கிமாய்க்கும் வலியுடைமையால் - மாசூரமாய்ந்துகெடுமென்றும், சொல்லினர். கெடுதல் பெயரும் வழங்காமறபோகுதல். (க)

மடியை மடியா வொழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்.

இ-ள். குடியை - (தாம்பிறந்த) குடியை, குடியாக - (மேன்மேலு யரும்) நற்குடியாக, வேண்டுபவர்-வேண்டுவோர், மடியை - சோம்பலை, மடியா - சோம்பலாகவே, (நினைத்து) ஒழுகல் - (முயற்சியோடு) நடக்கக்கடவர் — எ - று. (கருத்து) தாமபிறந்தகுடியையற்குடியாகவேண்டுவோர் சோம்பலைவிடக்கடவர் - என்பதாம, * ஒருப்பைக்காட்டிலுங் கொடியது வேறில்லாமைபற்றி ஒருப்பாகவே நினைக்கவேண்டும். என்பதுபோல் மடியைக்காட்டிலுங் கொடியது வேறில்லாமைபற்றிப் பின்னும் அப்பெயராற்றானே சொல்லினர். சோம்பலைச் சோம்பலாகவே நினைத்து முயற்சிசெய்து நடந்தால் தாம் உயர்தலாலேதுடி உயருமென்றற்கு - குடியைக்குடியாகவேண்டுபவரென்றார். அப்படி நடவாமற்போனால் குடி அழியுமென்பது கருத்து. (உ)

மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியுந் தன்னினு முந்து.

இ-ள். மடி-மடிக்கத்தகுவதாகிய, மடி - சோம்பலை, கொண்டு - (தன்னுள்ளே) கொண்டு, ஒழுகும்- நடக்கும், பேதை - அறிவில்லாதவன், பிறந்த-பிறந்த, குடி - குடியானது, தன்னினும் - அவனினும், முந்து-முற்பட, மடியும்-அழியும்—என-று. (கருத்து.) சோம்பலுடையவனின் குடி

யானது கெடும்-என்பதாம், * அழிவுதருஞ்சோம்பலை உட்கொண்டு நடத்தலாலே பேதைமையென்றும், அவனுக்கே காப்பாற்றப்படுவதாதலால்-குடிதன்னினும் மூந்துமடியுமென்றும், சொல்லினர். ஆக்கத்திலேபிற்படினும் அழிவிலேமுற்படுமென்பதாம். (க)

குடிமடிந்து குற்றம் பெருகு மடிமடிந்து
மாண்ட வுளுற்றி லவர்க்கு.

இ-ள். மடி.-சோம்பலிலே, மடிந்து - வீழ்தலால், மாண்டவுளுற்றிலவர்க்கு-திருந்தமாகியமுயற்சியில்லாதவராயினவர்க்கு, குடி-குடியும்.மடிந்து-அழிந்து,குற்றம்-குற்றங்களும், பெருகும்-பல்கும்—எ-று.(கருத்து) முயர்ச்சியில்லாதவர்க்குக் குடியுங்கெடடுக்குற்றங்களும் பெருகும்-என்பதாம் * குற்றங்கள் பின்வருங்குறளிலே சொல்லப்படுகின்றன. [இவை நான்குபாட்டாலும் சோம்பலினது தீமை சொல்லப்பட்டது] (ச)

நெடுநீர் மறவி மடிதுயி லைந்தும்
கெடுநீரார் காமக் கலன்.

இ-ள்.மடி - சோம்பலும், நெடுநீர்-(வினைவிற்செய்தற்குரியனவாக) நீட்டித்துச்செய்யுங்குணமும், மறவி - மறதியும், துயில் - துயிலும் ஆகிய, ஐந்தும்-இந்நான்கும், கெடுநீரார்- இறக்குமியல்பினையுடையவர், காமக்கலன் - விரும்பியேறுமரக்கலமாம்—எ-று (கருத்து) சோம்பலும்-காமதமும்-மறதியும் - நித்திரையும், கெடுவோரோறுமறக்கலனாம்-என்பதாம், *மடிசெய்யுளைமைவு நோக்கி நடுநின்றது, மடியோடு மற்றைமூன்றும் தமோகுணத்திலேதோன்றி - உடனிகழ்வனவாதலால் சேர்த்து எண்ணப்பட்டன. காமக்கலனென்பதனால் எப்படிமரக்கலம் மானம் சமீபித்தவர்க்குப் பெருக்கந்தருவது போலேதோன்றி அவர்விரும்பி ஏறியவிடத்துங்கடலிலே விழுத்துமோ அப்படியே இந்நான்கும் துன்பஞ்சமீபித்தவர்க்கு இன்பஞ்செய்பவை போலேதோன்றி அவர் அவைகளை விரும்பிக்கொண்டவிடத்தே துன்பத்திலே விழுத்துமென்பது தோன்றலறிக. (ஞ)

படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்
மாண்பய னெய்த லரிது.

இ-ள். படியுடையார் - நிலமுழுதும் ஆண்டவரசரது, பற்று - செல்வமானது, அமைந்தகண்ணும் - தானேவந்து, சேர்ந்தவிடத்தும்-(அதனால்) மடியுடையார்- சோம்பலுடையவர், மாண்பயன்-பெரும்பயனை, எய்தலரிது-அடைதலில்லை—எ-று. (கருத்து.) உலகமுருண்டையாய அரசர்செல்வம்எளியவந்தாலும் சோம்பலுடையவர் பயனடைதலில்லை யென்பதாம். * உம்மை-அளவையாலளவை விளக்கின்றது பயன்:

நின்பம். அச்செல்லவம், காக்கு(முயர்ச்சியில்லாமையால் அழிவதாலே நற்றுன்பம் நீங்காதென்பதாம். (சூ)

இடிபுரிந் தெள்ளுரும்சொற் கேட்பர்:மடிபுரிந்து
மாண்டவுளுற்றி லவர்.

நி-ள். மடிபுரிந்து - சோம்பலேவிரும்புதலால், மாண்ட- பெருமை பொருந்திய, உளுற்றிலவர்-முயற்சியில்லாதவர், இடிபுரிந்து: (நட்பாளர்) கண்டித்துப்புத்திசொல்லி, (அகனுக்பயன் காணுமையினுலேனள்ளுஞ்சொல்)(பின்)இகழுஞ்சொல்லை, கேட்பா-கேட்பார்—எ-று.(கருத்து.) சோம்பலுடையவர் பிறரிகழுஞ்சொல்லைக்கேட்பர்-என்பதாம் * அவ்விகழ்தல் சொல்லலே - பிறரிகழ்தல் சொல்லலேவேண்டுமெனத் தில்லையாயிற்று. அனைகளுக்கெல்லாம் எதிர்பேசமாட்டாமையால்கேட்பனென்றார். (எ)

மடிமை குடிமைக்கட் டங்கிற்றன் னெஞ்ஞர்க்
கடிமை புகுத்தி விடும்.

இ-ள். மடிமை-சோம்பற்றன்மையானது, குடிமைக்கண்-குடிமையுடையஅரசனிடத்தே, தங்கின்-தங்குமாயின், (அது) தன்னெஞ்ஞர்க்கு-தன்பகைவர்க்கு, அடிமை-அடியனுந்தன்மையை, புகுத்திவிடும்-(அவனை) அடைத்துவிடும்—எ-று. (கருத்து.) சோம்பலரசனிடத்துந் தங்குமாலுமது அரசன் தன்னேட்பகைவருக்கடிமையாக்கும்-என்பதாம். * சோம்பலினதுதன்மை - காரியக்கேடும்,குடிமை-குடிசெய்தற்றன்மை அது அகனையுடைய அரசனுக்காதல்தன்னெஞ்ஞர்க் கென்றதனல்அறிக. அடியனுந்தன்மை தாழ்ந்து கின்றேவல் கேட்டல்.[இவையின்குபாட்டாலும் சோம்பற்குற்றங்கள் சொல்லப்பட்டது.] (அ)

குடியாண்மை யுள்வந்த குற்றமொருவன்
மடியாண்மை மாற்றக்கெடும்.

இ-ள். ஒருவன்-ஒருவன், மடியாண்மை-சோம்பலை ஆளுந்தன்மையை,மாற்ற-ஒழிக்கவே, குடி-(அவனது) குடியுள்ளும், ஆண்மையுள்- ஆண்மையுள்ளும் (வந்த)—குற்றம்-குற்றங்கள், கெடும் -அழியும் —எ-று (கருத்து,) ஒருவன்சோம்பலைவியாழிக்க அவன்-குடியிலும்ஆண்மையிலும். வந்தகுற்றங்களழியும் - என்பதாம். * சோம்பலைஆளுந்தன்மையாவதுசோம்பலுடைமைக்குணதுவாகிய தமோகுணம்,அவற்றுள்வந்த குற்றமென்றது-சோம்பலாலன்றி முன்னே வேறுகாரணங்களால் நிகழ்ந்தவைகளை அவையும் சோம்பலுடைமையை ஒழித்து முயற்சியுடையவனுக நீங்குமென்பதாம் (கூ)

மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
குறைய தெல்லா மொருங்கு.

இ-ன். மடியிலா-சோம்பலில்லாத, மன்னவன்-அரசன், அடி-(தன்) னடியளவினாலே, அளந்தான்-(எல்லாவுல்கத்தையும்) அளந்தகடவுள், தாமரையதெல்லாம்-கடந்தபரப்புமுழுமுதலையும், ஒருங்கு-ஒருசேர், எய்தும்-அடைவான்—எ-று. (கருத்து.) சோம்பலில்லாவரசன் உலகெலாமடைவான் - என்பதாம். * எப்போதும் தொழிலிடத்தே முயற்சியில் இடையீடில்லாமல் அடைவரனென்பதாம். [இவை இரண்டு பாட்டாலும் சோம்பலில்லாதவன் அடையும்பயன் சொல்லப்பட்டது.]

சுஉ ஆம்-அதி-ஆள்வினையுடைமை.

—*—

அஃதாவது, இடைவிடாத மெய்ம்முயற்சியை யுடையனாதல், அது ஆளும்வினையெனக் காரியத்தாற் சொல்லப்பட்டது. சோம்பலுக்கெதுத்தாலும் தொழிலை முயற்சியால்லாமல் ஆளக்கூடாமையினாலே இது மடியின்மையின் பின்வைக்கப்பட்டது.

அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயர்ச்சி தரும்.

இ-ள். தமதுசிறுமையையோக்கி அறுமையுடைத்தென்று-நாம்இத்தொழிலைமுடித்தால் அருமையையுடைத்தென்றுணர்த்து, அசாவாமைவேண்டும்-தளராதிருக்கவேண்டும், பெருமை - அத்தொழிலைமுடித்தற்குரிய பெருமையை, முயர்ச்சி-முயற்சியானது, தரும்-தமக்குஉண்டாக்கும்—எ-று. (கருத்து.) தொழிலைக்குறித் தருமையென்று தளராதிருக்கவேண்டும் தளராமுயற்சிபெருமைதரும்-என்பதாம். * சிறுமையை நோக்கிவென்றது - பெருமை தருமென்றதனாலும், தொழிலை முடித்தலென்றது -அதிகாலத்தாலும் வருவிக்கப்பட்டன விடாதுமுயற்சிசெய்தால் தாம் பெருமையையுடையவராதலால் அரியதொழில் களும் எளிதிலே முடியுமென்பதாம். (க)

வினைக்கண் வினைகட லோம்பல் வினைக்குறை
தீர்ந்தாரிற் றீர்ந்தன் றுலகு.

இ-ள். உலகு-உலகம், வினைக்குறை - தொழிலாகிய குறையை, தீர்ந்தாரின்-செய்யாதுவிட்டவரை, தீர்ந்தன்று-விட்டது, அதனால் வினைகண் - செய்யத்தகுந்தொழிலிடத்தே, வினைகெடல் - செயலற்றிருக்கையை, ஓம்பல்-ஒழியக்கடவன்—எ-று. (கருத்து.) தொழின்குறையைச்செய்யாதுவிட்டவரை, யுலகம் விட்டது ஆகையால் தொழிற் செய்கையற்றிருக்கையை விடக்கடவன்-என்பதாம். * குறை - அவசியம் வேண்டியபொருள். (உ)

தாளாண்மை யென்னுந் தகைமைக்கட் டங்கிற்றே
வேளாண்மை யென்னுஞ்செருக்கு.

இ-ள். வேளாண்மையென்னுஞ்செருக்கு (எல்லார்க்கும்) உபகாரஞ்செய்தலென்னு நேர்மேம்பாடானது, தாளாண்மை யென்னுந்தகைமைக்கண்-முயற்சியென்னும் உயர்ந்த குணத்தினிடத்தே, தங்கிற்றே நிலைபெற்றதே—என்று. (கருத்து.) உபகாரம்மென்மையமுயற்சியினிடத்து நிலைபெற்றது-என்பதாம். * பொருள்களைகூடுதலால் உபகாரஞ்செய்தற்கு உரியவர் முயற்சியையுடையவரோ பென்றறற்கு அதன்தன்குணத்தினின்மேல்வைத்தும். அம்மேம்பாடானது பிறரிடத்தே இல்லையென்றறற்குத் தங்கிற்றேயென்னுறும் சொல்லினர். [இவைமூன்றுபாட்டாலும்முயற்சியது சிறப்புச்சொல்லப்பட்டது.] (ங)

தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும்.

இ-ள். தாளாண்மையில்லாதான் - முயற்சியில்லாதவன், வேள்ளாண்மை உபகாரியாந் தன்மையுள்ளது, பேடி- சேனையைக்கண்டால் அஞ்சும்-பேடியான வன், கைவாளாண்மைப்போல-(அச்சேனையிடத்தே) கையில் வாளை ஆளுந்தன்மைபோல, கெடும் -இல்லையாம் —என்று. (கருத்து.) முயற்சியில்லாதவ னுபகாரத்தன்மைபேடிகைவாள்போலாம்-என்பதாம். * எப்படிப்பேடியானவள் வாளால்வெட்டிதற்குக்கருத்துடையவளாயினும் அது அவளச்சத்தால் முடியாதோ அப்படியேமுயற்சியில்லாதவன் பலருக்கும் உபகாரஞ்செய்தற்குக் கருத்துடையவனாயினும் அது அவன் வறுமையால் முடியாதென்பதாம், [இதனுள்முயற்சியில்லாதவனது குற்றஞ்சொல்லப்பட்டது.] (ச)

இன்பம் விழையான் விழைவான் றன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண்.

இ-ள். இன்பம்விழையான்- (தனக்கு)இன்பத்தைவிரும்பாதவனாய், வினைவிழையான்-தொழில்முடிந்தலையே விரும்புவோன்; தன்கேளிர்- தன்சுற்றத்தாரும் நட்பாளருமாகியகேளிரது, துன்பம் (பாரத்தின்) துன்பத்தை; துடைத்து- ஒழித்து, ஊன்றும் - (அதனைத்)தாங்கும், தூண் - தூணும்—என்று. (கருத்து.) தனக்கின்பம்விரும்பாதவனாகிமுயற்சியை விரும்புவோன் தன்னுறவினர் துன்பத்தைதந்தாங்குந்தூண் - என்பதாம் * கேளிரதுவறுமையும் தீர்த்து அவனைக்காத்தலுஞ்செய்யவல்லவனுமெனவே தனக்கு அவைசெய்து கொள்ளுதல்சொல்ல வேண்டுவதில்லை யாயிற்று, காரியமாகிய இன்பத்தை விரும்பாமல்காரணமாகிய முயற்சியை விரும்புவோன் எல்லாப்பயன்களும்அடைவானென்றதனால் அக்காரணத்தைவிட்டு அக்காரியத்தைவிரும்புவோன் ஒரு

பயனும் அடையாளனென்பது பெறப்பட்டது. (எகதேசவுருவகம்)[இதனுல் அதனையுடையவனது ஆண்மைசொல்லப்பட்டது.] (நு)

முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
யின்மைபுகுத்திவிடும்

இ-ள். முயற்சி. (அரசனிடத்தே உண்டாகிய) முயற்சியானது திருவினை (அவரது) செல்வத்தை ஆக்கும்- வளர்க்கும், முயற்றின்மை- அம்முயற்சியில்லாமையானது, இன்மை- வறுமையை, புகுத்திவிடும்- அடைத்துவிடும்—என்று. (கருத்து.) முயற்சி செல்வத்தை வளர்க்கும் அம்முயற்சியில்லாமை தரித்திரத்தைகொடுக்கும்-என்பதாம். * இக்கேசெல்வம்-பந்துநிருமூதலாகிய அறுவகை அங்கங்கள், வறுமை அவையில்லாதவாதல், அதனை அடைவித்துவிடவே பகைவரால் அழிவென்பது கருத்து. (சு)

மடியுளான் மாமுகடி யென்ப மடியிலான்
முகளா டாமரையி னுள்.

இ-ள். மாமுகடி -கரியமூதேவியானவள், மடில்(ஒருவனது)சோம்பலினிடத்தே, உளாள்- இருப்பாள், தாமரையினுள்-சீதேவியானவள் மடியிலான்-சோம்பலில்லாதவனது, தாள்- முயற்சியினிடத்தே, உளாள்- இருப்பாள், என்ப- என்று (அறிந்தோர்)சொல்லுவர்—என்று (கருத்து.) மூதேவிசோம்பலுடையவனிடத்திருப்பாள், சீதேவிசோம்பலில்லாதவனிடத்திருப்பாள்-என்பதாம். * பாவத்தின் கருமை அதன்பயனாகிய முகடிமேலேற்றப்பட்டது சோம்பலையும் முயற்சியையும் உடையவரிடத்தே அவர்களிடத்தில அவைகளின்மேலே ஏற்றினர். [இவையிரண்டுபாட்டாலும் அவ்விரண்டுக்கும்- ஏதுக்கள் சொல்லப்பட்டன]

பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவதிற்
நாழ்வினை யின்மை பழி.

இ-ள். பொறியின்மை. (பயனைத்தருவதாகிய) விதியில்லாமை, யார்க்கும், யாவருக்கும், பழியன்று-பழியாகாது, அதுவரிந்து-அறியவேண்டுமவைகளை அறிந்து, ஆள்வினையின்மை - தொழில்செய்யாமையே, பழி- பழியாகும்—என்று. (கருத்து.) யாவருக்கும் விதியில்லாமை பழியாகாது முயற்சியில்லாமை பழியாகும்-என்பதாம். * அறியவேண்டுமவை வலிமுதலானவையாம், ஊழ்பொருந்தாத விடத்தே தொழில்செய்தலாலே பயன் இல்லையென்பானைநோக்கி உலகம் பழையவினைபற்றிப் பழியாது இவ்விடத்தே தொழில்செய்யாத குற்றமுடைமை பற்றியே பழிப்பென்றார். அதனால் விடாதுமுயல்கவென்பது கருத்து. (அ)

தெய்வந்தா னுகா தெனினு முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும்.

இ-ள். (முயற்சிசெய்தல்தொழில்) தெய்வத்தால்- ஊழ்வகையால், ஆகாதெனினும்- (நிலைக்கப்பட்டபயனைத்) தராதாயினும், முயற்சி-முயற்சி, தன்மெய்-தனக்கிடமாகிய உடம்பு, வருத்தக்கூலி- (வருந்திய) வருத்தத்தின் கூலியளவு, தரும் - கொடுக்கும்- (பாழாகாது)—எ-று. (கருத்து.) ஊழில்லாவிடினு முயற்சிபலனைத்தரும் - என்பதாம் * ஊழினுல் ஆகியவிடத்துத் தன்னள்விஞ்மிதுந்த பயனைந்தருமென்பது உம்மையால்பெற்றும், ஆனவிடத்தும் ஆகாவிடத்தும் பாழாகாமையால ஊழைநோக்கி இராமல் முயல்கவென்பது கருத்து. (கூ)

ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துளுற்று பவர்.

இ-ள். ஊழையும்(பயனைவிலக்குவதாகிய)ஊழையும், உப்பக்கங்காண்பர்- புறக்காண்பார். உலைவின்றி-(அவ்விலக்குகற்கு) இளையாமல், தாழாது- தாழ்வற, உளுற்றுபவர் - (தொழிலை) முயல்வோர்—எ-று. (கருத்து.) இடைவிடாது முயற்சிசெய்வோர் விதியையும் விலக்குவார் - என்பதாம் * தாழ்வருதல்- ஆலோசனையிலும் வலிமுதலானவை யறிதலிலும், செயலிலும், குற்றமறுதல், ஊழான தொழிலை ஒருகால்- இருகால் அல்லாமல் விலக்காமையாலே பலகாலும்முயற்சிசெய்வோர் பயனை அடைவரென்றற்கு உப்பக்கங்காண்ப வென்றார். [ஊழினுலே இடுக்கண்வரினும் முயற்சிவிடாத்தக்க தல்லவென்பது இம்மூன்றுபாட்டாலும் சொல்லப்பட்டது.] (ஙி)

சுஙட-ஆம்-அதி-இடுக்கணழியாமை

அஃகாவது, தொழிலிலேமுயல்பயன் ஊழினுலாவது, பொருளில்லாமையிலாவது, மெய்வருத்தத்தாலாவது, தனக்குத் துன்பம் வந்தவிடத்து அதற்கு மனங்கலங்காமை. அதிகாரமுறைமையும் இதனுலேவிளங்கும்.

இடுக்கண் வருங்கா னகுக வதனை
யடுத்தூர்வ தஃதொப்பதில்.

இ-ள். (ஒருவன்) இடுக்கண்-துன்பமானது, வருங்கால் (வினையினுலேதனக்கு) வருமிடத்து, நகுக- (அதற்கு அழியாமல்) உள்ளமகிழ்க, அதனை- அத்துன்பத்தை. அடுத்து-மேலுமேலுமாய், ஊர்வது கடவன், அஃ- அத்துன்பத்தை. அடுத்து-மேலுமேலுமாய், ஊர்வது ஒருக்கவல்லது, அஃதொப்பது அம்மகிழ்ச்சிபோல்வது, இல் - மேவாமை) இல்லை—(ஆகலால்)—எ-று. (கருத்து.) ஒருவன் துன்பம் வரும்போது மகிழக்கடவன் அத்துன்பத்தை ஒருக்கக்கடவன் = என்

பதம் * தொழில் நன்முக முடிந்தவிடத்தே? உண்டாவதான மகிழ்ச்சியை அதற்கு நடுவிலே துன்பம் வருமிடத்து உட்கொண்டால் அனன் அழிவின்றி மனவெழுச்சியால் அதனைக்கள்ளி அக்குறை மூடிக்க வல்லனாவா னதலில் அதனையடுத்தூர்வ தம்தொப்பதில் லென்னர். (ச)

வெள்ளத் தனைய விடும்பை யறிவுடையர
வள்ளத்தி னுள்ளக் கெடும்.

இ-ள். வெள்ளத்தனைய-வெள்ளம்போலேகனாயில்லாத, —இடும்பை-துன்பமெல்லாம், அறிவுடையார்- புத்தியுள்ளவர், உள்ளத்தி ன்* உள்ளத்தினாலே, உள்ள-(ஒன்றை)நினைத்தவளவிலே, கெடும்-அழியும்—எ-று.(கருத்து.) அறிவுள்ளவ னென்றைகினைக்கத் துன்பமெல்லாங்கெடும்--என்பதாம் * துன்பமாவது - உள்ளத்து ஒருகோட்பாடேயென்பதும் - அதுமாறுபாடாகக்கொண்டால் நீங்குமென்பதும்- அறியவேண்டுதலால் அறிவுடையாரெனன்று, அவ்வுபாயத்தி னெளிமைதோன்ற - உள்ளத்தினுள்ளவென்றும், சொல்லினர். [இவ்விரண்டுபாட்டாலும் ஊழினலாகிய் இடுக்கணில் அழியாமைக்கு உபாயம்சொல்லப்பட்டது.] (உ)

இடும்பைக் கிடும்பை படுப்பர் விடும்பைக்
கிடும்பை படாஅ தவர்.

இ-ள். இடும்பைக்கு- (தொழில்செய்யும்போது அதற்கு நடுவிலே வந்த) துன்பத்திற்கு, இடும்பைப்படாதவர் - வருந்தாதவர், இடும்பைக்கு - அத்துன்பத்திற்கு, இடும்பை - துன்பத்தை, படுபவர்-உண்டாக்குவார்—எ-று. (கருத்து.) துன்பத்திற்குத் துன்பப்படாதவர் துன்பத்திற்குத் துன்பத்தைக் கொடுப்பர் - என்பதாம். * வருந்துதல் இளைத்துச் செய்யாமல் விடாதினைத்தல்- மனத் திடமுடையராய் விடாது முயன்றல் தொழில்முடிவு பெறுப்பயன் படுமாதலால் எல்லாத்துன்பங்களும் நீங்குமென்பதுபற்றி- இடும்பைக்கிடும்பைபடுப்பவென்றார், வருகின்ற பாட்டிரண்டிலும் இதற்கு-இப்படியே பொருள்கொள்க. (ங)

மடுத்தவா யெல்லாம் பகடன்ன ஐற்ற.
விடுக்க னிடர்ப்பா டுடைத்து.

இ-ள். மடுத்தவாயெல்லாம்- தடைபட்டவிடங்களிலெல்லாம், பகடன்னான்- (பண்டியையிழுத்துச்செல்லுங்) கடாப்போலே தொழில் மேற்கொண்டுசெலுத்தவல்லவனை, உற்ற- அடைந்த, இடுக்கண் -துன்பமானது, இடர்ப்பாடு- (சாதனை) துன்பப்படுதலை, உடைத்து- உடைத்தாம்—எ-று. (கருத்து.) தொழில்செய்யவல்லவனையடைந்த - துன்பமானதுதானே துரப்படும்-என்பதாம். * தடைபடுமிடங்கள்- பண்டிக்குச்

சேற்று நிலமுகலானவையும் தொழிலுக்கு இடையூறுகளும், ஆ
ம், கடா-பக்தி-லொற்றியும், மூச்சுப்பிடிதலும், கால்மடக்கியும். அ
நிலைசெலுத்தும்விதம்போல் தன்னெய்வருந்தம் நோக்காமல் முயன்
று செலுத்துவானென்றற்கு-பகடன்னுயிர்னென்றார். (சு)

அடுக்கி வரினு மழிவிலா னுற்ற
விடுக்க ணிடுக்கட் படும்.

இ-ள். அடுக்கிவரினும் இடைவிடாதுமேலுமேலும், வந்தன்வாயி
றும், அழிவிலான் - (தன்னுளளக்கோட்பாடு) விடாதவனை, உற்ற- அ
டைந்த, இடுக்கண்-துன்பமானது, இடுக்கட்படும் - (தான்) தன்பத்தி
லேபடும்—எ-று. (கருத்து.) தைரியம்விடாதவனை யடைந்ததுன்பமா
னது துன்பப்படுமு - ஏன்பதாம். * ஒன்றேபலகாலும், வேறுப
லகலந்துவருதலும், அடுக்க - அடுக்கிவரினுமென்றார், அழிவென்னுங்
காணப்படையர் - காரியத்தின்மேல்நின்றது. [நினைமூன்றுபாட்டாலும்
ம் ஊழாலாகிய துன்பத்திற்கு அழியாமை சொல்லப்பட்டது.] (நி)

அற்றே மென்றல்லற் படுவோ பெற்றேமென்
றேம்புத றேற்றாதவர்.

இ-ள். பெற்றேமென்று (செல்வஞ்சேர்ந்தபோது), பெற்றேமென்று,
ஓம்புதல் - உலோபஞ்செய்தலை, தேற்றாதவர் - அறியாதவர், அற்றே
மென்று (வறுமைகாலத்திலே) வறியேமாதலுமென்று, அல்லற்படு
பவோ - (மனந்தளர்தலே) துன்பப்படுவாரோ—எ-று. (கருத்து.) செல்
வத்திலுலோபஞ்செய்யாதவர் வறுமையில்விசனப்படார்- என்பதாம். *
பெற்றவிடத்து உலோபஞ்செய்யாமையை நோக்கி அற்றவிடத்தும் ம
ந்திரிமுதலானவர்கள் விட்டுக்கொடாமையால் - அல்லற்படுதலில்லையாயி
ற்று, [இதனுள்ள பொருளிலலாமையாற்றல் வந்துதுன்பத்துக்கு அழியா
மையும், அதற்கு உபாயமும் சொல்லப்பட்டன.] (கூ)

இலக்க முடம்பிடும்பைக் கென்று கலகந்தை
கையாறுக் கொள்ளாதா மேல்.

இ-ள். மேல்-அறிவுடையார், உடம்பு- தேகமானது, இடும்பைக்கு-
துன்பமாகியவாளுந்கு, இலக்கமென்று-குறியிடபென்றுதெளிந்து, க
ந்தை - (தம்மேல்வந்த) துன்பத்தை, கையாறு-துன்பமாக, கொ
ளாதாம்-கொள்ளார்—எ-று (கருத்து.) அறிவுடையவன் துன்பத்தை
த் துன்பமாகக்கொள்ளான்-என்பதாம். * (இடும்பையை வாளென்னும
ல் உடம்பை இலக்குமென்றதனுல் வந்தேதுவுபமை) இருள்போகக்கொ
ள்வதொன்றறிந்து. (எ)

இபம் விழையா னிடும்பை யியல்பென்டான்
றுன்ப முறுத லிலன்.

இ-ள். இன்பம்-(தன்னுடம்பிற்கு) இன்பமானவைகளை, விழையா-ன்-விரும்பாதவனாகி, இடும்பை-(வினையால்) துன்பமடைதல், இயல்பென்-பான்-இயல்பென்று தெளிந்திருப்பவன், துன்பமுறுதலின்-(கன்முயற்சியால்) துன்பமடையான்—எ-று. (கருத்து.) இன்பத்தை இச்சியாதவனாகித் துன்பத்தையியல்பென்று நினைப்பவன் துன்பமடையான் என்பதாம். * இன்பம்விரும்பினாலும், இயல்பென்னாது வராமல்காத்தற்கரிதினாலும், துன்பம்விரும்பாதலால் இவ்விரண்டும் செய்யாதவனை துன்பமுறுதலிலனென்றார்,

(அ)

இன்பத்துளின்பம் விழையாதான் றுன்பத்துட்
டுன்ப முறுத றிலன்.

இ-ள். இன்பத்துள்-(வினையினால்) இன்பம்வந்தவிடத்து, இன்பம்-அவ்வின்பத்தை, விழையாதான்-(அனுபவித்துக்கொண்டேமனத்தால்) விரும்பாதவன், துன்பத்துள்-துன்பம்வந்தவிடத்தும், துன்பம்-அத்துன்பத்தை, உறுதலிலன்-(அனுபவித்துக் கொண்டேமனத்தால்) அடையான்—எ-று.(கருத்து.) இன்பத்தை இச்சியாதவன் துன்பத்தில் விசனப்படான்-என்பதாம், * துன்பமுயர்ச்சியால்வரும்விடுக்கண் இரண்டும் ஒருதன்மையாகக்கொள்ளலால்பயன்களும் இலவாயின.(கூ)

இன்னுமை யின்ப மெனக்கொளி னுகுத்தன்
னென்னுர் விழையுஞ் சிறப்பு.

இ-ள். (ஒருவன்தொழில்செய்யுமிடத்து) இன்னுமை-(முயற்சியால்வரும் துன்பத்தையே, இன்பமெனக்கொளின் (தனக்கு) இன்பமாகவினைத்துகைகொள்ளுவானாயின், (அதனால்) தன்னென்னுர்-தன்பகைவர், விழையும்-தன்குமதித்தற்கு விருப்பமாகிய, சிறப்பு-உயர்ச்சியானது-ஆகும்-உண்டாகும்—எ-று (கருத்து.) துன்பத்தை யின்பமாகக் கொள்வானாகி லவன்பகைவராலே மதிக்கப்படு முயற்சியடைவான்-என்பதாம். * துன்பந்தானும்உயிர்க்கு இயல்பன்றிக்கணிதமாய்மனத்தினிடத்தேநிகழ்வதைக் கோட்பாடாகவின் அதனைமாறுபடக் கொண்டால் அதற்கு அழிபாமல் மனமகிழ்ச்சியுடையனாகி அதனாலேதொடங்கிய தொழிலை முடிக்கவல்லவனாகுமென்பது கருத்து. [இவைதான்குபாட்டாலும் மெய்வருத்தத்தாலாகி துன்பத்துக்கு அழிபாமையும், அதற்கு உபாயமும், சொல்லப்பட்டன.]

(ஈ)

அங்கவியல்.

இனிமுறையானே அரசியலுடத்துதலிலே ஒன்றகொன்றுதொ டுணையாகிய] அங்கங்களது இயல்பை முப்பத்திரண்டு அதிகாரத்தாலே சொல்லத்தொடங்கி அவ்வங்கங்கள் ஆறனுள்ளும் ஆக்கினைசக்கரத் தைச் செலுத்தலிலே அவ்வரசனுக்குச் சமானமாகிய அமைச்சனது இயல்பு பத்தாதிகாரத்தினாலே சொல்லத்தொடங்கி முதலிலே அமைச்சுச்சொல்லுகின்றார்.

சூசு-ஆம்-அது-அமைச்சு.

அஃதாலது, அமச்சனது தன்மை, அத்தன்மை அவன்குணங்களும் செய்கைகளும் ஆம்.

'கரிவியுங் காலமுஞ் செய்கையுஞ் செய்யு
மருவினையு மான்ட தமைச்சு.

இ-ள். (தொழில்செய்யும்போது) கருவியும்-(அதற்குவேண்டுஞ்) சாதனங்களும், காலமும்-(அதற்குஏற்ற) காலமும், செய்கையும்-(அது) செய்யும்விதமும், செய்யுமருவினையும்-(அவ்விதத்திலே செய்யப்படும் அரியதொழில்களும், மாண்டது-பொருந்தவெண்ணவல்லவனே, அமைச்சு-மந்திரியாவான்—எ-று. (கருத்து.) கருவியும்-காலமும் செய்கையும் தொழிலும் இவற்றையெண்ணவல்லவன் மந்திரி-என்பதாம். * சாதனங்கள்-சேனையும், பொருளும், காலம்-அத்தொழிலைத் தொடங்குங்காலம், செய்கையெனவே அது தொடங்கு முபாயமும், இடையூறுநீக்கி முடிக்கும் விதமும், அடங்கின, சிறியமுயற்சியினாலே பெரியபயன் தருமென்றற்கு அருவினையென்றார். இவ்வர்த்தையும் வடநூலார்மந்திரத்திற்கு அங்கமென்பார். (க)

வன்கண் குடிகாத்தல் கற்றறித லொள்வினையோ
டைந்துடன் மான்ட தமைச்சு.

இ-ள். வன்கண்-(தொழில்செய்தலிலே) அசைவில்லாமையும், குடிகாத்தல்-குடிகளைக்காத்தலும், கற்றறிதல்-(நீதிநூல்களைக்) கற்று(விதிலக்குகளை, அறிதலும், ஒள்வினை-முயற்சியும், ஐந்துடன்-(முன்சொல்லப்பட்ட) அங்கங்களைந்துடனே, மாண்டது-திருந்தடையவனே, அமைச்சு-மந்திரியாவான்—எ-று. (கருத்து.) அசைவில்லாமையும் குடிகளைக்காத்தலும் கற்றறிதலும் முயற்சியும் உடையவன் மந்திரி-என்பதாம். * இவ்வன்கையும் முன்னேபவைகளோடு சேர்த்துச்சொல்லியது-அவைகளும் இவைகளோடுகூடியே மாட்சிமைப்படவேண்டு

மென்பனை அறிவித்தற்கும் அவை ஐந்தென்னுந் தொகைக்கும்; என்க. (உ)

பிரிதலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருதலும் வல்ல தமைச்சு.

இ-ள். (போர்வந்தவிடத்து) பிரிதலும் - பகைவர்க்குத் துணையாயினவனை அவனொழிட்டுப் பிரிக்கவேண்டினால் பிரிதலும், (பேணிக்கொளலும்) தம்மிடத்தேதானை அவர் பிரியாமற்கொண்டுபினாலும், இன்சொல்லினாலும் - கர்த்துக்கொள்ளுதலும்; பிரிந்தார் - (தம்மைவிட்டுப்பிரிந்தமைவனைவிட்டும்) பிரிந்தவனை, பொருதலும் - மறுபடிபொருதற்கேண்டினால்) பொருதலும்; வல்லது - வல்லவனே; அமைச்சு - மந்திரியாவான்—என்று. (கருத்து.) பிரிக்கலும் - காத்தலும் - பிரிந்தவனைப்; பொருந்தச்செய்தலும் வல்லமையுடையவனே மந்திரி - என்பதாம். * இவைகளுள் அப்பொழுதை நிலைக்கு ஏற்றசெயலறிதலும், அதனை அவரியாமல் அதற்குவேற்ற உபாயத்தால் முடிவுறப்பிடித்தலும், அருமையாதல் நோக்கிவல்லதென்றார், பொருதலுக்குச் சந்தியென்றும், பிரிதலுக்கு விக்கிரகமென்றும், பெயர்கள். (ங)

தெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு.

இ-ள். (ஒருகாரியச்செய்கை பலவிதமாகத்தோன்றினால்) தெரிதலும்- (அவற்றுள் ஆவன்த) ஆராய்ந்தறிதலும், தேர்ந்து செயலும் - (அதுசெய்யும்போதுபலிக்கும் விதமும்) நாடிச்செய்தலும், (சிலரைப்பிரிக்தல் பொருத்தல்செய்தலில்) — ஒருதலையாச்சொல்லலும் - (அவர்க்கு இதுவேறம்பத்தக்கதென்று) துணிவுபிறக்கும் வகைசொல்லலும், வல்லது - வல்லவனே; அமைச்சு -மந்திரியாவான்—என்று. (கருத்து.) ஆராய்தலும் ஆராய்ந்துசெய்தலும் ஒருதலையாகச்சொல்லலும் வல்லவனே மந்திரி-என்பதாம். * தெரிதல்செயலின் மேலாயிற்று- வருகின்றதனால். (ச)

அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான்றுந்
திறனறிந்தான் தேர்ச்சித் துணை.

இ-ள். அறன் (அரசனுலேசெய்யப்படும்) அறங்களை; அறிந்து-தெரிந்து, ஆன்றமைந்த - (தனக்குஏற்ற கல்வியாலே; நிறைந்தமைந்த, சொல்லான் - சொல்லையுடையனாகி, எஞ்ஞான்றும்-எந்நாளிலும், திறன் - (தொழில்செய்யுந்) திறங்களை, அறிந்தான் - அறிந்தவன், தேர்ச்சி-ஆலோசனைக்குத்துணை - அவனுக்குத்துணையாவான்—என்று.(கருத்து.) தருமங்களையறிந்து தொழில்செய்யுந்திறங்களைத் தெரிந்தவன் மந்திரி என்பதாம். * தன்னைசூழ்ந்த காலத்திலும் பெருகியகாலத்திலும் நடுவானகாலத்திலும் என்றற்கு எஞ்ஞான்றுமென்றார். [இவ்வைந்துபாட்டாலும் மந்திரிகளது குணத்தன்மைசொல்லப்பட்டது.] ()

மதிறுட்ப தூலோ டிடையார்க் கதிறுட்பம்
யாவுள முன்னிற் பவை:

இ-ன்: மதிறுட்பம - இயற்கையாகியபுத்திறுட்பத்தை; தூலோடு: செயற்கையாகிய நூலறிவோடு, உண்டையார்க்கு - உடையமந்திரிகளுக்கு, அதிறுட்பம் - அதிகதுட்பத்தையுடைய ஆலோசனைக்களாய்; முன்னிற்பவை-எதிர்நிற்பவை, யாவுள-எவையுள—எ-று. (கருத்து.) புத்திறுட்பத்தையுடைய மந்திரிகளுக்கு முன்னிற்கு மாலோசனைகளெவ்வுள - என்பதாம். * தூல்-அதனறிவுக்கும், அதிறுட்பம் - அதனையுடையஆலோசனைக்கும், ஆகுகலால் ஆகுபெயர்கள், முன்னிற்றல் - பகைவராலோசனையால் தம்மாலோசனை அழியாதுநிற்றல், பகைவராலோசனையை தாம் அறிந்து அழித்து அவரறிந்து அழியாதனவைகளைத் தாம் ஆலோசிப்பவனென்பது கருத்து. [இதனுல் அவரது சிறப்புச்சொல்லப்பட்டது.] (சூ)

செயற்கை யறிந்தக் கடைத்து முலகத்
தியற்கை யறிந்து செயல்.

இ-ன். செயற்கை - நூல்வழியினுல்தொழில்செய்யுந்திறத்தை; அந்நிந்தக்கடைத்தும்- அறிந்தவிடத்தும், உலகத்து - உலகத்திலே; இயற்கை-அப்போதுநடக்கின்ற இயற்கையை, அறிந்து - தெரிந்து, செயல்: அதனைஒடுபொருந்தச்செய்யக்கடவன்—எ-று: (கருத்து:) தொழில்செய்யுந் திறங்களையறிந்தாலும் உலகநடக்கையையறிந்துசெய்யக்கடவன்-என்பதாம். * நூல்வழியேயாயினும் உலகவழியோடு பொருந்தாதவைகளைச்செய்தால் அவ்வுலகம் பழிக்குமென்று உலகியற்கையினறிவினுல் பயன்சொல்லியபடி. (எ)

அறிகொன் றறியா னெனினு முறுதி
யுழையிருந்தான் கூறல் கடன்.

இ-ன். அறிகொன்று-அறிந்து சொல்லினவர்தம அறிவையும் அழித்து, அறியானெனினும்-தானும் அறிவானேயாயினும், அக்குற்றநோக்கிக்கையிடாமல், உற்றி- அரசனுக்குஉறுதியானவைகளை, கூறல்-சொல்லுதல்; உழையிருந்தான்- மந்திரியினது, கடன்-முறையாகும்—எ-று (கருத்து.) சொன்னவர்றிவை யழித்துத் தானறியாதெனினும் அரசனுக்குறுதியானவைகளைச்சொல்லுதல் மந்திரியின் கடமையாம்- என்பதாம். * அழித்தல்- தான்கொள்ளாமல் மேலும்இகழ்ந்துசொல்லல், உற்றி சொல்லாதபோது அவன்மூடிவெய்தும் குற்றத்தை உலகந்தன்மேல் ஏற்றுமென்றற்கு: கூறல்கடனென்றார். [இவையிரண்டுபாட்டாலும் அவர்செயல் சொல்லப்பட்டது.] (அ)

பழுதென்னு மந்திரியிற் பக்கத்துட் டெவ்வர்
தொழுபது கோடி யுறும்.

இ-ள். பக்கத்துள்=பக்கத்திலிருந்து, பழுதகல்லும்-நீங்குசெய்ய வெண்ணும், மந்திரிமிசை-மந்திரியொருவனில், நெஞ் - (அரசனுக்கு) எதிர்நிற்பவர் ஓரொழுபதுகோடி ஓரொழுபதுகோடிபகைவர், உறுப்,உறுவர்—என-று. (கருத்து-) அரசனுக்குத் தீங்குசெய்யு மந்திரியொருவனே எழுபதுகோடி பகைவரிலுங் கொடியன்-என்பதாம். * எழுபதுகோடியென்றது, மிகவும் பலவாகிய எண்ணிக்கைக்கு ஓன்றுகாட்டியபடி அவர்வெளிப்பட்டுநிற்கையால் அவருக்குத் தப்பலாம் உட்பகையாய்நிற்றலால் இவற்றுக்குத் தப்புதல் கூடாதென்பது பற்றி இப்படிச்சொல்லினர்.

(சு)

முறைபடச் சூழ்ந்து முடிவிலவே செய்வர்
திறப்பா டிலாஅ தவர்.

இ-ள். (செய்யப்படுந்தொழில்களை) - திறப்பாடு-(முடித்தற்கு ஏற்ற) கூறுபாடு, இலா அதவர்-இல்லாதவர், முறைபடச்சூழ்ந்தும்-(அவ்வகளை முன்னே) அடைவுபடஆலோசித்திருந்தும், முடிவிலவேசெய்வர், (செய்யும்போது அவைகள்) முடிவில்லனவே செய்யாநிற்பர்—என-று. (கருத்து.) செய்தொழிலிலே திறமில்லாமந்திரிகள் முன்பாலோசித்தும்பின்பு முடிவில்லாமற்செய்வார்கள் - என்பதாம். * அக்கூறுபாடாவன-வந்தவந்த இடையூறுகளுக்கு எற்றனற்ற பரிகாரம் அறிந்துசெய்தலும், காம்திடமுடையவராதலும், ஆம்.தப்பாமல்ஆலோசிக்கவல்லவராயிருந்தும்.செய்து முடிக்கமாட்டாதவரும் உண்டென்பதாம். [இவையிரண்டுபேபாட்டாலும் மந்திரிகளுள் விடப்படுவாரது குற்றம்சொல்லப்பட்டது.

(ஏ)

சுருஅ-ஆம்-அதி-சொல்வன்மை.

ஆம்.காவது, தான் கினைத்த தொழில்முடியும் வழியால் வார்த்தை சொல்ல வல்லவனாதல், முன்னதிகாரத்திலே ஒருதலையாச்சொல்லுமென்றதையே சிறப்புப்பற்றிவிரித்துச்சொல்லுதலால் அதன்பின் வைக்கப்பட்டது.

நூலை மென்னூலனுடைமை யந்நூலம்
யாவரத் துள்ள தாஉ மன்று.

இ-ள். ம்ந்திரிகளுக்கு அவசியம்வேண்டியகுணமாவது) நூலமென்னும்- நூலமென்றுசிறப்பித்துச்சொல்லப்படும், நலனுடைமை-நலத்தினையுடையராதல், அந்நூலம் - அந்நூலமான்று, (பிறர்க்கும்) யாவரத்து-பிறநூலங்களிலெல்லாம், உள்ளதூஉமென்று = அடங்குவதன்று;

மிருக்கறு (ஆகலால்)—எ-று. (கருத்து.)மந்திரிகளுக்கு நாகலம் போல வேறுகலமில்லை-எனபதாம். * நாகலம்-நாவாலுளதாகிய கலமென விரியும், இக்கலம் -உலகத்தைநடத்தம்வசமாக்கும் மந்திரிகளுக்கு வேறுவிருக்கவேண்டுமென்னும் நீதிநூல்வழக்கம்பற்றி-நாகலமென்றும், பிறருக்கும் இதுபோற் சிறந்ததுவேறில்லானமையால்- அந்நலம் யாகலத்துள்ளதுஉமன் றென்றுங், சொல்லினூர், பிரிதல் பொருதல்முதலாகிய தொழிலில்லார்க்கும் இது அவசியம் வேண்டுவதனால் அத்தொழிலுடைய மந்திரிகளுக்குச்சொல்லவேண்டுமோ வெனப்பது கருத்து. (க)

ஆக்கமும் கேடுமதனால் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு.

இ-ள். (மந்திரிகள்)சொல்லின்கண்-சொல்லிடத்து,சோர்வு-சோர்தலிலாதிருத்தோம்பல்- (தம்மிடத்தேதவுண்டாகாமல்) காக்கக்கடவர், (தம்மரசனுக்கும் அவனங்களுக்கும்) ஆக்கமும்-பெருக்கமும், கேடும் - அழிவும், அதனால்-அச்சோர்விலாலே, வருதலால் - வருகையால்—எ-று. (கருத்து.) செல்வமும், கேடும், சொல்லால்வருதலால்மந்திரிகள் சொற்சோர்வு வாராமற்காக்கக்கடவர் - என்பதாம்.. * ஆக்கத்துக்குஏதுவாகியகல்லசொல்லையும், கேட்டுக்கு ஏதுவாகிய தீயசொல்லையும், சொல்லென்கிற-ஒப்புமைபற்றி - அதனாலென்றார் இவர் சொற்சோர்வு மற்றைச்சோர்வு போலாகாமல் உயிர்களுக்கெல்லாம் ஒரு சேரவருதலால்-காத்தோம்பலென்றார். [இவைஇரண்டெபோட்டாலும் சொல்வல்லமை மந்திரிகளுக்கு அவசியம் வேண்டுமென்பது சொல்லப்பட்டது.] (உ)

கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க்கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்

இ-ள். (கேட்டார்ஏற்பாம்) யேற்றுக்கொண்டவனை,பிணிக்கும்-(பின்வேறுபடாமற்) கட்டும், தகைகுணங்களை, அவாய்-அவாவி, -கேளாரும்- (மற்றைப்பகையா) யேற்றுகொள்ளாதவரும், வேட்ப- (பின் அப்பகைமையொழிந்துகட்பினை) விரும்பும் வண்ணம், மொழிவது-சொல்லப்படுவதே,சொல் - சொல்லாம்—எ-று. (கருத்து.) கேட்டாருங்-கேளாதவரும் இச்சிக்கச்சொல்வதேசொல்லாம் - என்பதாம். * அக்குணக்களாவன வழுவில்லாமை, சொற்சுருங்குதல் - பொருள்விளங்குதல், இனிதாதல்-மேலானபயனைத்தருதல், இவைமுதலானவை, அவைகளை அவாவுதலாவது - அச்சொல்சொல்லுவான்குறித்த பொருளையேயன்றிவேறேபுத்தி நாட்டமுடையவராலே கொள்ளப்பட்டவைகளின்மேலும் நோக்குடைத்தாதல், இதனால் சொல்லினது இலக்கணம் சொல்லப்பட்டது.] (ஊ)

திறனறிந்துசொல்லுக சொல்லியறனும்
பொருளுமதனினூஉங் கில்.

இ-ள்.(மந்திரிகள்) சொல்லை-அப்படிப்பட்டசொல்லை, திறன்-(தம்மு டையவும் கேட்பாருடையவுமன திறங்களை, அறிந்து-தெரிந்து, சொல்லுக - சொல்லக்கடவர், அச்சொல்லுக்கு - அப்படி சொல்லுதற்குமேற்பட்ட, அறனும்பொருளும் - தருமமும்பொருளும், இல்- இல்லை, (ஆதலால்)—எ-று. (கருத்து.) மந்திரிகள் சொற்றிறங்களையறிந்து சொல்லக்கடவர்-என்பதாம். * அத்திறங்களாவன - குடிப்பிறப்பு, கல்வி-ஒழுக்கம், செல்வம்-உருவம் -பருவம்-என்பவைகளால் வருந்தகுதி வேறுபாடுகள்.* அவைகளை அறிந்து சொல்லுதலாவது-அவைகளாலே தமக்கும் அவர்க்குமுண்டாகிய உயர்வுதாழ்வுகளை அறிந்து அவரவர்க்குத்தகுந்த மாயினாலே சொல்லுதல், அது உயர்ந்தோர்களையொடு பொருந்தலையும், இனிமையையும், தருகலால் அறனுமாயிற்று. தமதுகாரியமுடிதலாலே பொருளாயிற்று, அறனும் பொருளும் எனக்காரணத்தைக்காரியமாக்கிச்சொல்லினர். (ச)

சொல்லுக சொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து.

இ-ள். சொல்லை - தாம்சொல்லக்கருதியசொல்லை, வெல்லுஞ்சொல் - வெல்லவல்லசொல்லாகிய, பிறிதோர்சொல்-பிறிதோர்சொல், இன்மை-இல்லாமையை, அறிந்து-தெரிந்து, அச்சொல்லை - அந்தச்சொல்லை, சொல்லுக - சொல்லக்கடவர்—எ-று (கருத்து.) பிறர்சொல்லுஞ் சொல் வெல்லுஞ்சொல்லில்லாமையைக்கண்டு சொல்லக்கடவர்- என்பதாம். * பிறிதோர்சொல்லாவது - பகைவரது எதிரானசொல், வெல்லுதல் - குணங்களாலே மிகுதல் அதுவே வெல்லச்சொல்லுக வென்பதாம். (ரு)

வேட்பத்தாசொல்லிப்பிறர்சொற் பயன்கோடன்
மாட்சியின் மாசற்றூர் கோள்.

இ-ள். வேட்ப-(பிறர்தன்னைக்கேட்டது) விரும்பும்படி, தான்சொல்லி-தாங்கள்சொல்லி, பிறர்சொல் - (பிறர்தமக்குச்சொல்லுஞ்) சொல்லினது, பயன்கோடல்-பயனைக்கொண்டுவிடுதல், மாட்சியில் - (மந்திரிலக்கணத்திலே, மாசற்றூர்-குற்றமற்றவரது, கோள்-தணிவு—எ-று. (கருத்து.) பிறரிச்சிக்கும்படி சொல்லிபிறர்சொற் பயனைக்கொள்ளுதல் மந்திரிகள் கொள்கையாம்-என்பதாம். *பிறர்சொற்களிலேகுற்றமுளவாயினும் அவைநோக்கி இகழாதொழ்பதாம். வல்லமை இல்லாதவனை யிகழ்தல் = வல்லவர்க்குத் தகுதியல்லாமையால் இதுவும் உடன்

சொல்லினர்.[இவைமூன்றுபாட்டாலும் அகனைச்சொல்லும்விதம்சொல்லப்பட்டது.] (சு)

சொலல்வல்லன் சோர்விலன் ஞாலசா னவனை
யிகல்வெல்லல் யார்க்கு மரிது.

இ-ள். (தான்எண்ணியகாரியங்களை சொல்லவல்லன் - பிறர்க்கு ஏற்கச்) சொல்லுதல்வல்லவனாகிய, (அவைமிகவும்பலவானவிடத்தே) சோர்விலன்-(ஒன்றிலுஞ்)சோர்வில்லாதவனாகிய, அஞ்சான் (சபைக்கு) அஞ்சாதவன்(யாவன்)—அவனை-அவனை, இகல்-மாறுபாட்டிலே, வெல்லல்-வெல்லுதல், யார்க்கும்- எவர்க்கும், அரிது-அரிதாம்—எ-று.(கருத்து) சொல்லில்வல்லவனும்- சோர்வில்லாதவனும் - அஞ்சாதவனுமாகியவனை வெல்லலரிது என்பதாம். * ஏற்கச்சொல்லுதல் - அவருக்கு அவை காரியமல்லாதனவாயிருந்தாலும் ஆமென்று கரும்படி சொல்லுதல் சோர்வுசொல்லவேண்டுவதனைமறதியாலொழிதல் இம்மூன்று குணமுமுடையனைப் பகைவராய்ப் பிரிந்தால் பொருந்தல் செய்து வெல்வர் இல்லை யென்பதாம். (எ)

விளைந்து தொழில்கேடகு ஞாலசிதனினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

இ-ள். தொழில்- (சொல்லப்படும்) காரியங்களை. நிரம்ப-ஒழுங்குபடக்கோத்து, இனிது. இனிதாக, சொல்லுதல் - சொல்லுதலில், வல்லார் வல்லவனை, பெறின்- பெற்றால், ஞாலம்-உலகமானது, விளைந்துவினாவாகி, கேட்கும்- (அவைகளை ஏற்றுக்கொள்ளும்—எ-று. (கருத்து) சொல்காரியங்களை இனிதாகச் சொல்லுதலில் வல்லமுந்நிகளைப் பெற்றால் உலகமேற்றுக்கொள்ளும் என்பதாம். * ஒழுங்குபடக்கோத்தல்- முன்னே சொல்லவேண்டியவையும் பின்னே சொல்லவேண்டியவையும் அறிந்து அம்முறையேவைத்தல் இனிதாதல்- கேட்பார்க்கு இன்பந்தருதல், சொல்லுதல்வல்லவன் தானுயிரம்பேரிலொருவன் என்பதாம் வடமொழிபற்றி - வல்லார்ப்பெறினென்றார் [இவைஇரண்டுபாட்டாலும் அவ்விதங்களாதலே, சொல்லுதல் வல்லாரது சிறப்புச்சொல்லப்பட்டது] (அ)

பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்ல றேற்ற தவர்.

இ-ள். மாசற்ற-குற்றமற்றனவையாய்,சில-சிலவாகியவார்த்தைகளைச் சொல்லல்- அப்படி சொல்லுதலை, தேற்றாதவர் - அறியாதவர், பல - பலவாகியவார்த்தைகளை, சொல்ல-பேச, காமுறுவர் - விரும்புவர்-எ-று. (கருத்து.) குற்றமற்றவார்த்தைகளைப்பேச, அறியாதவர்கள் பலவாக்தைகளைப்பேச விரும்புவார்கள் வார்த்தை வசனம் என்பதாம், * குற்றம்- முன்சொல்லப்பட்ட குணங்களுக்கு எதிரானவை,இடைவிடாமற்

பலசொல்லுதலிலும் சொல்வன்மையென்று விரும்புவாரும் உள்ளே அவர் அப்படிச் சொல்லபாட்டாதவரோ வல்லவர் அதுசெய்யாரென உறுதிப்படுத்துதற்கு மன்றவென்றார்.

இனருழ்ந்து நாறு மலரனையர் கற்ற
துணர விரித்துரையா தார். (க)

இ-ள். கற்ற-கற்றநூல்களை, உணர (பிரர்) அறியும்விதமாக, விரித்துரையாதார்-விரித்துரைக்கமாட்டாதவர், இனர்-கொத்தினிடத்தே, ஊழ்த்தும்-மலர்ந்திருக்கும், நாறு-மணக்காத, மலரனையர்-பூப்போல்பவர்—என்று. (கருத்து.) கற்றநூல்களை விரித்துச்சொல்லாதவர்கள் வாசனையில்லா மலருக்கொப்பாவர்-என்பதாம். * எப்படிசெவி பெறமலர்ந்திருந்தும் வாசனைசெய்யாதமலர் சூடப்படாதோ அப்படியே நூல்கற்றறிந்தும் சொல்லமாட்டாதவர் கும்குமதிக்கப்படாரென்பதாம் [இவைஇரண்டுபாட்டாலும் அதுமாட்டாரது இழிவுசொல்லப்பட்டது.]

சுருக்கம்-ஆம்-அதி-வினைத்தூய்மை.

அஃதாவது, செய்யப்படுந்தொழில்கள் பொருளை மாத்திரமல்லாமல் அறமும்புகழுந்தருவனவாதல். சொற்செயல்லாமல் செயலும் நன்றாக வேண்டுமென்கின்றமையால் இது அதன்பின்வைக்கப்பட்டது.

துணைநல மாக்கந் தருஉம் வினைநலம்
வேண்டிய வெல்லாந்தரும். (க)

இ-ள். (ஒருவனுக்கு) துணைநலம்-துணையினதுநன்மையானது, ஆக்கம்-செல்வமொன்றையே, தருஉம்-கொடுக்கும், வினைநலம்-தொழிலினதுநன்மையானது, வேண்டியவெல்லாம்-(அவன்) வேண்டியவைகளையெல்லாம், தரும்-கொடுக்கும்—என்று. (கருத்து.) ஒருவனுக்குத்துணை நன்மை செல்வமொன்றைத்தரும், தொழிலின் நன்மைவேண்டியவற்றைத்தரும் என்பதாம் * வேண்டியவெல்லாமென்றது- இம்மையில் அறம்பொருளின் முதலானவைகளையும், மறுமையில்தான் விரும்பிய பதங்களையும், [இதனால்காணப்படுந்துணை நன்மையினும் கருதப்படுந் தொழில்நன்மை சிறந்ததென வினைத்தூய்மையதுசிறப்புச்சொல்லப்பட்டது.]

என்று மொருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை. (க)

இ-ள். (தம்மாசனுக்கு) புகழொடு-இம்மைக்குப் புகழையும், நன்றி-(மறுமைக்கு) அறத்தையும் பயவா-தராத, வினை-தொழில்களை,

என்றும்: எக்காலத்திலும், ஒருவுதல்வேண்டும்:-(மற்றினிகளுக்கு) ஒழிதல் வேண்டும்—என-று. (கருத்து.) அரசனுக்குப்புகழையும் தருமத்தையுந் தாராத்தொழில்களை மந்திரிகள் விடவேண்டும் என்பதாம் * பெருகல் குறுகல் கழிசிற்றல்என்கின்றதிலே வேறுபாடுகள் காலத்திலுல்வருதலால் என்றுமென்றார். (உ)

ஓஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை
யாஅது மென்னு மவர்.

இ-ள். ஆஅதும்-மேலாகக்கடவோம், என் னுமவர்-என்றுநினைப்பவர், ஒளி (தம்)மொளி, மாழ்குஞ்-கெடுதற்குக்காரணமாகிய, வினை- தொழிலை, செய்- செய்தலை, ஓஒதல்வேண்டும், ஒழியக்கடவர்—என-று. (கருத்து) மேலாவோமென்றெண்ணுவோர் கெடுதற்குக்காரணமானதொழிலை விடக்கடவர் என்பதாம். * ஒளியாலது- தாமஇருக்கின்றகாலத்திலே- எல்லாராலும் நன்குமதிக்கப்படுதல்-ஒளிகெடவருமார்க்கம்-ஆக்கமென்றபதாம். (ங)

இடுக்கட் படினு மிளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்.

இ-ள். நடுக்கற்ற- அசைவற்ற, காட்சியவர் - தெளிவையுடையவர், இடுக்கட்படினும்- (தாம்) துன்பத்திலேபடவரினும், (அதுதீர்தற்பொருட்டு) இளிவந்த- (முன்செய்தவர்க்கு) இழிவுவந்த தொழில்களை, செய்யார்- செயயார்.—என-று. (கருத்து.) தூசைவில்லாவதறிவினையுடையவர் தன்பம்வரினும் இழிதொழில்செய்யார் - என்பதாம் *சிறிதுபோதிலே நீங்குவதாகிய துன்பத்தைநோக்கி எப்போதும்நீங்காத இழிவை அடையலாகாதென்பதும் அவ்விழிவை அடைந்தாலும் வருவதாயுள்ள அத் துன்பமானது வருமென்பதும் தெளிவாராதலால்- செய்யாவென்றார்.(

எற்றென் நிரங்குவ செய்யற்க செய்வானேன்
மற்றன்ன செய்யாமை நன்று.

இ-ள், எற்றென்று - (நான்செய்தது) எப்படிப்பட்டதென்று, இரங்குவ- (பின்தானே) இரங்குந்தொழில்களை செயயற்க- (ஒருகாலும்) செய்யாதிருக்கக்கடவன், செய்வானேன் - (ஒருகால்மயங்கி அவைகளைச்) செய்வானுயின், மற்று- பின்பு, அன்ன - அவ்விதங்களை, செய்யாமை - செய்யாமை, நன்று - நல்லது—என-று. (கருத்து.) தான்வருந்துந் தொழில்களைச் செய்யாதிருக்கக்கடவன் அவற்றைச்செய்வானுயிலும்பின்செய்யாமை நல்லது-என்பதாம். * தொழில்பலவாதலால் இரக்கமும்பலவாயிற்று, செய்துவிட்டபின்பு இரங்குவானுயின் அதுதீரும்வழி அறிந்திலனென்றும், தைரியமிலனென்றும், பயனில்லாதவைகளைச் செய்கின்றனென்றும், தன்பழியைத்தானே தூற்றுகின்றனென்றும்எல்லாரும் இகழுவாராதலால் பின்புஇரங்காமை நன்றென்றார், இரங்காமையுந்நல்லதொழில்செய்வார் செயலாதலால் 'உடன்சொல்லப்பட்டது.

ஈன்றுள் பசிகான்பர் ஒயினும்செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

இ-ள். ஒருவன் ஈன்றுள்-தன்னைப் பெற்றதாயினது; பசி-பசியை; கான்பானாயினும் - வறுமையாலே கண்டிருக்கும் தன்மையனாயினுமென்னினும் அதைக்குறித்து சான்றோர் - அறிவினாலே நிறைந்தோர்; பழிக்கும்-நிந்திக்கின்ற, வினை - தொழில்களை, செய்யற்க-செய்யாதிருக்கடவன்—ன்-று. (கருத்து.) தாய்பசியைக்கண்டானாயினும் அதைக்குறித்துப் பழிக்குந் தொழிலைச் செய்யாதிருக்கக் கடவன்-என்பதாம். * லயதிமுதிர்ந்ததாய்தந்தையரும், கற்புடையமனைவியும், குழந்தையும், பசியால் வருந்துமளவிலே நீயனைபலவும்செய்தாயினும் காப்பாற்றுகவென்று அறநூலிற்சொல்லப்பட்ட பொதுவிதி. பொருளாலின் வழிநடத்தலும்- ஆசார் தொழிற்குரியராதலும், நன்குமதிக்கப்படுகலும், உடையமந்திரிகளுக்கு ஆகாமைபற்றி இப்படிச்சொல்லினர். [இவையைந்துபட்டாலும் பாவமும் பழியும் தரும் தொழிலைச்செய்யலாகாதென்பது சொல்லப்பட்டன.] (அ)

பழிமலைந் தெய்திய வாக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை.

இ-ள். (சான்றோரல்லாதவர்-நீயதொழில்களைச்செய்து) பழிமலைந்து-(அதனும்) பழியைத்தம் மேற்கொண்டு, எய்தியபெற்ற; ஆக்கத்தின் செல்வத்தைக்காட்டிலும்; சான்றோர் . (அதுமேற்கொள்ளாத) சான்றோரதுபஷிக்கும், கழிநல்குரவே - மிகுந்தவறுமையே; தலை-உயர்ந்தது—ன்-று. (கருத்து.) பழியாலடைந்த செல்வத்திலும் பெரியோரது பஷிக்கும் வறுமையேமேலாம்- என்பதாம் * நிலையில்லாத செல்வதின் பொருட்டு நிலையுள்ளபழியை மேற்கொள்ளல் சான்றோர் தன்மையோடு பொருந்தாமையால் சான்றோர் கழிநல்குரவே தலையென்றார். (ன்)

கடிந்த கடிந்தொராஅர் செய்தார்க்கவைதாம்
முடிந்தாலும் பீழை தரும்.

இ-ள். கடிந்த - (நூலோர்கள்விலக்கியதொழில்களை.) கடிந்தோராஅர்-தாமும் கள்ளிவிடாராகி, செய்தார்க்கு-(பொருள்களைக்குறித்துச்) செய்தமந்திரிகளுக்கு, அவைதாம்- அவைதாம்(நேர்மையல்லாமையால்முடியாவாம்) முடிந்தாலும்-(ஒருவழியால்) முடிந்தாலும(பின்)—பீழை-துன்பத்தை, தரும்- கொடுக்கும்—ன்-று.(கருத்து.) பெரியோர்கள்விலக்கப்பட்ட தொழிலைக்கொள்ளப்பட்ட மந்திரிகளுக்கு அத்தொழில் முனைமுடியினும் பின் துன்பந்தரும்என்பதாம், * முடிதல்நினைத்தபொருளைத்தருதல்.()

அழக்கொண்ட வெல்லா மழல்போ மிழப்பினும்
பிற்பயக்கு நற்பா லவை.

இ-ள் (ஒருவன்) அழக்கொண்ட வெல்லாம்- (தீயதொழில்களைச் செய்து) -பிறர் இரங்கொண்டபொருளெல்லாம், அழப்போம்-இம்மை யிலே அவன் இரங்கப்படாகாநிற்கும், நற்பாலவை - மற்றநல்லதொழில் களால்வந்தபொருள்கள், இழப்பினும்(முன்) இழந்தாலுயினும், பிற்ப யக்கும் - பின்வந்துபயன் கொடுக்கும்—எ-று.(கருத்து.) பிறழைக்கொ ண்டபொருள் யாவுந்தான்முப்போகும் நல்லவழியால்வந்த பொருள்கள் முன்னிழந்தாயினும் பின் பயன்கொடுக்கும் - என்பதாம்: * பின்னெ னவே மறுமையும்அடங்கிற்று பொருள்களால் அனைகளுக்குக் காம ணமாகிய தொழில்களது இயல்புசொல்லியபடி. (கூ)

சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துணீர் பெய்திரீ இயற்று.

இ-ள். (மந்திரியானவன்) சலத்தால் - தீயதொழில்களால், பொரு ள்செய்து - பொருளைச்சம்பாதித்து, ஏமார்த்தல் - (அதனால்அரசனுக்கு க்) காப்புச்செய்தல், பசுமட்கலத்துள் - பசியமண்ணின்பாத்திரத்துள், நீர்பெய்து-நீரைவார்த்து, இரீஇயற்று-(அதற்குக்) காப்புச்செய்ததனை டொக்கும்—எ-று. (கருத்து.) மந்திரியரசனுக்கு வஞ்சிப்பால் பொரு ளைத்தேடிக்காத்தல் பசிய மண்பாத்திரத்துள்ளே நீரைவார்த்துக் காத் தல்போலாம்-என்பதாம். * இருத்துதல் நெடுங்காலம் இருப்பாக்கச்செ ய்தல், அரசனும்பொருளும் ஒருசேரப்போமென்பதாம். [இவைதான் குபாட்டாலும் அதற்குக்காரணம் சொல்லப்பட்டது.] (ஏ)

சுஎ-ஆம்-அதி-வினைத்திட்பம்.

அஃதாவது, அப்பரிசுத்தமாகிய தொழிலை முடிப்பவனுக்கு வேண்டுவதாகிய மனவலிமையாம். அதிகாரமுறைமையும் இதனுலேயே விளங்கும்.

வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்ப
மற்றைய வெல்லாம் பிற.

இ-ள். வினைத்திட்பமென்பது - தொழில்செய்யுமிடத்து வலிமை யொன்றுசொல்லப்படுவது, ஒருவன்- (அதனைமுடித்தற்குரிய) ஒருவன தது, மனத்திட்பம் -மனத்தினதுவலிமையாம், மற்றையவெல்லாம் - அது நீங்கலான்வல்லமைகளெல்லாம்; பிற - (அதற்கு) வலிமையென்றுசொ ல்லப்படுவனவல்ல—எ-று. (கருத்து.) தொழில்வலிமையென்று சொ ல்லப்படுவது ஒருவன்மனவலிமையாம் மற்றவலிமையிதற்கு நிகரல் லவாம்-என்பதாம். * அதுநீங்கலானவை-படைஆள்ஊட்டு முதலானவை

கூன-அம்-அஞ்சி — விசினைத்தொகை.

வை சுவரின் வகிமைகள், அவையும் அகற்றுசெய்யுமெனையாய் இவை மாகலால் - மேற்கூறிய வென்னும் அவைதெரிண்டியலையா மிராந்தாலும் அம்மனைவிலில்லாவிடத்தே படலிலலாகலால் பிறவென்றும், சொல்லினர் [இதனால்விசினைத்தொகையுமிதன்னெதன்று சொல்லப்பட்டது.]

ஊதெறுதா துற்றடி னெஞ்சுநடை மிப்வினன்டி
ருதெவன்பு சாய்த்தவர் கோள்.

இ-ள். அப்தவர் -(முன்புகிறுநாலே) அநாயத்தமந்திரிகளை, கோள்-தூணிகளை, ஊதெறு - பழுதுபடுத்தெதாழிலை, ஓரால் -செய்யாமையும், உற்றபிசம்-(செய்யுள்தெதாழிலை ஊழிறுலே பழுதுபட்ட விடத்து:ஒல்காமை-(அதற்குக்) தளராமையும்தூசிய, இவ்விரண்டின்-இவ்விரண்டினாறு, ஊடுவழியாகும், எஞ்சார்-என்றும் (தூதிலொர்)சொல்லுவர்—எ-று. (கருத்து.) மந்திரிகள்தூவிலானை பழுதுபடுதெதாழிலைச் செய்யாமையும் மற்றதுழிற் பழுதாகிற்றனாமையுமாம் - என்பதாம். * தேவர்க்கும் அசுரர்க்கும் மந்திரிகளாகிய பிரகற்பதி சுக்கிரன் இவர்களது தூணிலைத்தொழுத்துப்பிண்டேன் கீழ்நூலுலுடையோராலே சொல்லப்பட்டபடியே சொல்லுதின்றனையால் இக்தோகவிசினைத்தூய்மையும் உடன்சொல்லினர். (உ)

கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை யிடைக்கொட்டி
னெற்றே விழுமம் தரும்.

இ-ள். (செய்யப்படுத்தொழிலை) கடை- முடிவிலே, கொட்க-சுழல, (வெளிப்படவென்றபடி) —செய்தக்கது - (அதற்குமுன்னெல்லாம் மறைத்துச்) செய்வதே, ஆண்மை-வலிமையாகும், இடை-நடுவிலே, கொட்கின் - வெளிப்படுமாயின், (அவ்வெளிப்படுதல்) எற்றே-நீக்கப்படாத, விழுமம்-துன்பத்தை தரும்-(செய்தவனுக்குக்) கொடுக்கும்—எ-று. (கருத்து.) தொழிலைமறைத்து முடிவிற்செய்வதேவலிமையாம் அதனடுவில் வெளிப்படுமாகிற் றுன்பமாம்-என்பதாம் * மறைத்துச் செய்தலாவது, சேனைமுதலாகிய ஐந்து அங்கங்களும் எண்ணியவிதத்தை பிறர் அறியாதிருக்கவும், தான் அறிந்ததையும் - தன்னிச்சம் வடிவு - செயல் - சொற்களால்-அவர் ஆலோசித்து அறியாதிருக்கவும், அடக்கிச்செய்தல், அற்றன்பங்களாவன - பகைவர்முன்னநிந்து அந்தொழிலைவிலக்குதலும், செய்வானை விலக்குதலும், செய்வராதலால் அவ்விலக்குதல்களால்வருவன. [இவைஇரண்டுபாட்டாலும் அதன்பகுதிசொல்லப்பட்டது.]

(ஈ)

சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல்

இ-ள். சொல்லுதல்-(இத்தொழிலை இவ்விதத்தாலே செய்வேமென்று ஒழுங்குபடச்)சொல்லுதல், யார்க்கும்-எவர்க்கும், எளிய - எளியவையாகும், (அதனை) சொல்லியவண்ணம் - அச்சொல்லப்பட்டவிதத்

தால், செயல் - செய்தல், அரியவாம் - அரியனவாயாம் —— என - று. (கருத்து.) தொழில் செய்வோமென்றல் யார்க்குமெளிதாம் அதைச்செல்லியப டி செய்தலரிதாம் - என்பதாம், * அரியவகூள என்னெனில் - சொல்லுதல் மனவழிமையில்லாதவர்க்கு கூடுமாதலால் - எளியனென்றார். [இ தனால் அதனது அருமைசொல்லப்பட்டது.] (சா)

வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்க
ணூறெய்தி யுள்ளப் படும்

இ - ள். வீறெய்தி - (எண்ணத்திறனால்) சிறப்பை அடைந்து, மாண் டார் - (மற்றையிலக்கணைக்களாலும்) மாட்சிமைப்பட்டவரின்கணது, வி னைத்திட்பம் - தொழில்வலிமையானது, வேந்தன்கண் - அரசனிடத்து, ணூறெய்தி - நூறாயிரமடங்காக, உள்ளப்படும் - (எல்லாராலும்) க ருதியறிக்கப்படும் —— என - று. (கருத்து.) மந்திரிகள் தொழில் வலிமையா னது அரசனிடத்துப்பொருந்துதல் யாவராலுமறிக்கப்படும் - என்பதா ம். * வேந்தன்கண் ணூறெய்தல் - எதிர்த்தொழில் அரணழிந்து செல்வ மும் புகழும் அவனிடத்தே உண்டாதல். [இதனால் அதன் சிறப்புச் சொல்லப்பட்டது.] (நி)

எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்

இ - ள். எண்ணிய - (நம்மால்) எண்ணப்பட்டபொருள்களையெல்லா ம், எண்ணியாங்கு - அவ்வெண்ணியபடியே, எய்துப - அடைவார், எண் ணியார் - (அவ்வெண்ணப்பட்டபொருள்களுக்கு வழியாகிய தொழிலி டத்தே, திண்ணியராகப்பெறின் - வலிமையுடையவராகப்பெற்றால் —— என - று (கருத்து.) தொழில்வலிமையுடையவராகில் நினைக்கப்பட்ட பொருளை த்தபடி பெறுவார் - என்பதாம். * எவ்திறமெல அடைவாவென்றற்கு - எண்ணியாங்கெய்துபவென்றார் - அவர் அப்படியல்லாமல் எண்ணுமை யில் வலிமையையுடையராகவே தொழில்முடியும் அத்தொழில் முடிய வே அனைவையெல்லாம் கைகூடுமென்பது கருத்து. [இதனால் அரசியல் டையவர் அடையும் பயன் சொல்லப்பட்டது.] (கூ)

உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்ன துடைத்து.

இ - ள். (உலகமானது) உருள் - உருளாகின்ற, பெருந்தேர்க்கு - பெரி யதேர்க்கு, அச்சாணியன்னார் - அச்சாணிபோல் தொழிலிடத்தே நிலை பெற்ற வலிமையையுடையவனை, உடைத்து - உடையது, (அதனால்) உருவுகண்டு - (அவர்) வடிவினிடத்தே சிறுமையைமேற்கொண்டு, எள்ளாமையே வேண்டும் - (அவனை) இகழாமைவேண்டும் —— என - று. (கருத்து.) உலகம்தேர்க் கச்சாணிபோலத் தொழிலில் வலிமையுடையது அதனால் வடிவுகண்டொருவனை யிகழலாகாது - என்பதாம். * என்னை வேண்

டுமென்றதனாலும் - உவமானத்தாலும் - சிறுமைவருவிக்கப்பட்ட தா, அச்சு-உருள்கோத்தமரம்- ஆணி - உருள்கழலாமல் அதன்கடையி லே சொருகுவது அதுவடிவினாலே சிறிதாயிருந்தே பெரியபாரத்தைத் கொண்டுசெலுத்துகிறவலிமை யுடைத்தாதல்போல் வடிவினாலேசிறி யாயிருந்தே பெரியதொழிலைக்கொண்டு செலுத்துகின்ற வலிமையுட யமந்திரிகளும் உண்டு அவனா அவ்வலிமைநோக்கி அறிந்துகொள்கவெ ன்பதாம். [இதனால் அவனா அறியும்விதம் சொல்லப்பட்டது.] (எ)

கலங்காது கண்ட வினைக்கட் டெளங்காது
தாங்கற் கடிந்து செயல்.

இ-ள். கலங்காது-(மனம்)தெளிர்து, கண்ட-(செய்தொகுத்)துணி ந்த, வினைக்கண் - தொழிலிடத்து, தளங்காது, (பின்) அசைதலில்லாம ல் தாக்கற்கடிந்து, ஆலசியத்தை. ஒழித்து, செயல்- செய்யக்கடவர் —எ-று. (கருத்து.) மனந்தெளிர்து செய்யத்துணிந்த தொழிலிடத்து ஆலசியமில்லாமலத்தொழிலச் செய்யுக்கடவர் - என்பதாம். * கலங் கியவிடத்து ஒழிவதுசெய்வதுபோல் தோன்றுமாதலால் தெளிர்துபல கால் ஆராய்ந்தாலும் செய்வதாத லொத்ததொழிலை-கலங்காது கண்ட வினையென்றார், தளங்காமை-வலிமையுடைமை. (அ)

துன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி
யின்பம் பயக்கும் வினை.

இ-ள். (முகலிலைமெய்ம்முயற்சியினாலே) துன்பம் - துன்பமான து, உறவரினும்-(தமக்கு) மிதவரினும், (அதுகண்டுதளராமல்) இன்பம்- சுகத்தை, பயக்கு - (முடிவிலே) தருகின்ற, வினை-தொழிலை, துணிவாற் றி-வலிமையுடையராய்செய்க - செய்யக்கடவர்—எ-று. (கருத்து.) துன் பம்வரினு மின்பந்தரும் தொழிலச்செய்யக்கடவ னென்பதாம். * து ணிவு - கலங்காமை - அக்கலங்காமை யுடையவர்க் கல்லது சிறிதுகாலத் திலே நீக்குவதாகிய முயற்சித்துன்பம் நோக்காமல் அதனால் உண்டா யினிலெபெறும் இன்பத்தை நோக்கிச்செய்தல் கூடாமையாலே - துணி வாற்றிச்செய்கவென்றார். [இவைஇரண்டுபாட்டாலும் அவர்தொழில்செ யும் விதம்சொல்லப்பட்டது.] (கூ)

வினைத்திட்ப மெய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டா துலகு.

இ-ள்.உலகு-உயர்ந்தோர், வினைதிட்பம்-தொழில்வலிமையையுவே ண்டாரை-(இதுகமக்குச் சிறந்ததென்று) கொளாதமந்திரிகளை, வினை த்திட்பம்- - அவைநீங்கலாகிய வலிமைகளெல்லாம், எய்தியக்கண்ணும்- உடையவராகியவிடத்தும், வேண்டாது-நன்குமதியார்—எ-று. (கருத்து) உயர்ந்தோர் தொழில்வலிமையை விரும்பாத மந்திரிகளை மதியார்- என்பதாம். * மனதினிடத்திலே வலிமையில்லாதவர்க்கு - படை- அ ரண் - கட்புழுதலானவைகளின் வலிமைகளெல்லாம் உண்டாயினும் தொழில் முடியாமையால் அவ்வலிமைகளெல்லாம் கெடுமென்பதுபற்றி உலகுவேண்டா தென்றார். [இதனால்தொழில் வலிமை யில்லாதவர துதிழிவுசொல்லப்பட்டது.] (ஏ)

அஃதாவது, அவ்வவினைமையுடைய மந்திரியானவன் அத்தொழிலைச் செய்யுந் திறமாம், அதிகாரமுறைமையும் இதனாலே விளங்கும்.

சூழ்ச்சி முடிவு துணிவெய்த லத்துணிவு
தாழ்ச்சியுட் டங்குத னீது.

இ-ள். சூழ்ச்சி-ஆலோசனைக்கு, முடிவு-எல்லையாவது, துணிவெய்தல்-(ஆலோசிப்பவன் இனி இதுசெய்பாதென்னும்) துணிவைப்பெறுதல், அத்துணிவு-அப்படித்துணிவுபெற்றதொழில், தாழ்ச்சியுள்-(பின்) ஆலசியத்தால், தங்குதல்-தங்குதல், தீது-குற்றமுடையதாம்—என்று. (கருத்து.) ஆலோசனைக்கெல்லையாவது துணிவுபெறுதல் அத்துணிவு பின்னலசியப்படுதல் குற்றம்-என்பதாம். * சூழ்ச்சிமுடிவுதுணிவெய்தலென்றதனால் துணிவுபெறும்வரைக்கும் ஆலோசித்தலேவேண்டுமென்பதாயிற்று. பிற்பட்டதுணிவு-அதுபெற்றதொழிலுக்கு ஆதலால்-ஆகுபெயர். ஆலசியமுண்டானவிடத்தே காலக்கழிவாகலாலும் பகைவர் அஃதறிந்து அழித்தலாலும் முடியாமையால்-அதனைத் தீதென்றார். (6)

தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை.

இ-ள். தூங்கி-ஆலசியித்து, செயற்பால்-செய்யுமியல்புடையனவாகிய தொழில்களுள், தூங்குக-ஆலசியம்பண்ணக்கடவன், தூங்காது-ஆலசியம்பண்ணாமல், செய்யும்வினை-செய்யுந்தொழில்களுள், தூங்கற்க ஆலசியம்பண்ணுதிருக்கக்கடவன்—என்று. (கருத்து.) ஆலசியமாகச் செய்யுந்தொழில்களை ஆலசியமாகச் செய்யக்கடவன்-வினாவாகச் செய்யுந்தொழில்களை வினாவாகச் செய்யக்கடவன்-என்பதாம். * இருவகைத்தொழில்களும்-வலியாலும் காலத்தாலும், அறியப்படுமே, மாறிச்செய்தால்-அவைபலியாமற்போமென்பது கருத்து. முன்னே தூங்கானமையென்றதை இங்கே பகுத்துச் சொல்லினார். [இவை இரண்டுபாட்டாலும் பொதுவாகையால் தொழில்செய்யுந்திறம் சொல்லப்பட்டது.] (உ)

ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே யொல்லாக்காற்
செல்லும்வாய் நோக்கிச் செயல்.

இ-ள். (தொழில்செய்யும்போது) ஒல்லும் வாயெல்லாம்-கூடுமிடத்தெல்லாம், வினை-தண்டஞ்செய்தல், நன்று-நல்லதாகும், ஒல்லாக்கால்-(அது) கூடாதவிடத்து, (மற்றைமூன்று உபாயங்களிலே) செல்லும் வாய்நோக்கி-(அது) முடிவதோருபாயம்நோக்கி, செயல்-செய்யக்கடவன்—என்று. (கருத்து.) குற்றங்கூடுமிடத்தெல்லாந் தண்டித்தல் நல்லது அதுகூடாவிடத்து மூன்றுபாயங்களாற் செய்யக்கடவன் என்

ப்தாம். * கூடுமிடம் - ப்கைவனிலும் தான்வலியறிய காலம், அக்காலத்திலே பகைவர் தண்டத்துக்கே அஞ்சுவராகலால்- அத்தண்டமேன்றென்றார், கூடாதவிடம் - ஒத்தகாலமும் இகழ்ந்தகாலமும், ஆம் [ஐதனல்-வலிமை - ஒப்புமை - மெலிமை - என்றிவை மூவகைப்படுமென்பதும், அவைகளுள் வலிமையினது சிறப்பும் சொல்லப்பட்டன.] (க)

வினைபகை யென்றிரண்டி னெச்ச நினையுங்காற்
றீயெச்சம் போலத் தெறும்.

இ-ள். வினை - (செய்யத்தொடங்கிய) தொழிலும், பகை-(அழிக்கத்தொடங்கிய) பகையும், என்றிரண்டின் - என்றுசொல்லப்பட்ட இரண்டினது, எச்சம்-குறையும், நினையுங்கால் - ஆராயுமிடத்து, தீயெச்சம்போல-தீயினதுகுறைபோல், தெறும்- (பின்வளர்ந்து) கெடுக்கும்—என-று. (கருத்து.) தொழிலும் பகையும் அக்கினிபோல் வளர்ந்து கெடுக்கும்-என்பதாம். * இனி இக்குறை என்னசெய்யமாட்டுமென்று இகழ்ந்து விட்டுவிடாமல் முடிவுபெறச் செய்கவென்பதாம். பின்வளர்தல் ஒப்புமைபற்றிப்-பகையெச்சமும் உடன்சொல்லினர். [இதனால்வலியவன் செய்யுந்திறம் சொல்லப்பட்டது.] (ச)

பொருள்கருவி காலம் வினையிடனே டைந்து
மிருமூர வெண்ணிச் செயல்.

இ-ள். (தொழில்செய்யுமிடத்து) பொருள்-பொருளும், கருவி-சாதனமும், காலம்-காலமும், வினை-தொழிலும், இடன்-இடமுமஆகிய, ஐந்தும்-ஐந்தும், இருமூர-மயக்கமற, எண்ணி-நினைத்து, செயல்- செய்யக்கடவன்—என-று. (கருத்து) பொருளும் சாதனமும் காலமும் தொழிலும் இடமும இவ்வைந்து நினைத்தற்றொழில்செய்யக்கடவன் என்பதாம். * பொருள் அழியும் பொருளும்-நுகரும்பொருளும்கருவிதன்சேனையும், பகைவர்சேனையும்காலம்-தனக்கு ஆங்காலமும், அவர்க்கு- ஆங்காலமும், வினை-தான்வல்லதொழிலும் அவர்வல்லதொழிலும், இடன்- தான்வெல்லும்இடமும், அவர்வெல்லும் இடமும், இவைகளாந்தான் வெற்றிபெருந்திறத்தில் தப்பாமல் யெண்ணிச்செய்க வென்பதாம். (ஞ)

முடிவு மிடையூறு முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.

இ-ள். (தொழில்செய்யுமிடத்து) முடிவும் - (அது) முடிதற்குஉளதாகிய முயற்சியையும், இடையூறும் - (அதற்குவரும்) இடையூற்றையும், முற்றி - (அவ்விடையூறுநீக்கி) முடித்தல், எய்தும்-(தான்) அடையும், படுபயனும் - பெறும்பயனையும், பார்த்து - சீர்தூக்கி, செயல்- செய்யக்கடவன்—என-று. (கருத்து) முயற்சியையும், இடையூற்றையும், பய

னையும், ஆராய்ந்து தொழில்செய்யக்கடவன்-என்பதாம். * முடிவு-அதன்முயற்சிக்கு ஆகுகலால் ஆகுபெயர், முயற்சிபளவுக்கும் இடையூறளவுக்கும் பயனளவு பொருந்தியிருந்தால் அத்தொழிலைச்செய்க வென்பதாம். (சு)

செய்வினை செய்வான் செயன்முறை யவ்வினை
யுள்ளறிவா னுள்ளங் கொளல்.

இ-ள். செய்வினை - (அவ்வழியிற்றோலை) செய்யப்படுந்தொழிலை, செய்வான் - செய்யத்தொடங்கினவன், செயன்முறை - செய்யுமுறைமையாவது, அவ்வினை - அந்தொழியினது, உள் - உளப்பாட்டை, அறிவான் - அறிபவனது, உள்ளம் - கருத்தை, கொளல் - (தான்) அறிதல்,—என்றது. (கருத்து.) தொழிலைச் செய்யத் தொடங்கினவன் செய்யுமுறையாவது அத்தொழினுளப்பாட்டை யறிதல் - என்பதாம். * அவ்வாறென்பது-பொருண்முதலானனைவகளை எண்ணனையும், முடிவுமுதலானனைவகளை ஆராய்தலையும், உள்ளறிவான் முன்செய்துவகைவந்தவன், அவன் கருத்து, அதனைச்செய்துவந்த உபாயம், அதனை அறிபவனாதலும் அவ்வுபாயத்தினாலேசெய்து பயனை அடைவானென்பதாம். இவை மூன்றுபாட்டாலும் ஒப்புவன் செய்யுந்திறம் சொல்லப்பட்டது. (எ)

வினையான் வினையாக்கிக் கோடனனைதவுள்
யானையால் யானையாத்தற்று.

இ-ள். வினையால் (செய்யப்படுகின்ற) தொழினுலே, வினை - (அப்படிப்பட்ட) வேறொருதொழிலை, ஆக்கிக்கோடல் - முடித்துக்கொள்ளக்கடவன், (அது) நினைவுகள்-(மதத்தால்) நினைந்தகபோலத்தையுடைய, யானையால்-யானையினுல், யானை - (அப்படிப்பட்டவேறொரு) யானையை யாத்தற்று - கட்டியதோடு ஒக்கும்—என்று. (கருத்து.) தொழிலாலே தொழிலைமுடித்துக்கொள்ளக்கடவன் அதுயானையை யானையாற்கட்டியதொப்பாம் - என்பதாம் * பிடித்தற்கருமைதோன்ற நினைகவுளன்றுர் தொடங்கியதொழிலாலே வேறுமொருதொழிலைமுடித்தற்கு உபாயமாகும்விதம் ஆலோசித்துச்செய்தால், எல்லாததொழில்களும் எளிதிலேமுடியு மென்பதாம். (அ)

நட்டார்க்கு நல்ல செயலின் விளைந்ததே
யொட்டானை யொட்டிக் கொளல்.

இ-ள். (தொழில்செய்பவனுல்) நட்டார்க்கு - (தனது) நட்பினருக்கு, நல்லசெயலின் - நல்லவைகளைச்செய்தலினும், ஒட்டானை - (தன்பகைவனாது) பகைவனை, ஒட்டிக்கொளல் - (தனக்கு)நட்பாகிக்கொள்ளுதல், விளைந்ததேயவினைந்து செய்யத்தகுவதாகும்—என்று. (கருத்து.) பகைவனைச் சிநேகமாக்கிக்கொள்ளுதல் சிநேகருக்கு நல்லவைகளைச் செய்தலினு நல்லது-என்பதாம். * அத்தொழிலைப் பலிக்கச்செய்யும் அவ்

வினைகளையும் பகைவர்க்குத் தன்மெலிவு தெரிவதன் முன்னே செய்கவென்றற்கு - [விளக்கத்தென்னூர்:] (க)

உறைசிறியார் உள்ளஞ்சுங் கூற்றஞ் குறைபெரிதாக்
கொள்வர் பெரியார்ப் பணிந்து.

இ-ள். உறைசிறியார் - ஆளுமிடஞ் சிறியராகியமந்திரிகள் (தம்மின் மிகுந்தவலியவர் எதிர்ந்தவிடத்தே)—உள் - (தமது) அங்ஙங்கள், நடுக்கல் - நடுங்குதலுக்கு, அஞ்சி - பயந்து, குறைபெரிதாக் - (அங்கிலைக்குவேண்டுவதாகிய) சந்திகூடுமாயின், பெரியார் - அப்பெரியவனை, பணிந்து - வணங்கி, கொள்வர் - (அதனைவற்றுக்) கொள்ளுவர்—என்று. (கருத்து.) ஆளுமிடஞ் சிறியராகிய மந்திரிகள் பகைவரெதிர்த்த விடத்துப் பணிந்து கொள்வர்-என்பதாம். * இடம் நாடும், அரணும், அவைகளின் சிறுமை உடையவர்மேல் ஏற்றப்பட்டது, மெலியாரோடு சந்திக்கு வலியாரினைதல் அரிதாகலால்-பெரிதென்னூர். அடியிலே மெலியராயினர் தம்மங்கங்களும் அஞ்சி நீங்கிஞ்ஞ் முகமலோடும் தெவ்வாராகளின் அதுவராமற் சிறிதுகாடுத்தும் சந்தியை ஏற்றுக்கொள்க வென்பதாம், * பணிதல் மானிசனுக்குக் கருத்தல்லாமையால் கொள்வானென உலகியலாற்சொல்லினர் [இவைமூன்றுபாட்டாலும் மெலியவன் செய்யுந்திறம்சொல்லப்பட்டது.] (ஆ)

சூ க - ஆம் - அதி - தூது.

ஆம்காவது, பொருத்தல் - பிரிந்தல்களுக்கு வேற்றாசரிடத்தே செல்வாரது தன்மை, அவ்விரண்டனையும் முன்வினை செயல்வகை யென்றமையால் இது அதன்பின்வைக்கப்பட்டது. தான்வகுத்துச்சொல்லுவோன் சொல்லியது சொல்லுவோன் எனத்தூது இருவகைப்படும். அவருள் முன்னோன் மந்திரியோடு சமானனுவானுகலாலும்பின்னோன் அவனிலே காற்பங்கு குணங்குறைந்தோனுகலாலுமிது அமைச்சியலாயிற்று.

அன்புடைமை யான்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு.

இ-ள். அன்புடைமை - (தன்சுற்றத்தாரிடத்து) அன்புடையனுதலும், ஆன்றகுடிப்பிறத்தல் - (மந்திரித்தொழில்செய்தற்கு) அமைந்த குடியிலேபிறத்தலும், வேந்தவாம்பண்புடைமை - அரசர் சாந்தியும்பும் குணமுடையனுதலும், தூதுரைப்பான் - தூதுவார்த்தையைச்சொல்லுவோனுக்கு, பண்பு - இலக்கணமாம்—என்று. (கருத்து.) அன்பும் நற்குடியிற்பிறத்தலும் அரசாவிரும்புங் குணமுமுடையனுதல் தூதனிலக்கணம்-என்பதாம். * முன்னையவிரண்டினலும் முறையே சூ

றத்தார்க்குத் தீங்குவாராமல் தானேகாத்துஉடந்தலும், தன்மூன்லோர்த்
நிபல்கேட்டு அறிதலும், பெற்றும், வேந்தவாம்பண்புடைமை- பின்பு
மன்னனைச் சேர்ந்தாழ்கலிலே அறியப்படும். அதனல் வேற்றரசரு
ம் அவனுக்கு வசப்படுதல் கொள்ளப்படும். (எ)

அன்பறிவாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்
இன்றி யமையாத மூன்று.

இ-ள். அன்பு-(தம்மரசனிடத்து)அன்புடைமையும், அறிவு - (அ
வனுக்கு ஆம்வகைகளை அறியும்)அறிவுடைமையும், (அவைகளைவேற்று
வேந்தரிடத்துச் சொல்லும்போது) ஆராய்ந்தசொல்வன்மை - ஆராய்
ந்துசொல்லுதல் வலிமையும்என், தூதுரைப்பார்க்கு- தூதுசொல்ல உ
ரியவர்க்கு, இன்றியமையாத - அவசியமாகவேண்டிய குணங்கள், மூன்
று-மூன்றும்—எ-று. (கருத்து.) அன்பு-அறிவு-சொல்வன்மை-இவை
தூதுசொல்வோர் குணங்களாம்-என்பதாம். * ஆராய்தல், அவைகளு
க்குச் சம்மதிக்கும் சொற்களைத் தெரிதல், அவசியமாகவேண்டிய குண
ங்கள் மூன்றெனவே மந்திரிகளுக்குச்சொல்லிய மற்றைக் குணங்களு
ம் வேண்டுமென்றதாயிற்று. [இவை இரண்டுபாட்டாலும் இருவகைத்
தூதர்க்கும் பொதுவிலக்கணம் சொல்லப்பட்டது.] (உ)

நூலாரு ணூல்வல்ல ணுகுதல் வேலாருள்
வென்றி வினையுளைப்பான் பண்பு.

இ-ள். வேலாருள் - வேலினையுடைய வேற்றரசரிடத்து,வென்றி
(தன்னரசனுக்கு வெற்றியைத்தருகின்ற, வினையுளைப்பான் - தொழிலை
ச்சொல்லுவோனுக்கு; பண்பு-இலக்கணமாவது, நூலாருள்-நீதிநூலை அ
றிந்தமந்திரிகளிடத்து, நூல்வல்லணுகுதல் -(தான்) அந்நூலில் வல்ல
வனுகுதல்—ன-று. (கருத்து.) தூதனுக்கிலக்கணமாவது-மந்திரிகளிட
த்து வல்லவனுகுதல்-என்பதாம். * கொலைத்தொழிலொன்பதுதோ
ன்ற - வேலொன்றும், தூதுத்தொழி லிரண்டு மடங்கவென்றி வினை
யென்றும் சொல்லினர்; வல்லவனுகுதல்- அறிதன்மாத்திரமுடையா
கிய அவர் மூன்வகுக்கும் வல்லமையுடைய ணுகுதல். (ஊ)

அறிவுரு வாராய்ந்த கல்வியிம் மூன்றின்
செறிவுடையான் செல்க வினைக்கு.

இ-ள். அறிவு -(இயற்கையாகிய) அறிவும், உருவு (கண்டோரிச்சி
க்கும்) தோற்றப்பொலிவும், ஆராய்ந்தகல்வி - (பலரோடும்பலகாலும்)
ஆராயப்பட்டகல்வியுமென, இம்மூன்றின் - (என்குமதித்தற்கு எதுவா
கிய) இம்மூன்றினது, செறிவுடையான் - கூட்டத்தையுடையவன்;வி
னைக்கு-(வேற்றரசரிடத்துத்தூத்)தொழிலுக்கு, செல்க - செல்லக்கட
வன்—எ-று. (கருத்து.) அறிவு-உருவு, கல்வி-இவற்றையுடையவன்தூது

செல்லக்கடவன்-என்பதாம். * இம்மூன்றும் ஒருவனிடத்துக் கூடுதல் அரிதாகலால், செறிவுடையா னென்றார். இவைகளாலே கல்லுமதிப்புடையவனுகவே இனிதுமுடியுமென்பது கருத்து. (உ)

தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாந் தூது.

இ-ள். (வேற்றரசருக்குப் பலகாரியங்களைச் (சொல்லுமிடத்து) தொகச்சொல்லி - (காரணவகையால்) தொகுத்துச்சொல்லியும், (இனிமையில்லாத காரியங்களைச் சொல்லுமிடத்து) தூவாதநீக்கி - வெய்யசொற்களை நீக்கியும், நகச்சொல்லி - (இனிமையானசொற்களால்) மகிழ்ச்சொல்லியும், நன்றிபயப்பது - (தன்னரசனுக்கு) நல்லமையைச் செய்பவனே, தூது-தூதனுவான்—என்று. (கருத்து.) தொகுத்துச்சொல்லியும் கடுஞ்சொல்லை நீக்கியும் மகிழச்சொல்லியு மரசனுக்கு நன்மைசெய்பவனே தூது-என்பதாம். * பலகாரியங்களுக்கு உடன்படாதவர் பயம் பணையால் அப்பலவும் முடிந்தற்குக் காரணமான ஒருகாரியத்தைச்சொல்ல அதனுல் ஐவைபயன்படும்விதத்தை ஆலோசித்தறிதல் அருமையாதலால் - சுருக்கத்தால் உடன்படுபவர் இனிமையில்லாத காரியங்களுக்கு உடன்படாதவர். மனமகிழச்சொல்ல அவ்வினிமையில்லாமைதோன்றுமையால் உடன்படுவர். ஐசலால் அவ்விருவழியாலும் தன்காரியம் தவறுமல்முடிக்க வல்லவனென்பதாம். (ஙி)

கற்றுக்கண் ணஞ்சான் செலச்சொல்லிக் காலத்தாற்
றக்க தறிவதாந் தூது.

இ-ள். கற்று - (நீதிநூலகளைக்) கற்று, செல் - (பகைவேந்தர்)மனக்கொள, சொல்லி - (தான்சென்றகருமத்தைச்) - சொல்லி, கண்ணஞ்சான் - அவர்கோபித்துப்பார்க்கில் அப்பார்வைக்கு அஞ்சாதவனும், காலத்தால் - காலத்தோடுபொருந்த, தக்கது - (அதுமுடிக்கத்) தக்கஉபாயத்தை, அறிவது-அறிபவனே, தூதாம்- தூதனுவான்—என்று. (கருத்து.) நீதிநூலைக்கற்றுப் பகையரசர் மனக்கொளச்சொல்லி யஞ்சாதவனும் காலத்திற்கேற்ற வுபாயமறிபவனே தூதன்-என்பதாம். * அவ்வுபாயம் அறிதற்பொருட்டு நீதிநூற்கல்வியும், அதனலன்றி வேறுன்றுல் முடியுங்காலம்வரின் அவ்வாறு முடிக்கவேண்டுதலால் - காலத்தாற்றக்கதறிதலும், இலக்கணமாயின. (சு)

கடனறிந்து காலங் கருதி யிடனறிந்
தெண்ணி யுரைப்பான் றலை.

இ-ள். கடன் - (வேற்றரசரிடத்துத் தான்செய்யு) முன்றமைமன்ய, அறிந்து-தெரிந்து, காலங்கருதி - (அவர்) சமயம்பார்த்து, இடன்(சென்றகருமஞ் சொல்லுதற்குவற்ற) விடத்தை, அறிந்து-தெரிந்து, எண்ணிசொல்லும் (வழியையுன்னே) விசாரித்து, உரைப்பான் - (அவ்வழி)

சொல்லுவோன், தலை - (தூதரில்) மிக்கவன்—ள்-று. (கருத்து.) மூன்றை நெரிந்து சமயம்பார்த்துத் தக்கவிடமறிந்து எண்ணிச்சொல்பவனே தூதன்-என்பதாம். * செய்யுமுறைமையாவது அவர்நிலையும், தன்னரசு நிலையும், தன்னிலையும், சீர்தூக்கி அவைகளுக்கு ஏற்பக்காலமுறை முறைமையும் சொல்லுமுறைமையு முதலாயின, செவ்வி- தன்சொல்லை யேற்றுக்கொள்ளுமனநெகிழ்ச்சி. அருங்காலத்தின் வருந்தாதாகலால்- காலமென்றார். இடன் - தனக்குத் துணையாவார் உடனுறையவிடம்-எண்ணுதல் தான் அதுசொல்லும் விதமுமற்று அதற்கு அவர்சொல்லும் உத்தரமும் அதற்குப்பின் தான்சொல்லுமனவைகளும் ஆக இவ்வழியால் மேலுமேலும் காணெயெண்ணுதல்-வடதூலார், இவ்விரு வகைபாருடனே ஓலை கொடுந்து நிற்பானையும், கூட்டிக்தூதனை-தலைஇடை கடைனன வருகென்று சொல்லினராகலால் அவர்மதமும்தோன்ற தலையென்றார். தூதென்பது அதிகாரத்தால்வந்தது. [இவை ஐந்துபாட்டாலும் தான் வருந்துச் சொல்லுவானது இலக்கணம் சொல்லப்பட்டது.] (எ)

தூய்மை துணைமை துணிவிடைமை மிம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு.

இ-ள். வழி - (தன்னரசன்வார்த்தையை) அவன்சொல்லியவழியே, உரைப்பான் - (வேற்றரசர்க்குச்) சொல்லுவானது, பண்பு - இலக்கணமாவது, தூய்மை (பொருளாலும் காமத்தாலும்) பரிசுத்தனுகலும், துணைமை - (தனக்கு அவர் மந்திரிகள்) துணையாத்தன்மையும், துணிவுடைமை-துணிதலையுடைமையும், இம்மூன்றின்- இம்மூன்றோடுகூடிய, வாய்மை - மெய்மையும்-ஆம்—எ-று. (கருத்து.) சுதகமும்- துணையும்-துணிவும்-சத்தியமும் - இங்ஙன்குடும் தூதனிலக்கணமாம் - என்பதாம். * பொருள் காமங்கள்பற்றி வேறுபடச் சொல்லாமைப்பொருட்டு - தூய்மையும் - தன்னரசனுக்கு உயர்ச்சிசொல்லியவிடத்தே எம்போல்வார்க்கு அது இயல்பென்று அவர்கோபத்தை நீக்கற்பொருட்டு துணைமையும், இதுசொன்னால் இவர்தம்பம் செயவாரென்று ஓழியாமைப்பொருட்டுத் துணிவுடைமையும். யாவராலும் நம்பப்படுதற்பொருட்டு, மெய்யையும் வேண்டப்பட்டன. (அ)

விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்கணவன்.

இ-ள். விடுமாற்றம் - தன்னரசன்சொல்லிவிட்டவார்த்தையை, வேந்தர்க்கு-வேற்றரசர்க்கு, உரைப்பான்-சொல்லுதற்கு உரியவன், தனக்கும் நும் தன்பத்திற்கு அஞ்சி வடுமாற்றம் - (அவனுக்குத்) தாழ்வானவார்த்தையை, வாய்சோரா - வாய்சோர்ந்தும் சொல்லாத, வன்கணவன் - வலிமையையுடையவன்—ன்-று.(கருத்து.) தன்னரசன்வார்த்தை

யை வேற்றரசர்க்குச் சொல்லுதற்குரியவனே தூதரில்லையவர் - என்பதாம். * தாழ்வு அரசர்சாதிக்குக் கருமமல்லாமையால் - அதனை வடவெள்ளுரர். (கூ)

இறுதி பயப்பினு மெஞ்சா திறைவற்.
குறுதி பயப்பதாந் தூது.

இ-ள். இறுதிபயப்பினும் - (அவ்வார்த்தைதனக்கு) முடிவைத்தருமாயினும், எஞ்சாது-அதற்கு அஞ்சிவிடாது, தன்னரசன்சொன்னபடியே இறைவற்கு-அவ்வரசனுக்கு, உறுதி-மிகுதியை, பயப்பது-வேற்றரசனிடத்துச்சொல்லுவோனே, (தூதாம்) தூதனுவான்—என-று. (கருத்து.) தனக்கு முடிவுவரினும் அஞ்சாது வேற்றரசனுக்குத் தன்னரசன்சொல்லைச் சொல்பவனே தூதன்-என்பதாம். *முடிவைத்தரினுமென்றதனால் மற்றைத் துன்பங்களைத் தருதல் சொல்லவேண்டுவதில்லை யாயிற்று. [இவை மூன்றுபாட்டாலும் சொல்லியது சொல்லுவானது இலக்கணம் சொல்லப்பட்டது.] (ஙு)

எய-ஆம்-அதி-மன்னனைச்சேர்ந்தொழுகல்.

[அஃதாவது, மந்திரி அரசனைப் பொருந்தி நடக்கும்விதம், இதுவேந்தவாம் பண்புடைமையென முன்சொல்லப்பட்டமையால் தூதின்பின் வைக்கப்பட்டது.]

அகலாதணுகாது தீக்காய்வார் போல்க
விகல் வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.

இ-ள். இகல்-மாறுபடுதலையுடைய, வேந்தர் - அரசனை, சேர்ந்து-அடுத்து, ஒழுகுவார் - நடக்குமந்திரிகள், (அவனை) அகலாது - மிகநீங்காமலும், அணுகாது-மிகநெருங்காமலும், தீக்காய்வார்போல்க, நெருப்பிற் குளிர்காய்வார்போல் நடுவிடத்து நிற்கக்கடவர்—என-று. (கருத்து.) மந்திரிகள் மாறுபாடுடைய வேந்தரிடத்து அகலாமலும் அணுகாமலும் நிருக்கக்கடவர்-என்பதாம். * முன்கோபக்காரனென்பது தோன்ற இகல் வேந்தனென்றார், மிகநீங்கினுற் பயன் கொடாமல் மிகநெருங்கினுல் அவமதிப்பரி வருத்தும் வேந்தர்க்கு - மிகநீங்கினுற்குளிர் நீங்காமல் மிகநெருங்கினுற் சுடுவதாதலால் தீ உபமானமாயிற்று. (ச)

மன்னர் விழைப விழையாமை மன்னரான்
மன்னிய வாக்கந் தரும்.

இ-ள். மன்னர் - (தம்) மன்னரால், விழைப - விரும்பப்பட்டவை தனை, விழையாமை = (தாம்) விரும்பாதிருத்தல், மன்னரால் = அவ்

வரசரலே, மன்னிய-நிலைபெற்ற, ஆக்கம் - செல்வத்தை, தரும்-(மந்திரிகளுக்குக்) கொடுக்கும்—எ-று. (கருத்து.) தம்மரசரால் விரும்பப்பட்டவற்றை விரும்பாதிருத்தல் மந்திரிகளுக்கவரால் செல்வமுண்டாம் என்பதாம் * இங்கே விரும்பப்பட்டனவைபென்றது - அவர்க்குச்சிறப்பாக உரியனவைகளை, அவை உண்ணப்படுவனவும் - அணியப்படுவனவும் முதலானவிரண்டுவகைகளைச்சமமாய்த் தோன்றற்கு அஞ்சி விரும்பாதொழிபவே அவ்வச்சநோக்கி மடிழ்த்து அவர்தாமே எல்லலாச்செல்வமும் தருவனென்பது கருத்து. (உ)

போற்றி னரியவை போற்றல் கடுத்தபின்
றேற்றுதல் யார்க்கு மரிது.

இ-ள். (மந்திரிகள்) போற்றின் - (தம்மைக்) காத்துக்கொள்ளவேண்டினால், அரியவை-அரியபிழைகளை, போற்றல்- தம்மிடத்திலேவாராமற் காக்கக்கடவர், கடுத்தபின் - (அவ்வரசர் அவை வந்தவைகளாகக் கேட்டு) சந்தேகித்தபின்பு, தேற்றுதல்- (அவனைப்பின்) தெளிவித்தல், யார்க்கும்-யார்க்கும், அரிது- அருமை, (ஆதலால்)—எ-று. (கருத்து.) மந்திரிகள் தங்களிடத்துக் குற்றம்வாராமற் காக்கக்கடவர் தம்மரசர் சந்தேகித்தபின் அவனைத்தெளிவித்தலரிது-என்பதாம் * அரியபிழைகள்- அவராலே பொறுத்தற்கரிய கீழறுத்தல் முதலானவை. அவைகளைக் காத்தலாவது - ஒருவன்சொல்லியக்கால் அவர்நம்பாதிருக்கும்படி நடத்தல் பின் ஒருவழியால் நம்புவித்தலும் கடன்கொண்டவனைக் கண்டவிடத்தெல்லாம் அப்பொருள் போல்தம்மைக்கண்டவிடத்தெல்லாம் அப்பிழைதோன்றுமாதலால் யார்க்குமரிதென்றார். [இவைமூன்றுபாட்டாலும் அறுவகையாற் சொல்லப்பட்டது.] (ஊ)

செவிச்சொல்லுஞ் சேர்ந்த நகையு மவித்தொழுக
லான்ற பெரியா ரகத்து.

இ-ள். ஆன்ற-நிறைந்த பெரியாரகத்து - அரசரிடத்திருக்கும்போது, செவிச்சொல்லும் - ஒருவன்காதிலேசொல்லுதலையும், சேர்ந்தநகையும் - (ஒருவன்முக) நோக்கி நகைத்தலையும், அவித்து- நீக்கி, ஒழுகல்-நடக்கக்கடவர்—எ-று. (கருத்து.) மந்திரி அரசனிடத்திருக்கையில் ஒருவன் காதிற்சொல்லுதலையும் ஒருவன்கண்டு நகைத்தலையும் நீக்கி நடக்கக்கடவன் - என்பதாம். * சேர்தல் - பிறனெனடுசேர்தல்—அவைசெய்தாலதன்சோர்வுகண்டுசெய்தவையாகக்கொள்வனென்பதுகருத்து. (எ)

எப்பொ ருளு மோரார் தொடராமற் றப்பொருளா
விட்டக்காற் கேட்க மறை.

இ-ள். மறை - (அரசனுக்குப்பிறரோடு) ரகசியம் நிகழுமிடத்து, எப்பொருளும் - யாதொருபொருளையும், ஓரார் -செவிகொடுத்துக்கேளாமற்

லும், கொடாவார் - (அவனை) முடிந்தினவாமலும், அப்பொருளை - அ
ந்தாகசியப்பொருளை, விட்டாக்கால் - (அவனை) அடக்காமற்சொல்லி
ல், கேட்க-கேட்கக்கடவர்—எ-று. (கருத்து.) அரசனிகசியம் பே
கையிற் கேளாமலு மனதைவினவாமலும் மிருந்து அவன்சொல்லும் ம
ந்திரிகள் கேட்கக்கடவர்--என்பதாம். * முடிந்தினவுக்குரியபொ
ருளாயிருந்தாலு மென்றற்கு எப்பொருளுமென்றார். (இ)

குறிப்பறிந்து காலங் கருதி வெறுப்பில்
வேண்டுப வேட்பச் சொலல்.

இ-ள். (அரசனுக்குக்காரியஞ்சொல்லும்போது) - குறிப்பறிந்து.
(அப்பொழுதுகிகழ்கின்ற அவனது) குறிப்பை அறிந்து, காலங்கருதி
(சொல்லுதற்குவந்த) காலத்தையும்பார்த்து, வெறுப்பில் - வெறுப்பில்
லாதனவும், வேண்டுப - வேண்டுவனவும் ஆகியகாரியங்களை, வேட்ப
(அவன்மனம்) விரும்புமவகை, சொலல் - சொல்லக்கடவர் —எ-று.
(கருத்து.) குறிப்பறிந்துசமயம்பார்த்து வெறுப்பில்லாதவற்றையும் வே
ண்டுவனவற்றையுஞ் சொல்லக்கடவர்- என்பதாம்.* அரசன்மனம்காரி
யந்தில்லாதிக் காமவெகுளியுள்ளிட்டனவைகளிலே நிகழுமிடத்தும், அ
தற்குவந்தகாலத்தும், சொல்லுதல் பயன்படாமற்போதலால் - குறி
ப்பறிந்து காலங்கருதியென்றும், அவனுடன்படாத காரியங்கள் முடி
வுபெறுமையால் - வெறுப்பிலவென்றும் பயனில்லாதனவையும், பயன்சு
ருங்கியனவையும் - ஆகியகாரியங்களைச் செய்யவேண்டாமையால் வேண்
டுபவென்றும், அவைகளை இனிபனவாய்ச் சுருங்கிவிளங்கிய பொரு
ளுடையனவையாகிய சொற்களாலே சொல்லுகவென்றற்கு வேட்பச்
சொல்லலென்றும், சொல்லினார். (சு)

வேட்பன சொல்லி வினையில் வெஞ்ஞான்றும்
கேட்பினுஞ் சொல்லா விடல்.

இ-ள். (பெரும்பயனுள்ளனவையும் - வேட்ப - (அரசன்) விரும்புவ
னவும், (ஆகியகாரியங்களை) சொல்லி - (அவன்கேட்டிலனாயினும்) சொ
ல்லி, எஞ்ஞான்றும்-எந்தகாலத்தும், வினையில்-பயனில்லாதனவைகளை, கேட்
பினும்- (தானே) கேட்டாலும், சொல்லாவிடல்-சொல்லாது விடக்கட
வன்—எ-று(கருத்து.) அரசன் விரும்பியவற்றைச்சொல்லிப் பயனி
ல்லாதவற்றை யவன்கேட்டாலு மந்திரி சொல்லாதுவிடக்கடவன் - என்
பதாம்.* வினையில்கேட்பினும் எனவந்தசொற்களால் அவைகளுக்கு
எதிரானசொற்கள் - வருவிக்கப்பட்டன. வினையால்வருதலின் -வி
னையென்றும், வறுமைக்காலமும் அடக்க-எஞ்ஞான்றுமென்றும், செ
ல்லினார். சொல்லத்தக்கனவையும், சொல்லத்தகாதனவையும் வருத்தச்

லொல்லையப்படி. [இவைமூன்றுபாட்டாலும் சிறப்புவகையால்சொல்லப் பட்டது.] (எ)

இயைய வினமுறைய வென்றிகழார் நின்ற
வொளியோ டொழுகுப் படும்.

இ-ள். இயையர்-(இவர்னமக்கு) இயைபவர், இனமுறையார்(எமக்கு) இன்னமுறைமையினர், என்றிகழார்-என்று (அரசர்) அவமதியாமல், நின்ற-(அவரிடத்து) நிலைபெற்ற, ஒளியோடு-ஒளியோடுபொருந்த, ஒழுகப்படும்-நடக்கத்தகும்—என-று. (கருத்து.) அரசரியையவர்னமதுசாதியார் என்றிகழாமல் மந்திரிகள் பதிகளாக்கடவர் - என்பதாம். * ஒளிவிடுதியோ செய்யாநிற்கவும் உலகங்காக்கின்ற அவரதுதெய்வத்தன்மை அதனோடுபொருந்த வொழுகுதலாலது - அவர்தேவரும் காம்மனிதருமாகூடத்தல். அவ்வொளியினாலே நீக்கப்பட்ட இளமையும் முறைமையும்பற்றி இகழ்வாராலுல் தாமும் நீக்கப்படுவரொன்பது கருத்து. (அ)

கொளப்பட்டே லென்றெண்ணிக் கொள்ளாத செய்யார்
களக்கற்ற காட்சியவர்.

இ-ள். களக்கற்ற - அசைவற்ற, காட்சியவர்- அறிவையுடையவர்; கொளப்பட்டேமென்று - (அரசனுல்) நன்குமதிக்கப்பட்டோ மென்று, எண்ணி-நினைத்து, கொள்ளாத - (அவன்) விரும்பாதவைகளை, செய்யார்-செய்யார்கள்—என-று. (கருத்து.) அறிவுடையவர் அரசனுலே மதிக்கப்பட்டோமென்று நினைத்து அவர்விரும்பாதவற்றைச்செய்பார் - என்பதாம். * விரும்பாதவைகளைச்செய்து அழிவடைவோர் கொள்ளப்பட்டபின்பு தம்மை வேறொருவராக நினைப்பவராதலால் முன்னையராக வெண்ணத்து அஞ்சுமடப்பமனா - களக்கற்ற காட்சியவனென்றார். (கூ)

பழைய மெனக்கருதி பண்பல்ல செய்யுங்
கெழுதகைமை கேடு தரும்.

இ-ள், பழையமென - (அரசனுக்குப்) பழமைமையோமென, கருதினினைத்து, பண்பல்ல - (தமக்கு) இயல்பல்லாதவைகளை, செய்யும் - செய்கின்ற, கெழுதகைமை-உரிமையானது, கேடுதரும் - (மந்திரிகளுக்கு) கேட்டைத்தரும்—என-று. (கருத்து.) அரசனுக்குப்பழமைமையோமென்று நினைத்து இயல்பல்லாதவற்றைச்செய்யு முரிமையானது மந்திரிகளுக்கு கேட்டைத்தரும் - என்பதாம். * அவன்பொறுத்து வருத்தும் பொழுதில் அப்பழமைமைநோக்கி முகங்கொடாமல் உயிரைவிளைவுதலால் அவன்வேண்டாதனவை செய்தற்கு ஏதுவாகிய உரிமைகேடு தருமென்றார். [இவைமூன்றுபாட்டாலும் பொறுப்பொன்று அரசர்க்குவெறுப்பாயுள்ளவைகளைச்செய்யலாகாதென்பது சொல்லப்பட்டது. (ஏ)

எக-ஆம்-அதிகுறிப்பறிதல்.

அஃதாவது, அரசர்நினைத்ததை அவர்சொல்லாமல் அறிதல். இவை மன்னரைச்சேர்ந்து நட்டப்பவர்க்கு அவசியமானதாகலால், இது அதன்பின்வைக்கப்பட்டது.

கூறுமை நோக்கிக் குறிப்பறிவா னெஞ்ஞான்று
மாறுநீர் வையக் கணி.

இ-ள். குறிப்பு -(அரசனுற்) குறிக்கப்பட்டகார்யத்தை, கூறுமை (அவன்) சொல்லவேண்டாவகை, நோக்கி - அவன் முகத்தையாவது கண்ணையாவது) பார்த்து, அறிவான் - அறிகிறமந்திரியானவன், எஞ்ஞான்றும்-எந்தகாலத்தும், மாறுநீர் - வற்றுதகீராலேசூழப்பட்ட, வைக்கு- உலகதத்துள்ளார்க்கு, அணி - ஆபரணம்—எ-று.(கருத்து.) அரசன்குறிப்பையறிகிற மந்திரிஉலகத்தார்க் கார்ணமாவான் - என்பதாம். * அறிவுடையனாகி எல்லார்க்கும் அழகுசெய்தலால் வையக்கணி யென்றார். குறிப்புமெய்வயமும் ஆகுபெயர்கள். வையத்திற்கென்பதுவிகாரம். (க)

ஐயப்படாஅ தகத்த துணர் வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்.

இ-ள். அகத்தது - (ஒருவனது) மனதினிடத்திலே நிகழ்வதை, ஐயப்படா அது-சந்தேகப்படாமல், உணர்வானை-துணிவாக அறியவல்லவனை, (மனிதனேயாயினும்) தெய்வத்தோடொப்ப - தெய்வத்தோடுசமானமாக, கொளல்-நன்குமதிக்கப்பட்டவன்—எ-று. (கருத்து.)மனத்தினிடத்து நடப்பதை அறிபவனைத் தெய்வத்தோடு சமானமாகக்கொள்ளக்கடவன்-என்பதாம். * உடம்புமுகலானவைகளால் ஒப்பாகாஞ்யினும் பிறர்நினைத்ததை அறிகிறதெய்வத்தன்மை யுடைமையால் தெய்வத்தோடொப்பவென்றார். (உ)

குறிப்பிற் குறிப்புணர் வாரை யுறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல்.

இ-ள். குறிப்பின் - (தன்) குறிப்பின்விகழும்விதம் அறிந்து, குறிப்புணர்வானை (அதனால்) பிறர்குறிப்பு அறியுந்தன்மையவனை, உறுப்பினுள் (அரசர்தம்) முறுப்புகளுள் - யாதுகொடுத்தும் -(அவர்வேண்டுவதை)யாதொன்றைகொடுத்தாயினும், கொளல்-(தமக்கு) துணையாகக்கொள்ளக்கடவர்—எ-று. (கருத்து.) குறிப்பால் குறிப்பறிவனை வேண்டுவனைகொடுத்துக் கொள்ளக்கடவர்-என்பதாம். * உள்ளேநிகழுஞ்வழியாவர்க்கும் ஒக்கலால் பிறர்குறிப்பை அறிதற்குத் தன்குறிப்புச் சாதனம்

மாயிற்று; உறுப்புகள் - பெற்ருள்-நாடுமுதலாகிய புறத்துறுப்புகள்.[இவை மூன்றுபாட்டாலும் குறிப்பறிவாரது சிறப்புச் சொல்லப்பட்டது.]

குறித்தது கூறுமைம் கொள்வாரோ டேனை
யுறுப்போ ரனையரால் வேறு.

இ-ள். குறித்தது-(ஒருவன்மனத்தி) னினைத்ததை, கூறுமை(அவன்) சொல்லாமல்- கொள்வாரோடு, அறியவல்லவரோடு, ஏனை -மற்றை (அறியமாட்டாதவர்)—உறுப்பு - அவயவத்தால், ஓரனையர்- ஒருதன்மையாகவொப்பினும், வேறு (அறிவால்) வேறு—எ-று. (கருத்து.) மனதில்லினைத்ததைச் சொல்லாமலறிய வல்லவரோடு அறியமாட்டாதவர்வடிவாலொப்பினுமறிவால் வேறுவர்-என்பதாம். * அறியமாட்டாதவனென்பதும் - அறிவானென்பதும் வருவிக்கப்பட்டன சிறந்த அறிவில்லாமையால் மிருகமென்னுங் கருத்தால் வேறென்றார். (சு)

குறிப்பிற் குறிப்புணரா வாயி னுறுப்பினு
ளென்ன புயத்தவோ கண்.

இ-ள். குறிப்பின் - (குறித்ததை அறியவல்லதன்) காட்சியால், குறிப்பு - (பிறர்) குறிப்பை, உணராவாயின் - அறியமாட்டாவாயின், (ஒருவனுக்கு) உறுப்பினுள் - அவயவங்களுள், கண் - (சிறந்த) கண்கள், என்னபயத்தவோ-(வேறே)என்னபயன் செய்வனவோ—எ-று. (கருத்து.) குறிப்பால் பிறர்குறிப்பை யறியாவிடில் கண்கள் என்பயனைத்தருவன - என்பதாம். * குறிப்பறியு மிடத்தே தானையாஞ்சிறப்புப்பற்றி உயிரினறிவு கண்மேல் வற்றப்பட்டது. அக்கண்களாலே பயனில்லையென்பதாம். [இவையிரண்டுபாட்டாலும் குறிப்பறியாரிழிவு சொல்லப்பட்டது.] (நி)

அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சத்
தடுத்தது காட்டு முகம்.

இ-ள். அடுத்து - (தன்னை) அடுத்தபொருளினது நிறத்தை, காட்டும் - (தான்கொண்டு) காட்டுகிற, பளிங்குபோல்-பளிங்கினைப்போல்; நெஞ்சம் - (ஒருவனது) நெஞ்சத்தில், கடுத்தது - மிகுந்ததுணர்ச்சியை, முகம் - (அவன்) முகமானது, காட்டும்-(தான்கொண்டு) காட்டும்—எ-று (கருத்து.) அடுத்தபொருளைக்காட்டும் கண்ணாடிபோல ஒருவன்மனத்தின்குணத்தை முகங்காட்டும் - என்பதாம். * அடுத்ததனலால்ஆகுபெயர், ஒருபொருள் வேறொருபொருளின் குணத்தைக் கொண்டுதோற்றுதலாகிய தொழிலுவமம். (சு)

மூக்கின் முதுக்குறைந்த துண்டோ வுவப்பினுங்
காயினுந் தான்முந் துறும்.

இ-ள். (உயிரானது) உவப்பினும் -விரும்பினாலும், காயினும்-வெறுத்தாலும், தான்-தான், (அறிந்து) முந்துறும் ; (அவ்விரண்டி லும்அவ்

வுயிர்க்கு) முற்பட்டுநிற்கும், (ஆகலால்) முகத்தின்-முகம்போல், முதுக் குறைந்தது - அறிவுமிகுந்தது, உண்டோ-வேறுண்டோ—எ-று. (கருத் து) முகம்போல அறிவுமிகுந்தது வேறில்லை - என்பதாம். * அறிவு உயி ர்க்கேயல்லாமல் முகத்திற்கு இல்லையென்பா னாை நோக்கி உயிரினது க ருத்தை அறிந்து அதுவிரும்பினால் கண்மலர்ந்தும், அதுவெறுத்தால் தாள்கருகியும் வ்ரலால் உண்டென்று மறுப்பவர்போல் குறிப்பறித லுக்குச் சாதனம் சொல்லியபடி. (எ)

முகநோக்கி நிற்க வமையுமகநோக்கி
யூற்ற துணர்வார்ப் பெறின்.

இ-ள். (குறையுறுவோன்) அகநோக்கி - (தன்) மனத்தைகுறிப்பா ல் அறிந்து, உற்றது-(தான்) உற்றதனை, உணர்வார் - அறிந்துதீர்ப்பானை பெறின்-பெற்றால், (அவர்தன் முகத்தைப்பார்க்கும்படியாக) —முகநோ க்கி - (அவர்) முகத்தைப்பார்த்து, நிற்க -(அவ்வளவிலே) நிற்க, அமையு ம் - போதும்—எ-று. (கருத்து.) மனதைக்குறிப்பாலறிந்து உற்றதை, அறிவானைப்பெற்றாலவர் முகம்பார்த்து நிற்கப்போதும் - என்பதாம். * அப்படிநில்லாமல் சொல்லுவானாகில் இருவருக்கும் சிறுமையாமாக லால் அதுவேண்டாமென்பதாம். குறையுறுவோனது இயல்பு சொல் லுவார்போல் சாதனம்சொல்லியபடி. [இதனால்மூன்றுபாட்டாலும் குறி ப்பறிதற்குச் சாதனம்முகமென்பது சொல்லப்பட்டது.] (அ)

பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்குங் கண்ணின்
வகைமை யுணர்வார்ப் பெறின்.

இ-ள். கண்ணின்வகைமை-(தமது) பார்வைவேறுபாட்டுத் தன் மையை, உணர்வார்- அறியவல்லமந்திரிகளை, பெறின்-(அரசர்) பெற்றா ல், (அவர்க்கு) பகைமையுங்கேண்மையும்-(மனத்திலுள்ள) பகைத்தன் மையும் நட்புத்தன்மையும், (வேற்றரசர் சொல்லாமற்போயினும்) க ண்-(அவர்) கண்களே, உரைக்கும்- சொல்லும்—எ-று. (கருத்து.)கண் ணின்தன்மையை யறியவல்ல மந்திரிகளை யரசர்பெற்றாலவர்க்குப் ப கையையு நட்பையுங் கண்காட்டும் - என்பதாம் * பார்வைவேறுபாடா வன-வெறுத்தபார்வையும், விரும்பியபார்வையும், ஆம், உணர்தல் - அ வைகளை அந்தந்தக்குறிகளால்அறிதல். (ஆ)

நுண்ணிய மென்பா ரளக்குங்கோல் காணுங்காற்
கண்ணல்ல நில்லை பிற.

இ-ள். நுண்ணியமென்பார் - நுட்பவறிவுடையமென்றிருக்கும் நிரிகள், அளக்குங்கோல் -(அரசரதுகருத்தை) அளக்குங்கோலாவது, கா ணுங்கால்-ஆராயுமிடத்து, கண்ணல்லது - (அவரது) கண்களல்லாம ல், பிற-வேறு, இல்லை-இல்லை—எ-று. (கருத்து.) அரசர்கருத்தை யளச்

குங்கோலாவது அவர்கள்கண்களேயல்லாமல்-. வேறில்லை-என்பதாம். * இங்கிதம்-வடி-வு-தொழில்- சொல் - என்பவைமுதலானபிறர்கருத்தளக்கிற அளவைகள் பலவும் முன்னறிந்தவிடத்தே அவராலே மறைக்கப்படும் பார்வை ம்னத்தோடுகலத்தலால் மறைக்கப்படாதென்பதுபற்றி அதனையே -பிரித்துச்சொல்லினர். [இவைஇரண்டுபாட்டாலும் நுண்ணியகருவி பார்வையென்பது சொல்லப்பட்டது] (ய)

எஉ -ஆம்-அதி-அவையறிதல்

ஆம்தாவது, ?அரசனேழிருந்த சபையியல்பை அறிதல் -காரியஞ்சொல்லுங்கால் அவன் குறிப்பறிதலே யல்லாமல் இதுவும் வேண்டுதலால்பின்வைக்கப்பட்டது.

அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
றொகையறிந்த தூய்மை யவர்.

இ-ள். சொல்லின் றொகை- சொல்லின்கூட்டத்தை, அறிந்-தெரிந்த, தூய்மையவர் - பரிசுத்தகுணமுடையவர், (தாம் ஒன்று சொல்லும்போது) அவை - (அப்பொழுதுள்ள) சபையை, அறிந்து -தெறிந்து, ஆராய்ந்து-ஆராய்ச்சிசெய்து, சொல்லுக - சொல்லக்கடவர்— எ-று. (கருத்து) - சொல்லின் தொகையையறிந்தவர் - சபையறிந்துசொல்லக்கடவர் - என்பதாம். * சொல்லின்றொகை யெனவே சொற்சொல் - ஆக்கச்சொல் - குறிப்புச்சொல் என்மூவகைச்சொல்லும் அடங்கின. தூய்மை - அச்சொற்களில் தமக்கு ஆகாதவை ஒழித்து ஆமவைகொள்ளல், அவையினளவை அவைவென்றூர் அவ்வளவு மிகுந்த - ஒப்பு-தாழ்வு - என மூவகைப்படும். அறிதல்-தம்மோடுனக்கி அறிதல் ஆராய்தல் - இச்சபையிலே, சொல்லப்படுங்காரியம் - இதுசொல்லுமிதம் இது சொன்னால் அதன்முடிவு இதுவென்று இவையுள்ளிட்டனவை ஆராய்தல். (க)

இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லி
னடைதெரிந்த நன்மை யவர்.

இ-ள். சொல்லினடை-சொற்களதுகடையை, தெரிந்த - ஆராய்ந்தறிந்த, நன்மையவர்-நன்மையையுடையவர், (சபையிலிடத்துஞ்சொல்லுஞ்சொல்லும்போது) இடைதெரிந்து -(அதன்சமயத்தை) ஆராய்ந்தறிந்து, நன்குணர்ந்து (மழுப்படாமல்) மிகவுந்தெளிந்து, சொல்லுக சொல்லக்கடவா—எ-று. (கருத்து.) சொல்லினடையறிந்தவர் சமயமறிந்துசொல்லக்கடவர் - என்பதாம், * சொற்களினடையாவது -அம்மூவகைச்சொற்களும் - செம்பொருள் - ஆக்கப்பொருள் - குறிப்புப்பொருள் இவைகளை உணர்த்தும்விதம். சமயம் = கேட்குதலில் ஆசையுடை

ஜம வழு-சொல்வழுவும், பொருள்வழுவும்.[இவை இரண்டுபாட்டா லும்] ஒன்றுசொல்லும்போது சபையறிந்தே சொல்லவேண்டுமென்ப தே சொல்லப்பட்டது.]

(உ)

அவையறியார் சொல்லன்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉ மில்.

இ-ள். அவை = சபையினாளவை, அறியாதவராகி, சொல்ல ல்-(ஒன்று) சொல்லுதலை, மேற்கொள்பவர் - தம்மேற்கொள்பவர், சொ ல்லின்வகை - அச்சொல்லின்கூறுபாடும், அறியார் - அறியாதாவர், வல்ல தூஉம் - (மற்றும்) வல்லதலையும், இல் - (அவர்க்கு) இல்லை—எ-று.(கருத் தது.) அவையளவை யறியாராகிப்பேசத் மேற்கொள்பவர் சொல்லின் வகை அறியார் - என்பதாம், * (சொல்லுதல் வகைமை) கேட்பவரது உணர்வுவகைமைபற்றி வருதலால் - சொல்லின்வகையறியாரென்றும், இம்மதறியார் வாதுரறியாரென்று எல்லாராலும் இகழப்படுதலால் - வ ல்லதூஉமில்லென்றும், சொல்லினார். [இதனால் சபையை அறியாதவி டத்துவரும் குற்றம் சொல்லப்பட்டது.]

(ஊ)

ஒளியார்முன் ஒள்ளிய ராதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணங் கொளல்.

இ-ள். ஒளியார்முன் - (அறிவால்) ஒளியாரதுசபையினிடத்து, ஒ ள்ளியராதல்- (தாமும்) ஒள்ளியராகக்கடவர், -வெளியார்முன்-(மற்றை) வெள்ளைகளது சபையினிடத்து, வான்சுதைவண்ணம் - (தாமும்,வெண் சுண்ணச்சாந்துநிறத்தை, கொளல் - கொள்ளக்கடவர்—எ-று. (கருத் தது.) அறிவாளிகளுள்சபைமுன்னே அறிவாளிகளாகக்கடவர். அறிவில்லா ர்சபைமுன்னே அறிவில்லாராகக்கடவர் - என்பதாம். * ஒளியாவன்ற தூ - மிக்காளாயும், ஒத்தாளாயும், ஒள்ளியராதல்-தமது நூலறிவும் சொ ல்வன்மையும் தோன்றவிரித்துரைத்தல் வைரம் - இரண்டுகுதிவைரம் வைரமில்லாதமரத்தை வெளிறென்பதுபோல் அவ்விரண்டுமறியாத பு ல்லனைவெளியாவென்றார். அவர்மதிக்கும்படிக்கு அவரினும் வெண்மை யுடையராகவென்றற்கு - வான்சுதைவண்ணங்கொளலென்றார். [சபை யுளவறிந்தார்செய்யுங் நிறம் இதனால் தொகுத்துச் சொல்லப்பட்டது.]()

நன்றென்ற வற்றுள்ளு நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு.

இ-ள். முதுவருள் - (தம்மின்) மிகுந்தவரது சபையினிடத்து, மு ந்து-(அவருக்கு) மூற்பட்டு, கிளவா- (ஒன்றைச்) சொல்லாத, செறிவு- அடக்கம், நன்றென்றவற்றுள்ளும் (ஒருவர்க்குஇது) நல்லதென்று சிற ப்பித்துச்சொல்லப்பட்ட குணங்கள் பலவிலும், நன்றே - நல்லதாகும் —எ-று. (கருத்து.) அறிவுடையோர்சபையிலவர் முன்னமொன்றைச் சொல்லாதவடக்கமானது நன்மையெல்லாவற்றுள்ளு நல்லது - என்ப

தாம். * தங்குறைவும். அவர்மிகுதியும் - அவர்சொல்லுதற்கு முன்னே சொன்னல் உண்டாகிற இழுக்கும், சொல்லாவிட்டால் வருகிறநன்மையும். அறிந்தே அடங்கலால் அவ்வடக்கத்தை நன்றென்றவற்றுள்ளி நன்றே என்றார். முன்சொல்லுகலேயே விலக்கின்மையால் உடன்சொல்லுதலும், பின்சொல்லுதலும், ஆமென்பது பெறப்பட்டது, [இதனல் மிகுந்தவாது சபையினிடத்துச் செய்புந்திறம் சொல்லப்பட்டது.]

ஆற்றி னிலைதளர்ந் தற்றே வியன்புல
மேற்றுணர்வார் முன்ன ரிழுக்கு.

இ-ள். வியன் புலம்- விரிந்தநூற்பொருள்களை, ஏற்று- உட்கொண்டு, உணர்வார்முன்னர் - (அவைகளின் மெய்ம்மையை) அறியவல்லவர்சபையினில், இழுக்கு (வல்லவனெனுநவன்) சொல்லிழுக்குப்படுதல், (முத்திபெறற்பொருட்டு நல்வழியினின்றவனெனுநவன்) —ஆற்றின் - அவ்வழியினின்றும், நிலைதளர்ந்தற்றே - நிலைதளர்ந்து வீழ்ந்தாலொக்கும்— என்று. (கருத்து.) கற்றவர்சபையில் கற்றவனிழுக்குப்படுதல் நல்வழியினின்றவன் தீவழியில் வீழ்ந்தாற்போலும்-என்பதாம் * நிலைதளர்ந்து வீழ்தல்-அறிவில் ஐம்பொறிவென்றொழுகியவன் பின்னளகிக்-கூடாவொழுக்கத்தானுகுதல். பயனிழந்தலேயன்றி இகழ்வும் படுவானென்பதாம் [இதனல் அச்சபையில் நவறியவிடத்துப்படும் குற்றம்சொல்லப்பட்டது.] (சு)

கற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடறச்
சொற்றெரிதல் வல்லா ரகத்து.

இ-ள். கசடற-வழுப்படாமல், சொற்றெரிதல்-சொற்களை ஆராய்தலில், வல்லாரகத்து-வல்லவர் சபையிடத்தே, (சொல்லினல்) கற்று-(புலநூல்களையும் கற்று, அறிந்தார் - (அவைகளாலாகியபயனை) அறிந்தவரது, கல்வி-கல்வியானது, விளங்கும்-(யாவர்க்கும்) விளங்கித்தோன்றும்—என்று. (கருத்து.) குற்றமறக்கற்றவர் சபையிற்கற்றவர் கல்விவிளங்கும்-என்பதாம். * அப்படிப்பட்ட சபையிலேயே சொல்லக்கடவ ரென்பதாம். (எ)

உணர்வு துடையார்முற் சொல்லல் வளர்வதன்
டாத்திய னீர்சொரிந்தற்று.

இ-ள். உணர்வது-(பொருள்களைத்தாமே) அறியவல்ல அறிவை, உடையார்முன்- உடையவர்சபையினிடத்து, சொல்லல்-(கற்றவர் ஒன்றைச்சொல்லுதல், வளர்வதன்- (தானே) வளர்வதொருபயிர்நின்ற, பாத்தியுள்-பாத்தியினுள், நீர்சொரிந்தற்று - நீரைச்சொரிந்தாற்போலும்—என்று. (கருத்து.) கற்றவர்சபையிற் கற்றவதொன்றைச்சொல்லல்பாத்தியில்நீர்விட்டாற்போலும்-என்பதாம். * தானேயும் வளர்தற்குரிய கல்விமிகவருளமென்பதாம். [இவை இரண்டுபாட்டாலும் ஒந்தாரது சபையிடத்து எவ்வழியும் சொல்லக்கடவ ரென்பது சொல்லப்பட்டது.] (அ)

புல்லவையுட் பொச்சாந்தும் சொல்லற்க நல்லவையு
ணன்கு செலச்சொல்லு வார்.

இ-ள். நல்லவையுள்-நல்லவரிருந்தசபையினிடத்து, நன்கு - நல்லபொருள்களை, செல- (அவர்) மனங்கொளள, சொல்லுவார் - சொல்லுதற்குரியவர் - புல்லவையுள்- (அவையறியாத) புல்லரிருந்த சபையினிடத்து, பொச்சாந்தும்-மறந்தும், சொல்லற்க- (அவைகளைச்) சொல்லாதொழியக்கடவர்—எ-று. (கருத்து.) நல்லோர்சபையிலே நற்பொருளைச் சொல்பவர் புல்லர்சபையிலே மறந்தும் சொல்லாதிருக்கக்கடவர்-என்பதாம். * சொல்வாராயின் தமக்குரிய சபையை அறியாதகுற்றம்பற்றி நல்லோர்சபையும். சொன்ன பொருளறியாமையால் புல்லர்சபையும், இகழ்தலால் இரண்டுசபைக்கும் ஆகாதென்பதுகருதி - பொச்சாந்தும்சொல்லற்கவென்றார். (கூ)

அங்கணத் துலந்த வமிழ்தற்றா நன்கண்ந்த
நல்லார்முற் கோட்டி கொளல்.

இ-ள். (நல்லோர்) - தங்கணத்தால்லார்முன், தம்மினத்தவரல்லாதவர் சபையிடத்து-கோட்டிகொளல், யாதொன்றையும்- சொல்லாதிருக்கக்கடவர், (சொன்னால்அது)- அங்கணத்துள்-(பரிசுத்தமல்லாத) முற்றத்துள், உக்க-வீழ்ந்த, அமிழ்தற்று-அமிர்தமொக்கும்—எ-று. (கருத்து.) தம்மினத்த ரல்லார் சபையில் ஒன்றுஞ்சொல்லாதிருக்கக்கடவன், சொல்லுதல் சேற்றுள் வீழ்ந்தவமிர்தமொக்கும்-என்பதாம். *சொல்லின்-அது, இவ்விரண்டும் வருவிக்கப்பட்டன. சாவாமருந்தாகுதலின்று உண்போர்கையிலும் படாமல் அம்முற்றத்திற்கும் பொருதமில்லாமல் கெட்டவிதம் தோன்றற்கு-உக்கவமிழ்தென்றார். அச்சொல் பயனில்லாத சொல்லாமென்பதாயிற்று. [இவைஇரண்டுபாட்டாலும் காழ்ந்தோர் சபையினிடத்து ஒருவழியும் சொல்லலாகாதென்பது சொல்லப்பட்டது.] (ஙி)

எஉ-ஆம்-அதி - அவையஞ்சாமை.

அஃதாவது, சொல்லுதற்குரிய சபையை அறிந்து சொல்லுங்கால் அதற்கு அஞ்சாமை அதிகாரமுறைமையும் இதனாலேவிளங்கும்.

வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
முகையறிந்த தூய்மை யவர்.

இ-ள். சொல்லின் முகையறிந்த-சொற்களதுதொகையை அறிந்து, தூய்மையவர்-பரிசுத்தகுணமுடையவர், வகையறிந்து- (தற்று) வல்ல

சபைப் மூடசபை என்கிறசபையின்) வகையை அறிந்து, வல்லவை-கற்றவல்ல சபையில், (ஒன்றுசொல்லும்போது) வாய்சோரார், (அச்சத்தாற்பிழைபடச்) சொல்லார்—என்று- (கருத்து.) சொல்லினது தொகையையறிந்தவர்சபையினது வகையையறிந்து பிழைபடச்சொல்லார்-என்பதாம். * இருந்தாரது வல்லமைசபைமேல் ஏற்றப்பட்டது. அச்சத்தாலென்பது-அதிகாரத்தால் வந்தது. (க)

கற்றருட் கற்று னெனப்படுவர் கற்றார்முற்
கற்ற செலச்சொல்லு வார்.

இ-ள். கற்றார்முன்-கற்றோர்சபையினிடத்தே, கற்ற- (தாம்) கற்றவைகளை, செல-(அவர்)மனங்கொள்ளும்வகை, சொல்லுவார்-(அஞ்சாமல்) சொல்லவல்லவர், கற்றருள்- கற்றவரெல்லாரினும், கற்றார்- (இவர்) மிக்ருகக்கற்றவர், எனப்படுவர்-என்று(உலகத்தோராலே)சொல்லப்படுவர்—என்று. (கருத்து.) கற்றவர்சபையிற் கற்றவற்றைச்சொல்ல வல்லவர் கற்றவரெல்லாருள்ளுங் கற்றவரென்று சொல்லப்படுவார் - என்பதாம். * உலகமறிவது அவரையேயாகலின் அவ்வுலகத்தினாலே புகழப்படுவாரும் அவரே யென்பதாம். (உ)

பகையகத்துச் சாவா ரெளிய ரறிய
ரவையகத் தஞ்சா தவர்.

இ-ள். பகையகத்து-பகையினிடத்து, சாவரர்- (அஞ்சாதுபோய்) இறக்கவல்லவர், எளியவர்-(உலகத்துப்) பலர், அவையகத்து - சபையினிடத்து, அஞ்சாதவர் - அஞ்சாமற் (போய்ச்சொல்ல) வல்லவர், அரியர்-சிலர்—என்று. (கருத்து.) பகையினிடத்தஞ்சார்திறக்கவல்லவர்பல சபையினிடத்தஞ்சாது பேசவல்லவர் சிலர்-என்பதாம்.*அஞ்சாமைசாவாவென்பதனோடுங் கூட்டி அதனாலே சொல்ல வல்லவனென்பது வருவிக்கப்பட்டது. [இவை மூன்றுபாட்டாலும் அவை அஞ்சாது சிறப்புச் சொல்லப்பட்டது.] (ஊ)

கற்றார்முற் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற
மிக்காருண் மிக்க கொளல்.

இ-ள். கற்றார்முன்-(பலநூல்களையுங்) கற்றோர்சபையினிடத்து-கற்ற-(தாம்) கற்றவைகளை, செல - (அவர்) மனங்கொள்ளும்படி, சொல்லி-சொல்லிக்காட்டி, தாங்கற்ற-தாங்கற்றவைகளினும், மிக்க - அதிகமானபொருள்களை, மிக்காருள் - அதிகமாகக்கற்றவரிடத்து, கொளல், (அறிந்து) கொள்ளக்கடவர்—என்று. (கருத்து.) கற்றவர் முன்கற்றவற்றைச்சொல்லித் தாங்கற்றவைகளினு மிக்கவற்றைக் கற்றவரிடத்துக் கொள்ளக்கடவர்-என்பதாம். * எல்லா மொருவருக்குக் கற்றல்கூடாமையால் வேறுவேறுகிய கல்விபுடையவர் பலரிருந்த சபையில் தாங்

கற்றனைகளைச்சொல்லிக். கற்கப்பெறுதலையும்கேட்டுஅறியலா மென்பது தோயிற்று. [இதனால் அதனது ஒருசார்பயன் சொல்லப்பட்டது.] (சு)

ஆற்றி னளவறிந்து கற்க வதனையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு.

இ-ள். அனை - (மேற்றுமேவந்தார்) சனைப்பில், அஞ்சா- அஞ்சாமல், மாற்றம் - எதிர்மொழியை, கொடுத்தற்பொருட்டு - கொடுக்குங்காரண மாக, ஆற்றின் - (சொல்லிலக்கண்) வழிபாலே, அளவு-அளவுநூலை, அறிந்து-தெரிந்து, கற்க-(மந்திரிகள்) கற்க்கக்கடவர்—எ-று. (கருத்து.)வேற்றரசர் சபையிலஞ்சார் தெதிர்மொழி கொடுத்தற்பொருட்டுச் சொல்லிலக்கண வழியாலளவை நூலறிந்து மந்திரிகள்கற்கக்கடவர்கள்-என்பதாம். * அளவைநூல்சொல்லிலக்கணங்கற்றே கற்கலேண்டுதலால் இதற்கு அதுவழியெனப்பட்டது. அளவையெனப்பட்ட தர்க்கநூலிலக்கற்றவர்க்கே அவர்சொல்லிலெல்லைக்கடுமாகலால் அவைகளை பிழைபடாமற் கற்கக்கடவ ரென்பதர்ம். [இதனால் அந்சுகாரணம் சொல்லப்பட்டது.] (கூ)

வாளொடென் வன்கண்ணர் கல்லார்க்கு நூலோடென்
நுண்ணனை யஞ்சு பவர்க்கு.

இ-ள். வன்கண்ணர்கல்லார்க்கு - சௌரியமுடையவ ரல்லாதவர்க்கு, வாளொடு-வாளாயுதத்துடன், என்-என்ன,(சம்பந்தமுண்டு)(அதுபோல்) நுண்ணனை - புத்திநுட்பமுடையவரது சபையை, அஞ்சுபவர்க்கு-அஞ்சுவோர்க்கு, நூலோடு-நூலுடனே,என்-என்ன(சம்பந்தமுண்டு)—எ-று: (கருத்து.) சௌரியமில்லாதவர்க்கு வாளாயுதத்துடனென்ன சம்பந்தமுண்டு அதுபோலக்கற்றவர் சபைக்கஞ்சுவோர்க்கு நூலோடென்னசம்பந்தமுண்டு-என்பதாம் * இருந்தாரது நுண்மைஅனைமேல் ஏற்றப்பட்டது. நூலுக்கு உரியவரல்ல வென்பதாம். (எ)

பகையகத்துப் பேடிகை யொள்வா ளனையகத்
தஞ்சு மவன்கற்ற நூல்.

இ-ள். அனையகத்து- (சொல்லப்படுஞ்) சபைகூடுவில், அஞ்சுமவன்-(அதனை) யஞ்சுமவன், கற்றநூல்-கற்றறிந்தநூல், பகையகத்து-(எதிர்ப்படும்) பகைகூடுவில், பேடி-(அதனை அஞ்சும்) பேடி, கை-கையிற்பிடித்த, ஒள்வாள் - கூர்வாளையொக்கும்—எ-று. (கருத்து.) சபைக்கஞ்சுவோன் கற்றநூல்பேடி கைவாளையொப்பாகும்-என்பதாம். * பேடிபெண்ணியல்புமிருக்க ஆணியல்புடையவள்-இடமும் - வாய்த்துத் தானும் கன்முயிருந்தசேயாயினும் பிடித்தவனது குற்றத்தால் வாள்சிறவாமைபோல சபையும் வாய்த்துத்தானும் கன்முயிருந்தசேயாயினும் கற்றவனது குற்றத்தால் நூல்சிறவாதாயிற்று. (ஏ)

பல்லவை கற்றும் பயனிலரே நல்லவை
னன்கு செலச்சொல்லா தார்.

இ-ள். நல்லவையுள்-நல்லவரிருந்தசன்பையுள், னன்கு - நல்லசொற் பொருள்களை; செல-(அவற்கு)வற்க, சொல்லாதார்- (அச்சத்தால்)சொல்லமாட்டாதவர், பல்லவைகற்றும்-பல நூல்களைக் கற்றராயினும், பயனிலரே-(உலகத்துக்குப்) பிரயோசனப் படாதவிலர்—என்று. (கருத்து.) நல்லவர்சபையிலே நல்லபொருளைச் சொல்லாதவர் பலநூல்களைக் கற்றராயினும் பயனில்லாதவர்-என்பதாம். * அறிவார் முன் சொல்லாமையால் கல்வியினுண்மை அறிவார். இல்லையென்பதாம். (அ)

கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்து
கல்லா ரவையஞ்சு வார்.

இ-ள். கற்று-(நூல்களைக்)கற்று, அறிந்தும் - (அவைகளாலே பயனை) அறிந்திருந்தும், நல்லார்-நல்லவரிருந்த, அவை- சபையை, அஞ்சுவார் - அஞ்சி (அவ்விடத்திலே) சொல்லாதவரை, கல்லாதவரின்-மூடரினும், கடை-கடையர், என்ப-என்று (உலகத்தோர்) சொல்லுவார்-என்று. (கருத்து.) கற்றிருந்தும் கற்றவர் சபைக்கஞ்சுபவர் கல்லாதவரிலும் கடையாவர்-என்பதாம். * அக்கல்வி யறிவுகளாலே பயனைத்தாமும் அடையாமல் பிறனையும் அடைவிக்காமல் கல்விக்குன்பமே அடைந்து நிற்கையால் கல்லாதவரிற் கடையெனவுலகம்பழிக்கும் என்பதாம்.()

உளனொளிறு மில்லாரோ டொப்பர் களனஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார்.

இ-ள். களன்-சபைக்கு, அஞ்சி-பயந்து, கற்ற - (தாம்)கற்றவைகளை, செல- (அதற்கு) ஏற்க, சொல்லாதார் - சொல்லமாட்டாதவர், உளொளிறும் - உயிரோடிருந்தாலும், உலகத்தோரால் எண்ணப்படாமையால்) இல்லார்போடொப்பர் - இறந்தவரோடொப்பாவார்—என்று. (கருத்து.) சபைக்கஞ்சிக் கற்றவற்றைச் சொல்லாதவர் உயிரோடிருந்துமிறந்தவரோ டொப்பர்- என்பதாம். * [இவை ஐந்துபாட்டாலும் சபைக்கு அஞ்சுவோரது இழிவுசொல்லப்பட்டது:] (ஐ)

அங்கவியலில் அமைச்சு-முற்றியது.

எஃ-ஆம் - அதி - நாடு.

இனி அவ்வாசனலும்-மந்திரியாலும்- கொண்டுசெலுத்தப்படுவதும், மற்றை அரண்முதலிய அங்கங்களுக்கு அவசியம் வேண்டுவதும். ஆகியநாடு ஓதிகாரத்தினாலே சொல்லுகின்றார்.

அஃதாவது, இப்படிப்பட்ட தென்பதும் அதிகாரமுறையும் இதனுள் விளங்கும்.

தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு.

நூற்

இ-ள். நாடு-நாடாவது, தள்ளாவிளையும்-குன்றுதவிளைவு செய்வோரும், தக்காரும் - அறவோரும், தாழ்விலாச்செல்வரும் - கேடில்லாத-செல்வமுடையோரும், சேர்வது-கூடிவாழ்வதேயாம்—என்று. (கருத்து.) உழவரும் அறிவோரும் செல்வரும் கூடிவாழ்வதேநாடாம்-என்பதாம். * தக்கார்முதலானவரோடும், சேர்தற்குறுதிலோடும், பொருந்தாமையால் விளைவென்பது உழவனை உணர்த்துகின்றது. குன்றுமை-எல்லாவுணவுகளும் நிறைய உண்டாதல். இதனால் வாழ்வோர்க்கு வறுமையில்லாமை பெறப்பட்டது, அறவோர் நிறைந்தோரும் அச்சமிலாயினோர் இதனால் அழிவில்லாமை பெறப்பட்டது, கேடில்லாமை-கொடுக்கக் குறையாமை செல்வர்கப்பினும் பண்டியினும் பொருள்நிரும்வணிகர். இதனால் அரசனுக்கும், வாழ்வோர்க்கும், பொருள்கிடைத்தல் பெறப்பட்டது. (எ)

பெரும் பொருளாற் பெட்டக்க தாகியருங்கேட்டா
லாற்ற விளைவது நாடு.

இ-ள். நாடு-நாடாவது, பெரும்பொருளால் - அளவற்றபொருளுடைமையால், பெட்டக்கதகி- (பிறரிதசத்தாலும்) விரும்பத்தக்கதாகி-அருங்கேட்டால்-அறிவில்லாமையினுகூடி, ஆற்றவிளைவது- மிகவிளைவதேயாம்—என்று. (கருத்து.) அளவில்லாப்பொருளுடைமையால்பிறாலிச்சிக்கத்தக்கதாகி அழிவின்மைபொருந்தி மிகவிளைவதே நாடாகும்-என்பதாம். * கேடாவது அதிகமழை-மழையில்லாமை-எலி-விட்டில்-கிளி-அரசாண்மை-என்பகின்ற இவைகளால் வருவது, இவைகளை வடநூலார் ஈதிபாவமென்று சொல்வர் இவைகளுள் அரசாண்மை அரசனறத்தாலும், மற்றவை அவன்மறத்தாலும். இலவாம். இவை இல்லாமற் போகவே மிகவுவிளையுமென்பதாயிற்று. (ஏ)

பொறையொருங்கு மேல்வருங்காற் குன்றி யிறைவற்
கிறையொருங்கு நேர்வது நாடு.

இ-ள். நாடு- நாடாவது, பொறை - (பிறநாடுகள்சுமந்த) பாரமெல்லாம், ஒருங்கு - ஒருசேர, மேல்வருங்கால் (தன்) மேல்வரும்போது, தாங்கி-(அவையஃதை) தாங்கி, (அதன்மேலும்) இறைவர்க்கு (தன்)அரசனுக்கு, இறையொருங்கு-இறைப்பொருண்முழுதையும், நேர்வது - உடன்பட்டுக்கொடுப்பதேயாம்—என்று. (கருத்து) பிறநாட்டுப்பாரந்தன்மேல்வரும்போது அவற்றைத்தாங்கிற் தன்னரசனுக்கிறைப்பொருண்முற்றுங்கருவதே நாடாம்-என்பதாம். * பாரமாவது- மனிதர்கூட்டமும், பசுமுதலாகிய விலங்கின்கூட்டமும், தாங்குதலாவது :- அவைகளுக்குத்தக்கதேசங்களிலே பகைவர்வருதலாலாவது - அரசன்முறைசப்பலாவது, உணவில்லாமையாலாவது தன்னிடத்துவந்தால் அவ்வதேசங்கள்போல் இனிதிருப்பச்செய்தல், அதனால் தன்னரசனுக்கு வரிப்பணம் குறைப்பிக்காமல் தானேகொடுப்பதென்றற்கு - இறையொருங்கு நேர்வதென்றார். (ஐ)

உடம்பியு மோவாப் பிணியுஞ் செறுபகையுஞ்
சேரா தியல்வது நாடு.

இ-ள். நாடு - நாடாவது, உறுபசியும்-அநுகபசியும், ஓவாப்பிணியும்-நீங்காதநோயும், செறுபகையும்- (புறத்திலிருந்துவந்து) அழிவுசெய்யும்பகையும், சேராது-அடையப்பெறாமல், இயல்வது-இனிதுநடப்பதேயாம்—எ-று. (கருத்து.)பசியும்-பிணியும்-பகையுஞ்சேராதிருப்பதுநாடாகும்-என்பதாம். * அநுகபசி-உழவருடைமையாலும்-மிகவிளைதலாலும்-சேராதாயிற்று, நீங்காதநோய் நீக்காற்றுமிக்க குளிர்வெப்பங்களும்-உண்ணப்படுமவைகளது நீமையும் இல்லாமையால சேராதாயிற்று, செறுபகை - அரசன்வலிமையும்-நிலப்படையும்- அடலியும்- அரணும்- உடைமையால் சேராதாயிற்று. (சு)

பல்குழுவும் பாழ்செய்யு முட்பகையும் வேந்தலைக்குங்
கொல்குறும்பு மில்லது நாடு.

இ-ள். நாடு-நாடாவது, பல்குழுவும் - (சங்கேதவசத்தால் மாறுப்டுக்கூடும்) பலகூட்டமும், பாழ்செய்யும் - (உடனிருந்துகொண்டே) பாழாகச்செய்யும், உட்பகையும் - கள்ளர்முதலியவுட்பகையும், வேந்தலைக்கும்-(சமயம்வந்தால்) அரசனை அலைக்கின்ற, கொல்குறும்பும்-கொலைத்தொழிற்குறும்பரும், இல்லது-இல்லாததேயாம்—எ-று.(கருத்து.) பலகூட்டமும், பகையும்- கொலைத்தொழிற்குறும்பரும் இல்லாததே நாடாகும்-என்பதாம். * சங்கேதம்-சாதிபற்றியும், சமயம்பற்றியும், பலர்க்கு உளதாமொருமை. உட்பகை-வழியிலைதறுப் பறிக்குங்கள்வர் கொள்சொல்லுவோர் முதலாகியமக்களும், பன்றி-புலி-காடி- முதலிலுமிருகங்களும், இம்மூன்றும் அரசனுலும், வாழ்வோராலும் கடியப்பட்டுகடப்பதென்பதாம். (சு)

கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்று
நாடென்ப நாட்டிற் றலை.

இ-ள். கேடறியா-(பகைவராலே) கெடுதலறியாததும், கெட்டவிடத்தும்-(அரிதிற்) கெட்டவிடத்தும், வளங்குன்று- (அப்போதும்) வளங்குறையாததும், ஆனை-நாடு, நாட்டை- நாட்டின், (எல்லா) நாடுகளிலும், தலை-முதன்மையதாகும், என்ப-என்று (நூலோர்) சொல்லுவார்—எ-று. (கருத்து.) கேடில்லாததும், வளங்குன்றுதது மானநாட்டையெல்லா நாட்டிலுமுதன்மையான நாடென்பா- என்பதாம். * அறியாதகுன்றுக- என்பன். இறுதிகெட்டு வந்தன, கேடறியாமை-அரசன்வலிமையாலும், கடவுட்பூசை அறங்கள் என்றிவைகளைச் செயலாலும்,வரும், வளம்- வளம். * ஆகரங்களிற் படிமனவையும், வயல் தண்டலை

---

* ஆகரம்-மணி-பொன்-முதலியனவ்-எடுக்குங்குழிகள்.,

களில் விளையுமவையும்; ஆம், குறைபாமை- அவை சம்பாதிக்கவேண்டாமல் இயல்பாகவே உளவாவும் முன்சம்பாதிக்கப்படுங் குறையறுதலும், [இவை ஆறுபாட்டாலும் நாட்டது இலக்கணஞ்சொல்லப்பட்டது.]

இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணு நாட்டிற் குறிப்பு.

இ-ள். இருபுனலும்-கீழ்நீர் மேனீர்எனப்படுகிற தண்ணிடத்தநீரும், வாய்ந்தமலையும்-வாய்ப்புடைத்தாகியமலையும், வருபுனலும் - (அதினிருந்து) வருவதாகியநீரும், வல்லரணும் - அழியாதாகரியும், நாட்டிற்கு நாட்டினுக்கு, உறுப்பு-அவயவமாம்—எ-று: (கருத்து.) நீருமலையுமவியில்வருநீரும்-நகரும் நாட்டிற்குறிப்பாம்- என்பதாம். * இவ்விடத்துப்புனலென்றது தாவு-கேணி-ளரும்-எரிகளரும்-ஆறுகளரும் ஆகியஜலதாரங்களை, அவயவமாதற்கு உரியன அவையேயாகலால் அவைகளால்மழைவறப்பினும் வளமுடைமை பெறப்பட்டது. நடுவதல்லாமல் ஒருபக்கத்ததாகலும், தன்வளந்தருதலும் மாரியிலுண்டநீர் கோடையிலுமிழ்தலு முடைமைபற்றி வாய்ந்தமலையென்றார். [இதனால் அத்னைதவயவும் சொல்லப்பட்டது] (எ)

பிணியின்மை செல்வம் விளைவின்பமேம
மணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.

இ-ள். பிணியின்மை-நோயில்லாமையும், செல்வம் - செல்வமும் விளைவு-பயிர்விளைவும், இன்பம்-சுகமும், ஏமம்-காவலும், இவ்வைந்து-இவ்வைந்தினையும், நாட்டிற்கு-தேசத்திற்கு, அணி-அழகாகும், என்பர் என்று. (நூலோர்) சொல்லுவார்—எ-று. (கருத்து-)நோயில்லாமையும் செல்வமும் பயிர்விளைவுமின்பமும் காவலு மிவ்வைந்து நாட்டிற்கழகாகுமென்பர்-என்பதாம். * பிணியில்லாமை நிலநலத்தால்வருவது, செல்வம் முன்சொல்லியது = இன்பம்-விழவும்-வேள்வியும்-சான்றோருடைமையாலும், அனுபவிப்பவையுடைமையாலும் - நிலநீர்களது, நன்மையாலும் வாழ்வார்க்கு உள்ளேநிகழ்வது - காவலெனவே அரசன் காவலும் வாழ்வோர் காவலும் அரண்காவலும் அடங்கின. [பிறதேசத்தோரும் இச்சித்தப்பின்னே அவைகளை நினையாமைக்கு ஏதுவாகிய அதனழகு இதனாலே சொல்லப்பட்டது.] (அ)

நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு.

இ-ள். நாடா - (தம்மிடத்துவாழ்வோர்) தேடிவருந்தாமல், (அவரிடத்தேதானே அடையும்) வளத்தன - செல்வத்தையுடையனவைகளை, நாடு-நாடுகள், என்ப-என்று (நூலோர்) சொல்லுவார், (ஆதலால்), நாடர் தேடிவருந்தி, வளந்தரும் = செல்வத்தை அடைவிப்பனவையாகிய, நாடு:

நாடுகள், நாடல்ல-நாடுகளாகாவாம்—என-று (கருத்து.) தேடாதசெல்வத்தையுடையவற்றை நாடென்று சொல்லுலர் தேடிவருந்தாசெல்வத்தைத்தரு நாடுகள் நாடுகளால - என்பதாம். * மூலோர் விதிபற்றி எதிர்மறை-முகத்தால் = குற்றம்சொல்லியபடி. (சு)

ஆக்கமை வெய்திய கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு.

இ-ள். வேந்து - அரசனோடு, அமைவில்லாத -பொருந்தாதிவ்வாத, நாடு - நாடாவது, ஆக்கு -மேற்சொல்லியகுணங்களாலெல்லாம், அமைவெய்தியக்கண்ணும்- நிறைந்துள்ளதாயினும், பயமின்றே-(அவைகளாலே) பயனுடைத்தன்று—என-று. (கருத்து.) இராசனுடன் பொருந்தாத நாடானது எல்லாநிறைவுள்ளதாயினும் பிரயோசனமில்லை - என்பதாம். * வேந்தமை பெனவே குடிகள் அவனிடத்தே அன்புடையராதலும் அவன்குடிகளிடத்தே அருளுடையனாதலும் அடங்கின, அவையில்லாவிடத்து அக்காட்டில்வாழ்வோரில்லாமையால் அவைகளாலே பயன் இல்லையாயிற்று [இவை இரண்டுபோட்டாலும் அவனது குற்றம் சொல்லப்பட்டது.] (டு)

எ-ஆம்-அதி-அரண்.

இனி அக்காட்டிற்கு உறுப்பாய் அடங்குமாயினும் பகைவரால் தொலைவுவந்தவிடத்து அதற்கும், அரசனுக்கும், காப்பாதற் சிறப்புப்பற்றியே வேறோரங்கமாகச்சொல்லப்பட்ட அரண் ஓதிகாரத்தாற் சொல்லுகின்றார்.

அஃதாவது, இன்னதென்பதும் அதிகார முறைமையும், இதனுள்விளங்கும்.

ஆற்றுபவர்க்கு மரண்பொரு ளஞ்சித்தற்
போற்றுபவர்க்கும் பொருள்.

இ-ள். அரண்-கோட்டையானது, ஆற்றுபவர்க்கும் = (மூவகைவினையுமுடையவராய்ப்) பிறர்மேலே செல்வோர்க்கும், பொருள் - சிறந்ததாகும், அஞ்சி- (அவையல்லாமல் தம்மேல்வருவோர்க்கு) அஞ்சி, தற்போற்றுவோர்க்கும்-தன்னையே அடைவோர்க்கும், பொருள - சிறந்ததாகும்—என-று. (கருத்து.) கோட்டையானது போர்செய்வோர்க்கும் தன்னையடைந்தோர்க்கும் சிறப்பொருளாகும்-என்பதாம். * பிறர்மேற்சொல்லும்போது உரிமைப்பொருள் மூதலானவைகளைப் பிறனொருவன் வௌவாமல்வைத்துச் செல்லவேண்டுதலாலும், பெருமைதொலைந்து முடிவுவந்தவிடத்துக் கடனைடுவே உடைகப்பற்காரர் போன்று காப்புக்காணாது முடிவுரைகலாலும், அவ்விருவகையோர்க்கும் அரண்

பொருளாயிற்று, 'வலிமையுடையவராயினும் அரணில்லாதவிடத்து அழியுந்தன்மையராகலால்' அவனாமுன் சொல்லினர், [இதனால் அரணினது சிறப்புச்சொல்லப்பட்டது.] (க)

மணிநீரு மண்ணு மலையு மணிநிழற்
காடு முடைய தரண்.

இ-ள். அரண்-கோட்டையானது, மணிநீரும்-மணிபோல் நிறத்தையுடையநீரும்-மண்ணும் - வெளிநிலமும், மலையும் - மலையும், அணிநிழற் காடும் - குளிர்ந்தநிழலையுடையகாடும், உடையது - உடையதேயாம்—எ-று. (கருத்து.) நீரையும், வெளிநிலத்தையும், மலையையும்காட்டையுமுடையது கோட்டையாம்-என்பதாம் * எந்நாளும் வற்றுத நீரென்றற்கு மணிநீரென்றும்- நிழலுமில்லாத வெறுநிலமென்றற்கு மண்ணென்றும் செறிந்தகாடென்றற்கு அணிநிழற்காடென்றும், சொல்லினர் மதிற்புலத்து வெளிநிலம்பகைவர் அண்பற்றுமைப்பொருட்டு, நீர்ண் - நிலவரண்-மலையரண் - காட்டரண் - என்கிற இந்நான்காணும்குழப்படுவது அரணென்பதாம். (உ)

உயர்வகலந் தின்மை யருமையிந் நான்கி
னமைவரணென் றுரைக்கு நூல்.

இ-ள். உயர்வு-உயர்ச்சியும், அகலம்-அகலமும், தின்மை-வலிமையும், அருமை - அருமையும், (எனப்பட்ட) இந்நான்கின் - இந்நான்கினது, அமைவு - மிகுதியையுடையமதிலை, அரணென்று- கோட்டையென்று, நூல்'-நூலோர், உரைக்கும்-சொல்லுவார்—எ-று. (கருத்து.) உயர்வு-அகலம் - வலிமை-அருமை-இந்நான்கின்-மிகுதியையுடைய மதிலைக் கோட்டை யென்றுசொல்லுவர் - என்பதாம். * அமைவுதால் இரண்டும் ஆகுபெயர்கள் - உயர்வு-எணிக்குஎட்டாதது, அகலம்-புகுத்தோர்க்குத் தோண்டக்கூடாத அடியகலமும் உள்ளிடதோர்க்கு நின்றுதொழில் செய்தற்கிடமகலமும், தின்மை - கருங்கல் செங்கல்களாலே செய்தலால் - குத்தப்படாமை, அருவைபொறிகளாலேசேர்தற்கருமை [பொறி-எந்திரப்பாலைகள்.] (ங)

சிறுகாப்பிற் பேரிடத்த தாகி யுறுபகை
யூக்க மழிப்ப தரண்.

இ-ள். அரண் - கோட்டையானது, சிறுகாப்பின்-காக்கவேண்டுமிடஞ்சிறிதாய், பேரிடத்ததாகி - பரந்தவிடத்தையுடையதாய், உறுபகை-(தன்னைச்) சூழ்ந்தபகைவரது, ஊக்கம் - மனவெழுச்சியை, அழிப்பது, கெடுப்பதேயாம்—எ-று. (கருத்து.) காக்குமிடஞ் சிறிதாய்ப்பரந்தவிடமுடையதாப்பகைவர் வலிமையைக் கெடுப்பதே கோட்டை - என்பதாம். * வாயிலும் வழியும் ஒழிந்தவிடங்கள் மலை - காடு-நீர் - நிலை - என்னுமிவைகளுள் ஏற்பனவகளை - உடைத்தாதல்பற்றி -சிறுகாப்பினென்றும்

ள்ளிடத்தோர்கவிவில்லாமல் இருக்கல்பற்றி பேரிடத்தபோதியென்றும் வலிமைகண்டு இப்பொழுதே அழிப்போமென்று வரும்பகைவர்மேல் அதுகண்டால் அத்தைரியம் ஒழிக்கல்பற்றிஊக்கமழிப்பதென்றும் சொ னினர். (சு)

கொளற்கரிதாய்க் கொண்ட கூழ்த் தாகியகத்தார்
நிலைக்கெளிதா நீர தரண்.

இ-ள். அரண்- கோட்டையானது, கொளற்கரிதாய்- (புறத்தோரா லே) கொள்ளுதற்கரிதாய்ப், கொண்ட - உட்கொண்ட, கூழ்த்தாகி (பல வகை) யுணவையுடையதாகி, அகத்தார்-உள்ளிடத்தோரது, நிலைக்கு- (போர்) நிலைக்கு-எளிதாம்-எளிதாகின்ற,நீரது-குணத்தையுமுடையதே யாம்—என-று. (கருத்து.) பகைவர்கொள்ளுதற் கரிதாய்ப் பலவகையுண வையுடையதாய் உள்ளிட்டோர் போர்நிலைக்கெளிதாகிய குணமுடை யதே கோட்டை - என்பதாம். * கொள்ளுதற் கருமைகாவற்காடு இடங் குகளாலும், பொறிகளாலும் இடங்கொள்ளுதற்கருமை - உணவு- தலை மைபற்றிச்சொல்லினமையால் மற்றுமுள்ள அனுபவிக்கப்படு மனைக ளும் அடங்கின, நிலைக்கெளிதா நீர்மையாவது உள்ளிடத்தோரால் வி டப்பட்ட ஆயுதமுதலானவை புறத்தோர்மேலே எளிதிலே செல்லலு ம், அவரால்விடப்பட்டவை உள்ளிடத்தோர்மேலே செல்லாமையும் பதணப்பாப்பும் முதலானவை - பதணம் - மதிலுண்மேடை. (ரு)

எல்லாப் பொருளு முடைத்தா யிடத்துதவு
நல்லா ளுடைய தரண்.

இ-ள். அரண் - கோட்டையானது, எல்லாப்பொருளும் - (உள்ளி டத்தோர்வேண்டும்) பொருள்களியாவையும், உடைத்தாய் - உடையவா கி, இடத்து - (புறத்தோர்ால்) அழிவடையுமளவில், உதவும் -(அவரா மற்படி) உதவிக்காக்கவல்ல, நல்லாள் - நல்லவீரனையும், உடையது - உடையதேயாம்—என-று.(கருத்து.)எல்லாப் பொருளுள்ளதாய் வீரனை யுடையது கோட்டை-என்பதாம். * அரசனிடத்து அன்பும், மானமு ம்-மறமும் - சோர்வில்லாமையும் - முதலாகிய நற்குணங்களை உடை மைபற்றி - நல்லாளென்றார். (சு)

முற்றியு முற்று தெரிந்து மறைப்படுத்தும்
பற்றற் கரிய தரண்.

இ-ள். அரண் - கோட்டையானது, முற்றியும்-(வரவுபோக்குழுழி யும்வகை)யொருங்கிச்சூழ்ந்தும்முற்றாது - அப்படிச்சூழாமல், எறிந்தும்- (யெதிழ்ந்தவிடம்நோகவி) ஓநமுகமாகப் போாசெய்தும், அறைப்படு த்தும் - (உள்ளிடத்தோனை அவருக்குரும்பிக்கை யானவனைவிட்டுக்) கீ ழறுத்துத்திறப்பித்தும், (பற்றற்கரியது-புறத்தோராலேபிடிதற்கு) கொ ள்ளுதற்கரியதேயாம்—என-று. (கருத்து.) சூழ்ந்தும்சூழாமலும் போர்,

செய்தும் கீழரைபெற்றும் பிறராற்கொள்ளுதற்கரியது கோட்டையாம்-என்பதாம். * இம்மூன்று உபாயங்களுள்ளும் - முதலாவது-எல்லாப் பொருளு முடைமையாலும், மற்றவைகள் நல்லாளுடைமையாலும் பயிற்பவல்லவாயின. (எ)

முற்றுற்றி முற்றி யவளையும் பற்றுற்றிப்
பற்றியார் வெல்வ தரண்.

இ-ள். அரண்-கோட்டையாவது, முற்றுற்றி - (சேனைப்பெருமையால்) சூழ்தல் வல்லவராகி, முற்றியவளையும் - வந்து சூழ்ந்தபுறத்தோரையும், பற்றியார் - (தன்னைப்பற்றிய) உள்ளிடத்தோர், பற்றுற்றி - (தாம்) பற்றியவிடம் விடாதேநின்று, வெல்வது - (போர்செய்து) வெல்லதேயாம்—என்று. (கருத்து.) தன்னைப்பற்றிச் சூழ்ந்தவளையும் தன்னிடத்திருந்தவர் பற்றி வெல்வதேகோட்டை - என்பதாம். * வெல்வதென் அரணுடையார்தொழில் அரண்மேலே தினைத்து - பெரும்படையானைச் சிறுபடையானைப் பொறுத்துதிற்கும் தானையேயன்றி வெல்லுமியல்பினதென்பதாம். [இவை எழுபாட்டாலும் அதனதுஇலக்கணம் சொல்லப்பட்டது.] (அ)

மூனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறெய்தி மாண்ட தரண்.

இ-ள். அரண் - கோட்டையானது; மூனைமுகத்து - போர்தொடங்கினவளவிலே, மற்றலர் - பகைவர் சாய-கெட, வினைமுகத்து,(உள்ளிடத்தோர்செய்யுந்) தொழில்வேறுபாடுகளால், வீறெய்தி-வீறுபெற்று; மாண்டது - (மற்றும்வேண்டும்) பெருமையையுடையதேயாம்—என்று. (கருத்து.) போரிடத்துப் பகைவர்கெடத்தொழிலிடத்துப் பெருமையுடையது கோட்டை-என்பதாம். * ஆரம்பத்திலே கெட்டவர்பின்னுங் கூடிப் போர்செய்தல்கூடாமையால் மூனைமுகத்துச் சாயவென்றார். தொழில் வேறுபாடுகளாவன - பகைவர்தொடங்கிய போனை அறிந்துளைத்தல்எறிதல் குத்துதல்-வெடுதல் - என்றிவைமுதலாகிய தொழில்களுள் அப்போனை அழிப்பனைகளைச்செய்தல், மற்றும் வேண்டும் பெருமையென்றது புறத்தோர் அறியாமல் புகுதல் போகுதல்-செய்தற்கு உண்டாக்கப்பட்டசுருங்கைவழி முதலான்வையுடைமை. (ஆ)

எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
யில்லார்க ணில்ல தரண்.

இ-ள். அரண் - கோட்டையாவது. எனைமாட்சித்தாகியக்கண்ணும்-(முன்சொல்லப்பட்ட) பெருமையெல்லாம் உடைத்தாகிய விடத்தும், வினை - தொழில் செய்யுமிடத்து, மாட்சி- பெருமையை, இல்லார்கண்- இல்லாதவரிடத்து, இல்லது-(அவை) இல்லாமை—என்று. (கருத்து.)

நாட்டை எவ்வளவு பெருமையுடைத்தாகிய விடத்தும் தொழிலிற் பெருமையில்லாதவரிடத்தும் பயனிலதாம் - என்பதாம். * சும்மாவிருக்கையும், அளவறிபாராதுசெய்தலும், எற்காததுசெய்தலும், எல்லாமட - விணமாட்சியில் மில்லாதென்றும், எற்றதொழிலை அளவறிந்து செய்து காப்பாற்றுமற் போனால் அவ்வாணைத அப்பெருமைகளால் பயனில்லாமல் அழியுமென்றற்கு - அவையுடைத்தன்றென்றும், சொல்லினர். [இவை யிரண்டுபாட்டாலும் காப்பவர் அவசியம் வேண்டுமென்பது சொல்லப்பட்டது.] (ஆ)

எகூ-ஆட்-அதி- பொருள்செயல்வகை.

இனிப்பெரும்பாலும் நாட்டாலும், அரணாலும், வளர்க்கவும், காக்கவும், படுவதாகிய பொருள் சம்பாதித்தலின்விதம், இவ்வதிகாரத்தாலே சொல்லுகின்றார். அஃதாவதின்னதென்பதும் அதிகாரமுறைமையும் இதனுள் விளக்கும்.

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.

இ-ள். பொருளல்லவரை - ஒருபொருளாக மதிக்கப்படாதவரையும், பொருளாகச்செய்யும் - பொருளாக மதிக்கப்படச் செய்யவல்ல, பொருளல்லது - பொருளையல்லாமல், பொருள் - ஒருவருக்குப்பொருள்-இல்லை-வேறில்லை—என-று. (கருத்து.)மதிக்கப்படாதவனையுமதிக்கப்படச்செய்யும் பொருளல்லாமல் ஒருவர்க்கு வேறுபொருளில்லை - என்பதாம். * மதிக்கப்படாதவர்- அறிவில்லாதவரும், இழிகுலத்தாரும், மதிக்கப்படச்செய்தல் அறிவுடையவரும், உயர்குலத்தவரும், அவரிடத்திலேபோய் நிற்கப்பண்ணுதல், அதனாலே சம்பாதிக்கவேண்டுவது அதுவேயென்பதாம். (க)

இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
யெல்லாருஞ் செய்வர் சிறப்பு.

இ-ள். (எல்லாருண்மையு மூடையவராயிருந்தாலும்) இல்லாரை (பொரு)ளில்லாதவரை, எல்லாரும்-யாவரும், எள்ளுவர்-இகழ்வர், (எல்லாத்தினமையு மூடையவராயிருந்தாலும்) செல்வரை - அப்பொருளுடையவரை, எல்லாரும்-யாவரும், சிறப்புச்செய்வர்- உயர்செய்வர்—என-று. (கருத்து.)வறியவரை யாவருமிகழ்வர் செல்வரையாவரும்புகழ்வர்-என்பதாம். * உயரச்செய்தல்தாம் தாழ்ந்துநிற்றல். இகழ்வினும், தாழ்வினும் பகைவர், நட்பினர், அயலவர், என்னு மூவகையோரும் ஒதலால் எல்லாருமென்றார். பின்னுஞ் சொல்லியது அதனை உறுதிசெய்தற்கு. (உ)

எண்-ணும்-அதி—பொருள்செயல்வகை.

பொருளென்னும் பொய்யா விளக்க மிருளறுக்கு
மெண்ணிய தெய்த்துச் சென்று.

இ-ள். பொருளென்னும் - பொருளென்று (எல்லாராலுஞ்) சிறப்பிக்கப்படும், பொய்யாவிளக்கம் - கந்தாவிளக்கானது, (தன்னைச்சம்பாதித்தவர்க்கு)—எண்ணிய - (அவர்) நினைத்த, தெய்த்து-தேசத்தில், சென்று-போய், இருள்-(பகையென்னு) மிருளை, அறுக்கும்-கெடுக்கும்—எ-று. (கருத்து.) பொருளென்னும் விளக்கானது பகையென்னு மிருளைக்கெடுக்கும்-என்பதாம். * பொருள்-எல்லார்க்கும்-எக்காலும் அவசியம்வேண்டுவதாய்வருதலிற்றி- பொய்யாவிளக்கென்றார். மற்றவிளக்கோடு- இதனிடத்து வேற்றுமைதோன்ற-எண்ணியதேயத்துச் சென்றென்றும், சொல்லினார். வதேசசவுருவகம். [இவை மூன்றுபாட்டாலும் பொருளது சிறப்புச்சொல்லப்பட்டது.] (சு)

அளவினு மின்பமு மீனுஞ் சிறனறிந்து
நீதிநின்றி வந்த பொருள்.

இ-ள். சிறனறிந்து - (சம்பாதிக்குங்) சிறத்தைஅறிந்து, நீதிநின்றி-(அரசன்) கொடுங்கோன்மையிலலாத, வந்தபொருள் - சிலைத்தபொருள், (அவனுக்கு) அறன்-அறத்தையும், ஈனும் - கொடுக்கும், இன்பமும்-இன்பத்தையும், ஈனும்-கொடுக்கும்—எ-று. (கருத்து.) குற்றமில்லாது வந்தபொருளானது தருமத்தையு மின்பத்தையுந் தரும்-என்பதாம். * சிறம்-சம்பாதித்தற்கு உரியவழி. செங்கோலனென்று புகழப்படுதலாலும், கடவுட்பூசைதானங்களாலே பயன் அடைதலாலும், அறனீனுமென்றும், நெடுங்காலமிருந்து அனுபவிக்கப்படுதலால்-இன்பமு மீனுமென்றும், சொல்லினார், ஆதலால் அச்சிறத்தாற்சம்பாதிக்க வென்பதாம். (சு)

அருளொடு மன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள் விடல்.

இ-ள். அருளொடும்- (தாம்குடிகளிடத்துச்செய்யும்) கருணையோடும், அன்பொடும் (அவர்தம்மிடத்துச்செய்யும்) அன்போடும், வாரா-(கூடி) வாராத, பொருளாக்கம்-பொருட்சம்பாதனியத்தை, புல்லார்-(அரசர்) பொருந்தாராகி, புரளவிடல்-நீங்கவிடக்கடவர்—எ-று. (கருத்து.) அருளோடு மன்போடும் வாராதபொருளை யரசர்நீக்கக்கடவர் - என்பதாம். * அவைகளோடு கூடிவருதலாவது ஆவிலொன்றுய்வருதல். அப்படிக்கு வாராதபொருள் - பச்சைமண் பாண்டத்துநீர்போல் சம்பாதித்தவனையும் கொண்டு இறத்தலால் அதனைப்புல்லாசென்று வளவிலே நிறுத்தாமற் புரளவிடலென்றும் சொல்லினார். (டு)

உறுபொருளு முல்கு பொருளுந்தன் னென்னுஞ்
சிறுபொருளும் வேந்தன் பொருள்.

இ-ள். உறுபொருளும்-(உடையவர் இல்லாமையால்தானேவந்து) இடைத்தபொருளும், உல்குபொருளும் - சுங்கமாகிவபொருளும், தன் னென்னர்-தம்பகைவனை, தெறுபொருளும்- வென்று (நிறையாக்கொ ள்ளும்) பொருளும், வேந்தன்பொருள்-அரசனுக்குரிய பொருள்கள்— எ-று. (கருத்து.) உடையவரில்லாப் பொருளும், சுங்கப் பொருளும், பகைவனைவென்று நிறைகொண்ட பொருளும் மன்னன்பொருள்களா ம்-என் பதாம். * உறுபொருள்-வந்தவழியிறந்துபோக வெடுக்காலம் நிலைத்தி ன்றீழ்க்கிடந்து பின்கண்டெடுத்தறுமாம், சுங்கம் - மாக்கலத்திலும் ப ண்டியிலும் வரும்பண்டங்களுக்கு வாங்கும்வரி. தெறுபொருள் - தெ றுதலால் வரும்பொருளனவிரியும். ஆறிலொன்றல்லாமலும், உரிய லைசொல்லியபடி. [இவ்மூன்றுபாட்டாலும் அதுசம்பாதிக்கும் வழி சொல்லப்பட்டது.] (கூ)

அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு.

இ-ள். அன்பீன்-அன்பிலால் ஈன்றிடப்பட்ட, அருளென்னும்-அ ருளென்கின்ற, குழவி- குழந்தையானது, பொருளென்னும் - பொரு ளென்று உயர்த்திச் சொல்லப்படும், செல்வம் - செல்வத்தையுடைய, செவிலியால்-செவிலித்தாயால், உண்டு-வளரும்—எ-று. (கருத்து.) அ ன்பா லீன்றிடப்பட்ட அருளெனுங் குழந்தையானது பொருளென் னுஞ் செவிலித்தாயால் வளரும்-என்பதாம். * சம்பந்தம்பற்றுமல்லரு த்தமடைந்தவரிடத்துச் செல்வதாகிய அருள் - சம்பந்தம்பற்றிச் செல் லும் அன்புமிருந்தவிடத்து உண்டாவதாகலால் அதனை அன்பீன்குழ விபென்றும், அதுவறியவர் மேற்செல்வது - அவ்வறுமைகளையவல்ல பொருளுடையவர்க்கு ஆதலால்பொருளை - அதற்குச்செவிலி யென்றும், அது உலகிற் செவிலிபோலல்லாமல் தானேயெல்லாப்பொருளும் உ தவி வளர்த்தலால் - செல்வச்செவிலியென்றும், சொல்லினர். (எ)

குன்றேறி யானைப்போர் கண்டற்றுத் தன்கைத்தொன்
றுள்ளூசச் செய்வான் வினை.

இ-ள். தன்கைத்து-தன்கையதாகியபொருள், உண்டாக-உண்டா கவிருக்க, ஒன்று-ஒருதொழிலை, செய்வான்-செய்பவனது, வினை-செய் கையானது, குன்றேறி-(ஒருவன்) மலைமேல் ஏறிநின்று, யானைப்போர்- யானைகளதுபோரை, கண்டற்று- கண்டதனைஒடொக்கும்—எ-று. (கரு த்து.) தன்பொருளிருக்க வொருதொழிலைச்செய்பவன் செய்கையானது மலைமேலேறியானைகள்போரைக்கண்டதாக்கும்- என்பதாம். * எ ப்படிக்குன்றேறினவன் அச்சமும்வருத்தமும் இல்லாமல் பூமியில் யா னையும் யானையும் செய்கின்றசண்டையைத்தான் இனிதிருந்து காண் பானே அப்படிக் கைப்பொருளுண்டாக ஒருதொழிலை மேற்கொண்டு

வனும் அச்சமும் வருத்தமும் இல்லாமல்வல்லவனாவதித் தான் இவ் திருந்து முடிப்பானென்பதாம்.

(அ

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கு
மெஃகதனிற் கூரிய தில்.

இ-ள். (தமக்கு ஒன்றுண்டாகநினைப்பவர்) பொருளை - திரவியத்தை, செய்க-சம்பாதிக்கக்கடவர், (அப்பொருள்) செறுநர் - (தம்) பகைவரது, செருக்கு-கருக்கை, அறுக்கும்-கெடுக்கும், எஃகு - ஆயுதமும், (அதற்கு) அதனின்-அதுபோல், கூரியது-கூரியஆயுதம், இல்-(வேறு) இல்லை—எ-று. (கருத்து.) திரவியத்தைச் சம்பாதிக்கக்கடவர் அத்திரவியம் பகைவர் செருக்கைக்கெடுக்குமாய்தமாம் அதுபோல் கூரிய ஆயுதம்வேறில்லை-என்பதாம். * பொருளைச்சம்பாதித்தவர் பெருமையும் கட்புமுடையவ ராவராதலாலே பகைவர்செருக்கு நீங்கித்தாமே அடங்குவனென்பதற்கு - செறுநர் செருக்கறுக்கு மெஃதென்றும், மற்றை யாயுதங்கள் அதுபோல் அருவப்பொருளை அறுக்க மாட்டாமையால் அதனிற்கூரியதில்லையென்றும், சொல்லினர்.

(சு)

ஒன்பொருள் காழ்ப்ப வியற்றியார்க் கென்பொரு
ளேனை யிரண்டு மொருங்கு.

இ-ள். ஒன்பொருள்-நல்லவழியால்வரும் பொருளை, காழ்ப்ப-மிக வதிகமாக, இயற்றியார்க்கு - உண்டாக்கினவர்க்கு, ஏனையிரண்டும்-மற்றை அறமும்இன்பமும், ஒருங்கு- ஒருசேர, எண்பொருள், எளியபொருள்களாம்—எ-று. (கருத்து.) நல்லவழியால் வரும்பொருளை மிகவு முண்டாக்கினவர்க்குத் தருமமுமின்பமும் மெளியனவாம்-என்பதாம். * காழ்த்தல் மூர்த்தல், அப்பொருள் பயன்கொடுத்தல்லது போகாமையால் - ஒன்பொருளென்றும், மற்றையிரண்டும் அதன்வினை யாகலால் காமே ஒருகாலத்திலே உண்டாகு மென்பதற்கு எண்பொருளென்றும் சொல்லினர். [இவை கான்குபாட்டாலும் அதன்பயன் சொல்லப்பட்டது.]

(ஐ)

எஎ-ஆம்-அதி - படைமாட்சி.

இனிப்பொருளினால் ஆவதாய்வெல்வதாகியபடையை இரண்டதிகாரத்தாலே சொல்லத்தொடங்கி முதலிலே வடைமாட்சி சொல்லுகிறார்.

அஃதாவது, சேனையினது நன்மையாம். அதிகார முறைமையும் இதனாலே விளங்கும்.

உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுத்தையு ளெல்லாந் தலை.

இ-ள். உறுப்பு - (யானைமுதலாகிய) நாலுறுப்புகளாலும், அமைந்து - நிறைந்து, ஊறு- (போரிலே) காயம்படுதற்கு, அஞ்சா-அஞ்சாதுநின்று, வெல்- (பகையை) வெல்வதாகிய, படை - சேனையானது, வேந்தன்-அரசனது, வெறுகையுளெல்லாம் - செல்வங்களிலெல்லாம், தலை - முதன்மையாகிய (செல்வமாம்)—எ-று- (கருத்து.) போரிலஞ்சாது நின்று வெல்லும்படையானது அரசன்செல்வம் யாவற்றிலும் தலைமை என்பதாம். * இவ்விடத்திலே படையென்றது-அங்காங்கின், கூட்டத்வத, சேனை - ஊறஞ்சியவிடத்தே வெல்லுதல் கூடாமையால்ஊறஞ்சாவென்றும், அச்சேனையழிந்த அங்காங்களுக்கும் அரசனுக்கும் காவலாகலால் வெறுக்கையுவெல்லாந் தலையென்றுஞ்சொல்லினர் (க)

உலைவிடத் தூறஞ்சா வன்கண்ண டொலைவிடத்து
தொல்படைத் தல்லா லரிது.

இ-ள். தொலைவிடத்து-(தான்) சிறிதாகிபவிடத்தும், உலைவிடத்து-(அரசனுக்குப்போரினிடத்து) அழிவுவந்தால், ஊறு -(தன்மேலே)காயம்படுதற்கு, அஞ்சா - அஞ்சாதுநின்றுதாங்கும், வன்கண் - சௌரியமானது, தொல்படைக்கலால் - அவன்முன்னோர் தொடங்கிவருஞ் சேனைக்கல்லாமல், அரிது - உண்டாகாது—எ-று. (கருத்து.) அஞ்சாதுநின்றுதாங்குஞ் சௌரியமானது அரசன் பழையசேனைக்கல்லது மற்றவர்க்கில்லை - என்பதாம். * இழிவு சிறப்பும்மைவிகாரத்தால்தொக்கது மூலப்படை - கூலிப்படை - நாட்டுப்படை - காட்டுப்படை - துணைப்படை - கைப்படை - எனப்படுகிற அறுவகைப்படைகளுள்ளுந்த சிறப்புடையது மூலப்படையாதலால் அரசன் அதற்கு வேண்டியவைகளைக் கொடுத்து அதைக்காப்பாற்றுகவென்பது கருத்து. (உ)

ஓலித்தக்கா லென்னு முவரி யெலிப்டகை
நாக முயிர்ப்பக் கெடும்.

இ-ள். எலிப்பகை- எலிகளாகியபகைதான்று, உவரி-கடல்போல், ஓலித்தக்கால் - இரைந்தால், என்னும்-(பாம்புக்கு)என்னதுன்பம்வரும் நாகம் - அப்பாம்பு, உயிர்ப்ப - மூச்செறிந்தவளவிலே, கெடும்- (அறுநாளே) கெடும்—எ-று. (கருத்து.) எலிகள்கூடிச் சந்திந்தால் பாம்புக்கென்னதுன்பம்வரும் பாம்பு மூச்சுவிட்டவளவில் எலிகளழியும் - என்பதாம். * இத்தொழிலுவமத்தால் நாட்சிபெற்றும். (வீரரல்லாதார்பலர்திரண்டு ஆர்த்தால் அதற்குவீரன் அஞ்சான் அவன் எழும்பினவளவிலே அவர் கெடுவரென்பதுதோன்றின்மையால்-இதுபிறிதுமொழிதலணி) வீரரல்லாதார் பலரிலும் வீரனொருவனே ஆளுதல் நலமென்பதாம். [இவைமூன்றுபாட்டாலும் முறையே அரசனுக்குப் படையானது மற்றையக்களுட் சிறந்ததென்பதும். அதனுள்ளும் மூலப்படை சிறந்ததென்பது அதனுள்ளும் வீரன் சிறந்தவனென்பதும், சொல்லப்பட்டன.] (ஊ)

அழிவின் றறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை.

இ-ள். படை - (அரசனுக்குப்) படையாவது, அழிவின்றி (போ
னிடத்துக்) கெடுதலில்லாமல், அறைபோகாதாகி . (பகைவராலே) கு
றுக்கப்படாதாகிய, வழிவந்த- பழைமையாகவந்த, வன்கண தாவே- செ
ரியமுடையதே—எ-று. (கருத்து.) போரிற்கெடுதலில்லாமற்பழை
யாகவந்த செளரியமுடையதே .பரசனுக்குப் படையாம்-என்பதாம். *
அழிவில்லாமையால் மறமானங்களுடைமையும், அறைபோகாமைய
ல் அரசனிடத்து அன்புடை மையும் பெறப்பட்டன. (சு

கூற்றுடன்று மேல்வரினுங் கூடியெதிர்ச்சிற்கு
மாற்ற லதுவே படை.

இ-ள். படை-சேனையானது, கூற்று-கூற்றுவன், உடன்று-கோ
த்து, மேல்வரினும் - தன்மேல்வரினும், கூடி-மனமொத்து, எதிர்சிற்
ம் - எதிர்நின்றுதாக்கும், ஆற்றலதுவே - மனவலிமையையுடையதே
—எ-று, (கருத்து.) இயமன்கோபித்து வேலிட்டுவரினுமெதிர்நின்று தா
க்கும் வலிமையுடையதே படையாம் - என்பதாம். * மிகப்பலர் மன
மொத்ததற்குக்காரணம் அரசன்மேலன்பு - உண்மை-சிறப்புமை. (தி

மறமான மாண்ட வழிச்செலவு தெற்ற
மெனநான்கே யேமம் படைக்கு.

இ-ள். மறம் - செளரியமும், மானம் - மானமும், மாண்ட-மாட்சி
மைப்பட்ட, வழிச்செலவு - (மூன்னோர்சென்ற)நல்வழியிலேசெல்லு
லும், தேற்றம் - (அரசனல்) நம்பப்படுதலும், எனநான்கே-என இந்நான்
கு குணமுமே, படைக்கு-சேனைக்கு, ஏமம்-அரணும்—எ-று. (கருத்து.)
செளரியமும், மானமும், நல்வழிச்செல்கையும், நம்பிக்கையும், ஆகியவி
நாற்குணமுஞ்சேனைக்காரணமாகும-என்பதாம். *இவைகளால்முறையே
கைவனைச் சிக்கெனத்தெரிதலென்றுரிமையும், அரசனுக்குத்தாழ்வுவரா
ற்காத்தலும், தோற்பவர்மேற் படையெறியாமை முதலியவும். அறை
போகாமையும், ஆகியசெய்கைகள்பெறப்பட்டன இச்செய்கை யோ
ற்குப் பகைவர் ஒருங்க மாட்டாராகலின் வேறாண்வேண்டா மெ
ன்பதாம். (சு

தாந்தாங்கிச் செல்லாது தானே நிலைவந்த
போர்தாங்கும் நன்மை யறிந்து.

இ-ள். தானை - சேனையானது, நிலைவந்த - (பகைவராலேவலுப்ப
ட்டுத்) தன்மேல்வந்த, போர்-(படையின்) போனை, தாங்குந்தன்மை-வில
க்கும்வகுப்பை, அறிந்து-அறிந்து, (வகுத்துக்கொண்டு) தார்-(அவரதி
காரிப்படையை, தாங்கி - (தன்மேல்வாராமல்) தடுத்து, செல்லாது

தான் அதன் (மேலே) செல்வதே — ள் - று. (கருத்து.) தன் மேல் வந்தபோ ரை விலக்கும் வகுப்பை யறிந்து பகைவர் தானைப்படையைத் தடுத்துச் செல் வதே படையாம் - என்பதாம். * படைவகுப்பாவது வியூகம் அதனை ழு வகை உருப்புகளை யுடையதாய் வகையால் நான்காய் - விரியால் மூப்பதா ம் இவைகளின் பெயரும் இலக்கணங்களும் இங்கே சொல்லுதல் விரியு ம் அவையெல்லாம் வடநூல்களுட்கண்டு கொள்க. [இவரான் குபா ட்டாலும் படையது இலக்கண்ம்மீ சொல்லப்பட்டது.] (எ)

அடற்றகையு மாற்றலு மில்லெனினுந் தானை
படைத்தகையாற் பாடு பெறும்.

இ-ள். தானை-சேனை, அடற்றகையும்-(பகைமேலதான் சென்று) போர்செய்யுஞ் சௌரியமும், ஆற்றலும் - (அதுதன்மேல்வந்தால்) பொ றுக்கும் வலிமையும், - இல்லெனினும், இல்லையாயினும் படைத்தகையா ல் - தனது தோற்றப்பொலிவாலே, பாடு - பெருமையை, பெறும்-அடை யும் — எ - று. (கருத்து.) சேனையானது சௌரியமும் வலிமையுமில்லை யாயினும் பொலிவினாலே பெருமையை யடையும் - என்பதாம். * இல் லெனினுமெனவே அவசியம் அவைகள் வேண்டுமென்பது பெறப்ப ட்டது. தோற்றப்பொலிவாவது - அலங்கரிக்கப்பட்டதேர்-யானை- குதி ரைகளுடனும்-படாகை - கொடி - குடை - பலவாத்தியமும்காளமுதலா னவைகளுடனும் அணிந்து தோன்றும் அழகு பாடு கண்டவளவிலே பகைவாஞ்சும் பெருமை. (அ)

சிறுமையுஞ் செல்லாத்துனியும் வறுமையு
மில்லாயின் வெல்லும் படை

இ-ள். சிறுமையும் - (தானசெய்தது) சிறிதாகலும், செல்லாத்து னியும் - (மனத்திலிருந்து) நீங்காதவெறுப்பும், வறுமையும் - தரித்திரி யமும், இல்லாயின்-(தனக்கு) இல்லையாயின், படை-சேனையானது, வெ ல்லும் - (பகையை) வெல்லும் — எ - று. (கருத்து.) சிறிதாகலும் வெறுப் பும் வறுமையும் இல்லாவிடின் சேனையானது பகையை வெல்லும் - எ ன்பதாம் * விட்டுப்போதலும் வறுமையடைதலும் - அரசன் பொருள் கொடாமையால் வருவன நீங்காவெறுப்புமகளினாவெளவஇழிவாயின செய்தல் முதலானவைகளால் வருவது இவையுள்ளவிடத்து அவனிட த்து அன்பில்லாமற் உற்றுப்போர் செய்யாமையின் இல்லாயின் வெல் லுமென்றார். (க)

நிலமக்கள் சால வுடைத்தெனினுக் தானை
தலைமக்க ளில்வழி யில்.

இ-ள். நிலமக்கள் - (போரினிடத்து) நிலையையுடையவீரனை, சா லவுடைத்தெனினு-மிகவுடையதாயினும், தலைமக்கள் - (தனக்கு) தலை வராகியவீரர், இல்வழி - இல்லாவிடத்து, தானை-சேனை, இல்-இல்லாது

—எ-று. (கருத்து.) சேனையானது வீரரை மிகவுடைத்தாயினும் படைத்தலைவ ரில்லாவிடத்துப் போரினில்லாது-என்பதாம். * சேனைபதிகள் கிலேயுடையவரல்லாமல் போவாராயின் காண்போரில்லையாம்போர் செய்யாமல் தானும்போமென்றற்கு - தலைமக்களில் வழியிலையென்றார். [இவைமூன்றுபாட்டாலும் முன்றியே படைத்தகைமையாலும் அரசன்கொடைத்தாழ்வுளாலும், தலைவரில்லாமையாலும் தாழ்வுசொல்லப்பட்டது.] (ஙு)

எஅ-ஆம்-அதி-படைச்செருக்கு

அஃதாவது அச்சேனையினது மறமிருதியாம், அதிகாரமுறைமையும், இதனுலே விளங்குதும்.

என்னைமுன் னில்லன்மின் றெவ்விற் பலொன்னை
முன்னின்று கன்னின் றவர்.

இ-ள். தெவ்விர் - பகைவரே, என் - என்னுடைய, ஐமுன் - தலைவனெதிர், கின்று - (போராற்று) நின்று, கன்னின்றவர்-அவன்கொல்லப்படுகிழ்ந்து) கல்லிடத்தேநின்றவீர், பலர் - பலராவார், (கீர் அசனிடத்தில்லாமல் உம்முடலே (கிற்கையைவென்றிடில்) என்-என்னுடைய, முன் - தலைவனெதிர், கில்லன்மின் - (போராற்று) கில்லாதேயுங்கள்—எ-று. (கருத்து.) பகைவரே யென்றலைவனொதிர் கின்றுவெல்லாது இறந்துகல்லாகநாட்டப்பட்டவர் பலராவர் நீங்களுயிரோடிருக்க விரும்பினால் என்தலைவர்முன் னில்லாதீர்கள் - என்பதாம். * கல-போரிலவீரர்க்கந்தவிடத்து அவருருவஞ்செய்து நாட்டப்படுகல் ஒருவரன் தன்மற்ற அரசன்மேல்வைத்துச் சொல்லியபடி [இப்பாட்டு * கெடுமொழிவஞ்சியாவது

காணமுயலெய்த வம்பினில் யானை
பிழைத்தவே லெஞ்ச லினிது

இ-ள். காணம் - காட்டில்வாழ்கிற, முயல்-முசலை, எய்த - (தப்பாமல்) எய்த அம்பினின் - அம்பைவத்தலைப்பார்க்கிலும், யானை- (வெஞ்சிலத்திலேகின்ற) யானையை (எறிந்து) - பிழைத்தவேல்- தப்பியவேல், எஞ்சல்-தாங்குதல், இனிது-நன்று—எ-று.(கருத்து.) முயலையெய்தஅம்பையேந்துதலைப் பார்க்கிலும் யானையையெய்து தப்பிய அம்பையேந்துதல் நல்லது-என்பதாம். * காணமுயலென்றதனுல்-வெளிநிலமென்பதும் - பிழைத்தவேலென்றதனுல் தப்பாமலென்பதும், முயற்குத்தகுதியதவென்றதனுல் யானைக்குத்தக எறிதலும், வருவிக்கப்பட்டன. இதனையாசனது சேனையோடு சண்டைசெய்து அதுதோற்றுப் பின்

* கெடுமொழிவஞ்சியாவது - பகைவர்முன்னே தன்னுன்னை சொல்வது.

னிடக்கண்டு காணிப்பின் அவ்வாசன்மேற் செல்லலுற்ற ஒருவீரனது சொல்லு. (உ)

பேராண்மை யென்ப தருகணென் றுற்றக்கா
லூராண்மை மற்றத னெஃகு.

இ-ள். கறுகண்-(பகைவரிடத்தே முகங்கொடாமற்செய்கிற) மறம், பேராண்மை-மிகுந்தவாண்மையாகும், ஒன் றுற்றக்கால்-(அவர்க்கு) ஒருதாழ்வு வந்ததாயின், (அதுதீர்த்துக் கொள்ளுதற்பொருட்டு) ஊராண்மை-(முகங்கொடுத்து) உபகாரியாந்தன்மை, அதன்-அதற்கு, எஃகு-கூர்மையாகும், என்ப-என்று (நூலோர்) சொல்லுவார்—எ-று. (கருத்து-)பகைவன்வெல்லுமாமானது மிகுந்தவாண்மையாகு மப்பகைவர்க்குத்தாழ்வுவந்தகாலந்துதவுதல் கூர்மையாகும்- என்பதாம். * மற்று-அசை, [இவை இரண்டுபொட்டும்.* தழிஞ்சி.] (ங)

கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.

இ-ள். கைவேல்-(தன்) கைப்படையாகியவேலை, களிற்றொடு-(தன்மேல்வந்த) யானையோடு, போக்கி-எறிந்துவிட்டு, வருபவன்-(வருகின்றயானைக்கு வேல்தேடித்) திரிபவன், மெய்வேல் - தன்மார்பிலிருந்த வேலை, (கண்டு) பறியா-பிடுங்கி, நகும்- மகிழ்வான்—எ-று. (கருத்து.) கைவேலை யானைமேலெறிந்துவருபவன் தன்மெய்வேலைப்பிடுங்கி மகிழ்வான்-என்பதாம். * களிற்றொடுபோக்கல் - களிற்றினுயிரைக்கொண்டு போம்படி விடுதல், மகிழ்ச்சிதேடியது அடைதலால், இதனுள் களிற்றையல்லது எறியானென்பதும், கோபமிகுதியால் வேல்மார்பிலே புதைந்ததை அறிந்திலனென்பதும், பின்னும்போர்மேல் விரும்பினனென்பதும், பெறப்பட்டன, [இது o தாழிலாட்டு.] (ச)

விழித்தகண் வேல்கொண் டெறிய வழித்திமைப்பி
னோட்டன்றே வன்க ணவர்க்கு.

இ-ள். விழித்தகண்- (பகைவனைக்) கோபித்துப்பார்த்தகண்,வேல்கொண்டு - (அவர்) வேலைக்கொண்டு, எறிய-எறிய, அழித்து-(அதற்குப்பொறுமல் அப்பார்வையை) அழித்து, இமைப்பின் - இமைக்குமாயின், (அவ்விமைத்தல்) வன்கணவர்க்கு - வீரர்க்கு, ஓட்டன்றே-தோற்பல்லவா—எ-று.(கருத்து.) கோபித்துப்பார்த்தகண்வேல்கொண்டெறிய இமைக்குமாயின் தோற்பல்லவா-என்பதாம். * அக்கோபப்பார்வை

---

* தழிஞ்சியாவது - தோற்றவர்மேலே ஆயுதஞ்செலுத்தாத மிகுமறம் சொல்வது.

o தாழிலாட்டு - பகைவர் ஏட்மார்பிற் புதைந்து கிடந்தவாயுதம்பிடுங்கி எறிவது.

இமைத்தலும் போரின்கண் இக்ழ்ச்சியென்று கினைத்து அதனும் செய்யா வென்பதாம். (இ)

விழுப்புண் படாதகா வெல்லாம் வழுக்கினுள்
வைக்குந் தன்றோள் யெடுத்து.

இ-ள். (வீரனைவன்; தன்றோள்-தனக்குக்கழித்தகினங்களோ, எடுத்து-எடுத்த (தொண்ணி), (அத்தினங்களுள்) விழுப்புண்- பெருங்காயக்கள், படாதகா வெல்லாம் - படாததினங்களோ வெல்லாம், வழுக்கினுள்-யன்படாது கழிந்ததினங்களுள்ளே, வைக்கும்-வைப்பான்—எ-று (கருத்து.) சுத்வீரனைவன் போர்செய்யப்படாதகாலை வீணளென்றெண்ணுவான்-என்பதாம். * விழுப்புண்முகத்திலும்,மார்பிலும் பட்டபுண் போர் பெற்றிருக்கவும் - அதுபெறாதவர்களோடு கூட்டுவனென்பதாம். [இவை மூன்று பாட்டாலும் ஊறஞ்சாமை சொல்லப்பட்டது.] (ஈ)

சுழலு மிசைவேண்டி. வேண்டா வுயிரார்
கழல்யாப்புங் காலிகை நீர்த்து.

இ-ள். சுழலும் - (பூமியைச்) சூழ்ந்துநிற்கும், இசை-புகழை, வேண்டி - விரும்பி, வேண்டாவுயிரார் - உயிர்வாழ்க்கை வேண்டாத வீரர், கழல் - வீரக்கழலை, யாப்பு-கட்டுதல், காலிகைநீர்த்து - அலங்காரகுண மூடையதாம்—எ-று. (கருத்து.) புகழைவிரும்பி யுயிரைவிரும்பாதவர் வீரக்கழலைக் கட்டுதலலர்க் காபரணமாம்- என்பதாம். * பூமியைச்சூழுமெனவே அப்புகழின் பெருமை பெறப்பட்டது, அப்படிப்பட்டவீரர் வாழுலகமும் புகழும் எளிதிலே அடைவராதலால் ஆபரணமாவது அக்கழலேயென்பதாம். (உ)

உறினுயி ரஞ்சா மறவ ரிறைவன்
செறினுஞ்சீர் குன்ற லிலர்.

இ-ள். உறின் (போர்) பெறின், உயிர்-(தம்)மூயிர்ப்பொருட்டு,அஞ்சா - அஞ்சாமல், (அதன்மேற்செல்லும்), மறவர்-வீரர், இறைவன்-(தம்) மரசன், செறினும் - (அதுவேண்டாமென்று)கோபிக்கினும், சீர் குன்றல்- அவ்வீரமிகுதிகுறைதல், இலர்-இலராவர்—எ-று. (கருத்து.) தம்முயிர்க்கஞ்சாதுபோர்செய்யும் வீரர் தம்மரசன் கோபிக்கினும் வீரங்குறையார்- என்பதாம். * வீரர்போர்பெற்று அறியாமையால் அதுபெற்றால் அரசன் தடுப்பினும் கில்லா வென்பதாம். (அ)

இழைத்த திகவாமைச் சாவாரையாரோ
பிழைத்த தொறுத்திற் பவர்.

இ-ள். இழைத்தது-(தாம்) செல்லியசபதம், திகவாமை - தப்பாமற்பொருட்டு, சாவாரை - (போய்ச்) சாகவல்லவீரரை, பிழைத்தது(என்று) தப்பியதினிதம்;(சொல்லி) , ஒறுக்கும்பவர் - இகழ்தற்குரியவர், யார்;

யாவர்—எ-று.(கருத்து.)சபதப்படி.போரிற்சகுர்வீரனையிகழ்ப்வர்யார்-என்பதாம். * இழைத்தல் - இன்னதுசெய்வேனென்றில் இன்னனுகுகவெனத்தான்வகுத்தல் சொல்லியென்பது - வருவிக்கப்பட்டது. சபதமுடிக்கப்புகும்துமுன்னே இறந்தாலும் தொலைவில்லாமையால் அது முடித்தவராவரெனச்சாதற் சிறப்புச் சொல்லியபடி. (கூ)

புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பிற் சாக்கா
டிரங்குகோட்டக்க துடைத்து.

இ-ள். (தமக்குச்செய்யுமுறைகோ னினைத்து)புரந்தார்-ஆண்டவரது, கண்-கண்கள், நீர்மல்க-நீர்பெருகும்படி, சாகிற்பின்-(போரிலே) சாகப்பெறின், சாக்காடு-அச்சாவு, இரந்து-இரந்தாயினும் - கோட்டக்குறு-கொள்ளுந்தகுதியை, உடைத்து-உடையது—எ-று. (கருத்து.) வீரர்கள் அரசர்கண்கள் நீர்ததும்பப் போரிலிறந்தால் அவ்விறத்தல் கொள்ளத்தக்கது-என்பதாம். * ஈற்றத்தார் அழ இலம்பினிடத்து கோயிலே சாவோர்பழவினைப்பயிலை அடைதலால் - அப்போதை வினையால் வானுலகத்தை அடையும் சானவ னிறந்து கோட்டக்குறுடைத்தென்றார். [இவ்வாசிரியரும்பாட்டாலும் உரைக்காவானை சொல்லப்பட்டது.](ய)

எஞ-ஆம்- அதி - நட்பு.

இனிப்படைபோல அரசனுக்குந்தொழிலிடத்து உதவுதகுவாட்டை ஐந்திகாரத்தால் விதிமுகத்தாலும், பன்னிரண்டதிகாரத்தால் எதிர்மறைமுகத்தாலும்- சொல்லத்தொடங்கி விதிமுகவதிகாரமைந்தினுள்ளுந்தும் முதலிலே நட்புச்சொல்லுகிறார்.

அஃதாவது, இன்னதென்பதும் அதிகாரமுறைமையும் இதனுள் விளங்கும்.

செயற்கரிய யாவுள நட்பி னதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு.

இ-ள். நட்பின்-நட்புப்போல், செயற்கரிய - சம்பாதித்துக்கொள்ளுதற்கு அரியபொருள்கள், யா-எவைகள், உள-இருக்கின்றன, (சம்பாதித்துக்கொண்டால்) - அதுபோல, வினைக்கரிய - (பகைவர்) செய்யுந் தொழிலுக்குப், (புகுதற்கு) அரிய, காப்பு-காவலானவை, யா - எவைகள், உள-இருக்கின்றன—எ-று. (கருத்து.) நட்டைப்போலச் சம்பாதித்தற்கரிய பொருளெவையிருக்கின்றன - என்பதாம். * நட்புச்செய்தற்கு ஆவாரைப் பெறுதலும் பெற்றுச்செய்யும் உபாயமும், செய்தால் வேறுபடாமல்நிற்றலும், முதலானவை அருமையாகலால்-நட்புப்போல்

செயற்கரியன வில்லையென்றும், செய்தால் பகைவர் அஞ்சிப்போர் தொடங்கா ராதலால்- அதுபோல் போர்வாராமற் காத்தற்கு அரியவ வலில்லையென்றும், சொல்லினர், நட்பு-இயற்கை செயற்கை, என இ ருவகைப்படும். அவைகளில் இயற்கை-நட்பு-பிறப்பு - முறையாலாகிய தும், தெயமுறையாலாகியதும, என இருவகைப்படும், அவைகளுள் முன்னையது சுற்றமாதலால்,சுறறத்தாரிலில் அடங்கிறது. மற்றதுபகை யினடையிட்டதே யத்தகாகலால் துணைவலியென வலியறிதலுள் அடங் கிற்று. [இனி இவ்வதிகாரத்திலே சொல்லப்படுவது முன்செய்த வுத விபெற்று வருவதாகிய செயற்கைநட்பேயாகலால் அதன்சிறப்பு இ ல் சொல்லப்பட்டது.] (க)

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு.

இ-ள். நீரவர்-அறிவுடையவரது, கேண்மை-நட்புகள், பிறை - பி றைபோல், நிறைநீர-(நாடோறும்) நிறையுந்தன்மையினவாம், பேதை யார்- அறிவில்லாதவரது, நட்பு - நட்புகள், மதி - (நிறைந்த) சந்திரன் போல்,பின்னீர-பின்னேநாடோறும்குறையுந்தன்மையனவாம்—எ-று. (கருத்து.) அறிவுடையோர்நட்பு இளம்பிறைபோல்வளரும், அறிவில் லார்நட்பு நிறைசந்திரன்போல் குறையும்-என்பதாம். * இனிமைபற் றி நீரவொன்றார். அறிவுடையவர் தங்களிலே செய்தநட்பு முன்சுருங் கிப் பின்பெறுகற்கும், அறிவிலாதவர் தங்களிலே செய்தநட்பு முன்பெ ருகிப் பின்சுருங்கற்கும், காரணம். தம்முள் முன்னறியாமையும் பின் னறிதலுமாம். (உ)

நவிறொறு நூனயம் போலும் பயிறொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

இ-ள். பண்புடையாளர்-நற்குணமுடையமக்கள், தொடர்பு - (தங் களிலேசெய்த) நட்பு, பயிறொறும்- பழகுந்தோறும், (அவருக்குஇன்ப ஞ்செய்தல்) நூல் - நூற்பொருள், கவிறொறும் - கற்குந்தோறும, நயம் போலும்- (கற்பவர்க்கு) இன்பஞ்செய்தல்போலும்—எ-று. (கருத்து.) நற்குணமுடையவர் நட்புப்படிக்குந்தோறு நூற்பயன் கொடுத்தல்போ லாம- என்பதாம். * இரண்டிலும் ஒருபோதுக்கு ஒருபோது மிகுமென்பதாம். [இவை இரண்டுபாட்டாலும் அச்சிறப்புக்கு ஏதுசொல்லப் பட்டது.] (கூ)

நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு.

இ-ள். நட்டல் - (ஒருவரோடு ஒருவர்) நட்புச்செய்தல், (நகைசெய் தற்கு) ஏற்றவைசொல்லி, நகுதற்பொருட்டு - நகைசெய்தற்பொருட்டு, அன்று-அல்ல, மிகுதிக்கண்- (அவர்க்கு) கேண்டாதசெய்கை-(உண்டா னவிடத்து) மேற்சென்று, மூற்பட்டு-இடித்தற்பொருட்டு - கண்டித்து புத்திசொல்லுதற்பொருட்டு—எ-று. (கருத்து.) சிநேகஞ்செய்தல்நகை செய்தற்பொருட்டல்ல புத்திசொல்லும் பொருட்டே - என்பதாம். *

பழியும் பாவமும் தருஞ்செய்கை - துன்பமேதருதல்பற்றி வேண்டப்படுதல்லாமையால் - அதனைமிகுதியென்றும், அதுசெய்தற்கு முன்னே திருப்பவேண்டுதலால் - மேற்செல்லென்றும், இனியசொல்லுக்குத் திரும்பாமையால் - இடித்தற்பொருட்டென்றும், சொல்லினர் [இதனுல் நட்பின்பயன் சொல்லப்பட்டது.] (சு)

புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதா
னட்பாங் கிழமை தரும்.

இ-ள். (ஒருவனேடு ஒருவன் நட்பாகுதற்கு) புணர்ச்சி - ஓரிடத்திருத்தலும், பழகுதல் - பலதரங்கண்டுபேசலும், வேண்டா- வேண்டுவதில்லை, உணர்ச்சிதான் - (இருவர்க்கும்) ஒத்த அறிவுதானே, நட்பாம்-சிநேகமாம், கிழமை-உரிமையை, தரும்-கொடுக்கும்—எ-று. (கருத்து) இருவர்க்கு மொத்தவறிவே சிநேகந்தரும்- என்பதாம். * (இவையில்லையாயினும் ஒருவனையொருவர் சமமாகவறிதலே உடனுயிர் நீங்குதற்குரியநட்பை (உண்டாகுமென்பதாம்) நட்பிற்கு - புணர்ச்சி- பழகுதல்-உணர்ச்சியாத்தல் - என்கிறகாரண மூன்றுள்ளும் பின்னதுசிறப்புடையதென்பது [இதனுல் சொல்லப்பட்டது.] (ரு)

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு.

இ-ள். முகநக- (கண்டவிடத்து) முகமாத்திரமேமலரும், வகைநட்பது- சிநேகிப்பது, நட்பன்று - சிநேகமன்று, நெஞ்சத்தகநக-(அன்பால்) உள்ளம்மலர, நட்பது - சிநேகிப்பதே, நட்பு-சிநேகமாம்—எ-று.(கருத்து.) முகமலர்ந்து சிநேகிப்பது சிநேகமல்ல அகமலர்ந்து சிநேகிப்பதே சிநேகம்-என்பதாம். * நெஞ்சத்தகமுமென்றுமெச்சவும்மைதொக்குநின்றது. அதனுல் இரண்டும் ஒருசேரமலரவேண்டுமென்பதுபெற்றும். (சூ)

அழிவினவை நீக்கி யாறுய்த் தழிவின்க
ணல்ல வுழப்பதா நட்பு.

இ-ள். நட்பு - (ஒருவனுக்கு நட்பாவது, அழிவின் -அழிவைத்தருகிற, அனவை - தீயவழிகளாலே, நீக்கி-விலக்கி, ஆறு-நல்வழிகளிலே, உய்த்து - கூடத்தி, அழிவின்கண்-(ஊழினுலே) கேடுவந்தவிடத்து, அல்லல்-அத்துன்பத்தை, உழப்பதாம் - உடனிருந்து அநுபவிப்பதே—எ-று. (கருத்து.) நட்பாவது தீவழியைநீக்கி நல்லவழியையேநோக்கித் துன்பத்தை யநுபவிப்பதாம் - என்பதாம்.* ஆதலனவருகின்றமையால் அழிவினவை தீயவழியெனப்பட்டது. (எ)

உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
யிடுக்கண் களைவதா நட்பு.

இ-ள். நட்பு - நட்பாவது, உடுக்கையிழந்தவன்-(சபைபினிடத்து) ஆடைகுலைந்தவனுக்கு, கைபோல - கைசென்றுதவுதல்போல (சிநேகிக்கப்பட்டவனுக்கு) ஆங்கே - அப்பொழுதே, இடுக்கண்- துன்பத்தை, களைவதாம் - நீக்குவதாம்—என்று. (கருத்து.) ஆடைகுலைந்தவன் கைபோலத்துன்பத்தை நீக்குவதேநட்பாம்- என்பதாம். * ஆடைகுலைந்தவனுக்குக் கையெப்படியோ அப்படியே ஆபத்தை அடைந்தவனுக்குட்பாளன் மனத்திலும்முற்பட்டு உதவிசெய்து துன்பம் ஒழிப்பானென்பதாம். நட்பினன் செயல் நட்பில்ஏற்றப்பட்டது. (அ)

நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி
யொல்லும்வா யுள்ளுறுதலே.

இ-ள். நட்பிறகு - சிநேகத்திற்கு, வீற்றிருக்கை-ஆசனிருக்கை, யாதெனின் - யாதெனில், (அது—கொட்பின்றி- (எக்காலும்) வேறுபடாமல், ஒல்லும்வாய்- தகுந்தவிடத்தெல்லாம், உள்ளுறுதலே - (அறப்பொருள் களிலே தனைமனம்) தாங்குந்தன்மை—என்று. (கருத்து.) நட்பிற்கு ஆசனிருக்கையாவதெல்லாம் எக்காலுந் தாங்குந்தன்மையாம்- என்பதாம். * ஒருகாலும் வேறுபடாமல் கூடுமிடத்தெல்லாம் பறுமையிற்பிழைகளுக்கு உறுதியாகிய அறம்பொருள்களிலே தளர்ந்தவிடத்து அத்தளர்ச்சி நீங்கி நிறுத்துதற்குமேல் ஒருசெயலும் இல்லாமையால் அதனை நட்பிற்கு முழுந்தலில்லை என்றார். (கூ)

இனைய நிலமொமக் கின்னம்யா மென்று
புனையினும் புல்லென்னு நட்பு.

இ-ள். இவர் - இவர், எமக்கு - எங்களுக்கு, இனையர்-இவ்வளவின் பினர், யாம் - நாங்கள், இன்னம்- (இவர்க்கு) இவ்வளவின்பினம், என்று-என்று, புனையினும - (ஒருவனை) ஒருவர்சிறப்பிக்கினும், நட்பு-சிநேகம், புல்லென்னும் - சிறிதாய்ந்தேதான்றும்—என்று. (கருத்து.) இவர்களுக்கிவ்வளவின்பினர் நமக்களிவர்க் கிவ்வளவின் பினமென்று சிறப்பிக்கிற் சிநேகஞ் சிறிதாம் - என்பதாம். * தாம் அவர்களின்றியேதானில்லாதிருந்தும் சிறப்பித்துச் சொல்லில் பேதம் உண்டாதலால் - புல்லென்னுமென்றார். [இவைஐந்துபாட்டாலும் நட்பினது இலக்கணம்சொல்லப்பட்டது. (ஙி)

அய-ஆம் - அதி-நட்பாராய்தல்

அஃதாவது, முன்சொல்லப்பட்ட இலக்கணமுடையவனை ஆராய்ந்தறிந்தே சிநேகிக்கவேண்டுதலால் அவனை ஆராயுந்திறமும்- அதிகாரமுறைமையும் இதனாலே விளங்கும்.

நாடாது நட்டொழிக நாடியின்னிலை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு.

இ-ள். நட்பாள்பவர்க்கு - நட்பைவினாவும்பி அரசனிடத்தே நிற்பார்க்கு நட்பின் - (ஒருவனை நன்றுதீதுட்புச்செயதபின்), வீடு- (அவனை) விடுதல்;

இல்லை-உண்டாகாது, (ஆதலால்) நாடாது-ஆராயாமல், நட்டலின்-சிநே
கித்தல்போல், கேடு-கேடுதருவது, இல்லை-(வேறு) இல்லை—எ-று(.க
ருதது.) சிநேகிப்பவர்க்குச் சிநேகித்தபின் சிநேகத்தை விடுதலில்லை-ஆ
ராயாமல் சிநேகித்தல்போற் கேட்டைத்தருவதொன்றில்லை - என்பதா
ம். * ஆராய்தல் - குணகுன்மைசெய்கைகுன்மைகளை - ஆராய்தல்-கேடு
தருவதைக் கேடெனலால் ஆகுபெயர். சிநேகித்தால் - நாம்- அவனொன்
றும், வேற்றுமையில்லாமையால் - வீட்டில்லையென்றும், அவ்வொற்று
மையால் அவனிடத்துப் பழிபாவங்கள் தம்மையாகலால் இருமையு
ம் கெடுவதொன்பதுநோக்கி - நாடாது நட்டலிற் கேடில்லையென்றும்
சொல்லினர். (க)

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரந் தரும்.

இ-ள். (குணமுஞ்செய்கையும் நல்லனென்பதும் அல்லனென்ப
தும்) ஆய்ந்து - (பலகால்) ஆராய்ந்தும், ஆய்து - (பலவழியால்) ஆரா
ய்ந்தும், கேண்மை-(ஒருவனோடு) நட்பை, கொள்ளாதான் - கொள்ளா
தவன், கடைமுறை- முடிவில், தான்- தான், சாம்- சாவதற்குவ துவாகிய
துயரம்- துன்பத்தை, தரும்.(தானே)விளைத்துக்கொள்ளுவான்—எ-று
(கருத்து.) ஆராய்ந்து கொள்ளாதவன் சிநேகஞ்சாவதற்கேதுவான து
ன்பந்தரும்-என்பதாம். * தீயகுணமுந்தீயசெயலு முடையவனோடு ந
ட்புக்கொள்ளின் அவனுக்குவரும் பகைமையெல்லாம் தனக்கும்வந்து
பின் அவைகளால் இறந்து விடுவனென்பதாம். [இவைஇரண்டுபோட்டா
லும் ஆராயாதவிடத்துப்படும் இழுக்கச் சொல்லப்பட்டது.] (உ)

குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்று
வினையு மறிந்தியாக்க நட்பு.

இ-ள் குணனும்- (ஒருவனது) குணத்தையும், குடிமையும் - குடி
ப்பிறப்பையும், குற்றமும் - குற்றத்தையும், குன்றுவினையும் - குறைவற்
றசுற்றத்தையும், அறிந்து- (ஆராய்ந்) தறிந்து நட்பு- சிநேகம், யாக்க-
(அவனோடு) செய்யக்கடவன்—எ-று. (கருத்து.)குணத்தையுங் குடிப்பி
றப்பையுங் குற்றத்தையுஞ் சுற்றத்தையுமறிந்து நட்புச்செய்யக்கடவ
ன்-என்பதாம. * குற்றமில்லாதவர் உலகத்திலே இல்லாமையால் பொ
ருக்கத்தக்க குற்றமுடையராயிருந்தால் அவர்நட்புவிடக் கூடாதென்ப
தற்கு குற்றமென்றும், சுற்றத்தாரோடு கட்டுண்டிருப்பவர் நட்பாள
ரோடும் கட்டுண்டிருத்தல்- குன்றுவினையென்றும், விடப்பட்டா
ல்-தங்குறையாமெனபதற்கு- அறிந்தியாக்கவென்றும், சொல்லினர், ()

குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல்வேண்டு நட்பு.

ஆவி-ஆம்-அதி—கட்பாராய்தல்,

இ-ள். குடிப்பிறந்தா - உயர்ந்தகுடியிற்பிறந்து, தன்கண்-தன்னிட
த்தும், பழி- உலகர் சொல்லும்பழிக்கு, நாணுவானை - அஞ்சுவானை, வெ
ருத்தும்-சில கொடுஞ்காயிற்றும், கட்புக்கொளல்வேண்டும்- சிநேகங்கொ
ள்ளவேண்டும்—என-று. (கருத்து.)உயர்குலத்திற் பிறந்துபழிக்கஞ்சுவ
னைப் பொருள்கொடுத்துஞ் சினேகங்கொள்ளக்கடவன் - என்பதாம். *
குடிப்பிறப்பால் தான்பிழைசெய்யாமையும், பழிக்குஅஞ்சலால் பிழை
பொறுத்தலும் பெற்றாம். இவை இரண்டுமுடையவனைப் பெற்றுதல் அ
ருமையாதலால் அவனைட்பை விலைகொடுத்தும் கொள்கவென்பதாம்.

அழச்சொல்லி யல்ல திடித்து வழக்கறிய
வல்லார்கட் பாய்ந்து கொளல்-

இ-ள். அல்லது- (நாம்) உலகுடையல்லாதனை (செய்யினைக்
கின்)—அழச்சொல்லி - அழும்வகைசொல்லி (விலக்கியும்)(செய்கள்ள
வினை) — இடித்து- (பிறர்தரும் செய்யாவகை) தெருக்கியும், வழக்கு - அவ்வு
லகவினை (செய்யாவிடத்து) — அறியவல்லார்- செய்விக்கவும்வல்
லவரை, ஆய்ந்து- ஆராய்ந்து, கட்பு-சினேகம், கொளல்-கொள்ளக்கடவ
ர்—என-று. (கருத்து.) ஒருவன்பாவங்களைச் செய்யாவினைத்தால் அழு
ம்படி சொல்லி விலக்கியும் - பாவங்களைச் செய்தால் செய்யாதிருக்க
தெருக்கியும் உலகுடை செய்விக்க வல்லானைச் சிநேகிக்கக்கடவர் - எ
ன்பதாம் * அழச்சொல்லி இடித்து எனவந்த பரிகாரத்தொழில்களுக்
கு எற்றகுற்றத்தொழில்கள் வருவிக்கப்பட்டன. வழக்கு - உலகத்தார்
ஆகிதொடங்கிச் செய்துவந்தசெயல், தம்மோடு சிநேகித்தவரும் அறி
யும்வகை அறிகல் அரிதாகலால்- அறியவல்லானென்றார். (சு)

கேட்டிணு முண்டோ ருறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல்.

இ-ள். (ஒருவனுக்குக்கேடென்பது) -கிளைஞரை - சுற்றத்தாரது
நட்பாகிய (விலங்களை) —நீட்டியளப்பது- குறையாமல் அளப்பதாகிய,
ஓர்கோல்- ஓர்கோலாம், (ஆகலால்) கேட்டிணும்- அக்கேட்டினிடத்து
ம், ஒருதி- (அவராலே பெறப்படும்) ஒருநல்லறிவு, உண்டு- உண்டா
கும்—என-று. (கருத்து.) கேட்டினிடத்துஞ் சினேகராற் பெறப்படுநல்ல
றிவுண்டாம் - என்பதாம். * தமது சினேகத்தினல்லைகருங்கியிருக்கவும்
செல்வக்காலத்திலே புறத்துவெளிப்படாமல் வந்தவர் பின்கேடுவந்தவி
டத்துச் செயல்வேறுபடுதலால் அக்கேட்டால்சினேகத்தை அளவுசெய்
தலாமென்பதுபற்றி- கேட்டினைக் கோலாகியும, அதனால் அளந்தறிந்
தால் ஆவானையே கொள்ளுதலால் அவ்வறிவை உறுதியென்றும்,சொ
ல்லினார் [இங்கு எஞ்சேசவுருவகம்] [இவை நான்குபாட்டாலும் ஆரா
யும் விதமும்- ஆராய்ந்தால் சினேகிக்கப்படுவார் இவரென்பதும்- சொ
ல்லப்பட்டன.]

(சு)

ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை யொரீஇ விடல்.

இ-ள். ஒருவர்க்கு - ஒருவனுக்கு, ஊதியமென்பது-பேறென்று சொல்லப்படுவது, பேதையார்=அறிவில்லாதவர்கள், கேண்மை-நட்பை, ஒரீஇ-ஒழித்து, விடல் (அவனை) விடுதல்—என்று. (கருத்து.) ஒருவனுக்குலாபமென்று சொல்லப்படுவது அறிவில்லார் சிநேகத்தை விடுதல்-என்பதாம். * நட்பொழிந்தாலும்விட்டு நீங்காதவிடத்துத் தீங்குவருதலால் - விடலென்றும், நீங்கியவிடத்துத் தீங்கொழிதலேயல்லாமல் இருமை மின்பங்களுக்கும் உரிமைபெறுதலால் - அதனை ஊதியமென்றும், சொல்லினார். (எ)

உள்ளற்க வுள்ளுஞ் சிறுகுவ கொள்ளற்க
வல்லற்க ணாற்றறுப்பார் நட்பு.

இ-ள். உள்ளம்- (தம்) மனவெழுச்சி, சிறுகுவ-சுருங்குதற்குக்காரணமாகியதொழில்களை, உள்ளற்க - (செய்ய) நினையாதிருக்கக்கடவர், (அதுபோல்) அல்லற்கண்-(தமக்கொரு) துன்பம்வந்தவிடத்து, ஆற்றறுப்பார்-கைவிடுவோரது, நட்பு-சிநேகத்தை, கொள்ளற்க-கொள்ளாதிருக்கக்கடவர்—என்று. (கருத்து.) மனந்தளரும் தொழிலைச்செய்யநினையாதிருக்கக்கடவர் துன்பத்திற் கைவிடுவோர் நட்பைக்கொள்ளாதிருக்கக்கடவர்-என்பதாம். * அத்தொழில்களாவன தம்மின்வலியவரோடுதொடங்கியவையும் பயனில்லாதவையும்ஆம், முன்னெல்லாம் வலியார்போலே நடத்தலால். ஆற்றறுப்பானென்றார். ஆற்றறுத்தல்-வலியறுத்தல்- (எடுத்துக்காட்டுவமை) கொண்டால் அழிந்தேவிடுவனென்பதாம். (அ)

கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மையடுங்காலை
யுள்ளினு முள்ளஞ் சுடும்.

இ-ள். கெடுங்காலை - (ஒருவன்) கெடுங்காலத்து, கைவிடுவார்-(அவனைவிட்டு) நீங்குவார், கேண்மை-(முன் அவனோடுசெய்த) நட்பானது, அடுங்காலை- (கூற்றுவன்) கொல்லுங்காலத்து, உள்ளினும் - (ஒருவன்) நினைக்கினும், உள்ளம்-(அந்நினைத்த) உள்ளத்தை, சுடும்- சுட்டுவிடும்—என்று. (கருத்து.) கெடுங்காலத்துக் கைவிடுவோர் நட்பானது இயமன்கொல்லுங்காலத்து நினைக்கினும் முள்ளத்தைச்சுடும்-என்பதாம். * நினைத்தவளவிலே சம்பந்தமில்லாத பிறனுக்கும் கூற்றுவனிலும் கொடியதாமென்று-கைவிட எண்ணிச்செய்த நட்பின்கொடுமைசொல்லியபடி. [இவைமூன்றுபாட்டாலும் ஆராய்ந்தால் சிநேகிக்கப்படாதவர் இவரென்பது சொல்லப்பட்டது.] (ஆ)

மருவுக மாசற்றார் கேண்மையொன் றித்து
மொருவுக வொப்பிலார் நட்பு.

இ-ள். மாசு மறு * (உலகோடொத்துக்) குற்றமற்றவாது, கேண்மை-நட்பைபேய, பழகு-பழகக்கடவன், ஒப்பிலார் - (உலகத்தோடு) ஒத்தில்லாதவரது, நட்பு - நட்பை, (ஆராயாதுகொண்டால்)—ஒன்று (அவருக்குமேவண்டிய) ஒன்றைத், தந்தும்- கொடுத்தாயினும், ஒருவுத-விடக்கடவன்—என-று. (கருத்து.) குற்றமற்றவர் சிநேகத்தைக்கொள்ளக் கடவன், ஒப்பிலார் சிநேகத்தைப் பொருள்கொடுத்தாகினும் விடக்கடவன்-என்பதாம். * உலகோடொத்தவர் நட்புஇருண்மையின்பழும் தருதலால் மருவுகவென்றும், அதனிறந்து மாறுபின்னவர் நட்பு துன்பமே தருதலால் அதைவிலைகொடுத்தாயினும் விடுகவென்றும், சொல்லினர். [இதுலால் சிநேகிக்கப்படுவாரும் படாரும் அறிய அவ்விருமையும் தொகுத்துச் சொல்லப்பட்டது.] (2)

அக-ஆய்-அறி-பழமை.

"ஆய்ந்தீவது, நட்பின்றது பழையராய் தன்மைபற்றி அவர்செய்த பிழைகளைப்பொறுத்தல், ஆராய்ந்து சிநேகிக்கப்பட்டாராயினும் பொறுக்கப்படும் குற்றமுடையராகலாலும், ஊழ்வகையாலும் நட்புக்கொள்ளப்பட்டவரிடத்துப் பிழையுளதாமென்பது அறிவித்தற்கு இதுஆராய்தலின் பின்வைக்கப்பட்டது.

பழமை யெனப்படுவ தியாதெனின் யாதுங்
கிழமையைக் கிழ்ந்திடா நட்பு.

இ-ள். பழமையெனப்படுவது-பழமையென்று சொல்லப்படுவது யாதெனின்-யாதென்றால் (அது)—கிழமையை-(பழமையோர்) உரிமையாலே செய்தவைகளை, யாதும்-சிறிதாயினும், கிழ்ந்திடா - சிதைக்காமல் (அவைகளுக்கு உடன்படுவதாகிய), நட்பு-சிநேகம்—என-று. (கருத்து.) பழமையென்று சொல்லப்படுவ தியாதென்றால், பழமையோர்செய்தவற்றைச் சிதையாமற் கொள்ளு நட்பாம்-என்பதாம். * கிழமை-ஒருபெயர் பின்கெழுதகைகண்மையென வருவதுமது, உரிமையாற் செய்தவையாவன - கருமஞ்செய்யும்போது கேளாது செய்தல் கெடும்வகை செய்தல், தமக்குவேண்டு மவைகளைத் தாமேகொள்ளுதல், பணிவச்சக்களில்லாமை, இவைமுதலானவை. [இதனாலே பழமையாவது காலஞ்சென்றதன்று இப்படிப்பட்ட நட்பென்பது சொல்லப்பட்டது.] (3)

நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்
குப்பாதல் சான்றோர் கடன்.

இ-ள். கட்பிற்கு-சிநேகத்திற்கு, உறுப்பு-அவயவமான, கெழுதகை-(கட்பினர்) உரிமையுற்செய்பவையாம், (ஆதலால்) அதற்கு - அவ்வினைமைக்கு, உப்பாதல்-இனியராதல், சான்றோர்-நிறைந்தோர்க்கு, கடன்-முறைமை—என்று. (கருத்து.) சிநேகத்திற்கவயவமான சிநேகருரிமையாம் செய்தலையுமாம்-என்பதாம். * மற்று-அசை * வேறல்லாமை தோன்ற உறுப்பென்றார். அவயவமாகுதலறிக்கே இதரியலாமலென்பது தோன்ற-சான்றோர்பேல்லைத்தாம். (உ)

பழகிய கட்பென்ன செய்யும் கெழுதகைமை
செய்தாங் கமையாக் கடை.

இ-ள். கெழுதகைமை-(கட்பினர்) உரிமையிற்செய்தலை வகளுக்கு, செய்தாங்கு-(தாம்) செய்தலைவதேபோல், அமையாக்கடை - உடன்படாராயின், பழகிய - (அவரோடு) பழக்கத்தையுடைத்த, கட்பு-சிநேகமானது, எவன்-என்னபயனை, செய்யும்-செயுமும்—என்று. (கருத்து.) கட்பினர் செய்தலைவகளுக்குத் தாஞ்செய்யாவிடத்து கட்பெனும்பயன்செய்யுமோ-என்பதாம். * அப்படி உடன்படுதலாவது-தாழும்அவரிடத்து உரிமையால் உடன்படுதல். [இவை இரண்டிடத்தும் பழமையாய்வரும் உரிமையது சிறப்புச் சொல்லப்பட்டது.] (ஊ)

விழைதகையான் வெண்டி யிருப்பர் கெழுதகையாற்
கேளாது கட்டார் செயின்,

இ-ள். கட்டார்-கட்பினர், கெழுதகையால்- உரிமையால், கேளாது-தம்மைக்கேளாது, செயின் - (தவகருமத்தைச்) செய்தாராயின், விழைதகையான் - (அச்செயலது) விரும்பப்படுந் தன்மைபற்றி (அறிவுடையோர், வெண்டியிருப்பர்- (அதனை) விரும்புவர்—என்று. (கருத்து.) கட்பாளர் உரிமையாற்கேளாது செய்தலறிவுடையோராதலை விரும்புவர்-என்பதாம். * ஒருவர்க்குத் தங்கருமப்தாம் அறியாமல் மூடித்திருக்கையைக் காட்டிலும் கண்ணிலில்லாமையால் அச்செயல்விரும்பத்தக்கதாயிற்று. அதனை அப்படியறிந்து விரும்புதல் அறிவுடையாராக்கல்லது இல்லாமையால் அவர்மேல் வைத்துச் சொல்லப்பட்டது. [இதனால்கேளாதுசெய்தலிடத்தது அதனை விரும்புகவென்பதுசொல்லப்பட்டது](எ)

பேதைமை யொன்றே பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க கட்டார் செயின்.

இ-ள். நோதக்க-(தாம்) வெறுக்கத்தக்கவைகளை, கட்டார்-சிநேகித்தவர், செயின்-செய்தால்(அதற்குக்காரணம்), பேதைமையொன்றே-அறியாமையொன்றே, பெருங்கிழமை- மிகுந்தஉரிமையுமாம், என்று-என்று, உணர்க-அறியக்கடவர்—என்று.(கருத்து.)வெறுக்கத்தக்கவைகளைச்சிநேகர்செய்தலது மிகுந்த உரிமையாம்-என்பதாம். *செயினெனவே தம்மியல்பிலே செய்யாமைபெற்றும், இது வருகின்றவைக்குள்ளும்

ஒக்கும். இழவுழால்வரும் பேதைமையார்க்கும் உண்டாகலால் தமக்கு ஏதங்கொண்டாவென்றுவது ஊழ்வகையால் எம்மால்வரக்கடவது ஒற்றுமை மிகுதிபற்றி அவரால் வந்ததென்றுவது கொள்வதல்லது அன்பிலாமையென்று கொள்ளப்படாதென்பதாம். [கெடும் வகைசெய்யின் ஆதற்குக்காரணம் இதனால் சொல்லப்பட்டது.] (டு)

எல்லிக்க ணின்றூர் துறவார் தொலிவிடத்துந்
தொல்லிக்க ணின்றூர் தொடர்பு.

இ-ள். எல்லிக்கணின்றூர்-(நட்பின்) வரம்பிலே நின்றவர், தொல்லிக்கணின்றூர்- (தம்மோடு) பழமையில் வேறுபடாது நின்றவரது, தொடர்பு-நட்பை, தொலிவிடத்தும் - (அவராலே) தொலிவுவந்தவிடத்தும், துறவார்-விடார்.—எ-று. (கருத்து.) நட்பிலே நின்றவர் பழமையோர் சிநேகத்தைவிடார்-என்பதாம். * பழமையில் வேறுபடாதமையாவது-உரிமை யொழியாமையாம், தொலிவு-பொருட்கேடு-போர்க்கே,

அழிவந்த செய்யினு மன்பறு ரன்பின்
வழிவந்த கேண்மை யவர்.

இ-ள். அன்பின்-அன்புடனே, வழிவந்த-பழையதாய்வந்த, கேண்மையவர் நட்பினையுடையவர், (நட்பினர்) அழிவந்த-அழிவு வந்தவைகளை, செய்யினும்-செய்தாலும், அன்பறார்-(அவரிடத்தே) அன்புநீங்கார்—எ-று. (கருத்து.) பழமையான நட்பினையுடையவர் பிறர் அழிவான வற்றைச்செய்தாலு மன்பைவிட்டகலார்-என்பதாம். * அழிவு - முன் சொல்லிய தீதுகள். [இவை இரண்டுபாட்டாலும் கேடுசெய்தவிடத்தும் விடுந்தன்மைய தன்றென்பது சொல்லப்பட்டது.] (எ)

கேளிழுக்கங் கேளாக் செழுதகைமை வல்லார்க்கு
நாளிழுக்க நட்டார் செயின்.

இ-ள். கேள்-நட்பினது, இழுக்கும்-பிழையை, கேளா-(பிறர்சொல்லினும்) கேளாத-கெழுதகைமை, வல்லார்க்கு- உரிமையறிய வல்லவர்க்கு, நட்டார்-அந்நட்பினர், இழுக்கம்-பிழையை, செயின் - செய்தால் (அது)—நாள்-(பயன்பட்ட)நாளாம்—எ-று.(கருத்து.) நட்பாளர்பிழையைக்கேளாதவற்கு நட்பாளர் பிழையுஞ்செய்தலது பயன்பட்ட நாளாம்-என்பதாம். * பிழையாவன-முன்சொல்லிய பணியாமை-அஞ்சாமை-நற்பொருள்வெளவல் - முதலானவை, கேட்டல் உட்கொள்ளுதல், செய்தவிடத் தல்லாமல் அவ்வல்லமை வெளிப்படாமையால் செய்யாதவை நாளல்லவாயின. [இதனால் பிழைபொறுத்தற் சிறப்புச்சொல்லப்பட்டது.] (அ)

கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையு முலகு.

இ-ள். கெடாஅ-(உரிமை) கெடாமல், வழிவந்த-பழையதாய்வந்த, கேண்மையார்-நட்பையுடையவரது, கேண்மை-நட்பை, விடாஅர்-(அவர்பிழைநோக்கி) விடாதவராய, உலகு-உலகமானது, விழையும்-(நட்புக்குறித்து) விரும்பும்—எ-று. (கருத்து.) பழையசிநேகர் நட்பைவிடாதவரை உலகமிச்சிக்கும்-என்பதாம். * விடாதாரையெனவே விடுதற்குக்காரணம் சொல்லப்பட்டது நம்மிடத்தும் இவர் இப்படிப்பட்ட வராவொன்று யாவரும் தாமேவந்து நட்பாவொன்பதாம். (கூ)

விழையார் விழையப் படுப பழையார்கட்
பண்பிற் றலைப்பிரியா தார்.

இ-ள். பழையார்க்ண்- பழையநட்பினரிடத்து, (அவர்பிழைசெய்தாராயினும்)—பண்பிற்றலைப்பிரியாதார்- (தம்) பண்புநீங்காதவர், விழையார்-பகைவராலும், விழையப்படுப, விரும்பப்படுபவா—எ-று. கருத்து.) பழையசிநேகரிடத்துச் சிநேகம் நீங்கார்தவர் பகைவராலு மிச்சிக்கப்படுவர-என்பதாம். * தம்பண்பாவது- செய்யாதகும்போழ்து அன்புடையராதல் அக்குணநோக்கிப் பகைவரும் நட்பினராவலொன்பதாம். [இவை இரண்டு பாட்டாலும் பழைமையறிவார். அடையும்பயன் சொல்லப்பட்டது.] (ம)

அஉ-ஆம்-அதி-தீநட்பு.

இனிபொறுக்கப்படாத குற்றமுடைமையால்விடத்தக்கதாகியநட்பு நட்பாராய்த லதிகாரத்தில் சுருங்கச்சொல்லி அவ்வளவில்அடங்காமையால் அதனை இருவகைப்படுத்தி இரண்டதிகாரத்தாலே சொல்லத்தொடங்கி முன்னே தீநட்பு சொல்லுகிறார்.

அஃதாவது, நீக்குணத்தாரோடு உண்டாகியநட்பாம், அதிகாரமுறைமை சொல்லாமலேவிளங்கும்.

பருகுவார்போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்ற லினிது.

இ-ள். பருகுவார்போலினும்- (ஆசைமிகுதியால்) உண்பவர்போன்றாராயினும், பண்பிலார்- குணமிலாரது-(நீக்குணமுடையவரதுஎன்றபடி) கேண்மை- நட்பானது, பெருகலின்-வளர்தலினும், குன்றல்- குறைதல், இனிது-இனிதாம்—எ-று. (கருத்து.) நற்குணமில்லார் நட்பான்து பெருகுதலினும் சிறுகுதலினிதாம்- என்பதாம். * பெருகினல்வருங்கேடு குன்றினல் வாராமைபின் குன்றலினிதென்றார். [இதனல் தீநட்பினதாகாமை பொதுவகையாற் சொல்லப்பட்டது. இனிச்சிறப்புவகையாற் கூறுவர்.] (க)

உறினட்டறிலெருஉ மொப்பிலார் கேண்மை
பெறினு மிழப்பினு மென்.

இ-ள். உறின்-(தமக்குப்பயன்) உள்ளவிடத்து, நட்டு-சிநேகித்து, அறின்-(அது) இல்லாவிடத்து, ஓருஉம்-ஓழியும், ஒப்பிலார்-ஒப்பில்லாதவர்து, கேண்மை - சிநேகதன்மை, பெறினும்- பெற்றாலும், (என்)(ஆக்கம்) யாது, இழப்பினும்-இழந்தாலும், என்-(செல்வம்)யாது—எ-று. (கருத்து.) செல்வம் வந்தவிடத்து சிநேகித்து அது இல்லாவிடத்துக் கைவிடுவோர்கள் சிநேகத்தைப்பெற்றாலென்ன, அற்றாலென்ன-என்பதாம். * தமக்கு உற்றவைபார்ப்பவர் பிறரோடு பொருந்தமில்லாதலால் அவரை ஒப்பிலாரென்றார். அவரிடத்து அயலார் தன்மையே பொருந்துமென்பதாம். (உ)

உறுவது சீர்தூக்கு நட்பும் பெறுவது
கொள்வாருங் கள்வரு மேர்.

இ-ள். உறுவதுசீர்தூக்குநட்பும் - (நட்பளவுபாராமல் அதனில்)வரும்பிரயோசனத்தளவுபார்க்கும் நட்பினரும், பெறுவது கொள்வாரும் - (கொடுப்பானைக்கொள்ளாமல்)விலைபைக்கொள்ளும்வேசையரும், கள்வரும் - (பிறர்கேடுநோக்காது அவரைசோர்புபார்க்கும்) கள்வரும், ஏர்-(தம்முன் ஒப்பர்)—எ-று. (கருத்து.) நட்பின்பயனை யெண்ணுவாரும் வேசையரும் கள்ளரும் தம்மிலொப்பார் - என்பதாம். * நட்பு - ஆகுபெயர். பொருள்களைக்குறித்து வஞ்சித்து நடத்தலால் அவ்விருவரோடும் ஒப்பாரென்பதாயிற்று. இவையிரண்டுபாட்டாலும தமக்குப் பிரயோசனம் பார்ப்பவரது நட்பினது தீமைசொல்லப்பட்டது.] (ஊ)

அமரகத் தாற்றுங்கு கல்லாமா வன்னார்
தமரிற் றனிமை தலை.

இ-ள். (முன்னெல்லாந்தாங்குவது போலிருந்து) அமரகத்து- போர்வந்தவிடத்து, ஆற்றாங்கும் - போர்க்களத்திலே தாளிவிட்டுப்போகின்ற, கல்லா - கல்வியில்லாத, மாவன்னர் - குதிரைபோல்பவரது, தமரின் - தமராந்தன்மையினும், தனிமை -தனிமையாதலே, தலை-சிறப்புடைத்து—ன-று. (கருத்து.) போர்க்களத்தில் விட்டோடிப்போவோர் நட்பிலுந்தனிமையாக விருத்தலல்லது-என்பதாம். * கல்லாண்மை - கற்றையும், சாரியைபதினெட்டும், போர்செய்திறமும், அறியாமை, துன்பம் வாராத முன்னெல்லாம் துணையாவார்போன்று வந்தவிடத்துவிட்டு நீங்குவாரென்பது உவமையாய்ப்பெற்றும், அவர்தமராலுல் வரும் அழிவுதனியாலுல் வாராமையால் - தனிமைதலையென்றார், எனவே அதுவும் தீதாதலறிக. (எ)

செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை
யெய்தவி னெய்தாமை நன்று.

இ-ள். செய்து - செய்துவைத்தாலும், ஏமஞ்சாரா காப்பாகாத, சிறியவர்- கீழ்மக்களது, புன்கேண்மை- தீநட்பு, எய்தலின்-(ஒருவனுக்கு)

உண்டாதலின், எய்தாமை - இல்லாதிருத்தல்; நன்று-நல்லது—என்று (கருத்து.) சிறியவர்களுடைய நீங்கட்பானது ஒருவனுக்கு உண்டாதலினும் இல்லாதிருக்கை நல்லது- என்பதாம். * சிறப்பும்மை வருவிக்கப்பட்டது. காலாகாமை - தொலைவிலிடத்து விட்டு- நீங்கல்; எய்தாமைகள் என்பதற்கு முன் உரைத்தபடி உரைக்க, [இவை இரண்டுபோட்டாலும் தொலைவிலே துணையாகாதவர் நட்பினது நீமை சொல்லப்பட்டது.] (ஙு)

பேதை பெருங்கெழீஇ நட்பி னறிவுடையர்
சோதின்மை கோடி யுறும்.

இ-ள். பேதை - அறிவில்லாதவனது, பெருங்கெழீஇ நட்பின்-மிக்கு நெருங்கிய நட்பைப்பார்க்கிலும், அறிவுடையார் - அறிவுடையரது, சோதின்மை-பகைமை, கோடியுறும் - கோடிப்பங்கு நல்லது—என்று. (கருத்து.) அறிவில்லார் நட்பைப்பார்க்கிலும் அறிவுடையார் பகை நல்லது எனபதாம். * அறிவுடையுவனது பகைமை - ஒருதீங்கு செய்யாமையாலும், பேதையானது நட்பு - பலதீங்கும் செய்தாலும், கோடியுறுமென்றார். (சு)

நகைவகைய ராகிய நட்பிற் பகைவர்நற்
பத்தடுத்த கோடி யுறும்.

இ-ள். நகைவகையாராகிய - (தம்மிற்றீதல்வகையராதற் கல்லாமல்) நகுதல்வகையராதற்கு ஏதுவாகிய,-நட்பின்-நட்பால், (வருமவைகளின்—பகைவரால் - பகைவரால், (வருபவை) பத்தடுத்தகோடி - பத்துக் கோடிமடங்கு, உறும் - நல்லனையாம்—என்று. (கருத்து.) நகைக்கேதுவாகிய நட்பைவிட பகைக்கேதுவாகிய நட்புநல்லவையாம்-என்பதாம். * அந்நட்பாவது-விடரும், தூர்த்தரும், கழைக்கூத்தரும், போன்றுபலவகையால் நகுவித்ததாம் பயன்கொண்டொழிவாரோடு உண்டாகியது பத்தடுத்தகோடி பத்தாகத் தொகுத்த கோடி அந்நட்பில் வருமின்பங்களில் அப்பகைவரால் வரும் துன்பங்கள் மிகநல்லதென்பதாம். (எ)

ஒல்லுங் கருமம் முடற்றுபவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல்.

இ-ள். ஒல்லுங்கருமம் - (தம்மாலே) முடியுந்தொழிலை, உடற்றுபவர்-முடியாதாகச் செய்பவரோடு கொண்ட, கேண்மை- நட்பை; அதுகண்டால்) சொல்லாடார் - (அதை அவரறியச்) சொல்லாமல், சோரவிடல்-தளரவிடக்கடவர்—என்று. கருத்து.) தம்மாலே முடியுந்தொழிலை முடியாதாகச்செய்பவருடன் கொண்டநட்பை விடக்கடவர் - என்பதாம். * சோரவிடல் - விடுகின்றவிதம் தோன்றுமல் ஒருகாலைக்கொருகால் ஓய்விடுதல், அறியச்சொல்லினாலும், விடுக்கின்றவிதம் தெரிந்தாலும், அப்போது பரிகரித்துப்பின்னும் நட்பாயிருக்க) கினைப்பாராகலால் சொல்


லாடாவென்றும் - சோரவிடலென்றும், சொல்லினர். [இவை மூன்றுபட்டாலும் முறையேபேதையர் - நகுப்பவர்-இயல்வது செய்யாதவர், இவர் நட்புத்தீமைகள் சொல்லப்பட்டன.] (அ)

கனவிலு மின்னாது மன்னே வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு.

இ-ள். வினைவேறு - தொழில்வேறு, சொல்வேறு - சொல்வேறுபட்டார் - பட்டவரது, தொடர்பு- நட்பு, கனவிலும்-(கனவிலேமாத்திரமேயல்லாமல்) கனவிலும், இன்னாது - துன்பஞ்செயவதாகும்—என்று. (கருத்து.) தொழில்வேறு, சொல்வேறு, பட்டவர்சிநேகமானது கனவிலுந் துன்பந்தரும்- என்பதாம். * தொழிலுஞ் சொல்லும் ஒவ்வாமல்வேறுவேறுபிருத்தல் - தொழிலிலே பகைவராயும், சொல்லிலே நட்பினராயும், இருக்கை. நிகழ்ச்சியிலே உண்டாயிருக்கையாலே-கனவிலுமின்னாதென்றார். மன் - ஓ - அசை நிலை. (ஆ)

எனைத்தும் குறுகுத லோம்பன் மனைச்செழீஇ
மன்றிற்பழிப்பார் தொடர்பு.

இ-ள். மனை - வீட்டிலே (தனித்திருந்தபோது—செழீஇ- நட்பாடி மன்றில் - சபையிலே (பலருடனிருந்தபோது)—பழிப்பார்-பழிசொல்லுவோரது, தொடர்பு-நட்பு, எனைத்தும் - எவ்வளவுசிறிதாயினும், குறுகுதல் - தம்மைச்சேர்தலை, ஓம்பல் - பரிகரிக்கக்கடவர்—என்று. (கருத்து.) வீட்டிலே தனித்திருக்கையிற் சினேகித்துச் சபையிற்பழிப்பவர் நட்புக்கொள்ளாதிருக்கக்கடவர் - என்பதாம். * அவ்விருசெயலும் தீதாகலின் அவர்ஒருபோதுந்தம்மைச் சேராதவிதம் குறிக்கொண்டு காக்கவேண்டுமென்பதற்கு அவர்நட்பின்மேல்வைத்துச்சொல்லினர். [இவை இரண்டுபாட்டாலும் வஞ்சர்நட்பின் றீமை சொல்லப்பட்டது.] (இ)



அங-ஆம்-அதி- கூடாநட்பு.



இனிமற்றைக் கூடாநட்புச்சொல்லுகின்றார்.

அஃதாவது, பகைமையால் உள்ளே கூடாதிருந்தே சமயம்கிடைக்குமளவும் புறத்திலே கூடிநடப்பவர் நட்பு.

சிரிடங்காணி னெறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு.

இ-ள். நேரா-கூடாதிருந்தே, நிரந்தவர் - (வாய்க்குமிடம்காணுமளவும்) புறத்திற் கூடிநடப்பவரது, நட்பு - சினேகம், சிரிடம் = வாய்க்கு

ந்தை, காணின்-கண்டால், எறிதற்குத்(அற)வெறிதற்குத்(துணையாகிய) பட்டடை-பட்டடையாகும்-எ-து(கருத்து)வாயக்குமிடங்கூடாதிருந்த வர்நட்பானது அந்த இடத்தைக்கண்டாலெறிதற்குப்பட்டடையாம்-என்பதாம், எறியுங்காலம்வாராமுன்னெல்லாந்தான்குவதுபோலிருந்துவந்தவிடத்து அறவெறிவிப்பதாகியபட்டைக்கும் அப்படிப்பட்டதாகியநட்பிற்கும் தொழிலொப்புமையிருத்தலால் அதுபற்றி அந்த நட்பைப்பட்டடையாக உபசரித்தார். (க)

இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்.

இ-ள்- இனம்போன்று-(தமக்கு)உற்றவர்போன்று, இனமல்லார்-உறாதவரோடுண்டாகிய, கேண்மை-நட்பானது, (இடம்பெற்றால்)மகளிர்-பெண்பாலார், மனம்போல்-நெஞ்சம்போல, வேறுபடும்-வேறுபடும்-எ-று- (கருத்து) உறவினர்போன்று உற்றினராகாதவர் நட்பானதுபெண்களிதயம்போல வேறுபடும்-என்பதாம். நட்புவேறுபடுதலாவது-இடம்பெற்றால்பழையபகையேயாகுதல்.(இவை இரண்டுபாட்டாலும் கூடாநட்பினது குற்றம்சொல்லப்பட்டது) (உ)

பலநல்ல கற்றக் கடைத்தும் மனநல்ல
ராகுதன்மாணார்க்கரிது.

இ-ள்- நல்ல-நல்லவையாகிய, பல-பலநூல்களை, கற்றக்கடைத்தும் கற்றவிடத்தும், (அதனால்)மனநல்லராகுதல்-மனந்திருந்தி நட்பினராகுதல், மாணார்க்கு-பகைவர்க்கு, அரிது-இல்லை-எ-று- (கருத்து)பலநூல்களைக்கற்றவிடத்து மனநலத்தராகுதல் பகைவர்க்கில்லை-என்பதாம். நல்லநூல்-மனக்குற்றங்கெடுப்பன, நல்லராகுதல்சலம் விடுதல், உட்சலமுடையனைக்கல்வியுடைமைபற்றிஉட்பென்றுகொள்ளலாகாதென்பதாம்.

முகத்தி னினிய நகாஅ வகத்தின்னா
வஞ்சனை யஞ்சப் படும்.

இ-ள் (கண்டபோது) முகத்தின்-முகத்தால், இனிய-இனிமையுள்ளனவாக, நகாஅ-சிரித்து, அகத்து-மனத்தால், இன்னா-(எப்பொழுதும்) இனியராகாத, வஞ்சனை-வஞ்சகனை, அஞ்சப்படும்-அஞ்சல்வேண்டும்-எ-று. (கருத்து)முகமலர்ந்து வணக்கஞ்செய்து அகமலராதவஞ்சகருக்குப்பயப்படவேண்டும்-என்பதாம். ஈதைபலவகைபற்றி இனியவென்றும், மனத்திலேசலம்தோற்றநிற்கவும் அதற்குவிரோதமாகிய நகையைப்புறத்திலேகாட்டலால்வஞ்சனென்றும் அச்சலம்குறிப்பற்றிநற்குணசாதனமாகியமுகத்தாலும்தோன்றுமையால்-அஞ்சப்படுமென்றும், சொல்லினர். (இதுவுமிரண்டுபாட்டாலும் குற்றகந்திற்கு எதுவாகிய அவர்கொடுமை சொல்லப்பட்டது.) (ஊ)

மனத்தி னமையா தவனையெனைத்தொன் றும்
சொல்லிஞற்றேறறற்பாற் றன்று.

இ-ள். மனத்தின்-மனத்தால், அமையாதவனை-(தம்மோடு)பொருந்தாதவனை, எனைதன்றொன்றும் - யாதொருகருமத்திலும் சொல்லினால். சொல்லினால், தெறறற்பாற்று-தெளிதன்முறைமையது, அன்று-அல்ல (என்று-நிதிநூல்) சொல்லும்-என்-று.(கருத்து) மனமொவ்வாதவனையாதொருசொல்லாலுந்-தெளிதல்கூடாது-என்பதாம்.பகைமைமறைத்தற்பொருட்டுச்சொல்லுகின்றவஞ்சனைசெசொல்லுங்கல்லசொல்லெனநினைத்துஅவரைக்கருமங்களிலேதெளிதல்நீதிநூலின்முறைமை அன்றென்பதாம்.

நட்டார்போ னல்லவை சொல்லினு மொட்டார்சொ
லொல்லை யுணரப் படும்.

இ-ள். நட்டார்போல்-நட்பினர்போல், நல்லவை-நன்மையைத்தருஞ்சொற்களை, சொல்லினும்-சொன்னாலும்;ஒட்டார்சொல்-பகைவர்சொற்கள், (அதுதாராமை)ஒல்லை-வினாவிலே, (சொல்லியபொழுதேயென்றபடி) உணரப்படும்-அறிபப்படும்-என்-று.(கருத்து) நட்பாளர்போல நல்லசொற்களைச்சொன்னாலும் பகைவர்சொற்கள் நலந்தாராமை யறியப்படும்-என்பதாம்,ஒசொல்லினனவே அவர் அவைசொல்லாமையேபெற்றும்.பகைவராதலால்-தீமைதருதற்கு ஐயமில்லையென்பதற்கு ஒல்லையுணரப்படுமென்றார். (சு)

சொல்வணக்க மொன்னார்கட் கொள்ற்க வில்வணக்கந்
தீங்கு குறித்தமையான்,

இ-ள். வில்வணக்கம்-வில்லின தவணக்கம், தீங்கு-(ஏற்றவர்க்குத்) தீமைசெய்தலை, குறித்தமையான்-குறித்ததனால், ஒன்னார்கண் - பகைவரிடத்தே(பிறக்கும்) சொல்வணக்கம் - சொலலின தவணக்கத்தையும், கொள்ளற்க(நமக்குநன்மைசெய்தலைக்குறித்ததென்று) நினையாதிருக்கக்கடவர்-என-று- (கருத்து) வில்வணக்கம் தீங்கைத்தருதலால் பகைவரிடத்துச்சொல்வணக்கங்கொள்ளாதிருக்கக்கடவர்-என்பதாம்,*தம்வணக்கம்அன்றென்பதுதோன்றசொல்வணக்கமென்றும்,வில்வணக்கம்வேறுயினும்-வணக்கந்தலொப்புலம்பற்றி அதன்குறிபபையே எதுவாக்கியும் சொல்லினர்,வில்லினன்குறிப்பு அவனினுமிய வில்வணக்கத்தின்மேல் நிற்றலால் பகைவரதுகுறிப்பும் அவரினுமிய சொல்வணக்கதின்மேலதாயிற்று.இதுவும் தீங்குகுறித்தவணக்கமென்றேறகொண்டு அஞ்சிக்காக்கவேண்டுமென்பதாம். இவைமூன்றுபாட்டாலும்அவனைச்சொல்லாலெதிரிபலாகாதென்பதுசொல்லப்பட்டது] (எ)

தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னா
ரழுத கண்ணீரு மனைத்து.

இ-ள், (பகைவர் குறிப்பை அறியவல்லார்க்கு) ஒன்னார் - பகைவர் தொழுதகையுள்ளுர்-கும்பிட்டகைக்குள்ளும்,படை-ஆயுதமானது,ஒடுங்கும்-மறைந்திருக்கும்,அழுதகண்ணீரும்.(அவர்) அழுதகண்ணீரும அனைத்து - அப்படியே,அதுமறைந்திருத்தற்கு இடமாம்-என-று,(கருத்து) பகைவர்கும்பிட்டகையோடு மாயுதமறைந்திருக்கும்-அப்பகைவர் அழுதகண்ணீருமப்படியே-என்பதாம்,o தாம்நட்பென்பதனைத் தங்கையாலும்-கண்ணாலும்-கமடுவித்துப்பின்கொல்லுதற்கு எடுக்கவிருக்கின்ற ஆயுதம்ஆலோசித்தறியும்போது கும்புடுக்கின்றபொழுதே அவைகளுள்ளே தோன்றுமென்பதற்கு ஒடுக்குமென்றார். பகைவர்தமதுதளர்ச்சிகாட்டித்தொழுதாலும்,அழுதாலும் அவர்குறிப்பையே நோகாதுகொள்கவென்பதாம்.(இதனால அவசரச்செயலால் தெளியலாகாதென்பது சொல்லப்பட்டது. அ

மிகச்செய்து தம்மெள்ளு வாரை மகச்செய்து

நட்பிணுட்சாப்புல்லர் பாற்று.

இ-ள். (அரசநீதியாவது)மிகச்செய்து-[புறத்திலேநட்பை] மிகச்செய்து,தம்மெள்ளுவாரை-(உள்ளே) தம்மை இகழும்பகைவனை, நட்பிணுள்(தாமும்) அநட்பினிடத்தேநின்று,மகச்செய்து-புறத்திலே(அவர்)மகிழும்படிசெய்து, சாப்புல்லர்பாற்று - (உள்ளேஅது) சாம்படிகுப்பொருந்தன்மையுடைத்து-எ-று. [கருத்து. இராசநீதியானது புறத்துநட்பைமிகச்செய்து இகழ்பவனைநட்பில்மகிழும்படிசெய்து பொருந்தன்மையுடையது-என்பதாம்,o இன்னதனைபதும், அரசநீதியென்பதுவருவிக்கப்பட்டன- உள்ளொன்றுபுறமொன்றுதல் ஒருவருக்குந்தகாதாயினும்பகைவரிடத்தாவல்நகுமென்பதுநீதிநூலதுதுணிவென்பதற்கு அதன்மேல்வைத்துச்சொல்லினார். எள்ளுவாரைப்புல்லெனக்கூட்டுக. கூ.

பகைநட்பாங் காலம் வருங்கான் முகநட்

டகநட் பொரீஇ விடல்

இ-ள். பகை(தம்)பகைவர்,நட்பாங்காலம்-நட்பினராய்க் கடைக்குங்காலம்,வருங்கால்-வந்தால்,முகம்(தாமும்)முகத்தால்,நட்டு-(அவரோடு)நட்புச்செயது,அகம்-மனத்தால்,நட்பு-நட்பை, ஒரீஇ-நீக்கி,விடல்(பின்அவரும்)விடச்கடவர்-எ-று. (கருத்து) பகைநட்பாகுங்காலத்தில் முகநட்பாய்ச்சிநேகித்து அகநட்பு விடல்வேண்டும்-என்பதாம்.o அக்காலமாவது-தம்மாலும்பகையென்று வெளிப்பட நீக்கக்கூடாதவளவு,இதனுலே கூடுமளவெல்லாம் நீக்குகவென்பதுபெற்றும். (இவை இரண்டுபாட்டாலும் அநட்பிடத்துநடக்கும்விதம்சொல்லப்பட்டது.) ஐ

அச-ஆம், அதி-பேதைதமை,

அஃதாலது, யாதொன்றும் அறியாமை,

இனி அங்ஙட்பை எதிர்மறுத்துப்பகைமுகத்தாலே சொல்லத்தொ டங்கினார் அப்பகைதான் முழுவதும்விட்லாகாத குற்றமாகியகுரோதத் தாலும், காமத்தாலும், வருவதாம், அவைகளுள் குரோதத்தால்வரு வைஐந்ததிகாரத்தாலும், காமத்தால்வருபவை ஐந்ததிகாரத்தாலும்சொ ல்லுதற்கு அவ்விரண்டுக்கும்அடியாகியமயக்கத்தை இருவகைப்படுத்தி இரண்டதிகாரத்தாலேசொல்லத்தொடங்கிமுதலிலேபேதைமைசொல் லுகின்றார்.

பேதைமை யென்பதொன் றியாதெனி னேதங்கொண்
டீதியம் போக விடல்.

இ-ள். பேதைமையென்பது - அறியாமையென்றுசொல்லப்படுவ தது, ஒன்று(மற்றைக்குற்றங்களினெல்லாம்மிகுந்த)தொன்று; யாதெனி ன்(அது)யாதென்றுவினவினால், எதங்கொண்டு (தனக்குக்)கேடுதரும வைகளைகளைக்கொண்டு, ஈதியம்-ஆக்கந்தருமவைகளை, போகவிடல் கைவிடுதல்-எ-று. (கருத்து) அறியாமையென்பதியாதென்றால்குற்றங் களைக்கொண்டுநிலாபதனைவிடுதல்-என்பதாம்.oகேடு-வறுமைபழிபாவ ங்கள்-ஆக்கம்-செல்வம்-புகழறங்கள், பேதைமை-தானே தன்னிருமைப் பயனும்கெடுத்துக்கொள்ளுதலென்பதாம். ௧

பேதைமையு ளெல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கட் செயல்

இ-ள்.(ஒருவனுக்கு)பேதைமையுளெல்லாம்- பேதைமையெல்லா வற்றுள்ளும், பேதைமை-மிகுந்தபேதமையாவது, கையல்லதன்கண்- (தனக்கு)ஆகாதசெய்கையில், காதன்மை-ஆசையை, செயல் - செய்தல் எ-று. (கருத்து) அறிவில்லாமை- எல்லாவற்றுள்ளுமறிவில்லாமையாவ து ஆகாதசெய்கையைச்செய்தல்-என்பதாம், oதிருமைக்கும்ஆகாவென் றுநூலோர்கடிந்தசெயல்களைவிரும்பிச்செயதலென்பதாம். (இவை இர ண்டுபொட்டாலும்பேதைமையதுஇலக்கணம்சொல்லப்பட்டது) ௨

நாணுமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணுமை பேதை தொழில்

இ-ள்- நாணுமை(நாணவேண்டுமவைகளுக்கு) - நாணுமையும், நா டாமை (நாடவேண்டுமவைகளை)நாடாமையும், நாரின்மை-(யாவரிட த்தும்)முறைத்தசொற்செயலுடைமையும், யாதொன்றுப்- (பேணவேண் டுமவைகளுள்)யாதொன்றையும், பேணுமை- பேணுமையும், பேதை

தொழில்-மூட்டனதுதொழில்களாம்-எ.று. (கருத்து) நாணுமையும் நாடாமையும் ஆசையின்மையும் யாதொன்றையும் பேணுமையும் அறிவீனனுடைய தொழில்களாம்-என்பதாம், * நாணவேண்டுமவை- பழிபாவங்கள். நாடவேண்டுமவை, கருமங்களிலே விதிவிலக்குகள், முறைதல் கண்ணறுதல், பேணவேண்டுமவை, குடிப்பிறப்புக்கல்வியொழுக்கமுதலாயின, இவைபேணாதக்கு எந்நாளும் இயல்பாய் வருதலாலே தொழிலென்றார். (௯)

ஓதி யுணர்ந்தும் பிறர்க்குணாத்தும் தானடங்காப்

பேதையிற் பேதையாரில்.

இ-ள், ஓதி- (மனத்தொழிமெய்களை அடக்குதற்குவதுவாகிய நூல்களை) ஓதியும், உணர்ந்தும் - (அவ்வடக்கத்தால்வரும்பயனை அறிந்தும், பிறர்க்கு-பிறருக்கு, உணர்த்தும்- (அதனை அறியும்படி) சொல்லியும், தான்-தான், அடங்கா-(அவை) அடங்கிநடவாத, பேதையின்-மூடனின்போல, பேதையார்-மூடர், இல்- (உலகில்) இல்லை-எ-று. (கருத்து) கற்றறிந்தும் பிறர்க்குக் கற்பித்துந்தானடங்காத அறிவீனரின்போலறிவீனரில்லை-என்பதாம், * இப்பேதைமை- தனக்குமருந்தாகிய இவைகளாலே தீராமையாலும், வேற்றுமருந்தில்லாமையாலும், பேதையிற் பேதையாரில்லென்றார் (இவை இரண்டுபோட்டாலும் பேதையதுதொழில்போதுவகையால் சொல்லப்பட்டது) இனிச்சிறப்புவகையாற்கூறுவர்)

ஒருமைச் செயலாற்றும் பேதையெழுமையுந்

தான்புக் கழுந்து மளறு:

இ-ள். பேதை-மூடனெனவன், எழுமையும்-வரும்பிறவிகளிலெல்லாம், தான்,தான்,புக்கு-புகுந்து, அழுந்தும் - அழுந்துதற்கிடமாகிய அளறு-நரகத்தை,ஒருமை - இவ்வொரு பிறப்புள்ளே ,செயலாற்றும் செய்துகொள்ள வல்லவனெவான்-எ-று.. (கருத்து) அறிவீனன்வரும்பிறவிகளிற்புகுந்து நரகத்தையேற்றுக் கொள்வான் - எனபதாம்,*எல்லாப்பிறப்பும் எழாய் அடங்குதல் அறியப்பட்டமையின் எழுமையுமென-முற்றும்மைகொடுத்தார்,இவ்விடததுப்பிறப்புகளிலும்கொடுவினைவசத்தால் அந்நரகத்துன்பமே அனுபவித்துவருதலால் - எழுமையுந்தான்புக்கழுந்துமளறென்றார், நெடுங்காலம்தான்நரகத்துன்பம் அனுபவித்தற்குஏதுவாம் கொடுவினைகளையே அறிந்துசிலகாலத்துள்ளேசெய்துகொள்ளுதல் பிறர்க்குஅரிதாதலின் ஆற்றுமென்றார் (இதனால் அவன்மறுமைச்செயல் சொல்லப்பட்டது.) (௰)

பொய்ப்படு மென்றே புனைபூணுங் கையறியாப்

பேதை வினைமேற் கொளின்.

இ-ள். கையறியா - செய்யுமுறைமையறியாத, பேதை-மூடனெனவன், வினை - ஒருதொழிலை, மேற்கொளின்-மேற்கொள்ளுவானாயின்

அ-ஆ்-ஐ-பேதைமை.

பொய்ப்பதும்-(அதுவும்) புனைபதும்-ஒன்றோ-(அது) ஒன்றுதானே,புனைபூணும் (தானும்) தனைபூணும்-என-று. (கருத்து) மூடனொருவனொழிலை மேற்கொள்வானையினத்தொழில் குற்றப்படுமன்றியுமவன்தனைபூணுவான்-என்பதாம்,oபுனைபூண்தல்-பின்னுகாதபடியுள்ளழிதல், அதனையும்தெத்துந் தானுங் கெடுமென்பதாம்,(இதனால் அவன்செல்வம்படைக்குமாறு சொல்லப்பட்டது.) (கூ)

ஏதிலாராரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வ முற்றக் கடை.

இ-ள், பேதை-மூடனானவன்,பெருஞ்செல்வம்- பெரியசெல்வத்தை, உற்றக்கடை-(ஊழால்) அடைந்தவிடத்து,ஏதிலார்(தன்னோடுஞ்சம்பந்தமுமில்லாதவர், ஆர-நிறைய,தமர்- (எல்லாச்சம்பந்தமுமுடைய) தம்மவர்,பசிப்பர்-பசித்திருப்பர்-என-று.(கருத்து)அறிவீனன்-செல்வமடைந்தவிடத்து அயலாரநுபவிக்கச் சுற்றநதார்பசித்திருப்பர்- என்பதாம்.oஎல்லாநன்மைகளுஞ்செய்துகொள்ளற்குச்சாதனமென்பதுதோன்ற-பெருஞ்செல்வமென்றும்,அதனைப்படைக்கும் வலிமையில்லாமைதோன்ற, உற்றக்கடையென்றும், எல்லாம்பெறுதல்தோன்ற, ஆரவென்றும், உணவும்பெறுமைதோன்றப்பசிப்பவென்றுஞ்சொல்லினர்.

மையலொருவன் களித்தற்றுற் பேதைதன்
கையொன் றுடைமை பெறின்.

இ-ள். பேதை-மூடனானவன்,தன்கை-தன்கையில், ஒன்று-ஒரு பொருளை, உடைமைபெறின்-உடைமையாகப் பெற்றாயின்,மையலொருவன்-பித்தினையுடையவொருவன்-களித்தற்று,(அம்மயக்கத்தின்மேலே) மதுவுண்டு-மயங்கியதுபோலும்-என-று. (கருத்து) அறிவில்லான்பொருளைப்பெற்றானெனில் வெறியினையுடையவொருவன் மதுவுண்டு மயிற்ந்தாற்போலும்-என்பதாம், ஐ-ஆல்-அசை,பெறினெனவே - அவன்ஊழாலல்லது தன்னாலேபெறுமைபெற்றும்,பேதைமையும்,செல்வக்களிப்பும்,ஒருசேர உடைமையால்அவன்செய்காரியங்கள்- மையலும்மதுக்களிப்பும், ஒருசேர உடையவன்செய்காரியங்கள்போலேதலை தடுமாறுமென்பதாம், (இவைஇரண்டுபாட்டாலும் அவன்செல்வ மடைந்தவிடத்துப்பயன்கொள்ளுமுறைமை சொல்லப்பட்டது.) (அ)

பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கட்
தீழை தருவ தொன் றில்.

இ-ள் பிரிவின்கண்-(பிரிந்) பிரிவுவந்தவிடத்து,(அப்பிரிவு) தருவது(இருவருக்கும்) தருவதாகிய, தீழையொன்று-துன்பமொன்று, இல்லையில்லை, (ஆதலால்) பேதையார் - மூடரது,கேண்மை (நம்முட்கொண்ட) நட்பு, பெரிதினிது-மிகவுமினிது -என-று. (கருத்து) பிரிவினிடத்து

த்துன்பமில்லை அறிவில்லார் நட்புமிகவுமினிது. என்பதாம்.இனஞ்சேரும் தெய்ந்துவருதலால் துன்பந்தராதாயிற்று.புகழ்வார்போல் முபரித்தபடி.[இதனால் அவனதுநட்பின்குற்றம்சொல்லப்பட்டது) (கூ)

கழா அக்கால் பள்ளியுள் வைத்தற்றற் றான்றோர்
குழா அதனுப்பேதை புகல்.

இ-ள், சான்றோர் - பெரியோரது,குழா அத்து-சபையினிடத்து, பேதை- மூடனானவன்,புகல்- புகுதல்;கழா அக்கால் - கழுவாதகாலை, (அசுத்தமிருந்தகாலையென்றபடி) பள்ளியுள் (இன்பந்தருந்) சயனத்தி ,ன்மேல், வைத்தற்று-வைத்தல்போலுப்.-எ-று.(கருத்து) பெரியோர்ச பையி லறிவில்லான்-புகுதல் கழுவாதகாலைசயனத்தில்வைத்தல்போலு ம்-என்பதாம், ஆல்-அசை, அதனால் அச்சயனமும இழிவுசெய்யப்படு ம்விதம்போல் இவனால்இச்சபையும் இழிவுசெய்யப்படு - மென்பதாம், (இதனால்-அவன்சபையிடத்துஇருக்கும்விதம்-சொல்லப்பட்டது-) (ஈ)



அறு-ஆம், அதி-புல்லறிவாண்மை.

இனிமற்றைப்புல்லறிவாண்மை சொல்லுகின்றார் அதுபுல்லியஅறி வைஆராய்தற் றன்மையெனவிரியும்.

அஃதாவது,தான்-சிற்றறிவினனாயிருந்தேதன்னைப்பேரறிவுடைய ன்றுயர்ந்தோராலே சொல்லப்படும் உறுதிச்சொல்லைக கொள்ளா மை.

அறிவின்மை யின்மையு ளின்மை பிறிதின்மை
யின்மையா வையா துலகு.

இ-ள்.இன்மையுள்-(ஒருவனுக்கு)இல்லாமைபலவுள்ளும்,இன்மை மிகுந்தஇல்லாமையாவது,அறிவின்மை-அறிவில்லாமை, பிறிதின்மை-மற்றைப்பொருளில்லாமையாவெனின்,(அதனை) உலகு-உலகத்தார்,இ ன்மையா-(அப்படிப்பட்ட)இல்லாமையாக,வையாது-கொள்ளார்-எ-று. (கருத்து) இல்லாமையுள்ளே யில்லாமை யாவது அறிவில்லாமையாம் பொருளில்லாமையையுலகத்தாரில்லாமையாகவெண்ணார்-என்பதாம்,o புல்லறிவாளர் செல்வமடைந்தவிடத்தும் இப்மைமறுமைப் பயனடை யாமையால்-அதனை - இன்மையுளின்மையென்றும், நல்லறிவாளர்வறு மையடைந்தவிடத்தும் அப்பயனை யிழவாமையால்அதனை-இன்மையா வையாதென்றும்,சொல்லினர்.(இதனாற்புல்லறிவின்குற்றம்சொல்லப்ப ட்டது.)

அறிவிலா னெஞ்சுவந் தீதல் பிறிதியாது
மில்லை பெறுவான் றவம்.

இ-ள், அறிவிலான்-புல்லறிவுடையவன், நெஞ்சுவந்து- மனமகிழ்ந்து, ஈதல்-(ஒருவனுக்குஒன்று) கொடுத்தல்' கூடியதாயின் அதற்குக் காரணம்)பெறுவான்-பெறுகின்றவனது, தவம்-நல்வினையே, பிறிதியாதும்-வேறொன்றும், இல்லை-இல்லை -எ-று' (கருத்து) அறிவில்லானொருவனுக்கொன்றைக்கொடுத்தல் பெற்றுக்கொள்பவனது தவமாம்-என்பதாம், புல்லறிவாளரும்-ஒரோவிடத்தே மனமகிழ்ந்து கொடுத்தலால் அவருக்கு நல்வினைசெய்வாரென்பார்க்கு பெறுவான் வீழ்பொருள் அடைந்தவன் போல்வதல்லது இம்மைநோக்கியாவது, மறுமைநோக்கியாவது சகிற்றல்லரெனச் சொல்லியபடி(இதனால்புல்லறிவாளர் தம்மிடத்தநல்லவைசெய்தலறியாமைசொல்லப்பட்டது,) உ

அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்குஞ் செய்த லரிது.

இ-ள். அறிவிலார்-புல்லறிவுடையவர், தாம்-தாமே, தம்மை-தங்களை பீழிக்கும்-வருத்தும், பீழை-வருத்தமானது, செறுவார்க்கும்-வருத்துதற்கு உரியபகைவர்க்கும், செய்தல்-செய்தல், அரிது-அரிதாம்-எ-று,(கருதது) அறிவில்லார்தங்களை வருத்தும்வருத்தமானது வருத்தப்படுத்தும் பகைவர்க்குஞ்செய்தலரிது-என்பதாம், பகைவர்தாம் அறிந்தஒருதீங்கைக்காலம்பார்த்திருந்து செய்வதல்லது வறுமைபழிபாவ முதலான பலவும்எக்காலமும்செய்யாராட்டாமையால்- அவர்க்கும் செய்தலரிதென்றார். இதனால் அவர்தம்மிடத்துத் தீயவைசெய்தலே அறிவொன்பது சொல்லப்பட்டது.) ஊ

வெண்மை யெனப்படுவ தியாதெனி லெண்ணமை
யுடையம்யா மென்னுஞ் செருக்கு.

இ-ள் வெண்மையெனப்படுவது- புல்லறிவுடைமையெனப்படுவது,யாதெனில்-யாதென்றால்,(அது) ஒண்மையுடையம்யாம், நல்லறிவுடையோம்யாம்,என்னும-என்று, (தம்மைத்தாமே)நன்குமதிக்கும்-செருக்கு-மயக்கம-எ-று.(கருத்து) அறிவில்லாமையென்று சொல்லப்படுவதியாதென்றால் நல்லறிவுடையோமென்னுமயக்கமாம்-என்பதாம்,வெண்மை-இளமை,அது அறிவுமுகிராமை- உலகத்தார்இகழ்தல்அறிந்திருந்தும்அப்படிமதித்தலால்மயக்கமென்றார். எ

கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற
வல்லதூஉ மையந்தரும்.

இ-ள். (புல்லறிவாளர்) கல்லாத (தாம) கல்லாதநூல்களையும், மேற்கொண்டு- (அற்றவராக) பேரிட்டுக்கொண்டு, ஒழுகல் - நடக்குதல்

கசடற-குற்றமற,வல்லதூஉம்-கற்றதொருநூல், (உண்டாயின்) அதனிடத்தும்,ஐயம்-ஐயத்தை,தரும்- (பிறருக்கு) விளைக்கும்-எ-று. (கருத்து) கல்லாதநூற்களைக்கற்றேமென்றுசொல்லுதல் கற்றநூற்களையுஞ் சந்தேகப்படுத்தும்-என்பதாம்,* உண்டாயினென்பதுவருவிக்கப்பட்டது ஐயம்-இவர் அந்தநூலிலேவல்லவரென்பதும்-இப்படித்தானிருக்குமோவென்பது. (ரு)

அற்ற மறைத்தலோ புல்லறிவு தம்வயிற்
குற்ற மறையா வழி.

இ-ள். (புல்லறிவாள்ர்)தம்வயின்-தம்மிடத்துஉண்டாகும்,குற்றம்-குற்றங்களை, மறையாவழி- (அறிந்து) கடியாராயின் அற்றம்- மறைக்குந்தக்கஅய்வத்தை,மறைத்தலோ- (ஆடைபாய்)மறைத்தலாகாதம்மைமினைத்தலும,புல்லறிவு-அற்பவறிவாகும்-எ-று. (கருத்து) அறிவில்லார்குற்றங்களைக்-கடியாராயின் அதுவேயறிவில்லாமை-என்பதாம்.o குற்றமறைத்தலாவது- அவைகளை-அல்லாமற்-போகச்செய்தல். மறைக்கப்படுமவை-பலவுள்ளும்-உயர்ந்தவைகளையெல்லாம்-மறையாது-தாழ்ந்தவொன்றையே-மறைத்து- அவ்வளவிலே-தம்மையும் உலகமடையுள்ளவராகமதிக்காலும்புல்லறிவென்பதாம். (இவை மூன்றுபாட்டாலும் அவர்தம்மைமதியாததற்குறறம்சொல்லப்பட்டது.] (சு)

அருமறை சோரு மறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு.

இ-ன்.அருமறை-பெறுதற்கரியஉபதேசப்பொருளை, சோரும்-(பெற்றாலும்)உட்கொள்ளாதுபோக்கும்,அறிவிலான்-புல்லறிவாளன்,(அவ்வுறுதிஅறியாமையால்)தானே-தானே,தனக்கு-தனக்கு, பெருமிறை-மிகுந்தவருத்தத்தை,செய்யும்-செய்வான்-எ-று.(கருத்து)இகசியப்பொருளைப்போக்குமறிவில்லான் தனக்குத்தானேவருத்ததைச்செய்வான்-என்பதாம்*மிகுந்தவருத்தம்-பொறுத்தற்கரியதுன்பம். (எ)

எகவுஞ் செய்கலான் றுன்றேறு னவ்வயிர்
போஒ மளவுமோர் நோய்.

இ-ள். (புல்லறிவாளன்) எகவும்-(தனக்கு)உறுதியானவைகளை(அறிவுடையார்) சொல்லவும்,செய்கலான்-செய்யான், (அதுவல்லாமல்)தான்-தானுகவும்,தேறான்-(இவைசெய்ப்வையென்று) அறியான், அவ்வயிர்-அந்தவயிர்,போமளவும்(உடம்பைவிட்டுப்) போமளவும், ஓர்நோய்- (பூமிக்குப்பொறுத்தற்கரிய)ஒருநோயாம்-எ-று. (கருத்து) அறிவில்வான்பிறரேவவுந்தனக்குறுதிகளைச்செய்யான்தானுகவுந்தெளியான்என்பதாம் உயிர்தான் அறியுந்தன்மையதாயிருந்தும்நின்றதேக ;லசத்தால்மயங்குந்தன்மையதாய்வேறுபடுதலால் அவ்வயிரென்றும்அதனிடத்துப்பொழுதேஅதற்குஇரண்டி னுள்ஒன்றுகூடுதலால்-போமளவுமென்றும், குலம

லமுதலானஎல்லாஉயிர்க்குஞ்சமமாகின்றபூமிக்குஇப்பாவவுடம்புபெருஞ்சுமை பாய்த்துன்டாஞ்செய்தலால்ஓர்நோயென்னறும்சொல்லினார். (அ)

காணுகற் காட்டுவான் முன்காணன் காணுதான்
கண்டானுந் தான்கண்ட வாறு.

இ-ள். (தன்னைஎல்லாமறிந்தவனாகமதித்தலால்)-காணுதான்- (பிற சால்லொன்றை) அறியுந்தன்மையில்லாதவனை, காட்டுவான்-அறிவிக்கப்புகு வோன், தான்காணான்(அவனாலே பழிக்கப்பட்டுத) தான்அறி யாதவனாய்முடியும், இனிஅவ்வறியுந்தன்மையில்லாதவன், (தான்கொ ண்டதுவிடாமையால்) தான்கண்டவாறு-தான் அறிந்தவிதத்தால், கண் டானும்-(அதனை) அறிந்தவனாய்முடியும்-என-று.(கருத்து) ஒன்றுமறியாத வனைக்காட்டுவான்தானறிவில்லாதவனாவான்என்பதாம். புல்லறிவா ளனுக்குநல்லறிவைவருவித்தல் ஒருவழியாலும் பொருந்துவதன்றென்ப தாம். (கூ)

உலகத்தாருண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும்.

இ-ள். உலகத்தார்-உயர்ந்தோர்பலராலும், உண்டென்பது- உண் டெனப்படுகிறபொருளை, இல்லென்பான்-(தன்புல்லறிவால்) இல்லையெ ன்றுசொல்லுவானவன், (மனிதனென்று மதிக்கப்படான்) - வையத்து- ழுமியிலே, அலகையா(காணப்படுகிற)ஓரு பேயென்று, எண்ணப்படும்- மதிக்கப்படுவான்-என-று(கருத்து)பெரியோருண்டென்பதை யில்லையெ ன்பவன்பேயென்றெண்ணப்படுவான்-என்பதாம். ஒருவனும்-மறுபிற ப்பும்இருவினைப்பயனும்முதலாகஅவர்உண்டென்றுப்படுமவை பலவாயி னும்சாதியொருமைபபற்றிஉண்டென்பதென்றும்-பேயும்இல்லையென் பவனும்தானேவேண்டியவைசொல்லலால்ஒத்தலும்.-வடிவால்ஒவ்வா மையும்உடைமையால்தன்னுட்டம்பமறைத்துமக்களுடம்பிலேதான் றுதல்வல்லவலகையென்றும்சொல்லினார் (இவைகாஞ்குபாட்டாலும்உ றுதிச்சொல்லிக்கொள்ளாமையின்அது குற்றம்சொல்லப்பட்டது.) (ஆ)

அசு-ஆம்-அதி-இகல்.

இனி-அவைகளால்வரும்குரோதகாமங்களுள் அரசர்க்குக்குரோத மும் அதிகமாயுள்ளதாகலால் அவனல்வருமவைகளைச்சொல்லநதொடங் கிமுதலிலேஇகல்சொல்லுகின்றார்.

அஃதாவது; இருவர்தம்முள்ளேபோர்செய்து வலிமைதொலைதற் குஏதுவாகியமாறுபாடாம்.

இகலென்ப வெல்லாவுயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்குநோய்.

இ-ள். எல்லாவுயிர்க்கும்-சகலவுயிர்களுக்கும், பகலென்னும்-(பிறவுயிரோடு) கூடாமையென்னும், பண்பின்மை-தீயகுணத்தை, பாரிக்கும் வளர்க்கும், நோய்-குற்றமாவது, திகல்-மாறுபாடாம், என்-என்று நூலோர்சொல்லுவர் -எ-று. (கருத்து) எல்லாவுயிர்க்கும் தீயகுணத்தைவளர்க்குங்குற்றமாவது மாறுபாடாம்-என்பதாம்.o மக்களையும்விலங்குகளோடு ஒப்பர்க்குவதென்பதுதோன்ற; எல்லாவுயிர்க்குமென்றும், கூடாநற்குணத்தைநீங்கின்றுவிளைத்தலால்-பகலென்னும் பண்பின்மையென்றும்சொல்லினார் (இதனால்மாறுபாட்டதுகுற்றம்சொல்லப்பட்டது.)

பகல்கருதிப் பற்ற செயினு மிகல்கருதி.
யின்னாசெய் யாமை தலை.

இ-ள். பகல்-(தம்மோடு) கூடாமையை, கருதி-நினைத்து, பற்ற-வெறுப்பவைகளை, செயினும்-ஒருவன்)செய்தாலுயினும், இகல்கருதி (அவனோடு) மாறுபடுதலைக்குறித்து, இன்னா-துன்பந்தருமவைகளை, செய்யாமை-(தாம் அவனுக்குச்) செய்யாமை, தலை-உயர்ந்தது-எ-று.(கருத்து) ஒருவன்வெறுப்பானவற்றைச்செய்தாலுயினுந்தான்துன்பந்தருமவைகளைச் செய்யாமைதலைமை-என்பதாம்.o துன்பந்தருமவைகளைச்செய்யில்பகைமை வளரத்தாம்தாழ்ந்துவருதலாலும்ஒழியில்அவ்வெறுப்பவைகள் ஓய்ந்துபோகத்தாம்ஓங்கிவருதலாலும், செய்யாமைதலையென்றார். (உ)

இகலென்னு மெவ்வநோய் நீக்கிற் றவவில்லாத்
தாவில் விளக்கந் தரும்.

இ-ள். (ஒருவன்)இகலென்னும்-மாறுபாடெனப்படுகின்ற, எவ்வம் துன்பத்தைச்செய்யும், நோய்-நோயை, நீக்கின்- (தன்மனத்தினின்றும்) நீக்குவானாயின், (அந்நீக்குதல்) தவவில்லா (எந்நாளும்) அழிவில்லாமைக்குஏதுவாகியதாவில்கெடாத, விளக்கம்-புகழை, தரும் -(அவனுக்குக்) கொடுக்கும்-எ-று.(கருத்து)ஒருவன்மாறுபாட்டைநீக்குவானாயின்அதுபுகழைத்தரும்-என்பதாம்.oயாவரும்ஈட்டப்பாதலால் எல்லாச்செல்வமும்பெற்றுக்கொடைமுதலானகாரணங்களால்புகழ்பெறுமென்பதாம். (ஊ)

இன்பத்து ளின்பம் பயக்குமிகலென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின்.

இ-ள். இகலென்னும-மாறுபாடெனப்படுகின்ற, துன்பத்துள்-துன்பங்கள்பலவினும், துன்ப-மிகுந்தது துன்பம்-கெடின்-(ஒருவனுக்கு)இல்லையாயின், (அவ்வில்லாமை) இன்பத்துள்-இன்பங்கள்பலவினும், இன்பம்-மிகுந்தவின்பத்தை-பயக்கும்,(அவனுக்குக்) கொடுக்கும்-எ-று.(கருத்து) ஒருவனுக்குமாறுபாடாகிய துன்பநீக்குமாயின் அது மிகுந்த இன்பத்

தைத்தரும்-என்பதாம். *துன்பத்துட்டின்பம்-மாறுபாடுடையோன்பல
ரோடும்போர்செய்துவெல்லுமைமதாலேதலால்யாவர்க்கு மெளியனுமிருப்ப
து-அதனைவினாவிலேதருதலால்-திகலென்னுமெவ்வமென்றார். இன்ப
த்துளின்பம்மாறுபாடில்லோன்யாவருமட்பாகலால்எல்லாப்பயனும்பெ
ற்றிருப்பது. (அ)

இகலெதிர் சாய்ந்தொழுக வல்லானை யாரே
மிகலூக்கும் தன்மை யவர்.

இ-ள். திகல்-மாறுபாடு (தம்மனத்துத்தோன்றியவிடத்து)எதிர்சா
ய்ந்தொழுகவல்லானை-(அதனைஎற்றுக்கொள்ளாமல்)சாய்ந்துநடக்கவல்
லவரை,மிகலூக்கும்-வெல்லநினைக்கும்,தன்மையவர்தன்மையையுடை
யவர்,யாரே-யாவர்-எ-று.(கருத்து)மாறுபாட்டைநீக்கும்வல்லவனைவெ
ல்லநினைப்பவர்யார்-என்பதாம்*மாறுபாட்டைநீக்கிநடத்தல்வேந்தருக்
குஎவ்விதத்தாலுமரிதாகலால்வல்லானைவென்றும் அவர்யாவர்க்கும்ம
பாகலால்அவனைவெல்லநினைப்பவர்யாவருமில்லையென்றுஞ்சொல்லினா
ர் (இவைதான்குபாட்டாலும்மாறுபடாதவர்க்குவருதன்மைசொல்லப்ப
ட்டது) (இ)

இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை
தவலுங் கெடலு மணித்து.

இ-ள்.இகலின்-(பிறரோடு)மாறுபடுதலிலே,மிகல்-மிகுதலை,இனிதெ
ன்பவன்-(எனக்கு)இனிதெனறுசெய்பவனது,வாழ்க்கை-உயிர்வாழ்க்
கை,தவலும்-பிழைபடுதலும,(மணித்து)சிறிதுபொழுதிலுண்டாம், கெ
டலும்-முழுதுங்கெடுதலும்,மணித்து-சிறிதுபொழுதிலுண்டாம,எ-று.
(கருத்து)மாறுபடுதலிலினிதென்பவன்வாழ்க்கையானதவழுதலுங்கெ
டுதலுமுண்டாம்-என்பதாம்*மிகுதல்-மேலுமேலுமெழும்பல்-இனிதெ
ன்பதுதான்வெல்லுதல்குறித்தல்-பிழைபடுதல்-வறுமையாலேதுன்பப்
படுதல்,முழுதுங்கெடுதல்-இறத்தல்பொருட்டேயும்உயிர்க்கேடுமப்பொ
ழுதே உண்டாகுமென்பதாம். (ஈ)

மிகன்மேவு மெய்ப்பொருள் காணரிகன்மேவு
மின்னா வறிவினவர்.

இ-ள். இகனமேவு-மாறுபாட்டோடுபொருந்துதலையுடைய, இன்
னா-துன்பஞ்செய்கின்ற,அறிவினர்-அறிவுடையவர்,மிகன்மேவும்-வெற
றிபொருந்துதலையுடைய,மெய்ப்பொருள்-நிலைநாற்பொருளை,காணர்-அ
றியமாட்டார்-எ-று(கருத்து)மாறுபாட்டாற்றுன்பஞ்செய்யுமறிவினையு
டையவர்நிலைநாற்பொருளைபறியார்-என்பதாம்,*இன்னாவறிவு தமக்கும்
பிறர்க்கும் நிலைக உண்டாகும் அறிவு = வெற்றிவழி நின்றாருள்

உண்டாவது காணப்படும்பிரயோசனத்தையுடையதாதலால்மெய்ந்நூலெனப்பட்டது, மாறுபாட்டினுலே அறிவுகலக்கு தலால் காணுகின்றுர். (இவைஇரண்டுபாட்டாலும்மாறுபட்டவர்க்குவரும் தீங்குசொல்லப்பட்டது.) (எ)

இகலிற் கெதிர்சாய்த லாக்க மதனை
மிகலூக்கி னூக்குமாங் கேடு.

இ-ள். இகலிற்கு- (தன்னுள்ளத்து)மாறுபாடுதோன்றிய விடத்து, எதிர்சாய்தல்-(அதற்கு) எதிரிடுதலையொழிதல், ஆக்கம்- (ஒருவனுக்கு) ஆக்கமாம், அதனை - அம்மாறு பாட்டிலே, மிகல் - மிகுதலை,ஊக்கின்-மேற்கொள்ளுவானுயின், கேடு-கேடும், ஊக்குமாம்-(தன்னிடத்துவருதலை) மேற்கொள்ளும்-எ.று. (கருத்து) மாறுபாட்டிற்கெதிர்சாய்தலே செல்வம் அதைமேற்கொள்ளிற்கேடாம்-என்பதாம், * எதிர்தல்எற்றுக்கொள்ளுதல்-சாய்க்தபொழுதேவருதலால்சாய்தலாக்கமென்றுர்.(அ)

இகல்காண வக்கமீ வருங்கா லதனை
மிகல்காணுங் கேடு தாற்கு

இ-ள். (ஒருவன்) ஆக்கம்வருங்கால்- (தன்னிடத்து) ஆக்கம்வரும்போது, (காரணம்உண்டாயினும்) இகல்-மாறுபாட்டை, காணுன்-நினையான், கேடுதாற்கு-(தனக்குக்) கேடுசெய்துகொள்ளுமிடத்து,(காரணம்இல்லாதிருந்தும்), அதனை-அதனிடத்தே, மிகல் - மிகுதலை, காணும்நினைப்பான்-எ-று. (கருத்து) ஒருவன்செல்வம்வரும்போது மாறுபாட்டைக்காணுன் கேடுவரும்போ ததனைநினைப்பான்-எனபதாம்,* மாறுபாட்டால் வருங்கேடு பிறரால் ஆன்றென்பதுதோன்ற-தாற்கென்றுர் ஆக்கக்கேடுகட்குமுன் மாறுபாமையும் பிறரும்உண்டா மென்பதாம். (கூ)

இகலான் மின்னுத வெல்லா நகலானு
நன்னய மென்னுஞ் செருக்கு.

இ-ள். இகலான்-மாறுபாடொன்றினுலே, இன்னுதவெல்லாம்-துன்பஞ்செய்பவையெல்லாம், ஆம்-உண்டாகும், நகலான்-நட்பொன்றினுலே, நன்னயமென்னும்,நல்லதியென்னும், செருக்கு - பெருஞ்செல்வம், ஆம் - உண்டாகும்-எ-று. (கருத்து) மாறுபாட்டாற்றுன்பமெல்லாமுண்டாம் நட்பால் செல்வமுண்டாம்-என்பதாம்,* இன்னுதன்-வறுமை பழிபாவங்கள்முதலானவை.நகல்-மகிழ்தல்-அதுவும்செருகென்பதும்தன்றன்காரணங்களுக்காயின்,நயமென்னுஞ் செருக்கெனக்காரியத்தைக்காரணமாகஉபசரித்தார். (இவைமூன்றுபாட்டாலும் அவ்விருமையுமே சொல்லப்பட்டது.) (ஏ)

அஎ-ஆம், அதி-பகைமாட்சி.

அஃதாவது, அறிவில்லாமை முதலாகியகுற்றங்களுடைமையா பகையைஆட்சிமைப்படுத்தல். அரசர்க்கு எவ்வழியாலும் பகையில்ல மைகூடாமையால் மேலே பொதுவகையால் விலக்கப்பட்டதுகூறி விடத்தே சிறப்புவகையால்விதிக்கின்றாராதலால் இது அதன்பின்வை க்கப்பட்டது.)

வலியார்க்கு மாறேற்ற லோம்புக வோம்பா
மெலியார் மேன் மேக பகை.

இ-ள். வலியார்க்கு. (தம்மின் வலியவர்க்கு;மாறேற்றல்- பகையா யெதிர்தலை, ஓம்புக - ஒழியக்கடவர், மெலியார்மேல்- மற்றைமெலியவ ர்க்கு, பகை-பகையாகுதலை. ஓம்பா-ஒழியாமல், மேக- விரும்பக்கடவர் -க-து.(கருத்து) வலியவர்க்கெதிர்தலை நீக்கக்கடவர் மெலியவர்க்குப் ப கையாதலை விரும்பக்கடவர்-என்பதாம், வலியாரென்றவிடத்துத் து ணைவலியும் அடங்கலால் மெலியாரென்றவிடத்துத் துணை வலியில்லா மையும் கொள்ளப்படும், அத்துணைதான்படைபொருள்முதலாகியவே ற்றுமைத்துணையும் கல்வறிவுடைமைநீதிவழியொழுகல் முதலாகியஒற் றுமைத்துணையும், எனவிரண்டாம். அவ்விரண்டுமில்லாரை வெல்வர் க்கு வலிமைகாரியாமையான் அவரோடு பகைத்தல் விதிக்கப்பட்ட தாம் (சிக்கோக்காகியஇதனுள்பகைமாட்சி பொதுவகையாலேசொல்ல ப்பட்டது.)

(எ)

அன்பில னன்ற துணையிலன் றான்றுவ்வா
னென்பரியு மேதிலான் றுப்பு:

இ-ள். (ஒருவன்) அன்பிலன் -(தன்சுற்றத்தார்மேல்) அன்பிலன், ஆன்றதுணையிலன்-(அதுவேயன்றி) வலிய துணையிலன், தான்றுவ்வா ன்-(அதன்மேல்) தான்வழியிலன்(அப்படிப்பட்டவன், எதிலான்-(தன் மேல்வந்த) பகைவனது, துப்பு-வலிமையை, என்பரியும்-எப்படிதொ லைப்பான்-எ-று. (கருத்து) அன்பும் துணையும் வலிமையுமில்லாதவன் பகைவனதுவலிமையை யெப்படிநீங்குவான்-என்பதாம், சுற்றமும்மு ன்சொல்லப்பட்ட இருவகைத்துணையும் தன்வலியும்இலனாதலால்அவ ன்மேலே செல்வார்க்கு வலிவளர்வதல்லாமற் றொலியா தென்பதாம்.

அஞ்சு மறியா னமைவில னீகலான்
றஞ்ச மெளியன் பகைக்கு

இ-ள்- (ஒருவன்) அஞ்சும்-(அஞ்சவேண்டாதவர்களுக்கு) அஞ்ச வான், அறியான்-(அறியவேண்டுமவைகளை) அறியான், அமைவிலன்- (பிறபோற்று)நீபொருந்தமிலன், ஈகலான்-(இவைகளின்மேலும்) யாவரி

டத்தும்) உலோபகுணமுடையவன், (இப்படிப்பட்டவனை) பகைக்கு பகைவர்க்கு; தஞ்சமெளியன்-மிகவெளியனாவான்-எ-று. (கருத்து) அஞ்சுபவனு மறியாதவனு மட்படில்லாதவனு முலோபனுமானவன்பகைவர்க் கெளியனாவான்-என்பதாம். ஒதஞ்சமெளியனென்பவை-ஒருபொருளைக்குறித்துவந்த பலசொல் இங்ஙனங்கூறி முற்றுமுடைப்பான்பகையிலாமலும அழியுமாகலால் தஞ்சமெளியனென்றார்.) (ஈ)

நீக்கான் வெகுளி நிறையில் னெஞ்ஞான்றும்
யாக்கணு மயிர்க்கு மெளிது.

இ-ள். (ஒருவன்) -வெகுளிகோபத்தினின்றும், நீக்கான் -நீங்காதவன், நிறையிலன்-(அதுவேயன்றித்தா)னிறையுடையனல்லன் அவன், மேலேசெல்லுதல்)னெஞ்ஞான்றும்-எக்காலத்தும், யாக்கணும்-எவ்விடத்தும், யார்க்கும்-யாவருக்கும்; எளிது-எளிமை-எ-று. (கருத்து)கோபத்தையு நிறையில்லாமையு முடையவன்பகைவர்க்கெளியனாவான்-என்பதாம்; ஒநிறைமறைபிறர்நியானினும் இவன் கோபகுணமுடையவனாகலாலும், இரகசியத்தை வெளிப்படுத்தலாலும் இவன்மேலேபோக்குச் செல்வார்க்குக் காலமும்இடமும்சுலபமும் அறிந்துசெல்லுதல் வேண்டுமாதல்லைபாயிற்று. (உ)

வருநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க் கினிது.

இ-ள், (ஒருவன்) வழிநோக்கான்-நீதிநூலைக்கல்லான், வாய்ப்பன செய்யான் - (அது) விதித்ததொழில்களைச்செயலான், பழிநோக்கான்-(தனக்குவரும்) பழியைப்பாரான், பண்பிலன் - குணமுடையனல்லன், (அவன்பகைமை)பற்றார்க்கு-பகைவர்க்கு, இனிது-இன்பம்-எ-று. (கருத்து) நீதிநூல்கல்லாதவன் விதித்தனசெய்யாதவன் பழிநோக்காதவன் குணமில்லாதவன், பகைவர்க்கெளியனாவான்-என்பதாம், உபழையோராதியாக வழங்கிவருதலால்வழியென்றும், தப்பாது பிரயோசனப்படுதலால்-வாய்ப்பனவென்றும், இக்குற்றக்களுடையவன்தீமையழிதலால் பற்றார்க்கினிதென்றும், சொல்லினார். (ஊ)

காணுச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணமை பேணப் படும்.

இ-ள். காணுச்சினத்தான்-(தன்னையும் பிறனையும்) அறியாமைக்கு ஏதுவாகியகோபத்தையுடையவன் (யாவன்) -கழிபெருங் காமத்தான்-மேன்மேலும் வளராநின்ற மிகுந்தகாமத்தையுடையவன், (யாவன்)பேணமை (அவரது) பகைமை, பேணப்படும் - விரும்பிக்கொள்ளப்படுமு-ன-று;(கருத்து). கோபத்தையுங் காமத்தையுமுடையவன் பகைவர்க்கெளியவன்-என்பதாம்; முன்சொல்லப்பட்டவனுக்கு யாவருமபகை

யாக்லாலும், பின்சொல்லப்பட்டவனுக்குக்காரியம்தான் முமையாலும் காமே அழிவ தொன்பது பற்றி பேணுமைபேண்ப்படுமென் றார். (சு)

கொடுத்துங் கொளல்வேண்டு மன்றவடுத்திருந்து
மாணுத செய்வான் பகை.

இ-ள், அடுத்திருந்து - தொழிலைத்தொடங்கியிருந்து, மாணுத(அ தற்கு) ஏற்காதனவைகளை, செய்வான் - செய்பவனது, பகை- பகைமை யை, கொடுத்தும் - சிலபொருள் (அழியக்) கொடுத்தாயினும், மன நி ச்சயமாக, கொளல்வேண்டும் - கொள்ளுதல்வேண்டுமெ-ன-று. (கருத் து) ஓலாதவற்றைச்செய் பவன்பகைமையைப்பொருள்கொடுதத்துங்கொ ள்ளல்வேண்டுமென்பதாம். ஏற்காதனவைமெலியவனுயிருந்து துணித லும், வலிப்வனுயிருந்து தணிதலும், முதலாயின. அப்பொழுது அதனு லே சிலபொருள் அழியினும் பின்னே பலபொருள்களைப்பெறுதற்குச்ச ந்தேதகம் இல்லாமையால் கொடுத்துங்கொளல் வேண்டுமன்றவென்று [வை ஆறுபாட்டாலும் அதனுசிறப்புவகைமுகமலேசொல்லப்பட்டது. ()

குணனிலனெய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்
கினனிலனு மேமாப் புணைத்து.

இ-ள். (ஒருவன்) குணனிலனுய் - குணமொன்றுமிலனுய், குற்றம் பலவாயி-ன் (உடைய) குற்றம்பலவாகியவிடத்து, இனனிலனு ம,(அவ துணையில்லாதவனுகும், (அவ்விலனுகுகையே) மற்றார்க்கு-(அவன்)ப கைவர்கரு, ஏமாப்புடைத்து-துணையாகுகையையுடைத்துஎ-று. -(கரு த்து) குணமில்லாதவனுய்ப் பலகுற்றமுடையவனுகில் துணையில்லாத வனுவான் அவனபகைவர்க்கெளியன்னென்பதாம் *குணம்-இறைமாட் சியுள்ளே சொல்லப்பட்டனை, குற்றம் - இவ்வதிகாரத்துள்ளேசொல் லப்பட்டவையும், மற்றும்இப்படிபட்டவையும். ஏம். துணை-சுற்றஞ் புப்பொருள் படைமுதலானவை, பகைவர்க்கும் இவ்வழியால்உண்டா கும்பயன்தானேஉண்டாமாகலால்-ஏமாப்புடைத்தென்றார். (அ)

செறுவார்க்குச் சேணிகவா வின்பமறிவிலா
வஞ்சும் பகைவர்ப் பெறின்.

இ-ள். அறிவிலா- (நீதியை)அறிதலவில்லாத, அஞ்சும்-அஞ்சுகின் ற, பகைவா-பகைவனை, பெறின்-பெற்றுனுகில், செறுவார்க்கு - (அவ னை) வெல்வார்க்கு சேண்-உயர்வுள்ள, இன்பம்-இன்பங்கள், இகவா-நீ ங்கா-எ-று(கருத்து) நீதியையறியாத பகைவனைப்பெற்றால் வெல்பவர் க்கின்பம்-என்பதாம் ஏ உபாயமறிதலும், அறிந்தால் செய்துமுடிக்கு நி டமும், இல்லாதவனே பகைவராதல்கூடாமையால்பெறினென்றும், அ வனை அறிந்துமேற்சென்றபொழுதே பகையில்லாமையும் செல்வமும் ஒருசோ அடைதலாலே ல- சேணுடைமின்ப மிகவாவென்றும், சொல் லினுர். (கூ)

கல்லான் வெகுளுஞ் சிறுபொரு ளெஞ்ஞான்று
மொல்லானே யொல்லா தொளி.

இ-ள். கல்லான்-(நீதிநூல்களைக்) கல்லாதவனெடு, வெகுளும்-பகைத்தலால்வரும், சிறுபொருள்-எளியபொருளை, ஒல்லானை-அடையாதவனை எஞ்ஞான்றும்-எக்காலமும், ஒளி-புகழ், ஒல்லாது-அடையாது-எ-று(கருத்து) கல்லாதவனுடன்பகைத்தலால்வரும் பொருளையடையாதவனைப்புகழடையாது. என்பதாம். சிறுபொருள்முயற்சிசிறிதாகியபொருள். நீதியறியாதவனைவெல்லுதல் எளிதாயிருக்கவும் அதுமாட்டாதவனைவெற்றியால்வரும்புகழ்கூடாதென்பதாம். ஆகவே இச்சிறியமுயற்சியாலேபெரியபயனடைகவென்றபடியாயிற்று. (இவைமூன்றுபாட்டாலும் அதனாலாகியபயன்சொல்லப்பட்டது) (ம)

அ.அ-ஆம், அதி-பகைத்திறந்தெரிதல்.

அஃதாவது, மாட்சிமைப்படாதபகைமையை ஆக்குதற்குற்றமும், முன்னுய்நின்றபகையுள்-நட்பாக்குந்தன்மையுந்தும், அயலாக்குந்தன்மையதும், அவைகளிலேசெய்வதும், மற்றைக்கிளையுந்தன்மையதும், அதனிடத்தேசெய்வனவும், கிளையும்வருவழியும், கிளையாமற்போனுல்படுமிழுக்கமுமென்றுஇவ்விதங்களை ஆராய்தல். இவையெல்லாம்மாட்சிமைப்படாதபகையின்வாகலால் இதுபகைமாட்சியின்பின்வைக்கப்பட்டது,

பகையென்னும் பண்பி லதனை யொருவ
னகையேயும் வேண்டற்பாற் றன்று.

இ-ள். ஒருவன்-ஒருவன், பகையென்னும்-பகையென்றுசொல்லப்படும், பண்பிலதனை-தீமையுண்டாக்குவதனை, நகையேயும்- விளையாட்டிடத்தேயாயினும், வேண்டற்பாற்றன்று-விரும்புதற்றன்மையையுடையதன்று, (நீதிநூல்)-எ-று. (கருத்து) ஒருவன்பகையாகிய தீமைக்குணங்களைவிளையாட்டிலும்விரும்பாதிருக்கக்கடவன்-என்பதாம். மாட்சிமைப்படாதபகையை ஆக்கிக்கொள்ளுதல்எவ்விதத்தாலும் தீமையேயருதலால்பண்பிலதென்றும், அதனைவிளையாட்டிடத்துவேண்டினும் நகைபமேவினைந்துமெய்யாமாகலால்-நகையேயுமென்றும், வேண்டாமை பழமையோர்துணிவென்றற்கு-நீதிநூல்மேல்வைத்தும், சொல்லினுர். நீதிநூல்வருவிக்கப்பட்டது. (க)

வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை.

இ-ள்.(ஒருவன்)விஞ்லோர்-வில்லேராகவ்டைய,உழவர்-உழவரே;
டும்,பகைகொளினும்-பகைகொண்டாலும்,சொல்லோர்-சொல்லேராகவ
டைய,உழவர்-உழவரோடு,பகை-பகையை,கொள்ளற்க-கொள்ளாதொ
ழியக்கடவன்-எ-று.(கருத்து)வீரர்பகைவைக்கொண்டாலும்மந்திரிகள்
பகையைக்கொள்ளாதிருக்கக்கடவன்,சொல்லேருழவர்மந்திரிகள்-என்
பதாம்.ஒசொல்ஆகுபெயராய்நீதிநூலில்மேல்நின்றது - வீரம்ஆலோச
னைஎன்கிற ஆற்றல்களுள்வீரமேயுடையவரோடுப்கைகொண்டால்- கே
டுவருவதுநிச்சயமென்றுவந்தாலும்தனக்கேயாம்.மற்றை ஆலோசனேயு
டையவரோடானல்தன்வமிசத்தோர்க்கும் தப்பாதுவருதலால். - அது
கொள்ளினும்இதுகொள்ளற்கவென்றார்.கொளினும்என்கிற உம்மையா
ல்வில்லேருழவர்பகையும்.ஆகாமைபெறப்படும்.இரண்டுமுடையவரோ
டுகொள்ள லாகாமைசொல்லவேண்டாவாயிற்று. (உ)

ஏமுற்றவரினு மேழை தமியனுய்ப்
பல்லார் பகைகொள் பவன்.

இ-ள்.தமியனுய்(தான்)தனியனுயிருந்துகொண்டு,பல்லார்-பலரோ
டும்,பகைகொள்பவன்-பகையைக்கொள்வோன்,ஏமுற்றவரினும்-பித்த
ங்கொண்டவரினும்,ஏழை-அறிவிலன்-எ-று.(கருத்து) தனித்திருந்துப
லர்பகையைக்கொள்பவன்பித்தரினுமறிவில்லான்-என்பதாம்,ஒதனிமை
சுற்றஞட்புப்படைமுதலானவைஇல்லாமை,மயக்கத்தால் அவ்விருவரும்
ஒப்பாராயினும்பித்தங்கொண்டவர் அதனுலேதீங்கடையாமையால்தீ
கடைதலுமுடையரிவரென அவரினுமேழையென்றார், தீங்காவது-துணை
யுள்ளவிடத்தும்வெல்லுதலசக்தகமாயிருக்க அத்துணையில்லாமலும்
பலரோடும்பகைகொண்டுஅவரால்வேறுவேறுபோர்செய்யிடத்தும் அ
ழிந்தேவிடுதல். (இவைமூன்றுபாட்டினும் பகைகொள்ளுதற்குற்றம்
பொதுவினும்சிறப்பினுமசொல்லப்பட்டது.) (ங)

பகைஞட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
றகைமைக்கப் டங்கிற் றுலகு.

இ-ள். பகை-பகையை,ஞட்பாக்கொண்டொழுகும்-(வேண்டியபோ
துவேறுபடுத்தித்தனக்கு) ஞட்பாகசசெய்துகொண்டுநடக்கும், பண்பு
டையாளன்-இயல்புடைய அரசனது,தகைமைக்கண்-பெருமையுள்ளே
உலகு-உலகம்,தங்கிற்று-தங்கியது-எ-று. (கருத்து) பகையைஞட்பாகக்
கொண்டுநடக்குமரசன்பெருமைக்குள்ளேயுலகந்தங்கியது-என்பதாம்
வேறுபடுத்தல்-பகைநீங்கினீக்குதல்,ஒழுகல்-நீதிவழிநடத்தல்,பெருமை
பொருள்படைஎன்கிறவிருவகைஆற்றல். அதன்வழியதாதற்குளன்றும்
வேறுபாடில்லாமையால் அத்துணிவுபற்றித்தங்கிற்றென்றார். (ச)

தன்றுணை யின்றுற் பகையிரண்டாற் றானெருவ
னின்றுணையாக் கொள்கவற்றி னென்று.

இ-ள். தன்றுணை-தனக்குஉதவுந்துணையோவெனில், இன்று-நில்லை, பகை-(கெடுவுசெய்யும்)பகையோவெனில், இரண்டு-இரண்டு, (இப்படி இருக்கினறபோது)-தானெருவன்-ஒருவனாகியதான், அவற்றின்- அப்பகைஇரண்டினுள், ஒன்று(பொருந்தியதாகிய ஒன்றை, இன்றுணையா-(அப்போதைக்கு)இனியதுணையாக, கொள்க-(செய்து) கொள்ளக்கடவன்-என்று, (கருதது)தனக்குதவுந்துணையில்லைவருந்தும்பகையிரண்டு- இவ்விரண்டிற்பொருந்தியதொன்றைக்கொள்ளக்கடவன்-என்பதாம்* பொருந்தியதாவது,மற்றதைவெல்லுதற்குவற்றது,அப்பொழுது- அவ்வெல்லும்பொழுது,வேறுபாடில்லாமல்செய்துகொள்கவென்றற்கு - இன்றுணையாகவென்றார். ஆயிரண்டும்-அசை. (இவைஇரண்டுபாட்டாலும்நட்பாக்கற்றன்மையதுசொல்லப்பட்டது.) (ரு)

தேறினுந் தேறு விடினு மழிவின்கட்
டேறுன் பகாஅன் விடல்.

இ-ள். (பகைவன்)-தேறினும்(முன்)தெளிந்தாலுயினும், தேறுவிடினும்-தெளிந்திலனாயினும், அழிவின்கண், (தனக்குப்புறத்தொரு தொழிலால்)தாழ்வுவந்தவிடத்து, தேறுன்-கூடாஞகியும், பகாஅன்-நீங்காஞகியும், விடல்-(நமக்கே)விட்டொழுகக்கடவன்-என்று. (கருத்து) பகைவன் தெளிந்தாலுயினுந் தெளிந்திலனாயினுந்தாழ்விடத்துக் கூடாஞகியுநீங்காஞகியுமிருக்கக்கடவன்) - என்பதாம்*முன்தெளிந்தாலுயினும் அப்போதுகூடாதொழிகவென்றது-உள்ளாய்நின்றுகெடுத்தலேக்கி, தெளிந்திலனாயினும்அப்போதுநீங்காதொழிகவென்றது- அவ்வழுவிற்குத்துணையாதலேக்கி.(இதனால் அவ்வகைக்கண்மையதுசொல்லப்பட்டது.)

நோவற்க வொந்த தறியார்க்கு மேவற்க
மென்மை பகைவ ரகத்து.

இ-ள். வொந்தது-வொந்ததனை, அறியார்க்கு-(தாமாக)அறியாதகட்பினர்க்கு,நோவற்க-(தன்)னோவுசொல்லாதிருக்கக்கடவன், மென்மை-வலியில்லாமையை,பகைவரகத்து-(அதைப்பார்த்திருக்கும்) பகைவரிடத்து,மேவற்க-மேவிட்டுக்கொள்ளாதிருக்கக்கடவன்-என்று.(கருத்து) வொந்ததையறியார்க்குத்தன்னோவைச்சொல்லாதிருக்கக்கடவன் - வலியில்லாமைப்பகைவரிடத்துமேவிட்டுக்கொள்ளாதிருக்கக்கடவனென்பதாம். பகைவரிடத்தேசெய்யலாகாததுசொல்லவந்தலர்-நட்பினரிடத்தேசெய்யலாகாததும்உடன்சொல்லினர். (இதனால்அவ்விருவகையிடத்துமேயவதுசொல்லப்பட்டது.) (ஏ)

அ.அ-ஆம்-அதி-பகைத்திறந்தெரிதல்.

வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கட் பட்ட செருக்கு.

இ-ள். வகையறிந்து-(தான்தொழில்செய்யும்)வகையை அறிந்து,தற்செய்து) அதுமுடித்தற்குஏற்பத்)தன்னைப்பெருக்கி,தற்காப்ப-(மறதி அடையாமல்) தன்னைக்காக்கவே,பகைவர்கண்(தன்)பகைவரிடத்து, பட்ட-உண்டாகிய,செருக்கு-களிப்புமாயும்-கெடும்.என-று.'(கருத்து) தொழில்வகையறிந்துதன்னைக்காக்கப்பகைவர்செருக்குங்கெடுமென்பதாம். வகைவலியவனுய்தான்மேமேபோர்செய் விதமும், மெலியவனுய்வலியிலேபோர்விலக்கும்விதமும்,முதலானவை,பெருக்கல்- பொருள்படைகளாலேபெருகச்செய்தல்களிப்பு,இவ்வழியால்வெல்வோமென்றெண்ணி மகிழ்ந்திருத்தல்.இவ்விறுகுதல்அறிதாமேஅடங்குவதென்பதாம்.(இதனுற்கூறியுந்தன்மையதனிடத்துச்செய்வன சொல்லப்பட்டன.) (அ)

இளதாக முண்மரங் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து.

இ-ள். முண்மரம்-(களையவேண்டுவதாகிய) முள்ளுமரத்தை,இளதாக-இளையதாகியநிலையிலே,கொல்க-களைந்திடவர், அல்லாமல்) காழ்த்தவிடத்து-முதிர்ந்தநிலையில்,(களையத்தொடங்கினால்) களையுநர்-களைபவரது-கை-கையை,கொல்லும்-(அதுதானே)கையும்-என-று.(கருத்து)முள்ளாகியமரத்தையிளமையிற்களைவுக்கடவர் அதுமுதிர்ந்தாற் களைபவர் கையைக்களையும்-என்பதாம்,*(களையப்படுவதாகிய)தம்பகையை அது மெலிதாகியகாலத்தேகளைக அப்படிசெய்யாமல்வலிதாகியகாலத்திலேகளையத்தொடங்கினால்தம்மை அப்பகைதானேகளையுமென்பது தோன்றின்றமையால்இதுபிறிதுமொழிதலணி.(இதனுற்களையும்பருவம்சொல்லப்பட்டது) (கூ)

உயிர்ப்ப வுளரல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலர் தார்.

இ-ள்- செயிர்ப்பவர்-(தம்மோடு)பகைப்பவரது, செம்மல்- தருக்கை, (கெடுக்கலாயிருக்க)சிதைக்கலாதார்(இகழ்ச்சியால்) கெடுக்காதவராசர்,உயிர்ப்ப-(பின்)மூச்சுவிடுமாதநிரத்திற்கும்,மன்ற-நிச்சயமாக,உளரல்லர்-இருக்கின்றவரல்லர்-என-று.(கருத்து)பகைப்பவர்செருக்கைக் கெடுக்காதவிறப்பவர்-எனபதாம்.அவர்வலியவராயதம்மைக்களைதல் நிச்சயமாகலால்இறந்தாரேயாவரென்பதாம்,(இதனுல்களையாவழிப்படும் இழுக்குஞ்சொல்லப்பட்டது.) (ஙி)

அசை-ஆம், அதி-உட்பகை.

அஃதாவது, புறப்பகைக்கு இடமாக்கிக்கொடுத்து அதுவெல்லு மளவும் உள்ளாய் நிற்கும்பகை - இதுவும் கூடியப்படுவதிலே சேர்ந்த தாகலால் பகைநிறம் தெரிதலின்பின் வைக்கப்பட்டது.

நிழனீரு மின்னுக வின்னு தமர்நீரு
மின்னுவா மின்னு செயின்

இ-ள். (ஒருவனுக்கு) நிழனீரும் - (அணுபவிக்கப்படுவனவாகிய) நிழலும் நீரும், இன்னுத - முனை இன்பஞ்(செய்வனவாயினும்பின்) னுப்செய்யுமவை, இன்னு - இனியனவல்லவாம்,(அதுபோல்(தமர்நீரும்-(தழுவவேண்டுவனவாகிய) தம்மவரியல்புகளும், இன்னுசெயின் - (முன் இன்பஞ்செய்வன வாயினும்பின்) துன்பஞ்செய்யுமனை, இன்னுவாம் இனியனவல்லவாம் -எ-று(கருத்து) ஒருவனுக்குநிழலுநீரும்போய் செய்யுமதுபோலத்தம்மினத்தாரியல்புகளுந்துன்பஞ்செய்யும்-என்பதாம் ○ நோய் - பெருங்கால்-பெருவியாதிமுதலானவை, தமரென்றதனால் - உட்பகையாதற்குரிய ஞாதிகளெனவருக. இன்னுசெயல் - முன்வெளிப்படாதிருந்து துணைபெற்றவழிதெரிதல். (க)

வாள்போல் பகைவனா யஞ்சற்க வஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு,

இ-ள். வாள்போல் . வாள்போலே, (வெட்டுவோமென்றுவெளிப்பட்டுநிற்கும்)-பகைவனா - சத்துருக்களை, அஞ்சற்க - அஞ்சாதிருக்கக்கடவர். (அப்படிஇல்லாமல்), கேள்போல்-உறவினர்போல (,மறைந்துநிற்கும்), பகைவர்-பகைவரை, தொடர்பு-நட்பை, அஞ்சுக-அஞ்சக்கடவர்.எ-று.(கருத்து) வெட்டுவோமென்னும் பகைவர்க்கஞ்சாதிருக்கக்கடவர். உறவினர்போலிருக்கும் பகைவர்க்கஞ்சக்கடவர்-என்பதாம் ○, முன்னே அறிந்துகாக்கப்படுதலால் - அஞ்சற்கவென்றும், அப்படிஅறியவும் காக்கவுங்கூடாமைவால்கெடுதல் நிச்சயமென்பதுபற்றி அஞ்சுகவென்றும், சொல்லினர்-பின்செய்யும்பகையினும் கொடிதாகலாலும், காக்குங்காலம் அதுவாகலாலும், அஞ்சப்படுவதுமுன்செய்த அவர்கட்பாயிறறு (இவைஇரண்டுபுட்டாலும் உட்பகையாகா தென்பது சொல்லப்பட்டது.) (உ)

உட்பகை யஞ்சித்தற் காக்க வுலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும்.

இ-ள். உட்பகை - உட்பகையாயிருந்தானை, அஞ்சி-பயந்து,தற்காக்க- தன்னைக்காத்துக்கொண்டு நடக்கக்கடவர், (அப்படிநடவாதபோது) உலைவிடத்து - (தனக்கு) ஓர் தளர்ச்சிவந்தவிடத்து,மட்பகையின்

(குவவன்) மட்கலத்தை அறுக்கும் ஆயுதம்போல், மாண- தப்பாமல், தெறும் - (அவர்) கெடுப்பர்-எ-று. (கருத்து) உட்பகைக்குரித் தன்னைக்காக்கக்கடவர், காவாவிடிற்பகைவர்கெடுப்பர்-என்பதாம், *காத்தல்-அவாவிணபாமலும்அவருக்குஉடம்படாமலும், பரிகரித்தல் பகைமை தோன்றுமல் உள்ளாயிருந்தே கீழறுத்தலால் கெடுதல்தப்பா தென்ப தாம். (5)

மனமாணு வுட்பகை தோன்றி னினமாணு
வேதம் பலவுந் தரும்.

இ-ள். மனமாணு - (புறந்திருந்தியது போன்று) அகந்திருந்தாத, உட்பகை-உள்ளுட்பகை, தோன்றின் - (அரசனுக்கு) உண்டாமாயின் (அது), இனமாணு சுற்றம், (வசப்படாமைக்குவதுவாகிய -ஏதம்பலவு ம்-குற்றம்பலவும், தரும்-(அவனுக்குத்) தரும-எ-று,(கருத்து) அரசனுக்குட்பகையுண்டாயின். பலகுற்றமுந்தரும்-என்பதாம். o அவை-சுற்றத்தாரை உள்ளாய்நின்று வேறுபடுதலும் அதனால், அவர்வேறுபட்டவரிடத்தே தான்தேறுமையும், பின்அவைகளால் விளைவனவும், ஆம்,

உறன்முறையா னுட்பகை தோன்றி னிறன்முறையா
வேதம் பலவுந்தரும்.

இ-ள், உறன்முறையான்-(புறத்தில்) உறவுமுறைத் தன்மையோடுகூடிய, உட்பகை-உட்பகையானது, தோன்றின் (அரசனுக்கு) உண்டாயின் (அது), இறன்முறையான் - இறத்தன்முறைமையோடுகூடிய; ஏதம்பலவும் - குற்றம் பலவற்றையும், தரும்-(அவனுக்குக்) கொடுக்கும்-எ-று(கருத்து) உறவின்முறை யுட்பகை யரசனுக்குத்தோன்றிலது பலகுற்றத்தையுந் தரும்-என்பதாம், o அவைபுறப்பகைக்குத்துணையாய்நின்றே அதுதோன்றுமல் கொல்லுங்கருவிமுதலாகியவஞ்சனைசெய்தலும், மந்திரிகண்முதலாகிய அங்கங்களைதேய்த்தலும், முதலானவை. (6)

ஒன்றுமை யொன்றியார் கட்படி னெஞ்ஞான்றும்
பொன்றுமை யொன்ற லரிது.

இ-ள். ஒன்றுமை - பகைமை, ஒன்றியார்கண் - (தனக்கு) உள்ளாயினரிடத்து, படின் - உண்டாகுமாயின், பொன்றுமை-இறவாமை-ன்றல் - (அரசனுக்குக்) கூடுதல், எஞ்ஞான்றும்-எந்நாளும், அரிது-அ ருமை-எ-று.(கருத்து) தனக்குள்ளாயினரிடத்துப் பகையுண்டாயின அரசனுக்கிறத்தலெந்தரும்-என்பதாம். o பொருள்படைமுதலர்கிய உறுப் புக்களாலே பெரியனாகியகாலத்து மெந்நாற்கு-எஞ்ஞான்றுமென்றார்.(இவை ஈனருபாட்டாதலும் அதனால்நனக்குவரும்தீங்குசொல்லப்பட்டது.

செப்பின் புணர்ச்சிபோற் கூடினும் கூடாதே
யுட்பகை யுற்ற குடி.

இ-ள். செப்பின் - செப்பினது. புணர்ச்சிபோல்-புணர்ச்சிபோல கூடினும் -(புறத்தே வேற்றுமைதெரியாமற்) கூடினராயினும், உட்பகை-உள்ளிட்டத்துப்பகை, உற்ற-உண்டாகிய, குடி-குடியிலுள்ளார், கூடாதே-(அகத்தேதம்முட்) கூடார்-எ-று. (கருத்து) உள்ளிற்பகைபொருந்திய குடியிலுள்ளார் செப்பின் மூடிபோற்கூடினராயினு மனவொற்றுமையிற் கூடார்என்பதாம்.o செப்பினபுணர்ச்சிசெப்புமேனி பின் மூடியோடு புணர்ந்தபுணர்ச்சி; அவர்உட்பகையால் மனம்வேறுபட்டமையால் அப்பகைபெற்றவிடத்தே வேறுவேறுவொஸ்பதாம். (எ)

அரம்பொருத பொன்போலத் தேயு மரம்பொரு
துட்பகை யுற்ற குடி.

இ-ள். (மூன்வளர்ந்துவந்ததாயினும்)உட்பகையுற்றகுடி-உட்பகையுண்டாகியகுடியானது. அரம்பொருத - அராந்தினாலேதேய்க்கப்பட்ட பொன்போல - இரும்புபோல, பொருது-(அதனாலே) தேய்க்கப்பட்டு உரம்-வலிமை, தேயும-தேய்ந்துபோம்எ-று. (கருத்து)உட்பகைபொருந்திய குடியானது அராந்தினாலே தேய்க்கப்பட்ட விரும்புபோலக்கெடும்-என்பதாம்* காரியஞ்செயவதுபோன்று பொருந்தி மெல்லமெல்லப் பரிசயித்தலால் வலிமைதேய்ந்துவிடு மென்பதாம்-இவை இரண்டுபாட்டாலும் அவன்குடிக்குவரும் தீங்குசொல்லப்பட்டது.) (அ)

எட்பகவன்ன சிறுமைத்தே யாயினு
மூட்பகை யுள்ளதாங் கேடு.

இ-ள். உட்பகை-(அரசனது) உட்பகை. (அவன்பெருமையைநோக்க)-எட்பகவன்ன - எள்ளின்பிளவையொத்த, சிறுமைத்தேயாயினும்-சிறுமையுடையதேயாயினும், கேடு -(அப்பெருன்மையெல்லாம்அழியவரும்)கேடு, உள்ளதாம்-(அக) கந்ததாம்-எ-று. (கருத்து)உட்பகையெட்பிளப்பிற் கொப்பான சிறிதாயினுங் கேடுண்டாம் -என்பதாம்.o மிகவும்பெரியகேட்டுக்கு எல்லைவருமளவும் மிகவுஞ்சிறிய உட்பகைஉள்ளே அடங்கியிருந்துவந்தால் வெளிப்பட்டுகீற்குமென்பதாம்.(இதனால்சிறிதென்று இகழப்படாதென்பதுசொல்லப்பட்டது. கூ

உட்பம் பாடிலாதவர் வாழ்க்கை குடங்கருட்
பாம்போ டுடனுறைந் தற்று.

இ-ள். உடம்பாடிலாதவர்-மனப்பொருத்தமில்லாதவரோடு, வாழ்க்கை (ஒருவன்) கூடிவாழும்வாழ்வு. குடங்கருள்-ஓருகுடிசையிலுள்ளே, பாம்போடு-ஈகப்பாம்போடு. உடனுறைந்தற்று - கூடிவாழ்க்காற்போலும்.-எ-று.(கருத்து) மனவொற்றுமையில்லாருடன் கூடிவாழு

ம் வாழ்க்கையானது ஒருகுடிசையுள்ளே பாம்புடன் கூடி வாழ்தல் போலாம்-என்பதாம்.* இடைச்சிறுமையாலும்பழக்கத்தாலும் பாம்பிலே கடிதகப்படுதல் நிச்சயமாம்.ஆகவே அவ்வுவமையால் அவ்வுயிர்கள் முடிவுவருதல் நிச்சயமென்பதுபெற்றும்.(இதனாலே கண்ணோட்டஞ் செய்யாதவனைக் கடியக்கடவனென்பதுசொல்லப்பட்டது.)

கயம்-ஆழம், அறி-பெரியாரைப்பிழையாமை.

அஃதாவது, பெரியாராயினாரை அவமதித்து நடவாமைஇரட்டை மொழிதலாலே பெரியாரென்பது வலிமையினாலேபெரியராகிய வேந்தர்மேலும், தவத்தினாலே பெரியராகியமுனிவர்மேலும், நின்றது, மேற் சொல்லாமல் குறைத்து நின்றதாகலால்இருசாரோதத்தால் வருமவைகளது முடிவில்லைவைக்கப்பட்டது.

ஆற்றுவா ராற்ற விகழாமை போற்றுவார்
போற்றலு ளெல்லாந் தலை.

இ-ள். ஆற்றுவார்-எடுத்துக்கொள்ளப்பட்டவையாவும்(முடிக்கவல்லாருடைய, ஆற்றல்-வல்லமைகளை, இகழாமை-அவமதியாமை, போற்றுவார்-(தம்மிடத்துத் தீங்குவாராமற்) காப்பவனுடைய, போற்றலு ளெல்லாம்-காவல்களுக்குளெல்லாம், தலை-மிகுந்தது-எ-று. (கருத்து) வல்லாருடைய வல்லமைகளையிகழாமையே காவல்களெல்லாவற்றுள்ளுந்தலை-என்பதாம்.ஆற்றலென்பது-பெருமை அறிவுமுயற்சியென்றிம்மூன்றிலுமேலும்நின்றது- இகழ்ந்தவிடத்தேதகும்மைக்களையவல்லாரென்பதுதோன்ற- ஆற்றுவாரொன்றும், அரண்படை பொருணட்பு முதலாகிய வற்றைக்காவல்கள் அவரால் அழிபுமாகலால் அவ்விகழாமையை தலைமையானகாவலென்றும், சொல்லினர். (இதனாலேபொதுவகையால் அவ்விருவகைப்பெரியோர்க்கும்பிழைசெய்யாமையது சிறப்புச்சொல்லப்பட்டது.)

பெரியாரைப் பேணுதொழுகிற் பெரியாராற்
பேரா விடும்பைத் தரும்.

இ-ள். (வேந்தர்)பெரியாரை-(வலிமைகளாலே) பெரியராயினாரை, பேணாது - நன்குமதியாமல், (அவமதித்து) ஒழுகி - நன்டப்பாராயின், (அங்ஙனுக்கையானது) பெரியாரால் - அப்பெரியரால், பேராவிடும்பை-(எக்காலும்) நீங்காதுன்பங்களை, தரு-(அவருக்குக் கொடுக்கும்)-எ-று, (கருத்து) பெரியோரை அவமதித்து நடந்தாலங்நடத்தை தீங்கைத்தருமென்பதாம். அத்துன்பங்களாவன - இருமையிலும் ஏமாமல்வருகிற மூவகைத் துன்பங்களுமாம். அவையெல்லாம் தாமே செ

உண்டாகாது—என்று (கருத்து.) நல்லமனமும்-நல்லசெல்வமுமுடை யவர்க்கு மனைவியால் வருமறியாமைபில்லை - என்பதாம். *இல்லாமை கடலுக்கு மென்றற்கு எஞ்ஞான்றுமென்றார், அப்பேதைமையாவது மேற்சொல்லிய - விழைதல் அஞ்சல் வெல்செய்தல் என்கிறமூன்றற் கு காரணமாகியது. [எதிர்மறைமுகத்தால் அம்மூன்று இதனால் தொ குத்துச் சொல்லப்பட்டன.] (ய)

கூஉ-ஆம்-அதி- வினாவின் மகளிர்.

ஆம்காவது, தங்கலம் விலைகொடுப்பவர் யாவர்க்கும் விற்பதல்லது அதற் கு ஓவார் ஆகாதார் என்கிறவனைவில்லாத - மகளீரது இயல்பு ஆகலால்தமக்குரியப்களிர்ல்லருங்குற்றத்தின்பின்வைக்கப்பட்டது.

அன்பின் விழையார் பொருள்விழையு மாய்தொடி
நின்சொ லிருக்குந் தரும்.

இ-ள், அன்பின்விழையார்-(ஒருவனை) அன்புபற்றிவிரும்பாராகி பொருள்விழையும் - பொருள்பற்றிவிரும்பும், ஆய்தொடியார் - மகளிர் இன்சொல் - (அதுகைவருமளவும் அன்புபற்றி விரும்பினராகச்சொல் லும்) இனியசொல், இழுக்கு - இன்னுமையை, தரும் - (அவனுக்குத்) தி நரும்—என்று (கருத்து.) அன்பால் விரும்பாது பொருளால் விரும்பும், வேசையர்களின் சொல்லானது துன்பந்தரும்-என்பதாம். * ஆய்தொ டி-ஆராய்ந்தவளையல். ஆய்தொடி - இன்சொல் என்றதனால் அவர்மய க்குஞ் சாதனம்சொலலப்பட்டது அச்சொல் அப்பொழுது இனிது போன்று பின்வறுமையை உண்டாக்கலால் அதுகொள்ளலாகா தென் பதாம். (க)

பயன்றூக்கிப் பண்புணைக்கும் பண்பின் மகளீர்
நயன்றூக்கி நள்ளா விடல்.

இ-ள். பயன்றூக்கி - (ஒருவனுக்குள்ள) பொருளை அளந்தறிந்து; பண்புணைக்கும் - (அதுகிடைக்குமளவும்) தமது குணமுடைமைசொ ல்லும், பண்பின்மகளீர்-குணமில்லாதமகளிரது, நயன்றூக்கி- நடக்கை வழியை ஆராய்ந்தறிந்து, நள்ள - (அவனைப்) பொருந்தாமல், விடல் - விடக்கடவர்—என்று (கருத்து.) பொருட்பயனைக்குறித்து நயம்பேசும் வேசையர் நடக்கையறிந்து அவனைவிடக்கடவர் - என்பதாம். * பண்பு சொல்லிலல்லது அவரிடத்தில்லாமைதோன்ற - பண்பின்மகளீரென்று ம், அதுசாதி தருமமாதலால் நூலாலேயல்லாமல் அவர்செயலாலும் அ றிதென்றற்கு நயன்றூக்கி யென்றும், அவ்வாறு அவனை விடுதற்கு உ பாயமென்பதுதோன்ற - நள்ளாவிட லென்றும், சொல்லினர். (உ)

கூ-ஆம்-அதி—வனாவின்மகளிர்.

பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்கமிருட்டறையி
லேதில் பிணந்தழீஇ யற்று.

இ-ள். பொருட்பெண்டிர் - (கொப்பானைவிரும்பாது பொருளே யேவிநும்பும்) பொதுமகளீரது, பொய்மை - பொய்மையையுடைய, முயக்கம் - தழுவுதல், (பிணமெடுப்பவர்)—இருட்டறையில் - இருட்டிடில், ஏதில்பிணம் -முன்னறியாத பிணத்தை, தழீஇயற்று-தழுவிற்றேபோலும்—எ-று. (கருத்து.) வேசையர்கள் பொய்யான புணர்ச்சியா னது இருவீட்டிலயலான் பிணத்தைத் தழுவினற்போலும் - என்பதாம். * பொருளுக்குத்தழுவும் பரத்தையர் கருத்தும் செயலும் ஆராய மல்சாதியும்பருவமும் ஒவ்வாதானைக்கூடும்போது அவர்குறிப்பு - கூனிக் குப்பிணமெடுப்பவர் காணப்படாத ஓரிடத்திலே சம்பந்தமில்லாத ஒ ருப்பிணத்தை எடுக்கும்போது இவர்குறிப்பேபோடொக்கும் எனவே அ த்தால் அருவராநின்றுபொருளே நோக்கிப் புறத்தால்தழுவுவர் அதனை ஒழிக்கக்கடவனென்பதாம். [இவை மூன்றுபாட்டாலும் அவர்சொல்லு ம் செயலும் பொய்யென்பதுசொல்லப்பட்டது.] (கூ)

பொருட்பொருளார் புன்னலந் தோயா ரருட்பொரு
ளார்யுமறிவி னவர்.

இ-ள். பொருட்பொருளார் - (இன்பமாகியபொருளே இகழ்ந்து) பொருளாகிய பொருளேயேவிரும்புமளீரது, புன்னலம் புல்லிய ல வத்தை, அருட்பொருள் - அருளோடுகூடியபொருளை, ஆயும் - ஆராய்ந் தேசம்பாதிக்கும், அறிவினவர் - அறிவையுடையவர், தோயார்- தீண் டார்—எ-று. (கருத்து.) [illegible] மறிவுடையார் - வேசை சேர்சேரார்-என்பதாம். * [illegible] பொருளெனலால் - பொருட்பொருள் அருட்பொருள் [illegible] சேடித்தா இழிந்தார்க்கே ஊரித்தாதல், தாம்விரும்புகின்ற - அறத்தறகு அவ்வே யிங்ஙலம் விரோதமாகலால் தோயாரென்பதாம். (எ)

பொதுமகளந்தார் புன்னலந் தோயார் மதிமகளத்தின்
மாண்டவறிவி னவர்.

இ-ள். மதிமகளத்தின்- (இயற்கையாகிய) மதிநன்மையால், மாண்ட மாட்சிமைப்பட்ட, அறிவினர் - (செயற்கை) யறிவையுடையவர், பொ துமகளந்தார் (பொருள்கொடுப்பவர்க்கெல்லாம்) பொதுவாகிய ஆசைய யுடையமகளீரது, புன்னலம்- புல்லியமகளத்தை, தோயார் - தீண்டா —எ-று. (கருத்து.) புத்திமகளமுடைய டொரிபோர்பாத்தையனைச்சோ ர்-என்பதாம். * மதிநன்மை முற்பிறப்பிலேசெய்த நல்வினைகளால்மன நந்தெளிவுடைத்தாதல் அத்தெளிவிலுலல்லாமல் அக்நல்வியறிவு மாட சிமைப்படாமையால் - மதிமகளத்தின் மாண்டவறிவினளவொன்றும்

அவ்வறிவுடையார்க்கு அவராசையற்ற பொய்மையும், மெய்மை
முடை பொருவாயிருக்கையும், விளங்கித்தோன்றலால் தோயாவென்னும்,
சொல்லினர். (நு)

தங்கலம்பாரிப்பார் தோயார்தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள்.

இ-ள், தகை - ஆடல்பாடல் அழகென்பவைகளாலே, செருக்கிக்களித்து, புன்னலம்- (தம்) புல்லியகலத்தை, பாரிப்பார் - (விலைகொடுப்பவர்க்கெல்லாம்) பரப்புமகளிரது, தோள் - தோளை, தங்கலம் - (அறிவொழுக்கங்களாலாகிய) தமதுபுகழை, பாரிப்பார்-உலகத்தே பரப்புதற்குரிய) உயர்ந்தோர், தோயார்- தீண்டார்—எ-று. (கருத்து) தமதுபுகழைவிளக்கும்பெரியோர்வேசையர் தோளைச்சேரார்- என்பதாம். * ஆடல் முதலிய மூன்று முடைமை அவர்க்குமேன்பாடாகலால் தகையென்றும், தோய்ந்தால் அறிவொழுக்கங்கள் அழியுமாகலால்- அவ்வறிவொழுக்கங்களாலே புகழ்பரப்புவோர் தோயாரென்றும், சொல்லினர். [இவைமூன்றுபாட்டாலும் அவரை உயர்ந்தோர் தீண்டாரென்பது சொல்லப்பட்டது.] (கூ)

நிறைநெஞ்சமில்லவர் தோய்வர் பிறநெஞ்சிற்
பேணிப் புணர்பவர்த்தோள்.

இ-ள்- நெஞ்சின் - நெஞ்சினால், பிற-வேறுபோருள்களை, பேணி-ஆசைப்பட்டு, (அவைகொடுப்பவனை) புணர்பவர் - (அவைகாரணமாக மெய்யினாலே) புணருமகளிரது, தோள்-தோள்களை, நிறைநெஞ்சமில்லவர் - நிற்கச்செய்தலினாலே (திருந்திய) நெஞ்சமில்லாதவர், தோய்வர்-சேர்வர்—எ-று. (கருத்து) நன்மனமில்லாதவர் வேசையர்தோள்களைச்சேர்வார் - என்பதாம். * பொருளும் அதனால் படைக்கப்படுவனவும் - விரும்புகிறநெஞ்சு அவை மேலிறுத்தலால் புணர்வது அவருடைப்புமாத்திர மென்பதறிந்து அதன்வழி ஓடாத நிற்குநெஞ்சையுடையார் தோயாமையால்- அஃதில்லாதார்தோய்வரென்றார். (எ)

ஆயுமறிவின ரல்லார்க் கணங்கென்ப
மாய மகளிர் முயக்கு.

இ-ள்- மாயமகளிர் (உருவுசொற்செயல்களால்) வஞ்சித்தலில்வல்லமகளிரது, முயக்கு - புணர்ச்சியை, ஆயும் -(அவ்வஞ்சனையை) ஆராய்ந்தறியும், அறிவினாரல்லார்க்கு - அறிவுடையவரல்லாதவர்க்கு, அணங்கு-அணங்குதர்க்கு, என்ப-என்று (நூலோர்) சொல்வர்—எ-று. (கருத்து) அறிவில்லார்க்கு வேசையர் புணர்ச்சியை நூலோரணங்கென்பவர்-என்பதாம், * அணங்குகாமவழியால் உயிர்கொள்ளுந் தெய்வமகளிர். தாக்கு- தீண்டல்-இவ்வுருவகத்தால்- அப்புணர்ச்சி முன்னே

டுஞ்சி துபோலேதோன்றிப் பின்பு உயிர்கொள்ளுதல்பெற்றும். இதனா
லோர்துணிவென்பதுதோன்ற அவர்மேல்வைத்துச்சொல்லினர். (அ)

வளைவிலா மாணிழையார் மென்றோள் புணையிலாப்
பூரியர்க ளாழு மளறு.

இ-ள். வளைவிலா-(உயர்ந்தோர் இழிந்தோரொன்னுதலிலைகொடுப்
பவர் யாவரேனும்) கூடும், மாணிழையார் - மாட்சிமைப்பட்ட ஆபரண
தையுடையவரது, மென்றோள் - மெல்லியதோள்கள், புணையிலர் (அ
க்குற்றத்தையறியும் அறிவில்லாத, பூரியர்கள்- கீழ்மக்கள், ஆழும் (பு
குந்து) அழுந்தும், அளறு - நரகமாம்—எ-று. (கருத்து.) வேசையர்
தோள்கள் கீழ்மக்களழுந்து நரகமாம் - என்பதாம் * சாதியாலிழிந்தா
னை நீக்குதற்கு - புணையிலாம் பூரியர்களென்றும், அவராழ்தற்கேது
உருவுமுதலாகிய மூன்றுமேயென்பதுதோன்ற - மாணிழையார் மென்
றோளென்றும், அவர்க்குநரகத்தைத் தடையில்லாமல் தருமென்று
தோன்ற உருவகமாக்கியும், சொல்லினர். (கூ)

இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுங்
திருவீக்கப் பட்டார் தொடர்பு.

இ-ள். இருமனப்பெண்டிரும் - கவர்மனத்தையுடையமகளிரும்
கள்ளும்- கள்ளும், கவரும்-சூதும், திரு - திருமகளால், நீக்கப்பட்டா
ர்- விடப்பட்டவர்க்கு, தொடர்பு - நட்புக்களாம்—எ-று. (கருத்து) வே
சையரும், கள்ளும், சூதும், இலகுமியால் விடப்பட்டவர்க்கு நட்பாம்
என்பதாம். * இருமனம் (ஒருவனேநீ) கூடுதலும்-கூடாமையும்-ஒருகா
லத்திலேயுடையமனம், கள்ளும் சூதும் பரத்தையர்க்குச்சமானமானகு
ற்றமுடையவைகளாலே உடன்சொல்லப்பட்டன. வருகின்ற அதிகா
ரமுறைமையும் இதனாலே அறிக. திருநீக்கப்பட்டமை இவ்வடையாள
ங்களால் அறியப்படுமென்பதாம். [இவைதான்குபாட்டாலும் அது செ
ய்பவர் இழிஞரென்பது சொல்லப்பட்டது.] (ஙி)

கூஉ - ஆம், அதி - கள்ளுண்ணாமை.

அஃதாவது- இனி ஒழுக்கமும் உணர்வும் அழித்தலில் பரத்தையை
மோடுஒப்பதாகிய கள்ளினை உண்ணாமையதுசிறப்பு. எதிர்ம
றைமுகத்தாலேசொல்லுகிறார்.

உட்கப் படாஅரொளியிழப்ப வொற்றாண்றுங்
குட்காதல் கொண்டொழுகு வார்.

இ-ள். கட்காதல்கொண்டு- கள்ளின்மேலே ஆசைகொண்டு; ஒருவர்-நடக்குமரசர், எஞ்ஞான்று -எக்காலத்தும், உட்கப்படா அர் - (பகைவரால்) அஞ்சப்படார்—(அதுவேயல்லாமல்) ஒளி - (முன்பெற்று) நின்ற(ஒளியையும், இழப்பர்-இழந்துவிடுவர்—எ-று.(கருத்து.)கள்ளினது விச்சையைவைக்குமாசர் அஞ்சார் புகழையிழப்பர் - என்பதாம்.* அறிவில்லாமையால் பொருள் மாடைமுதலியவைகளால்பெரியராகிய காலத்தும் பகைவர் அஞ்சார் தம்முன்னோரால் அடைந்த ஒளியும் இகழப்படுதலால் இழப்பரென்பதாம். [இவை இரண்டுபாட்டாலும் அரசரீண்டு இனிதுசொல்லாதென்பது இதனாலே சொல்லப்பட்டது.] (க)

உண்ணற்க கள்ளை யுணினுண்க சான்றோரா
லெண்ணப்படவேண்டா தார்.

இ-ள். (அறிவுடையாராயினோர்) கள்ளை-(அவ்வறிவுகெடுதற்கு வதுவாகிய) கள்ளினை, உண்ணற்க- உண்ணாதிருக்கக்கடவர், உணில்- உண்ணவேண்டுவாருண்டாயின், சான்றோரான் - நல்லோரால், எண்ணப்படவேண்டாதார் - மதிக்கப்படவிரும்பாதார், உண்க - உண்ணக்கடவர்—எ-று. (கருத்து.) கள்ளையுண்ணாதிருக்கக்கடவர், மதிக்கத்தகாதிருண்ணக்கடவர்- என்பதாம். * பெறுதற்கரிய அறிவைப்பெற்றிருந்தும் கள்ளால் அழித்துக்கொள்ளுவானை இயல்பாகவே அறிவில்லாத மிருகங்களுடனேயும், எண்ணுவராகலால் சான்றோரா லெண்ணப்படவேண்டாதாருண்கவென்றார்.)

ஈன்றாண் முகத்தேயு மின்னாதா லென்வற்றுச்
சான்றோர் முகத்துக் களி.

இ-ள். ஈன்றாண்முகத்தேயும்- (எதுசெய்தாலும்) தாய்முன்பாயினும், களி- (கள்ளுண்டு) களித்தல், இன்னாது- துன்பந்தருவதாம் (ஆகலால்) —மற்றுச்சான்றோர் முகத்து - பின் (குற்றமியாதும்பொறுத்த) பெரியோர் முன்பு அக்களித்தல் என்- (அவர்க்கு) யாதாகும்—எ-று.(கருத்து.) தாய் முன்னங்களித்தல் துன்பமாம் பெரியோர்முன் கள்ளுண்டுகளித்த லெவ்வாறாயினும், எனபதாம், * ஆல்- அசை, மனமொழிமெய்களால் செய்யப்படாமையால் நாணம் அழியும் அழிவுவேதாய்க்கும் இன்னாமை- இருமையும் கெடுத்தலறிந்து தாயத்தே கடியும் பெரியோர்க்கு இன்னாதாகல் சொல்லவேண்டுமோ வென்பதாம். (ங)

தானெண்ணுகல்லாள் புறங்கொடுக்குங்கள்ளென்னும்
பேணாப்பெருங்குற்றத் தார்க்கு.

(இ-ள்) கள்ளென்னும் - மதுவென்றுசொல்லப் படுகின்ற,பேணாவாகும்) இகழும், பெருங் குற்றத்தார்க்கு - மிகுந்த குற்றத்தை யுடை

ப்பவர்க்கு, நாணென்னுமில்லாள் - நாணமாகியபெண்ணல்லவள்—(அதைப்பா
தற்கு அஞ்சி புறங்கொடுக்கும் - எதிர்முகமாகாள்—எ-று. (கருத்து)
ள்ளுண்பவர்களுக்கு நாணமில்லை-என்பதாம். * காணுதற்கும் அஞ்சி
உலகத்தார் தூதற்றேநீங்குவார், ஆகலால் பேணுவென்றும் பின்னெ
ருவழியிலும் நீக்கப்படாமையால்- பெருங்குற்றமென்றும், இழிந்தோ
ரிடத்து நில்லாமையால்- நல்லாளென்றும், சொல்லினர். [இவைமூன்
றுபாட்டாலும் ஒளியிழத்தற்காரணம் சொல்லப்பட்டது,] (சு)

கையறியாமை யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறியாமை கொளல்

இ-ள். (ஒருவன்) பொருள்கொடுத்து - விலைப்பொருளைக் கொடுத்
து, மெய்யறியாமை - (கள்ளாலேதனக்கு) மெய்ம்மறதியை, கொளல்-
கொள்ளுதல், கையறியாமை - (அவன்பழவினைப்பயனாகிய) செய்வதி
யாமையை, உடைத்து - (தனக்குக்காரணமாக) உடைத்து—எ-று.
(கருத்து) கட்குடித்தமெய்ம்மறதியைக்கொள்ளுதலறிவில்லாமை யுடை
து- என்பதாம். * தன்னையறியாமைசொல்லலே மற்றவையாவையும்
அறியாமைசொல்லவேண்டாவாயிற்று. அறிவார் விலைகொடுத்து ஒன்
றைக்கொள்ளுங்கால் தீயனவாகக்கொள்ளாமையால் மெய்யறியாமைகொ
ளல் முன்னையறியாமையால் வந்ததென்பதாம். (இ)

துஞ்சினார்செத்தாரின் வேறல்லரொஞ்ஞான்று
நஞ்சுண்பார் கள்ளுண்பவர்.

இ-ள். துஞ்சினார்- உறங்கினவர், செத்தாரின்- இறந்தவரின், வே
றல்லர் - (வேறுயிலும் அக்காலத்தே அறிவில்லாமையால்) வேறென
ப்படார்— (அப்படியே) கள்ளுண்பவர் - கள்ளுக்குடிப்பவர், எஞ்ஞான்
றும் - எக்காலத்தும், நஞ்சுண்பார் - (அறிவில்லாமையால்) நஞ்சுண்ப
வரோவர் (அவரின்வேறுயிலும்) வேறெனப்படார்—எ-று. (கருத்
து,) கள்ளைக்குடித்தவர் நஞ்சைக்குடித்தவர்க் கொப்பாவார்- என்பதா
ம், * உறங்கினவர்க்கும், கள்ளுண்பவர்க்கும், வேற்றுமைமூச்சு நிற்
ல். [இவை இரண்டுபாட்டாலும் அவர்- அறிவிழந்தவின் குற்றம்சொல்
லப்பட்டது-] (சு)

உள்ளொன்றி யுள்ளூர் நகப்படுவதொஞ்ஞான்றுங்
கள்ளொற்றிக் கண்சாய் பவர்.

இ-ள். கள்ளொற்றி- கள்ளைமறைத்து— (குடித்து) கண்சாய்பவர்
(அக்கினிப்பால்) அறிவுசோர்பவர், உள்ளூர்வாழ்பவரால்- உள்ளொ
ன்றி- உள்ளேநடக்கிறகாரியத்தை - ஆலோசித்து, அறிந்து - எஞ்ஞான்
றும் என்னாளும், நகப்பவர் - சிரிக்கப்படுவார்—எ-று, (கருத்து) க
ள்ளுக்குடித்தறிவுமயங்குவோர் சிரிக்கப்படுவார் - என்பதாம்- * உ

நுணர்தல் - சோர்வினாலே களிப்பினை அறிந்து அதனால் கள்ளுண்ணாமை அறிதல்.

(எ)

களித்தறியே னென்பது கைவிடுக வெஞ்ஞான்
றெளித்தது தூஉ மாங்கே மிகும்.

இ-ள். களித்தறியேனென்பது- (மறைந்துண்டு) கள்ளுண்டறியேனென்று (உண்ணுதல்வபாழுது நபது ஆசாரஞ்) சொல்லுதலை, கைவிடுக - விடக்கடவா அவ்வுண்டவபொழுதே, வெஞ்ஞான்றெளித்தது தூஉம் - முன்பிறர் அறிந்தால் இழுக்காமென்று மனத்தில் ஒளித்தகுற்றமும், ஆங்கேமிகும்-முன்னை யளவின்மிகுந்து வெளிப்படும்.(ஆதலால்)—எ-று. (கருத்து.) கட்குடிக்கு லுட்பொருள் வெளிப்படுமானையால் ஆசாரஞ்சோருதலைக் கைவிடக்கடவர் - என்பதாம். * [இவை இரண்டுபாட்டாலும் அறு முறைக்கப்படா தென்பதுசொல்லப்பட்டது.]

(அ)

களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று.

இ-ள். களித்தானை- (கள்ளுண்டு) களித்த ஒருவனை, காரணங்காட்டுதல் - (இது ஆகாதென்று மற்றொருவன்) காரணங்காட்டித் தெளிவித்தல், கீழ்நீர்க்குளித்தானை - நீருள்ளே மூழ்கிய ஒருவனை, தீ- விளக்கினால், துரீஇயற்று - (மற்றொருவன்) தேடுதலையொக்கும்—எ-று. (கருத்து.) கட்குடித்தவனைத் தெளிவித்த லெதுபோலெனில் நீருள்ளே மூழ்கினவனை விளக்கினாற்றேடுதலொக்கும்-என்பதாம். * நீருள் விளக்கு செல்லாமைபோல் அவன்மனத்துள் காரணம் செல்லாதென்பதாம். இதனாலவனைத் தெளிவித்தல் முடியாதுமெசொல்லப்பட்டது.]

(ஆ)

கள்ளுண்ணப் போழ்திற் களித்தானைக் காணுங்கா
லுள்ளான்கொ லுண்டதன் சோர்வு.

இ-ள். (கள்ளுண்பவனொருவன்)-கள்ளுண்ணப்போழ்தில், கள்ளுண்ணுமல் தெளிந்திருந்தபொழுதில், களித்தானை- (கள்ளுண்டு) களிதபிறனை, காணுங்கால்-காணும்போது, உண்டதன் சோர்வு -(தான்) உடபொழுது உண்டாந்தன்சோர்வை, உள்ளான்கொல் - (அவன்சோவால் அதுவில் இப்படிப்பட்டதென்று) நினையான்போலும்—எ-று. (கருத்து.) கள்ளுண்பவன் தான்குடியாதபோது குடித்தவனைக்கண்டு தசோர்வை நினையான்போலும்-என்பதாம். * சோர்வு மனமொழி மெய்கள் தன்வசப்படாமை; [கருத்தளவையால்- அதனிழுக்கத்தை ஆலோசித்து அறிந்தால்-ஒழியுமென இதனால் அது ஒழிதற்காரணம் சொல்லப்பட்டது.]

(இ)

கூசு - ஆம், அது - சூது.

அஃதாவது, இவரி அக்கள்ளுண்டல்போல் அறம்பொருளின்பங்களுக்குக் கடையாகிய சூதாடலும் பிணி யறுவிக்குமென்று சொல்லத்தொடங்கி முதலிலே சூதினது இயல்பு சொல்லுகின்றார்.

வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉங்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.

இ-ள். வென்றிடினும் - (தான்) வெல்லும் வலிமை யுடையவனேயினும், சூதினை-சூதாடுதலை, வேண்டற்க - விரும்பாதிருக்கக்கடவன், வென்று- பொருள்பெறுவார் (உண்டென்றால்) —வென்றதூஉம் - அவ்வென்றபொருளும், தூண்டிற்பொன் - (இரையால் மறைந்த) தூண்டிலை, மீன்விழுங்கியற்று-மீன்விழுங்கியதுபோலும்—என்று. (கருத்து.) வெல்ல வல்லவனேயினுஞ் சூதை விரும்பாதிருக்கக் கடவன் வென்ற பொருளுந் தூண்டிலைமீன் விழுங்கியதுபோலும்- என்பதாம். வெல்லுதல் நிச்சய மில்லாமையால் வென்றிடினுமென்றும், கர்மங்கள் பலவுங்கெடுதலால் - வேண்டற்க வென்றும், சொல்லினார். எய்திய பொருள் சூதாடுவார் நீங்காமைகிட்டுதலை யென்பதுபற்றி, அதனாலேபின் துயருழத்தலும், உளைமையாற் பெற்றும்.

ஒன்றெய்தி நூறிழக்குஞ் சூதர்க்கு மூன்றாங்கொ
ணென்றெய்தி வாழ்வதே தாறு.

இ-ள். ஒன்றெய்தி - (அத்தூண்டிலிரும்புபோன்ற) ஒன்றினாலே பெற்று, (இன்னும் பெறுவோமென்னுங் கருத்தால்) நூறிழக்கும் - தம் பற்றினை இழந்துவறியராகும், சூதர்க்கும் - சூதாட்டமுடையவர்க்கும், மூன்றெய்தி - (அப்பொருளால்) அறமுமின்பமும்பெற்று, வாழ்வதே ஆறு - வாழ்வீதொருவழி, உண்டாங்கொல் - உண்டாமோ—என்று. (கருத்து.) ஒருபொருள்பெற்று நூறுபொருளிழக்குஞ் சூதாடுவோர்க்கு நன்மை பெற்றுவாழும் வழியுண்டாமோ - என்பதாம். * அவ்வழியும் பொருளிழந்தே வருதலால் அதனாலே பெரும்பயனும் அவர்க்கு இல்லையென்பதாம்.

உருளாய மோவாது கூறிற் பொருளாயம்
போழ்ப்புறமே படும்.

இ-ள். உருளாயம்- உருளுங் (கவற்றில் அகப்பட்ட) ஆகாயத்தை ஓவாது - இடைவிடாமல், கூறிம்-சொல்லிச் (சூதாடு) மாயின், பெ
ள் - (அரசன் சம்பாதித்த) பொருளும், ஆயம் - (அவன்) பொருள் ம் வழியும், போழ்ய : (அவனைவிட்டுப்) போய், புறமேபடும் - பகை டத்தேதங்கும்—என்று.(கருத்து.)அரசன் சூதாடுவானாயினவன்பெ ரு மப்பொருள் வரும்வழியும் பகைவரிடத்துப்போம் - என்பதாம்.

*கவற்றினுருட்சியை அதனுலாகிய ஆயத்தின்மேல் ஏற்றியும் சூதாடுகை அதுசொல்லாகிய காரணத்தின் மேலிட்டும், சொல்லிலும், காத்தலிலும், மெய்தலிலும், கருத்திலைகளால் அவைஇரண்டும் பகைவரிடத்தே செல்லுமென்பதாம். (ஈ)

சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
வறுமை தருவதொன்றில்.

இ-ள். சிறுமைபல-(முன்னில்லாத) துன்பங்கள்பலவும், செய்து-(தன்னை விரும்பினவர்க்குச்) செய்து, சீர்-(உள்ள) புகழையும், அழிக்கும்-கெடுக்கும், சூதின-சூதுபோல், வறுமை-வறுமையை, தருவது-கொடுக்கவல்லது, ஒன்று-வேறொன்று, இல்-இல்லை—எ-று.(கருத்து.) துன்பங்களை யுண்டாக்கிப் புகழையும் கெடுக்குஞ் சூதைப்போல வறுமையைக் கொடுப்பதொன்றில்லை-என்பதாம். *அத்துன்பங்கள் பின்னேசொல்லப்படும், நல்வினைகளையும்-நல்வினைத்தினையும்-நீக்கி-தீவினைகளையும்-தீவினைத்தினையும்-கூட்டுதலால்-சீரழிக்குமென்றார். சூதாடுவோர் வறுமைக்கு எல்லையாவரென்பதாம். (சு)

கவறுங் கழகமுங் கையுந் திருக்கி
யிவறியா ரில்லாகி யார்.

இ-ள். இல்லாகியார்-(முற்காலத்திலே தாம் இருந்து) இல்லாதவராயொழுகினவர், கவறும்-சூதினையும், கழகமும்-அதையாடுமிடத்தினையும், கையும்-(அவ்வாடுதற்குவேண்டுங்) கைத்தொழிலினையும், திருக்கிவிவறியார்-மேற்கொண்டு கைவிடாதவேந்தர்—எ-று.(கருத்து.) சூதையுஞ் சூதாடுமிடத்தையுஞ் சூதாடுதொழிலையுங் கைவிடாத வெல்லும்பொருளிருந்து மில்லாதவரோ-என்பதாம். *கைத்தொழில்-வெல்லும்படி பிடித்தெறிதல்-மேற்கொள்ளுதலாலே பாண்டவர் தம்மரசிழந்து காட்டிலேபோய் அங்கேமறைந்தொழுகினரென அனுபவங்காட்டியபடி. [இவைஐந்துபாட்டாலும் அதனது வறுமையுண்டாக்கற் குற்றம்சொல்லப்பட்டது.] (ரு)

அகடாரா ரல்ல லுழப்பர்சூ தென்னு
முகடியான் மூடப்பட் டார்.

இ-ள். சூதென்னும்-(தனதுபெயர் சொல்லல் மங்கலமல்லாமையால்) சூதென்று வேறுபெயர் சொல்லப்படுகிற, முகடியால்-மூதேவியால், மூடப்பட்டார்-விழுங்கப்பட்டவர், அகடாரார்-(இம்மையிலே) வயிறு நிறையப்பெறார், அல்ல லுழப்பர்-(மறுமையிலே) நரகத்தின்பமநுபவிப்பர்—எ-று. (கருத்து.) சூதென்னு மூதேவியால் விழுங்கப்பட்டவரிம்மையில் வறுமையு மறுமையில் நரகமநுபவிப்பர்-என்பதாம். *செல்வங்கெடுத்து வறுமை கொடுத்தற் றொழில் வேறுபடாமையால் சூதென்னு முகடியென்றும், வெற்றி தோற்புநோக்கி ஒருபொழுதும்

விடாராகலால், இங்கே அகடாராவென்றும், பொய்களவு முதலாகியபாவங்கள் சம்பாதித்தலால் - அங்கே அல்லலுழப்பவென்றும், சொல்லினும், வயிறுமை சொல்லலே மற்றை ஆகட பணிமுதலாகிய புலன்களை அனுபவிக்கப்பெறுமை சொல்லவேண்டாவாயிற்று. (கூ)

பழகிய செல்வமும் பண்புங் கெடுக்குங்
கழகத்துக் காலை புகின்.

இ-ள். காலை - (அறம்பொருளின்பங்களுக்கு விதித்த) காலம், கழகத்து - சூதாடுமிடத்து, புகின் - (அரசனுக்குக்) கழியுமாயின், (அக்கழிவு) பழகியகெடுநாளாய்வந்த, செல்வமும் - (அவன்) செல்வத்தையும், பண்பும் - தற்குணங்களையும், கெடுக்கும் - அழிக்கும்—என-து. (கருத்து) அரசன் சூதாடில் அவ்வாட்டமவன் செல்வத்தையுங் குணத்தையும் அழிக்கும் - என்பதாம்; * தான்செய்துகொள்ளும் அறமுதலானவைமாத்திரமல்லாமல் முன்தொடர்ந்துவருகின்றசெல்வமும், முன்செய்த நல்வினையிலாகிய நற்குணங்களும் இல்லாமற்போமென்பதாம்.

பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ யருள்கெடுத்
தல்ல லுழப்பிக்குஞ் சூது.

இ-ள். சூது - சூதாட்டமானது, பொருள்கெடுத்து - (தன்னைப்பழகினவனது) பொருளைக்கெடுத்து, பொய்-பொய்யை, மேற்கொளீஇ-மேற்கொளப்பண்ணி, அருள்கெடுத்து- (மனதில் எழுகிற) அருளைக்கெடுத்து, (இவ்வழியால்,—அல்லலுழப்பிக்கும் - அவனை (இருமையிலும்) துன்பமுறுவிக்கும்—எ-று. (கருத்து.) சூதாட்டமானது பொருளைக்கெடுத்துப் பொய்யைமேற் கொள்ளச்செய்து இருவினையைக்கெடுத்துத் துன்பத்தை விளைவிக்கும் - என்பதாம்; * பொருள்கெடுத்தல் முதலாகிய மூன்றும் சூதினுடைய தொழில்களாகவும், அவைகளுக்கு- தோற்புவெற்றி கோபம் என்பன்முறையே சாதனங்களாகவும், கொள்க, முன்னியதால் - இம்மையிலும், பின்னைவைகளால் மறுமையிலும், ஆம். (அ)

உடைசெல்வ மூணெளி கல்வியஞ் சைந்து
மடையா மாயங் கொளின்.

இ-ள். (அரசன்) ஆயம் - சூதினை, கொளின் - (தனக்குவிளையாடுத்தொழிலாக) விரும்புவானாயின், ஒளி- ஒளியும், கல்வி-கல்வியும், செல்வம் - செல்வமும், ஊண்- ஊணும், உடை- உடையும், என்றைந்தும், என்றிவ்வைந்தும், அடையாவாம் - (அவனைச்) சேராவாம்—எ-று. (கருத்து) அரசன் சூதாட்டத்தை விரும்புவானாகில் கீர்த்தியும் கல்வியும் செல்வமும் ஊணுமுடையுமவனைச் சேராவாம் - என்பதாம்; * ஆயம் சூதுக்கு ஆகுபெயர், இம்முறை செய்யுளுக்கினையப் பிறழ்ந்தது, செம்- அறுவகை உறுப்புக்கள். ஊணுடையென்பவைகளால் அனுபவிப்பதிவனவெல்லாம் கொள்ளப்படும். காலமும் கருத்தும், பெறுமையும்

னைவ உண்டாகாவென்பதாம். [இவை நான்குபாட்டாலும் சிறுமைப் லுசெய்து ஆனைவகளால் இருமையுங்கெடுத்தல் சொல்லப்பட்டது.] (கூ)

இழந்தொறூஉங் காதலிக்குஞ் சூதேபோற் றுன்ப
மூழந்தொறூஉங் காதற் றுயிர்.

இ-ள். இழந்தொறூஉம் - (சூதாடலால் இருமைப்பயன்களையும்) இழக்குந்தோறும், காதலிக்கும்- (அதன்மேலே) ஆசைசெய்யும், சூதே போல்-சூதனேபோல், உயிர்-உயிரானது, துன்பமுழந்தொறூஉம்-(உடம்பால்) மூவகைத் துன்பங்களையும் அனுபவிக்குந்தோறும், காதற்று-(அதன்மேலே) ஆசையையுடைத்து—எ-று. (கருத்து.) இருமைப்பயன்களை யிழக்குந்தோறுஞ் சூதினையிச்சிக்குஞ் சூதன்போல் உயிரானது துன்பங்களை யனுபவிக்குந்தோறு மதன்மேலாசையுடையது - என்பதாம். * சூது ஆகுபெயர். உயிரினது அறியாமை சொல்லுவார்போன்று சூதனது அறியாமை சொல்லுதல் கருத்தாகலின் அதனை உறுதிப்படுத்தற்பொருட்டு உவமானமாக்கினர். [இதனைதிர் மறைமுகத்தால் சூதைவெறுத்து நடப்பவனையொக்கும் உடம்பினைவெறுத்து நடக்கின்ற உயிரெனவுங்கொள்க.] இதனால் அதைவிடுதற் கருமையும் விட்டவரது பெருமையும் சொல்லப்பட்டன. (ஙி)

கூரு - ஆம், அதி - மருந்தும்

பழவினையாலும் காரணங்களாலும் மனிதர்க்கு வாதமுதலாகிய பிணிகளவரும் அவைகளுள் பழவினையால் வருவன அவ்வினை கழியும்போதல்லாமல் தீராமையால் அவையொழித்து மற்றைக்காரணங்களால்வரு மவைகளைத் தீர்க்குமருந்தின் நிறம்சொல்லுகின்றார். காரணங்களாவன-உணவு தொழில்களது ஒவ்வாமையாதலால் பிணிகளுங்காரணங்களால் வருவனவாயின.

மிகினுங்குறையினு நோய்செய்யு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று.

இ-ள். (உணவும் செயல்களும் ஒருவன் சரீரசுபாவத்துக்கு ஒத்தளவினவன்றி) மிகினும் - (அதனின்) மிகுமாயினும், குறையினும்-குறையுமாயினும்; நூலோர்-ஆயுள்வேதமுடையோரால், வளிமுதலா- வாதமுதலாக, எண்ணிய - எண்ணப்பட்ட, மூன்று- மூன்றுநோயும், நோய்-துன்பத்தை, செய்யும்- (அவனுக்குச்) செய்யும்—எ- று. (கருத்து.) உணவுந்தொழிலு மிகுந்தாலுங் குறைந்தாலும் பிணிமூன்றுந் துன்பஞ்செய்யும்- என்பதாம். * நூலோரென்னியவெனவே அவர் அவைகளால் வகுத்தவாதப்பகுதி - பித்தப்பகுதி - சிலேஷ்மப்பகுதி - என்கிற

ப்குதிப்பாடும் பெற்றும். அனைவருக்கு உணவு ஒத்தலாவது. கை
.றியங்களாலும், அளவாலும், பொருந்துதல். செயல்கள் ஒத்தலாவது
மனமொழி மெய்களாலே செய்யுஞ்செயல்களோ அவை வருந்துவதற்கு
முன்னே யொழிதல் இவ்விரண்டும் இப்படி பல்லாமல் மிகுந்துகுறை
யிலும் அவைகள் தன்னிலையிலே நில்லாமல் வருந்துமென்பதாம். [இ
தனால் உடம்புகளுக்கு இயல்பாகிய மூவாய்மூவகையென்பதும், அவை
தான்படுந்தொய்தற்காரணம் - இருவகையென்பதும், சொல்லப்பட்டன
இன்பமுந்தொய்தற்காரணம் பின்னே சொல்லுவர். (4)

மருவுதினவேண்டாவாம் யாக்கைக் கருங்கிய
கூற்றதுபோற்றி யுணின்.

இ-ள். (ஒருவன்) அருங்கியது-(முன்) உண்ணப்பட்டது, அற்றது
சீரணித்தபோழ்தை, போற்றி - (குறிகளாலே) தெளியவறிந்து, உணின்
(பின்னே) உண்டானாலென்ன, யாக்கைக்கு - (அவ) னுடம்புக்கு, மருவி
னை-அமிழ்தமென்று, வேண்டாமாம்- வேறுவேண்டுவதில்லை —எ-று.(
ருந்து.) உண்ணப்பட்டது சீரணித்தலையறிந்து துண்பானைவனுக்கு
ருந்து வேண்டாமாம்- என்பதாம். * குறிகளாவன-உடம்பு சிறுகியிரு
தல் - மோக்கம் பரிசுத்தமாயிருத்தல்- காசரணை கரணங்கள் தொழிற்
நிபவாதல்-பசிமிகுதல் - என்னிவை முதலாயின. பிணிகள் உடலுக்கு
ஆருதலால்-யாக்கைக்கெதிரி. உணினென்பது அதனருமை நோக்
றநின்றது. (2)

அற்றலவறிந்துண்க வஃதுடம்பு
பெற்றெனொடி துய்க்கு மாறு.

இ-ள். அற்றல்- (முன்னுண்ணப்பட்டது) அற்றல், பின்னுண்ண
ப்படுவதனை-அளவறிந்து (அறு) மளவறிந்து, உண்க-(அவ்வளவினதை)
உண்ணக்கடவன், உடம்பு - (பெறுதற்கரிய விம்மனிதப்) உடம்பைப்பெ
ற்றவன் - பெற்றவன், கொடிது - கொடுங்காலம், உய்க்குமாறு-(அதனை
கொண்டு செலுத்தும்வழி, அஃது- அதுவாம், (ஆதலால்)—எ-று. (அ
த்து.) உடலெக்கொண்டவன் அவனுடலை யிருக்குப்படி சீரணித்த வளவி
ன்றுண்ணக்கடவன்-என்பதாம். * இம்மை மறுமை வீடுபேறுகளை அடை
தற்குரியது இம்மனிதவுடம்பொன்றுமே யாகலால் உடம்புபெற்ற கா
லென்றும், அது கொடுங்காலம் நின்றவிடத்து அடைவுபெறுதச்செய்து கொ
ள்ளலா மாகலால் கொடிதுய்க்குமாமென்றும், சொல்லினர். (3)

அற்றதறிந்து கடைப்பிடித்துமாதல்ல
துய்க்க துவரப் பசித்து.

இ-ள். அற்றதறிந்து-(முன்னுண்ணப்பட்டது) அற்றபடியைத்
தறிந்து, துவரப்பசித்து-பின்னே மிகப்பசித்து (உண்ணுமபோது)—மாதல்

மாறுகொள்ளாத வுணவுகளை, கடைப்பிடித்து - குறிக்கொண்டு—நெய்ச - உண்ணைக்கடவன்—எ-று. (கருத்து.) பிரிக்கத்தவல்வகிக்து மாறில்லா வுணவுகளை யுண்ணைக்கடவன் - என்பதாம். * அற்றதறிதலைப் பின்னுஞ் சொல்லியது அதனை உறுதிப் படுத்தற்பொருட்டு. உண்டது அற்றலும் அதன்மையறிய இரதம் ஆறுநாகலால் அதுவும் அறல்வேண்டுமென்றற்கு- மிகப்பசித்தன்றுர். மாறுகொள்ளாமையாலது உண்பவன் சரீர சுபாவத்தோடு மாறுகொள்ளாமையும், காலவியல்போடு மாறு கொள்ளாமையும், சுளவிரியங்களால் தம்முள்ளே மாறுகொள்ளாமையும், ஆம். அவையாவன முறையே உணவு வாத பித்த சிலேஷ்மங்களாகிய சரீரசுபாவங்களுக்கு அடைபடாதனவைகளைச் செய்வனவாதலும். * பெரும்பொழுது ○ சிறுபொழுது என்கிற காலவேறுபாடுகளுள் ஒன்றற்கு ஆவன பிரிதொன்றற்கு ஆகாமையும், சேரும் நெய்யும் தம்முள் ஒத்து நஞ்சாதல் போலவனவும், ஆம் அவைகளைக் குறிக்கொள்ளாது மனம்பட்டவழியால் உண்டால் அதனால் நோயும் மரணமும் வருதலால்-கண்டப்பிடித்தன்றுர். (ச)

மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணி
னூறுபா டில்லை யுயிர்க்கு.

*இ-ள். மாறுபாடில்லாத - அம்மூவகை மாறுகோளும் இல்லாத, உண்டி - உணவை, மறுத்து-(தன்னுள்ளம் வேண்டியவளவை) மறுத்து, (பிணிவாராதவள்ளில்) (உண்ணின்-ஒருவன்) உண்டால், உயிர்க்கு (அவ) னுயிர்க்கு, ஊறுபாடு- (பிணிகளாலே) துன்பம்வினைதல், இல்லை-உண்டாகாது—எ-று. (கருத்து) நல்லுணவையுண்டாற் பிணிகளாற்றுன்பமில்லை-என்பதாம். * துன்பமுறுவது உயிரோயாதலால் அதன்மேல் வைத்துச் சொல்லினுர். மாறுபாடில்லாத விடத்தும் குறைதல் தன்றென்பதாம். [இவைதான்குபாட்டாலும் உண்ணப்படுவனவும், அவை வினைளவும், காலமும், பயனும் சொல்லப்பட்டன.] (நு)

இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்கும்
கழிபே ரிரையான்க ணோய்.

இ-ள். இழிவறிந்து-அக்குறைதலை (நல்லதென்று) அறிந்து, உண்பான்கண் - (அவ்வாறே) உண்பவனிடத்து, இன்பம்போல் - இன்பத்தைப்போல், கழிபேரிரையான்கண் - மிகப்பெரிய இரையை விழுங்குவானிடத்து, நோய்- நோயானது, நிற்கும் - நிச்சயிருக்கும்—எ-று

* பெரும்பொழுது- கார்-கூதிர்-முன்பனி-பின்பனி-இளவேனில்-முதுவேனில்.

○ சிறுபொழுது-மாலை-யாமம்-வைகறை-காலை-நண்பகல்-எற்பாடு.

(கருத்து.) குறைவாக வுண்பவனிடத் தின்பம்போல் நிறைவாக வுண்பவனிடத்துத் துன்பமிருக்கும்-என்பதாம். * அவ்வாறே யுண்ணலில்-உண்ணுலாமளவிற் சிறிது குறையவுண்டல். இன்பமாவது- வாதமுதலாகிய மூன்றும் தன் தன்னிலையில் வேறுபடாமையால் - மனமொழிமெய்கள் அவன் வசப்படலும், அதனால் அறமுதலாகிய நான்கும் அடைதலும், ஆம் இறையை அருந்துமளவன்றி எடுத்து அதனால் வருந்தும் மிருத்தோடொத்தலால்-இறையாமென்றார். (கூ)

நீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணி
னோயள வின்றிப்படும்.

இ-ள். தெரியான்- (தன்சரீரசுபாவமும் அதற்கேற்றவுணவும் காலமும் ஆராய்ந்தறிந்து, (வேண்டியவுணவை வேண்டியகாலத்து)—நீயளவன்றி - (வயிற்றுத்) தீயளவல்லாமல், பெரிதுண்ணின் - (ஒருவன்)மிகவுண்ணுவானாயின், நோய்-நோயானது, அளவின்றி-அளவில்லாமல், படும் - (அவனிடத்தே) வளரும்—எ-று. (கருத்து.) சீரணித்த தறியாதவனுய் மிகவுண்பானுகில் நோயவனிடத்துண்டாம் - என்பதாம். * [இவை இரண்டுபாட்டாலும் அப்படி உண்ணுதவிடத்தேபடும் இழுக்குச் சொல்லப்பட்டது.] (எ)

நோய்நாடிநோய்முத னுடியதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

இ-ள். (மருத்துவன்)நோய் - நோயாளியிடத்து (நிகழ்கின்ற) நோயை, நாடி - (அதன்குறிகளால் இன்னதென்று) துணிந்து; நோய்முதல் - (பின்பு) அந்நோய்வருதற் காரணத்தை, நாடி - ஆராய்ந்து, அது தணிக்கும்வாய்-(பின்) அதுதீர்க்கும் உபாயத்தினை, நாடி- அறிந்து, வாய்ப்பச்செயல் - (அதனைப்) பிழைபடாமற் செய்யக்கடவன்—எ- று. (கருத்து-) வைத்தியன் வியாதியையு மதன்காரணத்தையு மதுநீக்கு முபாயத்தையு மாராய்ந்து மருந்துவஞ் செய்யக்கடவன் - என்பதாம். * காரணம் - உணவுசெயலென முன்சொல்லப்பட்டலை. அவ்விரண்டையும் நாடுதற்குப்பயன் - நோயையும், உபாயத்தையும், ஐயமறத்துணிதல்.—மருந்துசெய்தல் - உதிரங்கலுதல்-அறுத்தல் - சுடுதல் முதலாகிய செய்கலெல்லாம் அடங்குதற்கு அதுதணிக்கும் வாயென்றார். பிழைபடாமை பழையமருத்துவர் செய்துவருகின்ற முறையிலேதப்பாமை. (ஏ)

உற்ற னளவும் பிணியளவுங் காலமுங்
கற்றன் கருதிச் செயல்.

இ-ள். கற்றன் - (ஆயுள்வேதத்தைக்) கற்றமருத்துவன், (அவ்வுபாயத்தைச் செய்யுங்கால்)—உற்றனளவும் - நோயாளியளவையும், பிணியளவும் - (அவனிடத்து நிகழ்கின்ற) நோயினளவையும், காலமும்

(தன்செயற்கேற்ற) காலத்தினையும், கருதி- (அந்நூல்வழியால்) நோக்கி, செயல்- (அவைளோடு பொருந்தச்) செய்யக்கடவன்—என்று. (கருந்து.) மருந்துவன் பிணியாளியளவையும் பிணியளவையுங் காலத்தினளவைமறிந்து பொருந்தச்செய்யக்கடவன் - என்பதாம் * நோயாளிவளவு-சரீரசுபாவம் - பருவம் வேதனைகளினளவு; பிணியளவு o சாத்தியம்- அசாத்தியம் - யாப்பியம் -எனகிற- சாதிவேறுபாடும், தொடக்கடுவீறென்னும்- அதன்-பருவவேறுபாடும், வன்மைமென்மைகளும், முதலாயின, காலம் முன்சொல்லியது - இக்கூறுன்றும் தப்பாமல் நூல்வழியாலும், அறிவு மிகுதியாலும், ஆராய்ந்துசெய்க வென்பதற்கு, கற்றுன்கருதிச்செயலென்றார். [இவை இரண்டுபாட்டாலும் அவ்விழுக்கம் வந்தவிடத்துத் தீர்க்கும்வழி சொல்லப்பட்டது] (கூ)

உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்
றப்பாலுற் கூற்றே மருந்து.

இ-ள். மருந்து- (பிணிக்கு) மருந்தாவது; உற்றவன்- (அதனை) யுற்றவன்; தீர்ப்பான்- (அதனைத) தீர்க்குமருத்துவன், மருந்து- (அவனுக்குச்சாதனமாகிய) மருந்து, உழைச்செல்வான் - (அதனைத்தப்பாமல்) செய்பவன், என்று- என்றுசொல்லப்பட்ட, அப்பால் - அந்நான்கு பகுதியையுடைய, நாற்கூற்றே- நான்குறுறத்தது—என்று.(கருத்து) பிணிக்கு மருந்தாவது நோயாளி வைத்தியன் மருந்து யென்பவன் இந்நான்குமாம்- என்பதாம் * அவைகளுள் உற்றவன்-வகை நான்காவன, பொருளுடைமை- மருந்துவன் வழிநிற்றல், நோய்நிலையுணர்த்தல் வன்மை- மருந்துத்தன்பம் பொறுத்தல் எனவிவை தீர்ப்பான்வகை நான்காவன நோய்ப்பார்த்தற்கருஞ்சாமை - ஆசிரியனைவழிப்பட்டு அடைந்தகல்வி நுண்ணறிவுடைமை- பலகாலுந் தீர்த்துவருதல் மனமொழி மெய்கள் பரிசுத்தமாதல்- எனவிவை, மருந்தின்வகை நான்காவன, பலபிணிகளுந் தற்றல்- சுவைவீரியம்-விபாகவாற்றல்களால் மேம்படுதல்- எளிதிலே பெறப்படுதல்- சரீரசுபாவத்தோடு பொருந்தல் எனவிவை, இயற்றுவான் வகை நான்காவன, நோயாளியிடத்தே அன்புடைமை-மனமொழிமெய்கள் பரிசுத்தமாதல்- சொல்லிய படியே செய்தல் வல்லமை - அறிவுடைமை- எனவிவை, இவையெல்லாம் கூடியவிடத்தல்லது பிணிதீராமையால் இக்கூட்டத்தை மருந்தென்றார். [இதனுள் அவன் தீர்த்தற்கு வேண்டுவனவெல்லாம் தொகுத்துச் சொல்லப்பட்டது.] (ஐ)

---

o சாத்தியம்- தீர்க்கத்தக்கது, அசாத்தியம்- தீர்க்கத்தகாதது, யாப்பியம்-ஓட்டத்தக்கது.

ஒழிபியல்.

இனி அவ்வாசியன் முதலானவைகளிலே அடங்கா தொழிந்தவைகளினியல்பைப் பதிமூன்றதிகாரத்தினாலே சொல்லத் தொடங்கி முதலிலே குடிமை சொல்லுகிறார்,

குடி-ஆம், அதி-குடிமை.

அஃதாவது, உயர்ந்த குடியினிடத்துப் பிறந்தவரது தன்மை. உயர் குடிப்பிறப்பு நால்வகை வருணத்தார்க்கும் அவசியம் வேண்டுவதாகலால் அச்சிறப்புப்பற்றி முன்வைக்கப்பட்டது.

இற்பிறந்தார்கண்ணல்ல திவ்வி யியல்பாகச்
செப்பமு நாணு மொருங்கு.

இ-ள். செப்பமும்- செம்மையும், நாணும்-நாணமும், ஒருங்கு-ஒன்றுசேர- இற்பிறந்தாராகண்ணல்லது - உயர்ந்த குடியிலே பிறந்தவரிடத்தல்லாமல் (பிறரிடத்தே—இயல்பாக) சுபாவமாக, இவ்வி - உண்டாகா—எ-று. (கருத்து.) செம்மையும், நாணமும் - நற்குடியிற்பிறந்தவர்க்கல்லது மற்றவர்க்கில்லை.என்பதாம், * செம்மை, கருத்தும் - சொல்லும்- செயலும், தம்முள்ளே மாறுபடாமை. நாணம் பழிபாவங்களின்மடங்குகல், இவை இற்பிறந்தார்க்கானால் ஒருவர் கற்பிக்கவேண்டாமல் தாமே உண்டாகும். பிறர்க்கானால் கற்பிதத்தவிடத்தும் நெடிதுநில்லாவென்பதாம். (க)

ஒழுக்கமும்வாய்மையு நாணுமிம் மூன்று
மிழுக்கார் குடிப்பிறந் தார்.

இ-ள். குடிப்பிறந்தார்- உயர்ந்தகுடியிலே பிறந்தவர், (தமக்குரிய) ஒழுக்கமும்-நன்னடக்கையும், வாய்மையும்- மெய்மையும், நாணும்-நாணமுமாகிய, இம்மூன்றும்- இம்மூன்றிடத்தும், இழுக்கா- தாலறிவாலல்லாமல் தாமாகவே வழுவார்—எ-று. (கருத்து.) உயர்ந்த குடியிற்பிறந்தவர் நன்னடக்கை- சத்தியம்- வெட்கம் இம்மூன்றிலுந்தவறார்- என்பதாம், * ஒழுக்கமுதலாகிய மூன்றும மெய்மொழி. மனங்களுக்கு உரியனவையாதலால்- அம்முறை வைக்கப்பட்டன. இழுக்கல் - தாமறியாது வருதலால்- இழுக்காவென்றார். (உ)

நகையீகையின்சொ லிகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக்குடிக்கு.

இ-ள். வாய்மை- (எக்காலத்தும்) வேறுபடாத, குடிக்கு - குடியிற்பிறந்தவர்க்கு, (வறியவர் சென்றவிடத்து)—நகை = முகமலர்ச்சியும்,

ஈகை- (உள்ளவை) கொடுத்தலும், இனிசொல்- இன்சொற் (சொல்லுதலும்)—இகழாமை- இகழாமையும் ஆகிய, நான்கும்- இந்நான்கும், வகை-(உரிய்)வகையாகும், என்ப- என்று(நூலோர்)சொல்லுவர் -எ-று. (கருத்து.) ஈற்குடியிற் பிறந்தவர்க்குமுகமலர்ச்சி கொடுத்தல் இன்சொல இகழாமை இந்நான்குமுரித்தாம் -என்பதாம். * பொய்மைவேறுபடுசலுடைமையால் வேறுபடாமைனை வாய்மையென்றும், இல்லானைனல்லாரும் இகழ்வாராகலால் இகழாமையை அவர் கூறுக்கியுள் சொல்லினர். குடி- ஆகுபெயர், [இவைமூன்றுபாட்டாலும் குடிப்பிறந்தாரியல்பு சொல்லப்பட்டது.] (ஈ)

அடுக்கிய கோடி பெறினுங் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்த லிலர்.

இ-ள். அடுக்கிய- (பலவாக) அடுக்கிய, கோடி. கோடியளவினதாகியபொருளை, பெறினும்- பெற்றாலும், குடிப்பிறந்தார் - உயர்ந்தகுடியிலே பிறந்தவர், குன்றுவ- (தமமொழுக்கங்) குன்றுந்தொழில்களை, செய்தலிலர் - செய்யார்—எ-று. (கருத்து.) உயர்குடியிற்பிறந்தவர் கோடிபொருளைப்பெற்றாலுங் குன்றுந்தொழிலைச்செய்யார்கள் - என்பதாம். * கோடியென்பது இங்கே எண்ணப்படும் பெருந்தொகைமேல் நின்றது. குன்றுந்தொழில்கள் குன்றுதற்கு ஏதுவாகிய தொழில்கள் (ச)

வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும்பழங்குடி
பண்பிற் றலைப்பிரிதல் இன்று.

இ-ள். பழங்குடி - பழமைதொட்டு வருகிற குடியிலேபிறந்தவர், வழங்குவது- (தாம்) கொடுக்கும்பொருள், உள்வீழ்ந்தக்கண்ணும்-மூன்னியளவிலேசுருங்கியவிடத்தும், பண்பின்- (தமது) குணமுடைமையில், தலைப்பிரிதலின்று-நீங்கார்—எ-று. (கருத்து) ஈற்குடியிற்பிறந்தவர் கொடுக்கும் பொருள் சுருங்கியவிடத்துங்குண முடைமையிற்குறையார் என்பதாம். * பழமைதொட்டுவருதல் - சோ - சோழ - பாண்டியனென்பதுபோல் ஆதிகாலந் தொடங்கி மேம்பட்டுவருதல் அவர்க்கு வறுமையாவது தாம்கொடுக்கும் பொருள்முன்னியளவிலே சுருங்குவதாகலால் அதனையே சொல்லினர். (ரு)

சலம்பற்றிச்சால்பில செய்யார்மாசற்ற
குலம்பற்றிவாழ்துமென்பார்.

இ-ள். மாசற்ற- வசையற்றுவருகின்ற, குலம்பற்றி- (தமது) குடிமாபிலைடாத்து, வாழ்துமென்பார்- வாழக்கடவோமென்று, தினைத்து- அப்படியே, வாழ்வோர் - (வறுமையுற்றவிடத்தும்—சலம்பற்றி- வஞ்சனையைப்பொருந்தி, சால்பில - அமைவில்லாத தொழில்களை, செய்யார்-செய்யார்—எ-று.(கருத்து.) ஈற்குடிப்பிறப்பில்-வாழ்பவர்வஞ்சனை

பொருந்தியமைவில்லாத தொழில்களைச் செய்யார் - என்பதாம். * அமைவில்லாண்மை-தங்குடிமரபிலுக்குத்தகாமையாம். [இவைமூன்று பாடாலும் அவர் வறுமையுற்ற விடத்தும் அஃகியல்பின் வேறுபடாரென்பது சொல்லப்பட்டது.] (சு)

குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போ லுயர்ந்து.

இ-ள். குடிப்பிறந்தாகண்- உயர்ந்தகுடியிற் பிறந்தவரிடத்தே (உண்டாகிற) குற்றம்-குற்றமானது, (தான் சிறிதேயாயினும்)—விசும்பின். ஆகாயத்தில், மதிக்கண்- சந்திரனிடத்து, மறுப்போல-களங்கம்போல, உயர்ந்து-ஓங்கி, விளங்கும் - தோன்றும்—என-று. (கருத்து) உயர்குடிப்பிறந்தவரிடத் துண்டாங் குற்றஞ் சிறிதாயினுஞ் சந்திரனிற்களங்கம் போலோங்கி விளங்கும்-என்பதாம். * உயர்ந்தகுடிக்கு விசும்பும், அதிற்பிறந்தோருக்கு - மதியும், அவர் குற்றத்துக்கு - களங்கமும், உவமானங்கள். குடியினது உயர்ச்சியினாலும், சந்திரன்போன்ற அவர்நற்குணங்களோடு மாறுதலாலும், அக்குற்றமானது உலகெங்கும் பரந்து வெளிப்படுமென்பதாம். (எ)

தலத்தின்க ணோரின்மை தோன்றினவனைக்
குலத்தின்க ணையப் படும்,

இ-ள். நலத்தின்கண்- (குல) நலமுடையானும் வருகின்றவனிடத்தே, நோரின்மை- அன்பில்லாமை, தோன்றின்- உண்டாமாயின் (உலகம்)—அவனை- அம்மனிதனை, குலத்தின்கண்- அக்குலப்பிறப்பிடத்தே, ஐயப்படும். சந்தேகப்படும்—என-று. (கருத்து) நலமுடையவனிடத்து அன்பில்லாமை யுண்டாயினவனைக் குலமுடையனல்லனென் றையப்பாட்டில் வைக்கப்படும் - என்பதாம். * நலமும், குலமும் ஆகுபெயர். அன்பில்லாமையால் - கொடாமைகடுஞ்சொல் முதலானவை சொல்லப்பட்டன. தோன்றினென்பது- தோன்றுமை விளக்கிநின்றது. நலனுடையனுய்வருதலினாலே இவைதோன்றலால் உள்ளது ஐயமாயிற்று. [இவை இரண்டுபாட்டாலும் வேறுபட்டவழிப்படுஒழுக்கம். சொல்லப்பட்டது.] (அ)

நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டுங்
குலத்திற் பிறந்தார்வாய்ச்சொல்.

இ-ள். நிலத்திற்கிடந்தமை- நிலத்தினியல்பை, கால் - (அதனிட்டதேதழுவினத்த) மூளையானது, காட்டும்-காண்பிக்கும், (அதுபோல)—குலத்திற்பிறந்தார்வாய்ச்சொல் - நற்குலத்திற்பிறந்தவர் வாய்ச்சொல், காட்டும் - (அக்குலத்தினியல்பைக் காட்டும்—என-று. (கருத்து) நிலத்தியல்பை மூளைகாட்டும், குலத்தியல்பை வாய்மொழிகாட்டும் - என்பதாம். * கிடந்தமை - உள்ளகுணம், மூளைமாந்நிரத்தால் நன்மையும் தீமையும் தெரிதலால் இலேமுதலானவை காட்டுமெனச் சொல்லாராயினர், ஆகவே குலத்திற் பிறந்தார்க்கும் செயல்முதலானவை வேண்டுவாயின, குலத்தியல்பறிதற்குச் சாதனம் சொல்லுவார் போன்று இவை சொல்சொல்லவேண்டுமென்றபடியாயிற்று. (கூ)

நலம்வேண்டி னுறுடைமை வேண்டுங்குலம் வேண்டின்
வேண்டி யார்க்கும்பணிவு.

இ-ள். (ஒருவன்) நலம்வேண்டின் -நலத்தை (தனக்கு) நலமுடைமை வேண்டுவானாகில், நலமுடைமை - நன்மையுடையவனுதன், வேண்டும்- வேண்டக்கடவன், குலம் வேண்டின் -குலமுடைமையை வேண்டுவானாயின், யார்க்கும் - (வணங்கத்தக்க) யாவரிடத்தும், பணிவு - வணங்கல், வேண்டுக - வேண்டக்கடவன்—எ-று. (கருத்து.) நலத்தை விரும்பினால் நாணத்தைக் கொள்ளக்கடவன்; குலத்தை விரும்பினால் வணக்கத்தைக்கொள்ளக்கடவன்- என்பதாம். * நலம் - புகழ் - புண்ணியங்கள். அந்தணர் - சான்றோர் - அருந்தவத்தோர் - தம்முன்னோர் - தந்தை தாய் இவரெல்லாம் அடங்க யார்க்குமென்றார் - பணிவு, இருக்கையெழுல் எதிர்செல்லல் முதலாயின். [இவை இரண்டுபாட்டாலும் குடிமைக்கு வேண்டுவன சொல்லப்பட்டது.] (ய)

கூன் - ஆண்மை அதி - மானம்.

இனிக் குடிப்பிறந்தவர்க்கு உரியகுணங்கள் சொல்லத்தொடங்கிமுதலில் மானம் சொல்லுகின்றார்.

அஃதாவது எந்நாளும் தன்னிலையிலேதாழ்மையும் ஊழால்தாழ்வுவந்தவிடத்து உயிர்வாழாமையுமாம். இது அக்குடிப்பிறப்பை அழியாமல் நிறுத்துதலாலே அச்சிறப்புப்பற்றி முன்வைக்கப்பட்டது.

இன்றியமையாச் சிறப்பினவாயினுங்
குன்ற வருப விடல்.

இ-ள்: இன்றியமையா - செய்யாதவிடத்தேதாம் (அமையாத) சிறப்பின்வாயினும் - சிறப்புடையனவையாயினும், குன்ற (தங்குடிப்பிறப்பானது) தாழ, வருப - வருஞ்செயல்களை, விடல்- விடக்கடவன்—எ-று. (கருத்து.) மிகவுஞ் சிறப்புடைய வையாயினும் தங்குடி தாழவருஞ்செயல்களை விடக்கடவன் - என்பதாம். * அமையாண்மை - இறத்தல் குடிப்பிறப்பென்பது அதிகாரமுறைமையால் வந்தது. தாம் இறக்கவருமிடத்தே இழிதொழில்களைச்செய்தாயினும் பிழையென்னும் வடநூலின் முறைமையை மறுத்து உடம்பினது நிலையில்லாமையும், மானத்தினது நிலையுடைமையும், ஆராய்ந்து அவை செய்யலாகாதென்றபடி. (க)

சீரினுஞ்சீரல்ல செய்யாசீரொடு
பேராண்மை வேண்டு பவர்.

இ-ள். சீரோடு-புகழுடனே, பேராண்மை-மானத்தை நிறுத்தல் வேண்டுபவர்-விரும்புபவர், சீரினும் - புகழ்சம்பாதிக்குமிடத்தும்;

சிவல்-தங்குடிக்கு ஒவ்வாத இழிதொழில்களை, செய்யார்-செய்யார்-எ-று. (கருத்து.) மானத்தை விரும்புவோர் தங்குடிக்கொவ்வாத தொழில்களைச்செய்யார்-என்பதாம். * எவ்விடத்தும் நிலைகுலையாத திடத்தால் உண்டாதல்பற்றி - பேராண்மையெனப்பட்டது. நிலையுடைய புகழின் பொருட்டாகவும் செய்யாரென்பதாம். எ-து. (2)

பெருக்கத்துவேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டு முயர்வு.

இ-ள். (குடிப்பிறந்தவர்க்கு) பெருக்கத்து - நிறைந்த செல்வம் உண்டானவிடத்து, பணிதல் - (யாவரிடத்தும்) பணிவு, வேண்டும் - வேண்டும், சிறிய - குறைந்த, சுருக்கத்து - வறுமையுண்டானவிடத்து, உயர்வு-பணியாமை, வேண்டும்- வேண்டும்—எ-று. (கருத்து.) தற்குடியிற் பிறந்தவர்க்குச் செல்வத்தில் வணக்கமும் வறுமையில் வணங்காமையும் வேண்டும்-என்பதாம். * பணியாமை - தாழ்வு வராமல் பழையவுயர்ச்சியிலே நிற்றல். செல்வமுடையபோது அதனுயர்ச்சி செய்தலினாலே தாம் தாழ்தலும், வறுமையுடையபோது அதுதாழ்வுசெய்தலினாலே தாம் உயர்தலும், வேண்டுமென்பதாம். * [இவை மூன்றுப்பாடலும் தாம் தாழ்தற்கு ஏதுவானவைகளை செய்யாமையின் சிறப்புச் சொல்லப்பட்டது.] (கூ)

தலையினிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை.

இ-ள். மாந்தர்-(குடிப்பிறந்த) மனிதர், நிலையின்- (தம்முயர்ந்த) நிலையிலிருந்து, இழிந்தக்கடை- தாழ்ந்தவிடத்து, தலையினிழிந்த - தலையிலிருந்துவீழ்ந்த, மயிரனையர் - மயிர்போல்வர்—எ-று. (கருத்து.) நற்குடிப்பிறந்தவர் நிலைகெட்டவிடத்துத் தலையிலிருந்து நீங்கியமயிர்க்கொப்பர்வர் என்பதாம். * அந்நிலையை விடாது நின்றவிடத்தே விரும்பியதாரணை செய்யப்படுதலும். விட்டுத் தாழ்ந்தவிடத்தே இழிவு செய்யப்படுதலும், உவமானத்தாற் பெற்றும். (ச)

குன்றினனையாருங் குன்றுவர் குன்றுவ
குன்றி யனைய செயின்.

இ-ள். குன்றினனையாரும் - (குடிப்பிறப்பால்) மலைபோலுயர்ந்தவரும், குன்றுவ- தாழ்தற்கு ஏதுவாகிய செயல்களை, குன்றியனைய- குன்றியளவாயினும், செயின் - செய்தலால், குன்றுவர்-தாழ்வார்—எ - று. (கருத்து.) மலையை நிகர்த்த குடிப்பிறப்பாளரும் தாழ்தற்கேதுவான செயல்களைச்செய்தால் தாழ்வார்கள் - என்பதாம். * குன்றினனையவும் என்கிற இழிவுசிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. தாழ்தற்கு ஏதுவாகிய செயல்களாவன-பழிக்கப்படுஞ் செயல்கள். (ஞ)

புகழின்மூர்புத்தேணாட் டுப்பாதா லெனின்மற்
நிகழ்வார்பின் சென்று நிலை.

இ-ள். இகழ்வார்பின்- (தம்மை) அவமதிப்பவர்பின்னே, சென்று நிலை - (ஒருவன் மானம்விட்டுச்) சென்று நிற்கின்றானாயின், புகழின்று-(இவ்வுலகத்துப்) புகழுண்டாகாது, புத்தேணாட்டு- மற்றைத்தெய்வலோகத்திலே, உய்பாது-செலுத்தாது, மற்று-இனி, என்- (அவனுக்குச்செய்வது)—பாது—என-று. (கருத்து.) இகழ்பவர் பின்செல்லுவோர்க்கு இகழ்புண்டாக்காது தேவருலகத்துச்செலுத்தாது-என்பதாம். * ஆண்மை - அரசகள் புகழுண்டாக்குவ புகழுன்றூர். பயனுகியஇவ்விரண்டும் இல்லாமல் வீணாக மானங்கெடுகின்றதனாலென்பதாம். [இவைமூன்றுபாட்டாலும் அவைசெய்தகுற்றம் சொல்லப்பட்டன.] (கூ)

ஒட்டார்பின்சென்றொருவன் வாழ்தலினங்கிலையே
கெட்டானெனப்படுதனன்று.

இ-ள். ஒட்டார்பின்-(தன்னை) இகழ்வார்பின்னே, சென்று- போய் - (பொருள்பெற்று) ஒருவன்வாழ்தலின்- (அதனால்) ஒருவன் உயிர்வாழ்தலைக்காட்டிலும், அங்கிலையே - முன்னைநிலையிலேயின்று, கெட்டானெனப்படுதல் - இறந்தானென்று சொல்லப்படுதல், நன்று - (அவனுக்கு) நன்று—என-றும். (கருத்து.) ஒருவனிகழ்பவர் பின்சென்று வாழ்தலினும் முன்னிலையிலிருந் திறந்தானென்று சொல்லப்படுதலே நல்லது என்பதாம். * புகழும்வானுலகமும் உண்டாக்காதெனும் பொருள்பெற்று உயிர்வாழ்வமென்பானை நோக்கிச்சொல்லியது. (எ)

மருந்தோமற்றூணெம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து.

இ-ள். பெருந்தகைமை - உயர்குடிப்பிறப்பானது, பீடு - (தன்) வியாகிபமானம், அழியவந்தவிடத்து - கெடவந்தபோது, ஊனெம்பி- (இறந்துபோகாமல் பயனில்லாத) உடம்பைக்காப்பாற்றும், வாழ்க்கை- வாழ்வானது, மற்று மருந்தோ (பின்னு மிறவாமைக்கு) மருந்தாமோ— என - று. (கருத்து.) மானமழியவந்தபோது உடலைக்காப்பாற்றும்வாழ்வானது இறவாமைக்குமருந்தாமோ- என்பதாம். * அக்குடிப்பிறப்பு- ற்குணங்களுக்கெல்லாம இடனுதற்சிறப்புப்பற்றி - பெருந்தகைமையென்றும், அக்குணம்பலவினு மானமானது அக்குடிப்பிறப்புக்கு வியாதற் சிறப்புபற்றி பீடென்றும். அம்மானம் அழிக்தால்நின்ற வெற்றுடம்பு இழிக்கப்படுதலால் - அதனை ஊனென்றும். பின்னுமிறத்தலினிச்சய மென்றற்கு மருந்தோவென்றும், சொல்லினூர். (அ)

மயிர்நீப்பின்வாழாக் கவரிமா வன்ன
ருயிர்நீப்பர் மானம் வரின்.

கூன-ஆம் - அதி—மானம்.

இ-ள். மயிர்நீப்பின் - (தன்மயிர்த்திரளில்) ஒருமயிர்நீங்கினும், வா
ழா - உயிர்வாழாத, கவரிமாவன்னர் - கவரிமானைவொப்பவர், மானம்
கவரின் - (உயிர்நீங்குதற்கான) மானம் பெருமளவுவரின், உயிர் - அவ்வு
யிரை, நீப்பர் - விடுவர்—எ-று. (கருத்து.) கவரிமானுக்-கொப்பானவ
மானங்கெடவரி னுயிரைவிட்டுவிடுவர்- என்பதாம். * நீப்பினுமென்னு
ழும்மை-தொக்குநின்றது. உயிருமானமும் உடனில்லாதவிடத்துப் பி
ன்னும் போவதாகிய வுயிரைநீக்கி எக்காலுநிற்பதாகிய மானமடைவதா
ன்பதாம். உவமானம் அவர்க்கு அது இயல்பென்பது விளக்கியது.(கூ

இளிவரின் வாழாத மான முடையார்
ஒளிதொழு தேத்து முலகு.

இ-ள். இளிவரின் - (தமக்கு) ஓரவமானம் வந்தவிடத்து, வாழாத-
(பொறுமல்) உயிர்வாழாத, மானமுடையார்-மானமுடையவரது, ஒளி-
புகழ்வடிவை, உலகு - உலகத்தார், தொழுதேத்தும்- (எக்காலுந்) தொ
ழுதுதுதியாநிற்பர்—எ-று. (கருத்து.) அவமானம்வந்தபோது உயிர்வி
ற்றுவாழாத மானமுடையவர் புகழ்வடிவை யுலகத்தார் துதிப்பர்-என்
பதாம். * புலவர்பாடும் புகழுடையோர் விசும்பின் வலவனேவானவு
தி யெய்துவ ராதலால் - சுவர்க்கம்பெறுதல் சொல்லவேண்டா வாயி
று [இவைநான்கு பாட்டாலும் மானப்பொருட்டாகிய இறப்பின்சிறப்பு
ச் சொல்லப்பட்டது.] (ஈ)

கூன - ஆம், அதி - பெருமை.

அஃதாவது - செய்தற் கரியசெய்தல் - செருக்கில்லாமை பிறர்க்குற்றஞ்
சொல்லாமை- என்றிவை முதலாகிய நற்குணங்களாலே பெரியாராய்
ளோதுதன்மையாம் நிலையிலிருந்துமேலுமேலும்உயர்த்துவதாகியந
ற்குணங்கள் உண்டாவது நிலையிலிருந்து தாழாமைஉள்ளவிடத்தேய்
தலால் இதுமானத்தின் பின்வைக்கப்பட்டது.

ஒளியொருவற்குள்ளா வெறுக்கை யிளியொருவற்
கஃகிறந்து வாழ்தும் மெனல்.

இ-ள். ஒருவற்கு - ஒருவனுக்கு, ஒளி - ஒளியாலது, உள்ளவெறு
கை - (பிறராலேசெய்தற்கரியவைகளைச் செய்வோமென்று நினைக்கி
மனவெழுச்சியின்மிகுதி, ஒருவற்கு - ஒருவனுக்கு, இளி - மாசாவது
அஃகிறந்து - அச்செயலை யொழிந்து, வாழ்தும்மெனல் - உயிர்வாழ்
டுவோமென்று நினைத்தல்—எ-று. (கருத்து.) ஒருவனுக்கொளியாவது
னவெழுச்சியாம், இளியாவதுமன வெழுச்சியில்லாமையாம்-என்பதா

ஒளி - தான் உளனெனுமகாலத்து நிகழுமது தோன்றுதலுடைமை, முன்னுஞ்செய்தற்கரியுஞ் செய்வார் பெரியரென்னுமாயினும் இங்கே அவை அளவிறந்த உபகாரம் ஈகை முதலாகவையாம். அவைகளினுலகியற்பெருமையை அதன் காரணத்தின்மேலிட்டு உள்ளவாறுக்கவியலாதுர், அதனையே அதன்காரியமாகிய ஒளியாக்கியும், சொல்லினர். [இவனுற் பெருமையின் சிறப்புச் சொல்லப்பட்டது.] (க)

பிறப்பொக்கு மெல்லாவுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

இ-ள். எல்லாவுயிர்க்கும் - எல்லாமக்களுயிர்க்கும், பிறப்பு- (பொதுவாகிய) பிறப்பியல்பு, ஒக்கும் -ஒத்திருக்கும், (ஆயினும்) சிறப்பு-(பெருமைசிறுமை எனப்பட்ட) சிறப்பியல்புகள், ஒவ்வா - ஒத்திடாவாம், செய்தொழில் - செய்யுந்தொழில்களது, வேற்றுமையான - வேறுபாட்டால்—எ-று. (கருத்து.) மக்களுக்குப் பிறப்பியல்பொத்திருக்கும், தொழில் வேற்றுமையாற்சிறப்பியல்பொவ்வாவாம்-என்பதாம். * வேறுபாடு-நல்லனவையும் தீயவையும், இரண்டுமானவையும், இரண்டுமல்லாதவையும், ஆகியபலபிரிவுகள், விளைவதனால் பற்பலபுகாரியமாகிய உடம்பைப்பொருந்தி நின்று அதன் பயனுபவிப்பதால் எல்லாருக்கும் ஒத்திருத்தலால் பிறப்பொக்குமென்றும், பெருமைசிறுமைகளுக்குக் காட்டலாக்கல்லாகிய தொழிற்பிரிவுகள் உடம்பு தோறும் வேறுபடுதலால் - சிறப்பொவ்வாவென்றும், சொல்லினர். (உ)

மேலிருந்து மேலல்லர் மேலல்லார் கீழிருந்துங்
கீழல்லார் கீழல்லவர்.

இ-ள். மேலல்லார் - (செய்தற்கரியவைகளைச் செய்யமாட்டாமல்) சிறியராயினோர், மேலிருந்தும் - உயர்ந்த ஆசனங்களில் இருந்தாராயினும், மேலல்லர் - பெரியராகார், கீழல்லவர் - (அவைசெய்து) பெரியராயினோர், கீழிருந்தும் - தாழ்ந்தவெறுங்கிலத்தில் இருந்தாராயினும், கீழல்லார் - சிறியராகார்—எ-று. (கருத்து.) சிறியவர்மேலிருந்தாலும் பெரியவராகார், பெரியவர் கீழிருந்தாலுஞ் சிறியவராகார் என்பதாம், * மேலிருத்தல் கீழிருத்தல்களாலே செல்வவேறுமைகளும், பல்சீர்களாலே பெருமைசிறுமைகளும், கருதப்பட்டன. [இவை இரண்டுமாட்டாலும் முறையேகுடிப்பிறப்பு மாத்திரத்தாலும், செல்வமாத்திரத்தாலும், பெருமைஉண்டாகாமை சொல்லப்பட்டது.] (ஊ)

ஒருமை மகளிரோ போலப் பெருமையுந்
தன்னைத்தான் கொண்டொழுகு மூண்டு.

இ-ள். ஒருமை - பிளவுபடாதமனத்தையுடைய, மகளிரோபோல்-தற்புள்ளமாதரைப்போல, பெருமையும்-பெருமைக்குணமும், தன்னைத்

தான் - தன்னைத்தானே, கொண்டொழுகின் - (ஒருவன் நிறையின்வ
ழுவாமல்) காத்துக்கொண்டு நடக்கவல்லவனையின், உண்டு : (அவனிட
த்து) உண்டாம்— எ-று. (கருத்து.) பெருமைக்குணமுங் கற்புள்ளமாத
ரைப்போலத் தன்னைக்காத்துக்கொண்டவனுக்குண்டு- என்பதாம். * ஒ
ழுகுதல் - மனமொழிமெய்களை அடக்கி உபகாரமுதலானவை செய்து
வருதல். [இதனால்பெருமைஉண்டாமாறுசொல்லப்பட்டது.] (கூ)

பெருமை யுடைய ராற்றுவ ராற்றி
னருமை யுடைய செயல்.

இ-ள். பெருமையுடையவர் - (அவ்வழியாலே) பெருமையுட
வராயினர் (தாம்வகியராகியவழியும்) — அருமையுடைய - (பிறராலே
செய்தற்கு) அருமையுடையனவையாகிய, செயல் - (தஞ்) செயல்கள்
ஆற்றின்- (அவைசெய்யும்) வழியால், ஆற்றுவார் - (முடிவுபெறச்) செ
ய்யவல்லவராவர்— எ-று. (கருத்து.) பெருமையுடையோர் அருமை
டையசெயல்களைச் செய்வார் - என்பதாம். * அரியசெயல்களை முன்செ
ய்துவந்தமைதோன்ற- பெருமையுடையவ ரென்றதனாலும், ஆற்றுவ
ரென்றதனாலும், வழியாகிய வழியுமென்பது பெற்றும். [இதனால் அ
ரனையுடையார் செய்திசொல்லப்பட்டது.] (கூ)

சிறியா ருணர்ச்சியு ளில்லைப் பெரியாரைப்
பேணிக்கொள் வேமென்னு மோக்கு.

இ-ள். பெரியாரை- (அப்படிப்பட்ட) பெரியாரை, பேணி - வழிப
ட்டு, கொள்வேமென்னும்- (அரியசெயல்களைக்) கொள்வேமென்னும், ஓக்
க்கு-கருத்து, சிறியார்- பச்சைச்சிறியாரென்றது, உணர்ச்சியுள் - மனத்
தினிடத்து, இல்லை - உண்டாகாது— எ-று. (கருத்து.) பெரியாரைவ
ழிபட்டு கொள்வோமென்னும் கருத்துச்சிறியோர் மனத்திடத்தில்லை
என்பதாம். * குடிமைசெல்வம் கல்வியென்றிவை யுடையவராயிருக்
கை மாத்திரத்தால் தம்மை வியந்திருப்பார்க்கு அவையுமக்கியமல்லென்
று அடங்கியிருப்பாரை வழிபட்டு அவ்வியல்புடையராதல் கூடாதென்
பதாம், (கூ)

இறப்பே புரிந்த தொழிற்றாஞ் சிறப்புந்தான்
சீரல் லவர்கட் படின்.

இ-ள். சிறப்பும் - (தனக்குத் தகும்பெரியோரிடத்து அடக்கியிரு
ந்தலைச் செய்வதாகிய) சிறப்பும், தான் - தான், சீரல்லவர்காட்படில்- (த
னக்குத்தகாத) சிறியவரிடத்து உண்டாமாயின், இறப்பேபுரிந்த - (அட
க்கியிருந்தலொழிந்து செருக்கினிடத்திலே) மிகுந்த, தொழிற்றாம்- செ
யலேயுடைத்தாம்— எ-று. (கருத்து.) சிறப்புஞ்சிறியவரிடத்துண்டாயின்
செருக்கிலே மிகுந்த தொழிலேயுடையதாம்- என்பதாம். * செருக்கிலே

நிகச்செய்யுமென்பதாயிற்று. சிறப்பு-குடிமைசெல்வங் கல்விகளிலுலா கியமிகுதி. [இவை இரண்டுபாட்டாலும் அஃதில்லாதார்செய்கிசொல் லப்பட்டது.] (எ)

பணியுமாமென்றும் பெருமை சிறுமை
யணியுமாந் தன்னை வியந்து.

இ-ள். பெருமை - பெருண்மையுடையவர், என்றும் - சிறப்புண்டா கியகாளிலும், பணியும் - அடங்கிநடப்பார், சிறுமை - (மற்றைச்) சிறு மையுடையவர், (என்றும்)—அதுஇல்லாதகாளிலும் - தன்னைவியந்து தம்மைமெச்சி - அணியும், சிப்பிப்பார்—எ-று (கருத்து.)பெருமையு டையவர் சிறப்புண்டாகிய காலத்து மடங்கிநடப்பர் சிறுமையுடையவர் சிறப்பில்லாகாலத்துத் தம்மை சிறப்பித்துநடப்பார் - என்பதாம். * [ப ல்லோர்படர்க்கை மூன்னிலைதம்மையிற் செல்லாதாகுஞ் செய்யுமென் முற்றே]—என்றவிலக்கணத்திற்கு மாறுயினு மதற்குக்காரணம். o ப ண்புடையவர் தொழில்கள் பண்பின்மேல் ஏற்றப்பட்டன-இதுபின் அ ற்றமறைக்கு மென்னுமிடத்தும் ஒக்கும் ஆமிரண்டும்- அசை- சிறப்பி த்தல்- பிறரிலுந்தமக்கு ஒருயர்வை ஏற்றிக்கொள்ளல் (அ)

பெருமை பெருமித மின்மை சிறுமை
பெருமித மூர்ந்து விடல்.

இ-ள். பெருமை-பெருமைக்குணமாவது, பெருமிதமின்மை- (கா ரணம்உண்டாகிய விடத்தும் அது இயல்பாதலைஞக்கிச்) செருக்கில்லா திருத்தல், சிறுமை - சிறுமைக்குணமாவது, பெருமித மூர்ந்துவிடல்- (காரணம்இல்லாவிடத்தும்) அதனை ஏற்றிக்கொண்டு செருக்கின்மூடி விலே கின்றுவிடுதல்—எ-று. (கருத்து.) பெருமைக்குணமாவது செரு க்கில்லாதிருத்தல் - சிறுமைக்குணமாவது செருக்குடைத்தா யிருத்தல் என்பதாம். * அளவறச்செருக்கலென்பதாயிற்று. (கூ)

அற்ற மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும்.

இ-ள். பெருமை பெருமையுடையவர், அற்றமறைக்கும் - (பிறர் மானத்தைதையே சொல்லி) அவமானத்தை மறையாகிற்பர், சிறுமை - ம ற்றைச்சிறுனிமையுடையவர், குற்றமேகூறிவிடும் (பிறர்க்குணத்தை மறை த்துக்) குற்றத்தைதையே சொல்லிவிடுவர்—எ-று. (கருத்து.) பெரியோர் பிறரவமானத்தைமறைப்பர்- சிறியோர் பிறர் குற்றத்தைச் சொல்லுவ ர்- என்பதாம். *மறைத்தலும் சொல்லலும் மறையிடரதும் கூட்டப் பட்டன. தான்-அசை. [இவை மூன்றுபாட்டாலும் இருவர்செயலும் சே ர்த்துச் சொல்லப்பட்டன.] (ஙி)

சகக - ஆம், அதி - சான்றாண்மை.

அஃதாவது, பலகுணங்களிற்றும் நிறைந்து அவைகளை ஆளுகற்றன்மை. பெருமையுள் அடங்காத பலகுணங்களையும்தொகுத்துகொண்டு நிற்கையால் இது அதன் பின்வைக்கப்பட்டது:

கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

இ-ள். கடனறிந்து- (நமக்கு இது) தகுவதென்று அறிந்து, சான்று- (பலகுணங்களாலும்) நிறைந்து, ஆண்மை- (அவைகளை) ஆளுகற்றன்மையை, மேற்கொள்பவர்க்கு - மேற்கொண்டு நடப்பவர்க்கு; நல்லவையெல்லாம்- நல்லகுணங்களெல்லாம், கடன் - இயல்பாயிருக்கும், என்ப-என்று (தூயோரா) சொல்லுவர்—எ-று. (கருத்து.) பெரியவர்களுக்கு நற்குணங்களை மேற்கொள்ளுதல் கடனம்பாயிருக்கும்- என்பதாம். * சிலகுணங்களில்லாவிடத்தும், உள்ளவை இயல்பாயிருத்தல் விடத்தும் சான்றாண்மை யென்னுஞ் சொற்பொருள் கூடாமையால் இவ்வதிட்பெயர் பற்றி. அவ்விலக்கணம் இப்படிச்சொல்லியதென்பதாம். (க

குணநலஞ் சான்றோர் நலனே பிறநல
மெனநலத் துள்ளதுந் உமன்று.

இ-ள். சான்றோர் நலன்- சான்றோர் நலமாவது, குணநலம்- குணங்களாலாகிய நலமே, பிறநலம்- அது நீங்கலான உறுப்புக்களாலாகிய நலம், எந்நலத்துள்ளதூஉம்- எந்த நலத்திலு முள்ளதும், அன்று- அல்ல—எ-று. (கருத்து.) சான்றோர்க்குகுணநன்மையேபெரியநன்மையாம் மற்றநன்மை நன்மையல்ல-என்பதாம். * அந்நலத்தைமுன்னே பிரித்தமையால் மற்றைப் புறநலத்தை பிறநலமென்றும் - அதுகுடிப்பிறப்பு கல்விமுதலாகநூலோலெடுத்த நலங்களே செல்லாமையால் - எந்நலத்துள்ளதூஉமன்றென்றும் சொல்லினர். [இவை இரண்டுபாட்டாலும் சால்புக்கு ஏற்றகுணங்கள பொதுவகையாற் சொல்லப்பட்டன. (

அன்புநா ணொப்புர வுகண்ணோட்டம் வாய்மையோ
டைந்துசால் பூன்றிய தூண்.

இ-ள். அன்பு - (சுற்றத்தார்மேலல்லாமற் பிறர்மேலும் உள்ளதாகிய) அன்பும், நாண்- பழிபாவங்களி னாணமும், ஒப்புரவு- (யாவர்க்குதவியும்) உபகாரஞ்செய்தலும், கண்ணோட்டம்- (பழையவர்மேல்) கண்ணோடலும், வாய்மையோடு - (எவ்விடத்தும்) மெயமை சொல்லுதலோடும், சால்பு-சால்பென்னும் (பாரத்தை; ஊன்றிய- தாங்கிய; தூண்- 'தூண்களை, ஐந்து- அஞ்சு—எ-று. (கருத்து.) அன்பு-நாணம்-உபகாரம்- கண்ணோட்டம்- சத்தியம்- இவ்வைவகுதலுஞ் சால்பென்னும் பாரத்தை

தான்குந் தூண்கள்-என்பதாம். * இக்குணங்கள் இல்லாவிடத்தே சால்பு மிலேபெற்றமையால் இவைகளைத் தூணென்றார். (கூ)

கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.

இ-ள். நோன்மை - தவமாவது, கொல்லா நலத்தது - (பிறவுயிரை யும் வேண்டுமாயினும்) ஒருயிரையுங்கொல்லாத அறத்தினிடத்ததாம், (அதுபோல)—சால்பு-சால்பாவது, பிறர்தீமை சொல்லாநலத்தது- (பிறர்குணங்களும் வேண்டுமாயினும்) பிறர்தீமையைச் சொல்லாத குணத்தினிடத்ததாம்—எ - று. (கருத்து.) நோன்பாவது யாதொன்றையுங் கொல்லாமையாம், சால்பாவது, பிறர்குற்றத்தைச் சொல்லாமையாம் என்பதாம். * தவத்திற்குக் கொல்லாவறம்போல் சால்பிற்குப் பிறர்குற்றம் சொல்லாக்கும் சிறந்ததென்பதாம். (சு)

ஆற்றுவா ராற்றல் பணிதல றுசான்றோர்
மாற்றுரை மாற்றும் படை.

இ-ள். ஆற்றுவார்-ஒரு (கருமத்தைச்) செய்துமுடிப்பவரது, ஆற்றல்-வலிமையாவது, பணிதல் - (அதற்குத் துணையாவானைத்) தாழ்ந்து கூட்டிக்கொள்ளுதல், சான்றோர்- இனிச்சால்புடையவர், மாற்றுரை-பகைவரை, மாற்றும்படை - பகைமையொழிக்குஞ் சாதனமும், அது-அப்பணிதல்—எ-று. (கருத்து.) காரியமுடிப்பவர் வல்லமையாவது பணிதல் அது சத்துருக்களை வெல்லும் படையாம்-என்பதாம். * ஆற்றல்-செயவல்லராந்தன்மை. சால்பிற்கு ஏற்ற பணிதற்குணத்துச் சிறப்புச்சொல்லுவார் மற்றது முட்டன்சொல்லினர். (நு)

சால்பிற்குக் கட்டளை யாதெனிற் றேர்ல்வி
தூலையல்லார் கண்ணுங் கொளல்.

இ-ள். சால்பிற்கு- சால்பாகிய (பொன்னினை) வறிதற்கு, கட்டளை- உரைகல்லாகிய (செயல்)—யாதெனில்-யாதென்றால், தோல்வி- (தம்மினுயர்ந்தவரிடத்துக்கொள்ளுந்) தோற்பை, தூலையல்லார் கண்ணும்-இழிந்தவரிடத்தும், கொளல்-கொள்ளுதல்—எ-று. (கருத்து.) சால்பிற்குரைகல் எதுவெனில் இருந்தவரிடத்துந் தோல்வி கொள்ளுதல்-என்பதாம். * எச்சவும்மையால் இருதிறத்தாரிடத்தும் வேண்டுதல் பெற்றும். கொள்ளுதல்வெல்லும் வலிமையுடையராயிருந்தே ஏற்றுக்கொள்ளுதல், இழிந்தாரைவெல்ல நினைத்துத் தமக்குச் சமானமாக்கிக்கொள்ளாமல் தோற்பால் அவரின் உயர்வாராயின அதனாலே சால்பளவு அறியப்படு மென்பதாம். (சூ)

இன்னாசெய் தார்க்கு மினியவே செய்யாக்கா
லென்ன ப்யத்ததோ சால்பு.

இ-ள். (சால்புடையவர்) இன்னா- (தமக்குத்) துன்பந் தருமவை
ளை, செய்தார்க்கும் - செய்தவர்களுக்கும், இனியவே-இன்பந்தருமவை
களையே, செய்யாக்கால்-செய்யாவிட்டால், சால்பு - சான்றாண்மை, எ
ன்னபயத்தது - (வேறே) என்னபயனுடைத்து — எ-று. (கருத்து.) து
ன்புசெய்தவர்களுக்கு மின்பஞ்செய்யாவிடில் சான்றாண்மை யென்
னபயனைத்தரும்-என்பதாம். * ஒ- அன்சை. சிறப்பும்மை சால்புடையவ
ர்க்கு இன்னாசெய்தற்கு இடமாதல் விளக்கிநின்றது. நாமும் அவர்க்கு
இன்னாசெய்வாராயின் தம்மூடையசால்பால் ஒருபயனும் இல்லையென்
பதாம். [இவை ஐந்துபாட்டாலும் சிறப்புவகையாற் சொல்லப்பட்டது.]

இன்மை யொருவற் கிளிவன்று சால்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்.

இ-ள். சால்பென்னும் - சால்பென்றுசொல்லப்படும், திண்மை-
வலிமை, உண்டாகப்பெறின் - தன்னிடத் துண்டாகப்பெற்றால், ஒருவ
ற்கு-ஒருவனுக்கு, இன்மை-வறுமையால் (வருவது)— இளிவன்று - இ
கழ்வாகாது — எ-று. (கருத்து.) சால்பின்வலிமை யுண்டாகப்பெற்றால்
வறுமை இகழ்வாகாது-என்பதாம். * களராமல் நாட்டுதலால் வலியாயி
ற்று. சால்புடையவர் வறுமையிலும் மேம்படுவரென்பதாம். (அ)

ஊழி பெயரினும் தாம்பெயரா சான்றாண்மைக்
காழி யெனப்படு வார்.

இ-ள். சான்றாண்மைக்கு - சால்புடைமையாகிய (கடலுக்கு)— ஆ
ழியெனப்படுவார் - கரையென்று சொல்லப்படுவார், ஊழிபெயரினும்.
(மற்றைக்கடலும் கரையுள் நில்லாமற்) காலம் வேறுபட்டாலும், தாம்
பெயரார்- தாம்வேறுபடார் — எ-று. (கருத்து.) சான்றோர் காலம்வேறு
படினும் தாங்கள் வேறுபடார்-என்பதாம். * சான்றாண்மையின் பெரு
மைதோன்ற அதனை கடலாக்கியும்-அதனைத் தாங்கிக்கொண்டு நிற்கலா
ல் அதனையுடையானை கரையாக்கியும் சொல்லினர். [எகதேசவுருவகம்.]

சான்றவர் சான்றாண்மை குன்றி னிருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை.

இ-ள். சான்றவர்- (பலகுணங்களாலும்) நிறைந்தவர், சான்றாண்
மை- (தமது) தன்மை, குன்றின்-குன்றுவாராயின், இருநிலந்தான்-ம
ற்றைப் பெரியபூமிதானும், பொறை- (தன்) பாரத்தை, தாங்காது-தா
ங்காதாய்முடியும் — எ-று. (கருத்து.) சான்றோர்-சான்றாண்மைகுன்று
வாராகில் பூமிபாரந்தாங்காது- என்பதாம். * தானுமென்னும் எச்சவும்
மை விகாரத்தால் தொக்கது, அவர்க்கு அது குன்றாமையும் அதற்கு
அது தாங்கலும் இயல்பாகலால் அவை எந்நாளும் உண்டாதானின்றன
வென்பதுதோன்ற நின்றமையால்-மன்னென்பது o ஒழியிசையில்வந்
தது. ஓகாரம்- அசை. [இவை மூன்றுபாட்டாலும் பலகுணங்களாலும்
நிறைந்தவரது சிறப்புச் சொல்லப்பட்டது] (இ)

o ஒழியிசை - ஒழிந்தசொற்பொருளைத்தருவது.

அ - ஆம், அந்து - பண்புடைமை.

அஃதாவது-பெருமை சான்ற குணமைகளில் தாம்வழுவாது நின்றே எல்லாரியல்புகளும் அறிந்து நடத்தலுடையராதல். அதிகாரமுறைமையும் இதனால் விளங்கும்.

எண்டகத்தா லெய்த லெளிதென்பர் யார்மாட்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு.

இ-ள். யார்மாட்டும்-யாவரிடத்தும், எண்பதத்தால்-எளியசமயத்தராயிருத்தால், பண்புடைமையென்னும்-பண்புடைமையெனப் படுகின்ற, வழக்கு - (அரிதாகிய) நல்வழியை, எய்தல்-அடைதல், எளிது-எளிது, என்ப-என்று (நூலோர்சொல்லுவர்)—எ-று. (கருத்து.) யாவரிடத்தும்மெளிய சமயத்தாராக விருக்கிற பண்புடைமையென்னு நல்வழியை அடைதல எளிது- என்பதாம். * குணங்களால் நிறைந்து எளியசமயத்தருமாகியபோது பண்புடைமைதானே உண்டாமாகலால் எண்பதத்தாலெய்த லெளிதென்றும், அது உலகத்தையெல்லாம் வசியமாக்கலால் அரிதே பழமையோர்சென்ற நல்வழியாக்கியும், அரிதே எளிதிற்பெற இதுநூலோதிய உபாயமென்றற்கு அவர்மேல்வைத்தும் சொல்லினார்.

அன்புடைமை யான்ற குடிப்பிறந்த வில்விரண்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு.

இ-ள். அன்புடைமை - (பிறர்மேல்) அன்புடைமையுதலும், ஆன்ற-குடிப்பிறதலை - (உலகத்தோடு) அமைந்த குடியிற்பிறத்தலும், இவ்விரண்டும்- (ஆகிய) இவ்விரண்டும், பண்புடைமையென்னும் - (ஒருவனுக்குப்) பண்புடைமையென்று (உலகத்தார்) சொல்லும், வழக்கு-நல்வழி—எ-று. (கருத்து.) ஒருவனுக்கு அன்புடைமையுந்குடியிற்பிறத்தலுமே நல்வழியாம்-என்பதாம். * அமைதல்- ஒத்துவருதல், குடிப்பிறத்தலென்றது - குடிப்பிறந்தவர்செயலை. இரண்டுங்கூடியவழியே பண்புடைமையாவதென்பது தோன்றமூற்றும்மை கொடுத்தார். [இவை இரண்டுபோட்டாலும் பண்புடையாராதற்குக்காரணம் சொல்லப்பட்டது.]

உறுப்பொத்தன் மக்களொப் பன்றுல் வெறுத்தக்க
பண்பொத்த லொப்பதா மொப்பு.

இ-ள். உறுப்பொத்தல் - (ஒருங்கத்தகாத) உடம்பாலொத்தல், மக்களொப்பன்று- (ஒருவனுக்கு) நல்லமனிதரோடு - (ஒப்பாகாமையால்) பொருந்துவதன்று, ஒப்பதாம் - (இனிப்) பொருந்துவதாகிய, ஒப்பு-ஒப்பாவது, வெறுத்தக்க - ஒருங்கத்தக்க, பண்பொத்தல் - பண்பாலொத்தல்—எ-று. (கருத்து.) அவயவத்தாலொப்பாத லொப்பல்ல, குத்தா லொப்பாதலே யொப்பாம்-என்பதாம். * ஒருவனுக்குமன்மக்க

ளோடு பிறப்பொத்தலாவது உயிரின்வேறுய் நிலைபெறுத உடம்பொத்தலாகாது வேறல்லாமல் நிலைபெறுதலுடைய பண்பொத்தலாகலால் அப்படிப்பட்ட அவர்பண்பினையுடையரு கவென்பதாம். ஆல்-அசை.(ஈ)

நயனெடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டு முலகு.

இ-ள். நயன்-நீதியையும், ஒடு-அதனுடன் நன்றி-அறத்தையும், புரிந்த விரும்பிய, பயனுடையார்- (பிறர்க்குந்தமக்கும்) பயன்படுத லுடையவ ரது, பண்பு-பண்பை, உலகு - உலகத்தார், பாராட்டும்- கொண்டாடி கிற்பர்—எ-று. (கருத்து.) நீதியையும் தருமத்தையும் விரும்பியபயனு டையவர் குணத்தை யுலகத்தார் புகழ்வர்-என்பதாம், * நயனெடு நன் றிபுரிதலுஞ், பயனுடைமையும், பண்புகாரணமாக வந்தமையால் அத னைப் பாராட்டுமென்றார். (உ)

நகையுள்ளு மின்ன திகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு.

இ-ள். இகழ்ச்சி - (தன்னை) யிகழ்தல், நகையுள்ளும்- ஒருவனுக்கு விளையாட்டினிடத்தும், இன்னாது- துன்பந்தருவதாம் (ஆதலால்)—பா டறிவார்மாட்டு- (பிற) நியல்பறிந்து நடப்பவரிடத்து, பகையுள்ளும் - ப கையுள்ளவிடத்தும், பண்பு - (அப்பகை உண்டாகாமல் இனிமையாகி ய) பண்புகளை, உள - உண்டாவனவாம்—எ-று.(கருத்து-)விளையாட்டி லு மிகழ்தலானது துன்பந்தரும்- கல்லவரிடத்துப் பகையிலு நற்குண முண்டாம்-என்பதாம். * பாடறிவாரொனவே அவ்வின்னுமை யறிதலும் பெற்றும். அதனை அறிந்தவர் பின் அதுசெய்யார் இனியவே செய்வா ரென்பது கருத்து. (ஙி)

பண்புடையார் பட்டுண் டுலக மதுவின்மே ன்
மண்புக்கு மாய்வது மன்.

இ-ள். பண்புடையார்-பண்புடையவரிடத்தே, பட்டு- படுதலால் உலகம்-உலகியல், உண்டு- (எந்நாளும்) உளதாய் வாராநின்றது, இன் றேல்- (அங்கேபடுதல்) இல்லையாயின, அது - அவ்வுலகியல், மண்புக் கு - மண்ணிலேபுகுந்து, மாய்வது-மாய்ந்துபோவதாம்—எ-று, (கருத் து.) பெரியவரிடத்து நற்குணமுண்டாதலால் உலகிய லெந்நாளுமுண் டாகின்றது அது இல்லாவிடிலுலகியலகெடும் - என்பதாம். * மற்றைப் பண்பில்லார் சார்பல்லாமையால் ஒருசார்புமில்லாமல் மண்ணிற் புகுந் து மாயுமது வேண்டாவாயிற்றென்பது படநின்றமையால் மன்னென்ன பது ஒழியிசையில்வந்தது. [இவை நான்குபாட்டாலும் அதனையுடை யவரது உயர்ச்சிசொல்லப்பட்டது. (சு)

அரம்போலுங் கூர்மைய ரோ மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்.

இ-ள். மக்கள் - நன்மக்களுக்கேயுரிய, பண்பில்லாதவர் - நற்குணமில்லாதவர், அரம்போலும் - அராந்தைப்போலும் - கூர்மையுடையனோயாயினும், மரம்போல்வர் - (ஓரறிவினதாகிய) மரம்போல்வர்—எ-று. (கருத்து.) நன்மக்களுக்குரிய குணமில்லாதவர் கூரிய புத்தியுடையராயினுமரத்தை நிகர்த்தவர்- என்பதாம். * ஓரறிவு பரிசத்தை அறிதல். தான் மடிவில்லாமல் தன்னை யுற்றபொருள் தானே மடித்தலாகிய தொழில்பற்றிவந்தது, பின் ஒருவனை விசேட அறிவில்லாமையாகிய குணம்பற்றிவந்தது. அவ்விசேடவறிவிற்குப் பயனெனியமக்கட்பண்பில்லாமையால் அவ்வறிவுதானு மில்லையென்பதாயிற்று.

நண்பாற்று ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்று ராதல் கடை.

இ-ள். நண்பு- நட்பினை- ஆற்றாராகி - (தம்மோடு) செய்யாதவராகி, நயமில் - பகைமையை, செய்வார்க்கும் - செய்து நடப்பவரிடத்தும், பண்பாற்றாராதல்- (தாம்) பண்புடையவராய் நடவாமை, கடை-(அறிவுடையவர்க்கு) இழுக்காம்—எ-று. (கருத்து.) நட்டைக் கொள்ளாமலிப் பகையைக்கொள்ளுவார்க்கும் குணமுடையவரார் நடவாமையே கடை-என்பதாம். * நயம் - ஈரம். சிறப்புமை அவர் பண்பாற்றுமைக்கு இடனுதல் தோன்ற நின்றது. அதனைச்செய்யின் தாமும் அவர்தன்மையராவரொன்றற்கு கடையென்றார். (அ)

நல்வல்ல ரல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள்.

இ-ள். நல்வல்லரல்லார்க்கு - (பண்பில்லாமைபால் ஒருவரோடு கலந்து) உண்மகிழ்தல் மாட்டாதவர்க்கு, மாயிருஞாலம்- மிகவும்பெரிய பூமியானது, பகலும்- (இருளில்லாத) பகற்பொழுதிலும், இருள்-இருளினிடத்தே, பாற்பட்டன்று - கிடந்ததாம்—எ-று. (கருத்து.) நட்புச்செய்து மகிழாதார்க்குப்பூமியானது இருளுடையதாகும்-என்பதாம். * எல்லாரோடும் கலந்து அறியப்பெறுமையால் பண்பில்லாதவர்க்கு உலகியல் தெரியாதென்றற்கு உலகம் இருளினிடத்துப்பட்டதென்றார். (கூ)

பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வ நன்பால்
கலந்தமை யாற்றினிற் றற்று.

இ-ள். பண்பிலான்- பண்பில்லாதவன், பெற்ற - (முன்னை நல்வினையினால்) அடைந்த, பெருஞ்செல்வம் - பெரியசெல்வம், (அக்குற்றத்தால் ஒருவர்க்கும்பயன்படாது கெடுதல்)—நன்பால் - நல்ல (பசுவின்) பால், கலம்- (ஏற்ற) கலத்தினது, தமையால் - குற்றத்தால், திரிந்தற்று- கெட்டாற்போலும்—எ-று. (கருத்து.) குணமில்லாதவன் முன்னைவினையாலடைந்த செல்வமானது பயன்படாது (கெடுதல்) பசுவின்

பூல் ப்ாத்திரக் குத்றத்தாற் கெட்டாற்போலும் -என்பதாம். * கல்
தீமையென்பது - கலந்தீமையென ஷிகாரப்பட்டது. தொழிலுவமம
கலால் உவமேயத்தில் ஓத்ததொழில் வருவிக்கப்பட்டது. படைக்கு
வனிமையிலனாகல் தோன்ற - பெற்றவென்றும். எல்லாப்பயனும் வ
ள்ளற்கு வற்ற இடமுடைமைதோன்ற- பெருஞ்செல்வமென்றும், செ
ல்லினார். அச்செல்வமும் பயன்படாதென்ற இதனால் வருகிற அதிசய
ப்பொருண்மையும் தோற்றுவாய்செய்யப்பட்டது. [இவை நான்கு ப
டலங்களும் அஃதில்லாது இழிவுசொல்லப்பட்டது.] (இ

ஈக- ஆம், அதி - நன்றியில்செல்வம்.

அஃதாவது- சம்பாதித்தவனுக்கும் பிறர்க்கும் பயன்படுதலில்லாதசெ
வத்தினியல்பு -செல்வமுடையானது குற்றம் செல்வத்தின்மேல்வ
றப்பட்டது அதிகாரமுறைமை முன்போல் தோற்றுவாய் செய்தலும்
பெற்றும்.

வைத்தான் வாய்சான்ற பெரும்பொருளஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்த தில்.

இ-ள். வாய் சான்ற - (தன்) மனையிடமெல்லாம் நிறைதற்கு ஏ
வாகிய, பெரும்பொருள் - பெரியபொருளை, வைத்தான் - (சம்பாதி
த்து) வைத்தவனுகி, அஃது- அதனை, உண்ணான் - (உலோபத்தால்) அ
னுபவியாதவன்—(உள்ளுயிரும்) செத்தான் - செத்தானும் - செயக்கிட
ந்தது - (அதனிடத்து அவனுலே) செயக்கிடந்ததோ ருரிமையானது,
இல்-இல்லை, (ஆதலால்)—எ-று. (கருத்து.) பெரும் பொருளைச்சே
வைத்தவனுகி யப்பொருளை யனுபவியாதவனிருந்தாலு மிறந்தவனுக்
கொப்பாவன்- என்பதாம், * [இதனுலே சம்பாதித்தவனுக்கு அச்செல்
வும் பயன்படலில்லாமைசொல்லப்பட்டது.] (இ

பொருளாணு மெல்லாமென் றீயா திவறு
மருளாணு மாணப் பிறப்பு.

இ-ள். பொருளான் - பொருளொன்றினால், எல்லாம் - யாவும்
ஆம்- உண்டாகும், என்று- என்று, அறிந்து—(அதனைச்சம்பாதித்து)
ஈயாது (பின்பிறார்க்கு) கொடாது, இவறும் -உலோபத்துவஞ்செய்யு
ம், மருளான்- மயக்கத்தினுலே, மாண- நிறைதலில்லாத, பிறப்பு- (பே
ய்ப்) பிறப்பு, ஆம்- (ஒருவனுக்கு) உண்டாம்—எ-று. (கருத்து.) பொ
ருளைச்சம்பாதித்துக்கொடாமையாற்பிறப்புண்டாம்- என்பதாம். * இரு
மையிலும் அடையும் இன்பங்கள் பலவும் அடங்க எல்லாமென்றும்

சம்பாதித்தற்கு முன்னே உண்டாகிய அறிவான்றுபின்னேமயங்குதலால் மருளென்றும், பொருள் உண்டாயிருக்கப்பிறருடைய பசிகண்டிருந்தபாவத்தால் உணவுகள் உண்டாயிருக்கப் பசித்து வருந்தும் பிறப்பு உண்டாமென்றும். சொல்லினர். (உ)

ஈட்ட மிவற்றி னிச்சவேண்டா லாடவர்
தோற்ற நிலக்குப் பொறை.

இ-ள். ஈட்டம் - (பிறரின்மிகச்) சம்பாதிப்போமென்று, இவற்றி (பொருள் சம்பாதிக்கைமாத்திரத்தையே) விரும்பி, இசை (அதன்பயனாகிய) புகழை, வேண்டாவாடவர்- விரும்பாதமக்களது, தோற்றம்- பிறப்பு, நிலக்கு, பூமிக்கு, பொறை - பாரம் (அவ்வளவே)—எ-று. (கருத்து.) பொருளை விரும்பிப்புகழைவிரும்பாதவர் பிறப்பு பூமிக்குப் பாரம் என்பதாம். * புகழ்- இருமைக்கும் உறுதியாகிய அறமாகலால் ஈகையால் அதனைவேண்டாமல் சம்பாதிக்கைத்துன்பத்தையும், காப்பாற்றற்றுன்பத்தையும், வேண்டிய அறிவில்லாமைபற்றி - நிலக்குப்பொறையென்றார். பிறப்பென்றது அதற்குரிய உடம்பினை. (ங)

எச்சமென் றென்னெண்ணுங் கொல்லோ வொருவரா
னச்சப் படாஅ தவன்.

இ-ள். ஒருவரான் - (ஒருபொருளுங்கொடுத்து அறியாமையால்) ஒருவராலும், நச்சப்படாஅ தவன் - இச்சிக்கப்படாதவன்—(தான் இறந்தவிடத்து)—எச்சமென்று-(இங்கே) ஒழிந்துநிற்பதாக, என்- எதை, எண்ணுங்கொல்- நினைப்பானே—எ-று. (கருத்து.) ஒருவராலு மிச்சிக்கப்படாதவ னிறந்தபின் னெதைநினைப்பானே- என்பதாம். * இங்கே ஒழிந்துநிற்கும் புகழ் - ஈவார்மேலல்லாமல் நில்லாமையால் இவனுக்கு அதனோடு எவ்வளவும் சம்பந்தம் இல்லையென்றதற்கு என்னெண்ணுங்கொல்லென்றார். ஓ - அசை. [இவைமூன்றுபாட்டாலும் அச்செல்வம் பிறர்க்குப்பயன் படவில்லாமை சொல்லப்பட்டது.] (ச)

கொடுப்பதூஉந் துய்ப்பதூஉமில்லார்க் கடுக்கிய
கோடியுண் டாயினும் மில்.

இ-ள். கொடுப்பதூஉம் - (பிறர்க்கு) ஈவதும், துய்ப்பதூஉம்- (தான்) அனுபவிப்பதுமாகிய (இரண்டுசெய்கையும்)—இல்லார்க்கு- உடையரல்லாதவர்க்கு, அடுக்கிய - (பலவாக) அடுக்கிய, கோடியுண்டாயினும்- கோடிப்பொருள் உண்டாயினும், இல் - (ஒன்றும்) இல்லை—எ-று. (கருத்து.) கொடுத்தலு முண்ணுதலு மில்லாதவர்க்குக் கோடிபொருளிருந்தும், பயனில்லை - என்பதாம். * இன்பத்தினும் அறம் சிறந்தமையால் - கொடுத்தல் முன்சொல்லப்பட்டது ஒன்று மில்லார்போற் பயனிரண்டும் இழத்தலால் இல்லென்றார். (ரு)

ஏதம் பெருஞ்செல்வந் தான்றுவ்வான் றக்கார்க்கொன்
றீதகியல்பிலா தான்.

இ-ள். தான்றுவ்வான்- தான் அனுபவியாதவனுகி—(அதன்மே
ம்) தக்கார்க்கு - தகுதியையுடையவர்க்கு, ஒன்று - (அவர்வேண்டி
தொன்றை, ஈதலியல்பிலாதான் - கொடுத்தற் றன்மையில்லாதவன்
பெருஞ்செல்வம்- (அவ்விரண்டுஞ்செய்தற்கு இடமுடையதாகிய) செ
ல்வந்தற்கு, ஏதம்-ஒருநோய்—என்று. (கருத்து.) தானுண்ணுமலும் பி
டாமலுமிருப்பவன் செல்வம் விபாதிக்கொப்பாம்- என்பதாம். * தக்
ர்- தானம்வாங்குதற்கு ஏற்றவர். அனுபவிக்கப்படுதலும் ஈயப்படுத
மாகிய தொழில்களுக்கு உரியதை அல்லதாக்கினமையால் - நோ
ன்றார் [இவை இரண்டுபாட்டாலும் அவ்விருமையும் உடன்சொல்ல
பட்டது.] (நி)

அற்றார்க்கொன் றுற்றுதான் செல்வ மிகலலம்
பெற்றூடமியண்மூத் தற்று.

இ-ள். அற்றார்க்கு- (ஒருபொருளு) மிலாயினர்க்கு, ஒன்று- (அ
வர்வேண்டிய) தொன்றனை, ஆற்றுதான் - கொடாதவனது, செல்வம்-
செல்வமானது வீணுகக்கழிதல், மிகலலம்- (பெண்டிரின்) மிகுந்த ஆ
த்தினை, பெற்றூள் - பெற்றவொருத்தி (கொடுப்பாரில்லாமையினலே
தமியள்- (கணவனில்லாமல்) தனியளாய், மூத்தற்று - மூத்ததன்மை
த்து—என்று. (கருத்து.) கொடாதவன் செல்வமானது அழகுள்ளவொ
ருத்தி தன்னைக் கொடுப்பாரில்லாமையாற் கணவனில்லாது சிறுமியாஞ
த்போலும்-என்பதாம். * நலம்வடிவினன்மையும், குணத்தினன்மையு
ம், இவ்விரண்டும் ஒருசேரப்பெறுதல் அரிதாகலால் - பெற்றூளென்
றூர், கொடுப்பாரும் கணவனுமேயல்லாமல தானும் பயனிழந்து கழி
ந்தகுமரிபோடு உவமைசொன்னமையால் தானும் எற்பானுமே யல்லா
மல் செல்வமும் பயனிழந்துகழியுமென்பதாம. (எ)

நச்சப் படாதவன் செல்வநடுவூரு
ணச்சு மரம்பழுத் தற்று.

இ-ள். (வறியவர்க்குச் சமீபனுயிருந்தும் ஒன்றுங் கொடாமையா
ல்) நச்சப்படாதவன்- (அவரால்) இச்சிக்கப்படாதவன், செல்வம்-செ
ல்வம்—(பெறுதல்) நடுவூருள்- ஊர்நடுவுள்ள, நச்சுமரம் - எட்டிமரம்
பழுத்தற்று- பழுத்தல்போலும்—என்று. (கருத்து.) பிறரா லிச்சிக்கப்ப
டாதவன் செல்வமானது ஊர்நடுவே எட்டிமரம் பழுத்தல்போலாம்- எ
ன்பதாம்.* சமீபத்திருக்கைகளாற் பயனில்லையென்பதாம். (அ)

அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா தீட்டிய
வொண்பொருள் கொள்வார் பிறர்.

இ-ள். (ஒருவன்) அன்பொரீஇ - (கொடாதிருத்தற் பொருட்டுச் சுற்றத்தாரிடத்தும் பேரினரிடத்தும்) அன்புசெய்தவனை ஒழித்து, கற்செற்று (வேண்டுவனவு அனுபவியாமல்) தன்னைவருத்தி, அறன்-வரியவர்க்குக் (கொடுத்தலாதியாகிய) அறத்தை, நோக்காது-நினையாமல், ஈட்டிய-சம்பாதித்த, ஒண்பொருள்-ஒள்ளியபொருளை, கொள்வார் - (கைப்பற்றுவோய்ப்பயன்) கொள்ளுவார், பிறர்-பிறர்—எ-று. (கருத்து.) அன்பற்றுத் தன்னைவருந்திச் சம்பாதித்தபொருளைப் பிறர்கொள்ளுவர் - என்பதாம். * பயனெய அறமும் இன்பமும்செய்து கொள்ளாதவனுக்குப் பொருளால் உள்ளதுசம்பாதித்தற் றுன்பமேயென்பதுதோன்ற-ஈட்டியவென்றும், அவன்சந்ததி வழியிலுள்ளவர்க்கும் உதவாதென்பதுதோன்ற பிறவென்றும் சொல்லினர். (கூ)

சிறுநடைச் செல்வர் சிறுதுளி மாரி
நிறங்கூர்ந் தனைய துடைத்து.

இ-ள். சிறுநடைய-புகழுடைத்தாகிய, செல்வர்-செல்வத்தினையுடையவரது, சிறுதுளி - (நிற்குங்காலம்) சிறியவறுமை, மாரி - (உலகத்தையெல்லா நிலைநிறுத்துகிற) மேகம், அறங்கூர்ந்தனைய-வறுமைமிருந்தபோல்வதோரியல்பினை, உடைத்து - உடையதுஎ-று. (கருத்து.) மிருந்தசெல்வமுடையவர் வறுமையானது மழைவறுமைகொண்டதன்மையுடையது-என்பதாம். * துளி-வெறுப்பு, அதனைச்செய்தலால் வறுமை துளியெனப்பட்டது. யாவர்க்கும் பயன்பட்டவர் அதனால் வறியராகியவிடத்தும் அவ்வறுமை கடிதுநீங்குதலால் - பின்னும்செல்வராய்ப் பயன்படுவரென்பது உவமானத்தாற் பெறப்பட்டது, படவே நன்றிபில்லாதசெல்வம் எக்காலும் பயன்படாதென்பதாயிற்று. [இவைநான்குபாட்டாலும் அச்செல்வத்தின் குற்றம்சொல்லப்பட்டது.] (ஈ)

ஈஉ - ஆம், அதி - நாணுடைமை.

அஃதாவது-முன்சொல்லப்பட்ட சால்புபண்பு முதலாகிய குணங்களால் உயர்ந்தோர்தமக்குத் தகாதகருமங்களில் நாணுதலுடையராந் தன்மை. அதிகாரமுறைமையும் இதனாலேவிளங்கும்:

கருமத்தா ணாணுக நாணுத் திருநுத
னல்லவர் நாணுப் பிற.

இ-ள். நாணு-(நன்மக்களது) நாணுவது; கருமத்தால்.(இழிக்க)கருமங்காரணமாக, நாணுதல்-நாணுதலாம், பிற- அதல்லாமல் மனமொழிமெய்களது ஒடுக்கத்தால் வருகிற நாணங்கள், திருநுதல் - அழகியசு

ஈகை - ஒர் - அறி — நாணுடைமை.

ஒற்றியையுடைய, நல்லவர்-குலமகளிர்தது, நாணு-நாணங்கள்போலும் எ-று. (கருத்து.) நாணமானது கருமங்காணமாக நாணுவதாம். பிறர் ணங்கள் பெண்களுடைய நாணங்கள்போலாம்- என்பதாம். * பிறகு மகளிரது நாணென்றதனால் மற்றது நன்மக்களது நாணென்பதும் ணுதலென்பதனால் கருமத்தினிழிவும் பெற்றும். திருநுத னல்லவ் என்பது-புகழ்ச்சிக்குறிப்பு. [இதனால் நாணின தது இலக்கணம் சொல்ல் ப்பட்டது] (4)

ஊணுடை யெச்ச முயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு.

இ-ள். ஊண்ண-உண்டியும், உடை-ஆடையும், எச்சம்- ஒழிந்தனவு ஞ், உயிர்க்கெல்லாம்- (மக்க) ளுயிர்க்கெல்லாம், வேறல்ல - பொதுவாம், மாந்தர்சிறப்பு - (நன்மக்களுக்குச் சிறப்பாவது) நாணுடைமை நாணுடைமையாம்-(அணிவயல்ல)—எ-று. (கருத்து.) உணவு-ஆடை மற்றனைவையாவர்க்கும் பொதுவாம் நன்மக்களுக்குச் சிறப்பாவது நா முடைமையாம்- என்பதாம். * ஒழிந்தனவு-உறக்கமும், காமமும், அச்ச மும், சிறப்பு, அவ்வுயிர்களின் வேறுபாடு. (2

ஊனைக் குறித்த வுயிரெல்லா நாணென்னு
நன்மை குறித்தது சால்பு.

இ-ள். உயிரெல்லாம்-உயிர்களனைத்தும், ஊனை-உடம்பை, குறித் தமக்கு இருப்பிடமாகக்கொண்டு அதனைவிடாவாம் (அதுபோல்)—சா ல்பு-(நற்குணங்களி) னிறைவானது, நாணென்னுநன்மை - நாணெ கிற நற்குணத்தை, குறித்தது - தனக்கு இருப்பிடமாகக்கொண்டு அ னைவிடாது—எ-று. (கருத்து.) உயிர்களெல்லாமுட்பையிடாவாம்-சா குணம்-நாணத்தைவிடாது-என்பதாம். * உயிர்உடம்போடு கூடியல்லது பயணடையாதவிதம்போல் சால்பு-நாணோடு கூடியல்லது பயனடையா தென்பதாம். (5)

அணியன்றே நாணுடைமை சான்றோர்க் கஃதின்றேற்
பிணியன்றே பீடு நடை.

இ-ள். சான்றோர்க்கு-பெரியோர்க்கு, நாணுடைமை- நாணமுடை மை, அணியன்றே-ஆபரணமல்லவோ, அஃதின்றேறல்- அவ்வாபரண ம் இல்லையாயின், பீடுநடை - (அவர்) பெருமிதநடை, பிணியன்றே (கண்டவர்க்கு நோயன்றே) எ - று. (கருத்து.) பெரியோர்க்கு நா முடைமை யாபரணமாம்-அஃதில்லாவிடி லவர் நடைபிணியாம் - என் பதாம் * அழகு செய்தலால் - அணியென்றும், பொறுத்தற்கருமையா ல் பிணியென்றும்-சொல்லினர். [இவை மூன்றுப்பாட்டாலும் அதன் றப்புச் சொல்லப்பட்டது.] (6

பிறர்பழியுந் தன்பழிய ஞாலுவார் ஞாலுக்
குறைபதி யென்று முலகு.

இ-ள். பிறர்பழியும்- பிறர்க்குவரும்பழியையும், தம்பழியும்-தமக்கு வரும்பழியையும், ஞாலுவார் - (ஒப்பாகமதித்து) ஞாலுவானை, உலகு- உலகத்தார், ஞாலுக்கு-ஞாணத்திற்கு, உறைபதியென்றும் - இருப்பிட மென்றுசொல்லுவர்—எ-று. (கருத்து.) பிறர்பழியையும் தம்பழியை மதித்து ஞாலுவானை உலகத்தார் ஞாணத்திற்கு இருப்பிடமென்பர்-என் றாம். * ஒப்பாகமதித்தல் - பிறர்க்குவந்த பழியையும் தமக்கு வந்ததாக வினைத்தல். அக்கருத்துடையவர் - பெரியராகலால், அவரை உயர்ந் தோர்யாவரும் புகழ்வரென்பதாம். [இதனால் அதிணையுடையவரது சிற ப்புச்சொல்லப்பட்டது.] (நு)

ஞாண்வேலி கொள்ளாது மன்னே விடம்ஞாலம்
பேணலா மேலா யவர்.

இ-ள். மேலாயவர்-உயர்ந்தவர், வேலி- (தமக்குக்) காப்பாக, ஞாண் ஞாணத்தை, கொள்ளாது-கொள்வதல்லாமல், விடம்ஞாலம் - பரப்பா னபூமியை, பேணலர் - கொள்ளவிரும்பார்—எ-று. (கருத்து.) உயர்ந் தோர் ஞாணத்தை கொள்ளாம லுலகத்தை விரும்பார்-என்பதாம். * ப... ழிபாவங்கள் அடைபுழாமற் காத்தலால் வேலியென்றார், ஞாணமும் பூமி யும் ஒன்றைவிட்டு ஒன்றைக் கொள்ளும்படி நேரிட்டவிடத்து ஞாணத் தைக் கொள்வதல்லது அப்பழிபாவங்கள் புகும்வழியாகிய பூமியைக் கொள்ள விரும்பாரென்பதாம். முன்னும்-ஓவும்-அசைகள். (சு)

நாணு லுயிரைத் துறப்ப ருயிர்ப்பொருட்டா
ணுண்டுறவார் நாணுள் பவர்.

இ-ள். நாணுள்பவர்-ஞாணத்தை (அதனது சிறப்பறிந்து) விடாது நடப்பவர் (அந்நாணும் உயிருங்கூடி நிற்கமாட்டாதவிடத்து)—நாணுல் நாண்சிதையாமற்பொருட்டு, உயிர் - உயிரை, துறப்பார் - நீக்குவார், உ யிர்ப்பொருட்டான் - உயிர்சிதையாமற்பொருட்டு, நாண்- ஞாணினை, து றவார் - நீக்கார்—எ-று. (கருத்து.) ஞாணத்தைக்கொள்பவர்- உயிரைநீக் குவார்-ஞாணத்தைக்கொள்ளாதவர்-உயிரைநீக்கார்- என்பதாம். * நாண் உயிரினுஞ் சிறந்ததென்பதாம். [இவை இரண்டுபாட்டாலு மவர்செயல் சொல்லப்பட்டது.] (ஏ)

பிறர்நாணத் தக்கது தானுணு ணுயி
னறநாணத் தக்க துடைத்து.

இ-ள். பிறர்-கேடுவரும் கண்டவரும், நாணத்தக்கது - ஞாணத்த க்கபழியை, தானுணுணுயின் - (ஒருவன்) தானுணுது செய்வானுயின்,

(அந்நாணுமை)—அறம்-தருமமானது, நாணத்தக்கது-(அவனை)விட்டு நீங்கத்தக்ககுற்றத்தை, உடைத்து-உடையது—என்று. (கருத்து.) ஒருவனுக்கு பழியைச்செய்வானுகிலது குற்றத்தையுடையது - என்பதாம். * நாணில்லாதானை அறம் சாராதென்பதாம்.

குலஞ்சுடுஞ் கொள்கை பிழைப்பினலுஞ்சுடு
நாணின்மை நின்றக் கடை.

இ-ள். கொள்கை - ஒழுக்கம், பிழைப்பின்- (ஒருவனுக்கு) வரும் மாயின் (அவ்வழுவும்)—குலம்- (அவன்) குடிப்பிறப்பொன்றையும், சுடும்-கெடுக்கும், நாணின்மை-நாணில்லாமை, நின்றக்கடை - (ஒருவன் கண்ணே) நின்றவிடத்து (அங்ஙிலை)—கலம் - (அவ) னலம்யாவையும் சுடும்-கெடுக்கும்—என்று. (கருத்து.) ஒருவனுக்கொழுக்கம் வழுவுமாயினவ்வழிவு அவன் குலத்தைக் கெடுக்கும் ஒருவனுக்கு நாணுமை நின்றவிடத்து தன்னையாவற்றையுங் கெடுக்கும்-என்பதாம். * நலம்-பிறப்பு-கல்வி-ஞானம் - செயல்-இனம்-என்றிவைகளால் வந்தனவெல்லாங் கொள்ளப்படும். ஒழுக்கவழிவைக்காட்டிலும் நாணழிவு மிகத்தீதென்பதாம்.

நாணைகத் தில்லா ரியக்க மாப்பாவை
நாணு வுயிர்மருட்டி யற்று.

இ-ள். அகத்து - (தம்) மனத்தில், நாண்-நாணத்தை, இல்லார்-இல்லாதமக்கள், இயக்கம் - (உயிருடையவர்போன்று சஞ்சரிக்கின்ற) சஞ்சரிப்பு, மரப்பாவை-மரத்தாற்செயப்பட்டபாவை, நாணு-ஏந்திரகயிற்றினுலாகிய (சஞ்சரிப்பால்)—உயிர் - உயிருடையதாக, மருட்டியற்-மயக்குதல்போலும்—என்று. (கருத்து.) நாணமில்லாமக்கள் சஞ்சரிப்புமரத்தாற் செய்யப்பட்டபாவை கயிற்று லுயிருடையதாக மருட்டியதுபோலாம் - என்பதாம். * நாணில்லாத மக்களைவு நாணுடையவை யனைவுபோல்வதல்லது உயிரில்லுலையென்பதாம். [இவை மூன்று பாட்டாலும் நாணில்லாரிழிவு சொல்லப்பட்டது.]

நாந- ஆம், அதி = குடிசெயல்வகை.

அஃதாவது-ஒருவன் தான்பிறந்தகுடியை உயரச்செய்தலின்விதம், இது தாழ்வினிடத்து நாணுடையவர்க்கு உண்டாவதாகலால் அதன்பி வைக்கப்பட்டது.

கருமஞ் செயலொருவன் கைதூவே னென்னும்
பெருமையிற் பீடுடைய தில்.

இ-ள். ஒருவன் - (தன்குடிசெய்தற்பொருட்டுத் தொடங்கிய் கருமமுடியாமையால்;—கருமஞ்செய - அக்கருமஞ்செய்தற்கு, கைதூவேனென்னும்- கையெழிசியெனென்கிற, பெருமையின் - முயற்சிப்பெருமைபோல், பீடுடைத்து - மேம்பாடுடையபெருமை, இல் - (அவனுக்கு) இல்லை—எ-று. (கருத்து) ஒருவன் கருமஞ் செய்தற்குக் கைவிடேனென்னும் பெருமைபோல்மேம்பாடுடையதில்லை- என்பதாம். * குடிசெய்தற்கென்பது அதிகாரத்தால்வந்தது - பலவகைக்கருமஞ் செய்தலாலே செல்வமும் புகழுமுடைத்து குடி உயருமாகலால் பீடுடையதில்லென்றார். (க)

ஆள்வினையு மான்ற வறிவுமென வீரண்டி
னீள்வினையா னீளுங் குடி.

இ-ள். ஆள்வினையும் - முயற்சியும், ஆன்றவறிவும் - நிறைந்தவறிவும், எனவிரண்டிற்- என்றுசொல்லப்பட்ட இரண்டினையுடைய, நீள்வினையான் - ஓய்வில்லாத கருமச்செயலால், குடி - (ஒருவனது) குடி நீளும்- உயரும்—எ-று. (கருத்து.) முயற்சியும் அறிவுமாகிய விரண்டின் தொழிலாலொருவன் குடியுயருமென்- என்பதாம். * நிறைதல் இயற்கையறிவு- செயற்கையறிவோடு கூடிநிரம்புதல். ஆள்வினை - சோர்வில்லாமற்பொருட்டு. ஆன்றவறிவு உயர்தற்கு ஏற்றசெயல்களும் அவைமுடிக்கும்விதமும் ஊடிப்பிழைபடாமல் எண்ணுதற்பொருட்டு. [இவை இரண்டுபாட்டாலும் அச்செயற்குக்காரணம் சொல்லப்பட்டது.]

குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வ
மடிதற்றுத் தான்முந் துறும்.

இ-ள். குடிசெய்வலென்னும்- (என்) குடியினை உயரச்செய்யக்கடவே னென்றுகொண்டு (அதற்கு ஏற்றகருமங்களில் மூளுகிற) ஒருவற்கு- ஒருவனுக்கு, தெய்வம் - தெய்வமானது, மடி - உடையை, தற்று- இறுகவுடுத்துக்கொண்டு, தான்- தான், முந்துறும் - முன்னேயுற்று நிற்கும்—எ-று. (கருத்து.) குடியையுயரச் செய்வேனென்னுமொருவனுக்குத் தெய்வமுன்னிற்கும் - என்பதாம். * முன்னடப்பார்செயல் ஊழ்மேல் ஏற்றப்பட்டது. (ங)

சூழாமற்றானே முடிவெய்துந தங்குடியைத்
தாழா துளுற்ற பவர்க்கு.

இ-ள். தங்குடியை - தங்குடிக்காந்தொழிலை, தாழாது - விளைந்து, உளுற்றுபவர்க்கு- முயல்பவர்க்கு— (அத்தொழில் முடிக்குமிதம்) சூழாமல் - ஆலோசிக்கவேண்டாமல், தானே முடிவெய்தும் - தானே முடிவுபெறும்—எ-று. (கருத்து.) தங்குடித்தானதொழிலைச்செய்வோர்க்கு அதுதானே முடிவுபெறும்- என்பதாம். * குடி அதற்காந் தொழிலுக்கு

ஆதலால், ஆகுபெயர்ஊழ்முந்துறுதலால் பயன்சொல்லியபடி. [இவை இரண்டுபாட்டாலும் அதற்குஊழ்துணையாதல்சொல்லப்பட்டது.] (அ)

குற்றமிலனெப்குடிசெய்துவாழ்வானைச்
சுற்றமாச்சுற்றுமுலகு.

இ-ள். குற்றமிலனெப்- குற்றமானவைவிலக்கியதிலனாகி, குடிசெய்து- (தன்) குடியையுயர்ச்செயது, வாழ்வானை-வாழ்பவனை, சுறறமா- (அவனுக்குச்) சுற்றமாகவேண்டி, உலகு- உலகத்தார் - சுற்றும்- (தானேசென்று) சூழ்வர்—என-று. (கருத்து.) குற்றமற்றவனாய் குடியையுயர்ச்செய்து வாழ்பவனை யுலகத்தார் சூழ்வர்- என்பதாம். * குற்றமாயின்- அறநெறிகளுக்கு விரோதமான செயல்கள். தாமும்பயனடைதலேக்கு யாவரும்சென்று சார்வனென்பதாம். (ஆ)

நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த
வில்லாண்மை யாக்கிக் கொளல்.

இ-ள். ஒருவற்கு- ஒருவனுக்கு, நல்லாண்மையென்பது - நல்லாண்மையென்று உயர்த்திச்சொல்லப்படுவது, தான்பிறந்த - தான்றோன்றிய, இல்லாண்மை - குடியை ஆளுதற்றன்மையை, ஆக்கிக்கொள்- (தனக்கு) உண்டாக்கிகொள்ளுதல்—என-று. (கருத்து.) ஒருவனுக்கு ஆண்மையென்று சொல்லப்படுவது தன்குடியையுயர்த்திக் கொள்ளுதல்- என்பதாம். * போர்த்தொழிலினீக்குதற்கு நல்லாண்மையெனவிசேடித்தார், குடியையாளுதற்றன்மை குடியிலுள்ளவனை உயரச்செய்து தன்வழிப்படுத்தல் அதனைச் செய்துகொள்ளுதல் நல்லாண்மையாம் விதம்வருகிறபாட்டாற் பெறப்படும். (இ)

அமரகத்து வென்கண்ணர் போலத் தமரகத்து
மாற்றுவார் மேற்றே பொறை.

இ-ள். அமரகத்து - களத்திலிடத்து, (சென்றவர் பலராயிலும் போர்தாங்குதல்) -வன்கண்ணர்போல சூர் (மேலதாகுதல்) போலத் தமரகத்தும்- குடியிலிடத்தும்—(பிறந்தவர்பலராயினும) பொன்ற - (அதன்பாரம்) பொறுத்தல், ஆற்றுவராமேற்றே- வல்லவாமேலதேயாம்—என-று. (கருத்து.) போர்க்களத்தில் வீரர்மேலாகுதல்போலக் குடியிடத்துப் பாரம்பொருத்தல் வல்லவர்மேலதாம்-என்பதாம். * வன்மைமதிக்கப்படுவார் அவரேயென்பதாம். [இவை மூன்றுபாட்டாலும் அனைவரும் செய்வாரடையும் சிறப்புச்சொல்லப்பட்டது] (ஈ)

குடிசெய்வார்க் கில்லைப் பருவமடிசெய்து
மானங் கருதக் கெடும்.

இ-ள். மடிசெய்து - (குடியுயர்ச்செய்தலில் நோக்கற்று காலத்தை நோக்கி) சோம்பல்செய்துகொண்டு, மானம்- மானத்தையும், கருத்

நினைப்பராகில்; கெடும்-(குடி) கெடும்; (ஆதலால்) குடிசெய்வார்க்கு- தன்குடிப்பத்தை யுயரச்செய்வார்க்கு, பருவம்-காலமியதி, இல்லை - இல்லை—என்று. (கருத்து.) குடும்பத்தை யுயரச்செய்வார்க்குக் காலமியதி இல்லை-என்பதாம். * காலநோக்கி மடி செய்தல்வெயின் மழைபனியுடைமை நோக்கிப்பின்னே செய்வோமென்று ஒழிந்திருத்தல், மானங்கருதல்- இக்குடியிலுள்ளார் யாவரும் இன்பமுறுதான் இக்காலத்துத் துன்பமுறுவதேனெவென்று உட்கொள்ளுதல். * முன் இகல்வெல்லும் வேந்தர்க்குவேண்டும்பொழுது என்றதுகொண்டு இவர்க்கும் வேண்டுமோவென்று நினைக்கினும் அது நினைக்கலாகாதென மறுத்தபடி. (சு)

இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடிப்பத்தைக்
குற்ற மறைப்பா னுடம்பு.

இ-ள். குடும்பத்தை - தன்குடியை, குற்றமறைப்பான் - மூவகைத்துன்பங்களும் அடையாமற் காக்க முயல்பவனது, உடம்பு - உடலம், இடும்பைக்கே- (முயற்சித்) துன்பத்திற்கே, கொள்கலங்கொல்-கொள்கலமாமவ்வளவோ, [இன்பத்திற்காகுகலில்லையோ]—என்று. (கருத்து.) தன்குடியைக்காக்க முயற்சிசெய்பவனுடலம் துன்பத்திற்குக்கொள்கலமாம்- என்பதாம். * என்குடிமுழுதும் இன்பமுற்று உயரவேனான் இருமையும் பெறுதலால் இம்மெய் வருத்தமாத்திரம் எனக்கு நல்லதென்று முயலும் அறிவுடையவன் அதனை எந்நாளும் விடாமை நோக்கி இடும்பைக்கே கொள்கலங்கொல்லென்றார். இதுகுறிப்புமொழி- ஓரசை. [இவை இரண்டுபாட்டாலும் அவர் அதுசெய்யுமிடல்புசொல்லப்பட்டது.] (சு)

இடுக்கண்கால் கொன்றிட வீழுமடுத்தூன்று
நல்லாளிலாத குடி.

இ-ள். அடுத்து-(தான்வீழும்போது) முட்டுக்கொடுத்து, ஊன்றும்- தாங்கவல்ல, நல்லாள்- நல்லவாண்மகன், இலாத - பிறவாத, குடி-குடியாகிய—(மாம்) இடுக்கண்- துன்பமாகிய (கோடரியானது)—கால்-(தன்) முதலை, கொன்றிட - வெட்டிச்சாய்க்க, வீழும் - (ஒருபற்றில்லாமல்) வீழாநிற்கும்—என்று. (கருத்து-) தாங்குவாரில்லாத குடியாகியமரம் துன்பக்கோடரியானது வெட்டக்கெடும்- என்பதாம். * முதல் அதன்வழிக்கு உரியார். வளர்ப்பாரைப்பெற்றவழி வளர்ந்து பயன்படுதலும் அல்லாவழி - கெடுதலும், உடைமையால் மரமாக்கினர். (இதுகுறிப்புருவகம்.) [இதனுல் அவரில்லாத- குடிக்குள்ளதாம்குற்றம் சொல்லப்பட்டது.] (ஈ)

ஈசு - ஆம், அஃறி - உழவு.

ஆஃகாவுது: சிறுப்பான்மை வாணிகர்க்கும் பெரும்பான்மை வேளாளர்க்கும் உரித்தாகிய உழுசற்றொழில். இது செய்விக்கும்போது மற்றவர்க்கும் உரித்தாகும்; இது. முன்னே குடி உயர்தற்கு எதுவென்றமுயற்சியாதலால்- குடிசெயல்வகையின் பின்னவக்கப்பட்டது.

சுழன்றுமேர்ப் பின்னது லகமதனு
லுழக்கு முழுவே தலை.

இ-ள். உலகம் - உலகமானது. சுழன்றும் - (உழுதலால் வருமெய்வருத்தமோக்கிப் பிறதொழில்களைச்செய்தும்) திரிந்தும், ஏர்ப்பின்னது- (முடிவிலே) ஏருடையார் வழியதாயிற்று, ஆதலால் - ஆதலால், உழுந்தும் - எல்லாவருத்தமுற்றும், தலை - தலைமையாகியதொழில் - உழவே- உழுதலேயாம்—எ-று. (கருத்து.) உலகமேருடையார் வழியதாயிற்றுத் தலைமையான தொழிலுழவேயாம்-என்பதாம். * ஏருடையார்க்கு ஆதலால் - ஏர்- ஆகுபெயர். பிறதொழில்களாலே பொருள் பெற்றஇடத்தும் உணவினைபொருட்டு உழுவாரிடத்துச் சென்றல்வேண்டுதலால் சுழன்று மேர்ப்பின்னது உலகமென்றும்; வருத்தம் இல்லையாயினும் பிறதொழில்கள் கடையென்பதுதோன்ற - உழந்துமுழவேதலையென்றும் சொல்லினர். [இதனால் உழவினது சிறப்புச்சொல்லப்பட்டது.] (க)

உழுவா ருலகத்தார்க் காணியஃ்காற்று
தொழுவாரை யெல்லாம் பொறுத்து.

இ-ள். உழுவார்- உழுதல்வல்லவர், அஃ்காற்றாது - அவ்வுழுதலைச்செய்யமாட்டாமல், எழுவாரையெல்லாம் - (பிறர்தொழில்களிலே) மேற்செல்வோர் யாவரையும், பொறுத்து - தாங்குதலால், உலகத்தார்க்கு - உலகத்தாராகிய—(தொக்கு) ஆணி - அச்சாணியாவர்—எ-று. (கருத்து.) உழுபவருலகத்தாராகிய தொக்கச்சாணியாவர்-என்பதாம். * உழுவாரென்பது- உழுவிப்பாருக்கும் - ஆம். உலகத்தாரென்றது - இங்கே அவ்வுழுவர் நீங்கலானவரை கலங்காமல் நிறுத்தலில் உழுவார் ஆணிபோலுதலால் ஆணியென்றார் (வடநூல்.) (உ)

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்.

இ-ள் உழுது- (எல்லாரும் உண்ணும்படி) உழுதலைச்செய்து, உண்டு (அதனால் தாமும்) உண்டு, வாழ்வாரே- வாழ்கின்றவரே, வாழ்வார் - (சுமக்குநியராய்) வாழ்கின்றவர், மற்றெல்லாம்- மற்றவரெல்லாரும், தொழுது-(பிறரைத்) தொழுது, உண்டு - (அதனால்தாமும்) உண்டு, பி

செல்பவர் = (அவ்னைப்) பின்செல்லுகின்றவர்—எ-று. (கருத்து.) உழுதுண்டு வாழ்பவனோ வாழ்பவர். மற்றவர் தொழுதுண்டு வாழ்பவர் - என்பதாம். * தாமும்மகளிர்காய்ப் பிறந்திருந்தும் பிறனைத்தொழுது அவர் நிலகொடுக்கத் தம்முயிர்காத்து அவர்பின்செல்வார் தமக்குரியரல்ல ரென்பது கருத்து. (ஈ)

பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்பர்
நிலகுடை நீழலவர்.

இ-ள். அலகுண்ட - (உழுதற்கருவியால்) கொல்லியுடையராகிய; நீழலவர் - கண்ணளியுடையோர், பல குடைநீழலும் - பலவேந்தர்குடை நிழலதாகிய (பூமி முழுதையு—தங்குடைக்கீழ்- தம் (வேந்தர்) குடைக்கீழே, காண்பர்- பார்ப்பார்கள்—எ-று. (கருத்து.) உழவுமுயற்சிசெய்வோர்பலவேந்தர் பூமியையும் தம்வேந்தர் குடைநிழலிற் காண்பர்-என்பதாம். * அலகுகதிர் அது இங்கே கொல்லுக்காயிற்று. நீழல் போலுதலால் நீழலெனப்பட்டது. நீழலவனென்றது - இரப்போர்க்கெல்லாம் ஈதலேனுக்கி ஒற்றுமைபற்றி - தங்குடையென்றார். குடைநீழலென்பதும் ஆகுபெயர் தம்மரசனுக்கு வெற்றிபெருக்கி மண்முழுதும் அவனதாகக் கண்டிருப்பனென்பதாம். (உ)

இரவா ரிரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்.

இ-ள். கை-(தம்) கையால், செய்து - (உழுதல்) செய்து, ஊண் மாலையவர்- உண்ணுதலே இயல்பாகவுடையவர், இரவார் - (பிறனைத்தாம்) இரவார், இரப்பார்க்கு- (தம்மை) இரப்பவர்க்கு, ஒன்று-அவர் (வேண்டிய) தொன்றை, கரவாது-ஒளிக்காமல், ஈவர் - கொடுப்பார்—என்-று. (கருத்து.)உழுதுண்பவர்யாசிரியார் இரப்பவர்க்குக் கொடுப்பர்-என்பதாம். * கைசெய்தூண்மாலையவனென்பது எந்நாளும் அழிவில்லாத செல்வமுடையானென்னும் எதுனை உள்ளேகொண்டதின்றது. (ஊ)

உழவினுர் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை.

இ-ள். உழவிலுற் - உழுதலையுடையவர், கைம்மடங்கின்-கை (அசைனச்செய்யாது) மடங்குமாயின், விழைவதூஉம் - (யாவரும்) விரும்புமுணவும், விட்டேமென்பார்க்கு-துறந்தோமென்பார்க்கு, நிலை - (அவ்வறத்தில்) நிற்றலும், இல்லை-உளவாகா—எ-று.(கருத்து.) உழவர்கைம்மடங்குமாகில், யாவரும் விரும்புமுணவுந் துறந்தவர்க்கு நிலையுமில்லை-என்பதாம். * உம்மை இறந்தியிலும் வந்துகூடியது. உணவில்லாமையால் தானமுண்டாலும், இல்லறஞ்செய்தலும், யாவர்க்குமில்லையாயினவருத்துமாதலின் மாகியனை சும்மாவிருக்கின் உலகத்தில் இம்மை

மறுமைவீடென்னும் பயன்கள் நிகழாவென்பதாம். [இவ்வைந்தாம் அடிகளிலும் அந்தினைச்செய்வாரது சிறப்புச்சொல்லப்பட்டது.] (ச)

தொடிப்புழுதிகஃசாவணக்கிற் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்.

இ-ள். (ஒருநிலத்தினையுழுதவன்) தொடிப்புழுதி-ஒருபலப்புழுதி கஃசா-காற்பலமாம்படி., உணக்கின்-(அதனைக்) காயவிடுவானெனின் (அ) கினிடத்துச்செய்தபயிர்)—பிடித்தெருவும் - ஒருபிடியில் அடங்கிய எ வும், வேண்டாது - (இடை) வேண்டாமல், சாலப்படும் - பருத்துவிளை ம்—எ-று. (கருத்து.) ஒருபலப்புழுதி காற்பலமாகக் காயவிடுவானெனில் பிடியெருவுமில்லாம லப்பயிர் விளையும் - என்பதாம். * பிடித்து பிடி லுள்ளது. சால்து-சாலவென்முயது. (எ

வரிஞை கன்று லெருவிடுகல் கட்டபி
னீரிறு கன்றதன் காப்பு.

இ-ள். (அப்பயிர்க்கு) வரிஞும் - அவ்வுழுதலினும், எருவிடுதல் ருப்பெய்தல், கன்று - கன்முருகும், கட்டபின்- (இவ்விரண்டுந்செய்த களைபிடுங்கியபின், அதன்காப்பு-அதனைக்காத்தல், நீரிறும் - நீர்ப்பா ச்சலினும், கன்று-கன்முருகும்—எ-று. (கருத்து) உழுதலினுமெருப்பி டுதலது நல்லதுகளை பிடுங்கியபின் காத்தல் நீர்விடுதலினு நல்லது-எ பதாம். * ஏர் உழுதலுக்கு ஆகுபெயர். ஆல்-அசை. காத்தல்- பட்டி டு முதலானவைகளால் அழிவடையாமற்காத்தல், உழுதல் - எருப்பெ தல்- களைபிடுங்கல்-நீர்ப்பாய்ச்சல்-காத்தல் - என்று இம்முறையினவ யறைத்தும் வேண்டுமென்பதாம். (அ

செல்லான் கிழவ னிருப்பி னிலம்புலந்
தில்லாளி னூடி விடும்.

இ-ள். கிழவன்-(அந்நிலத்துக்கு) உரியவன், செல்லான்- (அ டைந்து கள்ளைதாறும்) போய்ப்பார்த்து வேண்டியவை செய்யாதொ ருப்பின்- (சோம்பி) யிருந்தால், நிலம்-அந்நிலம், இல்லாளின்- மனை போல, புலந்து (தன்னுள்) வெறுத்து, ஊடிவிடும் - (அவனோடு) பி ங்கிவிடும்—எ-று. (கருத்து.) உழுபவன் விளைநிலத்திற்போசாதிருக்கி ன்நில மவளுடன் பிணங்கிவிடும்-என்பதாம் * செல்லுதல் - ஆகுபெ ர். பிறனை ஏவியிராமல் தான்செல்லவேண்டு மென்பதுதோன்ற-இப்ப னென்முர். தன்னிடத்துவந்து வேண்டியவைசெய்யாது வேறிடச்சே ன்தவறி மனையாள்போல் பிணங்குமென்றது அவன்போக மிழந்தே க்கி. [இவைமூன்றுபாட்டாலும் அதுசெய்யும்விதம்சொல்லப்பட்டது

இலமென் றசைஇ யிருப்பானைக் காணி
னிலமென்னு நல்லா ளகும்.

இ-ள். இலமென்று- வறியேமென்றுசொல்லி, அரையிருப்பானை- சோம்பியிருப்பவனை, காணின்- கண்டால், இலமென்னுங்கல்லாள் - இலமகளென்று உயர்ந்திச்சொல்லப்படுகிற கல்லாள், நகும் - (தன்னுள்ளே) சிரியாநிற்பள்—எ-று. (கருத்து.) வறியேமென்று சோம்பலாயிருப்பவனை நிலமகள் கண்டால் சிரிப்பாள்- என்பதாம். * உழுதல்முதலானவை செய்வேமென் யாவர்க்கும் செல்வங்கொடுத்து வருஞ்சன்ற பின்பற்றி நல்லாளென்றும் அருகண்டருந்தும் அருகாசெய்யாது- வறுமையுறுஞ்சன்ற அறிவில்லாமைபற்றி நகுமெடன்றும் சொல்லினார். [நிகரில் அருகாசெய்யாதவிடத்து உண்டாம் இழுக்குச் சொல்லப்பட்டது.] வருகின்ற அதிகாரமுறைமைக்குக் காரணமாம். (இ)

ஈகை - தீம், அதி - நல்கூராமை.

—*—

அஃதாவது - அநுபவிக்கப்படுவன யாவும் இல்லாமை.

இன்மையி னின்னாத தியாதெனி னின்மையி
னின்மையே யின்னா தது.

இ-ள். இன்மையின் - (ஒருவனுக்கு) வறுமைபோல்-இன்னாதது- துன்பஞ்செய்வது, யாதெனின்-யாதென்றுவினாவின், இன்மையின்-வறுமைபோல், இன்னாதது-துன்பஞ்செய்வது, இன்மையே—எ-று. (கருத்து-) தரித்திரம்போலத் துன்பஞ்செய்வதுதுவேறில்லை- என்பதாம். * ஒப்பதில்லையெனவே மிகுந்ததில்லாமைசொல்ல வேண்டாவாயிற்று. (க)

இன்மை யெனவொரு பாவி மறுமையு
மிம்மையு மின்றி வரும்.

இ-ள். இன்மையென-வறுமையெனப்படுகிற, ஒருபாவி - ஓர்பற்பாவி (ஒருவனிடத்து வரும்போது)—மறுமையும் - மறுமையின்பமும், இம்மையும் - இம்மையின்பமும், இன்றி- (அவனுக்கு) இல்லையாக, வரும்-வருவான்—எ-று. (கருத்து.) தரித்திரமென்னுமொருபாவியை ஒருவனிடத்து வரும்போது இன்மை மறுமை யின்பமில்லாமல் வருவான்-என்பதாம். * இன்மையென ஒருபாவியென்பதற்கு அழுக்காறென ஒருபாவியென்றதற்கு உரைசெய்தபடியுணர்க. மறுமை இம்மை ஆகுபெயர். ஈயாமையாலும், அநுபவியாமையாலும், அவையிலவாயின. ()

தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக
நல்கூர வென்ன நகை.

இ-ள். நல்கூரவென்னும் - வருமையென்று சொல்லப்படுகிற, நகை - நகை, தொல்வரவும் - (தன்னுடலிலேபற்றப்பட்டவருடைய பழைய

குடிவாவினையும், தோலும் - (அதற்கேற்ற) சொல்வினையும், தொகு
யாக - ஒருசேர, கெடுக்கும் - கெடுக்கும்—எ-று. (கருத்து.) சரிக்கும்
ன்னு மாசையானது பழங்குடிவாவையு மதற்குரிய சொல்லையுங் கெ
டுக்கும் - என்பதாம். * நசையில்லாதவிடத்து வறுமையும் இல்லையா
லால் நல்குரவை நசையாக்கி அது அக்குடியிற் பழையோர்க்கு இல்ல
த இழிதொழில்களையும் அவமானச்சொற்களையும் உண்டாக்கலால்
வ்விரண்டினையும் ஒருசேரக் கெடுக்குமென்றார். (1

இற்பிறந்தார் கண்ணேயு மின்மை யிளிவந்த
சொற்பிறக்குஞ் சோர்வு தரும்.

இ-ள். இன்மை-வறுமையானது, இற்பிறந்தார்கண்ணேயும் - உ
ர்ந்த குடிப்பிறந்தவரிடத்தேயும், இளிவந்தசொல் - அவமானச்சொ
பிறக்கும்-பிறத்தற்கு ஏதுவாகிய, சோர்வு-சோர்வினை, தரும் - உண்ட
க்கும்—எ-று. (கருத்து.) தரித்திரமானது- உயர்குடியிற் பிறந்தவரிட
து மிழிவுசொற்பிறக்குஞ் சோர்வைத்தரும்-என்பதாம். * சிறப்புமவ
அவரிடத்து அதுபிறவாமை தோன்றநின்றது. அவமானச்சொல்-ஏ
க்கு ஈயவேண்டுமென்றல். சோர்வு காம்படுகிற துன்ப மிகுதிபற்றி
தோஷிடத்தே தங்குடிபிறப்பினைமறந்து அஞ்சொல்லுவதாகவினைந்
நல்குரவென்னு மிடும்பையுட் பல்குனைத்
துன்பங்கள் சென்று படும்.

இ-ள். நல்குரவென்னும்- வறுமையென்று சொல்லப்படும், இடு
பையுள் - துன்பமொன்றினுள்ளே, பல-பலவாகிய, துன்பங்கள்- துன்
பங்களும், சென்று-வந்து, படும்-விளையும்—எ-று. (கருத்து.) வறுமை
த்துன்பமொன்றனுள்ளே பலதுன்பங்களும் வரும் - என்பதாம். * இ
னை-இசைகிறை, துன்பமும் தானும் உடனேதோன்றலால் - வறுமை
யை துன்பமென்றும், அத்துன்பம் அடியாகச்செல்வர் மனைவாயிலே
க்கிச் செல்லற்றுன்பமும்- அவைக்காணற்றுன்பமும்-கண்டபின்மற
த்தவிடத்து உண்டாந்துன்பமும் மறுக்காதவிடத்தும் அவர்கொடுத்
து வாங்கற்றுன்பமும்-அதுகொண்டுவந்து அனுபவிப்ப வைகலைக்கூ
டுதற்றுன்பமும்-முதலானவை நாள்தோறும் - வேறுவேறுக வருவதா
கல்லாத்துன்பங்களும் உண்டாமென்றும், சொல்லினார். [இவை இ
துபாட்டாலும் வறுமையின் கொடுமை சொல்லப்பட்டது. (இ

நற்பொருணன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்.

இ-ள். நற்பொருள்-மெய்ந்நூற்பொருளை, நன்குணர்ந்து - தெளி
வறிந்து, சொல்லினும் - சொன்னாயினும், நல்கூர்ந்தார் - வறுமைப்
ட்டவரது, சொல்- சொல்லானது, பொருள் சோர்வு - பொருளின்மை
மையை, படும்- கூறும்—எ-று. (கருத்து.) வறியவர் மெய்ப்பொருளை

சொல்லினு மச்சொல் பொருளில்லாமையைக்கரும் - என்பதாம். * பொருளில்லாமைனைப் கூடுதலாவது யாய்விரும்பி நுவர்சொல்லைக்கேட்டோமாகில் முகங்கொடுத்து இவர்குறை முடிக்கவேண்டு மென்று அஞ்சி யாவரும் கேளாமையால் பயனில்சொல்லாய் முடிதல், கலவியும்பயன்படாதென்பதாம். (சு)

அறண்சாரா ஈல்குரா வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப்படும்.

இ-ள். அறஞ்சாரா - அறத்தோடுபொருந்தலில்லாத, ஈல்குரவு - வறுமையையுடையவன், ஈன்றதாயானும் - (தன்னைப்) பெற்றதாயிலுமும் பிறன்போல - அன்னியன்போல, நோக்கப்படும் - (நினைத்துப்) பார்க்கப்படுவன்—எ-று. (கருத்து.) வறியவன் தன்தாயாலு மன்னியன்போலப் பார்க்கப்படுவான்-என்பதாம். * அறத்தோடுபொருந்தலில்லாமை காரணகாரியங்களுள் ஒன்றோடு மியையாமை, ஈல்குரவு ஆகுபெயர். சிறப்புமை அவனது இயற்கைப்புடைமை விளங்கிநின்றது அவனிட்டத்தே கொள்வதில்லாமையேயன்றிக் கொடுப்பதுண்டாதலும் உடைமையால் அதுநோக்கிச் சுற்றத்தாரியாவரும் கைவிடுவனென்பதாம். (எ)

இன்றும் வருவது கொல்லோ வொருநாலுங்
கொன்றது போலுநிரப்பு.

இ-ள். நொருநாலும்-நேற்றும், கொன்றதுபோலும்-கொன்றது போன்று(எனக்குத்துன்பங்களைச்செய்த)—நிரப்பு-வறுமையானது, இன்றும்-இன்றைக்குப், வருவதுசொல்-(என்னிடத்து) வாக்கடவதோ (வந்தால் இனியாதுசெய்வேன்)—எ-று (கருத்து.) ஓ-அசைநிலை. நேற்றுக்கொன்ற வறுமையானது இன்றும்வருமோ -என்பதாம். * அத்துணைக்கள் மூன்சொல்லப்புட்டன, நேற்றுமிகவும்வருந்தி வயிறு நிறைந்த ஒருவன்சொல்லு. (அ)

நெருப்பினுட் டுஞ்சலு மாகு நிரப்பினுள்
யாதொன்றுங் கண்பா டரிது.

இ-ள். நெருப்பினுள் - நீயிற்கிடந்து, துஞ்சலும் - தூங்கலும், ஆகும் - (மந்திரமருந்துகளால் ஒருவனுக்கு) கூடும், நிரப்பினுள் - வறுமைவந்தவிடத்து, யாதொன்றும் - யாதொன்றுலும், கண்பாடு - தூங்குதல், அரிது - இல்லை—எ-று. (கருத்து.) நீயிலும் நித்திரைசெய்யலாம் வறுமையிலே நித்திரைசெய்யக்கூடாது-என்பதாம். * நெருப்பினும்வறுமைகொடிதென்றபடியாயிற்று. இதுவும் அவன்சொல்லு. [இவை நான்கு பட்டாலும் வறுமைப்பட்டவருக்கு உண்டாம் குற்றம்சொல்லப்பட்டது.] (கூ)

துப்புர வில்லார் துவர்த் துறவாமை
யுப்பிற்குங் காடிக்குங் கூற்று.

இ-ள். தப்புரவில்லார் - அழுபவிக்கப்படும் பொருளில்லாதவர் (தம்மாலே செய்குவது முழுதுந் துறந்தலேயாகவும் — துவரத்துறவாமை - முழுதுந்துறவாதொழிதல், உப்பிற்குங் காடிக்கும் - (பிறாவீட்டிலுள்ள உப்பிற்குங்காடிக்கும், கூற்று - யமனுவர் —எ-று. (கருத்து) துறவாதிருந்தல் அயலவீட்டு உப்புக்கும் காடிகாய்க்கு யமனுவார்கள் - என்பதாம் * மானமழிபாமையால் செயத்தகுவது துவேயாயிற்று. முழுதுந்துறத்தல் சுற்றத்தாலே பிட்டமையால் ஒருழிபால் துறந்தாயினும், பின்றைதம்மூடம்பினையுந் துறத்தலாம், அது செய்யாது கொண்டிருந்தல் - அவ்விரண்டினையும் மாளப் பண்ணுதலால் அதனை அவைகளுக்குக் கூற்றென்றார், [இதனால் துறவுண்டாவிடத்துச்செயவது சொல்லப்பட்டது.] (இ)

ஈசு- ஆம், அதி - இரவு.

இனிமானங்கெடாத விரத்தல் இரவாமையோடு ஒத்தலால். அவ்விரண்டுவிடுபெருசற்கு உதவிசெய்வதை யிய உடம்பைக்காக்கலாமென்கிற அதிகாலவழக்குப்பற்றி முன் துவரத்துறத்தலென்றும் இறத்தலுக்குதற்பொருட்டு இரவுசொல்லுகின்றார். அதிகார முறைமையும் இதனாலே விளங்கும்.

இரக்க விரத்தக்கார்க் காணிற் கரப்பி
னவர்பழி தம்பழியன்று.

இ-ள். (வறுமைப்பட்டவர்)—இரத்தக்கார் - இரத்தற்குறைப்புடையவனோ, காணின் -கண்டவிடத்து, இரக்க - (அவரிடத்தே) இரக்கடவர், காப்பின் - (அவர்) ஒளித்தாராயின், அவர்பழி - அவர்குப்பழியாம், தம்பழியன்று - தமக்குப்பழியாகாது. (ஆகலால)—எ-று. (கருத்து.) தரித்திரர்கள்கொடுப்பவர்களைக் கண்டால் யாசிக்கவுடனுகள் அவரொளித்தாராயின் அவர்குப்பழியல்லது தமக்குப்பழியல்ல - என்பதாம் * இரத்தற்கேற்புடையவராவார் - சொல்லுமுன்னே அறிதலுடையாராய் மறுபற்கொடுப்பவர். அவர்உலகத்தில் அறியாதலான் காணினென்றும். அவரிடத்தே இரந்தார்க்கு இரவால்வரும் அவமானம் இல்லாமையால் இரக்கவென்றும்- அவர்கொடுத்தலிலே குறைகாட்டாமையால்- காப்பினென்றும், காட்டுவராயின் அப்பழிபரிசுத்தவெண்புடைவையில் அழுக்குப்போல் அவரிடத்தேகடிதுசெல்லுதலால் அவர்பழியென்றும். எற்பில்லாதவரிடத்தே இரவல்லாமையாலதம்பழி யன்றென்றும்சொல்லினர். (க)

இன்ப மொருமற் கிரத்த விரத்தலை
துன்ப முறுவ தவரின்.

இ-ள். ஒருவற்கு- ஒருவனுக்கு, இரத்தல் - இரத்தலும், இன்பம்- இன்பத்திற்குவதுவாம், இரந்தவை - இரந்தபொருள்கள் ஈவாரது அறிவுடைமையாம்ல்—துன்பமுறுஉ - (தான்) துன்பமுறுமுயல், வரின் - வந்தால்—எ-று. (கருத்து.) ஒருவனுக்குயாசித்த பொருள்கள் துன்பமடையாமல் வந்தல்யாசித்தலுமின்பமாம்-என்பதாம். * இன்பம் - ஆகுபெயர். உறுமலென்பது - கடைகுறைந்தது, துன்பமாவன - ஈவாரிடத்துக்காலமும் இடமும் அறிந்து செல்லுதலும் - அவர்குறிப்பறிதலும் - அவனைத்தன்வசப்படுத்தலும், அவர் மனமிரங்கத்தக்கவை நாடிச் சொல்லலும் - முதலானவைகளால்வருவனவும், மறுத்தவிடத்து வருவனவும் - ஆம், அவையுறுமல்வருகலாவது - அவர்முன்னே அறிந்து கொடுக்கக்கொள்ளுதல். [இவை இரண்டுபாட்டாலும் வறுமையால் உயிர் நிங்குமளவில் அவமானமில்லாவிரவு விலக்கப்படாதென்பது சொல்லப்பட்டது.] (உ)

காப்பிலா னெஞ்சிற் கடனறிவார் முன்னின்
றிரப்பு மோ வேந்தடைத்து.

இ-ள். காப்பிலா - ஒளித்தலில்லாத, நெஞ்சின் - நெஞ்சினையுடைய, கடனறிவார்முன் - மானமறிவார்முன், நின்று-நின்று, இரப்பும்-(அவரிடத்தேதன்னை) இரத்தலும், ஏரோர்- ஓரழகை, உடைத்து - (வருமைப்பட்டவர்க்கு) உடைத்து—எ-று. (கருத்து.) எளியாதுகொடுப்பர் வரிடத்துயாசித்தலும் - ஓரழகுடையது - என்பதாம். * சிறியசுருக்கத்துவேண்டுமுயர்வென்றதனால் அவர்க்கு அதுகடனெனப்பட்டது. மானமறிதல் - சொல்லத்தொடங்கிச் சொல்லமாட்டாமைக்கு - எதுவாகிய அகனியல்பை அறிதல். அவ்வறிவுடையவர்க்கு முன்னே நிற்கை மாத்திரமே போதுமாகையால் - முன்னின்றென்றும், சொல்லுதலால் வரும்சிறுமை அடையாமல் ஒரோருடைத்தென்றும். சொல்லினர். உம்மை-அவ்விரவுநிழிவுவிளக்கிநின்றது. (ஊ)

இரத்தலு மீதலே போலுங் காதற்
கனவிலுந் தேற்றுதார் மாட்டு.

இ-ள். காதற்கால்- (தமக்குஉள்ளது) மறைத்தலில், கனவிலும்- சொப்பனத்திலும், தேற்றுதார்மாட்டு - அறியாதவரிடத்து, இரத்தலும்-யாசித்தலும், ஈதலேபோலும் - (வறியவர்க்குக்) கொடுத்தலேபோலும்—எ-று (கருத்து.) சொப்பனத்திலும் உலுத்தகுண மில்லாதவரிடத்தாயாசித்தலும் கொடுத்தலேபோலாம் - என்பதாம். * தான் புழ்தாராகாயிறும் முன்னுண்டாகிய புகழ்கெடவாராமையால் - ஈதலேபோலுமென்றார் எ-அசை. (எ)

காப்பிலார் வையகத் துண்மையாற் கண்ணின்
றிரப்பவர் மேற்கொள் வது.

இ-ள். கண்ணின்று - (சொல்லமாட்டாமல்) முன்னின்றமாத்திரத்தால், இரப்பவர் - யாசிப்பவர்—(உயிர்காத்தற்பொருட்டு) மேற்கொள்வது (இரத்தலை) மேற்கொள்வது, கரப்பிலார் - (அவர்க்கு உள்ளது) ஒளிக்காமற்கொடுப்பவர், வையகத்து - உலகத்து, உண்மையால் - இருக்கின்றபடியினாலேயிறிதென்றுலன்று—என்று. (கருத்து.) உள்ளபொருளை யொளியாதுகொடுப்பவர் உலகிலிருக்கையால் யாசிப்பவர் யாசகத்தை மேற்கொள்வது- என்பதாம். * அவரில்லையாயின் மானம் விடாமாட்டாமையால் உயிரைவிடுவரென்பதாம். (நி)

கரப்பிடும்பை யில்லாரைக் காணினிரப்பிடும்பை
யெல்லா மொருங்கு கெடும்.

இ-ள். கரப்பிடும்பை - (உள்ளதை) ஒளித்தலாகியதோஷத்தை, இல்லாரை, உடையரல்லாரை, காணின் - கண்டால்—(மானம்விடாமலிரப்பவர்க்கு) இரப்பிடும்பைமையெல்லாம் - வறுமையால்வருந்துன்பங்களெல்லாம், ஒருங்குகெடும் - ஒருசேரக்கெடும்—என்று. (கருத்து.) ஒளியாது கொடுப்பவனைக்கண்டால் யாசிப்பவர்களுக்குத் துன்பங்கெடும் - என்பதாம். * ஒளித்தல் ஒருவனுக்கு வேண்டுவதொன்றல்லாமையால் அதனை நோயென்றும், அந்நோயில்லாத இரக்கத்தக்கவரைக் கண்டபொழுதே அவ்விரப்பவர் மிகுமகிழ்ச்சியினராவராகலால் எல்லாமொருங்குகெடுமென்றும், சொல்லினர். இடும்பை - துன்பம் அதுநோய்க்கு ஆகுபெயர். (சு)

இகழ்ந்தெள்ளா தீவானைக் காணின் மகிழ்ந்துள்ள
முள்ளு ளுவப்ப துடைத்து.

இ-ள். இகழ்ந்து- (தம்மை) அவமதித்து, எள்ளாது - இழிவுசொல்லாமல், ஈவானை- (பொருள்) கொடுப்பவனை, காணின்- கண்டால், உள்ளம்-(அவ்விரப்பவரது) மனம், மகிழ்ந்து- மகிழ்தல் செய்து, உள்ளுள்-உள்ளுள்ளே, உவப்பது - மலருந்தன்மையை, உடையது—என்று. (கருத்து.) பொருள் கொடுப்பவனைக்கண்டால் யாசிப்பவர் மனமகிழ்ச்சியைபுடையது- என்பதாம். * இகழ்ந்தெள்ளாதெனவே - நன்குமதித்தலும், இனியனவசொல்லலும் - கொள்ளப்படும். அவ்விரப்பவர்க்கு வறுமைத்துன்பம் கெடுவதுமாதிரமேயன்றி தமமை அவர் ஐம்புலன்களாலும் பேரின்பமடைந்தவராக நினைத்தலாலும், உள்ளுளுவப்பதைடைத்தென்றார். [இவை ஐந்துபாட்டாலும் இரக்கத்தக்கவரியல்பு சொல்லப்பட்டது.] (எ)

இரப்பாரை யில்லாயி னீரங்கண்மா ஞால
மரப்பாவை சென்றுவந்தற்று.

இ-ள். இரப்பார் - (வறுமையுற்) றிரப்பவர், இல்லாயின் - இல்லையாயின், ஈரங்கண்மாஞாலம் - குளிர்ந்த இடமுடைய பெரியபூமியிலுள்ளவரது (செலவுவரவுகள்—மரப்பாவை - (உயிரில்லாத) மரப்பாவை, சென்றுவந்தற்று - (எந்திரக்கயிற்றால்) சென்றுவருதல்கள் போலும்—என்று. (கருத்து,) யாசகரில்லாவிடில் பூமியிலுள்ளோர் செலவு

வுள்ள் ஈரப்பானை சூற்கிரத்தாலாடுதல்போலுமாம் - என்பதாம். * அலை - ஞாலம்-உலகுபெயர். உவமேயத்துக்கு உவமானத்தோடு ஒத்தொழில் வருவிக்கப்பட்டது. பூமியிலுள்ளானென்றது இரப்பவரொத்தவனை, அவர்க்கு ஈந்து புகழும் புண்ணியமும் அடையாமையால் பிருடைய ரல்லனென்பதாம். (அ)

ஈவார்க ணென்னுண்டாந் தோற்றமிரந்துகோண்
மேவார்நிலா வக்கடை.

இ-ள். இரந்துகோள் - (அவரிடத்துச்சென்று ஒன்றனை) இரந்து கொள்ளுதலை, மேவாநிலா அக்கடை - விரும்புவா நில்லாதவழி, ஈவார் ண் - கொடுப்பவரிடத்து, என-என்ன, தோற்றம் - புகழ், உண்டா , (யாதுமில்லை)—என-று. (கருத்து.) யாசிப்பவரில்லாவிடிற் கொடுப்பவ ர்க்கென்ன புகழுண்டாம்-என்பதாம். * தோற்றம்-ஆகுபெயர். மேவு தலென்பது - விகாரமாயிற்று; கொடுத்தல்வல்லமை வெளிப்படாமை ால் அதனாலே புகழடையாரென்பதாம். [இவை இரண்டுபாட்டாலும் லகிற்கு இரப்பார்வேண்டுமென்பது சொல்லப்பட்டது.] (கூ)

இரப்பான் வெகுளாமை வேண்டு நிரப்பிடும்பை
தானேயுஞ் சாலுங் கரி.

இ-ள். (ஈவானுக்குப்பொருள் உதவாதவிடத்தே) இரப்பான் - இ ப்பவன், வெகுளாமைவேண்டும் (இவன்) எனக்குக் கொடுக்கின்றில னென்று அவ்வினைக் கோபியாதொழிதல் வேண்டும்—(அதுவேண்டிய ாழுது உதவாதென்பதற்கு வேறுசாட்சிவேண்டா)—நிரப்பிடும்பை தானேயும்-வறுமையாகிய தம்நோய்தானேயும், கரி- சாட்சியாதல், சா ம்-அமையும்—எ-று. (கருத்து:) யாசிப்பவன் கோபியாமலிருக்கவே ண்டும்-என்பதாம். * யாவர்க்கும் கேடவேண்டுதலும், நிலையில்லாமை ம், முதலாகிய பிறசாட்சிகளும் உண்டென்பது படநின்றமையால்உ மை எச்சவும்மை, தனக்கேயல்லாமல் தன்னையிரந்தவர்க்கும்அன்றை ன்றுபொருள் சம்பாதித்தற்கு அவன்படுந்துன்பத்தைத் தனக்கேயா வத்துத் தான்படுகிற துன்பம்தானறிந்துகோபியாதிருக்கக்கடவனெ பதாம்.[இதனால் அவர்க்கு அவசியமாள ஓரியல்பு சொல்லப்பட்டது.]

ஈள - ஆம், அதி - இரவச்சம்

ஈகாவது-மானங்கெடவரும் இரத்தலுக்கு அஞ்சுதல். அதிகாரமுறை மையும் இதனாலே விளங்கும்.

கரவா துவந்தீயுங் கண்ணன்னர் கண்ணு
மிரவாமை கோடி யுறும்.

சள

ஈன - தும் - அதி — இலக்கம்.

இ-ள். (ஒருவன்) கரவாது- (தமக்குள்ளதை) ஒளிக்காமல், ஈன - (இவர் வரப்பெற்றேமென்று) உள்ளமகிழ்ந்து, ஈயும் - கொடுக்கும், கண்ணன்ன ஞாட்கண்ணேயும் - கண்போற்சிறந்தவரிடத்தும், இரவாமல் வறுமைப்படுதற்கும், கோடியுறும் (இந்து செல்வமடைதற்கு மடங்கு கருமம்—என-லும். (கருத்து.) ஒளியாது கொடுக்குங்கால்கொப்பானவரிடத்தும் யாசியாதிருத்தல் கோடிமடங்காம்-என்பதாம். * வறுமையெனறக்கப்படாத சுட்பினரிடத்தும் இலாதென்பது படிற்றன்மையால் உம்மை யுயர்வு சிறப்பு அவற்றால் மானங்கெடாதென்பது தோன்றவல்லாமல் அதற்கு மிருதன்மையால் செய்யவல்லதோர் முயற்சிசெய்து சீவனஞ்செய்தலே தென்பது கருத்து.

இந்து முயிர்வாழ்தல் வெண்டிற் பரந்து
கெடுக வுலகியற்றியான்.

இ-ள். உலகியற்றியான்- இவ்வுலகத்தைப்படைத்தவன் (இதற்குவாழ்வார்க்கு முயல்று சீவனஞ்செய்தலே யல்லாமல்—இரப்பாகிற்றும், உயிர்வாழ்தல்வேண்டின்- சீவனஞ்செய்தலேவேண்டி னாணையின், (அங்கொடியோன்) பரந்து - (தோறும் அவர்போல்) வந்சுழன்று, கெடுக-கெடக்கடவன்—என-று. (கருத்து.) பிரமன் உலகோரை யாசகஞ்செயாப்படைத்தானாகி லவன்கெடக்கடவன் - என்றதாம். * மக்களுயிர்க்கெல்லாம் வாழ்நாளும் அதற்கு வேண்டுவனவும் உண்டியும், அதற்கு ஏதுவாகிய செய்தொழிலும், பழவினை வசத்தாற் கருவோடுகலந்த அப்போதே அவன்கற்பிப்பா னன்றே அனைவருக்கும் சிலவுயிர்க்கு இரத்தலையும் ஒருசெய்தொழிலாகக் கற்பித்தானுயிர்த்தீவினையால் தானும் அத்துன்ப மடையவேண்டுமென்பதாம். [இரண்டுபாட்டாலும் அவ்விரவின்கொடுமை சொல்லப்பட்டது.]

இன்மை யிடும்பை யிரந்துதீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட் டதில்.

இ-ள். இன்மை-வறுமையால்வரும், இடும்பை- துன்பத்தை யற்சிசெய்து நீக்கக்கடவோமென்று நினையாமல்)—இரந்துதீர்வாமென்னும்-இரந்து நீக்கக்கடவோமென்று நினைக்கும், வன்மையின் - வலிமைபோல், வன்பாட்டது-வலிமைப்பாடுடையது, இல்-இல்லை—என-று. (கருத்து.) வறுமைத்துன்பத்தை நீக்குவோமென்னும் வலிமைபோல் வலிமையுடையதில்லை-என்பதாம். * அது நீக்கற்குவழியாகிய முயற்சி யிருக்கவழியல்லாத இரவால், நீக்கநினைத்தலால் வன்மையாயிற்று. வலிமைப்பாடு முறட்டுக்கன்மை அது ஆவதை யாலோசியாது செய்தல். [இதனால் இரவுவறுமை தீர்தற்கு வழியன்றென்பது சொல்லப்பட்டது.]

இடமெல்லாங் கொள்ளாத் தகைத்தே யிடமில்லாக்
காலுமி வொல்லாச் சால்பு.

இ-ள். இடமில்லாக்காலும் - அனுபவிக்கவேண்டுமதில்லாமல் வ
ரையறுக்கப்பட்டவிடத்தும், இரவு - (பிறரிடத்துச்சென்று) இரத்தலுக்கு
நல்லா-உடன்படாத, சால்பு - நிறைவு, இடமெல்லாம் - உலகமெல்லா
ம்) ஒருசோ இயைந்தாலும்)—கொள்ளாத்தகைத்தே - கொள்ளாதபெ
ருமையுடைத்தே—எ-று. (கருத்து.) தரிந்திரத்திடத்தும் யாசியாமை
யே பெருமை- என்பதாம். * அவ்விரத்தலைச் சால்புவிலக்கலால் இர
வல்லாமை அதன்மேல் ஏற்றப்பட்டது. [இதனால் அவ்வழியல்லா
தைச் சால்புடையார் செய்யாரென்பது சொல்லப்பட்டது.] (அ)

தெண்ணீர் ரடுபுற்கை யாயினுந் தாடந்த
துண்ணலினோங்கிலரிய திவ்.

இ-ள். தாள் - (வழிபாகிய) முயற்சி, தந்தது - (கொண்டுவந்து) த
ந்தது, தெண்ணீர்-தெளிந்தநீர்போலும், அடிபுற்கையாயினும் - சமைத்
தகூழையாயினும், உண்ணலினோங்கு- (அதனை) உண்ணுதற்குரிமை, இ
லியது-இன்பந்தருவது, இல்-இல்லை—எ-று. (கருத்து.) முயற்சியால்வ
ந்தது கூழாயினும் அதையுண்ணுதல்போலின்பமுடையதில்லை - என்
பதாம். * முயற்சிதந்தகூழ் அழுக்கமில்லாமல் தெளிந்தநீர்போன்றதா
யினும் அவமானமாகிய இரவால் வந்ததல்லாமல் தம்முடைய தாகலா
ல் அமிழ்தத்தோடு ஒக்குமென்பதாம். [இதனால் வழியாலாகியது சிறி
தெனினும் அதுசெய்யுமின்பம் பெரிதென்பதுசொல்லப்பட்டது.] ()

ஆவிற்கு நீரென்று நிரப்பினு நாவிற்
கிரவி னிளிவந்த தில்.

இ-ள். ஆவிற்கு - (தண்ணீர்பெறுதற்கு நிலைமையதாகிய) பசு
க்கு நீரென்று - (தருமநோக்கி) இதற்குத் தண்ணீர்தரல்வேண்டுமென்
று, இரப்பினும் - இரந்துசொல்லும்போதும், இவ்வின் - அவ்விரவுபோ
ல், நாவிற்கு - (ஒருவ) னாவிற்கு, இளிவந்தது - அவமானம்வந்தது, இல்-
லையில்லை—எ-று. (கருத்து.) பசுவிற்கு நீர்வேண்டுமென்னும் யாசகம்போல
வாயிற்பிழையில்லை- என்பதாம். * ஆனைக்காப்பாற்றல் பெரியவற மாக
கல் ஆவிற்கென்றும், பொருள்கொடுத்துக் கொள்ளவேண்டாத எளி
மையதாகலால் நீரென்றும், இரக்கின்றேறுனுக்கு அவமானமாவது அ
தைச்சொல்லளவே யாகலால் நாவிற்கென்றும், அதுதான்எல்லா வவமான
ங்களிலும், மேற்படுதலால் இளிவந்ததில்லென்றும், சொல்லினர். [இ
தனால் அறத்தையும் முயன்று செய்வதல்லது இங்குசெய்ய லாகாதெ
ன்பதுசொல்லப்பட்டது.] (சு)

இரப்ப னிரப்பானை யெல்லா மிரப்பிற்
கரப்பா னிரவன்மி னென்று.

இ-ள். இரப்பானையெல்லாம் - யாசிப்பவனையெல்லாம், இரப்பு (நான்) இரவாகின்றேன், இரப்பின்- (உமக்கு) இரக்கவேண்டுமென்று காப்பார் - (தமக்கு உள்ளதை) ஒளிப்பவனை, யிரவன்மின் - இரவுங்கள்—என-று. (கருத்து.) யாசிப்பானையெல்லாம் யாசித்தேன் நீங்; ஒளிப்பவரிடத்தில் யாசியாதிருங்கள்- என்பதாம். * இவ்வுலகமானது யலால் ஊட்டிவளர்த்தவிடத்தும் உடம்புநில்லாதாகையின் இதுவே டாமென்பது தோன்ற இரப்பினென்றார். [இதனால் மானங்கெடா மிரவுவிலக்கப்பட்டது.] என்று இடைச்சொல்.

இரவென்னு மேமாப்பி ரோணி ரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

இ-ள். (இவ்வுறுமையென்னுங் கடலை இதனுற் கடப்போமென் நினைத்து ஒருவனேறிய)—இரவென்னும் - யாசகமென்னும், எ ல்-காவலற்ற, தோணி- மரக்கலம் (அதனிடத்தே ஓடுங்கால்) க னும்- ஒளித்தலென்னும், பார்- வன்னிலத்தோடு, தாக்க - தாக்கு ன், பக்குவிடும்-பிளந்துபோம்—என-று.(கருத்து.) யாசகமென்னு ணி ஒளித்தலென்னும் வலியதிலந்தாக்கக்கெடும்-என்பதாம். * மு யாற் கடப்பதனை இரவால் கடக்கலுற்றவன் அதன் தலைகாணை ல் ஏமர்ப்பிரோணியென்றார். ஏமாப்பின்மைதோணிமேல் ஏற்ப டது, அதுகடத்தற்கு ஏற்றதல்லாமையாலும், நிலமறியாது செலு யவழி உடைதலாலும், அதனிடத்தே ஏறலாகாதென்பதாம். (இத ருவகம்.)

இரவுள்ள வுள்ள முருகுங் காவுள்ள
வுள்ளதூ உமின்றிக் கெடும்.

இ-ள். இரவு-(உடையார் முன்நில்லார்சென்று) இரந்துநிற்கு கொடுமையை, உள்ள-நினைத்தால், உள்ளம்- (எம்) உள்ளம், உரு கனைந்துருகாநிற்கும், காவு - (இது அந்நிலையைக் கண்டிருந்தவர்) இ லையென்றவின்கொடுமைய, உள்ள-நினைத்தால், உள்ளதூஉம்-அ ருகுமளவுதானும், இன்றி-இல்லாமல், கெடும்- அழிந்துபோம்—எ (கருத்து.) யாசிப்பவர் கொடுமையைநினைத்தால் மனமுருகுகின்றதி ல்லையென்னுங் கொடுமையைநினைத்தால் உருகுமளவுமில்லாமற் கெ ம்-என்பதாம். * இரவினும் காவுமிகக்கொடிதென்றபடி.

காப்பவர்க் கியாங்கொளிக்குங் கொல்லோ விரப்பவர்
சொல்லாடப் போஒ முயிர்.

இ-ள், சொல்லாட - (ஒளிப்பவர் இல்லையென்று) சொல்லியபோ தே, இரப்பவர்-இரப்பவர்க்கு, உயிர்-உயிரானது, போம் - போ றின்றது, காப்பவர்க்கு - (இனிச்சொல்லுகின்ற) அவ்வொளிப்பவர்க்

(உயிர்பின்னிருத்தலால்) யாங்கு- எப்புனையுள், ஒளிக்குங்கொல்- (அப் பொழுது) புகுந்தொளித்துநிற்குமோ—எ-று. ஓ-அசை, (கருத்து.) யாதி ப்பவர்க்கில்லையென்றால் உயிர்போகும் ஒளிப்பவர்க்குயிரங்கேயொளிக் குமன்பதாம். *உயிர்போதலாவது இன்னியாமென்செய்வாமென்றுவருத் தச்செயலற்றுநிற்றல். கேட்டார்நாக் கொல்லவல்லதாகிய சொல்சொ ல்வானைக் கொல்லுதல் சொல்லவேண்டாவரிதிலும் அதுகாணுமின்றில வும் இதுவென்றேனவென்பதாம். [இவைமூன்றுபாட்டாலும் அவ்விரண் டின்குற்றமும் கரவின்குற்றமும் சேர்த்துச் சொல்லப்பட்டன.] (ம)

ஈ அ - ஆம், அதி- கயமை.

அஃதாவது - முன்னே அரசியலுள்ளும் அங்கவியலுள்ளும் சிறப்புவ கையாற்சொல்லப்பட்ட குணங்களுள் ஏற்புடையனவைகளைக் குறிப்பி லும்யாவர்க்கும் பொருந்தாவகையமைபால் அங்கே குறிப்பாற்சொல் லியனவையும், இங்கே நேரிபியலுள் வெளிப்படச்சொல்லியவையும், ஆ கியகுணங்களுள்யாதுமிலராகிய கீழோரதுதன்மை, அதனால் இதுவ ல்லாவற்றிற்கும் நின்னைக்கப்பட்டது:

மக்களே போல்வர் கயவ ரவரன்ன
வொப்பா ரியாங்கண்ட தில்.

இ-ள். கயவர்- கீழோர், மக்களேபோல்வர்- (வடிவால்முழுதும்) ம க்களேபோலிருப்பவர், அவரன்ன வொப்பாரி - அவர் அம்மக்களை யொ த்தல் போன்றவொப்பு—யாம்-நாம் - கண்டதில்- (வேறிண்டுசாதிகளி டதனுக்) கண்டதில்லை—எ-று.(கருத்து.) கீழ்மக்கள்வடிவாலே மக்களை யொப்பாவர் - அவர்தன்னை, யொப்பானவனை-யான்கண்டதில்லை ஏற்பதா ம். * முழுதுமொத்தல்-தேற்றேகாரத்தாற் பெற்றும், அவ்வொன்றது அவரிடத்தே யுள்ளவொப்புமையை மக்கட்சாதிக்கும் கயவச்சாதிக்கும் வடிவொத்தலால் குணங்களினிருப்பினாலும், இல்லாமையாலும், அல் லது வேற்றுமை அறியப்படாதென்பதாம். [இதனாற் கயவரது குற்றமி குதி சொல்லப்பட்டது] (க)

நன்றறி வாரிற் கயவர் திருவுடையார்
நெஞ்சத் தவல மிலர்

இ-ள். நன்று - (தமக்கு) உறுதியாயினவைகளை, அறிவார்தின்- அறி பவரின், கயவர் - (அவையறியாத) கீழ்மக்கள், திருவுடையார்-நன்மையு டையராவர் (அவர்போல)—நெஞ்சத்து- (தமது) நெஞ்சினிடத்து, அ வலமிலர் - (அவ்வாறாணமாக) கவலையிலர் (ஆதலால்)—எ-று. (கருத்து.)

நன்மைகளை யறிபவரிலும் நெஞ்சிற் கவலையில்லாதவராகிய கீழ்மக்கள் நன்மையுடையவர்- என்பதாம். * நன்றென்பது - சாதியொழுக்கம் உறுதிகளாவன இம்மை மறுமைவீடுகளுக்கு உரியவாகிய புகழ்புண்ணியஞானங்கள். இவைகளையறிவார் இவைசெய்யாதிருத்தலே அதிகமாகச்செய்யப்பெறுதின்றிலோமென்றும், செய்கின்ற இவைகளுக்கு இடையூறு வருமோவென்றும், இவைகளுக்கு மாறாகிய பழிபாவமறியாமை யென்பவைகளில் யாதுமில்லையுமோவென்றும், இவ்வழியாலே கவலையுடையர், கயவர் அப்புகழ்முதலான வைகளையிட்டுப் பழிமுதலானவைகளைச்செய்யாதின்றும். ஒருகவலையு மில்லா திருப்பதாலும் திருவுடையரைக் குறிப்பதாகிறதுமுடி. [இதனால் பழிபாவ முதலானவைகளுக்கு அஞ்சாமை யென்பது சொல்லப்பட்டது] (உ)

தேவ ரனையர் கயவ ரவருந்தா
மேவன செய்தொழுக லான்.

இ-ள். தேவரனையர்கயவர் - தேவரும்கயவரும் ஒருதன்மையர்.— (அது எதிலெனின்) அவரும் - அக்கயவரும்— (தேவர்போலேயும் மையினிப்பாரில்லாமலே) தாமேவன - தாம்விரும்புமவைகளை, செய்தொழுகலான் - செய்துநடத்தலால்— எ-று. (கருத்து.) தேவருங்கயவருமொப்பாவர் - என்பதாம். * உயர்ச்சியும் இழிவுமாகிய தங்காரணவேறுபாடுகுறிப்பால் தேவன்றன்னின்றமையால் இதுபுகழ்வார்போன்று பழித்தபடியாயிற்று. [இதனால்விலக்கப் படுதலில்லாமல் வேண்டியது செய்வானென்பது சொல்லப்பட்டது] (ஊ)

அகப்பட்டி யாலாைக் காணி னவரின்
மிகப்பட்டுச் செம்மாக்குங் கீழ்.

இ-ள். கீழ்-கீழாயிருந்தோன், அகப்பட்டியாலாைா- (தன்னிற்) குறைந்தபட்டியாய் நடப்பவரை, காணின் - கண்டானாயின்— (அவன் அக்கடக்கையிலே) அவரின் - அவனைக்காட்டிலும், மிகப்பட்டு - (தான்மேம்பட்டு)— செம்மாக்கும் - (அதனால்தன் மிகுதிகாட்டி) இறுமாப்பான்— எ-று. (கருத்து.) கீழ்மக்கள்பட்டியாய் நடப்பவரைக்கண்டாலதனிற் மேலாகநடப்பான்- என்பதாம். * அகமாகிய மனம்பட்டிபோன்று வேண்டியபடி நடத்தலால் அகப்பட்டியென்றார். [இதனால் அவர்மேம்படும் விதம்சொல்லப்பட்டது] (எ)

அச்சமே கீழ்களதாசார மெச்ச
மவாவுண்டே லுண்டாஞ்சிறிது.

இ-ள். கீழ்களதாசாரம் -கீழோரதுஆசாரம்— (கண்டதுஉண்டாயின் அதற்குகாரணம்) அச்சமே - (ஆசனுலே தன்பம்வருமேன்று அஞ்சும்) அச்சமே. எச்சம் - (அது) ஒழிந்தால், அவா- அவாப்படுதும்

பொருள், உண்டேடல் - (அதனால்) உண்டாம்மாகில், சிறிது-சிறிது, உண்டாம் - உண்டாகும்—ஈ-று.(கருத்து.) கீழ்மக்கட்காசாரமியல்பாகவில் லை - என்பதாம்.* ஆசாரத்தின் காரணத்தை ஆசாரமென்றும். அவாவப் பிறந்தனை அவர்வென்றும், செல்வத்தினால் கீழ்மக்களுக்கு - ஆசாரபெரும் பான்மை அச்சந்தாலும் சிறுபான்மை பொருட்பேற்றாலு மல்லாமல் இயல்பாக உண்டாகாதென்பதாம். [வேண்டியபடி செய்தலே இயல்பு ஆசாரஞ்செய்த லியல்பன்றென்பது இதனால் சொல்லப்பட்டது] (ரு)

அறைபறை யன்னார் கயவ ராங்கே
மறைபிறர்க் குய்த்துரைக்கலான்.

இ-ள். தாங்கேட்ட - தாங்கள்கேள்விப்பட்ட மறை - இரகசியங்க ளை, உய்த்து - (இடந்தேதாறும்) தாங்கிக்கொண்டுபோய், பிறர்க்கு - அ வரல்லாதவர்க்கு, உரைக்கலான் - சொல்லுதலால், கயவர் - கீழ்மக்கள், அறை பறையன்னார் - அறைப்படும்பறைபோல்வர்—எ-று. (கருத்து.)கீழ்மக் கள் பறைக்கொப்பாவர் - என்பதாம். * மறையாவது வெளிப்பட்டால் குற்றம்விளையுமென்று பிறனொருவனை மறைத்து ஒருவன் சொல்லியசொல். பி றர் - எவருக்கு மறைக்கவேண்டியோ அவர் - உய்த்தென்றார். அவர்க் கு அது பெரும்பாரமாதல் நோக்கிப் பறை ஒருவன்கையால் தன்னைய றிந்ததொன்றினை இடந்தேதாறுங்கொண்டுசென்று அறியாதவர் யாவ ரையும் அறிவிக்குமாதலால் இதுதொழிலுவமம் [இதனால் அவரதுசெ றிவில்லாமை சொல்லப்பட்டது] (சு)

ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்குங்
கூன்கையல்லா தவர்க்கு.

இ-ள். கயவர் - கீழ்மக்கள், கொடிறுடைக்கும் - (தன்) கதுப்பினை யெறிப்பதாக, கூன் - வளைந்த, கையல்லாதவர்க்கு, கைபினையுடையர ல்லாதவர்க்கு, ஈர்ங்கை - தாம் உண்டுபுசியகையை — (தெறிக்கவேண் டுமென்று) இரந்தாலும், விதிரார் - தெரியார்—எ-று. (கருத்து.) கீழ்மக் களிரப்பவர்க்குக்கொடார் வருத்தமுவோர்க்குக்கொடுப்பர் - என்பதாம். * வளைந்தகை - மூடுறுக்கியகை, கீழோர் - இரப்பவர்க்கு ஒன்றுங்கொடா ர்தம்மை வருத்தப்படுத்துவோர்க்கு எல்லாங்கொடுப்பரென்பதாம். (எ)

சொல்லப் பயன்படுவார் சான்றோர் கரும்புபோற்
கொல்லப் பயன்படுங் கீழ்.

இ-ள் சான்றோர் - மேலாயினோர். சொல்ல - (மெலியவர்போய்க் தங்குறையைச் சொல்லியவளவிலே, பயன்படுவர்) இரக்கி - பிர யோசனப்படுவர், கீழ்-மற்றைக்கீழாயினோர், கரும்புபோல் - கரும்பை ப்போல், கொல்ல (வலியவர்கையருக்கியவிடத்தே) பயன்படும் - பிர யோசனப்படுவர்—எ.று. (கருத்து.)மேலோர்வருத்தஞ்சொன்னவுடன்

பயன்படுவர் கீழோர்வருந்திஞற் பயன்படுவர் - என்பதாம். * பயன்படுதல் உள்ளதுகொடுத்தல், கீழாயினோரதுஇழிவுதோன்ற - மேலாயினோனையும் உடன்சொல்லினர் [இவைஇரண்டுபாட்டாலும் அவர்கொடுக்குப்விதம் சொல்லப்பட்டது] (ஏ)

உடுப்பதூஉம் முண்பதூஉங் காணிற்பிறர்மேல்
வடுக்காண வற்றுகுங் கீழ்.

இ-ள். கீழ்-கீழாயினோன், உடுப்பதூஉம்- (பட்டுந்துகிலும்) உடுத்தலையும், உண்பதூஉம் - (பாலுந்தேனுமாறும்) உண்ணுதலையும், காணிற் கண்டால் - (அவைபொறாமல்) பிறர்மேல் - அந்தியர்மேல் (குற்றமிலேயாகவும்) வடுக்காண- குற்றமுண்டாக்க, வற்றுகும்-வல்லவனாவன்— என-று. (கருத்து.) கீழ்மகன் பிறருண்டாலும் உடுத்தாலுங் கண்டாற்பொறுமைகொள்வான் - என்பதாம். * உடுப்பது- உண்பது-என்பவை அவ்வகத்தாழினின்மேல் நின்றன அவைகளால்- பூணுதல் வாகனமேறல் முதலாகியபிறதாழ்ச்சிகளும் கொள்ளப்படும். அவைகளைக்கண்டபோதுதே பொறுமைப்படுதலாலே காணினென்றும். கேட்டவர் இக்குற்றம் அவரிடத்திருக்கலாமென்று உடன்படச்செய்தல் அரிதாகலால் வற்றுகுமென்றும், சொல்லினர். [இதனுள்பிறர்செல்வம் பொறுமை சொல்லப்பட்டது.] (க)

எற்றிற் குரியர் கயவரொன் றுற்றக்கால்
விற்றற் குரியர் வினைந்து.

இ-ள். கயவர் - கீழோர்ஒன்று-ஒருதுன்பம், உற்றக்கால்-(தம்மை) அடைந்தவிடத்து—(அதுவேவசார்பாக) வினைந்து -வினைவுற்று, விற்றற்குரியர் - (தம்மைப்பிறர்க்கு) விலைசெய்தற்குஉரியவராவர்—(அதுவல்லாமல்) எற்றிற்குரியர் - வேறே எத்தொழிலுக்கு உரியராவர் —எ-று. (கருத்து.) கீழோர் துன்பம் வந்தவிடத்துத் தங்களைவிற்கவுரியராவர் - என்பதாம். * உணவில்லாமையாகவாவதுவேறொன்றுகவாவதுஒரு துன்பம்வந்து உற்றமாத்திரத்தென்பதுதோன்ற ஒன்றுற்றக்காலென்றும். கொள்வோன்றுர் தங்கீழ்மையை அறிந்துவேண்டாவென்றற்குமுன்னே விற்றுநிற்றலால் - வினைந்தென்றும், சொல்லினர். ஒருதொழிலுக்கும் உரியரல்லரென்பது குறிப்பெச்சம். [இதனுள் தாழும் பிறர்க்கு அடிமையாய் நிற்பனென்பது சொல்லப்பட்டது,] (ஐ)

இரண்டாவது.

பொருட்பால் - மூற்றிற்று.

இனி அப்பொருளைத் துணைக்காரணமாகவுடைத்தாய் இம்மையேபயப்பதாகிய இன்பத்தைச் சொல்லும்படி எடுத்துக்கொண்டார்.

காமத்துப்பால்.

இவ்விடத்தே காமமென்றது, ஓரிகாலத்திலே ஒருபொருளால் சுவை-ஒளி-ஊறு-ஓசை,-நாற்றம் என்கிற ஐம்புலன்களையும் அனுபவித்தற் சிறப்புணர்ந்ததாகிய காமவின்பத்தினை. இதனுணர்ச்சி பிரிவுணர்விருவகைப்படும் o மற்றை இருத்தல்-இரங்கல் - ஊடல் - என்பனவோவென்றால், இவர் பொருட்பாகுபாட்டினை அறம்பொருளின்பமென வடநூல் வழங்குப்பற்றிச் சொல்லுதலால் அப்படியே அவைகளைப் பிரிவினிடத்து அடக்கிஞரொன்றறிக. இனி அவைகளையே தமிழ்நூல்களும்பொருந்த புணர்ச்சியைக் களவென்றும், பிரிவைக் கற்பென்றும், பெரும்பான்மை பற்றிவகுத்து அவைகளைக் கலவாதிருந்து உண்டாக்க உலகநடையோடு ஒத்ததும் ஒவ்வாமையு முடையவாவகுத்துச்சொல்லுகின்றார். அக்கைக்கோளிரண்டனுள்ளும் - களவாவது பிணிமூப்பிறப்புகளில்லாமல் எக்காலும் ஒருதன்மையராய் உருவும், திருவும், பருவமும், குலமும், குணமும், அன்பும், முதலானவைகளாலே தம்முள் ஒப்புமையுடையராகிய தலைவனும் தலைவியும் பிறர்கொடுப்பவும் அடுப்பவும் இல்லாமல் ஊழ்வகையால் காமமெனதிர்ப்பட்டுப் புணர்ந்துவருவது * அதனை எழுதிகாரத்திலே சொல்லத்தொடங்கி முதலில் தகையணங்குறுத்தல் சொல்லுகின்றார்.

ஈக- ஆம், அது - தகையணங்குறுத்தல்.

க ள வி ய ல்.

அஃதாவது, பொழில்விளையாட்டு விருப்பால் மகளிர் கூட்டம் நீங்க அவ்விடத்துத் தனித்துநின்றவளைவேட்டைவிருப்பால் இளையர்நீங்கத்தனித்துவந்துகண்ட தலைவன் அவளழகு தனக்குவருத்தமுண்டாக்குதலைச் சொல்லுதல், இதுகண்டபொழுதே தோன்றுவதாகலால் முதலிலே சொல்லப்பட்டது.

அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொன் மாலுமென் னெஞ்சு.

[தலைவியுருவு முதலானவை முன்கண்டறிந்தனவையல்லாமல் சிறந்திருக்கையால் அவளைத் தலைவன் ஐயுற்றது] இ-ள். கனங்குழை-இக்

o (தொல்காப்பியம்) இன்பமும்பொருளு மறனுமெய்ம்முறு-கன்பொடுபுணர்ந்த வைந்திணைமருங்கிற்-காமக்கூட்டங் காணுங்காலை மனையோர்கேளாத்தன்மன்றலெட்டனுட்டிறையனை நல்யாழ்த்துணையோரியல்பே.

* இறையனாகப்பொருள் - ஒப்புமூருவுமவ்வுறுப்புமென்முறை - கற்புமேருமெழிலுமென்முச் - சாயலுநாணு மடனுமென்மற் - நோயும்வேட்கையு நாவுமென்முங் - காவயின்வரூஉங்கிளவியெல்லா - நாட்டியமறபி னெஞ்சுகொளினல்லது = காட்டலாகாப் பொருளென்ப.

சுஅ

நெஅ ஈகை - ஆம் - அதி—தனையணங்குறுத்தல்.

கண்பொருந்திய குழைனையுடையவள், அணங்குகொல் - (இச்சே
யிருப்பவளாகிய) தெய்வப்பெண்தானோ—(அல்லாமல்) ஆய்மயி
கொல் - ஒருமயில் விசேடமோ—(அல்லாமல்) மாதர்கொல் - ஒரு
னிடமாதரோ, என்னெஞ்சு- மாலும (இவளோ இன்னவென்று துணி
மாட்டாமல்) மயங்காநின்றது—எ-று. (கருத்து.) இவள் தெய்வப்பெ
ணோ மயிலோ மானிடப்பெண்ணோ- இன்னவளென்றறியாதென் மன
யங்குஞ்சென்றது-னஎ்பதாம். * ஓ-அசை, ஆய்மயில்-கடவுள்விசேடம்
ஆராய்ந்து படைத்தமயில் - கொலைக்குணமு - ஆகுபெயர். "தெய்வப்பெ
போல் எழுதலாகாத வுருவம்தன்னை வருத்தலும்பற்றி - அணங்குகொ
லென்றும், மயில்போல் சாயலும் பொழிலிடத்து நீற்றலும்பற்றி - மா
மயில்கொலென்றும், தன்னெஞ்சு செல்லாதமையும் அவள் எதிர்நோ
க்கியவிதமும் பற்றி-மாதர்கொலென்றும் சொல்லினாள். (1

நோக்கிஞ ணேக்கெதிர் நோக்குத றுக்கணங்கு.
காணக்கொண் டன்ன துடைத்து.

[மாறுடமாதரால் தெளிந்ததலைவன் அவள் பார்வையாலறி
வருத்தஞ்சொல்லியது.] இ-ள். நோக்கினாள் (இப்படிப்பட்ட)-அழகை
டையவள், நோக்கெதிர்- (என்) பார்வைக்கெதிரே நோக்குதல், தாக
ணங்கு - (தானே) காக்கிவருத்துகிற ஒரு தெய்வப்பெண், காணக்கொ
ண்டன்னது - (தாக்குதற்குச்) சேனையைக் கொண்டுவந்ததுபோலு
தன்மையை, உடைத்து-உடையது—ன-று. (கருத்து.) இவளென்ப
ர்னைக்கெதிரே பார்க்குதல் ஒருதெய்வப்பெண் போர்செய்யச் சே
யைக்கொண்டுவந்ததுபோலும் தன்மையையுடையது-னஎ்பதாம். *இ
ன்பாட்டில் அணங்குகொலாய் மயில்கொலென்றமையால் இகாரச்சு
டு வருவிக்கப்பட்டது எதிர்நோக்குத லென்றமையால் இது குறிப்பு
நோக்காயிற்று தன்னை அழகால் வருத்துதலோடு பின்னும் குறிப்பு
பார்வையால் வருத்துதல் சொல்லியபடி. (2

பண்டறியேன் கூற்றென் பதனை யினியறிந்தேன்
பெண்டகையாற் பேரமர்க்கட்டு.

[இதுவுமது] இ-ள். கூற்றென்பதனை-கூற்றுவனென்று (நூலோ
ர்) சொல்லுவதை, பண்டறியேன் - முன் (கேட்டறிந்ததல்லது) கண்
டறிந்திலேன், இனியறிந்தேன் - இப்பொழுது கண்டறிந்தேன் (அதி
—பெண்டகையால் - பெண்குணங்களுடனே, பேரமர் - பெரியபோ
யாய்ப்போர்செய்கின்ற, கட்டு- கண்களையுடைத்து—என்று. (கருத்து.
தலைவன் தலைவியிடத்தை கண்களையே யமனென்று கூறினன்-என்ப
தாம். * பெண்டகை - நாணம்- மடம்- அச்சம்-பயிர்ப்பு-என்கிறகுண
ங்கள் - அவை அந்தந்தக் குறிகளால் அறியப்பட்டன அப்பெண்மை
குணங்களால் இன்பந்தருதலும் உண்டாயினும் அதிக துன்பந்தருதல்
பற்றிக் கூற்றுவனைக்கிச் சொல்லினர். (3

---

* (அகப்பொருள்விளக்கம்)மடமாலைக்கி வடிவுங்கண்டே-விடமுண்
சிறந்தழி யெய்துவதையும்.

கண்டோ ருயிருண்ணுந் தோற்றத்தாற் பெண்டகைப்
பேதைக்கு மிற்றன கண்.

[இதுவுமது] இ-ள், பெண்டகை-பெண்குணங்களுடையது, பேதைக்கு-இப்பேதைக்கு, கண்-கண்கள், கண்டோர்-(தம்மைக்) கண்டவரை, உயிருண்ணுந்தோற்றத்தால்-உயிரையுண்ணுந் தோற்றத்தாடனே, அமர்த்தன-மாறுபட்டிருந்தன—என்று, (கருத்து) இப்பெண்ணின் கண்கள் கண்டவர்களுயிரையுண்ணுங் காட்சியாக மாறுகொண்டிருந்தன-என்பதாம். * கண்கள்-குணங்களுக்கும் பேதைமைக்கும் தமக்கொழியவாயிருந்தன வென்பதாம். (சு)

கூற்றமோ கண்ணே பிணையோ மடவரா
லேக்கமிம் மூன்று முடைத்து.

[இதுவுமது] இ-ள். கூற்றமோ-எமனோ (வருத்துதலாலே) கூற்றமோ, கண்ணே-(என்மேலோடுதலாலே) கண்ணோ, பிணையோ-இயல்பாக (அஞ்சுதலாலே) பெண்மானோ (அறிகின்றிலேன்) —மடவரலுக்கும்—இம்மூன்றும்—இம்மூன்றனுடையநன்மைகளையும், உடைத்து-உடைத்தாயிருக்கின்றது-எ-று. (கருத்து) இவள்பார்வை யமனோ கண்ணோ மானோ அறியேன்-என்பதாம். * இன்பமும் துன்பமும்-ஒருசோச் செய்யாநின்ற தென்பதாம். [வருதலாதித் தொழில்பற்றிவந்த ஐயவிலேயுவமம்] (ரு)

கொடும்புருவங் கோடா மறைப்பினைடுக்களுர்
செய்யல மன்னிவள் கண்.

[இதுவுமது] இ-ள். கொடும்புருவம்-(பிரியாகட்பாகிய) கொடிய புருவங்கள், கோடாமறைப்பின்-(தாம்) செவ்வையாயிருந்து விலக்கினால் (அவைகளைக்கடந்து)—இவள்கண்-இவளதுகண்கள், நடுங்குதர்-நடுங்குதற்கு எதுவாகியதையோ, செய்யல-(எனக்குச்) செய்யமாட்டா—எ-று. (கருத்து.) இவளுடையகண்கள் புருவங்களால் மறைக்கப்பட்டா லெனக்குத் துன்பத்தைச்செய்யாவாம்-என்பதாம். * கட்பினாக்கண்டித்துப் புத்திசொல்வோர் தாம் செம்மையுடையராயிருக்கவேண்டுதலால்-கோடாவென்றும், தூயர்செய்கின்ற அவைகளுக்கும் உறுகின்ற தனக்கும் நடுநின்றுவிலக்கும்போதும் சிறிதுசந்து கிடைக்கப்பெற்றால் அதுவழியாகவந்து துன்பஞ்செய்யுமாகலால்-மறைப்பினென்றும். சொல்லினர், தாம் இயல்பாகக் காணுத லுடைமையால் அவைகளை மிகுதிக்கண்மேல் சென்றிடக்கமாட்டா வாயின வென்பது படுன்றமையால் மன்னென்றது ஒழிபிசையில் வந்தது. (சு)

கடாஅக் களிற்றின்மேற் கட்படா மாதர்
படாஅ முலைமேற் றுகில்.

[அவளது முலைகளினுலாகிய வருத்தஞ்சொல்லியது] இ-ள். மா
ர்-இம்மாதருடைய, படா அமுலைமேற்றுகில்-சாய்தலில்லாத முலைக்
ன்மேலிட்ட ஆடையானது (அவை கொல்லாமற்காத்தலால்)—கடா
க் களிற்றின்மேல்-(கொல்லுவதாகிய) மதயானைமேலிட்ட, கட்படாம்
மூகபடாத்தினையொக்கும்—எ-று.(கருத்து.) இவள்முலைகளின்மே
கரித்த வஸ்திரமானது யானைமுகத்தின்மேலே கரித்த வஸ்திரத்
யொக்கும் - என்பதாம். * கண்ணைமறைத்தல்பற்றி கட்படாமென்றா
ஆண்டையால் மறைத்தல் நாணுடையமகளீர்க்கு இயல்பாகலால் அவ்வ
டையோடே அவைகளின் வெம்மையும் பெருமையுங்கண்டு இவ்வா
வுவமை யுடையவை இவை என்னுஞ் சாயாவென்று கினைத்துப்
டாஅ முலையென்றார்-உவமானம் சிறிது மறையாவுழியும் கொல்லுவ
ன்பது தோன்றநின்றது. (ஈ

ஒண்ணுதற்கோ வுடைந்ததே ஞாட்பினு
ணண்ணுரு முட்குமென் பீடு.

[இது அவளது நெற்றியாலாகியவருத்தஞ்சொல்லியது] இ-ள். ஞாட்
பினுள்-போர்க்களத்து, நண்ணுரும் - எதிர்த்தில்லாதபகைவரும், உட்
கும் - (எதிர்த்தவர் வாய்ச்சொறகேட்டு) அஞ்சுதற்கு ஏதுவாகிய, என்
பீடு-என்வலி, ஒண்ணுதற்கு - (இம்மாதருடைய) ஒளிபொருந்திய நெ
ற்றியொன்றற்குமே, உடைந்ததே-அழிந்துவிட்டது—எ-று. (கருத்து.)
என்னுடைய வலிமையானது இவளுடைய நெற்றிக்கழிந்தது-என்பதா
ம் * மாதரொன்பது அதிகாரத்தால்வந்தது ஞாட்பினுளென்பதனால்-ம
கைவாதல்பெற்றும், பீடென்றபொதுமையால் மனவலியும் காயவ
யும்கொள்க, ஒ ஒ வென்னும் வியப்பினிடத்துக்குறிப்பு அவ்வலிக
ன்பெருமையும், நெற்றியின் சிறுமையும், தோன்றநின்றது, கழிந்தச்
சிரங்கலால்-தற்புகழ்ச்சி அன்றுயிற்று. (அ

பிணையோர் மடநோக்கு நாணு முடையாட்
கணியெவனே வேறில கந்து.

[இது அவளது அணிகலத்திலுகியவருத்தஞ்சொல்லியது] இ-ள்
பிணையோர்மடநோககு-(புறதநிலே)பெண்மான்போன்ற அஞ்சுதலுடை
யபார்வையையும், நாணுட-(அகத்தில்) நாணினையும், உடையாட்கு-உ
டைய இவளுக்கு (ஒற்றுமையுடைய இப்பார்வையும் நாணமும் ஆகிய
அணிகளே போதுமானலையா யிருக்க) வேறிலதந்து-வேற்றுமையுடை
யஅணிகளையுண்டாக்கி, அணி-அணிதல், எவன் - என்ன பயனுடைத்
து—எ-று. (கருத்து.) இவட்குப்பார்வையு நாணமு மாபரணங்களா பி
ருக்க வேறுபரணங்களை யணிதலென்ன பயன் - என்பதாம். * ஒ-அசை.
இவ்வேற்றுமையுடைய அணிகள் இவளுக்குப்பாரமும் எனக்குவருத்
தமும் ஆமென்று எண்ணுமையால் அணிந்தார் அறிவிலா ரென்பதாம்.

உண்டார் கணல்ல தடுநறுக் காமம்போற்
கண்டார் மகிழ்செய்த வின்று.

[இது தலைவிகுறிப்பறியலுற்ற தலைவன் சொல்லியது] இ-ள். அடு நறு- காய்ச்சப்பட்ட மதுவானது, உண்டார்கணல்லது -(தன்னை) உண்டவரிடத்தேயல்லாமல், காமமம்போல் - காமத்தைப்போல், கண்டார்-கண்டவரிடத்தே, மகிழ்ச்சிசெய்தல்-மகிழ்ச்சிசெய்தலை, இன்று-உடைத்தன்று—என-றும், (கருந்து) மதுவுண்டால் மகிழ்ச்சி, காமக்கண்டால்மகிழ்ச்சிதரும்- என்பதாம். * காமமென்றது : அதை அனுபவிப்பதற்கு இடமான மகளீனை, மகிழ்ச்சிசெய்தலிலே காமமானது மதுவினும் சிறந்ததெயெனினும் இவள் குறிப்பை ஆராய்ந்தறியாமையால் யான் அது பெற்றிலேனெனக் குறிப்பெச்சம் வருவித்துரைக்க. (ய)

ஈயு - ஆம், அதி - குறிப்பறிதல்.

அஃதாவது - தலைவன் தலைவிகுறிபபை அறிதலும், தோழிகுறிப்பை அறிதலும், அத்தோழி அவ்விருவர் குறிப்பையும் அறிதலும், ஆண் தலையழகைக்கண்டு வருந்தியதலைவன்தலைவியைக் கூடும்போது, இது வேண்டுமாதலால் தகையணங்குறுத்தலின் பின்வைக்கப்பட்டது, உ-ம். *

இருநோக்கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து.

[இது தலைவன் தலைவியுள்ளத்துக் குறிப்பை அவள்பார்வையால் அறிந்தது] இ-ள். இவளுண்கண்-இவளுடைய (மை) யுண்டகண்களில், உள்ளது- இருக்கின்றபார்வையானது, இருநோக்கு-(இப்பொழுதுஎன்மேல்) இரண்டுபார்வையாயிற்று, (அவற்றுள்) ஒருநோக்கு-ஒருபார்வையானது, நோய்நோக்கு-(என்னிடத்து)நோய்செய்யும்பார்வையாம் ஒன்று- மற்றொருபார்வையானது, அந்நோய்மருந்து- அந்நோய்க்குமருந்தானபார்வையாம்—என-று. (கருதது.)இவள்பார்வையானது இரண்டு, ஒன்றுநோய்செய்யும்பார்வை, மற்றொன்று அந்நோய்க்குமருந்தான பார்வை என்பதாம். * நோய்செயயுநோக்கு அவளதுமனத்தில் உண்டாகிய காமக்குறிப்பின் வெளிப்படுகதிரின்ற பார்வை, மருந்தாய்நோக்கு - தன்னிடத்த உண்டாகின்ற அன்பினுலாகியபார்வை, எனக்கு இவ்வருதகம் நீருமவழியும் உண்டாயிற்றென்பதாம்.

---

* (தொல்காப்பியம்) நாட்டமிண்மை மறிஉடன்படுத்தற்கு- கூட்டியுணாக்குங் குறிப்புணாயாகும்- குறிப்பே குறிததுக்கொள்ளுமாயி- னுங்கனவை நிகழுமென்மனார் புலவர்.

ஈறு-ஆர்- அகு—குறிப்புவினை.

கண்களவு கொள்ளுஞ் சிறுநோக்கங் காமத்திற்
செம்பாக மன்று பொறி.

[இதுவுமது] இ-ள். கண்- (நிலைத்து) கண்கள், களவுகொள்ளுஞ் சிறுநோக்கம்- கண்காணாமல் என்னைப்பார்க்கின்ற சிறியபார்வை, காமத்தில்- o மெய்யுறுபுணர்ச்சியில், செம்பாகமன்று -ஒக்கப்பாதியளவன்று பொறி -(அகனிலும்) மிகும்—என்று.(கருத்து.) இவள் குறும்பார்வை காமத்திலுமதிகம் - என்பதாம். * நான்பார்த்தபோதுநாணித்தலைகுனிந்தும் பாராவிடத்தே உற்றுப்பார்த்தும் வருகலாலே, கண்களவுகொள்ளுமென்றும், அது உண்டாங்காலம் சிறிதாகலால்- சிறுநோக்கமென்றும் அப்பார்வை உட்கருத்து உள்ளவிடத்தே உண்டாவதாகலால் இவை இவனைக்கூடுதல் நிச்சயமென்றற்கு செம்பாகமன்று பொறிதென்றும், சொல்லினாள்.
(2)

நோக்கினை நோக்கி யிறைஞ்சினை நின்றாள்
யாப்பினு ளட்டியதோ.

[இதுதலைவன் தலைவியதுகுறிப்பைப் பார்வையாலும், நாணினாலும், அறிந்தது] இ-ள். அவள்- அப்மாது, நோக்கினை- (நான்பார்த்த வளவிலே தான் என்னை அன்போடு) பார்த்தாள், நோக்கி-பார்த்து, இறைஞ்சினை- ஒன்றை (உட்கொண்டுநாணித்) தலைகுனிந்தாள்—அம்மை அச் செய்கைக்கு ஏது வாகிய குறிப்பானது—யாப்பினுள் (என்மார்புவிடத்தும்தோன்றிய) அன்பாகிய பையிருள், அட்டியதோ- (அதுவளரும்படி) வளர்த்ததோ யிற்று—என்று. (கருத்து.) அவள்பார்த்தாள் பார்த்துத்தலை குனிந்தாள் அவள்குறிப்பு இருவரன்பும் வளரும் தண்ணீராம் என்பதாம். * யாப்பு- கட்டு-யாப்பினாலாகிய அன்பையாப்பென்றார் [எதிர் சூழ்வகையணி]
(3)

யாணோக்குங்காலை நிலைநோக்கு நோக்காக்காற்
றாணோக்கி மெல்ல நகும்.

[இது தலைவன் தலைவிகுறிப்பை நாணினாலும், மகிழ்ச்சியாலும், அறிந்தது] இ-ள். யாணோக்குங்காலை (தன்னை) நான்பார்க்கும்போது நிலைநோக்கும் (எதிர்பாராமல் நாணித்தலைகுனிந்து) நிலத்தைநோக்கிநிற்கின்றாள், நோக்காக்கால் (அதையறிந்துநான்) பாராதபோது, தானோக்கி-தான் (என்னைப்) பார்த்து, மெல்லநகும்-(தன்னுள்ளே)மகிழாநிற்பள் என்று. (கருத்து.) யான்பார்க்கும்போது பூமியைப்பார்க்கிற்றாள் யான்பாராதபோது தான்பார்த்து நகைக்கின்றாள் என்பதாம். * மெல்லநகுதல்வெளிப்படாமல் மகிழ்தல் அதனாலே புணர்தற்குறிப்பு இனிது விளக்குதலறிக்க.
(4)

---

o மெய்யுறுபுணர்ச்சி- மெய்தொட்டுப்புணரும் புணர்ச்சி - உள்ளப்புணர்ச்சி யொன்று வேறேயிருக்கையால் இப்படி சொல்லப்பட்டது.

குறிக்கொண்டுநோக்காமை யல்லாலெற்குகண்
சிறக்கணித்தாள் போலுகும்.

[இது வுமது] இ-ள். குறிக்கொண்டு(நோ)குறிக்கொண்டு, நோக் காமையல்லால் - பாராமைமாத்திரமேயல்லது, ஓருகண் - ஒருகண்ணை, சிறக்கணித்தாள்போல - சுருக்கினவள்போல, நகும் (என்னைப்பார்த் து நன்னுள்ளே) மகிழாநின்றுள்—எ-று.(கருத்து.) நோபோராமல் ஒ ருகண்ணைச்சுருக்கினவள்போலபார்த்து நகைக்கின்றுள்ளென்பதாம்* சி றக்கணித்தல் சிறங்கணித்தாலெனச் செய்யுள்விகாரமாயிற்று — சிறக் கணித்தல் சுருக்குதல்—அதுவும் வெளிப்படத்தோன்றுமையால்போ லவென்றார்—பார்த்தென்பது வருவிக்கப்படுதலால் சொல்லெச்சம்— இனிஇவளை அடைவது நிச்சயமென்பது குறிப்பெச்சம், (ரு)

உறுஅ தவர்போற் செல்லினுஞ் செறுஅர்சொ
லொல்லை யுணரப்படும்.

[இதுதோழிதூரப்படுத்தியவிடத்தேதலைவளதுகுறிப்பைஅறிந்தகலி வன் தன்னுள்ளேசொல்லியது] இ-ள்.உறுஅதவர்போல்(புறத்திலே)அ யலார்போல், சொல்லினும் (கடிஞ்சொல்) சொல்லினும், செறுஅர்சொ ல் (உள்ளே) பகையாதவர்சொல் பின்பிரயோசனப்படுத்தல்) ஒல்லை யுணரப்படும், (குறையிரந்தவராலே) கடிதில் அறியப்படும்—எ-று. (க ருத்து.) புறம்பாகக் கடிஞ்சொல்சொல்லினும் உள்ளே பகையாதவர் சொல் சிகிராமறியப்படுமென்பதாம். * கடுஞ்சொல் இவ்விடம் மிகுந் தகா வலையுடையது வாராதேயுமென்று சொல்லுதல முதலானவை செறுவெனவே அருளுடைமைபெறப்பட்டது— தன் குறைமுடிக்கவி னைத்தே தூரப்படுத்தலைக் குறிப்பாலறிந்து உலகியலின்மேலவைத்து ச்சொல்லியபடி இது வருகின்றபாட்டிற்கும்ஒக்கும். (சு)

செஅர் சிறுசொல்லுஞ் செற்றார்போ னேக்கு
முறு அர்போன் றுற்றார் குறிப்பு.

[இதுவுமது] இ-ள். செறு அர்சிறுசொல்லும் - பின்னினிதாவதா யமுன்னேஇன்னாதாகிய சொல்லும், செற்றார்போனேக்கும்- (உள்ளே பகையாதிருந்தே புறத்தே) பகைத்தவர்போன்ற கோபப்பார்வையும், உறுஅர்போன் றுற்றார்-அயலோர்போலிருந்து நட்பாயினவர்க்கு,குறிப் பு - ஒருகுறிப்புப்பற்றிவருவனவாம்—எ-று (கருத்து.) உள்ளன்பாகச் சொல்லுங் கடிஞ்சொல்லும்- பகையாது பார்க்குங் கோபப்பார்வையு ம் ஆசைக்குறிப்பால்வரும் - என்பதாம். * குறிப்பு ஆகுபெயர். இவை உள்ளேஒருபயன் குறித்துச்செய்கின்றனை இயல்பலல்வாகலால் இ னைவகளுககு அஞ்சவேண்டாமென்பதாம். (எ)

அசைஇயற் குண்டாண்டோ ளேர்இயா னேக்கப்
படைஇனள் எபயாகும்.

[இதுவுமது.] இ-ள். யாஞைக்க-(என்னை நீக்குகின்ற சொல்லுப்பெறுமல்) நான் இரந்துநோக்கியவிடத்து, பனைபினள் - (அதுநீத்து) இரங்கினவளாகி, பையகுகும் - உள்ளேநகாநின்ற முள் — அத்தை) அனையயற்கு - அனைந்தசாயலுடையவளுக்கு, ஆங்கு அவ்வகையினிடத்து, ஓரோஎர் - ஒருசார்மைக்குறிப்பு, உண்டு-உண்டு—எ-று (கருத்து.) நான்பார்த்தவிடத்திலிரங்கிப்பார்த்து, நகைக்கிறு எதனிலும் நலமுண்டு - என்பதாம். *வர் - ஆகுபெயர். அகுறிப்பு - இன்பம் தாகாதென்பதாம்.

(அ)

எதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணேயுள.

[இது கேட்டிமறியுடன்படாளென்னலிற் தன்னுள்ளேசொல்லியது. இ-ள். எதிலார்போல - முன்னைறியாதவர்போல, பொதுநோக்குதல் - (ஒருவனை ஒருவர்) பொதுப்பார்வையாகப்பார்த்தல், காதலர்கண்ணே - ஆணைபையுடைய இவ்விருவரிடத்தும், உள் - உண்டாகின்றன—எ-று. (கருத்து.) அயலார்போலப் பொதுப்பார்வை பார்த்தல் சையுள்ளவரிடத்துண்டு - என்பதாம். * பொதுநோக்கு - யாவரிடத்தும் ஒருதன்மையாகியபார்வை, பார்த்தற்குறிப்பிலான்றேயாயினும் இருவரிடத்தும் உண்டாதலாலும், ஒருவரிடத்திலேயும் குறிப்பு வேறுபட்டால் பலவாமாகலாலும், உள்வெளிப் பன்மையாலே சொல்லப்பட்டது. இருவரும் மதுமறைத்துண்டோர் மகிழ்ச்சிபோல் உள்ளத்துள்ளேமகிழ்தலால் - அதுபற்றிக் காதலானென்றும், அதுபுறத்துவெளிப்படாமையால் எதிலானென்றும் சொல்லினர்

(கூ)

கண்ணேறுகண்ணிணை நோக்கொக்கின் வாயச்சொற்க
ளென்ன பயனு மில.

[இதுவுமது.] இ-ள். (காமத்திற்குரியவிருவருள்) கண்ணேறு - [ஒருவரது, கண்களோடு, கண்ணிணை - ஒருவர்) கண்கள், நோக்கொக்கின் - பார்வையால் ஒக்குமாயின், வாயச்சொற்கள் - (உண்மைதோன்றச்சொல்லுகின்ற வாய்ச்சொற்கள், என்னபயனும் - ஒருபயனும், இல்லை உடையனவல்ல—எ-று. (கருத்து.) இருவர்பார்வையு மொக்குமாயின் வாய்ச்சொற்கள் பயனில்லனை- என்பதாம். * பார்வையாலொத்தல். ஒரைப்பார்வை யுடையனவாதல். வாய்ச்சொற்கள் - மனதில்லாமல் வாயளவிலே தோன்றுகின்றசொற்கள். இருவர்சொல்லும்கேட்டு உலகியலின்மேல் வைத்துச்சொல்லியபடி. இருவர்சொல்லும் விதமானை. அவள் புனங்காவலின்மேலும். அவனிவடத்தினமேலும். சொல்லுவனை. பயனில்சொற்களாகையால் இச்சொற்கள் கொள்ளப்படாவென்பதாம்.

(ங)

ஸ்தானாவது, அப்படிக்குறிப்பறிந்து புணர்ந்த தலைவன் அப்புணர்ச்சியை மகிழ்ந்துசொல்லுதல் அதிகாரமுறைமையும் இதனாலே விளங்கும். உதாரணம்.

கண்டுகேட் டுண்டுயிர்த் தற்றறிபு மைம்புலனு
மொண்டொடி கண்ணே யுள.

[இது தலைவன் * இயற்கைப் புணர்ச்சி முடிவிலே சொல்லியது] இ-ள். கண்டு - (கண்ணாலே) கண்டும், கேட்டு-(செவியாலே) கேட்டும், உண்டு - (நாவாலே) உண்டும், உயிர்த்து - (மூக்காலே) மோந்தும், உற்றும்- (மெய்யாலே) தீண்டியும், அறியும் - அனுபவிக்கப்படுகிற, ஐம்புலனும்-ஐம்புலனும், ஒண்டொடிகண்ணே- இவ்விவாளிபோருந்திய வினையையுடையவளிடத்தே, உள - உண்டாயின—என்று. (கருத்து.) கண்ணாற்கண்டுங் காதாற்கேட்டும் நாவாலுண்டும் மூக்கால்மோந்தும்மெய்யாற்றீண்டியும் அனுபவிக்கப்படும் ஐம்புலன்களும் ஒள்ளிய வினையல்களையுடையவிவளிடத்தே உள்ளன - என்பதாம். * உம்மை முற்றும்மைதேற்றேகாரம் வேற்றிடத்தில்லாமை விளங்கநின்றது. வேறுவேறு காலங்களிலே வேறுவேறு பொருள்களாலே அனுபவிக்கப்படுகிற புலங்களெல்லாம் ஓர்காலத்தே இவளிடத்தே என்னால் அனுபவிக்கப் பட்டனவென்பதாம். (க)

பிணிக்கு மருந்து பிறமன ணியியைழை
தன்னெய்க்குத் தானே மருந்து.

[இது தலைவன் o இடந்தலைப்பாட்டிலே சொல்லியது] இ-ள். பிணிக்கு - (வாதமுதலாகிய) பிணிகளுக்கு, மருந்து-மருந்துவன, பிற - (அவைகளுக்கு நிதானமானவை யல்லாமல்) விரோதமாகிய குணத்தையுடையவையாம் (அப்படியல்லாமல்)—அணியிழை-இவ்வணியினையுடை

" (அகப்பொருளவிளக்கம்) இரந்துபின்னிற்றல் கண்ணளுமிரந்துபின்னிலைநிற்றலு முன்னிலையாக்கலு- மெய்தொட்டுப்பயிறலும் பொருப்பாராட்டலு மிடம்பெற்றுத் தழாவலும் வழிபாடுமறுத்தலு - மிடைப்பூருகிளத்தலு நீடுநினைந்திரங்கலு-மறுத்தெதிர் கோடலும் வறிதாகைகூறுதோற்றலு -முறுவற்குறிப்புணர்த்தலு முயங்குதலுயங்குதலும் புணர்ச்சிமகிழ்தலும் புகழ்தலும் பிறவு - முணர்ந்தியதலைமகிற் புணர்ச்சிமகிழ்தலின்விரியே.

* இயற்கைப் புணர்ச்சி - ஒருராசன் வேட்டைக்குப்போய் மலைச்சோலையிலே விளையாடவந்து தனித்துநின்ற குறக்கன்னியைக்கண்டு கூடியது.

o இடந்தலைப்பாடு இரண்டாந்தடவை முன்கூடியவிடத்தே தலைவன் தலைவியைக் குறித்துச்சென்று கூடியது.

யவள், தன்நோய்க்கு-தன்னுலாகிய பிணிக்கு, காணைமருந்து-காணை
நுந்துமாயிருள்—எ-று. (கருத்து.) மூப்பினிகளுக்கு மருந்துகள் (
றையுள்ளன-ஆபரணத்தை யுடையவள் தன்காமநோய்க்குத்தானே
ந்தாளுள் - என்பதாம். * இயற்கைப் புணர்ச்சியைநினைத்து முன்வரு
னைகலால்-தன்னையென்றும், அவ்வருத்தம் தனித்துவந்துநின்ற
வளை முன்கூடிய விடத்தேசென்று எதிர்ப்பட்டுத் தீர்ந்தாலுதலால்
னே மருந்தென்றும் சொல்லினன். இப்பிணியும் எளியனவகளால்
ப்பெற்றில மென்பது படநின்றமையால் மன் ஒழியிசையிலே வந்த
உதாரணம். o

(

காம்வீழ்வார் மென்றோட்டுயிலி னினிதுகொ
லோமனைக் கண்ணு லுலகு.

[பேரின்பத்திற்குரிய நீ இச்சிற்றின்பத்திற்கு இப்படிப் பட்ட
னுருதல் தகாதென்றபாகனுக்குத் தலைவன் சொல்லியது] இ-ள் (ஐ
ன்களையும் அனுபவிப்பவர்க்கு காம்வீழ்வார்—காம்விரும்புமகளிர
மென்றோள்- மெல்லிய தோள்களிடத்துத் துயிலும்—துயிலின்-துயி
—போல், காமனாக்கண்ணு லுலகு- (அவைகளைத் துறந்த யோகிகள
அடையப்படுவதாகிய) கமலக்கண்ணன துலகம், இனிதுகொல் - இ
ந்தாமலடையக்கூடுவதோ—எ-று ? (கருத்து) காமவிரும்பிய பெண்க
ன்மெல்லியதோள்களிடத்துத்துயில்போல விஷ்ணுவினுலகம் இன்ப
குமோ- என்பதாம். * அனுபவிப்பவர்க்கென்பது-வருவிக்கப்பட்ட
—இப்படிப் பட்ட துயிலிலிடுத்தவையோகங்களால் வருந்த வேண்டி
லாலே எம்போல்வார்க்கு ஆகாதென்னுங் கருத்தாம இனிதுகொலென்
றன்.

(

நீங்கிற் றெறூஉங் குறுகுங்காற் றண்ணென்னுங்
கீயாண்டுப் பெற்ற ளிவள்.

[தலைவன் * பாங்கற்கூட்டமுடிவிலே சொல்லியது] இ-ள். நீங்
ன்- (தன்னை) நீங்கியபோது—தெறூஉம்- சுடாநிற்கும்—குறுகுங்கால்
தெருங்கும்போது—தண்ணென்னும்- குளிராநிற்குமே—தீ - (இப்படி
பட்ட) தீயை—(எனக்குந்தருவதற்குயாண்டு - எவ்வுலகத்திலே)—இ
ள்—இவள், பெற்றுள்-அடைந்தாள்—எ-று. (கருத்து.) தன்னையகன்
விடத்துச் சுடாநிற்கும் தன்னைநெருங்குமிடத்துக் குளிராநிற்கும் இப்
டிப்பட்ட தீயை இவள் எவ்வுலகத்திற்பெற்றாளோ - என்பதாம். * சு
டாமுன்: துன்பமனைதலால் - நீங்கிற்றெறூஉமென்றும், கூடியபின்

o (அகப்பொருள்விளக்கம்) இயற்கைபுணர்ச்சி தெய்வத்தினை
முயற்சியின்றி முடிவதாகும்.

* பாங்கற்கூட்டம் - மூன்றாந்தடவை தலைவன் தன்னது தோழனை
துணையாகக்கொண்டு தலைவியைக் கூடியது.

இன்பாடைதலால் குறுகுங்காற் றண்ணெனல் ஞமென்றும், இப்படிப்பட்ட டதீஉலகிலில்லாமையால் யாண்டுப்பெற்றுளென்றும் சொல்லினன், தன் காமந்தீயையே அவள்தந்ததாகச்சொல்லிநுன் அவளால் அறிவெளிப்படுதலால். (சு)

வேட்ட பொழுதி னனையவை போலுமே
தோட்டார்கதுப்பினு டோள்.

[இதுதலைவன் o பாங்கியிற் கூட்டமுடிவிலே சொல்லியது] இ-ள். (எப்பொழுதுங் பெற்றுக்கூடிலும்) தோட்டார்கதுப்பினுள்- மலரணிந்த கூந்தலையுடையவளது; தோள்- தோள்கள். வேட்டபொழுதின்- (மிகவும்இனியபொருள்களைப்பெற) விரும்பியபொழுது, அனையவைபோலுமே- அவ்வப்பொருள்கள் போல்வந்து இன்பம்செய்யும்—என்று. (கருத்து.) பூவையணிந்த கூந்தலையுடையவளது தோள்கள் இச்சித்தபொழுது அவ்வப்பொருள்கள் போலு மின்பஞ்செய்வனவாம்- என்பதாம். * தோடு-இதழ்-அது பூவுக்கு ஆகுதலால் ஆகுபெயர். இயற்கைப்புணர்ச்சி- இடந்தலைப்பாடு - பாங்கற்றகூட்டம் - இவைகளிலே முன்னமே அத்தோள்கள் அநுபவிக்கப்பட்டிருந்தும் பின்னும் புதியனவேபோலிருந்து நெஞ்சம்பிணித்தலால் அவ்வாறமைப்பற்றி இப்படிச்சொல்லினன். (சு)

உறுதோ றுயிர்தளிப்பத் தீண்டலாற் பேதைக்
கமிழ்தினியன்றன தோள்.

[இதுவுமது] இ-ள். உயிர்- (தன்னைப்பெறுதுவாடிய)என் னுயிர், உறுதோறு- (பெற்று) உறுந்தோறும், தளிர்ப்ப- தளிர்க்கும்படி, தீண்டலால். தீண்டுதலாலே, பேதைக்கு - இம்மங்கைக்கு, தோள்-தோள்கள், அமிழ்தினியன்றன -(தீண்டப்பட்ட) அமிழ்தினுமேல செய்யப்பட்டனவாம்—என்று. (கருத்து.) என்னுயிர்தளிர்க்கும்படி தீண்டுதலால் இப்பெண்ணிற்குத் தோள்கள் அமிழ்தாற் சமைக்கப்பட்டன-என்பதாம். * வதுவைகலால் தீண்டல் அமிழ்திற்கும் பொருந்தியது—வாடிய. யினைத் தளிர்ப்பித்தல்பற்றி அதனதோள்களை அமிழ்தினியன்றனவென்றன். தளிர்த்தல்-இன்பத்தாலே தழைத்தல். (சூ)

தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றா
லம்மா வரிவை முயக்கு.

[இது ஈ இவளைக் கல்யாணஞ் செய்துகொண்டு உலகோர் தம்மில் லிலிருந்து தமதுபங்கை உண்கிற இல்லறத்தோடு பொருந்தல் வேண்டுமென்ற தோழிக்குத் தலைவன்சொல்லியது] இ-ள். அம்மாவரிவை முயக்கு-அழகியமானைநிறத்தையுடையமாதினபுணர்ச்சியானது—(இன்பத்தருதலில்)—தம்மிலிருந்து - தமக்குரியமனையிலிருந்து, தமது-(உலகோர்) தம்முயர்ச்சியால்வந்தபொருளை, பாத்து- (தென்புலத்தார்முதலாகிய

o பாங்கியிற்கூட்டம்- நாலாந்தடவை தோழியைத் துணையாகக்கொண்டு கூடியது.

ஐவர்க்கும்) பகுந்து கொடுத்து——உண்டற்று -ஈ(கமதுபங்கை) உண்
துபோல் இன்பந்செய்கின்றது——எ-று. ஆல்-அசை——(கருத்து.) இ
பெண்ணினின் புணர்ச்சியானது தம்முடைபற்சியால் வந்தபொருளை தெ
புலத்தேதார் முதலிலவர்க்கும் பகுத்துகொடுத்துத் தன்பங்கை யுண்ட
போலு மின்பஞ்செய்கின்றது - என்பதாம். * தொழிலுவமம். இல்ல
ஞ்செய்தாரையும் சுவர்க்க மின்பத்தை எனக்கு இப்புணர்ச்சியே
ருமென்று கல்யாணத்திற்கு உடன்படாதவன் சொல்லியபடியாயிற்
ஹாணமை-டொன்னிறம்.

(அ

வீழு மிருவர்க் கினிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு.

[இது ஒத்த அன்புடைய உமக்கு ஒருபோதும் விடாத புண
யேயினிதாகலால் விவாகஞ்செய்துகொள்ளென்ற தோழிக்குச்சொல்லி
து] இ-ள். (நீசொல்லுகின்றதுஒக்கும்) வளியிடைபோழப்படா-(ஒரு
பொழுதும் இகழாமையால்) காற்றால் இடையறுக்கப்படாத, முயக்கு
புணர்ச்சியானது, வீழுமிருவருக்கு - (ஒருவனை ஒருவர் விரும்புகிற இ
வர்க்கும், இனிதே - இனிதேயாகும்——எ.று. (கருத்து.) காற்றினிடை
றுக்கப்படாத புணர்ச்சியானது இருவருக்குமின்பமாகும்-என்பதாம். *
முற்றும்மை விகாரத்தாற் றொக்கது, வகாரம்- தோற்றம் - இங்கே இ
வரில்லாமையால் அது ஒவ்வாதென்பது கருத்து. களவுப்புணர்ச்சியை
கிழ்ந்து விவாகத்துக்கு உடன்படாதவன் சொல்லியபடி. (அ

ஊடலுணர்தல் புணர்த லிவைவகாமங்
கூடியார் பெற்ற பயன்.

[இது மறைக்கவேண்டாமையால் நடுங்கங்களில்லாத புணர்ச்சியே
இன்பப்பயனுடைய தாகலால் விவாகஞ்செய்துகொள்ளென்ற தோழிக்
குச் சொல்லியது.] இ-ள். ஊடல் - (புணர்ச்சி இனிதாற் பொருட்டுவே
ண்டு) மூடலும், உணர்தல் - (அதனை அளவரிந்து) நீங்குதலும், புணர்
தல் - (அதன்பின் உண்டாகின்ற) அப்புணர்ச்சியும் என்கிற இவை-இ
வையல்லவா, காமங்கூடியார் - (விவாகஞ்செய்துகொண்டு) காமத்தை
இடைவிடாதடைந்தவர், பெற்றபயன் - பெற்றபயன்கள்——எ-று. (கரு
து.) ஊடலும் அதனைநீங்கலும் புணர்ச்சியும் விவாகஞ்செய்து கொண்
டவர் பெற்றபலன் - என்பதாம். * ஆடவர்க்குப் பிரிவென்பதொன்று
உண்டாவதல்லாமல் அதுதான் பரத்தையரிடத்தாலும், அதனை அறிந்
தமகளிர் ஊடினிற்றலும், அவ்வூடலைத் தவறுசெய்த அவாதாமே தீர்ந்
வறில்லாமைசொல்லி நீக்கலும், பின்னும் அவ்விருவரும் ஒத்த வன்பி
னராய்க்கூடலும், அல்லவா. முன்விவாகஞ்செய்துகொண்டு அடைந்
தவர்பெற்றபயன். அப்பயன் இருதலைப்புள்ளிலே ருயிராகிய மாறுவ
ன்புடைய எமக்குவேண்டாவென அவ்விவாகஞ்செய்து அடைதலை இ
ழந்து சொல்லியபடி. (சு

அறிதோ றறியாமை கண்டற்றுற் காமஞ்
செறிதோ றுஞ் சேயிழை மாட்டு

[இது தலைவியைப்புணர்ந்து உடன் கொண்டுபோகின்ற தலைவன் தன்னுள்ளே சொல்லியது.] இ-ள். செறிதோறும் - புணரப்புணர, சேயிழை மாட்டு - செய்ய ஆபரணங்களை யுடைய வளிடத்து, காமம் - காதல் - அறிதோறு - நூல்களாலும், நுட்பவறிவாலும், பொருள்களை) அறியவறிய, அறியாமை - (முன்னே) யறியாமை, கண்டற்று - காணப்படுதல்போலே காணப்படுகின்றது—என்று. (கருத்து,) இவளிடத்துப் புணரப்புணர வண்டாமாசையானது நூலாலுமறிவாலும் பொருள்களையறிய வறிய முன்னறியாமைகண்டாற்போல்காணப்படாநின்றது—என்பதாம்- இதனிலே பலவிடைப்பிடிகளால்தன்கருத்தின்படி அநுபவிக்கப்பெறுமல் வருந்தமுற்றவன் உடன்கொண்டுபோம்போது அது தீர்தலால்- செறிதோறுமென்றான், அறிவிற்கு எல்லையில்லாமையால் மேலுமேலும் அறியவறிய முன்னையறிவு அறியாமையாய் முடிதல்போல் புணர்தற்கு எல்லையில்லாமல் மேலுமேலும் புணரப்புணர முன்னைப்புணர்வு புணராமையாய் முடிகின்றதென்றதன்னுடைமை சொல்லியபடி, இப்புணர்ச்சிமகிழ்தல் தலைவியிடத்துக் குறிப்பாலல்லது சொல்லால் நிகழாது. (இ)

ஈயஉ - ஆம்-அதி-நலம்புலவாத்துணைதல்.

அஃதாவது, தலைவன் தலைவி நலத்தினை வருணித்துச்சொல்லியது. இது புணர்ச்சியின் மகிழ்ந்தவிடத்து நிகழ்வதாதலால் அதன் பின்னவைக்கப்பட்டது. (உ-ம்) *

நன்னீரை வாழி யனிச்சமே நின்னிறு
மென்னீரள் யாம்வீழ் பவள்.

[இது தலைவன் இயற்கைப்புணர்ச்சி முடிவிலே சொல்லியது.] இ-ள். அனிச்சமே - அனிச்சப்பூவே, வாழி - வாழ்வாயாக, நன்னீரை- (மென்மையாதலே நீ எல்லாப்பூவினும்) நல்லகுணமுடைமை—(தும்பி யிருந்தாலும்) யாம்வீழ்பவள் - எம்மால் விரும்பப்பட்டவள், நின்னிறுமென்னீரள் - உன்னிலு மெல்லியகுணத்தை யுடையவள்—என்று. (கருத்து.) அனிச்சப்பூவேவாழ்வாயாக நீயெல்லாப்பூவிலும்நற்குணமுடை யையெம்மால் விரும்பப்பட்டவள்—உன்னிலு மெல்லியகுணத்தை யுடையவள் என்பதாம். * அனிச்சம் ஒருபெயர். வாழிய ரென்பது உடன்

* (அகப்பொருள் விளக்கம்) கலந்தபழி மகிழ்தலு நலம்பாராட்டலுமெற்புற வணிதலு மென்ன மிம்மூன்றும், போற்றியதெய்வப் புணர்ச்சியின் விரிவே.

பாட்டுக்குறிப்பு - இனிகாமேமெல்லியகுணமுடையே னென்றுஞ்சொ
ருக்கை ஒழிவாயாகவென்பதாம். ‡ அப்பொழுது பரிந்தித்து அறிக்காது
தலால் - பரிசத்தினிலிமையையே பாராட்டினான். (க)

மலர்காணின் மையாத்தி நெஞ்சே யிவள்கண்
பலர்காணும் பூவொக்கு மென்று.

[இது தலைவன் இடத்தலைப்பாட்டிலே சொல்லியது] இ-ள். நெஞ்
சமே - மனமே, இவள்கண் யாரேனுகாணப்பெற்ற) இவள் கண்களோ, ப
லர்காணும் - பலராலும் காணப்படுகிற, பூவொக்குமென்று - மலர்கள்
ஒக்குமென்று நினைத்து, மலர்காணின்- (காமனை குவளை நீலமுதலாதி
ய) மலர்களைக்கண்டால், மையாத்தி - மயங்காநின்றாய்—(உனக்கு அ
றிவிருந்தவிதந்தம் என்ன)—எ-று.(கருத்து.) மனமே இவள்கண்களோப்
பலராற்காணப்படும் பூவொக்குமென்று நினைத்துக் காமனை குவளை மு
தலியமலர்களைக்கண்டால்மயங்காநின்றாய் நின்னறிவிருந்தவாறென்.
என்பதாம். ‡ மையாத்தல் - இக்கேஷப்பாகாதவைகளை ஒக்குமென்று
கொள்ளுதல், இயற்கைப் புணர்ச்சிநீங்கியது முதலாகத் தலைவிகண்க
ளைக் காணப்பெறுமையால் அவைகளோடு சிறிதொத்திருக்கின்ற மல
ர்களைகண்டவிடத்தெல்லாம் அவைகளிடத்து ஆசைசெய்துவருதற்
கு தலைவன் இப்பொழுது அக்கண்களினலமுழுதும் தானே இவளே இட
த்தெதிர்ப்பட்டு அநுபவித்தாலைகலால் அம்மலர்கள் ஒப்பாகாமைகண்
டு ஒப்புமைகருதிய நெஞ்சை இகழ்ந்து சொல்லியபடி. (உ)

முறிமேனி முத்த முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண், ணெய்த்தோ ளவட்கு.

[இது கூட்டுகலுற்றபாங்கனுக்குத்தலைவன் தலைவியிலியல்பு சொ
ல்லியது.] இ-ள். வேய்தோளவட்கு - மூங்கில்போலுந் தோள்களையு
டையவளுக்கு, மேனி - நிறம், முறி - தளிர் நிறமாயிருக்கும், முறுவல்
பல்லானது, முத்தம் - முத்தாயிருக்கும், நாற்றம் - இயற்கை வாசனை
யானது, வெறி - நல்லவாசனையாயிருக்கும், உண்கண் - (மை) யுண்ட
கண்கள், வேல் - வேல்களாயிருக்கும்—எ-று. (கருத்து.) மூங்கில்போ
லுந் தோள்களையுடையவளுக்கு மேனி தளிர் - பல் முத்தம் - கண்கள்
வேல்கள்போலும்- என்பதாம். ‡ முறி முறுவல், ஆகுபெயர். உருவக
வகையாலே சொல்லினமையால், புனைந்துரையாயிற்று. உண்ணலே நினை
க்கப்பட்டவளை அறிவையென்று தாழப்படுத்திய தோழிக்குத் தலைவன்
சொல்லியதுமாம். (கூ)

காணிற் குவளை கவிழ்ந்து நிலனேக்கு
மாணிழை கண்ணெறிவேஃமென்று.

[இது பாங்கற்கூட்டத்திலேசென்று சார்தலுந் தலைவன் சொல்
லியது.] இ-ள்: குவளை - குவளைமலர்கள், காணின் - பார்க்கிற தொழிலை

டையவையாயிருந்தால், மாணிழைகண் - மாட்சிமைப்பட்ட, ஆபரணங்களை-யுடையவளது கண்களை, ஒவ்வேமென்று-நிகரோமென்று நினைத்து, கவிழ்த்து- (அந்நாணத்தினாலே) தலைகுனித்து, நிலன்- நிலத்தை, நோக்கும்- பார்க்கும்—என்-று, (கருத்து.) குவளை மலர்கள்பார்க்கில் இவள்கண்ணிற் கொப்பாகமென்று கவிழ்ந்து நிலத்தைப்பாராச்சும் - என்பதாம். * நிறத்தாலேயன்றுதொழிலாலும் ஒவ்வாதென்றற்கு காணினென்றும், கண்டால் அவ்வொவ்வாமையால் நாணுடையவா மென்பதுதோன்ற- கவிழ்ந்தென்றும், சொல்லினென், காணலும,நாணலும், இல்லாமையால் இறுமாந்து ஆகாயத்தை நோக்கினவென்பதாம். (சு)

அனிச்சப்பூக் காலினையாள் பெய்தார் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை.

. [இதுநல்லவன் o பகற்குறியிலே நுவணிகண்டுசொல்லியது]இ-ள். இவள் (தன்மென்மை நினையாமல்) அனிச்சப்பூ - அனிச்சமலரை, கால்களையாள் - தாள்களையாளாகி, பெய்தார்ள்- சூடினள், நுசுப்பிற்கு- (இவளிடை) நிடைக்கு, நல்ல- நல்லனவையாகிய, பறை-பறைகள், படாஅ- ஒலியா—என-று. (கருத்து.) இவள் தன்மென்மைநினையாமல் அனிச்சமலைக்காம்புகளையாளாகிச் சூடினளாகையா லிடைமுரியும்- என்பதாம் * இம்மலர்த்தாளின் பாரம் பொறுமையால் இடைமுரியும் முரிந்தால், அதற்குச் செத்தவர்க்கு உரியநெய்தற்பறையே ஒலிக்கும் என்பதாம். மனிதர்க்கு உரியசாவும், பறையொலித்தலும், குறிப்பால் இடையின்மேல் ஏற்றப்பட்டன ஒலியா-ஒலிக்கும். (நி)

மதியு மடந்தை முகனு மறியா
பதியிற் கலங்கிய மீன்.

[இது * இரவுக்குறியிலே தலைவன் சந்திரனைக்கண்டு சொல்லியது] இ-ள் மீன் - தாரகைகள்—(வேறுபாடு பெரிதாயிருக்கவும்) மதியும்- (தமது) சந்திரனையும், மடந்தைமுகனும் - (எமது) மாதுமுகத்தையும், அறியா (இதுசந்திரன் இதுமுகமென்று) அறியமாட்டாமல், பதியின்- (தம்) நிலையினின்று, கலங்கிய - கலங்கித்திரியாநின்ற—என-று. (கருத்து.) வானத்துமீன்கள்- வேறுபாடு பெரிதாகவும் தம்மதியினையு மெம்மடந்தை முகத்தினையு மிதுமதியிதுமுகமென்றறிமாட்டாது தன்னிலையினின்றுகலங்கித்திரியாநின்றன-என்பதாம். * ஒரிடத்துநில்லாமல் எப்போதும் உலாவுதல்பற்றி பதியிற்கலங்கியவென்றுன். வேறுபாடு பிற்பாட்டிற் சொல்லப்படும். (சு)

அறுவாய் நிறைந்த வவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து.

---

o பகற்குறி-பகலிலே ஓரிடம்குறிவைத்துவந்துசூடல்.
* இரவுக்குறி, இரவிலே தலைவி மனையருகுவந்துசூடல்.

[இதுவுமது.] இ-ள். (அத்தாரகைகள் அப்படி கலங்குதற்குக் காரணமாயது) அறுவாய்நிறைந்த - முன்குறைந்தவிடம்வந்து நிறைந்து, ஈ விளங்குற, மதிக்குப்போல - சந்திரபிடத்துபோல, மாதர்முகத்து - இம்மாதர்முகத்திடத்து, மறு - களங்கமானது, உண்டோ-உண்டோ—என-று. (கருத்து.) அம்மீன்களங்களங்கம் கலங்குதற்குக் காரணமாயது முன் குறைந்தவிடம்வந்து நிரம்பியே விளங்கு மதிக்கண்போல இம்மாதர்முகத்து மறுவுண்டோ-என்பதாம். * தெய்ந்துவளர்தலும்-களங்கமும் - இல்லாமைபற்றி - வேறுபாடு அறியலாயிருக்க அறிந்தி வென்று இகழ்ந்து சொல்லிபடி. (எ)

மாதர் முகம்போ லொளிவிட வல்லீரேற்
காதலி வாழி மதி.

[இதுவுமது] இ-ள். மதி - சந்திரனே - வாழி - வாழ்வாயாக மாதர் முகம்போல - பெண்கள்முகம்போல, ஒளிவிடவல்லீரேயல் - (தான் ம கிழும்படி) ஒளிவீசவல்லையாகில், காதலி - (நியும்என்னால்) இச்சிக்கப் படுதலையுடையையாவாய்—என-று. (கருத்து.) சந்திரனே வாழ்வாயாக பெண்கள் முகம்போல ஒளிவீசவல்லையாகில் நீயு மென்னை விச்சிக்கப் படுதலை யுடையையாவாய்-என்பதாம். * மறு - உன்னிடத்திருதலால் அதுமாட்டாய் மாட்டாமையால் என்னால் இச்சிக்கவும்படா தென்பதா ம் வாழி - இகழ்ச்சிக்குறிப்பு. (அ)

மலரன்ன கண்ணுண் முகமொத்தி யாயிற்
பலர்காணத் தோன்றல் மதி.

[இதுவுமது] இ-ள். மதி - சந்திரனே, மலரன்னகண்ணுள்-இம்ம லர்போலுங் கண்களையுடையவளது, முகம் - முகத்தை, ஒத்தியாயின- ஒக்கவேண்டுமையாகில் — (இதுபோல்யான்காணத்தோன்று) பலர்கா ணத்தோன்றல் பலர்காணத்தோன்றுதே—என-று. (கருத்து.) சந்திரனே மலர்போலுங் கண்களையுடையவள் முகத்தை யொக்கவேண்டுமையா கில் இதுபோலயான்காணத்தோன்று பலர் காணத்தோன்று தொழி- என்பதாம். * தானேமுகத்தினலழுதுகண்டு அனுபவித்தானுகலா லிங்ஙனயும் பலர்காணத்தோன்றலை இழிவுபடுத்திச்சொல்லினன். பலர் காணத்தோன்றில் உனக்கு அம்முகத்தோடொப்புண்டாகாதென்பதாம்.

அனிச்சமு மன்னத்தின் றூவியுமாத
ரடிக்குக்கொருஞ்சிப் பழம்.

[இது] o உடன்போக்குச்சொன்ன தோழிக்குத் தலைவன் அதனு ருமையைச் சொல்லிமறுத்தது.] இ-ள். (உலகத்தாரால் மெய்க்கு

o உடன்போக்கு-தலைவிதன்வீட்டார்றியாமல்தலைவனுடன்செல்லுதல்.

எடுக்கப்பட்ட, அனிச்சமும் - அனிச்சமலரும்—அன்னத்தின்றாவியும்- அன்னப்பறவையினிறகும்; மாதரடிக்கு - பெண்களினடிக்கு, ஒருஞ்சிப்பழம்- ஒருஞ்சிப்பழம்போல் வருத்தஞ்செய்யும்—என்று. (கருத்து.) அனிச்சமலரும் - அன்னப்பறவையினிறகும் மாதர்களடிக்கு ஒருஞ்சிப்பழம்போல் வருத்தஞ்செய்யும்- என்பதாம். * முள்வலிதாதலால் பழமென்றார் இப்படிப்பட்ட அடிகள் கூர்ங்கல்லும் வெப்பமுள்ள பாலை நிழலை எப்படி கடப்பாளென்பது; குறிப்பாலே பெறப்பட்டது செம்பொருளேயன்றிக் குறிப்புப்பொருளும் அடிதலனுறியாமையாகலின் இதுவும் இவ்வதிகாரத் தாயது. (ம)

ஈயங - ஆம், அதி - காதற்சிறப்புணர்த்தல்.

அஃதாவது - தலைவன் தன்னுஞ்சமிகுதிப்பச்சொல்லலும்; தலைவிதன்னுசமிகுதியைச் சொல்லலும், ஆம். இதுபுணர்ச்சியும் நலனும் பற்றி நிகழ்கின்ற தாகலால் அவற்றினதிகாரங்களின் பின்வைக்கப்பட்டது.

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்.

[இது தலைவன் இயற்கைப்புணர்ச்சி முடிவிலே தன்னயப்பை அறிவித்தது] இ-ள். பணிமொழி- இம்மெல்லிய சொல்லையுடையவளது, வாலெயிறூறியநீர்- வெண்பல்லிலூறிய நீரானது, பாலொடுதேன் கலந்தற்றே- பாலுடனே தேனைக்கலந்த கலவைபோலும்—என்று. (கருத்து.) இம்மெல்லிய மொழியினையுடையாளது வாயிலபற்களிலூறிய நீரானது பாலுடனே தேனைக்கலந்தகலவை போலும்-என்பதாம். *பாலொடுதேனென்றதனால்- அதன் சுவைபோலுஞ் சுவையுடைத் தென்பதாயிற்று—வேறு வேற்றியப்பட்ட சுவையையுடையப் பாலும் தேனும் கலந்த விடத்து அக்கலவை இன்னதென்று அறியக்கூடாத இனியசுவையை யுடைய தாமாகலால் அச்சுவைநீர்க்கும் அடைவிக்க. (க)

உடம்போ டுயிரிடை யென்ன மற்றன்ன
மடந்தையோ டெம்மிடை நட்பு.

[இது தலைவன் பிரிவிலுண்டாகிய அச்சத்தைச் சொல்லியது.] இ-ள். மடந்தையோடெம்மிடை - இம்மாதோடு எம்மிடத்து உண்டாகிய, நட்பு-நட்புகள், உடம்போடுயிரிடை - உடம்போடு உயிரிடத்து, என்ன-எப்படிப்பட்டவை, அன்ன-அப்படிப்பட்டவையாகும்—என்று. (கருத்து.) உடம்போடு உயிரிடையளவாகிய நட்புக ளெத்தன்மையோ அத்தன்மையே இம்மடந்தையோடு எம்மிடையுளவாகிய நட்புக்கள் என்பதாம். * எப்படிப்பட்டவை யெனப்பன்மையாற் சொல்லியது.

ஈயிங்-ஆம்-அதி—காதற்பிறப்புணர்த்தல்.

இருவகைக் குறிகளும் ஆகிக்கூடங்கி வேறுபாடில்லாமல் கலந்து வரல் இன்பத்தின் பங்கினை ஒக்க அனுபவித்தல், அச்சமும் வெண்டுதல் வினைகளைநோக்கி ஊழ்முறையே கூட்டப்பட்ட புணர்ச்சியாகலால் தன் பொழுது உணர்ச்சியில்லாதிருந்தவள் பின்னே உடையளாமென்றே; கியவிடத்தே இவன் எவ்வளவென்றும், என்னிடத்தே அன்புள்ள லவென்றும், பின்னும் இவனைக் கலத்தல் கூடுமோவென்றும், தி ஞள்ளத்தே நோன்றும் அவை குறிப்பால் அறிந்து அவைதீரச் செ யிடி. மற்று-அசை.

(2

கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழுங்
திருநுதற் கில்லை யிடம்.

[இது இடந்தலைப்பாட்டிலே தலைவி நீங்கும்போது தலைவன் சொ ல்லியது] இ-ள். கருமணியிற்பாவாய் - (என்கண்ணினிற) கருமணியிற் க்கின்றபாவையே, நீ-நீ, போதாய் - (அவ்விடம்விட்டுப்) போவாயாக (போசாதிருப்பாயாகில்) யாம்வீழும் - எம்மால்விரும்பப்படுகின்ற, நு நுதற்கு- அழகியநெற்றியையுடையவளுக்கு, இடம்- இடம், இல்லை- ல்லை—எ-று. (கருத்து.) என்கண்ணிற் கருமணியினிடத்துறையும் வையே- நீ-அவ்விடம்விட்டுப் போவாயாக போசாதிருப்பாயாகில் எ மால் விரும்பப்பட்ட நுதலுடையாட்கு இருக்க விடமில்லையா என்பதாம். * என்காணுமல் இருக்கமாட்டாமையால் இவள் புறத் ப்போந்தமையளல்லாமல் என்கண்ணுள் இருக்குந்தன்மையள் இ க்கும்போது உன்னோடு கூடியிருக்க இடம்போதாமையால் உன்னிலு சிறந்த இவளுக்கு அவ்விடத்தைகொடுத்து நீபோய் விடுவாயாகவே ன்பதாம்.

(ரு)

வாழ்த லுயிர்க்கன்ன ளாயிழை சாத
லதற்கன்ன னீங்கு மிடத்து.

[இது பகற்குறியிலே புணர்ந்து நீங்குந்தலைவன் சொல்லியது.] இ-ள். (எனக்கு) - ஆயிழை-ஆராய்ந்துகொள்ளப்பட்ட ஆபரணத்தையு டையவள் புணருமிடத்து—உயிர்க்கு-உயிர்க்கு—வாழ்தலன்னாள் - (உ டம்போடுகூடி.) வாழ்தல்போலாகின்றாள், நீங்குமிடத்து - பிரியுமிடத் து, அதற்கு- அவ்வுயிர்க்கு—சாதலன்னாள்- அவ்வுடம்பினீங்கிப் போத லன்போலாகின்றாள்—எ-று. (கருத்து.) தெரிந்த வாபரணத்தையுடை யாள் எனக்குப் புணருமிடத் துயிர்க்குடம் போடுகூடி வாழ்தல்போலு ம்பிரியுமிடத்து அவ்வுடம்பினின் றுயிர்பிரிதல்போலும் - என்பதாம் * எனக்கென்பதும், புணருமிடத்தென்பதும், அவாய் நிலைபால் வந்தன. வாழுங்காலத்து வேறுபாடில்லாமல் வழிநிற்றலாலும், சாங்காலத்து வருந்தஞ்செய்தலாலும் அவைகளை அவள் புணர்வுபிரிவுகளுக்கு உவ மையாக்கினான்.

(சு)

உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறிதி
யுள்ளப்பர்க் கண்ணுள் ளுளம்.

[இது * ஓருவழித்தணந்து வந்தபோது எம்மைமறைத்து பறிவி ரோவென்றதோழிக்குத் தலைவன்சொல்லியது.] இ-ள். யான் - நான், ஒ ள்ளமர்க்கண்ணுள் குணம்-ஒளியினவாகிப் போர்செய்கின்ற கண்களையு டையவளது குணங்களை, மறப்பின் -மறந்தேனுயின், உள்ளுவன்-நினை ப்பேன், மறப்பறியேன் - (ஒருபோதும்) மறத்தலறியேன் [ஆகலால் நி னைத்தலுமறியேன்]—எ-று. (கருத்து.) ஒள்ளியவாய் போர்செய்யுங் க ண்ணினையுடையாள் குணங்களை நான்மறந்தேனுயின் நினைப்பேன் ஒரு பொழுதுமறத்தலையறியேனுகலால்நினைத்தலையுமறியேன்-என்பதாம். * நினைத்தலுமறியேனென்றும் பொருள்கொள்ளுதற்கையால் மன் ஒழியி சையில் வந்தது. குணங்கள் - நாணம் -மடம்-அச்சம்-பயிர்ப்பு முதலான வை, இதுவனைக்கும்தலைவன்சொல்லியது; பின்தலைவிசொல்லுவது. (நு)

கண்ணுள்ளிற் போகா ரிமைப்பிற் பருவார்
நுண்ணியரொங்காத லவர்.

